# திரு அருட்பா

பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

8-ஆம் புத்தகம்

# இரண்டாம் திருமுறையும் மூன்றாம் திருமுறையும்

அல்லது

# திரு ஒற்றியூர்ப் பகுதி




பதிப்பாசிரியர்:

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, பி.ஏ., எம்.எல்.,

"அருட்பா வளாகம்", தியாகராஜபுரம்,

மயிலாப்பூர், சென்னை - 4.



1956



All Rights Reserved

# ANNOUNCEMENT

At the kind instance of eminent Indian and Foreign religious scholars, an English Translation of selected stanzas from Thiru Arutpa of Saint Sri Ramalinga Swamigal has been attempted by the Editor of the present Arutpa series. Bilingual and multilingual literary persons of great critical acumen and intimate religious persuasion have blessed this humble venture with their very loving and encouraging appreciation. The Translation will be published very early. Friends requiring copies may kindly write for particulars to the Editor with postal stamps for reply. The sale proceeds of this Translation as well as his other religious, literary and legal works will enure to the benefit of his Thiru Arutpa Trust.

# திரு அருட்பா

## திருவொற்றியூர்ப் பகுதி

கிடைக்கும் இடம்:

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை-1.

# திரு அருட்பா

## இரண்டாம் திருமுறையும்

## மூன்றும் திருமுறையும்

அல்லது

## திரு ஒற்றியூர்ப் பகுதி

உ

சிவமயம்

சிவகணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திரு அருட்பா மகிமை

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு.

திருச்சிற்றம்பலம்

இது

வேதாகம சுத்தசைவ சித்தாந்த
சமயாசாரிய பீடமாய் விளங்குகின்ற
மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம்

சிதம்பர சுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்டது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஆராதனை

நம் திரு அருட் பிரகாச வள்ளற் பெருமானார் தோன்றிய ஆன்ற தொல் குடியில் தோன்றியவரும், இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக் கற்புக் கடம் பூண்டு ஓர் அரமகளிரே போல் பொலிவுற்று விளங்கியவரும், எளியே னுடைய நிறைத்திறன் கனவிலும் குறையாதவாறு இரவு பகலாகத் தெய்வப் பண்போடு பாதுகாத்து வந்தவரும், எளியேன் உடலும் உள்ளமும் அறிவும் ஆற்றலும் நலிவுறாத வண்ணம் எஞ்ஞான்றும் விழிப்பாக இருந்து அவற்றிற்கு ஆவன இடையறாது இயற்றியவரும், உளத்தூய்மைக்கும் தன்னலம் மறுத்தற்கும் மெய்யன்பிற்கும் செய்ந்நன்றி யறிதற்கும் செயலாற்றற்கும் இன்சொல் கூறற்கும் யாவ ராலும் எடுத்துக்காட்டாகப் போற்றப்பட்டவரும், சுற்றத் தார்க்கும் நட்பாளர்க்கும் விருந்தினர்க்கும் எட்டுணையும் குறையாத நிறைவுற்ற நன்றினை உவந்தாற்றினவரும், ஏதிலார்க்கும் வாயிலா உயிர்கட்கும் பரிந்து பசி யாற்று வித்தலையும் நோய் நீக்குதலையும் தங்குவதற்கு நிழல் தருதலை யும் மேற்கொண்ட வடியாக் கருணை நிறைந்தவரும், அக மும் புறமும் துளும்பி வழியும்—இறை அன்பையே போன்ற—தாயன்பினால் தாம் பெற்ற ஒரு மகவைச் சூழ்ந்து ஆன்ம நிறைவுற்றவரும், இறைவன் திரு அருளால் வரப்பெற்ற எளியேனது இத் திரு அருட்பாத் தொண்டிற்குத் தம் வாழ் நாள் முழுதும் அல்லும் பகலும் அச்சாணி அன்ன உறு துணையாக நின்றவரும், தேவார திருவாசகங்களையும் திரு அருட்பாவினையும் உணர்ச்சியோடு இன்னிசையில் இசைத்து ஆன்ம அமைதி அடைந்தவரும், இயல்பான எளியேன் வாழ் நாள் முடிவைத் தம் வாழ்நாள் முடிவாக ஏற்றுக் கொண்டு இத் திரு அருட்பாத் தொண்டு முற்றுப் பெறுவதற்காக என்னை இங்கு இறுத்திச் சென்றவரும், திரு ஒற்றியூரில் எழுந்தருளியிருக்கும் வடிவுடை மாணிக்கத்தின் தெய்வத் திருமுன் மணவினை முடிக்கப் பெற்றவரும், அவள் திருவடி நீழலில் உலகமயக்கம் நீங்கித் தங்கியிருப்பவரும் ஆன

என் வாழ்க்கைத் துணைவியர்க்கு

எனது இவ் வெளிய திருத்தொண்டின் நற்பயன் ஓர் ஆராதனையாக என்றும் நிலைபெற்று விளங்குமாக !

---

" அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொல் தவறாத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்எழூஉம் பேதையே போதியோ
என்தூங்கும் என்கண் இரா."

---

# இப் பதிப்பின் சிறப்பியல்புகள்

1. ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த ஸ்தோத்திர மாலைகள், சாஸ்திர மாலைகள், கீர்த்தனைகள், சன்மார்க்கப் பிரார்த்தனைகள், தர்ம சாஸ்திரங்கள், வியாக்கியானங்கள், பிரசங்கங்கள், உபதேசங்கள், கடிதங்கள், சன்மார்க்கக் கட்டளைகள், சன்மார்க்கப் பத்திரிகைகள், தனிப்பாடல்கள், சாற்றுக்கவிகள், அவர்களது திவ்விய சரித்திரம், அவர்கள் ஆராய்ந்து பதித்த பழைய நூல்கள், சன்மார்க்க சங்க நிகழ்ச்சிகள் முதலிய யாவும் இப்பதிப்பில் அடங்கும்.

2. சுவாமிகள் கை எழுத்திலுள்ள திருப்பாடல்கள், கடிதங்கள், வசனங்கள் முதலியவற்றின் போட்டோப் பிரதிகளும் அவர்கள் திரு உருவமும் ஞான சபை அமைப்பும் இதில் வெளிவரும்.

3. இதுவரையில் வெளிவாராத பெருவாரியான பலப்பல அரும் பகுதிகள் இப் பதிப்பில்தான் முதல் முதலாக வெளிவருகின்றன. இவை இதற்கு முன்னாவது பின்னாவது வெளிவந்ததில்லை.

4. இப் பதிப்பில் வெளிவரும் பகுதிகளில் அடங்கியவை எல்லாம் சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திருஏடுகள், அவர்கள் பார்வையில் அச்சான முதற் பதிப்புக்கள், அவர்களை அடுத்திருந்த பேரன்பர்களின் கைஎழுத்துப் பிரதிகள் முதலியவற்றினின்றும் எடுத்த பரிசுத்த பாடங்களாகும்.

5. இப் பதிப்பின் ஒவ்வொரு பகுதியும் துருவித் துருவி எழுத்தெழுத்தாக நுட்பமாக ஆராயப்பட்டு, சிறு பிள்ளைகளும் தெரிந்துகொள்ளக்கூடிய ஓர் ஓர் பொருத்தமான முறையில் பாகுபாடு செய்து, ஏராளமாக ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும், விரிந்த பாயிரங்களோடும், பல்வகைத்தாய அநுபந்தங்களோடும் வெளிப்படுத்தப்படுகிறது.

6. இப்பதிப்பு உயர்ந்த காகிதத்தில், நல்ல திருத்தமான வகையில், திறமான கட்டடத்தோடு, வேண்டிய போதெல்லாம் படிப்பதற்காக உடன் கொண்டு போவதற்கேற்ற அழகான அளவில், அடக்க விலையில், பகுதி பகுதியாக அச்சிடப்பட்டு வருகின்றது.

7. பொது நன்மையைத் தங்களது சொந்த நன்மையாகக் கொண்ட அநேக அன்பர்களின் முயற்சியால், இப் பதிப்பு தமிழ் நாடெங்கும் பரவி வருகிறது. வியாபாரிகளும், சென்னை, சிதம்பரம், தெலுங்கு நாடு முதலியவற்றின் யுனிவர்சிட்டி அதிகாரிகளும் இப் பதிப்பை விரும்பி இதற்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

8. தமிழ் மக்கள் யாவரும்—பெண்கள், பிள்ளைகள், வயதானவர்கள், வேலையாட்கள், அதிக படிப்பில்லாதவர்கள், பரதேசிகள், நோயாளிகள் முதலியவருங்கூட—காலமுள்ள போதே, சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய உபதேசங்களை நன்றாகத் தெரிந்து, அவர்கள் திருவடிச் சுவடுகளைப் பின்பற்றி நடந்து, அவர்கள் அடைந்த ஆன்மாநுபவத்தை அடைந்துய்ய வேண்டும் என்பதே இப் பதிப்பின் நோக்கம்.

9. இவ் விருப்ப முயற்சி திருவருட் செயலால் தோன்றி நடைபெறு கிறது என்னும் ஒருவித உறுதியே இப்பதிப்பின் உயிர்நிலையாகும்.

10. இப்பதிப்பு ஆரம்பித்த 1931-ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பின் வரும் எட்டுப் பகுதிகள் வெளிவந்துள்ளன. இனி, மற்றத் திருமுறைப் பகுதி களும் பிறவும் வெளிவரும். ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே இயல்பான முடிவடைந்திருக்கிற தாதலால், எல்லாப் பகுதிகளையும் ஒருமிக்க வாங்கித்தீர வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் கிடையாது. அவரவர்க்குப் பிரியமான பகுதியை அவரவர் வாங்கிக் கொள்ளலாம், அல்லது ஒன்றன் பின் ஒன்றாக வும் வாங்கலாம்.

(1) திரு அருட்பா—கீர்த்தனைப் பகுதி
சுவாமிகளுடைய சங்கீதப் பாடல்கள் முழுவதும், 2-ஆம் பதிப்பு, ஸ்வரப்படுத்தியது. 8 இனங்கள், 182 பாடல் தொகுதிகள், 338 குறிப்புக்கள், 272 பக்கம்.

(2) திரு அருட்பா—வசனப் பகுதி
சுவாமிகளுடைய வசன பாகங்கள் முழுவதும், 2-ஆம் பதிப்பு. 8 இனங்கள், 542 குறிப்புக்கள், 288 பக்கம்.

(3) திரு அருட்பா—வியாக்கியானப் பகுதி
சுவாமிகளுடைய வியாக்கியானங்கள் முழுவதும், 2-ஆம் பதிப்பு. 7 இனங்கள், 550 குறிப்புக்கள், 416 பக்கம்.

(4) திரு அருட்பா—உபதேசப் பகுதி
சித்தமார்க்க மணி மந்திர ஔஷதங்கள், அநுஷ்டானங்கள், கோட்பாடுகள் முதலியவற்றைப் பற்றிய சுவாமிகளுடைய உபதேசங் கள் முழுவதும், சின்மயதீபிகை என்னும் அரிய சாதன நூலும். 10 இனங்கள், 240 குறிப்புக்கள், 272 பக்கம்.

(5) திரு அருட்பா—திருமுகப் பகுதி
சுவாமிகளுடைய கடிதங்கள், பத்திரிகைகள், கட்டளைகள் முழு வதும். 13 இனங்கள், 115 குறிப்புக்கள், 200 பக்கம்.

(6) திரு அருட்பா—தனிப்பாசுரப் பகுதி
பல மத ஸ்தோத்திரங்கள், குரு சிஷ்யர்களைக் குறித்த குடும்ப கோஷமும் குருட்டாட்டமும், சாற்றுக் கவிகள் முதலிய சுவாமி களுடைய பல்வகைய பாடல்கள் முழுவதும். 8 இனங்கள், 347 பாடல்கள், 111 குறிப்புக்கள், 136 பக்கம்.

(7) திரு அருட்பா—முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி
திருவடிப் புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா, மஹாதேவ மாலை, திருஅருண் முறையீடு, வடிவுடைமாணிக்க மாலை, இங்கிதமாலை கொண்டது. 8 இனங்கள், 3 பாடல் தொகுதிகளும் 705 பாடல்களும், 316 குறிப்புக்கள், பெரிய அளவு 280 பக்கம்.

(8) திருஅருட்பா—இரண்டாம் திருமுறையும் மூன்றாம் திருமுறை யும் அல்லது திரு ஒற்றியூர்ப் பகுதி.
122 பதிகங்கள், 1320 பாடல்கள், 360 குறிப்புக்கள், பெரிய அளவு 368 பக்கம்.

# நூல்களர்வர்க்கு ஓர் எச்சரிக்கை

வருஷக் கணக்கான பெருமுயற்சியாலும் பேருழைப்பாலும் பெருஞ்செலவாலும் எய்திய இப்பதிப்பின் பலப்பல சிறப்பியல்புகளைச் சிலர் கவர்ந்து வருவதை இங்குக் கண்டிக்க வேண்டிய இன்றியமையாமையைக் குறித்துப் பெருவருத்த முண்டாகிறது. அவர்கள் அவற்றைத் தங்கள் உழைப்பால் அடைவித்ததாகப் பாசாங்கு செய்தும் அவற்றோடு சிற்சில சமயம் தங்கள் சொந்தச் சரக்கைக் கலந்து அவற்றைத் திரிபுபடுத்தியும் பொது ஜனங்களை ஏமாற்றி வருவதுமல்லாமல், அதனால் இப் பதிப்பிற்குப் பொருள் நஷ்டத்தை உண்டாக்குகிறார்கள். இந்த இழிவான துர்ச்செய்கை சாதாரண மனுஷத்தனத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் சட்டத்திற்கும் ஒருங்கே விரோதமானது. ஆதலால், இப்பதிப்பின் எல்லா உரிமைகளுக்கும் உரிய இதன் பதிப்பாசிரியர் அவ்வுரிமைகளைக் காப்பாற்றிக்கொள்வதற்கான நடவடிக்கையை வேண்டும்போது எடுத்துக்கொள்வார் என்று இதன் மூலம் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

# இரண்டாம் திருமுறையும் மூன்றும் திருமுறையும்

அல்லது

# திரு ஒற்றியூர்ப் பகுதி

## பொருளடக்கம்


| பிரிவு | எண் | உட்பிரிவு | பக்கம் |
|---|---|---|---|
| பாயிரம் | | | |
| | i. | வெளித் தலைப்பு | ... 1 |
| | ii. | அடிகளாரின் உண்மைத் திரு உருவம் | ... 2 |
| | iii. | உள் தலைப்பு | ... 3 |
| | iv. | திரு அருட்பா மகிமை | ... 4 |
| | v. | ஆராதனை | ... 5 |
| | vi. | இப் பதிப்பின் சிறப்பியல்புகள் | ... 6 |
| | vii. | நூல்களவர்க்கு எச்சரிக்கை | .... 7 |
| | viii. | பொருளடக்கம் | ... 9 |
| | ix. | பதிக அட்டவணை | .... 10 |
| | x. | பிழை திருத்தம் | .... 11 |
| | xi. | திரு ஒற்றியூர்ப் பகுதி முன்னுரை | ... 12 |
| | xii. | அடிகளார் வாழ்த்து | ... 23 |
| | xiii. | அடிகளார் கையெழுத்து மூலத்தின் வடிவம் | ... 24 |
| | xiv. | வாயுறை வாழ்த்து | ... 25 |
| நூல் | | | |
| | 1. | இரண்டாம் திருமுறை[353] | ... 1 |
| | 2. | மூன்றும் திருமுறை[354] | ... 278 |
| அநுபந்தம் | | | |
| | 1. | திருஅருட்பாவினைச் சார்ந்த சில முதன்மையான தேதிகள் | ... 324 |
| | 2. | தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் பதிப்புக்களில் கண்ட அடிக்குறிப்புக்கள் | ... 325 |
| | 3. | செய்யுள் இன வேறுபாட்டுக் குறிப்புக்கள் | ... 326 |
| | 4. | பாட்டு முதற்குறிப்பு அகராதி | ... 328 |


353. இதன் பதிக அட்டவணையை இப் பாயிரம் 10-ஆம் பக்கத்திலும் பாட்டு முதற்குறிப்பு அகராதியை 328-ஆம் பக்கத்திலும் காண்க.

354. இதன் பதிக அட்டவணையை இப் பாயிரம் 11-ஆம் பக்கத்திலும் பாட்டு முதற்குறிப்பு அகராதியை 338-ஆம் பக்கத்திலும் பார்க்க.

# திரு அருட்பா திரு ஒற்றியூர்ப் பகுதி

## பதிக அட்டவணை


எண் பதிகம் பக்கம்

### 1. இரண்டாம் திருமுறை

1. புண்ணிய விளக்கம் ... 1
2. அருள் நாம விளக்கம் ... 4
3. ஸ்ரீ சிவஷண்முக நாம ஸங்கீர்த்தன லகரி ... 8
4. நமச்சிவாய ஸங்கீர்த்தன லகரி ... 11
5. நற்றுணை விளக்கம் ... 14
6. திருஅருள் வழக்க விளக்கம் 17
7. சிவ புண்ணியத் தேற்றம் 19
8. முத்தி உபாயம் ... 22
9. அவலத் தழுங்கல் ... 23
10. பழமொழிமேல் வைத்துப் பரிவுகூர்தல் ... 26
11. அபராதத் தாற்றுமை ... 29
12. அருளியல் வினைவல் ... 32
13. திரு முல்லைவாயில் திரு. விண்ணப்பம் ... 35
14. காட்சிப் பெருமிதம் ... 37
15. கொடைமடப் புகழ்ச்சி ... 39
16. திரு அருள் வேட்கை ... 42
17. அபராத விண்ணப்பம் ... 44
18. அறிவரும் பெருமை ... 47
19. அருள்விடை வேட்கை ... 50
20. எழுத்தறியும் பெருமான் மாலை ... 52
21. நெஞ்சொடு நேர்தல் ... 57
22. திருப்புகழ் விலாசம் ... 59
23. திருச்சாதனத் தெய்வத் திறம் ... 62
24. தியாக வண்ணப் பதிகம் 65
25. ஆடல் அமுதப் பத்து ... 68
26. திருஅடிச் சரண்புகல் ... 71
27. சிவானந்தப் பத்து ... 74
28. சந்நிதி முறையீடு ... 77
29. தவத்திறம் போற்றல் ... 79
30. நெஞ்சுறுத்த திரு நேரிசை 81
31. சிகாமணி மாலை ... 85
32. கலி முறையீடு ... 88
33. எதிர்கொள் பத்து ... 90
34. நெஞ்சொடு நேர்தல் ... 93
35. நெஞ் சறைகூவல் ... 96
36. நெஞ்சைத் தேற்றல் ... 99
37. நெஞ் சறிவுறூஉ ... 102
38. நெடுமொழி வஞ்சி ... 105
39. பற்றின் திறம் பகர்தல் ... 108
40. அடிமைத் திறத்தலைசல் 110
41. அவத் தொழிற் கலைசல் ... 112
42. நாள் அவத்து அலைசல் ... 115
43. அவல மதிக்கு அலைசல் ... 118
44. ஆறு வாழ்வின் அலைசல் 120
45. அருள்திறத்து அலைசல் ... 123
46. திரு விண்ணப்பம் ... 128
47. பிரசாத விண்ணப்பம் ... 132
48. வழிமொழி விண்ணப்பம் 135
49. சிறுமை விண்ணப்பம் ... 138
50. ஆற்று விண்ணப்பம் ... 141
51. இரங்கல் விண்ணப்பம் ... 144
52. காதல் விண்ணப்பம் ... 147
53. பொருள் விண்ணப்பம் ... 150
54. கொடி விண்ணப்பம் ... 153
55. நாடக விண்ணப்பம் ... 157
56. திருவண்ண விண்ணப்பம் 160
57. மருட்கை விண்ணப்பம் ... 162
58. கொடைமட விண்ணப்பம் 165
59. சிறு விண்ணப்பம் ... 167
60. பெரு விண்ணப்பம் ... 170
61. திருக்காட்சிக் கிரங்கல் ... 172
62. திருஅருட் கிரங்கல் ... 174
63. எண்ணத் திரங்கல் ... 176
64. நெஞ்சு நிலைக் கிரங்கல் ... 178
65. தனிமைக் கிரங்கல் ... 180
66. கழிபகற் கிரங்கல் ... 183
67. அர்ப்பித் திரங்கல் ... 186
68. அச்சத் திரங்கல் ... 189
69. புறமொழிக் கிரங்கல் ... 192
70. கருணை பெறு திரங்கல் ... 194

# இரண்டாம் திருமுறையும் மூன்றும் திருமுறையும்
அல்லது
# திரு ஒற்றியூர்ப் பகுதி
## முன்னுரை

---

### இம் முன்னுரைக்கும் பெருநூல் பகுதியின் முன்னுரைக்கும் உள்ள தொடர்பு

1. இவ் வாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த திரு அருட்பாவினுடைய இப் பதிப்பின் ஏழாம் புத்தகமாகிய முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதியின் சற்றே விரிந்த முன்னுரையின் 1, 2, 3, 20, 21, 22, 23, 24, 25, 26, 27-ஆம் பத்திகளில், இப் பதிப்பின் வரலாற்றையும், கால அளவையும், நோக்கத்தையும், பயனையும், இவற்றைச் சார்ந்த வேறு சில விவரங்களையும் தெளிவுபடுத்தும் ஒரு முயற்சியைக் காணலாம். அவை ஆவன: இப் பதிப்பில் இதுகாறும் வெளிவந்த பகுதிகள் இன்னின்ன என்பதும்[355]; இனி வெளிவர இருப்பன இவை இவை என்பதும்[355]; இவ் வரும் பெரு முயற்சியில், நம் தமிழ் நாட்டிலுள்ள கல்விச்செல்வம் பொருட் செல்வம் படைத்தவர்கள் உளமுவந்து கலந்துகொள்ள வேண்டும் என்பதும்; அடிகளார் அருட்பாவில் தெரிக்கும் திரு நெறி, தமிழகத்தில், கணக்கற்ற பழங்காலந்தொட்டு, அதன் முடிமணியாக விளங்காநிற்கும் சிற்சில உயிர்க் கருத்துக்களின் முடிந்த நுண்மாண் வடிவம் என்பதும்; அடிகளாருடைய பேரன்பர்கள் மூவர், எங்ஙனம் தவங்கிடந்து, அருட்பாக்களில் சில பகுதிகளையாவது வெளியிட அடிகளார் சம்மதியைப் பெற்றார்கள் என்பதும்; இப் பதிப்பு, பெரும்பான்மையும் அடிகளாரின் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏடுகளினின்றும் நேரே எடுக்கப்பட்ட தாதலால், பரிசுத்த பாடம் என்பதும்; இப் பதிப்பில் மூல பாடக் குறிப்புக்களும், பொருட் குறிப்புக்களும், தேவார திருவாசக திருமந்திரங்கள் முதலிய மெய்ம்மொழி மேற்கோள்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதும்; இப் பதிப்பின் சிறப் பியல்புகளைச் சிலர் சிதைத்தும், சின்னபின்னப் படுத்தியும், பொது மக்களிடம் விலைப்படுத்தும் காரணத்தால், அருட்பா விபரீதமான வடிவங் கொண்டு, அடிகளார் கொள்கைக்கும் நோக்கத்திற்கும் முற்றும் முரண் பட்டுப் பரவுகிறது என்பதும்; இந் நிகழ்ச்சியை நிறுத்த முயல்வது இந் நாட்டின் நன்மையையும் அடிகளாரின் பெரும் பெயரையும் கருதும் அறிவாளிகளின் கடமை என்பதும்; இத் தெய்வ நூலினைப் பரிசுத்த பாடமாகப் பதிப்பிக்கும் பொறுப்பும், அங்ஙனம் பதிப்பித்ததைக் காலாந்தரத்தில் காப்பாற்றும் பொறுப்பும் நம் நாட்டின் பல்கலைக் கழகங்களையும், அரசாட்சி

---

355. இவை குறித்து, இம் முன்னுரை 8-ஆம் பத்தியையும், பாயிரம் 6, 7-ஆம் பக்கங்களும், அநுபந்தம் 324-ஆம் பக்கமும் பார்க்க.

களையும் சார்ந்தன ஆகும் என்பதும்; இந்தப் பரிசுத்தப் பதிப்பினைக் கேடு சூழாமல் என்றென்றும் நிலைநிறுத்தும் பொருட்டு, ஓர் அற நிலையம் வகுக்கப்படுதல் வேண்டும் என்பதும்—இன்ன பலவும் ஆகும். இவை, இம் முன்னுரையின் இன்றியமையாத தொடக்கமாகவும் கூறுகவும் கொள்ளற்கு உரியன ஆதலின், அங்ஙனம் அவற்றைக் கொண்டால், இம்முன்னுரை மேலும் சற்றுத் தெளிவுற்று விளங்கும்.

## இப் பதிப்பின் சிறப்பியல்புகள்

2. இப் பதிப்பின் சிறப்பியல்புகளில் சிற்சில இந் நூலின் பாயிரத்தின் 6, 7-ஆம் பக்கங்களில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. அவற்றை அங்கே காண்க. அவற்றுள் அடங்காத ஒருவகையினைமட்டும் இங்குக் குறித்து வைத்தல் நல்லதெனத் தோன்றுகிறது. சந்தி பிரித்துப் பதித்தல் என்பது இந் நாளில் வேண்டத்தக்கது என்று ஏற்பட்டிருக்கிறது. இதற்குள்ள காரணங்கள் வெளிப்படையானவை. தமிழிலுள்ள சிறு நூல்கள் பெரு நூல்களை, இலக்கிய இலக்கணங்களை, வரன் முறையாகக் கற்கும் தொன்று தொட்ட வழக்கம் அருகிவிட்டது. நிகண்டு திவாகரம் முதலிய அகராதிகளையும், யாப்பருங்கலம் தொடக்கத்த இலக்கண நூல்களையும், அந்தாதி கலம்பகம் முதலிய—தமிழ்ச் சொற்கள் சொற்றொடர்களின் நுட்ப திட்பம் தெரிக்கும்—இலக்கியங்களையும், விருப்ப முயற்சியோடு கற்பார் தொகை சுருங்கி வருகிறது. தமிழ்ப் புலவர்கள் என்று சொல்லப்படுபவர்களில்கூட, இவற்றில் ஒருவகையான அருவருப்புடையவர்கள் சிலர் உளர் என்றால், இலக்கிய இலக்கணங்களை வரன்முறையிலோ, சீர்தூக்கிப் பார்க்கும் வேறு எந்த ஒரு நல்ல வகையிலோ, பயிலாத பொதுமக்கள் எங்ஙனம் தமிழ் மொழியின்—தமிழ்ச்சொற்கள் சொற்றொடர்களின்—நுட்ப திட்பங்களை அறிதல் கூடும்? எனினும், இக் காலத்தில், முன் காலத்தில்போல் அல்லாது, கல்வி என்பது பிறந்தார் யாவரும் அடைய விரும்பும் உரிமைப் பொருளாக ஆய்விட்டது. ஆகலின், பெருவாரியாகப் பல்லோர்க்கும் பயன்படும் வகையில்தான் நூல்களைப் பதிப்பித்தல் வேண்டும். என்றாலும், இங்கே, மாபெரும் இடையூறு ஒன்று எதிர்ப்படுகிறது. தமிழ் மொழி ஓர் ஒட்டு மொழி: ஆங்கிலம் போன்றதன்று. தமிழ் மொழியில் சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து வருங்கால், அதனதன் தனித்தனி இயல்பில்—தனித்தனிச் சொற்களாக—நிற்றல் சிறுபான்மை. பெரும்பான்மையும், சொற்கள் பேச்சு முறைப்படி இயைந்து, கூட்டியும் குறைந்தும் வேற்றுருவம் கொண்டும் விளங்கும். இந் நிகழ்ச்சி, ஆங்கிலத்தில் "போனடிக்ஸ்" (Phonetics) என்னும் மொழி ஒலி இயலின் பாற்பட்டு, ஆராயப்படுகிறது. எனினும், இக் காலத்திய பேச்சு முறைகளையும் அவற்றில் உண்டாயிருக்கும் மாறுதல்களையும் அவற்றின் வேண்டுதல்களையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது, முன் நாளில் தமிழர்க்கு வாய்க்கு இயல்பாக இருந்த "அருடால்", "கடூஉவு" என்பன போன்ற சிற்சில வகையான சந்திகள் இந் நாளைய தமிழர்க்குச் சற்று இயல் பற்றனவாக இருக்கின்றன என்பது உண்மை,

ஆனால், பெரும்பாலான மற்றவை, தம்தம் வகையில் இக் காலத்தில் மட்டும் அல்லாது, எக் காலத்தும் இயல்பான பேச்சு முறைகளாக இருக்கும் என்றே தோன்றுகின்றன. ஆகவே, இந் நாளில் வாய்க்கு இயல்பில் வாராதவை எனத் தோற்றும் சில சொற்றொடர்களைப் பிரித்தல் வேண்டற்பாலதே. வாய்க்கு இயல்பானவற்றிலும், பொதுமக்களின் தமிழ் மொழிக் கல்வியின் எளிமை கருதி, சிற்சிலவற்றைப் பிரித்துக்காட்டுதல் நல்லதெனக் காண்கிறது. இவ் விரு வகைகளும் இந் நூலில் கைக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை இன்னவைதாம் என்று திட்டமாக—ஒரு விதியின்பாற் பட்டனவாகக் கூற இயலாத வண்ணம் அமைந்திருக்கின்றன. அதாவது, அந்தந்த இடத்திற்குத் தகுந்த ஓசை நயத்தையும் பொருள் அகலத்தையும் ஆழ்ந்து கருதி, அவற்றிற்குத் தக்கவாறு, அவை பேர் அச்சத்தோடு கையாளப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழிக் கல்வியும், அஃகி அகன்ற அறிவும் நிரம்பப்பெற்ற என் நண்பர்கள் பலர் இவ்வகைச் சந்தி பிரித்தல்களைப் புறக்கணிக்காது, ஏற்றுப் பாராட்டி வருவதுதான், இவற்றின் செம்மைக்குச் சான்றாகும். வேறு வகையில், நான் அவற்றைக் குறித்துத் திட்டமாய் எதுவும் இவ் வமயம் சொல்வதற்கில்லை.

### இப் பதிப்பின் இன்றியமையாமை

3. என் நண்பர் சிலர், சில சமயம், என்னைக் கேட்டிருக்கிற கேள்வி ஒன்று உண்டு. அதாவது, “அருட்பா என்று பல புத்தகங்கள் நாட்டில் வழங்கி வருகின்றனவே; நான்கூட ஒரு புத்தகம் வாங்கியிருக்கிறேன். எதற்காக நீங்கள் ஓர் அருட்பா அச்சிடவேண்டும்?” என்பதே. இவர்கள் யாவரும் தத்தம் தொழில்களில் வல்லவர்களே. ஆனால், இவர்கள் தமிழ் ஆங்கிலம் முதலிய மொழிகளில் ஒரு சிறு நூலையாவது யாதானும் ஒரு நல்ல முறைப்படி சீர் தூக்கிக் கசடறக் கற்றுப் பழக்கப்பட்டவர்கள் அல்லர் என்பது ஒருதலை. அங்ஙனம் பழகியிருந்தால், அவர்கள் உள்ளத்தில் இக் கேள்வி உண்டாயிராது. ஏனெனில், அவர்களுக்கு அக் கல்வி அறிவு உடனிருப்பதால், தாங்கள் வாங்கிய எந்தப் புத்தகத்தையும், அங்ஙனம் சீர் தூக்கிப் படித்து உளங்கொள்ள முயன்றிருப்பார்கள். அப்போது, அதில் அச்சிட்டிருப்பவை எத்தகையன என்பதை அவர்கள் எளிதில் அறிந்திருத்தல் கூடும். அல்லது, இப் பதிப்பில் ஏதேனும் ஒரு பகுதியையாவது, சீர் தூக்கிக் கற்கும் ஒரு நல்ல முறைப்படி கற்றுத் தெளிவு கொள்ள முயன்றால், இதன்கண் உள்ளவை எத் தகுதி வாய்ந்தன என்பதை இரண்டே விநாடியில் அவர்கள் கண்டறிதல் கூடும். அக் கல்வி அறிவு இல்லாத ஒரு குறைபாட்டினால்தான், கைந்நூல் வடிவத்தில் இரண்டொரு அணாவிற்காகச் சிற்சில அருட்பாக்கள் விலைக்குக் கிடைக்கின்றன என்பதனாலும், அல்லது, அட்டையும் காகிதமும் அச்சும் பொன்பூச்சும் நன்றாக இருக்கின்றன என்பதனாலும், அப் புத்தகங்கள் பயிலத் தகுந்தன என்று அவர்கள், சாதாரணமாக—எந்தவிதப் பரிசீலனையும் இல்லாமல்—முடிவு கட்டி விடுகிறார்கள். ஒரு நூலைக் குறித்துக் கருதும்போது, அதன் விலையும், அட்டையும், காகித

மும், அச்சும், பொன்பூச்சும் பெரிய காரியந்தான். ஆனால், அந்தச் சிறிய அல்லது பெரிய விலையினதான புத்தகத்தின் அட்டைக்குள்ளும், காகிதத்தின் மேலும், அச்சிலும், பொன்பூச்சொடும் இருக்கிற மூல பாடங்களும் குறிப்புக்களும் மற்றப் பொருட்களும், அவற்றைக் காட்டிலும் கோடி மடங்கு பெரிய முதன்மை வாய்ந்தன என்பதை அவர்கள் அறிந்தார்களில்லை. அல்லது, இப் பதிப்பு, எளியேன் சிற்றறிவின் ஆற்றலுக்கு எட்டிய வரையில், யாதொரு குற்றங் குறைகளுக்கும் இடந்தாராது இருத்தற்காகவும், கற்பார்க்குப் பயன்தரும் அரிய பொருட்களை மேற்கொள்வதற்காகவும், எடுக்கும் உழைப்பில் நூற்றில் ஒரு கூற்றையேனும் அவர்கள் மனக்கண்ணால் கண்டார்களும் இல்லை. எனினும், அவர்கள், நெடுங்கால வாழ்க்கையில், என்றாவது ஒருநாள், இறைவன் திரு அருளால் கல்வியறிவு கைகூடி, இவற்றை அறியத் தொடங்குவார்கள் என்றே நம்பி வாழ்கிறேன். ஆனால், அடிகளாரின் கருத்தும் உபதேசமும், சொல்லும் சொல் தொடரும், எந்த வித முறை பிறழ்ச்சியும் திரிபும் பிழையும் இன்றி—அரை குறையாகவும் இன்றி—உள்ளது உள்ளபடி, சொன்னது சொன்னபடி, பயிலப்படுதல் வேண்டும், அறிந்து உணரப்படுதல் வேண்டும் என்னும் விருப்ப முயற்சியும் பத்திமையும் உறுதியும் உடைய கல்வியாளர்க்கும், அருட்பா அன்பர்கட்கும், அறிவாளர்கட்கும் இப் பதிப்பின் பகுதிகள் தவிர்த்து, வேறு அருட்பா நூல் வழக்கில் இல்லை. அங்ஙனம் பயில்பவர்கள், இப் பகுதிகளை எதிர்நோக்கி வரவேற்றுப் பாராட்டிப் போற்றி, மெய்ப் பயன்—மெய் யநுபவம்—கொள்ளுகிறார்கள் என்பதும் நான் அறிந்ததொன்றே. இறைவன் இவ் அன்பர்களின் எண்ணிக்கையை நாளுநாள் உயர்த்துவானாக!

## இப் பகுதியின் பாகுபாடு

4. திரு ஒற்றியூர்ப் பகுதி என்னும் இந்நூலின்கண், தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால் 2, 3-ஆம் திருமுறைகளாக வகுக்கப்பட்ட திரு அருட்பாக்கள் அடங்கும்.[356] அவர்கள், ஆண்டான் அடிமைத் திறத்தான் வழிபடுவனவற்றை இரண்டாம் திருமுறையின்பாற்படுத்தியும், தலைவன் தலைவி முறையில் அக அநுபவம் உரைத்த அருட்பாக்களை மூன்றும் திருமுறை என்றழைத்தும், இங்ஙனம் இரு திருமுறைகளாகத் தொகுத்திருக்கிறார்கள். இத் திருமுறைகளில் உள்ள 122 பதிகங்களில் பெரும்பாலன ஒற்றியூரில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் திருவடிகளைக் கருதி அடிகளார் இயற்றியன ஆகலானும்; இப் பதிகங்கள் கொண்ட மூல ஏடுகளில், இவை யாவும் ஒற்றியூர்ப் பதிகங்கள் என்றே அடிகளாரால் அழைக்கப்பட்டிருக்கின்றன ஆகலானும்; அன்பர் தருமலிங்கம் பிள்ளை அவர்களின் படிச் சுவடிகளிலும் இவை அங்ஙனமே குறிக்கப்பட்டிருக்கின்றன ஆகலானும்; இவை யாவும் அடிகளார் திருவாய் மலர்ந்தருளிய

356. தொ. வே. அவர்களின் முதல் இரண்டாம் பதிப்புக்களின் தலைப்பேடுகளைப் பெருநூல் பகுதி அநுபந்தம் 229, 230-ஆம் பக்கங்களில் பார்க்க.

காலம் அவர்கள் நாளும் திருவொற்றியூரில் இறைவனை வழிபட்டு வந்த காலம் ஆகலானும்; இவை இயற்றப்பட்ட இடம் திரு ஒற்றியூர் ஆகலானும்; இப் பதிப்பில், இவ் விரண்டு திருமுறைகளும், திரு ஒற்றியூர்ப் பகுதி என்னும் இந்நூலில், ஒன்றன்பின் ஒன்றாக, ஒரு சேரத் தொகுத்திருக்கின்றன. இவற்றுள் அடங்கிய பதிகங்களில் சிறுபான்மையன, ஒற்றியூரோடு தில்லையைச் சேர்த்தும், திருமுல்லை வாயில், திருவலிதாயம், திருத்தில்லை, புள்ளிருக்கு வேளூர், திரு அண்ணாமலை, திரு ஆரூர் ஆகிய புனிதமான ஊர்களில் உள்ள சிவமூர்த்தங்களைக் கருதியும், இறைவனைக் காலம் இடம் கடந்த பொதுப் பெரு வெளியில் கண்டும் இயற்றப் பெற்றிருக்கின்றன. 68 பதிகங்கள் ஒற்றியூரைச் சார்ந்தனவாக இருக்க, 4 பதிகங்கள் ஒற்றியூரையும் தில்லையையும் குறித்தும், 12 பதிகங்கள் தில்லையைக் குறித்தும், இவ்விரண்டு பதிகங்கள் திருமுல்லை வாயிலையும் புள்ளிருக்கு வேளூரையும் குறித்தும், ஓரொரு பதிகம் திருவலிதாயம் திரு அண்ணாமலை திரு. ஆரூர் இவற்றைச் சார்ந்தும், 30 பதிகங்கள் பொதுவகையாகவும், ஒன்று கலைமகள் வாழ்த்தாகவும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பதிகத்தின் சார்பாக, அதனதன் மூலபாடம் குறித்தும், பொருள் குறித்தும், அததற்கான மேற்கோள் குறித்தும், அடிக் குறிப்புக்களில் கண்டிருப்பனவற்றை ஆங்காங்கே கண்டு தெளிக.[357]

## இப் பகுதியின் மூல பாடம்

5. திரு அருள் முன்னின்று வழிகாட்டும் பெரும் பேற்றினால், இப் பகுதி முழுவதற்கும், ஒரு சில பதிகங்களும் பாக்களும் தவிர்த்து, நம் பெருமானாரின் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏடுகள் கிடைக்கப் பெற்றன. இப் பகுதியிலுள்ள 1320 பாக்களில் 1266 பாக்கள், இங்ஙனம், மேற்சொன்ன திரு ஏடுகளினின்றும் பதிக்கப்பட்டன ஆகும். அடிகளாரிடம் தொண்டு பூண்டு அவர்களுடைய அருட்பாக்களைப் பேரச்சத்தோடும் பெரும் பத்திமையோடும் படி செய்து வைத்திருந்த அன்பர் தருமலிங்கம் பிள்ளை அவர்களுடைய படி ஓலைகளில் இருந்து எடுத்துப் பதித்தவை 19 அருட்பாக்கள். இவற்றிலும் காணப்பெறாது, தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களின் 1867-ஆம் ஆண்டு முதற் பதிப்பினின்றும் எடுத்த அருட்பாக்கள் 35. இவற்றின் விவரமெல்லாம் ஒவ்வொரு பதிகத்தின் அடிக்குறிப்பிலும் கண்டிருக்கின்றது. அவற்றை ஆங்காங்கே கண்டு கொள்க.[358]

## இப் பகுதியின் பொருட் சிறப்பு

6. இப் பகுதியில் உள்ள அருட்பாக்கள் தெரிக்கும் பொருளை ஒருவாறு குறிக்கலாம். இரண்டாம் திருமுறையில்—இறைவனை எக்காலமும்

---

357. தொ. வே. அவர்கள் குறித்திருக்கும் சில குறிப்புக்களை அநுபந்தம் 325-ஆம் பக்கத்தில் பார்க்க.

358. அடிகளார் கைஎழுத்தின் வடிவம் ஒன்றினைப் பாயிரம் 24-ஆம் பக்கத்தில் காண்க.

மறவாது கருத்தில் பதியவைத்துக் கொளல் வேண்டும் என்றும்; சிவசாதனங்கள் சிவாநுபவத்திற்கு வழிகாட்டிகள் என்றும்; தமக்கு இறைவனிடம் ஒழியாக் காதல் இருந்தும், உலக மயக்கம் நீங்கவில்லை என்றும்; இழிவான காமம்,[358-A.] கோபம், மோகம் முதலிய மாயையின் கூறுகள், இறை அருள் பெற்றாலன்றி ஒழியா என்றும்; தம் மறச் செய்கைகளுக்காகத் தாம் முற்றும் வருந்துகிறார் என்றும்; தாம் இறைவனுக்கு எப் பிறவியிலும் ஆட்பட்டிருப்பவர் என்றும்; வேறு புகல் இல்லாத அடியன் ஒருவன் எவ்வளவு தாழ்வானவனாய் இருப்பினும், அவனை ஆட்கொண்டு அடியாரொடு சேர்த்தல் அருளின்கடன் என்றும்; இறைவனை நம்பினால் அவன் கைவிடமாட்டான் என்று, மாயை வயப்பட்டு இயங்கும் மனத்திற்கு அறிவுறுத்தியும்; இறைவன் தம்மை ஒற்றியூர்க்கு வரச்செய்து அருளிச் செய்தான் என்றும்; தாம் கண்ட இறைக்காட்சியை வியந்துரைத்தும்; தாம் இறைவன் பணியில் தவறிய போது, இறைவன் தம்மைத் தண்டித்து நல்வழிப்படுத்தினான் என்றும்; தமக்கு மேலும் மேலும் காட்சியருளி ஆட்கொள்வது ஒற்றியிலா அல்லது தில்லையிலா என்று வினவியும்; பழ அடியார்களுக்குப் போலத் தமக்கும் மரண நவையைத் தீர்த்தருளல் வேண்டும் என்றும்; இறைவனைத் தேனெனப் பாலெனப் பாடும் பணியைத் தமக்குத் தந்தருள வேண்டும் என்றும்; பொன்னம்பலக் காட்சியைத் தமக்கு இறைவன் அருளினான் என்று ஆநந்தித்தும்; சிறுகாலைத் தம்மை ஆட்கொண்டு அநுபவம் தந்த இறைவன் மறுபடியும் வந்து தம்மை ஆட்கொள்ளாதிரான் என்றும்; தம் உள்ளத்தில் இறைவடிவக் காட்சியைத் தாம் எப்போதும் கண்டு அநுபவிக்கிறார் என்றும்; புலைகொலைகள் எத்துணையும் எவர்க்கும் எந்தச் சூழ்நிலையிலும் கூடா என்றும்; புலை கொலை உடையவன் எவ்வளவிலும் ஆண்டவனுக்கு அடிமையாக மாட்டான் என்றும்; தமக்கு இறைவன் அருளிய வீடுபேற்றின் திறவுகோல் உயிர் இரக்கமே என்றும்; இறைவனது திருஅடி அன்றி வேறு புகலற்ற தம் பொருட்டு, அவன் தண்ணீரால் விளக்கெரிவித்துத் தன் அருட் புகழைப் பாடச் செய்தான் என்றும்; அருள் வடிவத்தில் இறைவன் வந்து தமக்கு மரண நவையைத் தீர்த்தருளினான் என்றும்; இறைவன் தமக்குப் பொது நெறியைக் காட்டுவித்தான் என்றும்; இறை அநுபவம் நுகர்ந்து, தாம்பேரானந்தம் துய்க்கின்றார் என்றும்; இறைவன் தம் உளக் கண்ணுக்கு உட்படாத பெரு வெளியில் விளையாட்டயர்கிறான் என்றும்—இங்ஙனம், பலப் பலவாறு, உளமும் உயிரும் உருகும் பான்மையில் பாடிப்பாடிக் கனிந்திருக்கிறார்கள். அடிகளார், தாம் தலைமகளாக இருந்து இறைவனைத் தலைமகனை அநுபவிக்கும் பேரின்பத்தைச் சொல்லாது சொல்லும் மூன்றாம் திருமுறையில்—தாம் இறைவனைக் காணப்பெற்ற அருநிலையை உணர்த்தியும்; தாம் தனிப்பட்டு வருந்தும் நிலையை இறைவனிடம் கூறும்படி சூழ்ந்திருப்பவர்களிடம் முறையிட்டும்; தம் தளிர்வண்ணம் கொண்ட இறைவன் இப்போது மறைந்துறைகிறான் என்று வருந்தியும்; தம் மனம் தமக்குமுன் இறைவனிடம் சென்று இறந்துவிட்டது என்று இறுமாந்தும்; இறைவனிடம் தாம் விளையாட்டயர்ந்தும்; இறைவனைப் போலியாக இழிவுரைத்துப் பேசிப்

358-A. இது குறித்துப் பெருநூல் பகுதி அடிக் குறிப்புக்கள் 48, 88, 102 பார்க்க.

பேரா மகிழ்ச்சி கொண்டும்; இறைவனிடம் இன்மொழிகள் இயம்பி இன்புற்றும்; இறை அநுபவம் நிரந்தரமாக எய்தாது, உண்ணல் உறங்கல் எதுவும் செய்யமாட்டார் என்று சூள் உரைத்தும்; இறைவன் தம்மைத் தலையளி செய்தான் என்று ஆநந்தித்தும்; இறைவன் திரு உருவம் தம் உளக் காட்சிக்கு அடங்காப் பெருமையது என்று வியந்தும்; ஒற்றியில் தம்மைக் கூடி இன்பமளித்த இறைவன் மறைந்துறைந்து விளையாட்டயர்கிறுன் என்று சஞ்சலித்தும்; தம்மை முற்றும் அநுபவித்து ஆட்கொள்ளுதல், தம்முடைய சிறுகாலையில் ஆட்கொண்ட ஒற்றியிலா அல்லது பொன்னம்பலத்திலா என்று வினவியும்; இறைவன் தமக்கு எவ்வளவு தெரிந்தவனுகத் தோன்றினுலும், உண்மையில் தெரியாதவனுகவே விளங்கி வியப்புணர்ச்சியும் ஆநந்தாநுபவமும் தருகிறுன் என்று கூறியும் — இன்ன பலப்பல இயம்பி, அடிகளார் ஆன்ம நிறைவுறுவதை அறிந்து அநுபவிக்கலாம்.

## இப் பகுதியின் செய்யுள் நயம்

7. இப் பகுதியின் பதிகங்களும் பாக்களும் இயற்றப்பட்டிருக்கும் செய்யுள் இனங்கள் பின்வருமாறு : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 350 செய்யுட்கள் கொண்ட 36 பதிகங்கள்; எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 164 செய்யுட்கள் கொண்ட 17 பதிகங்கள்; இரட்டை எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 10 செய்யுட்கள் கொண்ட ஒரு பதிகம்; அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 388 செய்யுட்கள் கொண்ட 35 பதிகங்கள்; இரட்டை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 10 செய்யுட்கள் கொண்ட ஒரு பதிகம்; நேரிசை வெண்பா 39 செய்யுட்கள் கொண்ட 2 பதிகங்கள்; வெண்துறை ஒரு செய்யுள்; ஆசிரியத்துறை 5 செய்யுட்கள் கொண்ட ஒரு பதிகம்; கொச்சகக் கலிப்பா 129 செய்யுட்கள் கொண்ட 8 பதிகங்கள்; தாவு கொச்சகக் கலிப்பா 11 செய்யுட்கள் கொண்ட ஒரு பதிகம்; கலித்துறை 2 செய்யுட்கள்; கட்டளைக் கலித்துறை 99 செய்யுட்கள் கொண்ட 9 பதிகங்கள்; கலி விருத்தம் 88 செய்யுட்கள் கொண்ட 8 பதிகங்கள்; கலி நிலைத்துறை 14 செய்யுட்கள் கொண்ட 2 பதிகங்கள்; வஞ்சித்துறை 10 செய்யுட்கள் கொண்ட ஒரு பதிகம்.[359] தமிழ் மொழியில், கணக்கற்ற நெடுங்காலம், புலவர்கள், பேரெண்ணிக்கையினர், தம் புலன் நுட்பத்தையும், அறிவு விளக்கத்தையும், அற உணர்ச்சியையும், ஆன்ம அநுபவத்தையும் செய்யுள் வடிவத்தில் வெளிப்படுத்திவந்திருக்கிறுர்கள். வெவ்வேறுபட்ட, கணக்கிலடங்கா உள் உணர்ச்சிகள், தம் தமக்கு உரிய— ஏற்ற பெற்றியனவாய—ஒலித்தொடர்புகள் பெற்று இயங்கியிருக்கின்றன. இந்த ஒலித் தொடர்புகளின் இயல்பான—தீர்மானமான—முடிந்த—வடிவங்களே செய்யுட்களாகும். இங்ஙனம் உண்டான செய்யுட்கள் ஓர் அளவில் அடங்காப் பெருமையனவாய் இருந்திருத்தலால், இவற்றைப் பாகுபாடு

---

359. இச் செய்யுள் இனங்களின் சிற்சில வேறுபாடுகள் குறித்து, அநுபந்தம் 326, 327-ஆம் பக்கங்கள் பார்க்க.

செய்யும் கருவி நூல்கள்—இலக்கண நூல்கள்—தோன்றி, அவற்றுள் ஒவ்வொரு வகையையும் நுட்பமாக ஆராய்ந்து, அவற்றின் இயல்பான போக்குக்களை, அல்லது, விதிகளைக் கண்டு, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பா இனம் என்பவையாக வகுத்தும் தொகுத்தும் வைத்திருக்கிறார்கள். "காரிகை கற்றுக் கவி பாடுவதில்" என்னும் ஒரு பழமொழி வழங்கியிருக்கிறதென்றாலும், இவ் விலக்கண நூற்களுக்குப் பிற்பட்ட காலத்துப் புலவர்களில் சிறுபான்மையினராவது இவ் விலக்கண நூல்களில் எடுத்துக் காட்டிய விதிகளைப் பின்பற்றிச் செய்யுட்கள் இயற்றியிருக்க வேண்டும். ஆனால், இஃது, இந்த இலக்கிய இலக்கணத் தொகுதி, திருவள்ளுவர் வள்ளற் பெருமானார் போன்ற தெய்வப் புலமையாளர்க்கு இயல்பில் பிறவிச் சொத்துரிமையாக இருந்திருக்கிறது என்பதில் எட்டுணையும் ஐயமின்று. எனவே, அடிகளார், திருவருள் வசத்தராகி, இயற்றியிருக்கும் ஆயிரக்கணக்கிலுள்ள இச் செய்யுட்கள், அதனதன் உள் உணர்ச்சிக்குத் தகுந்த ஒலித் தொடர்போடும் அதனோடியங்கும் ஓசை நயத்தின் நுட்பத்தோடும் இயங்குவதை—அருட் பாக்களின் செய்யுள் இன்பத்தை—நுண்மாண் அறிவோடு கூர்ந்து செம்மையாக நுகர்வார் காணுதிரார். தமிழாசிரியர்கள், இவற்றை, இளமாணவர்களுக்கு, முன்போந்த பேரிலக்கியங்களோடும் இலக்கணங்களில் கண்ட விதிகளோடும் புறநடைகளோடும் எடுத்துக் காட்டி, இவற்றின் ஓசையும் உணர்வும், சொல்லும் பொருளும், உடலும் உயிருமாக அமைந்திருக்கும் தெய்வப் புலமையைத் தெரியப்படுத்த முயன்றால், அஃது, தமிழ் மொழியின் தெய்வப் பான்மையையும் ஆழ்ந் தகன்ற நுண் உணர்வையும் அளப்பரிய அழகையும், மக்கள் தொகுதியினர் பல் கோடியரும், நெடுங்கால அளவிலாவது; நுகர்ந்து இன்புற்று நிறைவுற ஏதுவாகும்.

## இப் பகுதிக்கும் மற்றப் பகுதிகளுக்கும் உள்ள தொடர்பு

8. இப் பகுதியில் உள்ள 2, 3-ஆம் திருமுறைப் பாக்கள், பெருநூல் பகுதி என்னும் முதல் திருமுறைப் பாக்களோடும், திருத்தணிகைப் பகுதி என்னும் ஐந்தாம் திருமுறைப் பாக்களோடும், அடிகளாரின் திரு அருள் நிலையத்தின் கடை காலாக விளங்குகின்றன. இப் பதிப்பில் இனி வரவிருக்கும் 4, 6-ஆம் திருமுறைகளான பூர்வ ஞான சிதம்பரப் பகுதி, உத்தர ஞான சிதம்பரப் பகுதி, சித்தி வளாகப் பகுதி என்பவற்றில், பெருவாரியாகக் கடல் மடை திறந்த தென்ன, அவர்கள் திருவாய் மலர்ந்திருக்கும் திரு அருட் பாக்களான கற்பகப் பூங்காவின் ஆணிவேர்களை இப் பகுதியின்பாற்பட்ட அருட்பாக்களில் எப்பாங்கரும் கண்டு கண்டு உவகை உறலாம். இறைவனிடம் அடிமைத்திறம் பூண்டும், அவனைத் தலைவியாகக் கூடி இன்புற்றும் வெளிவந்திருக்கும் இப் பகுதியிலுள்ள அருட்பாக்களே, பின்னர், அவர்கள் அருள் மழை எனப் பொழிந்து, மக்கள் தொகுதியை, வேறுபாடும் பூசலும் பிணக்கும் மறனும் அற்ற அன்புருவத்தில் எய்துவிக்கும்—தெய்வத்தன்மையால் உள்ளும் புறமும் நனைந்து தோய்ந்து பொலிவுற்று விளங்கும்—திரு அருட்பாக்களாகத் திரு உருவம் கொண்டிருக்கின்றன என்பது கட்புலனும்.

## இப் பகுதியின் பயன்

9. இரண்டாம் திருமுறைப் பாக்களால்—நெஞ்சை விட்டு நீங்காத இறை உணர்ச்சியும்; உலகியலில், செறிந்த அறிவின்மையால், உறையும் தாம் தமது என்னும் தந்நலப் பொய்ப்பற்று நீக்கமும்; தம் குற்றங் குறைகளுக்காக நெஞ்சார வருந்தி, மேற்கொண்டு அவை சாராது பார்க்கும் எச்சரிக்கையும்; காமம், வெகுளி, மயக்கம் ஆகிய இருள்சூழ்ந்து, மாயையான் உந்தப்படும் மனம் வேறு, இறைவன் திருவடி நீழலின்கண் ஆசை கொண்டு அதனை அடைய முயலும் ஆன்மாவாகிய தாம் வேறு என்னும் அறிவுணர்ச்சியும்; புலை கொலை நீக்கமும்; உயிர் இரக்கமும்; பல் உயிர்களின் துன்பத்தினைத் தாம் எய்திய துன்பமே எனப் பரிந்து துடைத்தலை உயிர் நாடியாகக் கொண்ட ஜீவகாருண்ய ஒழுக்கமும் போன்ற பலப் பல பேறுகள் ஒருவர்க்கு வாய்க்கும். மூன்றும் திருமுறைப் பாக்களால்—இறைவன் இயற்றியிருக்கும் அளவில் அடங்கா—நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த—அண்டப் பகுதிகளால் ஆய இந்தப் பெரியதோர் ஆன்ற தொல் குடியில், அன்பும் அறனும் அருளும் வாய்ந்த மனையாட்டியாக, அரசியாக இருக்கும் மக்கட் பிறப்பின் முடிந்த பேறு வந்தெய்தும். அருட் பாக்களை, உள்ளபடி, மன மொழி மெய்களான் விருப்புற்று, ஒவ்வோர் அணுவும் நுகர்ந்தால் அல்லது, இங்குக் கூறியிருக்கும் இப் பேறுகள் ஒருவர் அறிவிற்கே புலனாதல் அருமை; அநுபவம் குறித்து ஆராய்தல் மிகை யாகும் என்க.

## அருட்பாவினைப் பல்லோரும் பயில வேண்டும் எனல்

10. இராமலிங்க அடிகளார் தெய்வத் திருவருளால் திருவாய் மலர்ந்திருக்கும் இந்தத் திரு அருட்பாவினைத் தமிழ் நாட்டில் உள்ள அரும்பெருங் கல்வியாளரும், நுண்ணறிவினரும், சைவ வைணவத் தொடக்கத்த சமய மதாபிமானிகளும், அறநெறிச் செல்வர்களும், இறை அநுபவம் வேண்டி முயலும் நோன்பினர்களும், சன்மார்க்க சீலர்கள் என்போரும், அரசாட்சியில் அதிகாரம் வாய்ந்துறையும் அறிவாளிகளும் போதுமான அளவில், வேண்டியமுறையில், பயின்று, ஓதி உணரும் ஆள்வினையில் இதுகாறும் ஈடுபடவில்லை என்றே என் எளிய அறிவிற்குத் தோன்றுகிறது. அதனால் அடியேன் கொள்ளும் துயரம் கொஞ்சமன்று. இத்திறத்தினர், இவற்றை, ஓர் அளவிலாவது ஊக்கத்தோடும் உணர்வோடும் ஒருமை உள்ளத்தோடும் பயின்றிருந்தார்களானால், நம் நாட்டின் மக்கள் தொகுதிக்குள், சாதி சமய வேறுபாடொழிந்து "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற மெய் யுணர்வும், புலைகொலை நீங்கிய புனித சீலமும், உயிர்க்கிரங்கி அவற்றின் உறுதுயர் களைய முந்துறும் தயாமூல தன்மமும், வேர் ஊன்றிக் கொழுந்து விட்டுப் படர்ந்து, இத் தென் தமிழ்நாடு, இறைவன் நேரே ஆளும் அருள் அரசாட்சியில் விளங்கும் பேரின்ப உலகமாக மாற்றங் கொள்ளும் பான்மையில், இதுகாறும் வதிந்துவந்திருக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

இனியாவது, அவர்கள் அனைவரும் இதில் மெய்ப்பற்று உண்டாகப் பெற்று, இதனைப் பயின்று, உணர்ந்து, உறுபயனைத் தாம் அடைந்தும் தம்மைச் சூழ்ந்திருப்பவர்களுக்கு அடைவித்தும், இன்புறுவார்கள் என இறைவனை ஏத்துகிறேன்.

### இப் பகுதியை அச்சிடுவதில் உறுதுணையாயவர்

11. திரு ஒற்றியூர்ப் பகுதி என்னும் இந் நூலினை, "சண்டே டைம்ஸ்" அச்சகத்தில் கொடுத்துப் பத்து மாதங்கள் ஆயின என்றாலும், அவ் வச்சகத்திற்கு நேரிட்ட இடையூறுகளால், இதன் அச்சுவேலை பல மாதங்களாக நின்றுவிட்டது. எட்டு மாதங்களில் எட்டுப் பாரங்களே அச்சாயின. பின்னர், இப் பதிப்பின் முதல் ஆறு பகுதிகளின் முதற் பதிப்பிற்கும், அவற்றில் முதல் மூன்று பகுதிகளின் இரண்டாம் பதிப்பிற்கும் எனக்கு உற்ற துணையாக உடனிருந்து, அச்சகத்துக்குப் படி செய்வதிலும், அச்சுத் தாள்களை ஒப்பிட்டுப் பார்ப்பதிலும் ஆய்வதிலும், உளமும் உடலும் சலியாது, உவந்து, இரவு பகலாக எளியேனொடு ஊனில் உயிரென்ன ஒத்துழைத்தும், பேர் ஆற்றலோடு, அவைகளை இனிது நிறவேற்றிவைத்த என் மனைவி இராஜஇராஜேசுவரி அம்மையார் உடல் பெரிதும் நலிவுற்று இருந்தமையால், மேலும் ஒரு மாதம் தடைப்பட்டுவிட்டது.[360] ஆகலின், எஞ்சி நின்ற பதினைந்து பாரங்களை இறுதிக் காலமான ஒரு மாதத்தில்தான் அச்சிட்டு முடிக்கவேண்டியிருந்தது. இப் பகுதியின் அச்சுத் தாள்களைத் துருவி ஆய்வதில் எனக்குத் துணைபுரிந்த நண்பர்கள் விவரம் பின் வருமாறு: திருவாளர்கள் கே. சோமசுந்தரம் செட்டியார் பி.ஏ. அவர்களும், டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல். அவர்களும் தொடக்கத்தில் சில பாரங்கள் பார்த்தார்கள். திருவாளர்கள் பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்களும், பண்டிதர் சுகவனம் சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களும், வில்வாரணி பச்சையப்பன் அவர்களும் இடை இடையில் இரண்டொரு பாரங்கள் பார்க்க நேர்ந்தது. எல்லாப் பாரங்களையும் பார்த்துதவியவர்கள் மூவர். அவர்களில் ஒருவர், அன்பிலும் ஆதரவிலும், உழைப்பிலும் ஊக்கத்திலும், அறிவிலும் ஆற்றலிலும் சிறப்புற்ற நண்பராவார், இங்குத் தம் பெயர் குறிக்கப்படுதலை விரும்பாத அடக்கமுடையவராக இருக்கிறார் ஆகலின், அஃது அங்ஙனம் ஆகுக. வித்துவான் ப. மூ. சோமசுந்தரம் பிள்ளை, ஆனர்ஸ், எம்.ஏ., எல்.டி. அவர்களும் வித்துவான் இ. பா. வேணுகோபாலன் அவர்களும் எஞ்சிய இருவராவர். இவர்கள் யாவரும் காலத்தால் செய்த இந் நன்றி எக் காலத்தும் மறக்கற்பால தன்று. இவர்கள் எல்லாரும் ஒரு முகமாகத் திரு அருட்பாத் தொண்டாற்ற முன்வந்தார்கள் ஆதலால், தமிழுலகம் இவர்களை வாழ்த்திப் பாராட்டுமாக! மேலே சொன்னபடி, குறுகிய காலத்தில் இந் நூல் முடிவுபடவேண்டியதை முன்னிட்டு, நம்

---

360. இதைச் சார்ந்து, பாயிரம் 5-ஆம் பக்கத்தில் உள்ள ஆராதனை பார்க்க.

இளம் வித்துவான் வேணுகோபாலன் அவர்கள், இப் பதிப்பைச் சார்ந்த சிற்சில இன்றியமையாத பிற செயல்வகைகளையும், சலிப்புறாது மேற் கொண்டு உதவி யிருக்கிறார். இப் பணி, அவருக்கு நல்ல வழிகாட்டியாக இருந்து, அவர் வாழ்க்கையையும் கல்வியறிவையும் மேலும்மேலும் சிறப்பாக வும் புனிதமாகவும் ஆக்கி அமைக்குமாக! இந் நூலினைச் " சண்டே டைம்ஸ் " அச்சகத்தின் கண்ணேயே, முடித்துதவ முயன்றவர் அவ் வச்சகப் பொறுப் பினரும் என் அன்பிற்குரிய நண்பருமான திருவாளர் ராம. சாத்தப்ப செட்டியார் அவர்கள். தாமே முன்வந்து, இந் நூலைத் தம் அச்சகத்தில் சிறு கால அளவில், நன்கு முடித்துக் கொடுத்த நண்பர்கள் திருவாளர்கள் தி. கண்ணபிரான் முதலியார் அவர்களும், தி. சபாபதி முதலியார் அவர் களும் ஆவர். இப் பதிப்பின் சார்பாக, சென்ற இரண்டாண்டுகளாக, எனக்குப் பலவகையிலும் அறிவுறுத்தியும் ஊக்கமளித்தும், தன்னலமற்றுத் தொண்டாற்றி வருபவர்கள், திரு அருட்பாச் சங்கத்தின் அங்கத்தினரான திருவாளர் கே. கே. மேனன் பி.ஏ. அவர்கள் உள்ளிட்ட என் அரும்பெரு நண்பர்கள் ஆவர்.

### வாழ்த்துரை

12. வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்கும் தூண்டாத மணிவிளக் காகிய இறைவன் திருவடிக்கண், இவர்கள் எல்லோரின் தூய திருப்பணியை யும் அடக்கத்தோடும் அச்சத்தோடும் பத்திமையோடும் ஏற்பித்து இறைஞ்சு கிறேன். வாழ்க திரு அருள்! வாழ்க நம் அடிகளார்! வாழ்க திருஅருட்பா! இறைவன் திருஅருளால், உலகத்தின் எப் பாங்கரும்,

" கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக ;
அருள்நயந்த சன்மார்க்கர் ஆள்க ;—தெருள் நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக ; நன்று நினைத்(து)
எல்லோரும் வாழ்க இசைந்து."

" அருட்பா வளாகம் ", தியாகராஜபுரம்,
மயிலாப்பூர், சென்னை-4.
28-12-1956.

ஆ. பாலகிருஷ்ணன்.

உ

திருச்சிற்றம்பலம்

# அடிகளார் வழிபாடு

அடிகளார் முதல் மாணுக்கர்
உபய கலாநிதிப் பெரும்புலவர்
**தொழுவூர் ஸ்ரீ வேலாயுத முதலியார் அவர்களால்**
**திரு அருட்பா வரலாற்றில் சொல்லப்பட்டது.**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமில்
நிராமயம் காரகம தில்லாதசஞ் சீவிதம்நல்
நிராசைகொண் டாருடைய நிகேதனம் சூதமுறல்
வராதஇன் பாரணை முனைவந் தேஅருளி
மகாபலம் சேரஅருள் விராவுசெம் பாதநம!
இராமலிங் கார்மனதில் இராதசங் தோஷநம!
இராமலிங் காயநம! இராமலிங் காயநம!

அடிகளார் மாணுக்கர்
**பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்கள்**
**இயற்றியது.**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனர் எங்கள்
சனிப்பிறப்பை ஒறுத்துவினைத் தனித்தொடக்கை அறுக்க
ஏய்மலர்ந்த கருணைதிரு மேனிகொண்ட காலத்(து)
எண்தோளோ இருதோளோ முக்கண்ணோ இருமை
ஆய்மலர்ந்த அருட்கண்ணோ நாமம்எழுத்(து) ஐந்தோ
அன்றிஅருள் இராமலிங்க அற்புதப்பொற் பெயரோ
வாய்மலர்ந்த(து) ஈரிரண்டு மறையோமூ விரண்டு
மாமுறையோ வகுத்துரைமீர் மயக்கொழிமா தவரே.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

## நம் பெருமானார் இராமலிங்க அடிகளார் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய ஒரு திருமுகத்தின் இடைப்பகுதியின் வடிவம் உள்ளவாறு.



திரு அருட்பா 5-ஆம் புத்தகம் திருமுகப்பகுதி 43-ஆம் பக்கம் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

# வாயுறை வாழ்த்து

## 1.

பேராசிரியர், மஹாவித்துவான், புலவரேறு,

**அ. வரதநஞ்சையப் பிள்ளை அவர்கள் கூறும் ஆசி.**

---

*அறுசீரடி ஆசிரிய விருத்தம்*

### வள்ளலார் தோற்றம்

அறிவால் உயர்ந்த பிறவிமக்கள் அடைதற் கேற்ற அறமுதலாய்
நிறையும் பேறு நான்கனுள்ளும் நிகரற்(று) உயர்வீ(டு) அடைந்தின்பம்
பெறுதற் பொருட்டே இவ்வுடம்பு பெற்றேம் என்னக் கருதாதார்
அறிவு விளங்க அறியாமை அகற்றக் காலம் வருங்காலே. (1)

தனைப்போல் இன்பம் அடைந்துயர்மே தக்க ஞான சித்தர்களை
அனுப்பி மீட்டற்(கு) உரியாரை அருளால் மீட்பன் இறைவனென
நுனித்த நாலோர் புகல்வர்அது நோக்கின் உண்மை எனவிளக்க
மனித்த உருவில் தோன்றினர்இம் மகிமேல் ஒருநூற் றுண்டுகள்முன். (2)

வடபால் இராம கிருட்டினப்பேர் வயங்கும் தவமெய்ஞ் ஞானியுடன்
அடிசேர் விவேகா நந்தர்எனும் அம்மா தவரும் அவ்வாறே
படிமேல் புகழ்சேர் தமிழ்நாடு படைத்த பெரும்புண் ணியத்தாலே
வடலூர் இராம லிங்கர்எனும் வள்ளற் பெருமான் அவதரித்தார். (3)

### வள்ளலார் பெருமை

இளமைப் பருவத்(து) ஓதாதே எல்லாம் முன்பே கற்றதுபோல்
அளவற் றுயர்வே தாகமநூ லாதிக் கலைநுண் பொருள்தெளிந்தே
உளமுற் றினிய அமுதப்பேர் ஊற்றாய்ப் பெருகிப் பொங்கிடல்போல்
எளிதே அரிய நுண்பொருட்கள் இசைக்கும் தமிழ்ப்பா வகையின்அம்மா. (4)

பாலுந் தேனும் முக்கனியின் பயனும் சுவையும் செழுங்கரும்பும்
மேலும் விண்ணோர் பெறும்அமுதும் வேறும் இனிய பொருள்பலவும்
சாலக்கூடி னும்இது தனைப்போன்(று) இனியா இனியாதே
ஞாலத் துரைக்கஉளதென்றே நன்காய்ந்து அறிஞர் திகைப்புறவே. (5)

எல்லாக் குலமும் ஓர்நிறையே எடையிட்(டு) உயர்வு தாழ்வில்லை
எல்லாச் சமயங் களும்உறுப்பாய் இயையும் சமயம் ஒன்றேகாண்
கொல்லா விரதம் ஒன்றுகொண்மின் குலாவிப் பரவும் சன்மார்க்கம்
அல்லால் வேறு வழியிலைநீர் அல்லல் படுவ(து) அழகன்றே. (6)

ஓடுங் கதிரோன் உடன்ஓடும் ஓகோ நுந்தம் வாழ்நாளும்
வாடும் இறுதி வரும்அந்தோ மக்காள் யாது செயவல்லீர்
நாடி நுமக்கின் னருள்சுரக்கும் நம்பன் உங்கள் உளந்தோறும்
ஆடிக் கலந்து நிற்பவும்நீர் அறியீர் மயங்கல் அறிவன்றே. (7)

அழியும் பொருட்கண் பேராசை அழியா இன்பத்(து) ஆசையற்றீர்
பழியென்(று) எண்ணீர் தீதுசெய்யப் பதைத்துத் துடித்து முந்துகின்றீர்
வழியல் வழியே நயக்கின்றீர் மக்காள் நும்மைக் காண்தோறும்
அழுகை தோன்றி அலமருவேன் அமலற் றொழுவான் வாரீரோ. (8)

என்னக் கருணை பெருகும்இன்ப இசையால் கூவி வழிகாட்டிப்
பன்னிப் பனுவல் மழைபொழிந்த பண்பின் அருட்பா வழங்கினரே
என்னைப் பாரின் இருப்புமனம் இளகிக் குழைந்து நெக்குருகிச்
சொன்ன வாறு கேட்பனென்று சொல்லு மாயில் சொல்வதென்னே. (9)

செஞ்சொல் தெளிவும் அரும்பொருளும் திகழும் மோனைச் சந்தமுதல்
நெஞ்சம் இனிக்கும் எதுகைநலம் நிலவும் அணிகள் பலகுழும
விஞ்சிப் பெருமாக் கடலேபோல் விரிந்து பரந்து விளங்கினவால்
எஞ்சும் விரிப்பின் அளவுபடா(து) இதயங் கடந்த பெருமையதே. (10)

ஓர்செய் யுளைநாத் தொடுமுன்னே உள்ளம் உருகத் தொடங்கிவிடும்
சீர்ஒன் றிரண்டு படிக்குமுன்னே சேட்டை மனமாக் குரங்கடங்கும்
நீர்வார் கண்ணோர் புறம்தடுக்கும் நிகழ்த்த நாவும் தழுதழுக்கும்
ஓர்வம் என்னில் சிவானந்தத் துள்ளே மூழ்கும் அறிவம்மா. (11)

மூவர் வழங்கும் தேவார முற்றும் பொதிந்த சுவைபெருகும்
மேவும் மணிவா சகச்செந்தேன் வெள்ளக் கடலில் மிதப்பிக்கும்
யாவும் புலன்கள் தொழிற்படாஅ அறைவ தென்னே இம்மையிலே
தேவ தேவன் கழலடைந்தால் அன்ன நனவும் செறிந்திடுமே. (12)

உரையால் முடியா உணர்வோர்தம் உள்ளத் துணர்வே கரியாமல்
அரிய வீடு பெறுமாறி(து) அகிலத் தார்க்கும் பொதுநெறியே
உரிய தமிழ ரெனப்பிறந்தேம் ஒப்பில் லாத நமதன்னை
இருமைப் பேறும் அளிக்கின்றாள் எனுமோர் தருக்கும் உளதன்றே. (13)

## இப் பதிப்பின் சிறப்பு

இன்ன வகையால் உலகைஎலாம் இன்ப உருவாய்ச் சமைத்திடும்நூல்
முன்னம் அடிகள் திருக்கரத்தால் முனைந்தே எழுதும் ஏடுகளை
உன்னித் தேடிப் பலவிடத்தும் ஒருங்கே தொகுத்து முறைப்படுத்தி
மன்னும் எழுதா எழுத்திலிட்டு வழங்கும் வள்ளல் அறிவீரோ. (14)

பிறந்தார் பிறவிப் பயன்பெறுமா(று) இதுவே பிறிதொன் றில்லைஎனச்
சிறந்தோர் போற்றும் திருப்பணியைச் செய்து முடிக்கும் திறன்எளிதோ
குறைந்தும் கூடிப் பிறழ்ந்துமிகக் கோது பட்டும் பேதமுற்றும்
மறைந்தும் இருந்த பாத்தேடி வழுக்கள் அகற்றித் தூய்மையுற. (15)

பாம்பின் கால்பாம் பால்அறியப் படுதல் போல அருட்பாவைத்
தாம்பற் பலநாள் நாத்தழும்பு சாரப் படித்தும் ஆராய்ந்தும்
மேம்பட்(டு)உயர்ந்த அநுபவத்தால் விளங்கும் பொருள்கள் விளக்கமுற
நாம்பெற் றுய்ய அருள்சுரந்த நன்றிக்(கு) உளதோ கைம்மாறே. (16)

சிலன் சைவ சித்தாந்தச் செந்நூற் கடலும் தமிழ்க்கடலும்
மேலும் மேனாட்(டு) ஆங்கிலமாம் விரிந்த கடலும் கடந்தசைவன்
கோல ஆறு முகக்குரிசில் கோனூர் சின்னம் மைக்குதித்த
பால கிருட்டி ணப்பெயரான் பரவும் அன்பர் உளம்பெறான். (17)

வம்மின் தமிழ ராய்ப்பிறக்க வரம்பெற்(று) உயர்ந்த மாண்புடையீர்
தம்மின் இன்பக் களஞ்சியத்தைத் தாணி மாந்தர் கொள்ளைகொள்ள
மெய்ம்மைச் சிவப்பே ரானந்தம் வேண்டின் இங்கே யேபெறலாம்
நம்மை உய்வித் திடற்கிந்த நவைதீர் நூலே சாலுமம்மா. (18)

வாழ்க அருட்பாத் திருத்தமுற வழியே செய்வோர் பொருள்கொடுத்தோர்
வாழ்க வேதா கமசார வடிவாய் இன்பம் வழங்கமக்கள்
வாழ்க கருணை கூர்அரசர் வள்ளல் செல்வர் நல்லறிஞர்
வாழ்க வாழ்க எனஎல்லாம் வல்லான் அடியை வணங்குதுமே. (19)

திருச்சிற்றம்பலம்

# வாயுறை வாழ்த்து

## 2.

## திரு ஒற்றியூர் ஸ்ரீமத். பாலசுந்தர அடிகளார் அருளும் ஆசி.

---

உ

தணிகை ஆண்டவன் துணை

ஸ்ரீமத். பாம்பன் குமர குருதாச குருப்யோ நம:

### கடவுள் வாழ்த்து

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது."

"தண்ணார் திங்கள் பொங்கர வம்தாழ் புனல்சூடிப்
பெண்ஆண் ஆய பேரரு ளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழு வோர்கட்(கு) இடர்பாவம்
நண்ணா ஆகும் நல்வினை ஆய நணுகும்மே."

### திரு அருட்பாவின் பெருமை

"தவத்தினும் உயர்ந்த செல்வம் தரைவிசும் பினும்இன் றென்றே
தவத்தினைத் தனமாக் கொண்ட தாபதர் வேத நாலும்
பவத்தினிற் பகைமை வென்ற தலைவர்கள் உரைத்த நாலும்
தவத்தலை வனைஉள் காத சகத்தினர்க்(கு) இழைநூ லாமே."

என்று ஸ்ரீமத். பாம்பன் அடிகளார் திருவாய்மலர்ந்தபடி, இந்தத் திரு அருட்பா என்னும் ஞானநூல் தபோதனர்கள் போற்றி, திருக்கரத்தேந்தி, உச்சிமேற்கொண்டு, பின்னர் கண்ணால் தரிசிக்கும் மகிமை வாய்ந்தது.

"பாடி அவன் திருப்பாட்டைப் படிகண்டாய், இன்புலகப் படிகண் டாயே." என்று வடலூர் வள்ளற் பெருமானார் வழங்கிய இத் திரு அருட்பா வானது, திருவடியை அணுகுவதற்கு எவ்வளவோ சேய்மையிலிருக்கும் நம்மை அறைகூவி அழைத்து, சகல கேவலமற்ற சுத்தநிலை என்னும் திரு வடியாகிய படியில் ஏறவைத்து, முடியாகிய இன்ப மாளிகைக்கு விரைவில் அழைத்துச்செல்லும் இயல்பினது.

நாற்பது ஆண்டுகட்குமுன் மலையாளத்திலிருந்து சென்னைக்கு வந்திருந்த ஸ்ரீ நாராயணகுரு என்ற பெரியாரை நானும் இப் பதிப்பாசிரியரான என் நண்பர் ஸ்ரீலஸ்ரீ ஆ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களும் தரிசிக்கச் சென் றோம். அவர்களிடம் திரு அருட்பாவினைக் குறித்து நாங்கள் உரையாட நேர்ந்தபோது, அவர்கள், "திரு அருட்பாவானது, இராமலிங்க அடிகளார்

தெய்வமாய் நின்ற நிலையில் பாடப்பெற்றது.'' என்றார்கள். அவ் அருள் வாசகம் இன்றும் எங்கள் இருவர் செவியிலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. நித்திய பிரமசாரியும் கடுந் தபசியுமான இப் பெரியார் போன்றவர்கள் போற்றிப் புகழும் பெருமையும் மகிமையும் வாய்ந்தது இந்தத் திரு அருட்பா என்னும் ஞான நூல்.

## வள்ளற் பெருமானார் மாட்சிமை

நம் நால்வர் பெருமக்களுடைய தேவார திருவாசகங்களைச் சீராட்டிப் பாராட்டி நமது நா இனிக்க, ஊன் இனிக்க, உளம் இனிக்க, உயிர் இனிக்க, உயிர்க்குயிரும்தான் இனிக்கச் செய்தவர் இராமலிங்க அடிகளாரே. அடிகளாரைத் தவிர்த்து, தேவார திருவாசகங்களை இவ்வாறு இனிக்கச் செய்த வேறு யாரையாவது, இதுவரையில், இத் தமிழுலகத்தில், கண்டதுண்டோ?

> "மருவிய உடல் வெறுப்பும் வையக வெறுப்பும் வந்தால்
> இருவினை ஒப்பும் அங்கண் எய்திடும்.''

என்பது சாத்திரம். நமது வள்ளற் பெருமான் அவர்களோ என்னில், "இதில் அருவருப்பு பால் உணுங்காலையே உளதால்.'' என்றார்கள். அடிகளார், பிறவியிலேயே, உலக வாழ்வு மனத்தும் காயத்தும் திண்டாத, முழு விழிப்பாளர் ஆவர்.

அடிகளார் "தவம் புரிந்தான் என நடித்தேன்.'' என்று வருந்தி, நம்முடைய தவமாகிய கலனுக்குப் பாய்மரம் கிழிந்திருக்கிறது, சுக்கான் ஒடிந்திருக்கிறது, நரம் செய்வது போலித்தவம் என்பனவற்றை எடுத்துக் காட்டுகிறார்கள்.

"பெண்ணாசை பெரிதென்பார் விண்ணாரும் அவர்க்கும், பெண்ணாசை பெரிதல காண் ஆணாசை பெரிதே.'' என்று நமது வள்ளற்பெருமான் இறைவன்பால் பேரா அன்புகொண்டார்கள் ஆதலின், அவர்கள் சாதி வேற்றுமை, சமய வேற்றுமை அற்றதோடு நில்லாமல், ஆண்பால் பெண்பால் என்கிற பால்வேற்றுமையும் அற்ற பெரியோர் என்பது விளங்குகிறது. இக் கருத்தையே "Soul has no sex; sex exists only in the body.'' (ஆன்மா பால்வேற்றுமை அற்றது; உடலுக்குத்தான் அஃதுண்டு.) என்று சுவாமி விவேகாநந்தர் அமெரிக்கர்களுக்குத் தெரிவித்திருக்கிறார். காந்தி அடிகள் கூறியருளிய "We have no sisterly look in our eyes." (பெண்களைப் பெண்களேபோல் பார்க்கும் பார்வை ஆண்கள் ஆகிய நம் கண்களில் இல்லை.) "I could not live both after the flesh and the spirit.'' (ஒருவனுக்கு ஊன்முகப் பார்வையும் ஆன்மக் காட்சியும் ஒருங்கே இரா.) என்னும் ஞான வாக்கியங்களும், இங்கு நினைவுக்கு வருகின்றன. இக் கருத்து, இளமகனை சுகர் சென்றபோது, உடையின்றி நாணமற்றிருந்த தேவ மாதர்கள் முதுமை எய்திய வியாசர் போனபோது, ஆடை அணிந்து, அவர் கேட்ட கேள்விக்கு விடை இறுத்தியதிலிருந்து, மேலும் தெளிவாகிறது.

அதாவது: "ஆடவர் இவர்கள் மற்றை அரிவையர் இவர்கள் என்ன நாடுதல் நினக்குண்(டு) அந்த நற்றவன் தனக்கதில்லை." என்பதே. இதனால் ஆருயிர்கள் என்கிற ஞான நாட்டம் வேண்டுமே அன்றி, ஆண் பெண் என்ற பேத நாட்டம் கூடாது என்பது தெளிவு. இதனையே நமது வள்ளற் பெருமான் அவர்கள் "ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்." என்கிறார்கள்.

## புறனழிப்பார் அறியாமை

இத் தன்மை வாய்ந்த ஞானிகளையும் ஞானநூல்களையும் புறங்கூறும் இந்திரிய ஒழுக்கம் இல்லாத "மடவோர் கூற்றை மறைத் திருவர் பொருட் படுத்தார்." என்கிறார் எங்கள் பாம்பன் அடிகளார்.

## அருளாளர்களின் அருநிலை

"இலை ஒருபால் அனம் ஒருபால் மலம் சேர்த்துண்ணும் ஏழைமதியேன்" ஆகிய நானோ திரோதானம் நீங்கிய அருளாளர்களுடைய அருட் செயலை அளந்து கூறும் தகுதி வாய்ந்தவன். கண்ணீர்வார்தல் முதலிய மெய்ப்பாடுகள் எட்டுவிதம் என்று அருளாளர்கள் திருவாக்கால் அறிகின்றோம். இந்த எண் வகையில், அன்பே அரும்பாத என் உள்ளம், உழுவலன்புடைய நமது ஆசிரியர் வள்ளற் பெருமானைப் பற்றி எழுதித் தெரிவிக்க நாணிப் பின்னடைகின்றது. ஆயினும், என் நண்பர் அவர்கள் கட்டளையை மறுக்க அஞ்சி, கடவுட் காட்சியாளரைப் போல் என் புன்மைகளை இதில் வகுத்திருக்கிறேன். மன்னித்தருள்க.

## வாழ்த்துரை

பேரருளாளன் பேரருள் வாழ்க! வடலூர் வள்ளற் பெருமானார் வாழ்க! அவர் திருவாய் மலர்ந்த திரு அருட்பா என்னும் ஞானநூல் வாழ்க! இதனை மன்பதைக்கு அரிய விருந்தாக அளித்துப் பேருபகாரம் புரியும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரும் பெருந்தயவாளருமான ஸ்ரீ ல ஸ்ரீ ஆ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களும், அவர்கள் பல பகுதிகளாக வெளியிடும் அருட்பா நூல்களும் நீடு வாழ்க! எங்கள் இறைவ! வாழ்க நின் பேரருள்! வெல்க நின் பேரருள்! போற்றி நின் பேரருள்!

## இங்ஙனம்

பதியில் முழுவிழிப்பும் பாசத்தில் உறக்கமும் கொண்ட விழித்துறங்கும் குமரகுரு தொண்டரும்; விஞ்ஞான வேந்தரும், மகாதேஜோ மண்டல குருவுமாகிய ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் சீடர் பாலசுந்தர சுவாமிகள் என்னும் பெயரிய குமாரதாசன், ஸ்ரீ அப்பர்கோயில், திரு ஒற்றியூர்.

திருச்சிற்றம்பலம்

# வாயுறை வாழ்த்து

## 3.

சென்னை இந்து சமய மத தர்ம பரிபாலன கம்மிஷனர்

**அ. உத்தண்டராமப் பிள்ளை, பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.**

அவர்கள் கூறும் ஆசி.

---

உலக சரித்திரத்தில் சிற்றறிவும் சிறு தொழிலும் படைத்த மக்கள், தம் அறிவு மயக்கத்தால் அஞ்ஞான இருளிலும் துன்பத்திலும் உழலும் போதெல்லாம், அவர்களுக்கு உறுதுணையாக, ஒளிமயமான தெளிந்த ஞானியர் தோன்றுகிறார்கள் என்று அறிகிறோம். அத்தகைய இறையருள் நிரம்பப் பெற்று அவதரித்த அருளாளர்கள், சமயாசாரியர்களும் வடலூர் திருவருட் பிரகாச வள்ளலார் என விளங்கிய இராமலிங்க அடிகள் போன்ற ஆன்றோருமாவர். அடிகளார் கடந்த கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அதே காலத்தில், நம் நாட்டின் வடபகுதியில், இராம கிருஷ்ண பரம ஹம்ஸர் என்ற பெரியார் தோன்றி மறைந்தார். அவருடைய சீடர் களில் முதன்மையானவர் சுவாமி விவேகானந்தர் என்ற உலகம் போற்றும் உத்தமர். அவரும் ஏனைய சீடர்களும், இராம கிருஷ்ணர் பெயரால் மடம் ஒன்று நிறுவி, உலக வாழ்க்கைக்கும் இறை பணிக்கும் ஆவனசெய்து வருகின்றனர். இராமலிங்க அடிகளும், இறையறிவு, இறையருள், இறை பணி, மன்பதைத் தொண்டு முதலிய எல்லாத் துறையிலும் மேம்பட்டவரே ஆயினும், அவர் பணியைத் தொடர்ந்து, ஒல்லும் வகையெல்லாம் ஓவாதே செல்லும் வாயெல்லாம் செய்யும், ஆற்றலும் பண்பும் படைத்த தொண்டர் குழாம் அமையாமற் போனது நம் நாட்டிற்கோர் பெருங்குறை. எனினும், நம் முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியாரவர்களும் யோகி சுத்தானந்த பாரதியார் போன்ற மூதறிஞர்களும் சமரச சன்மார்க்க சங்கம் ஒன்றை, வள்ளலார் தாமே நிறுவிய சத்திய தருமச் சாலை, சத்திய வேத பாடசாலை, சத்திய ஞான சபை இவற்றைத் தன்னகத்தே கொண் டுள்ள வடலூரில், அமைத்து, நடத்தி வருவது, போற்றற் குரிய அரும் பெருஞ் செயலாகும்.

அடிகளார் மாபெரும் புலவர் என்பது உலகறிந்த உண்மை. அவர்கள் அருள் வாக்குக்கள் அவர் வாழ்ந்த நாட்டுக்கும் காலத்துக்கும் மட்டுமே அன்றி, உலகுக்கெல்லாம், என்றென்றும், உறுதுணையாகப் பயன்படும் புகழ் படைத்தவை. இறையருள் பூரணமாகப் பெற்ற அவருடைய சுவை மிக்க பாடல்களும் உபதேசங்களும், எளிமையும் இனிமையும் சொல்லழகும்

பொருட் செறிவும் அன்பு நெறியும் கலந்த இறைபருளை வாரி வழங்கும் கற்பகமாகவும், ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் மாண்புடையவாக வும் திகழ்கின்றன. அடிகள் திருவாசகத்தை "நான் கலந்து பாடுங்கால் நற் கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று பாராட்டுகின்றார். இவையனைத்தும் அடிகளாரின் திருவருட்பாப் பதிகங் களுக்கு முற்றிலும் பொருந்தும் என்பதை அடிகளின் வாய்க்கினிய, செவிக் கினிய, உயிர்க்கினிய, உள்ளுணர்வுக்கினிய, தீஞ்சுவைப் பாடல்களைக் கற்று, இன்புற்று வரும் பாவலரும் பாமரரும் நன்கறிவர்.

அடிகள், சமயத் துறையில், சமரச நிலை உடையவராகவே விளங்கினார் என்பது, அவர் சைவம், வைணவம் என்ற இரு சமயக் கடவுளரையும் குறித்துப் பாடியுள்ள பக்திப் பரவசமுள்ள தோத்திரப் பாடல்களினின்றும் இனிது விளங்குகின்றது.

அடிகள் ஜீவகாருண்ய ஒழுக்கமே தலையாய அறமென்னும் கோட்பா டுடையவர். ஜீவகாருண்யம் இன்றேல்—அன்பில்லை; அறனில்லை; அருள் விளக்கமில்லை; கடவுள் நிலை கைகூடாது; முத்தி இன்பம் கிட்டாது. ஜீவ காருண்யமே, அழியாத இன்ப முத்தி வீட்டுக் கதவுக்குத் திறவுகோல் என்று வற்புறுத்திக் கூறியது கவனிக்கற்பாலது.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்."

என்று கேட்டார் வள்ளுவர். 'மருவாணைப் பெண்ணாக்கி' என்ற அறநிலை விளக்கச் செய்யுளில், எத்தகைய சித்தராயினும் 'உயிருடம்பைக் கடிந் துண்ணும் கருத்தனேல் எம் குருவாணை எமது சிவக் கொழுந்தாணை ஞானி எனக் கூறேனே.' என்று அடிகளார் கூறியதன் நயம் குறிப்பிடத் தக்க தாகும்.

அடிகள் சாதிப் பூசல்கள் சமயப் பிணக்குகளை அறவே வெறுத்தார். இக் கருத்தினை, 'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடி களிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர் அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே.' என்ற அடிகளார் வாக்கில் காண்க.

அடிகள் சைவ சமயாசாரியர்களைத் தம் ஞான குரவர்களாகக் கொண்டிருந்தார். அவர்கள்மீது அருண்மாலை பாடியுள்ளார். தேவார திருவாசகத் திருமுறைக் கருத்துக்களையும் சொற்களையும் கையாண் டுள்ளார்.

அடிகளார் அருளிய திருப் பாடல்களையும், உபதேசங்களையும், வசனப் பகுதிகளையும் — சுவாமிகள் திருக் கரத்தால் எழுதப்பெற்ற தெய்வத் திரு ஏடுகள், அடிகள் பார்வையிலேயே வெளியான முதற் பதிப்புக்கள்,

அன்னாரின் அணுக்கத் தொண்டர்களின் கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றினின்றும் எடுத்த—பரிசுத்தப் பாடல்களாகச் சிறந்த முறையில், அடக்க விலையில், 12 பகுதிகளாக, வெளியிட்டுப் பாவலரும் பாமரரும் செல்வரும் வறியோரும் பயன்பெற்றுய்ய வேண்டுமென்னும் பெருநோக்குடன், ஆன்ற அறிவும் கலைஞானமும் இறையன்பும் இறையருளும் மன்பதைத் தொண்டில் ஆர்வமும் நிறையப் பெற்ற திரு. ஆ. பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் இதுகாறும் 7 பகுதிகள் வெளியிட்டிருக்கின்றார்கள். அவை : 1. கீர்த்தனைப் பகுதி. 2. வசனப் பகுதி. 3. வியாக்கியானப் பகுதி. 4. உபதேசப் பகுதி. 5. திருமுகப் பகுதி. 6. தனிப்பாசுரப் பகுதி. 7. முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி என்பனவாகும். எட்டாவது பகுதியாகிய இப் பகுதி 'இரண்டாம் திருமுறையும் மூன்றும் திருமுறையும் அல்லது திருஒற்றியூர்ப் பகுதி' என விளங்குகின்றது. இப் பதிப்பாசிரியர் தம் நீண்ட கால ஆராய்ச்சியாலும், ஆன்ற அறிவினாலும், கல்வி நலத்தாலும் இந் நூலைப் பதிப்பிக்க மிகவும் தகுதியுடையவர். இவர்தம் வாழ்க்கைத் துணைவியார் வள்ளலாரின் ஆன்ற தொல்குடியில் தோன்றியவர். பிள்ளை அவர்கள் அடிகளாருடைய கையேடுகள் கிடைக்கப் பெற்றவர். திருவருட் பாக்களில் நெடுங்காலம் பழகித் தம் வாழ் நாட்களில் பெரும் பகுதியை இறை பணிக்கே அர்ப்பணித்து, அடிகளாரின் நூல்களைத் தனிப் பதிப்புக் களாக, சுத்தப் பதிப்புக்களாக வெளியிடுவதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டுள்ளார்கள். வள்ளலார் நூல்களைப் பன்னெடு நாட்களாகத் துருவித் துருவி ஆராய்ந்து தான் பெற்ற இன்பம் இவ் வையகமும் பெறல் வேண்டும் என்ற விருப்புடன் இப் பதிப்புக்களை வெளியிட்டு வருகின்றார்கள்.

இப் பதிப்பின் சிறப்பியல்புகளைப் பாயிரம் 6, 7, 13, 14-ஆம் பக்கங் களில் பதிப்பாசிரியரே தெளிவு படுத்தியிருப்பதைக் காணலாம். இரண்டு முக்கிய இயல்புகளை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் இலக்கிய இலக்கணங்களை வரன்முறையாகக் கற்றறியாத என்போன்றாரும் பயன் பெறும் வகையில் சந்தி பிரித்துப் பதிப்பித்திருப்பது பொது மக்களுக்குப் பேருதவியாயிருக்கும்.

ஆசிரியரின் நோக்கமும் முயற்சியும் மூல பாடத்தைப் பற்றியதே ஆயினும், ஆங்காங்கே சைவத் திருமறைகளாகிய தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய அருள் நூல்களிலிருந்தும், உலகப் பொது மறையாம் திருக்குறளிலிருந்தும், திருப்புகழ், கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், காரைக்காலம்மையார், தாயுமானார், பட்டினத்தடிகள், குமரகுருபரர், கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய அருள் நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டியிருக்கும் ஒப்புவமைப் பகுதிக் குறிப்புக்கள் பதிப்பாசிரியரின் கலைஞானப் பெருக்கை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

இப் பதிப்பில் மூன்றும் திருமுறையில் உள்ள பதிகங்கள் அகப் பொருட்டுறையாகப் பாடப் பெற்றிருக்கின்றன. இறை, உயிர், உயிர்க்குத்

துணையான தத்துவம், முறையே தலைவன், தலைவி, தோழியாகவும்—இவர்களிடையே நிகழும் அந்தரங்க அநுபவங்களையும் அவற்றின் பொருள் நுட்பத்தையும் குறிப்புக்களாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் அரிதெனக் கருதி அடிகளாரின் அகத் துறைப் பாடல்களைத் தனி நூலாகத் தக்க விளக்கத்துடன் வெளியிட முடிவு செய்திருப்பதாகப் பெருநூல் பகுதி 311-ஆம் அடிக்குறிப்பில் பதிப்பாசிரியர் அவர்கள் கூறியுள்ளார்.

இப் பதிப்பாசிரியரின் 7-ஆம் பகுதியாகிய முதல் திருமுறை என்ற பெருநூல் பகுதி கடந்த ஆண்டு தைப்பூச நன்னாளில் வெளியிடப் பெற்றது. இந்த 8-ஆம் பகுதி இவ்வாண்டு தைப்பூசத்தன்று வெளிவருவதும் மிகப் பொருத்தமே. இதில் 122 பதிகங்கள் 1320 பாடல்கள் 367 குறிப்புக்கள் இருக்கின்றன. இப் பதிப்பு 376 பக்கங்களுடன் பெரிய அளவில் வெளியாகிறது.

இன்னும் 4 பகுதிகள் விரைவிலேயே வெளிவர இருக்கின்றன. அவை: 1. திருத்தணிகைப் பகுதி. 2. பூர்வ ஞான சிதம்பரப் பகுதி. 3. உத்தர ஞான சிதம்பரப் பகுதி. 4. சித்தி வளாகப் பகுதி என்பவையாகும். இவற்றையும் பதிப்பித்து, அடிகளார் பெற்ற ஆன்மாநுபவத்தை மக்களனைவரும் பெற்று இன்புற வேண்டுமென்ற பதிப்பாசிரியரின் விருப்பம் இனிதே நிறைவேற வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவன் இணையடிகளை இறைஞ்சுகின்றேன்.

திருவருட்பாப் பாடல்களை இப் பதிப்பாசிரியர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதாகவும், அம் மொழிபெயர்ப்பு மூலத்தின் சொல் வன்மையும் பொருட் செறிவும் பழுதுபடாமல் மிகவும் நயம்பட அமைந்திருப்பதாகவும் தெரிகிறது. தமிழ்ப் பதிப்புக்களில் எஞ்சிய 4 பகுதிகளும் அகத்துறைப் பாக்களுக்கான தனித் தொகுதி விளக்க நூலும் வெளியானதும் ஆங்கில மொழி பெயர்ப்பையும் தக்க குறிப்புக்களுடன் தாமதம் இன்றி மேற்கொண்டு, பரந்த ஆங்கில உலகுக்கும் வள்ளலார் புகழைப் பரவச் செய்யவேண்டுவதும் இப் பதிப்பாசிரியரின் கடமையாகும்.

இம் மாபெரும் அருட்பணியில் ஈடுபட்டுத் தம் உடல், பொருள், அறிவு, ஆற்றல், கலைஞானம் அனைத்தையும் மன்பதைத் தொண்டிற்கே அர்ப்பணித்துத் தமிழ் மக்கள் யாவரும்—ஆண்கள் பெண்கள், பாவலர் பாமரர், செல்வர் அறிஞர் அனைவரும்—வள்ளலார் அருட்பாக்களைக் கற்று, இன்புற்று, அவர் அடைந்த ஆன்மாநுபவத்தை அடைந்து, இறைவன் இன்னருள் பெற்று, உய்ய வேண்டுமென்னும் உயரிய நோக்குடன், அல்லும் பகலும் அனவரதமும், உழைத்துவரும் பதிப்பாசிரியர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

> "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
> பண்புபா ராட்டும் உலகு."

சென்னை
14-1-1957

அ. உத்தண்டராமன்.

## AN APPRECIATION

By

**Dr. T. M. P. Mahadevan,** M.A., Ph.D.,
*Professor of Philosophy, University of Madras.*

It is given only to a few scholars to spend a life-time in constant and unswerving devotion to a single chosen ideal. To that rare category Sri A. Balakrishna Pillai belongs. He chose long ago as his ideal Saint Ramalingam; and he has constantly and unswervingly stuck to him. Even in the midst of a crowded and care-laden official career, he found time to gather, study and edit Saint Ramalingam's writings in six volumes. In his retirement, he has had no other concern than serving the cause of the great saint's mission.

Saint Ramalingam's *magnum opus* is *Thiru Aruṭpā*. A carefully prepared edition of its first *canto* was published by Sri Balakrishna Pillai sometime ago. The present publication contains the second and third *cantos* under the caption Tiruvoṟṟiyūr pahudi, as most of the hymns are addressed to the Lord of that holy place near Madras. Two types of mysticism may be discerned in these two cantos—what may be termed "feudal" and "bridal" respectively. In the former type, the devotee considers himself to be a vassal or servant of the Lord; in the latter, the attitude is that of a bride. Saint Ramalingam who was a master-mystic pours himself out unreservedly in soul-stirring song, thus enabling those who read and enjoy it to share his experience.

Sri Balakrishna Pillai has earned our eternal gratitude by giving us all the necessary aids for enjoying the Saint's mystic poetry. And, we shall look forward to the early release of the other cantos of the Aruṭpā.

Madras,
Jan. 21, 1957.

*T. M. P. Mahadevan.*

உ

# கடவுளை வழிபடும் அருட்பெரு நெறி

கந்த நாண்மலர்க் கழலிணை உளத்துறக் கருதுகின் றவர்க்கெல்லாம்
பந்த நாண்வலை அவிழ்த்தருள் சிதம்பரை பரம்பரை யுடன்ஆடும்
அந்த நாள்மகிழ் வடைபவர் உளர்சிலர் அவர்எவர் எனில்இங்கே
இந்த நாள்முறை திறம்பல ராய்உயிர்க் கிதம்செயும் அவர்அன்றே.[361]

இறைவ! உயிர்கள்பால் நிலைபெற்ற அமைதி இன்பம் நிலவுமாறு ஆகும் எளிய கருவியாக என்னைக் கைக்கொள்வாயாக.[362]

உலகின்கண், உயிர்த் தொகுதிகள் துன்பத்துக்கு உள்ளாகி வருந்தி இருக்கும் வரையில், உயிர் இரக்கத்தால் உள்ளும் புறமும் ஊடுருவி, உளம் உடைந்திருப்பவர்களை, மகிழ்ச்சி ஆனது அணுகுமாறில்லை.[363]

தடங்கலற்ற மகிழ்ச்சி கொண்டிருத்தல் வேண்டும் என்று நான் விரும்பும் நேரங்களில், நான் கண்ணால் காண்கிற அல்லது மனத்தால் கருதுகிற, என்னைச் சுற்றியுள்ள ஒழியாத் துன்ப நிலையைக் குறித்த எண்ணத் தொடர்பை, அவ் வுள்ளநிலை என்னுள் எழுப்புவதும் அல்லாமல், அதன் பயனாக விளையும் அமைதியின்மையை நான் நீக்கிக் கொள்ளவும், அது என்னை விடுகிறதில்லை.[364]

ஒருவன், தன்னைச் சூழ்ந்து வதியும் சிற்றுயிர்களில் மிகச் சிறுமை யுற்றவைகளைக் கூட, எவ்வளவுக் கெவ்வளவு அன்பாகப் பார்த்து, அவற்றின் உறுதுயர் களைந்து, அவற்றைக் காப்பாற்றுகிறானோ, அவ்வளவுக் கவ்வளவு, அவன் இறைவனுக்கு அன்பு செலுத்தியவன் ஆகிறான்.[365]

நறுமணம் கமழும் மென் பூவை விரும்புதல் எவ் வாற்றானும் நன்று; எனினும், அதை, அங்ஙனமே, அதன் நுண்ணிய பசுங் கிளையில், அதற்கு ஊறு செய்யாது, அதன் உயிர்ப் பேரழகு பிறங்க, விட்டு வைத்து மகிழ்தல் அதனினும் நன்று.[366]

எவனொருவன் ஞாயிற்றொளியில் மின்னித் திகழும் பனியின் வண்ணப் படிவங்களை அழிக்காதமைவானோ, எவன் மரத்தினின்றும் பாசிலையைப் பறித்தல் தவிர்வானோ, எவன் எம் மலரையும் எடுக்க உளங்கொளாதிருப்பானோ, அவன்தான், உண்மையில், கடவுள் உகக்கும் நல்லொழுக்கம் கைக்கொண்டவன் ஆவான்.[367]

---

361. 260-ஆம் பக்கம் பார்க்க.

362. Lord! Make me an instrument of Thy Peace. — *St. Francis of Assisi.*

363. As long as living creatures suffer, there is no possibility of joy for those who are full of compassion. — *Goutama Buddha.*

364. At the moments when I should like to enjoy myself without restraint, it awakens in me reflection about the misery which I see around me or which I suspect, and it does not allow me to drive away the uneasiness thereby caused to me. — *Albert Schweitzer.*

365. And in as much as a man loves and succours and saves even the least of God's creatures, he ministers unto the Lord. — *Anna Kingsford.*

366. Love thou the rose, but leave it on its stem. — *Lord Lytton.*

367. That man is truly ethical who shatters no ice-crystal as it sparkles in the sun, tears no leaf from a tree, cuts no flower. — *Albert Schweitzer.*

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திரு அருட்பா

## அ. இரண்டாம் திருமுறையும் மூன்றும் திருமுறையும்

அல்லது

## திரு ஒற்றியூர்ப் பகுதி[1]

சிவ கணபதி துணை

## க. இரண்டாம் திருமுறை[2]

### 1. புண்ணிய விளக்கம்[3]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாடற் கினிய வாக்களிக்கும் பாலும் சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய அடியவர்தம் கூட்டம் அளிக்கும் குணம்அளிக்கும்
ஆடற் கினிய நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தேடற் கினிய சீர்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.[4] (க)

---

1. இப் பாகுபாடு குறித்து, இப் பதிப்பின் 7-ஆம் புத்தகம் பெருநூல் பகுதி பாயிரத்தில் கண்ட "இப் பதிப்பின் சிறப்பியல்புகள்" "முன்னுரை" ஆகியவற்றைப் பார்த்தறிக.

2. இத் திருமுறைக்காகக் கிடைத்த மூலங்கள் நம் பெருமானார் இராமலிங்க அடிகளாரின் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏட்டுச் சுவடிகள் ஆறும், அடிகளாரின் அணுக்கத் தொண்டரான திருவாளர் தருமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிய சுவடி ஒன்றும், அடிகளார் எழுதியவையும் அடிகளாரைச் சூழ்ந்து வதிந்த பேரன்பர்கள் சிலர் பிரதி செய்து வைத்திருப்பவையும் ஆன தனிக் காகிதங்களும் காகித நோட்டுப் புத்தகங்களும் ஆகும். முதல் திருமுறையை ஒப்ப, இந்த இரண்டாந் திருமுறையைத் தொகுத்தவரும், அதன்கண் பதிகங்களையும் தனிப் பாக்களையும் முன்பின்னாக அமைத்தவரும், அதை 1867-ஆம் ஆண்டில் முதல் முதலாக அச்சில் பதிப்பித்தவரும் அடிகளாரின்

கருமால் அகற்றும் இறப்பதனைக் களையு நெறியும் காட்டுவிக்கும்
பெருமால் அதனால் மயக்குகின்ற பேதை மடவார் நசைஅறுக்கும்
அருமால் உழந்த நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
திருமால் அயனும் தொழுதேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே. (உ)

வெய்ய வினையின் வேர்அறுக்கும் மெய்ம்மை ஞான வீட்டிலடைத்
துய்ய அமல நெறிகாட்டும் உன்னற் கரிய உணர்வளிக்கும்
ஐயம் அடைந்த நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
செய்ய மலர்க்கண் மால்போற்றும் சிவாய நமஎன் றிடுநீறே. (ங)

கோல மலர்த்தாள் துணைவழுத்தும் குலத்தொண் டடையக் கூட்டுவிக்கும்
நீல மணிகண் டப்பெருமான் நிலையை அறிவித் தருளளிக்கும்
ஆல வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
சீலம் அளிக்கும் திருஅளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே. (ச)

---

2 (தொடர்ச்சி). முதல் மாணுக்கரான உபயகலாநிதிப் பெரும்புலவர் திருவாளர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் ஆவர். அவ் வமைப்பு இப் பதிப்பிலும் பின்பற்றப்பட்டிருக்கிறது. ஆனால், அப் புலவர் பெருமகனார் இத் திருமுறையில் தொகுத்த சிற்சில பாடல் தொகுதிகளும் பாடல்களும் இப் பதிப்பில் அவ் வவற்றிற்குரிய பிற பகுதிகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இசைப் பாக்கள் எல்லாம் இப் பதிப்பின் முதல் புத்தகமாகிய கீர்த்தனைப் பகுதியில் இடம் பெற்றிருக்கின்றன. மற்றவை இனி வரவிருக்கும் பகுதிகளின்பாற் படும். அததற்குரிய காரணங்கள் தெளிவு படுத்தப்பட்டிருப்பதை ஆங்காங்கே கண்டு தெளிக.

அடிகளார்க்கு ஆட்பட்ட பேரன்பர்கள் எங்ஙனம் தவங்கிடந்து, அடிகளாருடைய பெருவாரியான அருண்மொழிகளில் சிற்சில பகுதி களையாவது, பற்பல அன்பர்களிடம் இருந்து அரிதில் பெற்று வெளிப் படுத்த அடிகளாருடைய சம்மதியை ஒருவாறு பெற்றார்கள் என்பது திருமுகப் பகுதியாலும், வசனப்பகுதி பெருநூல் பகுதி இவற்றின் முன்னுரைகளாலும் விளங்கும். அவற்றைக் காண்க.

பதிகங்கள் பாக்கள் ஆகிய இவற்றின் பெயர்களும் பா இனப் பெயர் களும் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் முதல் பதிப்பில்-தான் முதல் முதல் எல்லாவற்றிற்கும் காணப்படுகின்றன. மூலங் களில் அரிதில் காணும் அவை அங்கங்கே குறிக்கப்படும். தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் பெரும் பெயர் இனி "தொ. வே." என்று கூறப்படுவது காண்க.

3. இப் பதிகம் கொண்ட முதல் சுவடியின் ஏடுகளின் எண்கள் கூ௧, கூ௨ என்றும், அவற்றின் தொடக்கத்தில் முறையே "உ. சிவமயம். சிவ சண்முக நம. கணபதி நம." என்றும் "உ" என்றும் அடிகளார் சிந்தித்து எழுதியிருக்கிறார்கள். இனி, ஏட்டெண்கள் மட்டும் குறித் திருப்பன இம் முதல் சுவடியைக் குறிப்பனவாகும்.

வஞ்சப் புலக்கா டெறியஅருள் வாளும் அளிக்கும் மகிழ்வளிக்கும்
கஞ்சத் தவனும் கரியவனும் காணற் கரிய கழல்அளிக்கும்
அஞ்சில் புகுந்த நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
செஞ்சொல் புலவர் புகழ்ந்தேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே. (ரு)

கண்கொள் மணியை முக்கனியைக் கரும்பைக் கரும்பின் கட்டிதனை
விண்கொள் அமுதை நம்அரசை விடைமேல் நமக்குத் தோற்றுவிக்கும்
அண்கொள் வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
திண்கொள் முனிவர் சுரர்புகழும் சிவாய நமஎன் றிடுநீறே. (சு)

நோயை அறுக்கும் பெருமருந்தை நோக்கற் கரிய நுண்மைதனைத்
தூய விடைமேல் வரும்நமது சொந்தத் துணையைத் தோற்றுவிக்கும்
ஆய வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
சேய அயன்மால் நாடரிதாம் சிவாய நமஎன் றிடுநீறே. (எ)

எண்ண இனிய இன்னமுதை இன்பக் கருணைப் பெருங்கடலை
உண்ண முடியாச் செழுந்தேனை ஒருமால் விடைமேல் காட்டுவிக்கும்
அண்ண வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
திண்ண மளிக்கும் திறம்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே. (அ)

சிந்தா மணியை நாம்பலநாள் தேடி எடுத்த செல்வமதை
இந்தார் வேணி முடிக்கனியை இன்றே விடைமேல் வரச்செயும்காண்
அந்தோ வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
செந்தா மரையோன் தொழுதேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே. (கூ)

---

4. இத் திருப்பதிகத்தில், ஐந்தெழுத்தை ஓதி உணர்ந்து பெறும் பயன்களை, நம் அடிகளார் தெவிட்டாது இனிக்கும் தெள்ளமுதச் சொற்களால், புறம்புறம் போந்து அஞ்சி நிற்கும் நெஞ்சினுக்கு எடுத்து மொழிந்து, அறிவுறுத்துதலைக் காண்க. நெஞ்சில் இறைவன் பூரித்து விளங்குமாறு கூறும் இத்தகைய உபதேசங்கள் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ் முதலிய அருள் நூல்களில் பரக்கக் காணக் கிடப்பன. இது குறித்துப் பெருநூல் பகுதி 244-ஆம் அடிக் குறிப்பினையும், திருமுகப்பகுதி, பேரன்பர் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு அடிகளார் எழுதியவற்றுள், 3-ஆம் திருமுகத்தினையும், பின்வரும் திருமந்திரம் போன்றவற்றையும் பார்க்க:

"வாறே சிவாய நமச்சி வாயநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வரும்செம்பு பொன்னே."

உள்ளத் தெழுந்த மகிழ்வைநமக் குற்ற துணையை உள்உறவைக்
கொள்ளக் கிடையா மாணிக்கக் கொழுந்தை விடைமேல் கூட்டுவிக்கும்
அள்ளல் துயரால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தெள்ளக் கடலான் புகழ்ந்தேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே. (கய)

உற்ற இடத்தில் உதவநமக் குடையோர் வைத்த வைப்பதனைக்
கற்ற மனத்தில் புகுங்கருணைக் கனியை விடைமேல் காட்டுவிக்கும்
அற்றம் அடைந்த நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
செற்றம் அகற்றித் திறல்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே. (கக)

திருச்சிற்றம்பலம்

— o —

## 2. அருள் நாம விளக்கம்[5]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வாங்கு வில்நுதல் மங்கையர் விழியால்
மயங்கி வஞ்சர்பால் வருந்திநாள் தோறும்
ஏங்கு கின்றதில் என்பயன் கண்டாய்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
தேங்கு லாவுசெங் கரும்பினும் இனிதாய்த்
தித்தித் தன்பர்தம் சித்தத்துள் ஊறி
ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே.[6] (க)

---

5. இப் பதிக ஏடுகளின் எண்கள் அக, கம. இவற்றின் தொடக்கத்தில் முறையே "உ. ஒற்றியூர்." என்றும் "உ. சிவநம." என்றும் நம் அடிகளார் எழுதிச் சிந்தித்திருக்கிறார்கள்.

6. திருமுருகாற்றுப்படையும், முருகனை வழிபடும் பரிபாடல்களும் தொன்றுதொட்டுச் செழித்தோங்கிய நம் செந்தமிழ் நாட்டில், பிற்காலத்தும் இந் நாள்வரை, முருகப் பெருமானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்ட அடியார்கள் பலப்பலராவர். அருணகிரிநாதப் பெருமானார்தம் முருகன் திருப்புகழான செந்தமிழ் வண்ணப் பெருங்கடல், உள்ளும் புறமும் பொங்கித் ததும்பி ஓதுவாரை உய்வித்தருள்வது, யாவரும் அறியக் கிடப்பது. குமரகுருபர சுவாமிகள் முருகனைக் கரைகடந்த அன்போடு அழைக்கும் அழகில் ஈடுபடாதார் இலர்.

தவம தின்றிவன் மங்கையர் முயக்கால்
தருமம் இன்றுவஞ் சகர்கடுஞ் சார்வால்
இவகை யால்மிக வருந்துறில் என்னும்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
பவம தோட்டிநல் ஆனந்த உருவாம்
பாங்கு காட்டிநல் பதந்தரும் அடியார்
உவகை ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே

மின்னும் நுண்ணிடைப் பெண்பெரும் பேய்கள்
வெய்ய நீர்க்குழி விழுந்தது போக
இன்னும் வீழ்கலை உனக்கொன்று சொல்வேன்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து

---

6 (தொடர்ச்சி). திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் முருகனைப் போற்றும் ஆழ்ந்தகன்ற பத்தினிலை, யாவரையும் பரவசப்படுத்தும் தன்மையது. திருச்செந்தில் அந்தாதி பிள்ளைத்தமிழ் கலம்பகம் முதலியன அடியராணர்க்கு முருகன் வழிபாட்டில் உள்ள திட்பநுட்பங்கள் தெரிக்கும். தண்டபாணி சுவாமிகள் முருகனை வண்ணப் பெருவெளியில் கண்டு வழிபட்டார்கள். சில ஆண்டுகட்கு முன் தோன்றிய அண்ணாமலை ரெட்டியார் முருகனது மாறாத இளமையைக் காவடிச் சிந்தாகப் பாடி மகிழ்ந்தார். நம்மோடிருந்த பாம்பன் குமரகுருதாச அடிகளார் முருகனிடம் கொண்ட அடிமைத் திறத்தை வாய்விட்டு உரைத்தல் அரிது : அது முற்றிலும் அநுபவிக்க உரியது. நம் இராமலிங்க அடிகளார் முருகக் கடவுளை வழிபட்டு இறைஞ்சிய பாக்களே, திரு அருட்பா 5-ஆம் திருமுறையாக வகுக்கப்பட்டு, ஊனையும் உயிரையும் உருக்கும் உவட்டாத தெள்ளமுதமாக விளங்குகின்றன.

இப் பதிகப் பாடல்களோடு பின்வரும் திருமந்திரம், திருப்புகழ், கந்தர் அலங்காரம், தாயுமானர், கந்தபுராணம் போன்றவற்றைப் பார்த்துணர்க :

"ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே."

"ஓம்நமோ கந்தஎன்(று) உரையாதே
ஊசலா டும்புலன் தாரியே சென்றுயின்(று)
ஓயுமா(று) ஒன்றையும் கருதாதோ."

"ஓங்காரத்(து) உள்ஒளிக்(கு) உள்ளே முருகன் உருவம்கண்டு
தூங்கார்."

"ஓங்கார மாம்ஐந்(து) எழுத்தால் புவனத்தை உண்டுபண்ணிப்
பாங்கா நடத்தும் பொருளே அகண்ட பரசிவமே."

பொன்உ லாவிய புயம்உடை யானும்
புகழ்உ லாவிய பூஉடை யானும்
உன்னும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (௩)

பொன்றும் வாழ்க்கையை நிலைஎன நினைந்தே
புலைய மங்கையர் புழுநெளி அளற்றில்
என்றும் வீழ்ந்துழல் மடமையை விடுத்தே
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
துன்று தீம்பலாச் சுளையினும் இனிப்பாய்த்
தொண்டர் தங்கள்நாச் சுவைபெற ஊறி
ஒன்றும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (௪)

வரைக்கு நேர்முலை மங்கையர் மயலால்
மயங்கி வஞ்சரால் வருத்தமுற் றனுராம்
இரைக்கும் மாக்கடல் இடைவிழுந் தயரேல்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
கரைக்கும் தெள்ளிய அமுதமோ தேனோ
கனிகொ லோஎனக் கனிவுடன் உயர்ந்தோர்
உரைக்கும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (௫)

வாது செய்ம்மட வார்தமை விழைந்தாய்
மறலி வந்துனை வாஎன அழைக்கில்
ஏது செய்வையோ ஏழைநீ அந்தோ
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
போது வைகிய நான்முகன் மகவான்
புணரி வைகிய பூமகள் கொழுநன்
ஓதும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (௬)

---

6 (தொடர்ச்சி).

"கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை உமைதன்
மைந்தநம பன்னிருபு யத்தநம நீபமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்ப ரமதாம்
எந்தைநம என்றும்இளை யோய்நமகு மாரநம என்று தொழுதார்."

நண்ணும் மங்கையர் புழுமலக் குழியில்
நாளும் வீழ்வுற்று நலிந்திடேல் நிதமாய்
எண்ணும் என்மொழி குருமொழி ஆக
எண்ணி ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
பண்ணும் இன்சுவை அமுதினும் இனிதாய்ப்
பத்தர் நாள்தொறும் சித்தமுள் ளூற
உண்ணும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (எ)

பந்த வண்ணமாம் மடந்தையர் மயக்கால்
பசையில் நெஞ்சரால் பரிவுறு கின்றாய்
எந்த வண்ணநீ உய்வணம் அந்தோ
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
சந்த மாம்புகழ் அடியரில் கூடிச்
சனனம் என்னுமோர் சாகரம் நீந்தி
உந்த ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (அ)

மட்டின் மங்கையர் கொங்கையை விழைந்தாய்
மட்டி லாததோர் வன்துயர் அடைந்தாய்
எட்டி அன்னர்பால் இரந்தலை கின்றாய்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
தட்டி லாதநல் தவத்தவர் வானோர்
சார்ந்தும் காண்கிலாத் தற்பரம் பொருளை
ஒட்டி ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (கூ)

நிலவும் ஒண்மதி முகத்தியர்க் குழன்றாய்
நீச நெஞ்சர்தம் நெடுங்கடை தனிற்போய்
இலவு காத்தனை என்னைநின் மதியோ
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
பலவும் ஆய்ந்துநன் குண்மையை உணர்ந்த
பத்தர் உள்ளகப் பதுமங்கள் தோறும்
உலவும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. (க0)

திருச்சிற்றம்பலம்

## 3. ஸ்ரீ சிவஷண்முகநாம ஸங்கீர்த்தன லகரி[7]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பழுது நேர்கின்ற வஞ்சகர் கடைவாய்ப்
பற்றி நின்றதில் பயன்எது கண்டாய்
பொழுது போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
பொழில்கொள் ஒற்றியம் புரிதனக் கேகித்
தொழுது சண்முக சிவசிவ எனநம்
தோன்ற லார்தமைத் துதித்தவர் திருமுன்
பழுது சொல்லுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே.[8] (க)

சூது நேர்கின்ற முலைச்சியர் பொருட்டாச்
சுற்றி நின்றதில் சுகம்எது கண்டாய்
போது போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
பொழில்கொள் ஒற்றியம் புரிதனக் கேகி

---

7. இப் பதிக ஏடுகளின் எண்கள் கக, கஉ. அவற்றின் தொடக்கத்தில் அடிகளார் சிந்தித்து எழுதியிருப்பவை முறையே "உ. ஒற்றியூர்." "உ. சிவநம." என்பவையாம்.

8. 6-ஆம் அடிக் குறிப்பினைப் பார்க்க. அஃது இப் பதிகத்திற்கும் பொருந்தும். இப் பதிகப் பாடல்களோடு பின்வரும் தேவாரம், திருமந்திரம், திருப்புகழ் போன்றவற்றைப் பார்த்துணர்க:

"சிவன் எனும் ஓசை அல்லது அறையோ உலகில்
திருநின்ற செம்மை உளதே."

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

"முருகா எனஓர் தரம்ஓ(து) அடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே."

"ஆதிமுரு காதிமுரு காதிமுரு காஎனவும்
ஆதிமுரு காநினைவு தருவாயே."

"கதிபெற ஈட ருதன பதிபசு பாச மானவை
கசடற வேறு வேறு செய் தருள்வாயே
. . . . . . .
பரவச ஞான யோகிகள் பெருமாளே."

ஓது சண்முக சிவசிவ எனவே
    உன்னி நெக்குவிட் டுருகிநம் துயராம்
ஆது சொல்லுதும் ஐயுறல் என்மேல்
    ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (உ)

ஞாலம் செல்கின்ற வஞ்சகர் கடைவாய்
    நண்ணி நின்றதில் நலம்எது கண்டாய்
காலம் செல்கின்ற தெழுதிஎன் நெஞ்சே
    கருதும் ஒற்றியம் கடிநகர்க் கேகிக்
கோலம் செய்அருள் சண்முக சிவஓம்
    குழுக வோஎனக் கூவிநம் துயராம்
ஆலம் சொல்லுதும் ஐயுறல் என்மேல்
    ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (௩)

மருட்டி வஞ்சகம் மதித்திடும் கொடியார்
    வாயல் காத்தின்னும் வருந்தில்என் பயனோ
இருட்டிப் போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
    எழில்கொள் ஒற்றியூர் எனும்தலத் தேகித்
தெருட்டி றஞ்செயும் சண்முக சிவஓம்
    சிவந மாஎனச் செப்பிநம் துயராம்
அரிட்டை ஓதுதும் ஐயுறல் என்மேல்
    ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (௪)

இல்லை என்பதே பொருள்எனக் கொண்டோர்
    ஈன வாயிலில் இடர்ப்படு கின்றாய்
எல்லை செல்கின்ற தெழுதிஎன் நெஞ்சே
    எழில்கொள் ஒற்றியூர் எனும்தலத் தேகித்
தொல்லை ஓம்சிவ சண்முக சிவஓம்
    தூய என்றடி தொழுதுநாம் உற்ற
அல்லல் ஓதுதும் ஐயுறல் என்மேல்
    ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (௫)

கரவு நெஞ்சினர் கடைத்தலைக் குழன்றாய்
    கலங்கி இன்னும்நீ கலுழ்ந்திடில் கடிதே
இரவு போந்திடும் எழுதிஎன் நெஞ்சே
    எழில்கொள் ஒற்றியூர் எனும்தலத் தேகிப்
பரவு சண்முக சிவசிவ சிவஓம்
    பரசு யம்புசங் கரசம்பு நமஓம்
அரஎன் றேத்துதும் ஐயுறல் என்மேல்
    ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (௬)

ஏய்ந்து வஞ்சகர் கடைத்தலை வருந்தி
இருக்கின் றாய்இனி இச்சிறு பொழுதும்
சாய்ந்து போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
தகைகொள் ஒற்றியம் தலத்தினுக்கேகி
வாய்ந்து சண்முக நமசிவ சிவஓம்
வரசு யம்புசங் கரசம்பு எனவே
ஆய்ந்து போற்றுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (எ)

ஈர்ந்த நெஞ்சினர் இடந்தனில் இருந்தே
இடர்கொண் டாய்இனி இச்சிறு பொழுதும்
பேர்ந்து போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
பிறங்கும் ஒற்றியம் பெருநகர்க் கேகி
ஓர்ந்து சண்முக சரவண பவஓம்
ஓம்சு யம்புசங் கரசம்பு எனவே
ஆர்ந்து போற்றுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (அ)

கமைப்பின் ஈகிலா வஞ்சகர் கடையைக்
காத்தி ருக்கலை கடுகிஇப் பொழுதும்
இமைப்பில் போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
எழில்கொள் ஒற்றியூர் எனும்தலத் தேகி
எமைப்பு ரந்தசண் முகசிவ சிவஓம்
இறைவ சங்கர அரகர எனவே
அமைப்பின் ஏத்துதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (கூ)

உறைந்து வஞ்சர்பால் குறையிரந் தவமே
உழல்கின் றாய்இனி உரைக்கும்இப் பொழுதும்
குறைந்து போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
குலவும் ஒற்றியம் கோநகர்க் கேகி
நிறைந்த சண்முக குருநம சிவஓம்
நிமல சிற்பர அரகர எனவே
அறைந்து போற்றுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

—— o ——

# 4. நமச்சிவாய ஸங்கீர்த்தன லகரி[9]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சொல்அ வாவிய தொண்டர்தம் மனத்தில்
　　சுதந்த ரங்கொடு தோன்றிய துணையைக்
கல்அ வாவிய ஏழையேன் நெஞ்சும்
　　கரைந்து வந்திடக் கலந்திடும் களிப்பைச்
செல்அ வாவிய பொழில்திரு ஒற்றித்
　　தேனைத் தில்லைச்சிற் றம்பலத் தாடும்
நல்ல வாழ்வினை நான்மறைப் பொருளை
　　நமச்சி வாயத்தை நான்மற வேனே.[10]　　(க)

9. இப் பதிக ஏடுகளின் எண்கள் கூ௩, கூ௪. இவற்றின் தொடக்கத்தில் அடிகளார் சிந்தித்து எழுதியிருப்பவை முறையே "உ. நமச்சிவாயம். ஒற்றியூர்." "உ. சிவநம." என்பவையாம்.

10. இப் பதிகத்தோடு 4-ஆம் அடிக் குறிப்பினையும் பின்வரும் திரு அருள் மெய்ம் மொழிகளான தேவாரம், திருவாசகம், திருமந்திரம் திருப்புகழ் போன்றவற்றையும் பார்க்க :

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நல்நெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே."

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டிஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே."

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்தும் சீர்க்கறை ஊரில் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச் சிவாயவே."

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க."

"ஒன்றுகண் டீர்உல குக்குஒரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழம்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே."

"நகரம்இரு பாத மாகி மகரவயி றாகி மார்பு
நடுசிகர மாகி வாய்வ கரமாகி
நதிமுடிய சார மாகி உதயதிரு மேனி யாகி
நமசிவய மாமை யாகி எழுதான."

அட்ட மூர்த்தம தாகிய பொருளை
அண்டர் ஆதியோர் அறிவிலாத் திறத்தை
விட்ட வேட்கையர்க் கங்கையில் கனியை
வேத மூலத்தை வித்தக விளைவை
எட்ட ரும்பர மானந்த நிறைவை
எங்கும் ஆகிநின் றிலங்கிய ஒளியை
நட்டம் ஆடிய நடனநா யகத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. (உ)

உம்பர் வான்துயர் ஒழித்தருள் சிவத்தை
உலகெ லாம்புகழ் உத்தமப் பொருளைத்
தம்ப மாய்அகி லாண்டமும் தாங்கும்
சம்பு வைச்சிவ தருமத்தின் பயனைப்
பம்பு சீரருள் பொழிதரு முகிலைப்
பரம ஞானத்தைப் பரமசிற் சுகத்தை
நம்பி னோர்களை வாழ்விக்கும் நலத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. (௩)

மாலின் உச்சிமேல் வதிந்தமா மணியை
வழுத்தும் நாஅகம் மணக்கும்நன் மலரைப்
பாலின் உள்இனித் தோங்கிய சுவையைப்
பத்தர் தம்உளம் பரிசிக்கும் பழத்தை
ஆலின் ஓங்கிய ஆனந்தக் கடலை
அம்ப லத்தில்ஆம் அமுதைவே தங்கள்
நாலின் ஒற்றியூர் அமர்ந்திடும் சிவத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. (௪)

உண்ணி றைந்தெனை ஒளித்திடும் ஒளியை
உண்ண உண்ணமேல் உவட்டுறு நறவைக்
கண்ணி றைந்ததோர் காட்சியை யாவும்
கடந்த மேலவர் கலந்திடும் உறவை
எண்ணி றைந்தமால் அயன்முதல் தேவர்
யாரும் காண்கிலா இன்பத்தின் நிறைவை
நண்ணி ஒற்றியூர் அமர்ந்தருள் சிவத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. (௫)

திக்கு மாறினும் எழுகடல் புவிமேல்
　　சென்று மாறினும் சேண்விளங் கொளிகள்
உக்கு மாறினும் பெயல்இன்றி உலகில்
　　உணவு மாறினும் புவிகளோர் ஏழும்
மிக்கு மாறினும் அண்டங்கள் எல்லாம்
　　விழுந்து மாறினும் வேதங்கள் உணரா
நக்கன் எம்பிரான் அருள்திருப் பெயராம்
　　நமச்சி வாயத்தை நான்மற வேனே. (சு)

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
　　பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
　　உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
　　கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
　　நமச்சி வாயத்தை நான்மற வேனே. (எ)

உடைஉ டுத்திட இடைமறந் தாலும்
　　உலகு ளோர்பசிக் குணமறந் தாலும்
படையெ டுத்தவர் படைமறந் தாலும்
　　பரவை தான்அலைப் பதுமறந் தாலும்
புடைஅ டுத்தவர் தமைமறந் தாலும்
　　பொன்னை வைத்தஅப் புதைமறந் தாலும்
நடைஅ டுத்தவர் வழிமறந் தாலும்
　　நமச்சி வாயத்தை நான்மற வேனே. (அ)

வன்மை செய்திடும் வறுமைவந் தாலும்
　　மகிழ்வு செய்பெரு வாழ்வுவந் தாலும்
புன்மை மங்கையர் புணர்ச்சிநேர்ந் தாலும்
　　பொருந்தி னாலும்நின் றாலும்சென் றாலும்
தன்மை இல்லவர் சார்பிருந் தாலும்
　　சான்ற மேலவர் தமைஅடைந் தாலும்
நன்மை என்பன யாவையும் அளிக்கும்
　　நமச்சி வாயத்தை நான்மற வேனே. (கூ)

இன்னும் பற்பல நாளிருந் தாலும்
இக்க ணந்தனி லேஇறந் தாலும்
துன்னும் வான்கதிக் கேபுகுந் தாலும்
சோர்ந்து மாநர கத்துழன் றாலும்
என்ன மேலும்இங் கெனக்குவந் தாலும்
எம்பி ரான்எனக்கு யாதுசெய் தாலும்
நன்னர் நெஞ்சகம் நாடிநின் றோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. (௧0)

திருச்சிற்றம்பலம்

— o —

## 5. நற்றுணை விளக்கம்[11]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

எஞ்ச வேண்டிய ஐம்புலப் பகையால்
இடர்கொண் டோய்ந்தனை என்னினும் இனிநீ
அஞ்ச வேண்டிய தென்னைஎன் நெஞ்சே
அஞ்சல் அஞ்சல்காண் அருமறை நான்கும்
விஞ்ச வேண்டியும் மாலவன் மலரோன்
விளங்க வேண்டியும் மிடற்றின்கண் அமுதா
நஞ்சை வேண்டிய நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.[12] (க)

---

11. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௩௨௬, ௩௨௭. இவற்றின் தொடக்கத்தில் அடிகளார் சிந்தித்து எழுதியிருப்பவை முறையே "உ. சிவமயம். சிவமயம். நமச்சிவாய." "உ" என்பன ஆம்.

12. இப் பதிகத்தோடு 4, 10-ஆம் அடிக் குறிப்புக்களையும், பின்வரும் திருமந்திரம் திருப்புகழ் போன்றவற்றையும் பார்க்க :

"அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே."

"ஓம்நமசி வாயகுரு பாதமதி லேபணியும்
யோகமயி லா அமலை மகிழ்பாலா."

காவின் மன்னவன் எதிர்க்கினும் காமன்
கணைகள் ஏவினும் காலனே வரினும்
பூவின் மன்னவன் சீறினும் திருமால்
போர்க்கு நேரினும் பொருளல நெஞ்சே
ஓவில் மாதுயர் எற்றினுக் கடைந்தாய்
ஒன்றும் அஞ்சல்நீ உளவறிந் திலையோ
நாவின் மன்னரைக் கரைதனில் சேர்த்த
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. (௨)

நீட்டம் உற்றதோர் வஞ்சக மடவார்
நெடுங்கண் வேல்பட நிலையது கலங்கி
வாட்டம் உற்றனை ஆயினும் அஞ்சேல்
வாழி நெஞ்சமே மலர்க்கணை தொடுப்பான்
கோட்டம் உற்றதோர் நிலையொடு நின்ற
கொடிய காமனைக் கொளுவிய நுதல்தீ
நாட்டம் உற்றதோர் நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. (௩)

எம்மை வாட்டும்இப் பசியினுக் கெவர்பால்
ஏகு வோம்என எண்ணலை நெஞ்சே
அம்ம ஒன்றுநீ அறிந்திலை போலும்
ஆலக் கோயிலுள் அன்றுசுந் தரர்க்காய்ச்
செம்மை மாமலர்ப் பதங்கள்நொந் திடவே
சென்று சோறிரந் தளித்தருள் செய்தோன்
நம்மை ஆளுடை நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. (௪)

ஓடு கின்றனன் கதிரவன் அவன்பின்
ஓடு கின்றன ஒவ்வொரு நாளாய்
வீடு கின்றன என்செய்வோம் இனிஅவ்
வெய்ய கூற்றுவன் வெகுண்டிடில் என்றே
வாடு கின்றனை அஞ்சலை நெஞ்சே
மார்க்கண் டேயர்தம் மாண்பறிந் திலையோ
நாடு கின்றவர் நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. (௫)

தலங்கள் தோறும்சென் றவ்விடை அமர்ந்த
தம்பி ரான்திருத் தாளிணை வணங்கி
வலங்கொ ளும்படி என்னையும் கூட
வாஎன் கின்றனை வாழிஎன் நெஞ்சே
இலங்கள் தோறும்சென் றிரந்திடும் அவனே
என்னை உன்னையும் ஈர்க்குவன் அதற்கு
நலங்கொ ளும்துணை யாதெனில் கேட்டி
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 6. திருஅருள் வழக்க விளக்கம்[13]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

தோடுடை யார்புலித் தோலுடை யார்கடல் தூங்கும்ஒரு
மாடுடை யார்மழு மான்உடை யார்பிர மன்தலையாம்
ஓடுடை யார்ஒற்றி யூர்உடை யார்புகழ் ஓங்கியவெண்
காடுடை யார்நெற்றிக் கண்உடை யார்எம் கடவுளரே.[14] (௧)

வண்ணப்பல் மாமலர் மாற்றும் படிக்கு மகிழ்ந்தெமது
திண்ணப்பர் சாத்தும் செருப்படி மேற்கொண்டு தீஞ்சுவைத்தாய்
உண்ணப் பரிந்துநல் ஊன்தர உண்டுகண் ஒத்தக்கண்டே
கண்ணப்ப நிற்க எனக்கைதொட் டார்எம் கடவுளரே.[15] (௨)

---

13. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௬௫, ௬௬. இவற்றின் தொடக்கத்தில் அடிகளார் சிந்தித்து எழுதியிருப்பவை முறையே "உ. ஒற்றியூர்." "உ" என்பனவாம்.

14. இப் பதிகத்தில் அடிகளார் பழ அடியார்களுக்கு இறைவன் அருள் புரிந்த இயல்புகளை வியந்துரைத்து மகிழ்கிறார்கள். இவை தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய அருள் நூல்களில் போற்றப்படும் வரலாறுகளாகும். அவற்றை அங்கே காண்க.

15. இப் பாவோடு பின்வரும் திருவாசகம் போன்றவை கண்டுணர்க :

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாஎன்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ."

செல்இடிக் கும்குரல் கார்மத வேழச் சினஉரியார்
வல்அடுக் கும்கொங்கை மாதொரு பாகர் வடப்பொன்வெற்பாம்
வில்எடுக் கும்கையர் சாக்கியர் அன்று விரைந்தெறிந்த
கல்லடிக் கும்கதி காட்டினர் காண்எம் கடவுளரே. (௩)

ஏழியல் பண்பெற் றமுதோ டளாவி இலங்குதமிழ்க்
கேழியல் சம்பந்தர் அந்தணர் வேண்டக் கிளர்ந்தநற்சீர்
வீழியில் தம்பதிக் கேவிடை கேட்கவெற் பாள்உடனே
காழியில் தன்னுருக் காட்டின ரால்எம் கடவுளரே. (௪)

நாட்டில் புகழ்பெற்ற நாவுக் கரசர்முன் நாள்பதிகப்
பாட்டிற் கிரக்கம்இல் லீர்எம் பிரான்எனப் பாடஅன்றே
ஆட்டிற் கிசைந்த மலர்வாழ்த்தி வேதம் அமைத்தமறைக்
காட்டில் கதவம் திறந்தன ரால்எம் கடவுளரே. (௫)

பைச்சூர் அரவப் படநடத் தான்அயன் பற்பலநாள்
எய்ச்சூர் தவஞ்செய் யினும்கிடை யாப்பதம் ஏய்ந்துமண்மேல்
வைச்சூரன் வன்தொண்டன் சுந்தரன் என்னுநம் வள்ளலுக்குக்
கச்சூரில் சோறிரந் தூட்டின ரால்எம் கடவுளரே. (௬)

ஏணப் பரிசெஞ் சடைமுத லானஎல் லாம்மறைத்துச்
சேணப் பரிகள் நடத்திடு கின்றநல் சேவகன்போல்
மாணப் பரிபவம் நீக்கிய மாணிக்க வாசகர்க்காய்க்
காணப் பரிமிசை வந்தன ரால்எம் கடவுளரே. (௭)

எல்லாம் செயவல்ல சித்தரின் மேவி எழில்மதுரை
வல்லாரின் வல்லவர் என்றறி யாமுடி மன்னன்முன்னே
பல்லா யிரஅண்ட மும்பயம் எய்தப் பராக்கிரமித்துக்
கல்லானை தின்னக் கரும்பளித் தார்எம் கடவுளரே. (௮)

மால்எடுத் தோங்கிய மால்அயன் ஆதிய வானவரும்
ஆல்அடுத் தோங்கிய அந்தண னேஎன் றடைந்திரண்டு
பால்எடுத் தேத்தநம் பார்ப்பதி காணப் பகர்செய்மன்றில்
கால்எடுத் தாடும் கருத்தர்கண் டீர்எம் கடவுளரே. (௯)

மாற்பதம் சென்றபின் இந்திரர் நான்முகர் வாமனர்மான்
மேற்பதம் கொண்ட உருத்திரர் விண்ணவர் மேல்மற்றுள்ளோர்
ஆற்பதம் கொண்டபல் ஆயிரம் கோடிஅண் டங்கள்எல்லாம்
காற்பதம் ஒன்றில் ஒடுக்கிநிற் பார்எம் கடவுளரே. (௧௰)

திருச்சிற்றம்பலம்

# 7. சிவ புண்ணியத் தேற்றம்[16]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கடவுள் நீறிடாக் கடையரைக் கண்காள்
கனவி லேனும்நீர் காணுதல் ஒழிக
அடவுள் மாசுதீர்த் தருள்திரு நீற்றை
அணியும் தொண்டரை அன்புடன் காண்க
தடவும் இன்னிசை வீணைகேட் டரக்கன்
தனக்கு வாளொடு நாள்கொடுத் தவனை
நடவும் மால்விடை ஒற்றியூர் உடைய
நாதன் தன்னைநாம் நண்ணுதற் பொருட்டே.[17] (௧)

போற்றி நீறிடாப் புலையரைக் கண்டால்
போக போகநீர் புலமிழந் தவமே
நீற்றின் மேனியர் தங்களைக் கண்டால்
நிற்க நிற்கஅந் நிமலரைக் காண்க
சாற்றின் நன்னெறி ஈதுகாண் கண்காள்
தமனி யப்பெரும் தனுஎடுத் தெயிலைக்
காற்றி நின்றநம் கண்நுதற் கரும்பைக்
கைலை ஆளனைக் காணுதற் பொருட்டே. (௨)

---

16. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௨௮, ௱௨௧. இவற்றின் தொடக்கத்தில் அடிகளார் சிந்தித்து எழுதியிருப்பவை முறையே "உ. சிவமயம். சிவமயம்." "உ" என்பனவாம்.

17. இப் பதிகத்தில் நம் அடிகளார் சிவநெறிக்கண் நில்லாதார் சேர்பு எவ்வளவினும் கூடாது என்பதை வலியுறுத்தி உறுதிகொண்டு அமைவது காண்க. இதனோடு பின்வரும் தேவார திருவாசகத் திருஅருள் மெய்ம்மொழிகள் பார்த்துணர்க :

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருஆல வாயான் திருநீறே."

"பிணிஎலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியினான்தன் தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்தும் காணாச் சேவடி பரவி வெண்ணீ(று)
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே."

தெய்வ நீறிடாச் சிறியரைக் கண்டால்
சீறு பாம்புகண் டெனஒளித் தேக
சைவ நீறிடும் தலைவரைக் கண்கான்
சார்ந்து நின்றுநீர் தனிவிருந் துண்க
செய்ப வன்செய லும்அவை உடனே
செய்விப் பானுமாய்த் தில்லைஅம் பலத்துள்
உய்வ தேதரக் கூத்துகந் தாடும்
ஒருவன் நம்முளம் உற்றிடற் பொருட்டே. (௩)

தூய நீறிடாப் பேயர்கள் ஒன்று
சொல்லு வாரெனில் புல்லென அடைக்க
தாய நீறிடும் நேயர்ஒன் றுரைத்தால்
தழுவி யேஅதை முழுவதும் கேட்க
சேய நன்னெறி அணித்தது செவிகாள்
சேர மானிடைத் திருமுகம் கொடுத்து
ஆய பாணற்குப் பொன்பெற அருளும்
ஐயர் சேவடி அடைகுதற் பொருட்டே. (௪)

நல்ல நீறிடா நாய்களின் தேகம்
நாற்றம் நேர்ந்திடில் நண்உயிர்ப் படக்க
வல்ல நீறிடும் வல்லவர் எழின்மெய்
வாசம் நேரிடில் மகிழ்வுடன் முகர்க
சொல்ல ரும்பரி மளந்தரும் மூக்கே
சொல்லும் வண்ணம்இத் தூய்நெறி ஒன்றும்
அல்லல் நீக்கிநல் அருட்கடல் ஆடி
ஐயர் சேவடி அடைகுதற் பொருட்டே. (௫)

அருள்செய் நீறிடார் அமுதுனக் கிடினும்
அம்ம லத்தினை அருந்துதல் ஒழிக
தெருள்கொள் நீறிடும் செல்வர்கூழ் இடினும்
சேர்ந்து வாழ்த்திஅத் திருஅமு துண்க
இருள்செய் துன்பநீத் தென்னுடை நாவே
இன்ப நல்அமு தினிதிருந் தருந்தி
மருள்செய் யானையின் தோலுடுத் தென்னுள்
வதியும் ஈசன்பால் வாழுதற் பொருட்டே. (௬)

முத்தி நீறிடார் முன்கையால் தொடினும்
முள்ளு றுத்தல்போல் முனிவுடன் நடுங்க
பத்தி நீறிடும் பத்தர்கள் காலால்
பாய்ந்து தைக்கினும் பரிந்ததை மகிழ்க
புத்தி ஈதுகாண் என்னுடை உடம்பே
போற்ற லார்புரம் பொடிபட நகைத்தோன்
சத்தி வேற்கரத் தனயனை மகிழ்வோன்
தன்னை நாம்என்றும் சார்ந்திடற் பொருட்டே. (எ)

இனிய நீறிடா ஈனநாய்ப் புலையர்க்
கெள்ளில் பாதியும் ஈகுதல் ஒழிக
இனிய நீறிடும் சிவனடி யவர்கள்
எம்மைக் கேட்கினும் எடுத்தவர்க் கீக
இனிய நன்னெறி ஈதுகாண் கரங்காள்
ஈசன் நம்முடை இறையவன் துதிப்போர்க்
கினிய மால்விடை ஏறிவந் தருள்வோன்
இடங்கொண் டெம்முளே இசைகுதற் பொருட்டே. (அ)

நாட நீறிடா மூடர்கள் கிடக்கும்
நரக இல்லிடை நடப்பதை ஒழிக
ஊடல் நீக்கும்வெண் நீறிடும் அவர்கள்
உலவும் வீட்டிடை ஓடியும் நடக்க
கூட நன்னெறி ஈதுகாண் கால்காள்
குமரன் தந்தைஎம் குடிமுழு தாள்வோன்
ஆட அம்பலத் தமர்ந்தவன் அவன்தன்
அருட்க டல்படிந் தாடுதற் பொருட்டே. (கூ)

நிலைகொள் நீறிடாப் புலையரை மறந்தும்
நினைப்ப தென்பதை நெஞ்சமே ஒழிக
கலைகொள் நீறிடும் கருத்தரை நாளும்
கருதி நின்றுளே கனிந்துநெக் குருக
மலைகொள் வில்லினன் மால்விடை உடையான்
மலர்அ யன்தலை மன்னிய கரத்தான்
அலைகொள் நஞ்சமு தாக்கிய மிடற்றன்
அவனை நாம்மகிழ்ந் தடைகுதற் பொருட்டே. (க0)

திருச்சிற்றம்பலம்

# 8. முத்தி உபாயம்[18]

## திரு ஒற்றியூர்

வஞ்சித் துறை

திருச்சிற்றம்பலம்

ஒற்றி ஊரனைப்
பற்றி நெஞ்சமே
நிற்றி நீஅருள்
பெற்றி சேரவே.[19] (க)

சேர நெஞ்சமே
தூரம் அன்றுகாண்
வாரம் வைத்தியேல்
சாரும் முத்தியே. (உ)

முத்தி வேண்டுமேல்
பத்தி வேண்டுமால்
சத்தி யம்இது
புத்தி நெஞ்சமே. (ங)

நெஞ்ச மேஇது
வஞ்ச மேஅல
பிஞ்ச கன்பதம்
தஞ்சம் என்பதே. (ச)

என்ப தேற்றவன்
அன்ப தேற்றுநீ
வன்பு மாற்றுதி
இன்பம் ஊற்றவே. (ரு)

ஊற்றம் உற்றுவெண்
நீற்றன் ஒற்றியூர்
போற்ற நீங்குமால்
ஆற்ற நோய்களே. (சா)

நோய்கள் கொண்டிடும்
பேய்கள் பற்பலர்
தாய்தன் ஒற்றியூர்க்
கேய்தல் இல்லையே. (எ)

இல்லை இல்லைகாண்
ஒல்லை ஒற்றியூர்
எல்லை சேரவே
அல்லல் என்பதே. (அ)

---

18. இப் பதிகம் அடிகளார் எழுத்தில் உள்ள இரண்டாம் சுவடியின்கண் உம்ச-ஆம் ஏட்டில் உள்ளது. இதை "உ. ஒற்றியூர்." என்றெழுதி அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள்.

19. இப் பதிகத்தில், அடிகளார் திருக்கோயில் வழிபாட்டின் பயனான சிவானந்தப் பேற்றினை உரைத்து மகிழ்வது காண்க. இதனோடு பின் வரும் திருத்தாண்டகம் கண்டு தெளிக :

"பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
    பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
    சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
    உன்னை அல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
    பொழில்ஆரு ராவென்றே போற்றா நில்லே."

அல்லல் என்பதேன்
தொல்லை நெஞ்சமே
மல்லல் ஒற்றியூர்
எல்லை சென்றுமே. (௯)

சென்று வாழ்த்துதி
நன்று நெஞ்சமே
என்றும் நல்வளம்
ஒன்றும் ஒற்றியே. (௧0)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 9. அவலத் தழுங்கல்[20]

### திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஊதி யம்பெறு ஓதியனேன் மதிபோய்
உழலும் பாவியேன் உண்மைஒன் றறியேன்
வாதி யம்புறும் வஞ்சகர் உடனே
வாய்இ ழுக்குற வன்மைகள் பேசி
ஆதி எம்பெரு மான்உனை மறந்தேன்
அன்பி லாதஎன் வன்பினை நினைக்கில்
தீதி யம்பிய நஞ்சமும் கலங்கும்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே.[21] (௧)

---

20. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௬௪, ௱௬௫. இவை முறையே "உ. சிவமயம். ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் அடிகளாரால் தொடங்கப்பட்டிருக்கின்றன.

21. இப் பதிகத்தில், நம் பெருமானுர் அடியாருடைய குற்றங் குறைகளைப் பொறுத்து ஆட்கொள்ளுதல் இறைவனது கடனாகும் என்று முறை யிடுதல் காண்க. இப் பதிகத்தோடு, பெருநூல் பகுதி அடிக்குறிப்பு கள் 202, 204, 215 முதலியவற்றையும் கீழ்க்கண்ட திருமந்திரப் பாக்களையும் ஒத்துணர்க:

"வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே."

"சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தஅப் பார்வை பசுமரத் (து) ஆணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் (டு) ஓடுமே."

கல்இ கந்தவன் நெஞ்சகக் கொடியேன்
கயவர் தங்களுள் கலந்துநாள் தோறும்
மல்இ கந்தவாய் வாதமிட் டுலறி
வருந்து கின்றதுன் மார்க்கத்தை நினைக்கில்
இல்இ கந்தஎன் மீதெனக் கேதான்
இகலும் கோபமும் இருக்கின்ற தானால்
தில்லை யாய்உன்தன் உளத்துக்கென் னுமோ
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (உ)

கைத வத்தர்தம் களிப்பினில் களித்தே
காலம் போக்கினேன் களைகண்மற் றறியேன்
செய்த வத்தர்தம் திறம்சிறி துணரேன்
செய்வ தென்னைநின் திருவருள் பெறவே
எய்த வத்திரு அருளெனக் கிரங்கி
ஈயில் உண்டுமற் றின்றெனில் இன்றே
செய்த வத்திரு மடந்தையர் நடனம்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (ங)

அழுத பிள்ளைக்கே பால்உண வளிப்பாள்
அன்னை என்பர்கள் அழுவலி இல்லாக்
கொழுது நேர்சிறு குழவிக்கும் கொடுப்பாள்
குற்றம் அன்றது மற்றவள் செயலே
தொழுது நின்னடி துதிக்கின்றோர்க் கெனவே
துட்ட னேனுக்கும் சூழ்ந்தருள் செயலாம்
செழுது மாதவி மலர்திசை மணக்கத்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (ச)

உள்ளி யோஎன அலறிநின் றேத்தி
உருகி நெக்கிலா உளத்தன்யான் எனினும்
வள்ளி யோய்உனை மறக்கவும் மாட்டேன்
மற்றைத் தேவரை மதிக்கவும் மாட்டேன்
வெள்ளி யோவெனப் பொன்மகிழ் சிறக்க
விரைந்து மும்மதில் வில்வளைத் தெரித்தோய்
தெள்ளி யோர்புகழ்ந் தரகர என்னத்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (ரு)

விருப்பி லேன்திரு மால்அயன் பதவி
வேண்டிக் கொள்கென விளம்பினும் கொள்ளேன்
மருப்பின் மாஉரி யாய்உன்தன் அடியார்
மதிக்கும் வாழ்வையே மனங்கொடு நின்றேன்
ஒருப்ப டாதஇவ் வென்னனை வினிஉன்
உள்ளம் எப்படி அப்படி அறியேன்
திருப்பு யாசலை மன்னர்மா தவத்தோர்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (௬)

நிலையி லாஉல கியல்படும் மனத்தை
நிறுத்தி லேன்ஒரு நியமமும் அறியேன்
விலையி லாமணி யேஉனை வாழ்த்தி
வீட்டு நன்னெறிக் கூட்டென விளம்பேன்
அலையில் ஆர்ந்தெழும் துரும்பென அலந்தேன்
அற்ப னேன்திரு அருளடை வேனோ
சிலையில் ஆர்அழல் கணைதொடுத் தவனே
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (௭)

காயம் என்பதா காயம்என் றறியேன்
கலங்கி னேன்ஒரு களைகணும் இல்லேன்
சேய நன்னெறி அணித்தெனக் காட்டும்
தெய்வ நின்அருள் திறம்சிறி தடையேன்
தூய நின்அடி யவருடன் கூடித்
தொழும்பு செய்வதே சுகம்எனத் துணியேன்
தீய னேன்தனை ஆள்வதெவ் வாறோ
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (௮)

புன்னு னிப்படும் துளியினும் சிறிய
போகம் வேட்டுநின் பொன்அடி மறந்தேன்
என்னி னிப்படும் வண்ணம்அஃ தறியேன்
என்செய் கேன்எனை என்செயப் புகுகேன்
மின்னி னில்பொலி வேணியம் பெருமான்
வேற லேன்எனை விரும்பல்உன் கடனே
தென்ன னிப்படும் சோலைசூழ்ந் தோங்கித்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (௯)

அடிய னேன்அலன் என்னினும் அடியேன்
ஆக நின்றனன் அம்மைஇம் மையினும்
கடிய னேன்பிழை யாவையும் பொறுக்கக்
கடன்உ னக்கலால் கண்டிலன் ஐயா
பொடிகொள் மேனிஎம் புண்ணிய முதலே
புன்னை யஞ்சடைப் புங்கவர் ஏறே
செடியர் தேடுறாத் திவ்விய ஒளியே
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

— ০ —

# 10. பழமொழிமேல் வைத்துப் பரிவுகூர்தல்[22]

## திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வானை நோக்கிமண் வழிநடப் பவன்போல்
வயங்கும் நின்அருள் வழியிடை நடப்பான்
ஊனை நோக்கினேன் ஆயினும் அடியேன்
உய்யும் வண்ணம்நீ உவந்தருள் புரிவாய்
மானை நோக்கிய நோக்குடை மலையாள்
மகிழ மன்றிடை மாநடம் புரிவோய்
தேனை நோக்கிய கொன்றையஞ் சடையோய்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே.[23] (௧)

---

22, இப் பதிக ஏடுகளின் எண்கள் ௬௮௨, ௬௮௩, ௬௮௪. இவை முறையே "ௐ, சிவமயம்." என்றும், "ௐ" என்றும், "உ" என்றும் நம் அடிகளாரால் சிந்தித்து எழுதித் தொடங்கப்பட்டிருக்கின்றன.

23. இப் பதிகத்தில், நம் பெருமானார் அருளில் ஆசையுற்று மருள்வழி நடக்கும் தமக்கும் இறைவன் அருளுதல் வேண்டும் என்று மன்றாடுதல் காண்க. இப் பதிகப் பாடல்களோடு, பின்வரும் தேவாரம் திருவாசகம் போன்றவற்றைப் பார்த்தறிக :

" ஏழை மானுட இன்பினை நோக்கி
இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் கும்நமக்(கு) என்று
வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக்

வாயி லான்பெரு வழக்குரைப் பதுபோல்
　　வள்ளல் உன்னடி மலர்களுக் கன்பாம்
தூயி லாதுநின் அருள்பெற விழைந்தேன்
　　துட்ட னேன்அருள் சுகம்பெற நினைவாய்
கோயி லாகநல் அன்பர்தம் உளத்தைக்
　　கொண்ட மர்ந்திடும் குணப்பெருங் குன்றே
தேயி லாதபல் வளஞ்செறிந் தோங்கித்
　　திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே.　　(உ)

வித்தை இன்றியே விளைத்திடு பவன்போல்
　　மெய்ய நின்இரு மென்மலர்ப் பதத்தில்
பத்தி இன்றியே முத்தியை விழைந்தேன்
　　பாவி யேன்அருள் பண்புற நினைவாய்
மித்தை இன்றியே விளங்கிய அடியார்
　　விழைந்த யாவையும் தழைந்திட அருள்வோய்
சித்தி வேண்டிய முனிவரர் பரவித்
　　திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே.　　(ங)

கலம்இ லாதுவான் கடல்கடப் பவன்போல்
　　கடவுள் நின்அடிக் கமலங்கள் வழுத்தும்
நலம்இ லாதுநின் அருள்பெற விழைந்த
　　நாயி னேன்செயும் நவைபொறுத் தருள்வாய்
மலம்இ லாதநல் வழியிடை நடப்போர்
　　மனத்துள் மேவிய மாமணிச் சுடரே
சிலம்இ லாஞ்சம்ஆ தியதருப் பொழில்கள்
　　திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே.　　(ச)

---

23 (தொடர்ச்சி).

கூழை மாந்தர்தம் செல்கதிப் பக்கம்
　　போக மும்பொருள் ஒன்றறி யாத
ஏழையே னுக்(கு)ஓர் உய்வகை அருளாய்
　　இடைம ருதுறை எந்தைபி ரானே."

"வருந்துவன்நின் மலர்ப்பாதம் அவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவன்நற் றமியேன்மற் றென்னேநான் ஆமாறே."

போர்க்கும் வெள்ளத்தில் பொன்புதைப் பவன்போல்
புலைய நெஞ்சிடைப் புனிதநின் அடியைச்
சேர்க்கும் வண்ணமே நினைக்கின்றேன் எனினும்
சிறிய னேனுக்குன் திருஅருள் புரிவாய்
கூர்க்கும் நெட்டிலை வேற்படைக் கரங்கொள்
குமரன் தந்தையே கொடியதீ வினையைத்
தீர்க்கும் தெய்வமே சைவவை திகங்கள்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. (ரு)

ஓட உன்னியே உறங்குகின் றவன்போல்
ஓங்கும் உத்தம உன்அருட் கடலில்
ஆட உன்னியே மங்கையர் மயலில்
அழுந்து கின்றனற் கருள்செய நினைவாய்
நாட உன்னியே மால்அயன் ஏங்க
நாயி னேன்உளம் நண்ணிய பொருளே
தேட உன்னிய மாதவ முனிவர்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. (சு)

முதல்இ லாமல்ஊ தியம்பெற விழையும்
மூடன் என்னநின் மொய்கழல் பதமேத்
துதல்இ லாதுநின் அருள்பெற விழைந்தேன்
துட்ட னேன்அருட் சுகம்பெறு வேனோ
நுதலில் ஆர்அழல் கண்ணுடை யவனே
நோக்கும் அன்பர்கள் தேக்கும்இன் அமுதே
சிதல்இ லாவளம் ஓங்கிளங் நாளும்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. (எ)

கல்லை உந்திவான் நதிகடப் பவர்போல்
காமம் உந்திய நாமநெஞ் சகத்தால்
எல்லை உந்திய பவக்கடல் கடப்பான்
எண்ணு கின்றனன் எனக்கருள் வாயோ
அல்லை உந்திய ஒண்சுடர்க் குன்றே
அகில கோடிகட் கருள்செயும் ஒன்றே
தில்லை நின்றொளிர் மன்றிடை அமுதே
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. (அ)

நெய்யி னுல்சுடு நெருப்பவிப் பவன்போல்
நெடிய துன்பமாம் கொடியவை நிறைந்த
பொய்யி னுல்பவம் போக்கிட நினைத்தேன்
புல்ல னேனுக்குன் நல்அருள் வருமோ
கையி னுல்தொழும் அன்பர்தம் உள்ளக்
கமலம் மேவிய விமலவித் தகனே
செய்யி னுல்பொலிந் தோங்கிநல் வளங்கள்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. (௯)

நீர்சொ ரிந்தொளி விளக்கெரிப் பவன்போல்
நித்தம் நின்னிடை நேசம்வைத் திடுவான்
பார்சொ ரிந்திடும் பவநெறி முயன்றேன்
பாவி யேன்தனைக் கூவிநின் றுள்வாய்
கார்சொ ரிந்தெனக் கருணைசந் தன்பர்
களித்த நெஞ்சிடை ஒளித்திருப் பவனே
தேர்சொ ரிந்தமா மணித்திரு வீதித்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. (௧0)

திருச்சிற்றம்பலம்

— o —

## 11. அபராதத் தாற்றுமை[24]

திரு ஒற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

துச்சிலே விரும்பித் துயர்கொளும் கொடியேன்
துட்டனேன் தூய்மைஒன் றில்லா
எச்சிலே அனையேன் பாவியேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்

24. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௫௨, ௫௭. இவற்றில் முறையே "உ. சிவ மயம். ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் எண்ணி எழுதி அடிகளார் தொடங்கி இருக்கிறார்கள்.

பச்சிலை இடுவார் பக்கமே மருவும்
பரமனே எம்பசு பதியே
அச்சிலை விரும்பும் அவருளத் தமுதே
ஐயனே ஒற்றியூர் அரைசே.[25] (க)

தூங்கினேன் சோம்பற் குறைவிட மானேன்
தோகையர் மயக்கிடை அழுந்தி
ஏங்கினேன் அவமே இருந்தனன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
வாங்கிமே ருவினை வளைத்திடும் பவள
மாமணிக் குன்றமே மருந்தே
ஓங்கிவான் அளவும் பொழில்செறி ஒற்றி
யூர்வரும் என்னுடை உயிரே. (உ)

கரப்பவர்க் கெல்லாம் முற்படும் கொடிய
கடையனேன் விடையமே உடையேன்
இரப்பவர்க் கணுவும் ஈந்திலேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
திரப்படும் கருணைச் செல்வமே சிவமே
தெய்வமே தெய்வநா யகமே
உரப்படும் அன்பர் உள்ஒளி விளக்கே
ஒற்றியூர் வாழும்என் உவப்பே. (ங)

இல்லைஎன் பதனுக் கஞ்சிடேன் நாய்க்கும்
இணையிலேன் இழிவினேன் துயர்க்கோர்
எல்லைமற் றறியேன் ஓதியனேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்

---

25. இப் பதிகத்தில், நம் பெருமானார் மறச்செய்கைக்கு ஆற்றாது வருந்துதல் காண்க. இதோடு, பின்வரும் மணிவாசகத்தினை ஒத்துணர்க :

"அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்கு
ஆர்கி லேன்திரு அருள்வகை அறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடம் காணேன்
போற்றி போற்றிஎன் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேன்இது செய்கஎன்(று) அருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே."

கல்லைவில் ஆக்கும் கருணைவா ரிதியே
　　கண்ணுதல் உடையசெங் கனியே
தில்லைவாழ் அரசே தெய்வமா மணியே
　　திருஒற்றி யூர்வரும் தேவே. (௪)

மண்ணிலே மயங்கும் மனத்தினை மீட்டுன்
　　மலரடி வழுத்திடச் சிறிதும்
எண்ணிலேன் கொடிய ஏழையேன் என்னை
　　என்செய்தால் தீருமோ அறியேன்
விண்ணிலே விளங்கும் ஒளியினுள் ஒளியே
　　விடையில்வந் தருள்விழி விருந்தே
கண்ணிலே விளங்கும் அரும்பெறல் மணியே
　　காட்சியே ஒற்றியங் கரும்பே. (௫)

முட்டியே மடவார் முலைத்தலை உழக்கும்
　　மூடனேன் முழுப்புலை முறியேன்
எட்டியே அனையேன் பாவியேன் என்னை
　　என்செய்தால் தீருமோ அறியேன்
ஒட்டியே அன்பர் உளத்தெழும் களிப்பே
　　ஒளிக்குளாம் சோதியே கரும்பின்
கட்டியே தேனே சடையுடைக் கனியே
　　காலமும் கடந்தவர் கருத்தே. (௬)

கருதெனை அடியார் காட்டியும் தேருக்
　　கன்மனக் குரங்கனேன் உதவா
எருதென நின்றேன் பாவியேன் என்னை
　　என்செய்தால் தீருமோ அறியேன்
மருதிடை நின்ற மாணிக்க மணியே
　　வன்பவம் தீர்த்திடும் மருந்தே
ஒருதிறம் உடையோர் உள்ளத்துள் ஒளியே
　　ஒற்றியூர் மேவும்என் உறவே. (௭)

வைதிலேன் வணங்கா திகழ்பவர் தம்மை
　　வஞ்சனேன் நின்னடி யவர்பால்
எய்திலேன் பேயேன் ஏழையேன் என்னை
　　என் செய்தால் தீருமோ அறியேன்

கொய்துமா மலரிட் டருச்சனை புரிவோர்
கோலநெஞ் சொளிர்குணக் குன்றே
உய்திறம் உடையோர் பரவுநல் ஒற்றி
யூர்அகத் தமர்ந்தருள் ஒன்றே. (அ)

தெவ்வண மடவார் சிக்குழி விழுந்தேன்
தீயனேன் பேயனேன் சிறியேன்
எவ்வணம் உய்வேன் என்செய்வேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
எவ்வணப் பொருப்பே என்னிரு கண்ணே
இடையிடாப் பசியசெம் பொன்னே
செவ்வண மணியே திகழ்குணக் கடலே
திருஒற்றி யூர்ச்செழுந் தேனே. (கூ)

வாதமே புரிவேன் கொடும்புலி அனையேன்
வஞ்சக மனத்தினேன் பொல்லா
ஏதமே உடையேன் என்செய்வேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
போதமே ஐந்தாம் பூதமே ஒழியாப்
புனிதமே புதுமணப் பூவே
பாதமே சரணம் சரணம்என் தன்னைப்
பாதுகாத் தளிப்பதுன் பரமே. (க0)

திருச்சிற்றம்பலம்

— o —

## 12. அருளியல் விநவல்[26]

திருமுல்லைவாயில்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேன்என இனிக்கும் திருஅருட் கடலே
தெள்ளிய அமுதமே சிவமே
வான்என நிற்கும் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே

26. இப் பதிக ஏடுகளின் எண்கள் கூ, கூ0. இவற்றின் தொடக்கத்தில், முறையே "திருமுல்லை வாயில்" என்றும், "உ" என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

ஊன்என நின்ற உணர்விலேன் எனினும்
உன்திருக் கோயில்வந் தடைந்தால்
ஏன்எனக் கேளா திருந்தனை ஐயா
ஈதுநின் திருஅருட் கியல்போ.[27] (க)

பூங்கொடி இடையைப் புணர்ந்தசெந் தேனே
புத்தமு தேமறைப் பொருளே
வாங்கொடி விடைகொள் அண்ணலே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
தீங்கொடி யாத வினையனேன் எனினும்
செல்வநின் கோயில்வந் தடைந்தால்
ஈங்கொடி யாத அருட்கணால் நோக்கி
ஏன்எனு திருப்பதும் இயல்போ. (உ)

துப்புநேர் இதழி மகிழ்ந்தகல் யாண
சுந்தரா சுந்தரன் தூதா
மைப்பொதி மிடற்றாய் வளர்திரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
அப்பனே உன்னை விடுவனோ அடியேன்
அறிவிலேன் எனினுநின் கோயிற்
கெய்ப்புடன் வந்தால் ஏஎன உரையா
திருப்பதுன் திருஅருட் கியல்போ. (ந)

கங்கைஅஞ் சடைகொண் டோங்குசெங் கனியே
கண்கள்மூன் றோங்குசெங் கரும்பே
மங்கல்இல் லாத வண்மையே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே

---

27. இப் பதிகத்தில், அடிகளார் இறைவனது அருளியல்பைச் சுட்டித் தம்மை ஆட்கொண் டருளுமாறு வேண்டுதல் காண்க. இதோடு, கீழ்க்கண்ட வன்தொண்டப் பெருமானரது வாழ்த்தினை ஒத்துணர்க:

"மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்(கு) இருப்பீர் திருஆரூரீர் வாழ்ந்து போதீரே."

துங்கநின் அடியைத் துதித்திடேன் எனினும்
தொண்டனேன் கோயில்வந் தடைந்தால்
எங்குவந் தாய்நீ யார்என வேனும்
இயம்பிடா திருப்பதும் இயல்போ. (௪)

நன்றுவந் தருளும் நம்பனே யார்க்கும்
நல்லவ னேதிருத் தில்லை
மன்றுவந் தாடும் வள்ளலே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
துன்றுநின் அடியைத் துதித்திடேன் எனினும்
தொண்டனேன் கோயில்வந் தடைந்தால்
என்றுவந் தாய்என் றொருசொலும் சொல்லா
திருப்பதுன் திருஅருட் கியல்போ. (௫)

பண்ணினுள் இசையே பாலினுள் சுவையே
பத்தர்கட் கருள்செயும் பரமே
மண்ணினில் ஓங்கி வளம்பெறும் முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
பெண்ணினும் பேதை மதியினேன் எனினும்
பெருமநின் அருள்பெற லாம்என்
றெண்ணிவந் தடைந்தால் கேள்வியில் லாமல்
இருப்பதுன் திருஅருட் கியல்போ. (௬)

முன்னிய மறையின் முடிவின்உட் பொருளே
முக்கணா மூவர்க்கும் முதல்வா
மன்னிய கருணை வாரியே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
அன்னியன் அல்லேன் தொண்டனேன் உன்தன்
அருட்பெருங் கோயில்வந் தடைந்தால்
என்இது சிவனே பகைவரைப் போல்பார்த்
திருப்பதுன் திருஅருட் கியல்போ. (௭)

நல்லவர் பெறும்நற் செல்வமே மன்றுள்
ஞானநா டகம்புரி நலமே
வல்லவர் மதிக்கும் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே

புல்லவன் எனினும் அடியனேன் ஐயா
　　பொய்யல உலகறிந் ததுநீ
இல்லையென் றாலும் விடுவனோ சும்மா
　　இருப்பதுன் திருஅருட் கியல்போ. (அ)

பொதுவினின் றருளும் முதல்தனிப் பொருளே
　　புண்ணியம் விளைகின்ற புலமே
மதுவினின் றோங்கும் பொழில்திரு முல்லை
　　வாயில்வாழ் மாசிலா மணியே
புதுமையன் அல்லேன் தொன்றுதொட் டுனது
　　பூங்கழற் கன்புபூண் டவன்காண்
எதுநினைந் தடைந்தாய் என்றுகே ளாமல்
　　இருப்பதுன் திருஅருட் கியல்போ. (கூ)

பொன்னையுற் றவனும் அயனும்நின் றறியாப்
　　புண்ணியா கண்ணுதல் கரும்பே
மன்னனே மருந்தே வளர்திரு முல்லை
　　வாயில்வாழ் மாசிலா மணியே
உன்னைநான் கனவின் இடத்தும்விட் டொழியேன்
　　உன்திரு அடித்துணை அறிய
என்னைஈன் றவனே முகமறி யார்போல்
　　இருப்பதுன் திருஅருட் கியல்போ. (கo)

திருச்சிற்றம்பலம்

— o —

## 13. திரு முல்லைவாயில் திருவிண்ணப்பம்[28]

### கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

தாயின் மேவிய தற்பர மேமுல்லை
வாயின் மேவிய மாமணி யேஉன்தன்
கோயின் மேவிநின் கோமலர்த் தாள்தொழா
தேயின் மேவி இருந்தனன் என்னையே.[29] (க)

28. இப் பதிக ஏட்டின் எண் சுக. இதை அடிகளார் "உ. இதுவுந் திரு முல்லைவாயில்." என்றெழுதித் தொடங்கியிருக்கிறார்கள்.

தில்லை வாய்ந்த செழுங்கனி யேதிரு
முல்லை வாயில் முதல்சிவ மூர்த்தியே
தொல்லை யேன்உன்தன் தூய்திருக் கோயிலின்
எல்லை சேரஇன் றெத்தவம் செய்தே. (உ)

வளங்கொ ளும்முல்லை வாயிலில் மேவிய
குளம்கொ ளுங்கண் குருமணி யேஉனை
உளம்கொ ளும்படி உன்திருக் கோயில்இக்
களங்கொள் நெஞ்சினன் கண்டதும் கண்டதே. (௩)

மலைவி லாமுல்லை வாயிலில் மேவிய
விலையி லாமணி யேவிளக் கேசற்றும்
குலைவி லாதவர் கூடும்நின் கோயிலில்
தலைநி லாவத்த வம்என்கொல் செய்ததே. (௪)

சீர்சி றக்கும் திருமுல்லை வாயிலில்
ஏர்சி றக்கும் இயன்மணி யேகொன்றைத்
தார்சி றக்கும் சடைக்கனி யேஉன்தன்
ஊர்சி றக்க உறுவதெவ் வண்ணமே. (௫)

சேல்கொள் பொய்கைத் திருமுல்லை வாயிலில்
பால்கொள் வண்ணப் பரஞ்சுட ரேவிடை
மேல்கொள் சங்கர னேவிம லாஉன்தன்
கால்கொள் அன்பர் கலங்குதல் நன்றதோ. (௬)

வண்ண மாமுல்லை வாயிலின் மேவிய
அண்ண லேஅமு தேஅரை சேநுதல்
கண்ண னேஉனைக் காணவந் தோர்க்கெலாம்
நண்ண ருந்துயர் நல்குதல் நன்றதோ. (௭)

---

29. இப் பதிகத்தில், அடிகளார், இறைவனைச் சார்ந்தோர் துயர் உறுதல் தகுதி அன்றென்று முறையிடுதல் காண்க. இதோடு, பின்வரும் கந்தர் அநுபூதித் திருப்பாடல் பார்க்க:

" பாழ்வாழ்(வு) எனும்இப் படுமா யையிலே
வீழ்வாய் எனஎன் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வா கனனே."

மண்ணின் ஓங்கி வளர்முல்லை வாயில்வாழ்
கண்ணுண் மாமணி யேகரும் பேஉனை
எண்ணும் அன்பர் இழிவடைந் தால்அது
பண்ணும் நின்அருள் பாரிடை வாழ்கவே. (அ)

தீதி லாததி ருமுல்லை வாயில்வாழ்
கோதி லாதகு ணப்பெரும் குன்றமே
வாதி லாதுனை வாழ்த்தவந் தோர்தமை
ஏதி லார்என்றி ருப்பதும் என்கொலோ. (௯)

தேசு லாவிய சீர்முல்லை வாயில்வாழ்
மாசி லாமணி யேமருந் தேசற்றும்
கூசி டாமல்நின் கோயில்வந் துன்புகழ்
பேசி டாத பிழைபொறுத் தாள்வையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

— o —

## 14. காட்சிப் பெருமிதம்[30]

திரு வலிதாயம்

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திரைப டாதசெ ழுங்கட லேசற்றும்
உரைப டாமலொ ளிசெய்பொன் னேபுகழ்
வரைப டாதுவ ளர்வல்லி கேசநீ
தரைப டாக்கந்தை சாத்திய தென்கொலோ.[31] (௧)

சிந்தை நின்றசி வாநந்தச் செல்வமே
எந்தை யேஎமை ஆட்கொண்ட தெய்வமே
தந்தை யேவலி தாயத்த லைவநீ
கந்தை சுற்றுங்க ணக்கது என்கொலோ. (௨)

---

30. இப் பதிக ஏட்டின் எண் ௫அ. இதன் தொடக்கத்தில் "உ. வல்லி கேசர் பேரில்." என்று அடிகளாரால் எழுதப்பட்டிருக்கிறது,

வேலை கொண்ட விடம்உண்ட கண்டனே
மாலை கொண்ட வளர்வல்லி கேசனே
பாலை கொண்ட பராபர நீபழஞ்
சேலை கொண்ட திறம்இது என்கொலோ. (ரு)

பன்னு வார்க்கரு ளும்பர மேட்டியே
மன்னும் மாமணி யேவல்லி கேசனே
உன்ன நீஇங்கு டுத்திய கந்தையைத்
துன்னு வார்இல்லை யோபரஞ் சோதியே. (சு)

கடுத்த தும்பிய கண்டஅ கண்டனே
மடுத்த நற்புகழ் வாழ்வல்லி கேசநீ
தொடுத்த கந்தையை நீக்கித்து ணிந்தொன்றை
உடுத்து வார்இலை யோஇவ்வு லகிலே. (ரு)

ஆல்அ டுத்தஅ ரும்பொரு ளேதிரு
மால்அ டுத்தும கிழ்வல்லி கேசநீ
பால்உ டுத்தப ழங்கந்தை யைவிடத்
தோல்உ டுப்பது வேமிகத் தூய்மையே. (சு)

துன்னும் மாமருந் தேசுட ரேஅருள்
மன்னும் மாணிக்க மேவல்லி கேசரே
துன்னு கந்தையைச் சுற்றிநிற் பீர்எனில்
என்ன நீர்எமக் கீயும்ப ரிசதே. (எ)

மாசில் சோதிம ணிவிளக் கேமறை
வாசி மேவிவ ரும்வல்லி கேசநீர்
தூசில் கந்தையைச் சுற்றிஐ யோபர
தேசி போல்இருந் தீர்என்கொல் செய்வனே. (அ)

---

31. இப் பதிகத்தில், நம் பெருமானுர், இறைவன் சிறப்பியல்புகளைக் கண்டு உவத்தலும், இறைவன் திருக்கோயில் உண்மை அறியா உலகர் நிலையைக் கண்டு கலங்கலும் காண்க. இதோடு, பின்வரும் தேவார மெய்ம்மொழி கண்டு களிக்க :

"ஏடுலாமலர்க் கொன்றைசூடுதிர் என்பெலாம்அணிந்(து) என்செய்வீர்
காடு நும்பதி ஓடு கையது காதல் செய்பவர் பெறுவதென்
பாடல் வண்டிசை ஆலும் சோலைப்பைஞ் ஞீலி யேன்என்று நிற்றிரால்
ஆடல் பாடலும் வல்லி ரோசொலும் ஆரணிய விடங்கரே."

தேரும் நற்றவர் சிந்தைஎ னுந்தலம்
சாரும் நற்பொரு ளாம்வலி தாயநீர்
பாரும் மற்றிப்ப ழுங்கந்தை சாத்தினீர்
யாரும் அற்றவ ரோசொலும் ஐயரே. (கூ)

மெல்லி தாயவி ரைமலர்ப் பாதனே
வல்லி தாயம ருவிய நாதனே
புல்லி தாயஇக் கந்தையைப் போர்த்திஞல்
கல்லி தாயநெஞ் சம்கரை கின்றதே. (௧0)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 15. கொடைமடப் புகழ்ச்சி[32]

திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திரப்ப டும்திரு மால்அயன் வாழ்த்தத்
தியாகர் என்னும்ஓர் திருப்பெயர் அடைந்தீர்
வரப்ப டுந்திறத் தீர்உமை அடைந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
இரப்ப வர்க்கொன்றும் ஈகிலீர் ஆனல்
யாதுக் கையநீர் இப்பெயர் எடுத்தீர்
உரப்ப டும்தவத் தோர்துதித் தோங்க
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே.[33] (௧)

---

32. இப் பதிக ஏடுகளின் எண்கள் கூஉ, கூரு. இவற்றில் முறையே "உ. ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் தொடங்கி அடிகளார் சிந்தித் திருக்கிருர்கள்.

33. இப் பதிகத்தில், அடிகளார் இறைவனிடம் அருட்கொடை வேண்டி மன்ருடுதல் கண்டுவக்க. இப் பதிகப் பாக்களோடு வன்தொண்டப் பெருமாஞருடைய பின்வரும் திருப்பாடல்கள் போன்றவற்றை ஒத்துணர்க :

" வல்ல தெல்லாம் சொல்லி உம்மை வாழ்த்திஞலும்
வாய்தி றந்தொன்(று)

வெள்ளி மாமலை வீடென உடையீர்
விளங்கும் பொன்மலை வில்லெனக் கொண்டீர்
வள்ளி யீரென நும்மைவந் தடைந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
எள்ளில் எண்ணெய்போல் எங்கணும் நின்றீர்
ஏழை யேன்குறை என்அறி யீரோ
ஒள்ளி யீர்உமை அன்றிஒன் றறியேன்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (௨)

கள்ள மற்றவாக் கரசும்புத் திரரும்
களிக்க வேபடிக் காசளித் தருளும்
வள்ளல் என்றுமை வந்தடைந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
எள்ள ரும்புகழ்த் தியாகர்என் றொருபேர்
ஏன்கொண் டீர்இரப் போர்க்கிட அன்றோ
உள்ளம் இங்கறி வீர்எனை ஆள்வீர்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (௩)

அண்மை யாகும்சுந் தரர்க்கன்று கச்சூர்
ஆலக் கோயிலில் சோறிரந் தளித்த
வண்மை கேட்டிங்கு வந்தடைந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
திண்மை சேர்திரு மால்விடை ஊர்வீர்
தேவ ரீருக்குச் சிறுமையும் உண்டோ
உண்மை யான்உமை அன்றிமற் றறியேன்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (௪)

---

33 (தொடர்ச்சி).
இல்லை என்னீர் உண்டும் என்னீர் எம்மை ஆள்வான் இருப்பதென்னீர்
பல்லை உக்க படுதலையில் பகலெ லாம்போய்ப் பலிதி ரிந்திங்(கு)
ஒல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர் ஓண காந்தன் தளியுளீரே."

"ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்
அடியவர்க்(கு) அடிய னும் ஆனேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச் சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க்(கு) அருள்செயும் பாச்சி
லாச்சிரா மத்தெம் அடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில்
இவரலா(து) இல்லையோ பிரானார்."

சிந்தை நொந்துல கில்பிறர் தம்மைச்
    சேர்ந்தி டாதுநும் திருப்பெயர் கேட்டு
வந்த டைந்தஎற் குண்டிலை எனவே
    வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
இந்த வண்ணம்நீர் இருந்திடு வீரேல்
    என்சொ லார்உமை இவ்வுல கத்தார்
உந்தி வந்தவ னோடரி ஏத்த
    ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (ரு)

கல்லை யும்பசும் பொன்எனப் புரிந்த
    கருணை கேட்டுமைக் காதலித் திங்கு
வல்லை வந்துநின் றேற்றிடில் சிறிதும்
    வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
இல்லை நீர்பிச்சை எடுக்கின்றீ ரேனும்
    இரக்கின் றோர்களும் இட்டுண்பர் கண்டீர்
ஒல்லை இங்கென துளங்கொண்ட தறிவீர்
    ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (சு)

துளிக்கும் கண்ணுடன் சோர்வுற நெஞ்சம்
    தோன்ற லேஉமைத் துணைஎன நம்பி
வளிக்குள் பஞ்சனை யேன்அடைந் தேற்றால்
    வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
அளிக்கும் தன்மையீர் வாழ்ந்திவண் இருக்க
    அடிய னேன்அலை கின்றதும் அழகோ
ஒளிக்கும் தன்மைதான் உமக்கும்உண் டேயோ
    ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (எ)

குற்றம் எத்தனை அத்தனை எல்லாம்
    குணம்என க்கொளும் குணக்கடல் என்றே
பற்றும் நான்நம்பி ஈங்குவந் தேற்றால்
    வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
கற்ற நற்றவர்க் கேஅருள் வீரேல்
    கடைய னேன்எந்தக் கடைத்தலைச் செல்கேன்
உற்ற நற்றுணை உமைஅன்றி அறியேன்
    ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (அ)

பொய்யி லார்க்குமுன் பொற்கிழி அளித்த
புலவர் ஏறெனப் புகழ்ந்திடக் கேட்டு
மையல் கொண்டிடும் மனத்தொடும் வந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
ஐய நும்அடி அன்றிஓர் துணையும்
அறிந்தி லேன்இஃத றிந்தரு ளீரேல்
உய்யும் வண்ணம்எவ் வண்ணம்என் செய்கேன்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (௯)

தாயி லார்என நெஞ்சகம் தளர்ந்தேன்
தந்தை உம்திருச் சந்நிதி அடைந்தேன்
வாயி லார்என இருக்கின்றீர் அல்லால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
கோயி லாகஎன் நெஞ்சகத் தமர்ந்த
குணத்தி னீர்என்தன் குறைஅறி யீரோ
ஓயி லாதுநல் தொண்டருக் கருள்வான்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

— o —

## 16. திரு அருள் வேட்கை[34]

### திரு ஒற்றியூர்

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

மன்அமுதாம் உன்தாள் வழுத்துகின்ற நல்லோர்க்கே
இன்அமுதம் ஓர்பொழுதும் இட்டறியேன் ஆயிடினும்
முன்அமுதா உண்டகளம் முன்னிமுன்னி வாடுகின்றேன்
என்அமுதே இன்னும் இரக்கந்தான் தோன்றாதோ.[35] (௧)

---

34. இப் பதிக எட்டெண் ௬௬. இதன் தொடக்கத்தில் அடிகளார் “உ” ஒற்றியூர்.” என்று குறித்திருக்கிறார்கள்.

தோன்றாத் துணையாகும் சோதியே நின்அடிக்கே
ஆன்றார்த்த அன்போ டகங்குழையேன் ஆயிடினும்
ஊன்றார்த் தரித்ததனை உன்னிஉன்னி வாடுகின்றேன்
தேன்றார்ச் சடையாய்உன் சித்தம் இரங்காதோ. (உ)

காதார் கடுவிழியார் காமவலைக் குள்ளாகி
ஆதாரம் இன்றி அலைதந்தேன் ஆயிடினும்
போதார் நினதுகழல் பொன்அடியே போற்றுகின்றேன்
நீதாவோ உன்னுடைய நெஞ்சம் இரங்காதோ. (ங)

இலைவேட்ட மாதர்தம இனநல மேவிழைந்து
கொலைவேட் டுழலும் கொடியனேன் ஆயிடினும்
நிலைவேட்ட நின்அருட்கே நின்றுநின்று வாடுகின்றேன்
கலைவேட்ட வேணியனே கருணைசற்றும் கொண்டிலையே. (ச)

கொண்டல்நிறத் தோனும் குணிக்கரிய நின்அடிக்கே
தொண்டறிந்து செய்யாத துட்டனேன் ஆயிடினும்
எண்டகநின் பொன்அருளை எண்ணிஎண்ணி வாடுகின்றேன்
தண்டலைசூழ் ஒற்றியுளாய் தயவுசற்றும் சார்ந்திலையே. (ரு)

சாரா வறுஞ்சார்பில் சார்ந்தரைசே உன்னுடைய
தாரார் மலரடியைத் தாழ்ந்தேத்தேன் ஆயிடினும்
நேராய்நின் சந்நிதிக்கண் நின்றுநின்று வாடுகின்றேன்
ஓராயோ சற்றேனும் ஒற்றியூர் உத்தமனே. (சா)

---

35. இப் பதிகத்தில், இறைவனது திருமுன் நின்று வணங்கிக் குறைகளைக் கூறி முறையிடும் தமக்கு இறைவனுடைய அருள் துணைநிற்க வேண்டும் என்று அடிகளார் இரங்குதல் காண்க. இப்பதிகப் பாக்க ளொடு பின் வரும் மணிவாசகம் தாயுமானார்தம் முறையீடு போன்ற வற்றை ஒத்துணர்க:

" வெஞ்சேல் அனைய கண்ணார்தம் வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சேர் அடியாள் பாகத்(து) ஒருவா பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே."

"யாதேனும் அறியாவெறும்
துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்,"

ஊர்மதிக்க வீணில் உளறுகின்ற தல்லதுநின்
சீர்மதிக்க நின்அடியைத் தேர்ந்தேத்தேன் ஆயிடினும்
கார்மதிக்கும் நஞ்சம்உண்ட கண்டநினைந் துள்குகின்றேன்
ஏர்மதிக்கும் ஒற்றியூர் எந்தைஅளி எய்தாயோ. (எ)

தாய்க்கும்இனி தாகும்உன்தன் தாள்மலரை ஏத்தாது
நாய்க்கும் கடையாய் நவிகின்றேன் ஆயிடினும்
வாய்க்கும்உன்தன் சந்நிதிக்கண் வந்துவந்து வாடுகின்றேன்
தூய்க்குமரன் தந்தாய்என் சோர்வறிந்து தீராயோ. (அ)

அறியாப் பருவத் தடியேனை ஆட்கொண்ட
நெறியாம் கருணை நினைந்துருகேன் ஆயிடினும்
குறியாப் பொருளேஉன் கோயிலிடை வந்துநின்றும்
பறியாப் பிணியேன் பரதவிப்பைப் பார்த்திலையே. (கூ)

பார்நடையாம் கானில் பரிந்துழல்வ தல்லதுநின்
சீர்நடையாம் நன்னெறியில் சேர்ந்திலேன் ஆயிடினும்
நேர்நடையாம் நின்கோயில் நின்றுநின்று வாடுகின்றேன்
வார்நடையார் காணு வளர்ஒற்றி மன்அமுதே. (கo)

திருச்சிற்றம்பலம்

---

## 17. அபராத விண்ணப்பம்[36]

திரு ஒற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேவியல் அறியாச் சிறியனேன் பிழையைத்
    திருஉளத் தெண்ணிநீ கோபம்
மேவிஇங் கையோ கைவிடில் சிவனே
    வேறுநான் யாதுசெய் வேனே

---

36. இப் பதிக ஏடுகளின் எண்கள் கூஎ, கூஅ. இவற்றின் முதற்கண் முறையே "உ. ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் அடிகளார் எழுதிச் சிந்தித்திருக்கிறார்கள்.

மூவிரு முகம்சேர் முத்தினை அளித்த
முழுச்சுவை முதிர்ந்தசெங் கரும்பே
சேவின்மேல் ஓங்கும் செழுமணிக் குன்றே
திருஒற்றி யூர்மகிழ் தேவே.[37] (க)

உய்யஒன் றறியா ஓதியனேன் பிழையை
உன்திரு உள்ளத்தில் கொண்டே
வெய்யன்என் றையோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே
செய்யநெட் டிலைவேல் சேய்தனை அளித்த
தெய்வமே ஆநந்தத் திரட்டே
மையலற் றவர்தம் மனத்தொளிர் விளக்கே
வளம்பெறும் ஒற்றியூர் மணியே. (உ)

கழல்கொள்உன் அருமைத் திருஅடி மலரைக்
கருதிடாப் பிழைதனைக் குறித்தே
விழலன்என் றையோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே
அழல்அயில் கரத்தெம் ஐயனை ஈன்ற
அப்பனே அயனுமால் அறியாத்
தழல்நிறப் பவளக் குன்றமே ஒற்றித்
தனிநகர் அமர்ந்தருள் தகையே. (ங)

வாடனக் குறழும் வடுக்கணூர்க் குருகும்
வஞ்சனேன் பிழைதனைக் குறித்தே
வேடன்என் றையோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே

---

37. இப் பதிகத்தில், அடிகளார் தம் குற்றம் குறைகளைத் திருஉளத்திருத்தி இறைவன் தம்மைக் கைவிடாதிருத்தல் வேண்டும் என்றும் தமக்கு வேறு புகலிடம் இல்லை என்றும் முறையிட்டு இரங்கல் காண்க. இப் பதிகப் பாக்களொடு பின்வரும் பட்டினத்தடிகளார் திருப்பாடல் போன்றவற்றை ஒத்துணர்க:

“ கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்(து)அருள் வாய்கச்சி ஏகம்பனே.”

நீடயில் படைசேர் கரத்தனை அளித்த
நிருத்தனே நித்தனே நிமலா
ஏடகத் தமர்ந்த ஈசனே தில்லை
எந்தையே ஒற்றியூர் இறையே. (ச)

நாணம்ஒன் றில்லா நாயினேன் பிழையை
நாடிநின் திருஉளத் தடைத்தே
வீணன்என் றையோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே
காணநின் றடியார்க் கருள்தரும் பொருளே
கடிமதில் ஒற்றியூர்க் கரசே
பூணயில் கரத்தோர் புத்தமு தெழுந்த
புண்ணியப் புனிதவா ரிதியே. (ரு)

அஞ்செழுத் தோதி உய்ந்திடாப் பிழையை
ஐயநின் திருஉளத் தெண்ணி
வெஞ்சன்என் றையோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே
கஞ்சன்மால் முதலோர் உயிர்பெற விடத்தைக்
களத்திருத் தியஅருட் கடலே
சஞ்சித மறுக்கும் சண்முகம் உடையோன்
தந்தையே ஒற்றிஎம் தவமே. (சு)

நம்பினேன் நின்தன் திருஅடி மலரை
நாயினேன் பிழைதனைக் குறியேல்
வெம்பினேன் ஐயோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே
தும்பிமா முகனை வேலனை ஈன்ற
தோன்றலே வச்சிரத் தூணே
அம்பிகா பதியே அண்ணலே முக்கண்
அத்தனே ஒற்றியூர் அமுதே. (எ)

சூழ்ந்தவஞ் சகனேன் பிழைதனைக் குறியேல்
துன்பசா கரந்தனில் அழுந்தி
வீழ்ந்தனன் ஐயோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே

வாழ்ந்தமா தவர்கள் மனத்தொளிர் ஒளியே
வள்ளலே மழவிடை யவனே
போழ்ந்தவேல் படைகொள் புனிதனை அளித்த
பூரணா ஒற்றியூர்ப் பொருளே. (அ)

துரும்பினேன் பிழையைத் திருஉளத் தடையேல்
துய்யநின் அருட்கடல் ஆட
விரும்பினேன் ஐயோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே
கரும்பின்நேர் மொழியார் இருவரை மணக்கும்
கனிதனை அளித்தகற் பகமே
இரும்பின்நேர் நெஞ்சர் எனினும்என் போல்வார்க்
கின்அருள் தரும்ஒற்றி இறையே. (கூ)

கட்டினேன் பாபக் கொடுஞ்சுமை எடுப்பேன்
கடும்பிழை கருதிடேல் நின்னை
விட்டிலேன் ஐயோ கைவிடில் சிவனே
வேறுநான் யாதுசெய் வேனே
சுட்டிலாப் பொருளே சுகப்பெருங் கடலே
தூய்த்திரு ஒற்றியூர்த் துணையே
தட்டிலாக் குணத்தோர் புகழ்செயும் குகனைத்
தந்தருள் தருந்தயா நிதியே. (கo)

திருச்சிற்றம்பலம்

— o —

## 18. அறிவரும் பெருமை[38]

### திரு ஒற்றியூர்

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நாயினும் கடையேன் என்செய்வேன் பிணியால்
நலிகின்ற நலிவினை அறிந்தும்
தாயினும் இனியாய் இன்னும்நீ வரவு
தாழ்த்தனை என்கொலென் றறியேன்

38. இப் பதிக ஏடுகளின் எண்கள் கூக, எம. இவற்றின் தொடக்கத்தில் முறையே "உ. ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் அடிகளார் எண்ணி எழுதி யிருக்கிறார்கள்.

மாயினும் அல்லால் வாழினும் நினது
மலரடி அன்றிஒன் றேத்தேன்
காயினும் என்னைக் கனியினும் நின்னைக்
கனவினும் விட்டிடேன் காணே.[39] (க)

காண்பது கருதி மாலொடு மலர்வாழ்
கடவுளர் இருவரும் தங்கள்
மாண்பது மாறி வேறுரு எடுத்தும்
வள்ளல்நின் உருஅறிந் திலரே
கோண்பதர் நெஞ்சக் கொடியனேன் எந்தக்
கொள்கைகொண் டறிகுவ தையா
பூண்பது பணியாய் பொதுவில்நின் றாடும்
புனிதநின் அருளலா தின்றே. (உ)

இன்றுவந் தெனைநீ அடிமைகொள் ளாயேல்
எவ்வுல கத்தரும் தூற்ற
நன்றுநின் தன்மேல் பழிவரும் என்மேல்
பழிபிலை நவின்றனன் ஐயா
அன்றுவந் தொருசேய்க் கருள்புரிந் தாண்ட
அண்ணலே ஒற்றியூர் அரசே
நின்றுசிற் சபைக்குள் நடம்செயும் கருணை
நிலயமே நின்மலச் சுடரே. (ங)

சுடர்கொளும் மணிப்பூண் முலைமட வியர்தம்
தொடக்கினில் பட்டுழன் றேயா
இடர்கொளும் எனைநீ ஆட்கொளும் நாள்தான்
எந்தநாள் அந்தநாள் உரையாய்
படர்கொளும் வானோர் அமுதுண நஞ்சைப்
பரிந்துண்ட கருணைஅம் பரமே
குடர்கொளும் சூலப் படைஉடை யவனே
கோதையோர் கூறுடை யவனே. (ச)

---

39. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், தம் துன்பத்தையும் தாழ்ந்த நிலையையும் இறைவர் திருவடிகளில் விண்ணப்பித்துத் தம்மை ஆட்கொண்டருள வேண்டும் என்று மன்றாடுதல் காண்க. இவற்றோடு பின் வரும் மணிவாசகம் போன்றவற்றை ஒத்துணர்க:

உடைமைவைத் தெனக்கின் றருள்செயா விடினும்
ஒப்பிலாய் நின்னடிக் கெனையே
அடைமைவைத் தேனும் நின்அருட் பொருள்இங்
களித்திட வேண்டும்இன் றெவைக்கும்
கடைமையேன் வேறோர் தேவரை அறியேன்
கடவுள்நின் திருவடி அறிக
படைமைசேர் கரத்தெம் பசுபதி நீயே
என்உளம் பார்த்துநின் றுயே. (ரு)

பார்த்துநிற் கின்றாய் யாவையும் எளியேன்
பரதவித் துறுகணல் நெஞ்சம்
வேர்த்துநிற் கின்றேன் கண்டிலை கொல்லோ
விடம்உண்ட கண்டன்நீ அன்றோ
ஆர்த்துநிற் கின்றார் ஐம்புல வேடர்
அவர்க்கிலக் காவனோ தமியேன்
ஓர்த்துநிற் கின்றார் பரவுநல் ஒற்றி
யூரில்வாழ் என்உற வினனே. (சு)

உறவனே உன்னை உள்கிநெஞ் சழலின்
உறும்இழு தெனக்கசிந் துருகா
மறவனேன் தன்னை ஆட்கொளா விடில்யான்
வருந்துவ தன்றிஎன் செய்கேன்
நிறவனே வெள்ளை நீறணி பவனே
நெற்றிமேல் கண்ணுடை யவனே
அறவனே தில்லை அம்பலத் தாடும்
அப்பனே ஒற்றியூர்க் கரைசே. (எ)

கரைபடா வஞ்சப் பவக்கடல் உழக்கும்
கடையனேன் நின்திரு அடிக்கு
விரைபடா மலர்போல் இருந்துழல் கின்றேன்
வெற்றனேன் என்செய விரைகேன்

---

39 (தொடர்ச்சி).
"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ(து) இனியே."

திரைபடாக் கருணைச் செல்வவா ரிதியே
திருஒற்றி யூர்வளர் தேனே
உரைபடாப் பொன்னே புரைபடா மணியே
உண்ணுதற் கினியநல் அமுதே. (அ)

நல்அமு தனையார் நின்திரு அடிக்கே
நண்புவைத் துருகுகின் றனரால்
புல்அமு தனையேன் என்செய்வான் பிறந்தேன்
புண்ணியம் என்பதொன் றறியேன்
சொல்அமு தனைய தோகைஓர் பாகம்
துன்னிய தோன்றலே கனியாக்
கல்அமு தாக்கும் கடன்உனக் கன்றோ
கடையனேன் கழறுவ தென்னே. (கூ)

என்னைநின் னவனாக் கொண்டுநின் கருணை
என்னும்நன் னீரினால் ஆட்டி
அன்னைஅப் பனுமாய்ப் பரிவுகொண் டாண்ட
அண்ணலே நண்ணரும் பொருளே
உன்னருந் தெய்வ நாயக மணியே
ஒற்றியூர் மேவும்என் உறவே
நன்னர்செய் கின்றோய் என்செய்வேன் இதற்கு
நன்குகைம் மாறுநா யேனே. (௧0)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 19. அருள்விடை வேட்கை[40]

திரு ஒற்றியூர்
கலி விருத்தம்
திருச்சிற்றம்பலம்

போகம் கொண்ட புணர்முலை மாதொரு
பாகம் கொண்ட படம்பக்க நாதரே
மாகம் கொண்ட வளம்பொழில் ஒற்றியின்
மோகம் கொண்டஎம் முன்நின் றருளிரோ.[41] (௧)

40. இப் பதிக ஏட்டெண் ௭௧. இதை "உ. ஒற்றியூர்." என்றெழுதி அடிகளார் தொடங்கி யிருக்கிறார்கள்.

தவள நீற்றுமெய்ச் சாந்தவி னோதரே
பவள மேனிப் படம்பக்க நாதரே
கவள வீற்றுக் கரிஉரி போர்த்தநீர்
இவளை ஒற்றிவிட் டெங்ஙனம் சென்றிரோ. (உ)

சீல மேவித் திகழ்அனல் கண்ஒன்று
பால மேவும் படம்பக்க நாதரே
ஞால மேவும் நவையைஅ கற்றமுன்
ஆலம் உண்டவர் அல்லிர்கொல் ஐயரே. (௩)

உடைகொள் கோவணத் துற்றஅ ழகரே
படைகொள் சூலப் படம்பக்க நாதரே
கடைகொள் நஞ்சுண்டு கண்டம்க றுத்தநீர்
இடையில் ஒற்றிவிட் டெங்ஙனம் சென்றிரோ. (௪)

நிறைய வாழ்தொண்டர் நீடுற வன்பவம்
பறைய நின்றப டம்பக்க நாதரே
உறைய மாணிக்கு யிர்அளித் திட்டநீர்
குறையி லாஒற்றிக் கோயிற்கண் உள்ளிரோ. (௫)

வணங்கொள் நாகம ணித்தலை ஐந்துடைப்
பணங்கொள் செல்வப்ப டம்பக்க நாதரே
கணங்கொள் காமனைக் காய்ந்துயிர் ஈந்தநீர்
வணங்கு வார்க்கென்கொல் வாய்திற வாததே. (௬)

---

41. இப் பதிகத்தில் நம் அடிகளார் அருளுருவமான இறைவர் தமக்குக் காட்சி அளித்துத் தம் துயரை நீக்கி அருளல் வேண்டும் என்று முறையிடுதல் காண்க. இப் பாக்களொடு பின்வரும் வன்தொண்டப் பெருமானார் பட்டினத்தடிகளார் அருள்மொழிகள் போன்றவற்றை ஒத்துணர்க :

"செய்வினை ஒன் றறியாதேன் திருஅடியே சரண்என்று
பொய்அடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ
பைஅரவா இங்கிருந்தா யோஎன்னப் பரிந்தென்னை
உய்யஅருள் செய்யவல்லான் உளோம்போகீர் என்றானே."

"ஆற்றில் கரைத்த புளிஆக்கி டாமல்என் அன்பைஎல்லாம்
போற்றித் திருஉளம் பற்றும்ஐ யாபுரம் மூன்றெரித்துக்
கூற்றைப் பணிகொளும் தாள்உடை யாய்குன்ற வில்உடையாய்
ஏற்றுக் கொடிஉடை யாய்இறை வாகச்சி ஏகம்பனே."

நாட நல்இசை நல்கிய மூவர்தம்
பாடல் கேட்கும்ப டம்பக்க நாதரே
ஊடல் என்றொரு மாணிக் களித்தநீர்
ஈடில் என்னள வெங்கொளித் திட்டிரோ. (எ)

உலவு காற்றனல் தூயமண் விண்புனல்
பலவு மாகும்ப டம்பக்க நாதரே
நிலவு தண்மதி நீள்முடி வைத்தநீர்
குலவும் என்தன்கு றைதவிர்க் கீர்கொலோ. (அ)

அடியர் நெஞ்சத்த ருட்பெருஞ் சோதிஓர்
படிவ மாகும்ப டம்பக்க நாதரே
நெடிய மாலுக்கு நேமி அளித்தநீர்
மிடிய னேன்அருள் மேவ விரும்பிரோ. (கூ)

மதிகொள் அன்பர்ம னமெனும் திவ்வியப்
பதிகொள் செல்வப்ப டம்பக்க நாதரே
விதிகொள் துன்பத்தை வீட்டி அளித்தநீர்
துதிகொள் வீர்என்து யரைத்து ரத்துமே. (க0)

திருச்சிற்றம்பலம்

— o —

## 20. எழுத்தறியும் பெருமான் மாலை[42]

திரு ஒற்றியூர்

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்காள் ஆக்காதே
நிந்தைஉறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே.[43] (க)

42. இப் பதிக ஏடுகளின் எண்கள் எஉ, எரு, எச. இவற்றின் முதற்கண் முறையே "உ. ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் "உ" என்றும் அடிகளார் எண்ணி எழுதி யிருக்கிறார்கள்.

மத்தனைவன் நெஞ்சகனை வஞ்சகனை வன்பிணிகொள்
பித்தனைவீண் நாள்போக்கும் பேயேனை நாயேனை
முத்தனையாய் உன்தன் முளரித்தாட் காளாக்க
எத்தனைநாள் செல்லும் எழுத்தறியும் பெருமானே. (உ)

நன்னெறிசேர் அன்பர்தமை நாடிடவும் நின்புகழின்
சென்னெறியைச் சேர்ந்திடவும் செய்தாய் எனக்குனக்கு
முன்அறியேன் பின்அறியேன் மூடனேன் கைம்மாறிங்
கென்அறிவேன் ஐயா எழுத்தறியும் பெருமானே. (ங)

மைப்படியும் கண்ணார் மயல்உழக்கச் செய்வாயோ
கைப்படிய உன்தன் கழல்கருதச் செய்வாயோ
இப்படிஎன் றப்படிஎன் றென்னறிவேன் உன்சித்தம்
எப்படியோ ஐயா எழுத்தறியும் பெருமானே. (ச)

நில்லா உடம்பை நிலைஎன்றே நேசிக்கும்
பொல்லாத நெஞ்சப் புலையனேன் இவ்வுலகில்
சொல்லா மனநோயால் சோர்வுற் றலையும்அல்லல்
எல்லாம் அறிவாய் எழுத்தறியும் பெருமானே. (ரு)

தீதறிவேன் நன்கறியேன் செய்யேன்வீண் நாள்போக்கும்
வாதறிவேன் வஞ்சகனேன் வல்வினையேன் வாய்மையிலேன்
சூதறிவேன் மால்அயனும் சொல்லரிய நின்பெருமை
யாதறிவேன் ஐயா எழுத்தறியும் பெருமானே. (சு)

மாறுத வன்பிணியால் மாழாந்து நெஞ்சயர்ந்தே
கூறுத துன்பக் கொடுங்கடற்குள் வீழ்ந்தடியேன்
ஆறு தரற்றி அழுகின்றேன் நின்செவியில்
ஏறுதோ ஐயா எழுத்தறியும் பெருமானே. (எ)

உண்ணுடும் வல்வினையால் ஓயாப் பிணிஉழந்து
புண்ணுக நெஞ்சம் புழுங்குகின்றேன் புண்ணியனே
கண்ணுளா உன்தன் கருணை எனக்களிக்க
எண்ணுயோ ஐயா எழுத்தறியும் பெருமானே. (அ)

---

43. இப் பதிகத்தில் நம் அடிகளார் தம் குறைகளைக் கூறியும், இறைவரிடத்துள்ள தமது பற்றுக்கோட்டினைச் சுட்டியும், தமக்கு இரங்கி அருளும்படி, முறையோ என்று கல்லும் கனிந்துருகும் வண்ணம் விண்ணப்பித்துக் கொள்ளுதல் காண்க.

புன்செய்கை மாறுப் புலையமட மங்கையர்தம்
வன்செய்கை யாலே மயங்குகின்ற வஞ்சகனேன்
கொன்செய்கை மாறாத கூற்றன் வருவானேல்
என்செய்வேன் ஐயா எழுத்தறியும் பெருமானே.[44] (௯)

சங்குடையான் தாமரையான் தாள்முடியும் காண்பரிதாம்
கொங்குடைய கொன்றைக் குளிர்சடையாய் கோதைஒரு
பங்குடையாய் ஏழைமுகம் பாராது தள்ளிவிட்டால்
எங்கடைவேன் ஐயா எழுத்தறியும் பெருமானே. (௧௦)

மன்றி னிடைநடஞ்செய் மாணிக்க மாமலையே
வென்றிமழுக் கையுடைய வித்தகனே என்றென்று
கன்றின் அயர்ந்தழும்என் கண்ணீர் துடைத்தருள
என்று வருவாய் எழுத்தறியும் பெருமானே.[45] (௧௧)

அன்னளவில் சோதி மணிபோல்வாய் மாதவத்தோர்
தென்னளவும் வேணிச் சிவமே எனஒருகால்
சொன்னளவில் சொன்னவர்தம் துன்பொழிப்பாய் என்பர்அது
என்னளவில் காணேன் எழுத்தறியும் பெருமானே. (௧௨)

மின்போல்வார் இச்சையினால் வெம்புகின்றேன் ஆனாலும்
தன்போல்வாய் என்ஈன்ற தாய்போல்வாய் சார்ந்துரையாப்
பொன்போல்வாய் நின்அருள்இப் போதடியேன் பெற்றேனேல்
என்போல்வார் இல்லை எழுத்தறியும் பெருமானே. (௧௩)

பூமாந்தும் வண்டெனநின் பொன்னருளைப் புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்துநின்றார் ஐயோநான்
காமாந்த காரம்எனும் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே.[46] (௧௪)

---

44. இப் பாவொடு பின்வரும் தாயுமானார் திருவார்த்தை போன்றவற்றைப் பார்க்க :

"இவ்வுடம்பு நீங்குமுன்னே எந்தாய்கேள் இன்அருளாம்
அவ்வுடம்புக் குள்ளே அவதரிக்கக் காண்பேனோ."

45. இப் பாவொடு பின்வரும் மணிவாசகம் போல்வன பார்க்க :

"மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி மலங்கெ டுத்தபெ ருந்துறை
விளங்கி னேன்வினைக் கேட னேன்இனி மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவ டிகள்இ ரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே."

பன்னரும்இப் பார்நடையில் பாடுழன்ற பாதகனேன்
துன்னியநின் பொன்னடியைச் சூழாதேன் ஆயிடினும்
புன்னிகரேன் குற்றம் பொறுக்கப் பொறுப்புனக்கே
என்னருமைத் தாய்நீ எழுத்தறியும் பெருமானே. (கரு)

வீட்டுக் கடங்கா விளையாட்டுப் பிள்ளைஎனத்
தேட்டுக் கடங்காத தீமனத்தால் ஆந்துயரம்
பாட்டுக் கடங்காநின் பத்தர் அடிப்புகழ்போல்
ஏட்டுக் கடங்கா தெழுத்தறியும் பெருமானே. (கசு)

பன்னு மனத்தால் பரிசிழந்த பாதகனேன்
துன்னுமல வெங்கதிரோன் சூழ்கின்ற சோடையினால்
நின்னருள்நீர் வேட்டு நிலைகலங்கி வாடுகின்றேன்
இன்னும்அறி யாயோ எழுத்தறியும் பெருமானே. (கஎ)

கல்லை நிகராம் கடைமனம்போம் கான்நெறியில்
புல்லை மதித் தையோபைம் பூஇழந்த பொய்யடியேன்
ஒல்லைபடு கின்ற ஒறுவே தனைதனக்கோர்
எல்லை அறியேன் எழுத்தறியும் பெருமானே. (கஅ)

பொன்னைமதித் தையாநின் பொன்னடியைப் போற்றாத
கன்னிகரும் நெஞ்சால் கலங்குகின்ற கைதவனேன்
இன்னல் உழக்கின்ற ஏழைகட்கும் ஏழைகண்டாய்
என்னை விடாதே எழுத்தறியும் பெருமானே. (கக)

மாசுவரே என்னும் மலக்கடலில் வீழ்ந்துலகோர்
ஆசுவரே என்ன அலைவேனை ஆளாயேல்
கூசுவரே கைகொட்டிக் கூடிச் சிரித்தடியார்
ஏசுவரே ஒற்றி எழுத்தறியும் பெருமானே.[47] (உ0)

---

46. இப் பாவொடு கீழ்க்கண்ட திருவாசகம் போல்வன கண்டுணர்க:
"அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை
ஆட்கொண் டிலைகொல்லோ
அடியா ரானார் எல்லா ரும்வந் துன்தாள் சேர்ந்தார்
செடிசேர் உடலம் இதுநீக்க மாட்டேன் எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக் காணு மாறு காணேனே."

ஊர்சொல்வேன் பேர்சொல்வேன் உத்தமனே நின்திருத்தாள்
சீர்சொல்வேன் என்தனைநீ சேர்க்கா தகற்றுவையேல்
நேர்சொல்வாய் உன்தனக்கு நீதியீ தல்லஎன்றே
யார்சொல்வார் ஐயா எழுத்தறியும் பெருமானே. (உக)

நீக்கம்இலா மெய்யடியர் நேசமிலாப் பொய்யடியேன்
ஊக்கம்இலா நெஞ்சத்தின் ஓட்டகலச் செய்வாயேல்
தூக்கம்இலா ஆனந்தத் தூக்கம்அன்றி மற்றும்இங்கோர்
ஏக்கம்இலேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. (உஉ)

போகின்ற வஞ்சகரைப் போக்கிஉன்தன் பொன்அடிக்காள்
ஆகின்ற மேலோர் அடிவழுத்தா நாயேற்குப்
பாகின் தனிச்சுவையிற் பாங்காகும் நின்அருளை
ஈகின்ற தென்றோ எழுத்தறியும் பெருமானே. (உங)

ஊழை[1]அகற்ற உளவறியாப் பொய்யன்இவன்
பீழைமனம் நம்மைப் பெறுதம் மனங்கொடிய
தாழைஎன எண்ணிஎன்னைத் தள்ளிவிட்டால் என்செய்வேன்
ஏழைநான் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. (உச)

மடுக்க முடியா மலஇருட்டில் சென்றுமனம்
கடுக்கமுடி யாப்புலனால் கட்டிச் சுமக்கவைத்த
தொடுக்க முடியாத துன்பச் சுமையைஇனி
எடுக்கமுடி யாதே எழுத்தறியும் பெருமானே. (உரு)

முள்ளளவு நெஞ்ச முழுப்புலைய மாதர்களாம்
கள்ளளவு நாயில் கடைப்பட்ட என்தனக்கு
உள்ளளவும் அன்பர்க் குதவும்உன்தாட் கன்பொருசிற்
றெள்ளளவும் உண்டோ எழுத்தறியும் பெருமானே. (உசா)

---

47. இப் பாவொடு கீழ்க்காணும் மணிவாசக மெய்ம் மொழி போல்வன வற்றை ஒத்துணர்க:

"சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும் ஈசற்கென்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ் சூண்பிச்சன்
ஊர்ச்சுடுகாட்(டு)
எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப் பிச்சன்என்(று) ஏசுவனே."

பண்ண முடியாப் பரிபவங்கொண் டிவ்வுலகில்
நண்ண முடியா நலங்கருதி வாடுகின்றேன்
உண்ணமுடி யாஅமுதாம் உன்னை அன்றி எவ்வெவர்க்கும்
எண்ணமுடி யாதே எழுத்தறியும் பெருமானே. (உஎ)

வெங்கொளித்தேள் போன்ற வினையால் வெதும்பிமனம்
அங்கொளிக்கா துன்னை அழைத்தழுது வாடுகின்றேன்
இங்கொளிக்கா நஞ்சமுண்ட என் அருமை அப்பாநீ
எங்கொளித்தாய் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. (உஅ)

பித்தனைக்கும் காமப் பெரும்பேய் மயக்குமயல்
வித்தனைத்தாம் ஆணவம்பொய் வீறும்அழுக் காறுசினம்
கொத்தனைத்தாம் வஞ்சம் கொலைமுதலாம் பாவங்கள்
இத்தனைக்கும் நான்காண் எழுத்தறியும் பெருமானே. (உகூ)

ஒல்லையே நஞ்சனைத்தும் உண்ட தயாநிதிநீ
அல்லையோ நின்றிங் கயர்வேன்முன் வந்தொருசொல்
சொல்ஐயோ ஒற்றியூர்த் தூயதிருக் கோயிலுள்நீ
இல்லையோ ஐயா எழுத்தறியும் பெருமானே. (௩0)

நினையுடையாய் நீஅன்றி நேடில்எங்கும் இல்லாதாய்
மனையுடையார் மக்கள்எனும் வாழ்க்கையிடைப் பட்டவமே
இனையுடையான் என்றிங் கெனையாள்வ துன்கடனே
எனை உடையாய் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. (௩க)

திருச்சிற்றம்பலம்

— o —

## 21. நெஞ்சொடு நேர்தல்[48]

**திரு ஒற்றியூர்**

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஒக்க நெஞ்சமே ஒற்றி யூர்ப்படம்
பக்க நாதனைப் பணிந்து வாழ்த்தினால்
மிக்க காமத்தின் வெம்மை யால்வரும்
துக்க மியாவையும் தூர ஓடுமே.[49] (க)

48. இப் பதிக மூட்டெண் எஅ. இதன் ஆரம்பத்தில் அடிகளார் "உ. ஒற்றி யூர்." என்று எழுதி யிருக்கிறார்கள்.

ஓடும் நெஞ்சமே ஒன்று கேட்டிநீ
நீடும் ஒற்றியூர் நிமலன் மூவர்கள்
பாடும் எம்படம் பக்க நாதன்தாள்
நாடு நாடிடில் நாடு நம்மதே. (உ)

நம்பு நெஞ்சமே நன்மை எய்துமால்
அம்பு யன்புகழ் அண்ணல் ஒற்றியூர்ப்
பம்பு சீர்ப்படம் பக்கன் ஒன்னலார்
தம்பு ரஞ்சுடும் தம்பி ரானையே. (௩)

தம்ப லம்பெறும் தைய லார்களால்
வெம்ப லந்தரும் வெய்ய நெஞ்சமே
அம்ப லத்தினில் அமுதை ஒற்றியூர்ச்
செம்ப லத்தைநீ சிந்தை செய்வையே. (௪)

செய்யும் வண்ணம்நீ தேறி நெஞ்சமே
உய்யும் வண்ணமாம் ஒற்றி யூர்க்குளே
மெய்யும் வண்ணமா ணிக்க வெற்பருள்
பெய்யும் வண்ணமே பெறுதல் வேண்டுமே. (௫)

வேண்டும் நெஞ்சமே மேவி ஒற்றியூர்
ஆண்டு நின்றருள் அரசின் பொற்பதம்
பூண்டு கொண்டுளே போற்றி நிற்பையேல்
யாண்டும் துன்பம்நீ அடைதல் இல்லையே. (௬)

இல்லை உண்டெனா எய்தி ஐயுறும்
கல்லை யொத்தஎன் கன்ம நெஞ்சமே
ஒல்லை ஒற்றியூர் உற்று வாழ்தியேல்
நல்லை நல்லைநீ நட்பின் மேலையே. (௭)

---

49. இப் பதிகத்தில், அடிகளார் இறைவனை வழிபடுவதால் காமம் முதலிய தீமைகள் அற்றுவிடும் என்றும், திருஅருள் ஊற்றெழும் கடல் ஒப்பக் கைகூடும் என்றும் நெஞ்சுக்கு அறிவுறுத்துதல் காண்க. இப்பதிகப் பாக்களோடு பின்வரும் திருக்குறள் போன்றவற்றை நினைப்பூட்டி உணர்க :

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்."

மேலை அந்தகன் வெய்ய தூதுவர்
ஓலை காட்டுமுன் ஒற்றி யூரில்வாழ்
பாலை சேர்படம் பக்க நாதர்தம்
காலை நாடிநற் கதியின் நிற்பையே. (அ)

நிற்ப தென்றுநீ நீல நெஞ்சமே
அற்ப மாதர்தம் அவலம் நீங்கியே
சிற்ப ரன்திருத் தில்லை அம்பலப்
பொற்பன் ஒற்றியில் புகுந்து போற்றியே. (கூ)

போற்றி ஒற்றியூர்ப் புண்ணி யன்திரு
நீற்றி னன்தனை நினைந்து நிற்பையேல்
தோற்ற ரும்பரஞ் சோதி நல்அருள்
ஊற்றெ ழும்கடல் ஒக்க நெஞ்சமே. (க0)

திருச்சிற்றம்பலம்

— o —

## 22. திருப்புகழ் விலாசம்[50]

திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தூங்க வெண்பொடி அணிந்துநின் கோயில்
தொழும்பு செய்துநின் துணைப்பதம் ஏத்திச்
செங்கண் மால்அயன் தேடியும் காணாச்
செல்வ நின்அருள் சேர்குவ தென்றோ
எங்கள் உள்ளுவந் தூறிய அமுதே
இன்ப மேஇமை யான்மகட் கரசே
திங்கள் தங்கிய சடையுடை மருந்தே
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே.[51] (க)

50. இப் பதிக ஏடுகளின் எண்கள் அக, அஉ. இவற்றின் முதற்கண் நம் பெருமானார் முறையே "ஃ. ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் குறித்திருக்கிறார்கள்.

கண்ண னோடயன் காண்பரும் சுடரே
கந்தன் என்னும்ஓர் கனிதரும் தருவே
எண்ண மேதகும் அன்பர்தம் துணையே
இலங்கும் திவ்விய எண்குணப் பொருப்பே
அண்ண லேதிரு ஆலங்காட் டுறையும்
அம்மை அப்பனே அடியனேன் தன்னைத்
திண்ண மேஅடித் தொழும்பனாய்ச் செய்வாய்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (௨)

விடங்க லந்தருள் மிடறுடை யவனே
வேதன் மால்புகழ் விடையுடை யவனே
கடங்க லந்தமா உரியுடை யவனே
கந்த னைத்தரும் கனிவுடை யவனே
இடங்க லந்தபெண் கூறுடை யவனே
எழில்கொள் சாமத்தின் இசையுடை யவனே
திடங்க லந்தகூர் மழுவுடை யவனே
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (௩)

கஞ்ச னோர்தலை நகத்தடர்த் தவனே
காமன் வெந்திடக் கண்விழித் தவனே
தஞ்ச மானவர்க் கருள்செயும் பரனே
சாமிக் கோர்திருத் தந்தையா னவனே
நஞ்சம் ஆர்மணி கண்டனே எவைக்கும்
நாத னேசிவ ஞானிகட் கரசே
செஞ்சொல் மாமறை ஏத்துறும் பதனே
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (௪)

---

51. இறைவனது அருளின் தன்மையை நினைவுகூர்ந்து, அவ் வருள் தமக்கு வந்தெய்தல் வேண்டும் என்று இரங்குதல் காண்க. இப் பதிகப் பாக்களொடு பின்வரும் திருத்தாண்டகம் போல்வனவற்றை உய்த் துணர்க:

" அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே."

ஏல வார்குழ லாள்இடத் தவனே
என்னை ஆண்டவ னோஎன தரசே
கோல மாகமால் உருக்கொண்டும் காணுக்
குரைக ழற்பதக் கோமளக் கொழுந்தே
ஞால மீதில்எம் போல்பவர் பிழையை
நாடி டாதருள் நற்குணக் குன்றே
சீல மேவிய தவத்தினர் போற்றத்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (ரு)

ஆறு வாண்முகத் தமுதெழும் கடலே
அயனும் மாலும்நின் றறிவரும் பொருளே
ஏறு மீதுவந் தேறும்எம் அரசே
எந்தை யேஎமை என்றுகொள் இறையே
வீறு கொன்றையம் சடையுடைக் கனியே
வேதம் நாறிய மென்மலர்ப் பதனே
தேறு நெஞ்சினர் நாள்தொறும் வாழ்த்தத்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (சு)

மாறு பூத்தஎன் நெஞ்சினைத் திருத்தி
மயக்கம் நீக்கிட வருகுவ தென்றோ
ஏறு பூத்தஎன் இன்னுயிர்க் குயிரே
யாவு மாகிநின் றிலங்கிய பொருளே
நீறு பூத்தொளி நிறைந்தவெண் நெருப்பே
நித்தி யானந்தர்க் குற்றநல் உறவே
சேறு பூத்தசெந் தாமரை முத்தம்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (எ)

மாலின் கண்மலர் மலர்திருப் பதனே
மயிலின் மேல்வரு மகவுடை யவனே
ஆலின் கீழ்அறம் அருள்புரிந் தவனே
அரனென் போர்களை அடிமைகொள் பவனே
காலில் கூற்றுதைத் தருள்செயும் சிவனே
கடவு ளேநெற்றிக் கண்ணுடை யவனே
சேலின் நீள்வயல் செறிந்தெழில் ஓங்கித்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (அ)

நாட்டும் முப்புரம் நகைத்தெரித் தவனே
நண்ணி அம்பலம் நடஞ்செயும் பதனே
வேட்டு வெண்தலைத் தார்புனைந் தவனே
வேடன் எச்சிலை விரும்பிஉண் டவனே
கோட்டு மேருவைக் கோட்டிய புயனே
குற்ற முங்குண மாக்குறிப் பவனே
தீட்டும் மெய்ப்புகழ்த் திசைபரந் தோங்கத்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (௯)

அம்ப லத்துள்நின் றாடவல் லானே
ஆன்இ வர்ந்துவந் தருள்புரி பவனே
சம்பு சங்கர சிவசிவ என்போர்
தங்கள் உள்ளகம் சார்ந்திருப் பவனே
தும்பை வன்னியம் சடைமுடி யவனே
தூய னேபரஞ் சோதியே எங்கள்
செம்பொ னேசெழும் பவளமா மலையே
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

## 23. திருச்சாதனத் தெய்வத் திறம்[52]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உடையாய்உன் அடியவர்க்கும் அவர்மேல் பூண்ட
ஒண்மணியாம் கண்மணிக்கும் ஓங்கு சைவ
அடையாளம் என்னஒளிர் வெண்ணீற் றுக்கும்
அன்பிலேன் அஞ்சாமல் அந்தோ அந்தோ
நடையாய உடல் முழுதும் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்பாவி நாவைச் சற்றும்
இடையாத கொடுந்தீயால் சுடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய்.[53] (௧)

52. இப் பதிகம் நம் அடிகளாரின் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூன்றும் சுவடியில் உள்ளவாறு இங்கு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இது குறித்து அடிக் குறிப்புக்கள் 2, 18 பார்க்க.

கண்ணுதலே நின் அடியார் தமையும் நோக்கேன்
கண்மணிமா லைக்கெனினும் கனிந்து நில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலம் தன்னைப்
பார்த்தேனும் அஞ்சுகிலேன் பயனி லாமே
நண்ணுதல்சேர் உடம்பெல்லாம் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்கொடிய நாவை அந்தோ
எண்ணுதல்சேர் கொடுந்தீயால் சுடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (உ)

வஞ்சமிலார் நெஞ்சகத்தே மருவும் முக்கண்
மாமணியே உனைநினையேன் வாளா நாளைக்
கஞ்சமலர் முகத்தியர்க்கும் வாதில் தோன்றும்
களிப்பினுக்கும் கழிக்கின்றேன் கடைய னேனை
நஞ்சமுணக் கொடுத்துமடித் திடினும் வாளால்
நசிப்புறவே துணித்திடினும் நலியத் தீயால்
எஞ்சலுறச் சுடினும்அன்றி அந்தோ இன்னும்
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (ங)

அருள்பழுக்கும் கற்பகமே அரசே முக்கண்
ஆரமுதே நினைப்புகழேன் அந்தோ வஞ்ச
மருள்பழுக்கும் நெஞ்சகத்தேன் வாளா நாளை
வாதமிட்டுக் கழிக்கின்றேன் மதியி லேனை
வெருள்பழுக்கும் கடுங்காட்டில் விடினும் ஆற்று
வெள்ளத்தில் அடித்தேக விடினும் பொல்லா
இருள்பழுக்கும் பிலஞ்சேர விடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (ச)

---

53. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானுர் இறைவனையும் அவனுடைய பழ அடியார்களையும் சிவசாதனங்களையும் போற்றி உய்யாத தம் கொடுமையான இழி நிலைக்கு ஆற்ருது என்பும் கரைந்துருகும் வண்ணம் வாய்விட்டலறி விம்மி முறையிட்டுக் கொள்ளுதல் காண்க. இவற்ருேடு பின்வரும் மணிவாசகம் போன்ற மெய்ம்மொழிகள் கண்டுணர்க :

"பாடிற்றி லேன்பணி யேன்மணி நீஒளித் தாய்க்குப்பச்சூன்
விடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவன் எவ்விடத் தான்எவர் கண்டனர்என்(று)
ஓடிற்றி லேன்கிடந்(து) உள்உரு கேன்நின்(று) உழைத்தனனே."

பெருங்கருணைக் கடலேஎன் குருவே முக்கண்
 பெருமானே நினைப்புகழேன் பேயேன் அந்தோ
கருங்கல்மனக் குரங்காட்டி வாளா நாளைக்
 கழிக்கின்றேன் பயன்அறியாக் கடைய னேனை
ஒருங்குருள உடல்பதைப்ப உறுங்குன் றேற்றி
 உருட்டுகினும் உயிர்நடுங்க உள்ளம் ஏங்க
இருங்கழுவில் ஏற்றுகினும் அன்றி இன்னும்
 என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (௫)

தொழுகின்றோர் உளத்தமர்ந்த சுடரே முக்கண்
 சுடர்க்கொழுந்தே நின்பதத்தைத் துதியேன் வாதில்
விழுகின்றேன் நல்லோர்கள் வெறுப்பப் பேசி
 வெறித்துழலும் நாயனையேன் விழல னேனை
உழுகின்ற நுகப்படைகொண் டுலையத் தள்ளி
 உழக்கினும்நெட் டுடல்நடுங்க உறுக்கி மேன்மேல்
எழுகின்ற கடலிடைவீழ்த் திடினும் அன்றி
 என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (௬)

விருப்பாகும் மதிச்சடையாய் விடையாய் என்றே
 மெய்யன்போ டுனைத்துதியேன் விரைந்து வஞ்சக்
கருப்பாயும் விலங்கெனவே வளர்ந்தே நாளைக்
 கழிக்கின்றேன் கருநெஞ்சக் கள்வ னேனைப்
பொருப்பாய யானையின்கால் இடினும் பொல்லாப்
 புழுத்தலையில் சோரிபுறம் பொழிய நீண்ட
இருப்பாணி ஏற்றுகினும் அன்றி இன்னும்
 என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (௭)

அக்கநுதல் பிறைச்சடையாய் நின்தாள் ஏத்தேன்
 ஆண்பனைபோல் மிகநீண்டேன் அறிவொன் றில்லேன்
மிக்கஒதி போல்பருத்தேன் கருங்க டாப்போல்
 வீண்கருமத் துழல்கின்றேன் விழல னேனைச்
செக்கிடைவைத் துடல்குழம்பச் சிதைய அந்தோ
 திருப்பிடினும் இருப்பறைமுட் சேரச் சேர்த்து
எக்கரிடை உருட்டுகினும் அன்றி இன்னும்
 என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (௮)

அன்புடன்நின் பதம்புகழாப் பாவி நாவை
　　அறத்துணியேன் நின்அழகை அமர்ந்து காணாத்
துன்புறுகண் இரண்டினையும் சூன்றேன் நின்னைத்
　　தொழாக்கையை வாளதனால் துண்ட மாக்கேன்
வன்பறநின் தனைவணங்காத் தலையை அந்தோ
　　மடித்திலேன் ஓதியேபோல் வளர்ந்தேன் என்னை
இன்பறுவல் எரியிடைவீழ்த் திடினும் அன்றி
　　என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (௯)

தேவேநின் அடிநினையா வஞ்ச நெஞ்சைத்
　　தீமூட்டிச் சிதைக்கறியேன் செதுக்கு கில்லேன்
கோவேநின் அடியர்தமைக் கூடாப் பொய்மைக்
　　குடிகொண்டேன் புலைகொண்ட கொடியேன் அந்தோ
நாவேற நினைத்துதியேன் நலமொன் றில்லேன்
　　நாய்க்கடைக்கும் கடைப்பட்டேன் நண்ணு கின்றோர்க்
கீவேதும் அறியேன்இங் கென்னை யந்தோ
　　என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். (௧௦)

திருச்சிற்றம்பலம்

— o —

## 24. தியாக வண்ணப் பதிகம்[54]

### திரு ஒற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

காரார் குழலாள் உமையோ டயில்வேல்
　　காளையொ டுந்தான் அமர்கின்ற
ஏரார் கோலம் கண்டு களிப்பான்
　　எண்ணும் எமக்கொன் றருளானேல்

54. இப் பதிக ஏடுகளின் எண்கள் அ௬, அ௭. இவற்றின் தொடக்கத்தில் அடிகளார் முறையே "உ ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் குறித் திருக்கிறார்கள்.

(இதன் பாஇனம் 'கலிவிருத்துறை' என்பது தொ. வே. குறிப்பு.)

நீரார் சடைமேல் பிறையொன் றுடையான்
நிதிக்கோன் தோழன் எனநின்றான்
பேரார் ஒற்றி யூரான் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே.[55] (க)

தண்ணார் நீபத் தாரா னொடும்எம்
தாயோ டும்தான் அமர்கின்ற
கண்ணார் கோலம் கண்டு களிப்பான்
கருதும் எமக்கொன் றருளானேல்
பண்ணார் இன்சொல் பதிகம் கொண்டு
படிக்கா சளித்த பரமன்ஊர்
பெண்ணார் பாகன் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (உ)

பத்தர்க் கருளும் பாவையொ டும்வேல்
பாலனொ டும்தான் அமர்கின்ற
நித்தக் கோலம் கண்டு களிப்பான்
நினைக்கும் எமக்கொன் றருளானேல்
சித்தப் பெருமான் தில்லைப் பெருமான்
தெய்வப் பெருமான் சிவபெருமான்
பித்தப் பெருமான் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (ந)

மன்னும் கதிர்வேல் மகனா ரோடும்
மலையா ளொடும்தான் வதிகின்ற
துன்னும் கோலம் கண்டு களிப்பான்
துதிக்கும் எமக்கொன் றருளானேல்
மின்னும் சூலப் படையான் விடையான்
வெள்ளி மலையொன் றதுஉடையான்
பின்னும் சடையான் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (ச)

---

55. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானார் இறைவனது அருட்கோலம் காணும் பேராசையுடைய தமக்கு இறைவன் அருளாதொழியான் என்று உறுதி கொண்டு உரைத்தல் காண்க. இவற்றோடு பின்வரும் திருஞானசம்பந்தப் பெருமானார்தம் தேவாரம் போன்ற மெய்ம் மொழிகள் கண்டுணர்க:

அணிவேல் படைகொள் மகனோ டொடும்எம்
அம்மை யொடுந்தான் அமர்கின்ற
தணியாக் கோலம் கண்டு களிக்கத்
தகையா தெமக்கொன் றருளானேல்
மணிசேர் கண்டன் எண்தோள் உடையான்
வடபால் கனக மலைவில்லான்
பிணிபோக் கிடுவான் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (ரு)

சூத மெறிவேல் தோன்ற லொடும்தன்
துணைவி யொடும்தான் அமர்கின்ற
காதல் கோலம் கண்டு களிப்பான்
கருதும் எமக்கொன் றருளானேல்
ஈதல் வல்லான் எல்லாம் உடையான்
இமையோர் அயன்மாற் கிறையானான்
பேதம் இல்லான் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (சு)

வெற்றிப் படைவேல் பிள்ளை யோடும்
வெற்பா ளொடும்தான் அமர்கின்ற
மற்றிக் கோலம் கண்டு களிப்பான்
வருந்தும் எமக்கொன் றருளானேல்
கற்றைச் சடையான் கண்மூன் றுடையான்
கரியோன் அயனும் காணாதான்
பெற்றத் திவர்வான் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (எ)

வரமன் றலினார் குழலா ளொடும்வேல்
மகனோ டொடும்தான் அமர்கின்ற
திரமன் றவுநின் றெழில்கண் டிடுவான்
சிறக்க எமக்கொன் றருளானேல்

---

55. (தொடர்ச்சி)

" இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா(று) ஈவதொன்(று) எமக்(கு) இல்லையேல்
அதுவோ உன(து)இன் அருள்ஆவடுதுறை அரனே."

பரமன் தனிமால் விடைஒன் றுடையான்
பணியே பணியாப் பரிவுற்றான்
பிரமன் தலையான் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (அ)

அறங்கொள் உமையோ டயிலேந் தியஎம்
ஐய னொடுந்தான் அமர்கின்ற
திறங்கொள் கோலம் கண்டுக ளிப்பான்
சிறக்க எமக்கொன் றருளானேல்
மறங்கொள் எயில்மூன் றெரித்தான் கனக
மலையான் அடியார் மயல்தீர்ப்பான்
பிறங்கும் சடையான் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (கூ)

தேசார் அயில்வேல் மகனா ரொடும்தன்
தேவி யொடும்தான் அமர்கோலம்
ஈசா எனநின் றேத்திக் காண
எண்ணும் எமக்கொன் றருளானேல்
காசார் அரவக் கச்சேர் இடையான்
கண்ணார் நுதலான் கனிவுற்றுப்
பேசார்க் கருளான் ஒற்றித் தியாகப்
பெருமான் பிச்சைப் பெருமானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 25. ஆடல்முதப் பத்து[56]

திரு ஒற்றியூர் - திருத் தில்லை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சிந்தை நொந்துநொந் தயர்கின்றேன் சிவனே
செய்வ தோர்ந்திலேன் தீக்குண முடையேன்
வந்து நின்னடிக் காட்செய என்றால்
வஞ்ச நெஞ்சம்என் வசம்நின்ற திலையே

56. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௪௨, ௱௪௫. இவற்றின் தொடக்கத்தில் முறையே "உ. சிவமயம். தில்லை - ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் அடிகளார் எண்ணி எழுதியிருக்கிறார்கள்.

எந்தை நின்னருள் உண்டெனில் உய்வேன்
இல்லை என்னில்நான் இல்லைஉய்ந் திடவே
அந்தி வான்நிறத் தொற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே.[57] (௧)

மாய நெஞ்சமோ நின்னடி வழுத்தா
வண்ண மென்தனை வலிக்கின் றதனால்
தீயன் ஆயினேன் என்செய்வேன் சிவனே
திருவ ருட்குநான் சேயனும் ஆனேன்
காய வாழ்க்கையில் காமமுண் டுள்ளம்
கலங்கு கின்றனன் களைகண்மற் றறியேன்
ஆய ஒற்றியூர் அண்ணலே தில்லை
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. (௨)

உன்னை உன்னிநெக் குருகிநின் றேத்த
உள்ளம் என்வசம் உற்றதின் றேனும்
என்னை ஆளுதல் உன்கடன் அன்றேல்
இரக்கம் என்பதுன் னிடத்திலை அன்றோ
முன்னை வல்வினை முடித்திடில் சிவனே
மூட னேனுக்கு முன்னிற்ப தெவனோ
அன்னை அப்பனே ஒற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. (௩)

என்ன நான்சொலி நிறுத்தினும் நில்லா
தேகு கின்றதிவ் ஏழையேன் மனந்தான்
உன்ன தின்னருள் ஒருசிறி துண்டேல்
ஒடுக்கி நிற்பனால் உண்மைமற் றின்றேல்
இன்ன தென்றறி யாமல இருளில்
இடர்கொள் வேன்அன்றி என்செய்வேன் சிவனே
அன்ன துன்செயல் ஒற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. (௪)

---

57. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானார் இறைவனது அருள் நலம் இன்றித் தம் மனம் தீய வழியினின்று எத்துணையும் திரும்பி நல்வழிப் படாது என்றுரைத்து இறைவனிடம் அருள் இரத்தல் கண்டுணர்க. இப் பாக்களோடு பின்வரும் தாயுமானாரின் முறையீடு போல்வன வற்றை ஒத்துணர்க:

"ஓயாஉள் அன்பாய் உருகிவாய் விட்டரற்றிச்
சேயாகி எந்தைநின்னைச் சேரவைத்தால் ஆகாதோ."

பாவி நெஞ்சம்என் பால்இரா தோடிப்
பாவை யார்மயல் படிந்துழைப் பதனால்
சேவி யாதஎன் பிழைபொறுத் தாளும்
செய்கை நின்னதே செப்பலென் சிவனே
காவி நேர்விழி மலைமகள் காணக்
கடலின் நஞ்சுண்டு கண்ணன்ஆ தியர்கள்
ஆவி ஈந்தருள் ஒற்றிஎம் இறையே
அம்ப லத்தினின் றுடல்செய் அமுதே. (ரு)

மூட நெஞ்சம்என் மொழிவழி நில்லா
மோக வாரியின் முழுகுகின் றதுகாண்
தேட என்வசம் அன்றது சிவனே
திருவ ருட்கடல் திவலைஒன் றுறுமேல்
நாட நாடிய நலம்பெறும் அதனால்
நானும் உய்குவேன் நல்கிடல் வேண்டும்
ஆடல் ஒற்றியாய் பெரும்பற்றப் புலியூர்
அம்ப லத்தினின் றுடல்செய் அமுதே. (சு)

கலங்கு கின்றஎன் கண்உன தருள்ஓர்
கடுகின் எல்லைதான் கலந்திடு மானால்
விலங்கு கின்றஎன் நெஞ்சம்நின் றிடுமால்
வேறு நான்பெறும் வேட்கையும் இன்றால்
மலங்கு கின்றதை மாற்றுவன் உனது
மலர்ப்பொன் தாளலால் மற்றிலன் சிவனே
அலங்கு கின்றசீர் ஒற்றியூர் இறையே
அம்ப லத்தினின் றுடல்செய் அமுதே. (எ)

மறைவ தென்னையும் மறைப்பது பொல்லா
வஞ்ச நெஞ்சமென் வசப்படல் இலைகாண்
இறைவ நின்னருட் கென்செய்வோம் எனவே
எண்ணி எண்ணிநான் ஏங்குகின் றனனால்
உறைவ துன்னடி மலர்அன் றி மற்றொன்
றுணர்ந்தி லேன்இஃ துண்மைநீ அறிதி
அறைவ தென்னநான் ஒற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றுடல்செய் அமுதே. (அ)

ஒருக ணப்பொழு தேனுநின் அடியை
உள்கி டாதுளம் ஓடுகின் றதனால்
திருக ணப்பெறும் தீயனேன் செய்யும்
திறம்அ றிந்திலேன் செப்பலென் சிவனே
வருக ணத்துடல் நிற்குமோ விழுமோ
மாயு மோஎன மயங்குவேன் தன்னை
அருக ணைத்தருள் ஒற்றியூர் இறையே
அம்ப லத்தினின் றுடல்செய் அமுதே. (௯)

யாது நின்கருத் தறிந்திலேன் மனமோ
என்வ சப்படா திருத்தலை உரைத்தேன்
தீது செய்யினும் பொறுத்தெனைச் சிவனே
தீய வல்வினைச் சேர்ந்திடா வண்ணம்
பாது காப்பதுன் பரம்இன்றேல் பலவாய்ப்
பகர்தல் என்னகாண் பழிவரும் உனக்கே
ஆது காண்டிஎம் ஒற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றுடல்செய் அமுதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

— o —

## 26. திருஅடிச் சரண்புகல்[58]

### திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஓடல் எங்கணும் நமக்கென்ன குறைகாண்
உற்ற நற்றுணை ஒன்றும்இல் லார்போல்
வாடல் நெஞ்சமே வருதிஎன் னுடனே
மகிழ்ந்து நாம்இரு வரும்சென்று மகிழ்வாய்க்
கூடல் நேர்திரு ஒற்றியூர் அகத்துக்
கோயில் மேவிநம் குடிமுழு தாளத்
தாள்த லந்தரும் நமதருள் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே.[59] (௧)

58. இப் பதிக ஏடுகளின் எண்கள் அ௩, அ௬. இவற்றை முறையே "உ. சிவாயநம. ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் சிந்தித்து எழுதித் தொடங்கியிருக்கிறார்கள் அடிகளார்.

ஏங்கி நோகின்ற தெற்றினுக் கோநீ
எண்ணி வேண்டிய தியாவையும் உனக்கு
வாங்கி ஈகுவன் ஒன்றுக்கும் அஞ்சேல்
மகிழ்ந்து நெஞ்சமே வருதிஎன் னுடனே
ஓங்கி வாழ்ஒற்றி யூர்இடை அரவும்
ஒளிகொள் திங்களும் கங்கையும் சடைமேல்
தாங்கி வாழும்நம் தாணுவாம் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (உ)

கயவர் இல்லிடைக் கலங்கலை நெஞ்சே
காம ஐம்புலக் கள்வரை வீட்டி
வயம்அ ளிக்குவன் காண்டிஎன் மொழியை
மறுத்தி டேல்இன்று வருதிஎன் னுடனே
உயவ ளிக்குநல் ஒற்றியூர் அமர்ந்தங்
குற்று வாழ்த்திநின் றுன்னுகின் றவர்க்குத்
தயவ ளிக்குநம் தனிமுதல் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (ங)

சண்ட வெம்பவப் பிணியினால் தந்தை
தாயி லார்எனத் தயங்குகின் றாயே
மண்ட லத்துழல் நெஞ்சமே சுகமா
வாழ வேண்டிடில் வருதிஎன் னுடனே
ஒண்த லத்திரு ஒற்றியூர் இடத்தும்
உன்னு கின்றவர் உள்ளகம் எனும்ஓர்
தண்த லத்தினும் சார்ந்தநம் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (ச)

---

59. இப் பதிகத்தில் நம் பெருமானார் இறைவன் திருத்தாள் நீழலில் வதிந்து வாழும் பேறு பெறற்கு இழிதன்மையை உடைய நெஞ்சினை அழைக்கும் பேரழகு கண்டு இன்புறுக. இப்பதிகப் பாக்களோடு கீழ்க்கண்ட மணிவாசகத் தெள்ளமுதம் போல்வனவற்றை ஒத்துணர்க:

"அடியார் ஆனீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டைக்
கடிசேர் அடியே வந்தடைந்து கடைக்கொண்(டு) இருமின் திருக்குறிப்பைச்
செடிசேர் உடலைச் சிதையீக்கிச் சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன் பூவார் கழற்கே புகவிடுமே,"

விடங்கொள் கண்ணினார் அடிவிழுந் தையோ
வெட்கி னாய்இந்த விதிஉனக் கேனோ
மடங்கொள் நெஞ்சமே நினக்கின்று நல்ல
வாழ்வு வந்தது வருதிஎன் னுடனே
இடங்கொள் பாரிடை நமக்கினி ஒப்பா
ரியார்கண் டாய்ஒன்றும் எண்ணலை கமலத்
தடங்கொள் ஒற்றியூர் அமர்ந்தநம் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (௫)

பொருந்தி ஈனருள் புகுந்துவீண் காலம்
போக்கி நின்றனை போனது போக
வருந்தி இன்னும்இங் குழன்றிடேல் நெஞ்சே
வாழ்க வாழ்கநீ வருதிஎன் னுடனே
திருந்தி நின்றநம் மூவர்தம் பதிகச்
செய்ய தீந்தமிழ்த் தேறல்உண் டருளைத்
தருந்தென் ஒற்றியூர் வாழுநம் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (௬)

நாட்டம் உற்றனை எழுமையும் பிரியா
நல்ல நெஞ்சமே நங்கையர் மயலால்
வாட்டம் உற்றிவண் மயங்கினை ஐயோ
வாழ வேண்டிடில் வருதிஎன் னுடனே
கோட்டம் அற்றிரு மலர்க்கரம் கூப்பிக்
கும்பி டும்பெரும் குணத்தவர் தமக்குத்
தாள்த லந்தரும் ஒற்றியூர்ச் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (௭)

உடுக்க வேண்டிமுன் உடைஇழந் தார்போல்
உள்ள வாகும்என் றுன்னிடா தின்பம்
மடுக்க வேண்டிமுன் வாழ்விழந் தாயே
வாழ வேண்டிடில் வருதிஎன் னுடனே
அடுக்க வேண்டிநின் றழுதழு தேத்தி
அருந்த வத்தினர் அழிவுறுப் பவத்தைத்
தடுக்க வேண்டிநல் ஒற்றியூர்ச் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (௮)

மோக மாதியால் வெல்லும்ஐம் புலனும்
மூட வேடரை முதலற எறிந்து
வாகை ஈகுவன் வருதியென் னுடனே
வஞ்ச வாழ்க்கையின் மயங்கும்என் நெஞ்சே
போக நீக்கிநல் புண்ணியம் புரிந்து
போற்றி நாள்தொறும் புகழ்ந்திடும் அவர்க்குச்
சாகை நீத்தருள் ஒற்றியூர்ச் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (௯)

பசிஎ டுக்குமுன் அமுதுசே கரிப்பார்
பாரி னோர்கள்அப் பண்பறிந் திலையோ
வசிஎ டுக்குமுன் பிறப்பதை மாற்ற
மதியில் நெஞ்சமே வருதிஎன் னுடனே
நிசிஎ டுக்கும்நல் சங்கவை ஈன்ற
நித்தி லக்குவை நெறிப்பட ஓங்கிச்
சசிஎ டுக்குநல் ஒற்றியூர்ச் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

o

## 27. சிவானந்தப் பத்து[60]

திரு ஒற்றியூர் - திருத் தில்லை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இச்சை உண்டெனக் குன்திரு மலர்த்தாள்
எய்தும் வண்ணம்இங் கென்செய வல்லேன்
கொச்சை நெஞ்சம்என் குறிப்பில்நில் லாது
குதிப்பில் நின்றது மதிப்பின்இவ் வுலகில்

60. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௫௬அ, ௫௬௯. இவற்றின் தொடக்கத்தில் முறையே "உ. சிவமயம். ஒற்றியூர்," என்றும், "உ" என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

பிச்சை உண்டெனிற் பிச்சரிற் சீறும்
பேய ருண்மனை நாயென உழைத்தேன்
செச்சை மேனிஎம் திருஒற்றி அரசே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே.[61] (க)

ஐய நின்னுடை அன்பர்கள் எல்லாம்
அழிவில் இன்பமுற் றருகிருக் கின்றார்
வெய்ய நெஞ்சகப் பாவியேன் கொடிய
வீண னேன்இங்கு வீழ்கதிக் கிடமாய்
வைய வாழ்க்கையின் மயங்குகின் றனன்மேல்
வருவ தோர்ந்திலன் வாழ்வடை வேனோ
செய்ய வண்ணனே ஒற்றியம் பொருளே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (உ)

மடிகொள் நெஞ்சினால் வள்ளல்உன் மலர்த்தாள்
மறந்து வஞ்சக வாழ்க்கையை மதித்தேன்
துடிகொள் நேர்இடை மடவியர்க் குருகிச்
சுழல்கின் றேன்அருள் சுகம்பெறு வேனோ
வடிகொள் வேல்கரத் தண்ணலை ஈன்ற
வள்ள லேஎன வாழ்த்துகின் றவர்தம்
செடிகள் நீக்கிய ஒற்றியம் பரனே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (ங)

இருக்க வாவுற உலகெலாம் உய்ய
எடுத்த சேவடிக் கெள்ளள வேனும்
உருக்கம் ஒன்றிலேன் ஓதியினில் பெரியேன்
ஒண்மை எய்துதல் வெண்மைமற் றன்றே

---

61. இப் பதிகப் பாக்களில் நம் அடிகளார் கெடுவழி நடக்கும் மனத்தைத் திருத்தி நல்வழிப்படுத்திச் சிவாநந்தத்தில் ஈடுபடுத்தல் இறைவனது கடமையாகும் என்று இரங்குதல் கண்டுணர்க. இப் பாக்களோடு பின்வரும் மணிவாசகம் போன்ற அமுதச் சொற்களை ஒத்துணர்க:

> "மறுத்தனன் யான்உன் அருள்அறி யாமையில் என்மணியே
> வெறுத்(து)எனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்தொகுதி
> ஒறுத்(து)எனை ஆண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
> பொறுப்பர்அன் றேபெரி யோர்சிறு நாய்கள்தம்
> பொய்யினையே."

தருக்க நின்றஎன் தன்மையை நினைக்கில்
தமிய னேனுக்கே தலைநடுக் குறுங்காண்
திருக்கண் மூன்றுடை ஒற்றிஎம் பொருளே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (ச)

எண்பெ ருவினைக் கேதுசெய் உடலை
எடுத்த நாள்முதல் இந்தநாள் வரைக்கும்
நண்பு றுப்பவம் இயற்றினன் அல்லால்
நன்மை என்பதோர் நாளினும் அறியேன்
வண்பெ ருவெனக் குன்திரு அருளாம்
வாழ்வு நேர்ந்திடும் வகைஎந்த வகையோ
திண்பெ ருநிற்க அருள்ஒற்றி அமுதே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (ரு)

பேதை நெஞ்சினேன் செய்பிழை எல்லாம்
பேசி னுல்பெரும் பிணக்கினுக் கிடமாம்
தாதை நீஅவை எண்ணலை எளியேன்
தனக்கு நின்திருத் தண்அளி புரிவாய்
கோதை நீக்கிய முனிவர்கள் காணக்
கூத்து கந்தருள் குணப்பெருங் குன்றே
தீதை நீக்கிய ஒற்றிஎம் பெருமான்
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (சு)

வஞ்ச நெஞ்சர்தம் சேர்க்கையைத் துறந்து
வள்ளல் உன்திரு மலரடி ஏத்தி
விஞ்சு நெஞ்சர்தம் அடித்துணைக் கேவல்
விரும்பி நிற்கும்அப் பெரும்பயன் பெறவே
தஞ்சம் என்றருள் நின்திருக் கோயில்
சார்ந்து நின்றனன் தருதல்மற் றின்றே
செஞ்சொல் ஓங்கிய ஒற்றிஎம் பெருமான்
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (எ)

புல்ல னேன்புவி நடையிடை அலையும்
புலைய நெஞ்சினுல் பொருந்திடும் கொடிய
அல்லல் என்பதற் கெல்லைஒன் றறியேன்
அருந்து கின்றனன் விருந்தினன் ஆகி

ஒல்லை உன்திருக் கோயில்முன் அடுத்தேன்
உத்த மாஉன்தன் உள்ளம்இங் கறியேன்
செல்லல் நீக்கிய ஒற்றியம் பொருளே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (அ)

எளிய னேன்பிழை இயற்றிய எல்லாம்
எண்ணி னுட்படா வேனும்மற் றவையை
அளிய நல்லருள் ஈந்திடும் பொருட்டால்
ஆய்தல் நன்றல ஆதலின் ஈண்டே
களிய நெஞ்சமாம் கருங்கலைக் கரைத்துக்
கருணை ஈகுதல் கடன்உனக் கையா
தெளிய ஓங்கிய ஒற்றிஎன் அமுதே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (கூ)

வெறிபி டிக்கினும் மகன்தனைப் பெற்றோர்
விடுத்தி டார்அந்த வெறியது தீரும்
நெறிபி டித்துநின் றுய்வரென் அரசே
நீயும் அப்படி நீசனேன் தனக்குப்
பொறிபி டித்தநல் போதகம் அருளிப்
புன்மை யாவையும் போக்கிடல் வேண்டும்
செறிபி டித்தவான் பொழில்ஒற்றி அமுதே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. (க0)

திருச்சிற்றம்பலம்

## 28. சந்நிதி முறையீடு[62]

திரு ஒற்றியூர்

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஒற்றி மேவிய உத்தம னேமணித்
தெற்றி மேவிய தில்லைஅப் பாவிழி
நெற்றி மேவிய நின்மல னேஉனைப்
பற்றி மேவிய நெஞ்சம்உன் பாலதே.[63] (க)

62. இப் பதிக ஏட்டெண் ௱ருக. இதை அடிகளார் "உ" என்றெழுதித் தொடங்கியிருக்கிறார்கள்.

பாலின் நீற்றுப் பரஞ்சுட ரேமலர்க்
காலின் ஈற்றுக் கதிபெற ஏழையேன்
மாலின் ஈற்று மயக்கறல் என்றுகல்
ஆலின் ஈற்றுப் பொருள்அருள் ஆதியே. (உ)

ஆதி யேதில்லை அம்பலத் தாடல்செய்
சோதி யேதிருத் தோணிபு ரத்தனே
ஓதி யேதரும் ஒற்றிஅப் பாஇது
நீதி யேஎனை நீமரு வாததே. (௩)

வாதம் ஓதிய வஞ்சரைக் காணில்ஓர்
காதம் ஓடும் கடியனை ஆள்வது
நீத மோஅன்றி நேரும்அ நீதமோ
ஓதம் ஓதொலி ஒற்றித்த லத்தனே.[64] (௪)

தலத்த னேதில்லைச் சங்கர னேதலைக்
கலத்த னேநெற்றிக் கண்ணுடை யாளனே
நலத்த னேஒற்றி நாயக னேஇந்த
மலத்த னேனையும் வாழ்வித்தல் மாண்பதே. (ரு)

மாண்கொள் அம்பல மாணிக்க மேவிடம்
ஊண்கொள் கண்டத்தெம் ஒற்றிஅப் பாஉன்தன்
ஏண்கொள் சேவடி இன்புகழ் ஏத்திடாக்
கோண்கொள் நெஞ்சக் கொடியனும் உய்வனே. (சு)

உய்யும் வண்ணம்இங் குன்அருள் எய்தநான்
செய்யும் வண்ணம்தெ ரிந்திலன் செல்வமே
பெய்யும் வண்ணப்பெ ருமுகி லேபுரம்
எய்யும் வண்ணம்எ ரித்தருள் எந்தையே. (எ)

---

63. இப் பதிகத்தில் நம் பெருமானார் ஒற்றியில் இறைவன் தமக்கு அருளிச் செய்து அன்புண்டாக்கியதை வியந்து மொழிதல் காண்க.

64. இப் பாவொடு பின்வரும் தேவார மெய்ம்மொழிபோல்வன பார்க்க:

"சாத்தி ரம்பல பேசும்ச ழக்கர்காள்
கோத்தி ரமும்கு லமும்கொண்(டு) என்செய்வீர்
பாத்தி ரம்சிவம் என்றுப ணிதிரேல்
மாத்தி ரைக்குள்அ ருளும்மாற் பேறரே."

எந்தை யேதில்லை எம்இறை யேகுகன்
தந்தை யேஒற்றித் தண்அமு தேஎன்தன்
முந்தை ஏழ்பவ மூடம யக்கறச்
சிந்தை ஏதம்தி ருந்தஅ ருள்வையே. (அ)

திருந்த நான்மறைத் தில்லைச்சிற் றம்பலத்
திருந்த ஞானஇ யல்ஒளி யேஒற்றிப்
பொருந்த நின்றருள் புண்ணிய மேஇங்கு
வருந்த என்தனை வைத்தத ழகதோ. (கூ)

வைத்த நின்அருள் வாழிய வாழிய
மெய்த்த தில்லையின் மேவிய இன்பமே
உய்த்த நல்அருள் ஒற்றிஅப் பாஎனைப்
பொய்த்த சிந்தைவிட் டுன்தனைப் போற்றவே. (கO)

போற்ற வைத்தனை புண்ணிய னேஎனைச்
சாற்ற வைத்தனை நின்புகழ்த் தன்மையைத்
தேற்ற வைத்தனை நெஞ்சைத்தெ ளிந்தன்பை
ஊற்ற வைத்தனை உன்ஒற்றி மேவியே.[65] (கக)

திருச்சிற்றம்பலம்

— o —

## 29. தவத்திறம் போற்றல்[66]

### திரு ஒற்றியூர்

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வில்வத் தொடும்பொன் கொன்றைஅணி வேணிப் பெருமான் ஒற்றிநகர்
செல்வப் பெருமான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருஅழகைக்
கல்வைப் புடைய மனம்களிக்கக் கண்கள் களிக்கக் கண்டுநின்றேன்
இல்வைப் புடையேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ.[67]

---

65. இப் பாவொடு கீழ்க்கண்ட மணிவாசகத் தேனையும் மாந்தி இன்புறுக:
"மாய வாழ்க்கையை மெய்என்(று) எண்ணிம நித்தி டாவகை நல்கினான்
வேய தோள்உமை பங்கன் எங்கள்தி ருப்பெ ருந்துறை மேவினான்
காயத் துள்அமு(து) ஊற ஊறநீ கண்டு கொள்என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவ டிக்கண்நம் சென்னி மன்னித்தி கழுமே."

கூடும் படிமுன் திருமாலும் கோல மாகிப் புவிஇடந்து
தேடும் திருத்தாள் சிவபெருமான் தியாகப் பெருமான் திருப்பவனி
நாடும் புகழ்சேர் ஒற்றிநகர் நாடிப் புகுந்து கண்டேனல்
ஈடும் அகன்றேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனே. (உ)

ஆர்க்கும் கடற்கண் அன்றெழுந்த ஆல காலம் அத்தனையும்
சேர்க்கும் களத்தான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருநடத்தைக்
கார்க்கண் பொழில்சூழ் ஒற்றியில்போய்க் கண்டேன் பிறவி கண்டிலனே
யார்க்கென் றுரைப்பேன் அம்மாநான்என்ன தவந்தான் செய்தேனே.

உள்ளும் புறமும் நிறைந்தடியார் உள்ளம் மதுரித் தூறுகின்ற
தெள்ளும் அமுதாம் சிவபெருமான்தியாகப் பெருமான் திருமுகத்தைக்
கள்ளம் தவிர்க்கும் ஒற்றியில்போய்க் கண்டேன் பசியைக் கண்டிலனே
எள்ளல் இகந்தேன் அம்மாநான்என்ன தவந்தான் செய்தேனே. (ச)

ஆவல் உடையார் உள்ளுடையார் அயன்மால் மகவான் ஆதியராம்
தேவர் பெருமான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருவடிவைக்
காவம் பொழில்சூழ் ஒற்றியில்போய்க் கண்டேன் கண்ட காட்சிதனை
யாவர் பெறுவார் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனே. (ரு)

மறப்பை அகன்ற மனத்துரவோர் வாழ்த்த அவர்க்கு வான்கதியின்
சிறப்பை அளிக்கும் சிவபெருமான் தியாகப் பெருமான் திருநடத்தைப்
பிறப்பை அகற்றும் ஒற்றியில்போய்ப் பேரா னந்தம் பெறக்கண்டேன்
இறப்பைத் தவிர்த்தேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனே.

வில்லாம் படிப்பொன் மேருவினை விரைய வாங்கும் வெற்றியினன்
செல்லாம் கருணைச் சிவபெருமான் தியாகப் பெருமான் திருக்கூத்தைக்
கல்லாம் கொடிய மனம்கரையக் கண்டேன் பண்டு காணாத
எல்லாம் கண்டேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனே. (எ)

ஒல்லை எயில்மூன் றெரிகொளுவ உற்று நகைத்தோன் ஒற்றியுளான்
தில்லை நகரான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருப்பவனி
கல்லை அளியும் கனியாக்கக் கண்டேன் கொண்ட களிப்பினுக்கோர்
எல்லை அறியேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனே. (அ)

66. இப் பதிகம் நம் அடிகளாரின் மூன்றும் சுவடியில் க, உ, ரு-ஆம் ஏடுகளில் உள்ளது. இவை ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் அடிகளார் "உ. சிவாயநம." என்று சிந்தித்து எழுதியிருக்கிறார்கள்.

துன்னும் சோம சுந்தரனார் தூய மதுரை நகர்அளித்த
தென்னர் பெருமான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருஅழகைப்
பன்னும் ஒற்றி நகர்தன்னில் பார்த்தேன் வினைபோம் வழிபார்த்த
என்னை மறந்தேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனே. (கூ)

முன்னம் காழி வள்ளலுக்கு முத்துச் சிவிகை குடையொடுபொன்
சின்னம்அளித்தோன் சிவபெருமான் தியாகப் பெருமான் திருஅடியைக்
கன்னின் றுருகா நெஞ்சுருகக் கண்டேன் கண்ட காட்சிதனை
என்என் றுரைப்பேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனே.

திருச்சிற்றம்பலம்

— o —

## 30. நெஞ்சுறுத்த திரு நேரிசை[68]

திரு ஒற்றியூர்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

பொன்னார் விடைக்கொடிஎம் புண்ணியனைப் புங்கவனை
ஒன்னார் புரம்எரித்த உத்தமனை—மன்னுய
அத்தனைநம் ஒற்றியூர் அப்பனைஎல் லாம்வல்ல
சித்தனைநீ வாழ்த்துதிநெஞ் சே.[69] (க)

நெஞ்சே உலக நெறிநின்று நீமயலால்
அஞ்சேல்என் பின்வந் தருள்கண்டாய்—எஞ்சாத்
தவக்கொழுந்தாம் சற்குணவர் தாழ்ந்தேத்தும் ஒற்றிச்
சிவக்கொழுந்தை வாழ்த்துதும்நாம் சென்று. (உ)

---

67. இப் பதிகத்தில் நம் பெருமானார் இறைவனைக் கண்கொண்டு கண்ட பெரும் பேற்றினை அடங்கா மகிழ்ச்சியொடு வியந்துரைத்தல் காண்க. இதனோடு பின்வரும் மணிவாசக மெய்ப் பொருளினையும் ஒத்துணர்ந்து மகிழ்க:

"நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்(து) இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்(து) இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும்."

சென்றுசென்று நல்காத செல்வர்தலை வாயிலிலே
நின்றுநின்று வாடுகின்ற நெஞ்சமே—இன்றுதிரு
ஒற்றிஅப்பன் தாண்மலரை உன்னுதியேல் காதலித்து
மற்றிசைப்ப தெல்லாம் வரும். (௩)

வருநாள் உயிர்வாழும் மாண்பறியோம் நெஞ்சே
ஒருநாளும் நீவேறொன் றுன்னேல்—திருநாளைப்
போவான் தொழுமன்றில் புண்ணியனை ஒற்றியில்தாய்
ஆவான் திருஅடிஅல் லால். (௪)

அல்லாலம் உண்டமிடற் றாரமுதை அற்புதத்தைக்
கல்லாலநீழல்அமர் கற்பகத்தைச்— சொல்ஆர்ந்த
விண்மணியை என்உயிரை மெய்ப்பொருளை ஒற்றியில்என்
கண்மணியை நெஞ்சே கருது. (௫)

கருதாயோ நெஞ்சே கதிகிடைக்க எங்கள்
மருதா எழில்தில்லை மன்னா—எருதேறும்
என்அருமைத் தெய்வதமே என்அருமைச் சற்குருவே
என்அருமை அப்பாவே என்று. (௬)

என்றும்உனக் காளாவேன் என்நெஞ்சே வன்நெஞ்சர்
ஒன்றும்இடம் சென்றங் குழலாதே—நன்றுதரும்
ஒற்றிஅப்பன் பொன்அடியை உன்னுகின்றோர் தம்பதத்தைப்
பற்றிநிற்பை யாகில் பரிந்து. (௭)

---

68. இப் பதிகம் கொண்ட ஏடுகளின் எண்கள் ௩௧௧, ௩௧௨, ௩௧௩, ௩௧௪. இவற்றின் முதல் ஏட்டினை "உ. வெண்பா." என்றும் மற்றவற்றை "உ" என்றும் அடிகளார் தொடங்கியிருக்கிறார்கள்.

69. இப் பதிகத்தில் நம் பெருமானார் இறைவனிடம் அன்றி வேறெதிலும் பற்றுறாதே என்று தம் நெஞ்சுக்கு அறிவுறுத்துதல் காண்க. இப் பதிகப் பாக்களொடு பின்வரும் திருவாசகம் போல்வனவற்றை ஒத்துணர்க:

> "வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்நகைச்செவ் வாய்க்கரிய
> பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
> ஊனெலாம் நின்(று)உருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
> வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே."

பரிந்துனக்குச் சொல்கின்றேன் பாவங்கள் எல்லாம்
எரிந்துவிழ நாம்கதியில் ஏறத் — தெரிந்து
விடையானை ஒற்றியூர் வித்தகனை மாதோர்
புடையானை நெஞ்சமே போற்று. (அ)

போற்றுதிஎன் நெஞ்சே புரம்நகையால் சுட்டவனை
ஏற்றுகந்த பெம்மானை எம்மவனை — நீற்றொளிசேர்
அவ்வண்ணத் தானை அணிபொழில்சூழ் ஒற்றியூர்ச்
செவ்வண்ணத் தானைத் தெரிந்து. (கூ)

தெரிந்து நினக்கனந்தம் தெண்டன்இடு கின்றேன்
விரிந்தநெஞ்சே ஒற்றியிடை மேவும் — பரிந்தநெற்றிக்
கண்ணானை மாலயனும் காணப் படாதானை
எண்ணுரை எண்ணுதே என்று. (க௦)

என்றென் றழுதாய் இலையேஎன் நெஞ்சமே
ஒன்றென்று நின்ற உயர்வுடையான் — நன்றென்ற
செம்மைத் தொழும்பர்தொழும் சீர்ஒற்றி யூர்அண்ணல்
நம்மைத் தொழும்புகொள்ளும் நாள். (கக)

நாளாகு முன்எனது நன்னெஞ்சே ஒற்றிஅப்பன்
தாளாகும் தாமரைப்பொன் தண்மலர்க்கே — ஆளாகும்
தீர்த்தர் தமக்கடிமை செய்தவர்தம் சீர்ச்சமுகம்
பார்த்துமகிழ் வாய்அதுவே பாங்கு. (கஉ)

பாங்குடையார் மெய்யில் பலித்ததிரு நீறணியாத்
தீங்குடையார் தீமனையில் செல்லாதே — ஓங்குடையாள்
உற்றமர்ந்த பாகத்தெம் ஒற்றிஅப்பன் பொன்அருளைப்
பெற்றமர்தி நெஞ்சே பெரிது. (கங)

பெரியானை மாதர்ப் பிறைக்கண்ணி யானை
அரியானை அங்கணனை ஆர்க்கும் — கரியானைத்
தோலானைச் சீர்ஒற்றிச் சுண்ணவெண் நீற்றானை
மேலானை நெஞ்சே விரும்பு. (கச)

விரும்பித் திருமால் விலங்காய் நெடுநாள்
அரும்பித் தளர்ந்துள் அயர்ந்தே — திரும்பிவிழி
நீர்கொண்டும் காணாத நித்தன்ஒற்றி யூரன்அடிச்
சீர்கொண்டு நெஞ்சே திகழ். (கரு)

திகழ்கின்ற ஞானச் செழுஞ்சுடரை வானோர்
புகழ்கின்ற தெய்வத்தைப் போதம்—நிகழ்கின்ற
ஒற்றிக் கனியை உலகுடைய நாயகத்தை
வெற்றித் துணையைநெஞ்சே வேண்டு. (கசு)

வேண்டாமை வேண்டுவது மேவாத் தவமுடையோர்
தீண்டாமை யாததுநீ தீண்டாதே—ஈண்டாமை
ஒன்றுவபோல் நெஞ்சேநீ ஒன்றிஒற்றி யூரன்பால்
சென்றுதொழு கண்டாய் தினம். (கஎ)

தினந்தோறும் உள்ளுருகிச் சீர்பாடும் அன்பர்
மனந்தோறும் ஓங்கும் மணியை—இனந்தோறும்
வேதமலர் கின்ற வியன்பொழில்சூழ் ஒற்றிநகர்ப்
போத மலரைநெஞ்சே போற்று. (கஅ)

போற்றார் புரம்பொடித்த புண்ணியனை விண்ணவர்கள்
ஆற்றாத நஞ்சமுண்ட ஆண்தகையைக்— கூற்றுவி
கொள்ளும் கழற்கால் குருமணியை ஒற்றியிடம்
கொள்ளும் பொருளைநெஞ்சே கூறு. (கக)

கூறுமையாட் கீந்தருளும் கோமானைச் செஞ்சடையில்
ஆறுமலர்க் கொன்றை அணிவோனைத்—தேறுமனம்
உள்ளவர்கட் குள்ளபடி உள்ளவனை ஒற்றிஅமர்
நள்ளவனை நெஞ்சமே நாடு. (உ0)

நாடும் சிவாய நமஎன்று நாடுகின்றோர்
கூடும் தவநெறியில் கூடியே—நீடும்அன்பர்
சித்தமனைத் தீபகமாம் சிற்பரனை ஒற்றியூர்
உத்தமனை நெஞ்சமே ஓது. (உக)

ஓதுநெறி ஒன்றுளதென் உள்ளமே ஓர்திஅது
தீதுநெறி சேராச் சிவநெறியில் - போதுநெறி
ஓதம் பிடிக்கும்வயல் ஒற்றியப்பன் தொண்டர்திருப்
பாதம் பிடிக்கும் பயன். (உஉ)

பயன்அறியாய் நெஞ்சே பவஞ்சார்தி மாலோ
டயன்அறியாச் சீருடைய அம்மான்—நயனறியார்
உள்ளத் தடையான் உயர்ஒற்றி யூரவன்வாழ்
உள்ளத் தவரை உறும். (உங)

தவராயி னும்தேவர் தாமாயி னும்மற்
றெவரா யினும்நமக்கிங் கென்றும்—கவராத
நிந்தை அகன்றிடஎன் நெஞ்சமே ஒற்றியில்வாழ்
எந்தை அடிவணங்கா ரேல். (உச)

ஏலக் குழலார் இடைக்கீழ்ப் படுங்கொடிய
ஞாலக் கிடங்கரினை நம்பாதே—நீல
மணிகண்டா என்றுவந்து வாழ்த்திநெஞ்சே நாளும்
பணிகண்டாய் அன்னோன் பதம். (உரு)

பதந்தருவான் செல்வப் பயன்தருவான் மன்னும்
சதந்தருவான் யாவும் தருவான்—இதம்தரும்என்
நெஞ்சம்என்கொல் வாடுகின்றாய் நின்மலா நின்அடியே
தஞ்சமென்றால் ஒற்றியப்பன் தான். (உசு)

திருச்சிற்றம்பலம்

— o —

## 31. சிகாமணி மாலை[70]

### புள்ளிருக்கு வேளூர்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

வல்வினை யேனைஇவ் வாழ்க்கைக் கடல்நின்றும் வள்ளல்உன்தன்
நல்வினை வாழ்க்கைக் கரைஏற்றி மெய்அருள் நல்குகண்டாய்
கொல்வினை யானை உரித்தோய் வயித்திய நாதகுன்றாச்
செல்வினை மேலவர் வாழ்வே அமரர் சிகாமணியே.[71] (க)

---

70. இப் பதிகம் நம் அடிகளாரது தெய்வத் திருக்கரத்தால் எழுதப்பட்ட மூன்றாம் சுவடியில் உள்ளவாறு இங்கு மேற்கொண்டிருக்கிறது. இது குறித்து அடிக் குறிப்புக்கள் 2, 18 பார்க்க. இப் பதிக ஏடுகளின் எண்கள் எ, அ, கூ, ம, மக, மஉ. அ, கூ-ஆம் ஏடுகளின் முதற்கண் "உ, சிவமயம்" என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

பொய்யே புலம்பிப் புழுத்தலை நாயின் புறத்திலுற்றேன்
மெய்யே உரைக்கும்நின் அன்பர்தம் சார்பை விரும்புகிலேன்
பையேல் அரவனை யேன்பிழை நோக்கிப் பராமுகம்நீ
செய்யேல் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (உ)

கல்லேன் மனக்கருங் கல்லேன் சிறிதும் கருத்தறியாப்
பொல்லேன்பொய் வாஞ்சித்த புல்லேன் இரக்கம் பொறைசிறிதும்
இல்லேன் எனினும்நின் பால்அன்றி மற்றை இடத்தில்சற்றும்
செல்லேன் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௩)

ஆர்ப்பார் கடல்நஞ் சமுதுசெய் தாய்நின் அடிக்கன்பின்றி
வேர்ப்பார் தமக்கும் விருந்தளித் தாய்வெள்ளி வெற்பெடுத்த
கார்ப்பாள னுக்கும் கருணைசெய் தாய்கடை யேன்துயரும்
தீர்ப்பாய் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௪)

நானே நினக்குப் பணிசெயல் வேண்டும்நின் நாள்மலர்த்தாள்
தானே எனக்குத் துணைசெயல் வேண்டும் தயாநிதியே
கோனே கரும்பின் சுவையேசெம் பாலொடு கூட்டுநறும்
தேனே வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௫)

மருவார் குழலியர் மையல் கடல்விழும் வஞ்சநெஞ்சால்
வெருவா உயங்கும் அடியேன் பிணியை விலக்குகண்டாய்
உருவாய் அருவும் ஒளியும் வெளியும்என் றோதநின்ற
திருவார் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௬)

தவநேய மாகும்நின் தாள்நேய மின்றித் தடமுலையார்
அவநேய மேற்கொண் டலைகின்ற பேதைக் கருள்புரிவாய்
நவநேய மாகி மனவாக் கிறந்த நடுஒளியாம்
சிவனே வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௭)

ஐவாய் அரவில் துயில்கின்ற மாலும் அயனும்தங்கள்
கைவாய் புதைத்துப் பணிகேட்க மேவும்முக் கண்அரசே
பொய்வாய் விடாஇப் புலையேன் பிழையைப் பொறுத்தருள்நீ
செய்வாய் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (அ)

---

71. இப் பதிகத்தில் உடற்பிணி உயிர்ப்பிணி முதலிய எல்லா வல்வினைகளுக்கும் விடை கொடுத்தனுப்பித் தம்மை அன்பர்கள்பால் சேர்த்தமைக்கும், இனியும் அருள்நல்கி ஆட்கொள்ளுமாறும் அடிகளார் பரிந்து கூறுதல் காண்க.

புல்வாயின் முன்னர்ப் புலிப்போத் தெனஎன்முன் போந்துநின்ற
கல்வாய் மனத்தரைக் கண்டஞ்சி னேனைக் கடைக்கணிப்பாய்
அல்வாய் மணிமிடற் றாரமு தேஅருள் ஆன்றபெரும்
செல்வா வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௯)

ஆர்த்தார் கடல்நஞ் சமுதுசெய் தாய்என்னை அன்பர்கள்பால்
சேர்த்தாய்என் துன்பம் அனைத்தையும் தீர்த்துத் திருஅருட்கண்
பார்த்தாய் பரம குருவாகி என்னுள் பரிந்தமர்ந்த
தீர்த்தா வயித்திய நாதா அமரர் சிகாமணியே.[72] (௧௦)

அறத்தாயை ஓர்புடை கொண்டோர் புடைமண் அளந்தமுகில்
நிறத்தாயை வைத்துல கெல்லாம் நடத்தும் நிருத்தஅண்டப்
புறத்தாய்என் துன்பம் துடைத்தாண்டு மெய்அருள் போதந்தந்த
திறத்தாய் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௧௧)

அலைஓய் கடலில் சிவயோகம் மேவிய அந்தணர்தம்
நிலைஓர் சிறிதும் அறியேன் எனக்குன் நிமலஅருள்
மலைஓங்கு வாழ்க்கையும் வாய்க்கும் கொலோபொன் மலைஎன்கின்ற
சிலையோய் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௧௨)

ஊன்கொண்ட தேகத்தும் உள்ளத்தும் மேவி உறும்பிணியால்
நான்கொண்ட துன்பம் தவிர்ப்பாய் வயித்திய நாதஎன்றே ;
வான்கொண்ட நின்அருள் சேர்த்து இன்ற வகைஅறியேன்
தேன்கொண்ட கொன்றைச் சடையாய் அமரர் சிகாமணியே. (௧௩)

---

72. இப் பாவொடு பின்வரும் வன்தொண்டப் பெருந்தகையாரின் மெய்ம் மொழியை ஒத்துணர்க:

"சாதலும் பிறத்தலும் தவிர்த்(து)எனை வகுத்துத்
 தன்அருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்(து)அங்கொர் பால்கொண்ட மணியை
 வருபுனல் சடைஇடை வைத்தஎம் மானை
ஏதில்என் மனதுக்(கு)ஓர் இரும்புண்ட நீரை
 எண்வகை ஒருவனை எங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
 கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே."

களிவே தனும்அந்தக் காலனும் என்னைக் கருதஓட்டா
ஒளிவே தரத்திரு உள்ளஞ்செய் வாய்அன்பர் உள்ளம்என்னும்
தளிவே தனத்துறும் தற்பர மேஅருள் தண்ணமுதத்
தெளிவே வயித்திய நாதா அமரர் சிகாமணியே. (௧௪)

மால்விடை மேற்கொண்டு வந்தெளி யேனுடை வல்வினைக்கு
மேல்விடை ஈந்திட வேண்டுங்கண் டாய்இது வேசமயம்
நீல்விட முண்ட மிடற்றாய் வயித்திய நாதநின்பால்
சேல்விடு வாட்கண் உமையொடும் தேவர் சிகாமணியே. (௧௫)

திருச்சிற்றம்பலம்

— o —

## 32. கலி முறையீடு[73]

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொய்விடு கின்றிலன் என்றெம் புண்ணியா
கைவிடு கின்றியோ கடைய னேன்தனைப்
பைவிடம் உடையவெம் பாம்பும் ஏற்றநீ
பெய்விடம் அனையஎன் பிழைபொ றுக்கவே.[74] (௧)

பொறுக்கினும் அன்றிஎன் பொய்மை நோக்கியே
வெறுக்கினும் நின்அலால் வேறு காண்கிலேன்
மறுக்கினும் தொண்டரை வலிய ஆண்டபின்
சிறுக்கினும் பெருக்கமே செய்யும் செல்வமே. (௨)

செல்லலும் சிறுமையும் சினமும் புல்லரைப்
புல்லலும் கொண்டஎன் பொய்மை கண்டுநீ
கொல்லலும் தகும்எனைக் கொன்றி டாதருள்
மல்லலும் தகும்சடா மகுட வள்ளலே. (௩)

---

73. இப் பதிக ஏடுகளின் எண்கள் ம௨, ம௩. இவற்றின் தொடக்கத்தில் அடிகளார் "உ" என்று எழுதிச் சிந்தித்திருக்கிறார்கள்.

74. இப் பதிகத்தில் மாயை வயப்பட்ட மனத்தால் வரும் துன்பமும் துயரமும் தீமையும் இறைவனது அருள் ஒன்றினால் அன்றி வேறு வழியில் தீரா என்று முறையிட்டுக் கொள்ளுதல் காண்க.

வள்ளலே நின்அடி மலரை நண்ணிய
உள்ளலேன் பொய்ம்மையை உன்னி என்னையாட்
கொள்ளலே இன்றெனில் கொடிய என்தனை
எள்ளலே அன்றிமற் றென்செய் கிற்பனே. (௪)

செய்நன் றறிகிலாச் சிறிய னேன்தனைப்
பொய்யன்என் றெண்ணிநீ புறம்பொ ழிப்பையேல்
வையநின் றையவோ மயங்கல் அன்றியான்
உய்யநின் றுணர்குவ தொன்றும் இல்லையே. (௫)

ஷ டி வேறு

இல்லை என்ப திலாஅருள் வெள்ளமே
தில்லை மன்றில் சிவபரம் சோதியே
வல்லை யான்செயும் வஞ்சமெ லாம்பொறுத்
தொல்லை இன்பம் உதவுதல் வேண்டுமே. (௬)

ஷ டி வேறு

இல்லையே என்பதிங் கில்லை என்றருள்
நல்லையே நீஅருள் நயந்து நல்கினால்
கல்லையே அனையஎன் கன்மநெஞ்சகம்
ஒல்லையே வஞ்சம்விட் டுவக்கும் உண்மையே [75] (௭)

உண்மையே அறிகிலா ஓதிய னேன்படும்
எண்மையே கண்டும்உள் இரக்கம் வைத்திலை
அண்மையே அம்பலத் தாடும் ஐயநீ
வண்மையே அருட்பெரு வாரி அல்லையோ. (௮)

அல்லலங் கடலிடை ஆழ்ந்த நாயினேன்
சொல்லலங் கடல்விடைத் தோன்றல் நின்அருள்
மல்லலங் கடலிடை மகிழ்ந்து மூழ்கினால்
கல்அலங் கடல்மனம் கனிதல் மெய்ம்மையே, [75] (௯)

---

75. இப் பாக்களொடு பின்வரும் தாயுமானார்தம் கண்ணிகளை ஒத்துணர்க:
"பொய்யைப்பொய் என்றறியும் போதத்துக்(கு) ஆதரவுன்
மெய்அருளே அன்றோ விளம்பாய் பராபரமே."
"வெள்ளக் கருணைமத வேழமாம் நின்அருட்(கு)என்
கள்ளக் கருத்தே கவளம் பராபரமே."

மெய்மையே அறிகிலா வீண னேன்இவன்
உய்மையே பெறஉனை உன்னி ஏத்திடாக்
கைமையே அனையர்தம் கடையில் செல்லவும்
பொய்மையே உரைக்கவும் புணர்த்த தென்கொலோ. (௧0)

என்னுடை வஞ்சக இயற்கை யாவையும்
பொன்னுடை விடையினோய் பொறுத்துக் கொண்டுநின்
தன்னுடை அன்பர்தம் சங்கம் சார்ந்துநான்
நின்னுடைப் புகழ்தனை நிகழ்த்தச் செய்கவே. (௧௧)

நிகழும்நின் திருஅருள் நிலையைக் கொண்டவர்
திகழும்நல் திருச்சபை அதனுட் சேர்க்கமுன்
அகழுமால் ஏனமாய் அளவும் செம்மலர்ப்
புகழுமா றருளுக பொறுக்க பொய்மையே. (௧௨)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 33. எதிர்கொள் பத்து[76]

எண்சீர்க் கழிநெடிலடிச் சந்த விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆனந்தக் கூத்தனை அம்பலத் தானை
அற்புதத் தேனைஎம் ஆதிப்பி ரானைத்
தேனந்தக் கொன்றைஅம் செஞ்சடை யானைச்
செங்கண்வி டையனை எங்கண்ம ணியை
மோனந்தத் தார்பெறும் தானந்தத் தானை
மூத்தனை முத்தியின் வித்தனை முத்தை
ஈனந்தக் காதெனை ஏன்றுகொண் டானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே.[77] (௧)

76. இப் பதிகம் நம் பெருமான் அவர்கள் கையெழுத்தில் உள்ள மற்றொரு சுவடியில் காணப்படுகிறது. இதன் ஏட்டெண்கள், ௧, ௨, ௩, ௪, ௫. முதல் ஏட்டின் தொடக்கத்தில் அடிகளார் "குருவே நம. சிவசண்முக நம. சிவ சிவ சிவ." என்றெழுதிச் சிந்தித்திருக்கிறார்கள்.
(இதன் பாஇனம் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்று தம் 2-ஆம் பதிப்பில் தொ. வே. குறித்திருக்கிறார்கள்.)

அடுத்தவர்க் கெல்லாம்அ ருள்புரி வானை
அம்பலக் கூத்தனை எம்பெரு மானைத்
தடுத்தெமை ஆண்டுகொண் டன்பளித் தானைச்
சங்கரன் தன்னைஎன் தந்தையைத் தாயைக்
கடுத்ததும் பும்மணி கண்டத்தி னானைக்
கண்ணுத லானைஎம் கண்ணக லானை
எடுத்தெனைத் துன்பம்விட் டேறவைத் தானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே. (உ)

மாலயன் தேடியும் காணும லையை
வந்தனை செய்பவர் கண்டம ருந்தை
ஆலம்அ முதின்அ ருந்தல்செய் தானை
ஆதியை ஆதியோ டந்தமி லானைக்
காலன்வ ருந்திவி ழவுதைத் தானைக்
கருணைக்க டலைஎன் கண்ணனை யானை
ஏலம ணிகுழ லாள்இடத் தானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே. (௩)

சுந்தரர்க் காகமுன் தூதுசென் றானைத்
தூயனை யாவரும் சொல்லரி யானைப்
பந்தம்அ றுக்கும்ப ராபரன் தன்னைப்
பத்தர்உ ளங்கொள்ப ரஞ்சுட ரானை
மந்தர வெற்பின்ம கிழ்ந்தமர்ந் தானை
வானவர் எல்லாம்வ ணங்கநின் றானை
எந்தமை ஆண்டுநல் இன்பளித் தானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே. (௪)

அன்பர்கள் வேண்டும்அ வைஅளிப் பானை
அம்பலத் தேநடம் ஆடுகின் றானை
வன்பர்கள் நெஞ்சில்ம ருவல்இல் லானை
வானவர் கோனைஎம் வாழ்முத லானைத்

---

77. இப் பதிகத்தில் அடிகளார் அருளுருவமான இறைவனை இன்றே காணப் பெறுவேன் என்று எண்ணி எண்ணி மகிழ்தல் காண்க. இதனோடு பின்வரும் தேவார மெய்ம்மொழி போல்வன கண்டுவக்க:

"எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை ஆய பராபரன்
அந்தம் இல்புகழ் ஆரூர் அரன்நெறி
சிந்தை உள்ளும் சிரத்துளும் தங்கவே."

துன்பம்த விர்த்துச்சு கங்கொடுப் பானைச்
சோதியைச் சோதியுள் சோதியை நாளும்
என்பணி கொண்டெனை என்றுகொண் டானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே. (ரு)

கண்ணுத லானைஎன் கண்ணமர்ந் தானைக்
கருணாநி தியைக்க றைமிடற் றானை
ஒண்ணுத லாள்உமை வாழ்இடத் தானை
ஒருவனை ஒப்பிலா உத்தமன் தன்னை
நண்ணுதல் யார்க்கும்அ ருமையி னானை
நாதனை எல்லார்க்கும் நல்லவன் தன்னை
எண்ணுதல் செய்தெனக் கின்பளித் தானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே. (சு)

வெள்விடை மேல்வரும் வீறுடை யானை
வேதமு டிவினில் வீற்றிருந் தானைக்
கள்விரை யார்மலர்க் கொன்றையி னானைக்
கற்பகந் தன்னைமுக் கண்கொள்க ரும்பை
உள்வினை நீக்கிஎன் உள்ளமர்ந் தானை
உலகுடை யானைஎன் உற்றது ணையை
எள்வினை ஒன்றும்இ லாதவன் தன்னை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே. (எ)

பெண்ணமர் பாகனைப் பேர்அரு ளோனைப்
பெரியவர்க் கெல்லாம்பெ ரியவன் தன்னைக்
கண்ணமர் நெற்றிக் கடவுள்பி ரானைக்
கண்ணனை ஆண்டமுக் கண்ணனை எங்கள்
பண்ணமர் பாடல்ப ரிசளித் தானைப்
பார்முதல் அண்டம்ப டைத்தளிப் பானை
எண்அம ராதஎ ழிலுடை யானை
இன்றைஇ ரவில்எ திர்ந்துகொள் வேனே. (அ)

வளங்கொளும் தில்லைப்பொன் மன்றுடை யானை
வானவர் சென்னியின் மாணிக்கம் தன்னைக்
களங்கம்இ லாதக ருத்துடை யானைக்
கற்பனை முற்றும்க டந்துநின் றானை

உளங்கொளும் என்தன்உ யிர்த்துணை யானை
  உண்மையை எல்லாம்உ டையவன் தன்னை
இளம்பிறை சூடிய செஞ்சடை யானை
  இன்றைஇ ரவில்ள திர்ந்துகொள் வேனே. (௯)

குற்றமெல் லாம்குண மாகக்கொள் வானைக்
  கூத்துடை யானைப்பெண் கூறுடை யானை
மற்றவர் யார்க்கும்அ ரியவன் தன்னை
  வந்திப்ப வர்க்குமி களிளி யானைப்
பெற்றம தேறும்பெ ரியபி ரானைப்
  பிறைமுடி யோனைப்பெம் மானைஎம் மானை
எற்றிஎன் துன்பம்எ லாம்ஒழித் தானை
  இன்றைஇ ரவில்ள திர்ந்துகொள் வேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

— o —

## 34. நெஞ்சொடு நேர்தல்[78]

### கோயில்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அணிகொள் கோவணக் கந்தையே நமக்கிங்
  கடுத்த ஆடைஎன் றறிமட நெஞ்சே
கணிகொள் மாமணிக் கலன்கள்நம் கடவுள்
  கண்ணுண் மாமணிக் கண்டிகை கண்டாய்
பிணிகொள் வன்பவம் நீக்கும்வெண் ணீறே
  பெருமைச் சாந்தமாம் பிறங்கொளி மன்றில்
திணிகொள் சங்கர சிவசிவ என்று
  சென்று வாழ்த்தலே செய்தொழி லாமே.[79] (௧)

78. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௫௫, ௱௫௬, ௱௫௭. இவற்றின் முதற்கண் முறையே "உ சிவமயம். ஒற்றியூர். நெஞ்சு." என்றும், "உ. சிவமயம்" என்றும், "உ" என்றும் அடிகளார் எழுதி வைத்திருக்கிறார்கள்.

செய்த நன்றிமேல் தீங்கிழைப் பாரில்
திருப்பும் என்தனைத் திருப்புகின் றனைநீ
பெய்த பாலினைக் கமரிடைக் கவிழ்க்கும்
பேதை யாதலில் பிறழ்ந்தனை உனைநான்
வைத போதினும் வாழ்த்தென நினைத்து
மறுத்து நீக்கிஅவ் வழிநடக் கின்றாய்
கொய்த கோட்டினை நட்டனை வளர்ப்பாய்
கொடிய நெஞ்சமே மடியகிற் றிலையே. (உ)

இலைஎ னாதணு வளவும்ஒன் றீய
எண்ணு கின்றிலை என்பெறு வாயோ
கொலைஇ னாதென அறிந்திலை நெஞ்சே
கொல்லு கின்றஅக் கூற்றினும் கொடியாய்
தலையின் மாலைதாழ் சடையுடைப் பெருமான்
தாள்நி னைந்திலை ஊண்நினைந் துலகில்
புலையி னார்கள்பால் போதியோ வீணில்
போகப் போகஇப் போக்கினில் அழிந்தே. (ங)

அழிந்த வாழ்க்கையின் அவலமிங் கனைத்தும்
ஐயம் இன்றிநீ அறிந்தனை நெஞ்சே
கழிந்த எச்சிலை விழைந்திடு வார்போல்
கலந்து மீட்டுநீ கலங்குகின் றனையே
மொழிந்த முன்னையோர் பெறும்சிவ கதிக்கே
முன்னு றுவகை என்னுறும் உன்னால்
இழிந்த நாயினும் கடையனாய் நின்றேன்
என்செய் வேன்உனை ஏன்அடுத் தேனே. (ச)

---

79. இப் பதிகத்தில் அடிகளார் இறைவனை நினைந்து உணர்ந்து உய்யுமாறு தம் நெஞ்சுக்கு அறிவுறுத்துதல் காண்க. இதனோடு கீழ்க்கண்ட திருமந்திரம் போல்வனவற்றை ஒத்துணர்க:

"தானே புலன்ஐந்தும் தன்வசம் ஆயிடும்
தானே புலன்ஐந்தும் தன்வசம் போயிடும்
தானே புலன்ஐந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்(து)எம் பிரான்தனைச் சந்தித்தே."

தேன்நெய் ஆடிய செஞ்சடைக் கனியைத்
தேனை மெய்அருள் திருவினை அடியர்
ஊனை நெக்கிட உருக்கிய ஒளியை
உள்ளத் தோங்கிய உவப்பினை மூவர்
கோனை ஆனந்தக் கொழுங்கடல் அமுதைக்
கோமளத்தினைக் குன்றவில் லியைஎம்
மானை அம்பல வாணனை நினையாய்
வஞ்ச நெஞ்சமே மாய்ந்திலை இனுமே. (௫)

இன்னும் எங்ஙனம் ஏகுகின் றனையோ
ஏழை நெஞ்சமே இங்குமங் குந்தான்
முன்னை நாம்பிறந் துழன்றஅத் துயரை
முன்னில் என்குலை முறுக்குகின் றனகாண்
என்னை நீஎனக் குறுதுணை அந்தோ
என்சொல் ஏற்றிலை எழில்கொளும் பொதுவில்
மன்னு நம்முடை வள்ளலை நினைத்தால்
மற்று நாம்பிற வாவகை வருமே. (௬)

பிறந்து முன்னர்இவ் வுலகினும் பெண்டு
பிள்ளை ஆதிய பெருந்தொடக் குழந்தே
இறந்து வீழ்கதி இடைவிழுந் துழன்றே
இருந்த சேடத்தின் இத்தனை எல்லாம்
மறந்து விட்டனை நெஞ்சமே நீதான்
மதியி லாய்அது மறந்திலன் எளியேன்
துறந்து நாம்பெறும் சுகத்தினை அடையச்
சொல்லும் வண்ணம்நீ தொடங்கிடில் நன்றே. (௭)

நன்று செய்வதற் குடன்படு வாயேல்
நல்ல நெஞ்சமே வல்லஇவ் வண்ணம்
இன்று செய்திநீ நாளைஎன் பாயேல்
இன்றி ருந்தவர் நாளைநின் றிலரே
ஒன்று கேண்மதி சுகர்முதல் முனிவோர்
உக்க அக்கணம் சிக்கெனத் துறந்தார்
அன்று முன்னரே கடந்தனர் அன்றி
அதற்கு முன்னரே அகன்றனர் அன்றே. (௮)

அன்றி னேர்கிலே நம்முடைப் பெருமான்
　　ஐஞ்செ ழுத்தையும் அடிக்கடி மறந்தாய்
ஒன்றி மேற்கதி உறவகை அந்தோ
　　உணர்கி லாய்வயிற் றாண்பொருட் டயலோர்
முன்றில் காத்தனை அவ்வள வேனும்
　　முயன்று காத்திலை முன்னவன் கோயில்
துன்றி நின்றநல் தொண்டர்தம் தொழும்பு
　　தொடங்கு வானவர் தூயமுன் றிலையே. (கூ)

தூய நெஞ்சமே சுகம்பெற வேண்டில்
　　சொல்லு வாம்அது சொல்லள வன்றால்
காய மாயமாம் கான்செறிந் துலவும்
　　கள்வர் ஐவரைக் கைவிடுத் ததன்மேல்
பாய ஆணவப் பகைகெட முருக்கிப்
　　பகல்இ ராஇலாப் பாங்கரின் நின்றே
ஆய வானந்தக் கூத்துடைப் பரமா
　　காய சோதிகண் டமருதல் அணியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 35. நெஞ்சறை கூவல்[80]

திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கண்கள் மூன்றினர் கறைமணி மிடற்றார்
　　கங்கை நாயகர் மங்கைபங் குடையார்
பண்கள் நீடிய பாடலார் மன்றில்
　　பாத நீடிய பங்கயப் பதத்தார்

80. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱கூ, ௱ம. இவற்றில் முறையே அடிகளார் "உ. ஒற்றியூர்" என்றும், "உ. சிவமயம்" என்றும் எழுதித் தொடங்கியிருக்கிறார்கள்.

ஒண்கண் மாதரார் நடம்பயில் ஒற்றி
யூர்அ மர்ந்துவாழ் வுற்றவர்க் கேநம்
மண்கொண் மாலைபோம் வண்ணம்நல் தமிழ்ப்பூ
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே.[81] (க)

கரிய மாலன்று கரியமா வாகிக்
கலங்க நின்றபொன் கழல்புனை பதத்தார்
பெரிய அண்டங்கள் யாவையும் படைத்தும்
பித்தர் என்னும்அப் பேர்தனை அகலார்
உரிய சீர்கொளும் ஒற்றியூர் அமர்ந்தார்
உம்பர் நாயகர் தம்புயம் புனைய
வரிய கன்றநன் மலர்கொடு தெரிந்து
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. (உ)

திருவின் நாயகன் கைப்படை பெறுவான்
திருக்கண் சாத்திய திருமலர்ப் பதத்தார்
கருவின் நின்றஎம் போல்பவர் தம்மைக்
காத்த ளிப்பதே கடன்எனக் கொண்டார்
உருவின் நின்றவர் அருஎன நின்றோர்
ஒற்றி யூரிடை உற்றனர் அவர்க்கு
மருவின் நின்றநன் மணங்கொளும் மலர்ப்பூ
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. (ங)

கரும்பைங் நாகணைக் கடவுள்நான் முகன்வான்
கடவுள் ஆதியர் கலகங்கள் தவிர்ப்பான்
துரும்பை நாட்டிஓர் விஞ்சையன் போலத்
தோன்றி நின்றவர் துரிசறுத் திட்டோன்
தரும்பைம் பூம்பொழில் ஒற்றியூர் இடத்துத்
தலங்கொண் டார்அவர் தமக்குநாம் மகிழ்ந்து
வரும்பைஞ் சீர்த்தமிழ் மாலையோ டணிபூ
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. (ச)

---

81. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானுர், இறைவனது திரு அருட் புகழை நெஞ்சுக்கு எடுத்துச் சொல்லி, அவன் திரு அடியில் ஈடுபட்டு உய்யுமாறு உபதேசித்தல் காண்க. இவற்றோடு அடியில் கண்ட மணிவாசகத் தெள்ளமுதம் போல்வனவற்றை ஒத்துணர்க.

வதன நான்குடை மலரவன் சிரத்தை
வாங்கி ஓர்கையில் வைத்தநம் பெருமான்
நிதன நெஞ்சகர்க் கருள்தரும் கருணை
நிதிய மாகிய நின்மலப் பெருமான்
சுதன மங்கையர் நடம்செயும் ஒற்றித்
தூய னல்அவர் துணைத்திருத் தோட்கு
மதன இன்தமிழ் மாலையோ டணிபூ
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. (ரு)

கஞ்சன் அங்கொரு விஞ்சனம் ஆகிக்
காலில் போந்துமுன் காணரு முடியார்
அஞ்ச னம்கொளும் நெடுங்கணள் எங்கள்
அம்மை காணநின் றுடிய பதத்தார்
செஞ்சொல் மாதவர் புகழ்திரு ஒற்றித்
தேவர் காண்அவர் திருமுடிக் காட்ட
மஞ்ச னங்கொடு வருதும்என் மொழியை
மருது நீஉடன் வருதிஎன் மனனே. (சு)

சூழு மாலயன் பெண்ணுரு எடுத்துத்
தொழும்பு செய்திடத் தோன்றிநின் றவனைப்
போழும் வண்ணமே வடுகனுக் கருளும்
பூத நாதர்நற் பூரணா னந்தர்
தாழும் தன்மையோர் உயர்வுறச் செய்யும்
தகையர் ஒற்றியூர்த் தலத்தினர் அவர்தாம்
வாழும் கோயிற்குத் திருவல கிடுவோம்
மகிழ்வு கொண்டுடன் வருதிஎன் மனனே. (எ)

விதியும் மாலுமுன் வேறுரு வெடுத்து
மேலும் கீழுமாய் விரும்புற நின்றோர்
நதியும் கொன்றையும் நாகமும் பிறையும்
நண்ணி ஓங்கிய புண்ணியச் சடையார்

---

81. (தொடர்ச்சி)
"புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பார்ஆர் மதியுள் கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இதுசெய்ம்மின் சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருள்ஆர் பெறுவார் அகலிடத்தே அந்தோ அந்தோ அந்தோவே."

பதியு நாமங்கள் அனந்தமுற் றுடையார்
　　பணைகொள் ஒற்றியூர்ப் பரமர்கா ணவர்தாம்
வதியும் கோயிற்குத் திருவிளக் கிடுவோம்
　　வாழ்க நீஉடன் வருதிஎன் மனனே. (அ)

குளங்கொள் கண்ணினுர் குற்றமே செயினும்
　　குணமென் றேஅதைக் கொண்டருள் புரிவோர்
உளங்கொள் அன்பர்தம் உள்ளகத் திருப்போர்
　　ஒற்றி யூரிடம் பற்றிய புனிதர்
களங்கொள் கண்டரெண் தோளர்கங் காளர்
　　கல்லை வில்எனக் கண்டவர் அவர்தம்
வளங்கொள் கோயிற்குத் திருமெழுக் கிடுவோம்
　　வாழ்க நீஉடன் வருதிஎன் மனனே. (௯)

பணிகொள் மார்பினர் பாகன மொழியாள்
　　பாகர் காலனைப் பாற்றிய பதத்தார்
திணிகொள் வன்மத மலைஉரி போர்த்தோர்
　　தேவர் நாயகர் திங்களம் சடையார்
அணிகொள் ஒற்றியூர் அமர்ந்திடும் தியாகர்
　　அழகர் அங்கவர் அமைந்துவீற் றிருக்கும்
மணிகொள் கோயிற்குத் திருப்பணி செய்தும்
　　வாழ்க நீஉடன் வருதிஎன் மனனே. (௧0)

திருச்சிற்றம்பலம்

— o —

## 36. நெஞ்சைத் தேற்றல்[82]

### திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சென்று வஞ்சர்தம் புறங்கடை நின்று
　　திகைக்க எண்ணும்என் திறன்இலா நெஞ்சே
ஒன்றும் அஞ்சலை என்னுடன் கூடி
　　ஒற்றி யூர்க்கின்று வருதியேல் அங்கு

82. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௬௭, ௬அ. இவற்றின் முதற்கண் அடிகளா ரால் முறையே "உ. சிவமயம்." என்றும் "உ. சிவமயம். ஒற்றியூர்." என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மன்றுள் மேவிய வள்ளலார் மகிழ்ந்து
வாழ்கின் றார்அவர் மலரடி வணங்கி
நன்று வேண்டிய யாவையும் வாங்கி
நல்கு வேன்எனை நம்புதி மகவே.[83] (௧)

தீது வேண்டிய சிறியர்தம் மனையில்
சென்று நின்றுநீ திகைத்திடல் நெஞ்சே
யாது வேண்டுதி வருதிஎன் னுடனே
யாணர் மேவிய ஒற்றியூர் அகத்து
மாது வேண்டிய நடனநா யகனார்
வள்ள லார்அங்கு வாழ்கின்றார் கண்டாய்
ஈது வேண்டிய தென்னுமுன் அளிப்பார்
ஏற்று வாங்கிநான் ஈகுவன் உனக்கே. (௨)

இரக்கின் றோர்களுக் கில்லைஎன் னார்பால்
இரத்தல் ஈதலாம் எனல்உணர்ந் திலையோ[84]
கரக்கின் றோர்களைக் கனவினும் நினையேல்
கருதி வந்தவர் கடியவர் எனினும்
புரக்கின் றோர்மலர்ப் புரிசடை உடையார்
பூத நாயகர் பொன்மலைச் சிலையார்
உரக்குன் றோர்திரு ஒற்றியூர்க் கேகி
உன்னி ஏற்குதும் உறுதிஎன் நெஞ்சே. (௩)

கல்லின் நெஞ்சர்பால் கலங்கல்என் நெஞ்சே
கருதி வேண்டிய தியாதது கேண்மோ
சொல்லின் ஓங்கிய சுந்தரப் பெருமான்
சோலை சூழ்ஒற் றித் தொன்னகர்ப் பெருமான்
அல்லின் ஓங்கிய கண்டத்தெம் பெருமான்
அயனும் மாலும்நின் றறிவரும் பெருமான்
வல்லை ஈகுவான் ஈகுவ தெல்லாம்
வாங்கி ஈகுவேன் வருதிஎன் னுடனே. (௪)

---

83. இப் பதிகத்தில் நம் அடிகளார், அவலம் கொண்டு அஞ்சும் தம் நெஞ்சை இறைவன் அருள் திறம் கூறித் தேற்றுதல் காண்க. இதோடு திருவாசகம் யாத்திரைப் பத்துப் போல்வன கண்டுவக்க.

84. ஈண்டு, அடிகளார் மேற்கொண்டிருக்கும் குறள் பின்வருமாறு:
"இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு."

இலவு காக்கின்ற கிள்ளைபோல் உழன்றாய்
என்னை நின்மதி ஏழைநீ நெஞ்சே
பலவு வாழைமாக் கனிகனிந் திழியும்
பணைகொள் ஒற்றியூர்க் கென்னுடன் வருதி
நிலவு வெண்மதிச் சடையுடை அழகர்
நிறைய மேனியில் நிகழ்ந்தநீற் றழகர்
குலவு கின்றனர் வேண்டிய எல்லாம்
கொடுப்பர் வாங்கிநான் கொடுப்பன்உன் தனக்கே. (௫)

மன்னு ருத்திரர் வாழ்வைவேண் டினையோ
மால வன்பெறும் வாழ்வுவேண் டினையோ
அன்ன ஊர்திபோல் ஆகவேண் டினையோ
அமையும் இந்திரன் ஆகவேண் டினையோ
என்ன வேண்டினும் தடையிலை நெஞ்சே
இன்று வாங்கிநான் ஈகுவன் உனக்கே
வன்னி அஞ்சடை எம்பிரான் ஒற்றி
வளங்கொள் ஊரிடை வருதிஎன் னுடனே. (௬)

மறப்பி லாச்சிவ யோகம்வேண் டுகினும்
வழுத்த ரும்பெரு வாழ்வுவேண் டுகினும்
இறப்பி லாதின்னும் இருக்கவேண் டுகினும்
யாது வேண்டினும் ஈகுவன் உனக்கே
பிறப்பி லான்எங்கள் பரசிவ பெருமான்
பித்தன் என்றுநீ பெயர்ந்திடல் நெஞ்சே
வறப்பி லான்அருட் கடல்அவன் அமர்ந்து
வாழும் ஒற்றியின் வருதிஎன் னுடனே. (௭)

காலம் செல்கின்ற தறிந்திலை போலும்
காலன் வந்திடில் காரியம் இலைகாண்
நீலம் செல்கின்ற மிடற்றினர் கரத்தில்
நிமிர்ந்த வெண்நெருப் பேந்திய நிமலர்
ஏலம் செல்கின்ற குழலிஓர் புடையார்
இருக்கும் ஒற்றியூர்க் கென்னுடன் வருதி
ஞாலம் செல்கின்ற துயர்கெட வரங்கள்
நல்கு வார்அவை நல்குவன் உனக்கே. (அ)

சென்று நீபுகும் வழியெலாம் உன்னைத்
தேட என்வசம் அல்லஎன் நெஞ்சே
இன்றரைக்கணம் எங்கும்நேர்ந் தோடா
தியல்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் வருதி
அன்று வானவர் உயிர்பெற நஞ்சம்
அருந்தி நின்றஎம் அண்ணலார் இடத்தே
நின்று வேண்டிய யாவையும் உனக்கு
நிகழ வாங்கிநான் ஈகுவன் அன்றே. (௯)

கெடுக்கும் வண்ணமே பலர்உனக் குறுதி
கிளத்து வார்அவர் கெடுமொழி கேளேல்
அடுக்கும் வண்ணமே சொல்கின்றேன் எனைநீ
அம்மை இம்மையும் அகன்றிடா மையினால்
தடுக்கும் வண்ணமே செய்திடேல் ஒற்றித்
தலத்தி னுக்கின்றென் றன்னுடன் வருதி
மடுக்கும் வண்ணமே வேண்டிய எல்லாம்
வாங்கி ஈகுவன் வாழ்திஎன் நெஞ்சே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 37. நெஞ்சறிவுறாஉ [85]

### திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

என்ன நன்றுகாண் வாழ்க்கையுட் சார்ந்த
இன்ப துன்பங்கள் இருவினைப் பயனால்
மன்னும் மும்மல மடஞ்செறி மனனே
வாழ்தி யோஇங்கு வல்வினைக் கிடமாய்

85. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௩௫௮, ௩௯௧. முதல் ஏட்டின் தொடக்கத்தில் "உ. சிவமயம். ஒற்றியூர்." என்று அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

உன்ன நல்அமு தாம்சிவ பெருமான்
உற்று வாழ்ந்திடும் ஒற்றியூர்க் கின்றே
இன்னல் அற்றிடச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே.[86] (௧)

துன்ப வாழ்வினைச் சுகம்என மனனே
சூழ்ந்து மாயையுள் ஆழ்ந்துநிற் கின்றாய்
வன்ப தாகிய நீயும்என் னுடனே
வருதி யோஅன்றி நிற்றியோ அறியேன்
ஒன்ப தாகிய உருவுடைப் பெருமான்
ஒருவன் வாழ்கின்ற ஒற்றியூர்க் கின்றே
இன்ப வாழ்வுறச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (௨)

ஆட்டு கின்றதற் காகஅம் பலத்துள்
ஆடு கின்றசே வடிமலர் நினையாய்
வாட்டு கின்றனை வல்வினை மனனே
வாழ்ந்து நீசுக மாய்இரு கண்டாய்
கூட்டு கின்றநம் பரசிவன் மகிழ்வில்
குலவும் ஒற்றியூர்க் கோயில்சூழ்ந் தின்பம்
ஈட்டு கின்றதற் கேகின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (௩)

வஞ்ச வாழ்க்கையை விடுத்தனன் நீயே
வாரிக் கொண்டிங்கு வாழ்ந்திரு மனனே
நஞ்சம் ஆயினும் உண்குவை நீதான்
நானும் அங்கதை நயப்பது நன்றோ

---

86. இப் பதிகத்தில் நம் பெருமானார் இறைவன்பால் ஆன்மாவுக்கு இருக்கும் வேட்கையையும் நெஞ்சுக்கு மாயையின்கண் இருக்கும் வேட்கையையும் விவரித்து, நெஞ்சுக்கு அறிவுறுத்துதல் கண்டுணர்க. இதோடு பின்வரும் திருமந்திரம் போல்வன பார்க்க :

"ஆர்வ மனமும் அளவில் இளமையும்
ஈரமும் நல்லஎன்(று) இன்புறு காலத்துத்
தீர வருவதோர் காமத் தொழில்நின்று
மாதவன் இன்பம் மறந்தொழிந் தார்களே."

தஞ்சம் என்றவர்க் கருள்தரும் பெருமான்
தங்கும் ஒற்றியூர்த் தலத்தினுக் கின்றே
எஞ்சல் இன்றிநான் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (ச)

உண்மை ஓதினும் ஓர்ந்திலை மனனே
உப்பி லிக்குவந் துண்ணுகின் றவர்போல்
வெண்மை வாழ்க்கையின் நுகர்வினை விரும்பி
வெறுக்கின் றாய்உனை வெறுப்பதில் என்னே
தண்மை மேவிய சடையுடைப் பெருமான்
சார்ந்த ஒற்றியந் தலத்தினுக் கின்றே
எண்மை நீங்கிடச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (ரு)

நீடும் ஐம்பொறி நெறிநடந் துலக
நெறியில் கூடிநீ நினைப்பொடு மறப்பும்
நாடும் மாயையில் கிடந்துழைக் கின்றாய்
நன்று நின்செயல் நின்றிடு மனனே
ஆடும் அம்பலக் கூத்தன்எம் பெருமான்
அமர்ந்த ஒற்றியூர் ஆலயத் தின்றே
ஈடு நீங்கிடச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (சு)

கூறும் ஓர்கணத் தெண்ணுறும் நினைவு
கோடி கோடியாய்க் கொண்டதை மறந்து
மாறு மாயையால் மயங்கிய மனனே
வருதி அன்றெனில் நிற்றிஇவ் வளவில்
ஆறு மேவிய வேணிஎம் பெருமான்
அமர்ந்த ஒற்றியூர் ஆலயம் அதன்பால்
ஈறில் இன்புறச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (எ)

யாது கண்டனை அதனிடத் தெல்லாம்
அணைகின் றாய்அவ மாகநிற் கிந்த
போது போக்கினை யேஇனி மனனே
போதி போதிநீ போம்வழி எல்லாம்

கோது நீக்கிநல் அருள்தரும் பெருமான்
குலவும் ஒற்றியூர்க் கோயிலுக் கின்றே
ஏதம் ஓடநான் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (௮)

விச்சை வேண்டினை வினையுடை மனனே
மேலை நாள்பட்ட வேதனை அறியாய்
துச்சை நீபடும் துயர்உனக் கல்லால்
சொல்லி றந்தநல் சுகம்பலித் திடுமோ
பிச்சை எம்பெரு மான்என நினையேல்
பிறங்கும் ஒற்றியம் பெருந்தகை அவன்பால்
இச்சை கொண்டுநான் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (௯)

தூக்கம் உற்றிடும் சோம்புடை மனனே
சொல்வ தென்னைஓர் சுகம்இது என்றே
ஆக்கம் உற்றுநான் வாழநீ நரகில்
ஆழ நேர்ந்திடும் அன்றுகண் டறிகாண்
நீக்கம் உற்றிடா நின்மலன் அமர்ந்து
நிகழும் ஒற்றியூர் நியமத்திற் கின்றே
ஏக்கம் அற்றிடச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 38. நெடுமொழி வஞ்சி[87]

திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வார்க்கொண் மங்கையர் முலைமலைக் கேற்றி
மறித்தும் அங்கவர் மடுவினில் தள்ளப்
பார்க்கின் றாய்எனைக் கெடுப்பதில் உனக்குப்
பாவ மேஅலால் பலன்சிறி துளதோ

87. இப் பதிக ஏடுகளின் எண்கள் ாகூய, ாகூக. இவற்றின் முதற்கண் முறையே அடிகளார் "உ, சிவமயம்." என்றும் "உ" என்றும் குறித்துச் சிந்தித்திருக்கிறார்கள்.

ஈர்க்கின் ருய்கடுங் காமமாம் புலையா
இன்று சென்றுநான் ஏர்பெறும் ஒற்றி
ஊர்க்குள் மேவிய சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மையென் றுணரே.[88] (க)

கொடிய மாதர்கள் இடையுறும் நரகக்
குழியில் என்தனைக் கொண்டுசென் றழுத்திக்
கடிய வஞ்சனை யால்எனைக் கலக்கம்
கண்ட பாவியே காமவேட் டுவனே
இடிய நெஞ்சகம் இடர்உழந் திருந்தேன்
இன்னும் என்னைநீ ஏன்இழுக் கின்ருய்
ஒடிவில் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (உ)

பேதை மாதர்தம் மருங்கிடை ஆழ்ந்த
பிலத்தில் என்தனைப் பிடித்தழ வீழ்த்தி
வாதை உற்றிட வைத்தனை ஐயோ
மதியில் காமமாம் வஞ்சக முறியா
ஏதம் நீத்தருள் அடியர்தம் சார்வால்
எழுகின் றேன்எனை இன்னும்நீ இழுக்கில்
ஓதும் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (ங)

கோவம் என்னும்ஓர் கொலைப்புலைத் தலைமைக்
கொடிய னேஎனைக் கூடிநீ நின்ற
பாவ வன்மையால் பகைஅடுத் துயிர்மேல்
பரிவி லாமலே பயன்இழந் தனன்காண்

---

88. இப் பதிகத்தில், காமம், வெகுளி, உலோபம், மோகம், மதம், ஆணவம், அகங்காரம் ஆகிய இம் மாயாவிகாரங்கள் எல்லாம் இறைவன் அருள் கைகூடுவதொன்றால்தான் நீங்கும் என அடிகளார் மொழிவது கண்டுவக்க. இதோடு பின்வரும் திருமந்திரப் பெருமறை போல்வன வற்றை ஒத்துணர்ந்து தெளிக :

"விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின்(று) உருக்கிஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே."

சாவ நீயில தேல்எனை விடுக
சலஞ்செய் வாய்எனில் சதுர்மறை முழக்கம்
ஓவில் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (௪)

சார்ந்த லோபமாம் தயையிலி ஏடா
தாழ்ந்தி ரப்பவர் தமக்கணு அதனுள்
ஈர்ந்த ஒன்றினை ஈயவும் ஒட்டாய்
இரக்கின் றோர்தரின் அதுகொளற் கிசைவாய்
சோர்ந்தி டாதுநான் துய்ப்பவும் செய்யாய்
சுகமி லாதநீ தூரகில் இன்றேல்
ஓர்ந்த ஒற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (௫)

மோகம் என்னும்ஓர் மூடரில் சிறந்தோய்
முடிவி லாத்துயர் மூலஇல் ஒழுக்கில்
போகம் என்னும்ஓர் அளற்றிடை விழவும்
போற்று மக்கள்பெண் டன்னைதந் தையராம்
சோக வாரியில் அழுந்தவும் இயற்றிச்
சூழ்கின் றாய்எனைத் தொடர்ந்திடேல் தொடரில்
ஓகை ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (௬)

மதம்எ னும்பெரு மத்தனே எனைநீ
வருத்தல் ஓதினல் வாயினுக் கடங்கா
சிதமெ னும்பரன் செயலினை அறியாய்
தீங்கு செய்தனர் நன்மையாம் செய்தோம்
இதம றிந்தனம் எமக்கினி ஒப்பார்
யாவர் என்றெனை இழிச்சினை அடியார்க்
குதவும் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (௭)

அமைவ றிந்திடா ஆணவப் பயலே
அகில கோடியும் ஆட்டுகின் றவன்காண்
எமைந டத்துவோன் ஈதுண ராமல்
இன்று நாம்பரன் இணையடி தொழுதோம்

கமையின் ஏத்திஞேம் அடியரும் ஆஞேம்
கனிகின் ரூேம்எனக் கருதிட மயக்கேல்
உமையன் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (அ)

கருமை யாம்அகங் காரமர்க் கடவா
கடைய னேஉனைக் கலந்தத ருலே
அருமை யாகநாம் பாடினோம் கல்வி
அறஅ றிந்தனம் அருளையும் அடைந்தோம்
இருமை இன்பமும் பெற்றனம் என்றே
எனைம தித்துநான் இழிவடைந் தனன்காண்
ஒருமை ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (கூ)

வெண்மை சேர்அகங் காரமாம் வீணு
விடுவி டென்றனை வித்தகம் உணராய்
தண்மை இன்றிதற் கிதுஎனத் துணிந்தென்
தனையும் சாய்ப்பது தகவென நினைத்தாய்
அண்மை நின்றிடேல் சேய்மைசென் றழிநீ
அன்றி நிற்றியேல் அரிமுதல் ஏத்தும்
உண்மை ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 39. பற்றின் திறம் பகர்தல்[89]

### திரு ஒற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வாணரை விடையூர் வரதனை ஒற்றி வாணனை மலிகடல் விடமாம்
ஊணனை அடியேம் உளத்தனை எல்லாம் உடையனை உள்கின் றேத்தா
வீணரை மடமை விழலரை மரட்ட வேடரை மூடரை நெஞ்சக்
கோணரைமுருட்டுக் குறும்பரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே.[90]

89. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௩௧, ௱௩௨. இவற்றின் முதற்கண் அடிகளார் முறையே "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் குறித்திருக்கிறார்கள்.

மூவரை அளித்த முதல்வனை முக்கண் மூர்த்தியைத் தீர்த்தனைப் பெரிய
தேவரைக் காத்த செல்வனை ஒற்றித் தியாகனை நினைந்துநின் றேத்தாப்
பாவரை வரையாப் படிற்றரை வாதப் பதடரைச் சிதடரைப் பகைசேர்
கோவரைக் கொடிய குணத்தரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே.

அண்டனை எண்தோள் அத்தனை ஒற்றி அப்பனை ஐயனை நீல
கண்டனை அடியர் கருத்தனைப் பூத கணத்தனைக் கருதிநின் றேத்தா
மிண்டரைப் பின்றுவெளிற்றரை வலிய வேற்றரைச் சிற்றரைப் பாபக்
குண்டரை வஞ்சக் குடியரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே. (௬)

நாதனைப் பொதுவில் நடத்தனை எவர்க்கும் நல்லனை வல்லனைச் சாம
கீதனை ஒற்றிக் கிறைவனை எங்கள் கேள்வனைக் கிளர்ந்துநின் றேத்தாத்
தீதரை நரகச் செக்கரை வஞ்சத் திருட்டரை மருட்டரைத் தொலையாக்
கோதரைக் கொலைசெய் கோட்டரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே.

நம்பனை அழியா நலத்தனை எங்கள் நாதனை நீதனைக் கச்சிக்
கம்பனை ஒற்றிக் கங்கைவே ணியனைக் கருத்தனைக் கருதிநின் றேத்தா
வம்பரை ஊத்தை வாயரைக் கபட மாயரைப் பேயரை எட்டிக்
கொம்பரைப் பொல்லாக் கோளரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே.

சடையனை எவர்க்கும் தலைவனைக் கொன்றைத் தாரனைச் சராசர சடத்துள்
உடையனை ஒற்றி ஊரனை மூவர் உச்சனை உள்கிநின் றேத்தாக்
கடையரைப் பழைய கயவரைப் புரட்டுக் கடியரைக் கடியரைக் கலக
நடையரை உலக நசையரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே.

கஞ்சனைச் சிரங்கொய் கரத்தனை மூன்று கண்ணனைக் கண்ணனைக் காத்த
தஞ்சனை ஒற்றித் தலத்தனைச் சைவத் தலைவனைத் தாழ்ந்துநின் றேத்தா
வஞ்சரைக் கடைய மடையரைக் காம மனத்தரைச் சினத்தரை வலிய
நஞ்சரை இழிந்த நரகரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே.(௭)

---

90. இப் பதிகத்தில் நம் பெருமானார், இறைவனைச் சிந்தனை செய்து வழிபடாத தீவினையாளரைக் கண்ணாலும் பார்க்கக்கூடாது, மனத்தாலும் நினைக்கக் கூடாது என்று உறுதி கொள்ளுதல் காண்க. இதோடு பின் வரும் மணிவாசகம் போல்வனவற்றை ஒத்துணர்ந்து தெளிக:

"வன்புலால் வேலும் அஞ்சேன் வளைக்கையார்
கடைக்கண் அஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே."

தாமனை மழுமான் தரித்தசெங் கரனைத் தகையனைச் சங்கரன் தன்னைச்
சேமனை ஒற்றித் தியாகனைச் சிவனைத் தேவனைத் தேர்ந்துநின் றேத்தா
ஊமரை நீண்ட ஓதியரைப் புதிய ஒட்டரைத் துட்டரைப் பகைகொள்
நாமரை நரக நாடரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. (அ)

ஈசனைத் தாயில் இனியனை ஒற்றி இன்பனை அன்பனை அழியாத்
தேசனைத் தலைமைத் தேவனை ஞானச் சிறப்பனைச் சேர்ந்துநின் றேத்தா
நீசரை நாண்இல் நெட்டரை நரக நேயரைத் தீயரைத் தரும
நாசரை ஒழியா நட்டரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. (௯)

நித்தனைத் தூய நிமலனைப் புலியூர் நிருத்தனை ஒருத்தனை வாய்மைச்
சுத்தனை ஒற்றித் தலம்வளர் ஞான சுகத்தனைச் சூழ்ந்துநின் றேத்தா
மத்தரைச் சமண வாதரைத் தேர வறியரை முறியரை வைண
நத்தரைச் சுணங்க நாவரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே.

திருச்சிற்றம்பலம்

— o —

## 40. அடிமைத் திறத் தலைசல்[91]

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேவர் அறியார் மால்அறியான் திசைமா முகத்தோன் தான்அறியான்
யாவர் அறிவார் திருஒற்றி அப்பா அடியேன் யாதறிவேன்
மூவர் திருப்பாட் டினுக்கிசைந்தே முதிர்தீம் பாலும் முக்கனியும்
காவல் அமுதும் நறுந்தேனும் கைப்ப இனிக்கும் நின்புகழே.[92] (௧)

புகழே விரும்பிப் புலன்இழந்தேன் போந்துன் பதத்தைப் போற்றுகிலேன்
இகழேன் எனைநான் ஒற்றிஅப்பா என்னை மதித்தேன் இருள்மனத்தேன்
திகழ்ஏழ் உலகில் எனைப்போல்ஓர் சிறியர் அறியேன் தீவினையை
அகழேன்எனினும் எனையாளா தகற்றல் அருளுக் கழகன்றே. (௨)

---

91. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௰௯, ௱௰௪. இவற்றின் முதற்கண் அடிகளார் முறையே "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் குறித்து றினைந்திருக்கிறார்கள்.

அன்றும் அறியார் மாதவரும் அயனும் மாலும் நின்நிலையை
இன்றும் அறியார் அன்றியவர் என்றும் அறியார் என்னில்ஒரு
நன்றும் அறியேன் நாயடியேன் நான்எப்படிதான் அறிவேனே
ஒன்றும் நெறிஎ தொற்றிஅப்பா ஒப்பார் இல்லா உத்தமனே. (௩)

ஒப்பார் இல்லா ஒற்றிஅப்பா உன்னை மறந்தேன் மாதர்கள்தம்
வெப்பார் குழியில் கண்மூடி விழுந்தேன் எழுந்தும் விரைகின்றேன்
இப்பார் நடையில் களித்தவரை ஈர்த்துக் கொடுபோய்ச் செக்கிலிடு
விப்பார் நமனார் என்பதைநான் நினையா தறிவை விடுத்தேனே. (௪)

விடுத்தேன் தவத்தோர் நெறிதன்னை வியந்தேன் உலக வெந்நெறியை
மடுத்தேன் துன்ப வாரிதனை வஞ்ச மனத்தர் மாட்டுறவை
அடுத்தேன் ஒற்றி அப்பாஉன் அடியை நினையேன் அலமந்தேன்
படுத்தே நமன்செக் கிடும்போது படிறேன் யாது படுவேனே. (௫)

படுவேன் அல்லேன் நமன்தமரால் பரிவேன் அல்லேன் பரமனினை
விடுவேன் அல்லேன் என்னையும்நீ விடுவாய் அல்லை இனிச்சிறிதும்
கெடுவேன் அல்லேன் சிறியார்சொல் கேட்பேன் அல்லேன் தருமநெறி
அடுவேன் அல்லேன் திருஒற்றி அப்பா உன்றன் அருள்உண்டே.(௬)

உண்டோ எனைப்போல் மதிஇழந்தோர் ஒற்றி அப்பா உன்னுடைய
திண்டோள் இலங்கும் திருநீற்றைக் காண விரும்பேன் சேர்ந்தேத்தேன்
எண்தோள் உடையாய் என்றிரங்கேன் இறையும் திரும்பேன் இவ்வறிவைக்
கொண்டே உனைநான் கூடுவன்நின் குறிப்பே தொன்றும் அறியேனே.

அறியேன் உன்தன் புகழ்ப்பெருமை அண்ணா ஒற்றி அப்பாநான்
சிறியேன் எனினும் நினைஅன்றித் தெளியேன் மற்றோர் தேவர்தமை
வெறியேன் பிழையைக் குறித்தெனைக்கை விட்டால் என்செய் வேன் அடியேன்
நெறியே தருதல் நின்கடன்காண் நின்னைப் பணிதல் என்கடனே.[93]

---

92. இப் பாக்களில் நம் பெருமானார், தனக்கு ஆட்பட்டொழுகும்வழி அடியார்களைக் காத்து ஆளுதலே இறைவன் தனது அருளின் இயல் பான தொழிலாக உடையான் என்று மொழிந்துவத்தல் காண்க.

93. இதனோடு பின்கண்ட தேவார மெய்ம் மொழி போல்வனவற்றை ஒத்துணர்ந்து மகிழ்க :

"நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே."

கடனே அடியர் தமைக்காத்தல் என்றால் கடையேன் அடியன்அன்றோ
உடன்நேர் பிணியும் ஒழித்திலைஎன் உள்ளத் துயரும் தவிர்த்திலையே
விடன்நேர் கண்டத் தின்னமுதே வேத முடியில் விளங்கொளியே
அடன்ஏர் விடையாய் திருஒற்றி அப்பா உனைநான் அயர்ந்திலனே. (கூ)

இலனே மற்றோர் துணைசிறிதும் என்னே காமம் எனும்கடலில்
மலனேன் வருந்தக் கண்டிருத்தல் மணியே அருளின் மரபன்றே
அலனே அயலான் அடியேன்நான் ஐயா ஒற்றி அப்பாநல்
நலனேர் தில்லை அம்பலத்தில் நடிக்கும் பதமே நாடினனே. (கய)

நாடி அலுத்தேன் என்அளவோ நம்பா மன்றுள் நன்குநடம்
ஆடி மகிழும் திருஒற்றி அப்பா உன்தன் அருட்புகழைக்
கோடி அளவில் ஒருகூறும் குணித்தார் இன்றி ஆங்காங்கும்
தேடி அளந்தும் தெளிந்திலரே திருமால் முதலாம் தேவர்களே. (கக)

திருச்சிற்றம்பலம்

—— o ——

## 41. அவத் தொழிற் கலைசல்[94]

### திரு ஒற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அணங்கனார் களபத் தனமலைக் கிவரும்
அறிவிலேன் என்புகாத் துழலும்
சுணங்கனேன் தனக்குன் திருஅருள் கிடைக்கும்
சுகமும்உண் டாங்கொலோ அறியேன்
கணங்கள்நேர் காட்டில் எரிஉகந் தாடும்
கடவுளே கடவுளர்க் கிறையே
உணங்குவெண் தலைத்தார் புனைதிருப் புயனே
ஒற்றியூர் உத்தம தேவே.[95] (க)

---

94. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱கூ, ௱ச. இவற்றின் தொடக்கத்தில், முறையே "உ. சிவமயம். ஒற்றியூர்," என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்துச் சிந்தித்திருக்கிறார்கள்.

தேவரே அயனே திருநெடு மாலே
சித்தரே முனிவரே முதலா
யாவரே எனினும் ஐயநின் தன்மை
அறிந்திலர் யான்உனை அறிதல்
தாவில்வான் சுடரைக் கண்ணிலி அறியும்
தன்மையன் றோபெருந் தவத்தோர்
ஓவில்மா தவம்செய் தோங்குசீர் ஒற்றி
யூர்அமர்ந் தருள்செயும் ஒன்றே.[96] (உ)

ஒன்றுநின் தன்மை அறிந்தில மறைகள்
உள்ளம்நொந் திளைக்கின்ற தின்னும்
நன்றுநின் தன்மை நான்அறிந் தேத்தல்
நாயர சாளல்போல் அன்றோ
சென்றுநின் றடியர் உள்ளகத் தூறும்
தெள்ளிய அமுதத்தின் திரட்டே
மன்றுள்நின் றாடும் மாணிக்க மலையே
வளங்கொளும் ஒற்றியூர் மணியே. (௩)

மணித்தலை நாகம் அனையவெங் கொடியார்
வஞ்சக விழியினால் மயங்கிப்
பிணித்தலைக் கொண்டு வருந்திநின் றுழலும்
பேதையேற் குன்னருள் உளதோ
கணித்தலை அறியாப் பேர்ஒளிக் குன்றே
கண்கள்மூன் றுடையஎன் கண்ணே
அணித்தலை அடியர்க் கருள்திரு ஒற்றி
அப்பனே செப்பரும் பொருளே. (௪)

---

95. இப் பதிகத்தில் நம் பெருமானார் இறைவனது திருஅருள் அருமையினையும், அதற்கு எவ்வாற்றானும் ஏலாத தம் அவத் தொழிலினையும் விவரித்து, அங்ஙனம் இருப்பினும், தம்மையும் கைவிடாது ஆட்கொண்டருளல் வேண்டும் என்று இறைவன் திருத்தாளில் முறையிடுதல் காண்க.

96. இப் பாவொடு பின்வரும் தேவாரத் திருநெறித் தமிழ் போல்வனவற்றை ஒத்துணர்க:
கண்ணி னல்களி கூரக்கை யால்தொழு(து)
எண்ணு மா(று)அறி யா(து)இளைப் பேன்தனை
விண்ணு ளார்தொழும் வீழி மிழலையுள்
அண்ண லேஅடி யேனைக்கு றிக்கொளே.

ஒப்பிலாய் உனது திருஅருள் பெறுவான்
உன்னிநைகின் றனன் மன்மோ
வெப்பில்ஆழ்ந் தெனது மொழிவழி அடையா
வேதனைக் கிடங்கொடுத் துழன்ற
இப்பரி சானல் என்செய்வேன் எளியேன்
எவ்வணம் நின்அருள் கிடைக்கும்
துப்புர வொழிந்தோர் உள்ளகத் தோங்கும்
சோதியே ஒற்றியூர்த் துணையே. (ரு)

துணையிலேன் நினது திருவடி அல்லால்
துட்டனேன் எனினும்என் தன்னை
இணையிலாய் உனது தொண்டர்தம் தொண்டன்
எனச்செயல் நின்அருள் இயல்பே
அணையிலா தன்பர் உள்ளகத் தோங்கும்
ஆனந்த வெள்ளமே அரசே
பணையில்வா ளைகள்பாய் ஒற்றிஅம் பதியில்
பரிந்தமர்ந் தருள்செயும் பரமே. (சா)

பரிந்துநின் றுலக வாழ்க்கையில் உழலும்
பரிசொழிந் தென்மலக் கங்குல்
இரிந்திட நினது திருஅருள் புரியா
திருத்தியேல் என்செய்வேன் எளியேன்
எரிந்திட எயில்மூன் றழற்றிய நுதற்கண்
எந்தையே எனக்குறுந் துணையே
விரிந்தபூம் பொழில்சூழ் ஒற்றியம் பதியில்
மேவிய வித்தக வாழ்வே. (எ)

வாழ்வது நின்தன் அடியரோ டன்றி
மற்றும்ஓர் வெற்றருள் வாழேன்
தாழ்வது நினது தாட்கலான் மற்றைத்
தாட்கெலாம் சரண்எனத் தாழேன்
சூழ்வது நினது திருத்தளி அல்லால்
சூழ்கிலேன் தொண்டனேன் தன்னை
ஆள்வது கருதின் அன்றிஎன் செய்கேன்
ஐயனே ஒற்றியூர் அரசே. (அ)

ஐயனே மாலும் அயனும்நின் றறியா
அப்பனே ஒற்றியூர் அரசே
மெய்யனே நினது திருவருள் விழைந்தேன்
விழைவினை முடிப்பையோ அன்றிப்
பொய்யனேன் தன்மைக் கடாதது கருதிப்
பொன்அருள் செயாதிருப் பாயோ
கையனேன் ஒன்றும் அறிந்திலேன் என்னைக்
காத்தருள் செய்வதுன் கடனே. (௯)

செய்வதுன் கடன்காண் சிவபெரு மானே
திருஒற்றி யூர்வருந் தேனே
உய்வதென் கடன்காண் அன்றிஒன் றில்லை
உலகெலாம் உடையநா யகனே
நைவதென் நெஞ்சம் என்செய்கேன் நினது
நல்அருள் பெறவிடில் என்னை
வைவதுன் அடியர் அன்றிஇவ் வுலக
வாழ்க்கையில் வரும்பொலா அணங்கே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

— o —

## 42. நாள் அவத்து அலைசல்[97]

### திரு ஒற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இன்றிருந் தவரை நாளைஇவ் வுலகில்
இருந்திடக் கண்டிலேம் ஆஆ
என்றிருந் தவத்தோர் அரற்றுகின் றனரால்
ஏழையேன் உண்டுடுத் தவமே
சென்றிருந் துறங்கி விழிப்பதே அல்லால்
செய்வன செய்கிலேன் அந்தோ
மன்றிருந் தோங்கும் மணிச்சுடர் ஒளியே
வள்ளலே ஒற்றியூர் வாழ்வே.[98] (௧)

தாவியே இயமன் தமர்வரும் அந்நாள்
சம்புநின் திருஅருள் அடையாப்
பாவியேன் செய்வ தென்என நெஞ்சம்
பதைபதைத் துருகுகின் றனன்காண்
கூவியே எனக்குன் அருள்தரின் அல்லால்
கொடியனேன் உய்வகை அறியேன்
வாவிஏர் பெறப்பூஞ் சோலைசூழ்ந் தோங்கி
வளம்பெறும் ஒற்றியூர் வாழ்வே.[99] (௨)

நீரின்மேல் எழுதும் எழுத்தினும் விரைந்து
நிலைபடா உடம்பினை ஓம்பிப்
பாரின்மேல் அலையும் பாவியேன் தனக்குப்
பரிந்தருள் பாலியாய் என்னில்
காரின்மேல் வரல்போல் கடாமிசை வரும்அக்
காலன்வந் திடில்எது செய்வேன்
வாரின்மேல் வளரும் திருமுலை மலையாள்
மணாளனே ஒற்றியூர் வாழ்வே. (௩)

கருங்கணம் சூழக் கசியும்இவ் வுடலம்
கருதும்இக் கணமிருந் ததுதான்
வருங்கணம் ஏதாய் முடியுமோ ஐயோ
வஞ்சனேன் என்செய வல்லேன்
பெருங்கணம் சூழ வடவனத் தாடும்
பித்தனே உத்தம தவத்தோர்
மருங்கணை வுறநின் றரகர எனுஞ்சொல்
வான்புகும் ஒற்றியூர் வாழ்வே. (௪)

---

97. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௬௫, ௬௬. இவற்றின் தொடக்கத்தில் "உ. சிவமயம்." என்று அடிகளாரால் குறிக்கப்பட்டிருக்கிறது.

98. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானார் தம் வாழ்நாள் வீணே கழிந்து போவது கருதி, தம்மையும், இறைவன் அருள் கொண்டு ஆளுதல் வேண்டும் என்று இறைவனிடம் பரிந்து உரைத்துவைத்தல் காண்க.

99. இப் பா முதலியவற்றோடு அடியிற்கண்ட தேவார அருண்மொழி போன்றவை காண்க:

"பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கிஇங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுள் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே."

கன்னியர் அளகக் காட்டிடை உழன்ற
　　கல்மனக் குரங்கினேன் தனைநீ
அன்னியன் என்றே கழித்திடில் உனக்கிங்
　　கார்சொல வல்லவர் ஐயா
என்னியல் அறியேன் நமன்தமர் வருநாள்
　　என்செய்வேன் என்செய்வேன் அந்தோ
மன்னிய வன்னி மலர்ச்சடை மருந்தே
　　வளங்கொளும் ஒற்றியூர் வாழ்வே. (ரு)

பசிக்குண வுழன்றுன் பாததா மரையைப்
　　பாடுதல் ஒழிந்துநீர்ப் பொறிபோல்
நசிக்கும்இவ் வுடலை நம்பினேன் என்னை
　　நமன்தமர் வருத்தில்என் செய்கேன்
விசிக்கும்நல் அரவக் கச்சினோய் நினது
　　மெய்அருள் அலதொன்றும் விரும்பேன்
வசிக்கும்நல் தவத்தோர்க் கருள்செய ஓங்கி
　　வளம்பெறும் ஒற்றியூர் வாழ்வே. (சு)

கான்றபோ றருந்தும் சுணங்கனின் பலநாள்
　　கண்டபுன் சுகத்தையே விரும்பும்
நான்றநெஞ் சகனேன் நமன்தமர் வருநாள்
　　நாணுவ தன்றிஎன் செய்கேன்
சான்றவர் மதிக்கும் நின்திரு அருள்தான்
　　சார்ந்திடில் தருக்குவன் ஐயா
மான்தனிக் கரத்தெம் வள்ளலே என்னை
　　வாழ்விக்கும் ஒற்றியூர் வாழ்வே. (எ)

மடிக்குறும் நீர்மேல் எழுத்தினுக் கிடவே
　　மைவடித் தெடுக்குநர் போல
நொடிக்குளே மறையும் உடம்பினை வளர்க்க
　　நொந்தனன் நொந்ததும் அல்லால்
படிக்குளே மனத்தால் பரிவுறு கின்றேன்
　　பாவியேன் தனக்கருள் புரியாய்
வடிக்குறும் தமிழ்கொண் டன்பருக் கருளும்
　　வள்ளலே ஒற்றியூர் வாழ்வே. (அ)

அங்கையில் புண்போல் உலகவாழ் வனைத்தும்
அழிதரக் கண்டுநெஞ் சயர்ந்தே
பங்கமுற் றலைவ தன்றிநின் கமல
பாதத்தைப் பற்றிலேன் அந்தோ
இங்கெனை நிகரும் ஏழையார் எனக்குன்
இன்னருள் எவ்வணம் அருள்வாய்
மங்கையோர் புடைகொள் வள்ளலே அழியா
வளங்கொளும் ஒற்றியூர் வாழ்வே. (கூ)

கணத்தினில் உலகம் அழிதரக் கண்டும்
கண்ணிலார் போல்கிடந் துழைக்கும்
குணத்தினில் கொடியேன் தனக்குநின் அருள்தான்
கூடுவ தெவ்வணம் அறியேன்
பணத்தினில் பொலியும் பாம்பரை ஆர்த்த
பரமனே பிரமன்மால் அறியா
வணத்தினுல் நின்ற மாணிக்கச் சுடரே
வள்ளலே ஒற்றியூர் வாழ்வே. (௪0)

திருச்சிற்றம்பலம்

— o —

## 43. அவல மதிக்கு அலைசல்[100]

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மண்ணை மனத்துப் பாவியன்யான் மடவார் உள்ளே வதிந்தளிந்த
புண்ணை மதித்துப் புகுகின்றேன் போதம் இழந்தேன் புண்ணியனே
எண்ண இனிய நின்புகழை ஏத்தேன் ஓதிபோல் இருக்கின்றேன்
தண்நல் அமுதே நீஎன்னைத் தடுத்திங் காளத் தக்கதுவே.[101] (க)

---

100. இப் பதிக ஏடுகளின் எண்கள் ஈ௯ஐ, ஈ௯அ. இவற்றின் முதற்கண் முறையே, "உ. சிவமயம்." என்றும், "உ" என்றும், அடிகளாரால் குறிக்கப்பட்டிருக்கின்றன.

101. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானுர் உடற்பிணி உயிர்ப்பிணி ஊட்டும் காம வாழ்வினின்றும் தம்மைக் கரையேற்றி அருளுமாறு இறைவன்பால் முறையிட்டுக் கொள்ளுதல் காண்க.

தக்க தறியேன் வெறியேன்நான் சண்ட மடவார் தம்முலைதோய்
துக்கம் அதனைச் சுகம்என்றே துணிந்தேன் என்னைத் தொழும்பன்எனில்
மிக்க அடியார் என்சொல்லார் விண்ணோர் மண்ணோர் என்புகலார்
செக்கர் நிறத்துப் பொன்மேனித் திருநீற் றொளிசேர் செங்கரும்பே.[102]

கரும்பே ஒற்றி யூர்அமர்ந்த கனியே உன்தன் கழல்அடியை
விரும்பேன் அடியார் அடித்தொண்டில் மேவேன் பொல்லா விடமனைய
பெரும்பேய் மாதர் பிணக்குழியில் பேதை மனம்போந் திடச்சூறைத்
துரும்பே என்னச் சுழல்கின்றேன் துணையொன் றறியேன் துனியேனே.

துனியே பிறத்தற் கேதுஎனும் துட்ட மடவார் உள்ததும்பும்
பனிஎய் மலஞ்சூழ் முடைநாற்றப் பாழும் குழிக்கே வீழ்ந்திளைத்தேன்
இனிஏ துறுமோ என்செய்கேன் எளியேன் தனைநீ ஏன்றுகொளாய்
கனியே கருணைக் கடலேஎன் கண்ணே ஒற்றிக் காவலனே. (௪)

வலமே உடையார் நின்கருணை வாய்ந்து வாழ்ந்தார் வஞ்சகனேன்
மலமே உடையேன் ஆதலினால் மாதர் எனும்பேய் வாக்கும்உவர்ச்
சலமே ஒழுக்குப் பொத்தரிடைச் சாய்ந்து தளர்ந்தேன் சார்பறியேன்
நலமே ஒற்றி நாடுடையாய் நாயேன் உய்யும் நாள்என்றோ. (௫)

நாளை வருவ தறியேன்நான் நஞ்சம் அனைய நங்கையர்தம்
ஆளை அழுத்தும் நீர்க்குழியில் அழுந்தி அழுந்தி எழுந்தலைந்தேன்
கோளை அகற்றி நின்அடிக்கே கூடும் வண்ணம் குறிப்பாயோ
வேளை எரித்த மெய்ஞ்ஞான விளக்கே முத்தி வித்தகமே. (௬)

முத்தி முதலே முக்கணுடை மூரிக் கரும்பே நின்பதத்தில்
பத்தி முதலே இல்லாதேன் பரம சுகத்தில் படிவேனோ
எத்தி அழைக்கும் கருங்கண்ணார் இடைக்குள் பிளந்த வெடிப்பதனில்
தத்தி விழுந்தேன் எழுவேனேல் தள்ளா நின்ற தென்மனமே. (௭)

---

102. இப் பா முதலியவற்றோடு கீழ்க்கண்ட தேவாரத் தெய்வ மொழி போல்வன கண்டுணர்க:

"அருப்புப் போல்முலை யார்அல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர்நிலை விட்டுநல் இட்டமாய்த்
திருப்புத் தூரனைச் சிந்தை செயச் செயக்
கருப்புச் சாற்றிலும் அண்ணிக்கும் காண்மினே."

மனமே முன்னர் வழிகாட்டப் பின்னே சென்று மங்கையர்தம்
தனமே என்னும் மலையேறிப் பார்த்தேன் இருண்ட சலதிஒன்று
முனமே தோன்ற மதிமயங்கி விழுந்தேன் எழுவான் முயலுகின்றேன்
இனமே என்னை நீஅன்றி எடுப்பார் இல்லை என்அரசே. (அ)

என்னைக் கொடுத்தேன் பெண்பேய்கட் கின்பம் எனவே எனக்கவர்நோய்
தன்னைக் கொடுத்தார் நான்அந்தோ தளர்ந்து நின்றேன் அல்லதுசெம்
பொன்னைக் கொடுத்தும் பெறஅரிய பொருளே உன்னைப் போற்றுகிலேன்
இன்னல் கொடுத்த பவமுடையேன் எற்றுக் கிவண்நிற் கின்றேனே.

எற்றுக் கடியர் நின்றதுநின் இணைத்தாள் மலரை ஏத்தஅன்றோ
மற்றிக் கொடியேன் அஃதின்றி மடவார் இடைவாய் மணிப்பாம்பின்
புற்றுக் குழன்றேன் என்னேஎன் புந்தி எவர்க்குப் புகல்வேனே
கற்றுத் தெளிந்தோர் புகழ்ஒற்றிக் கண்ணூர்ந் தோங்கும் கற்பகமே.

ஓங்கும் பொருளே திருஒற்றி யூர்வாழ் அரசே உனைத்துதியேன்
தீங்கும் புழுவும் சிலைநீரும் சீழும் வழும்பும் சேர்ந்தலைக்கத்
தூங்கும் மடவார் புலைநாற்றத் தூம்பில் நுழையும் சூதகனேன்
வாங்கும் பவம்தீர்த் தருள்வதுநின் கடன்காண் இந்த மண்ணிடத்தே.

திருச்சிற்றம்பலம்

— o —

## 44. ஆனா வாழ்வின் அலைசல்[103]

### திரு ஒற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

**து**ள்ளிவாய் மடுக்கும் காளையர் ஆட்டத்
துடுக்கினை ஒடுக்குறும் காமக்
கொள்ளிவாய்ப் பேய்கள் எனுமட வியர்தம்
கூட்டத்துள் நாட்டம்வைத் துழன்றேன்

103. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௰௯, ௱௨௰. இவற்றின் முதற்கண் முறையே "உ. சிவமயம்." என்றும், "உ" என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

104. இப் பதிகத்தில் நம் பெருமானார், இறைவன்பால் அடிமை பூண்ட தம்மை மாய வாழ்க்கையினின்றும் மீட்பித்து ஆட்கொண்டருள வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுதல் காண்க.

உள்ளிவாய் மடுத்துள் உருகிஆ னந்த
　　உததிபோல் கண்கள்நீர் உகுப்பார்
அள்ளிவாய் மடுக்கும் அமுதமே எங்கள்
　　அண்ணலே ஒற்றியூர் அரசே.[104]　　(க)

ஒற்றியூர் அமரும் ஒளிகெழு மணியே
　　உன்அடி உள்கிநின் றேத்தேன்
முற்றியூர் மலினக் குழிஇருள் மடவார்
　　முலைஎனும் மலநிறைக் குவையைச்
சுற்றிஊர் நாயின் சுழன்றனன் வறிதே
　　சுகம்எனச் சூழ்ந்தழி உடலைப்
பற்றியூர் நகைக்கத் திரிதரு கின்றேன்
　　பாவியேன் உய்திறம் அரிதே.　　(உ)

அரியது நினது திருஅருள் ஒன்றே
　　அவ்வருள் அடைதலே எவைக்கும்
பெரியதோர் பேறென் றுணர்ந்திலேன் முருட்டுப்
　　பேய்களை ஆயிரம் கூட்டிச்
சரிஎனச் சொலினும் போதுரு மடமைத்
　　தையலார் மையலில் அழுந்திப்
பிரியமுற் றலைந்தேன் ஏழைநான் ஒற்றிப்
　　பெருமநின் அருளெனக் குண்டே.[105]　　(ங)

பெருமநின் அருளே அன்றிஇவ் வுலகில்
　　பேதையர் புழுமலப் பிலமாம்
கருமவாழ் வினைத்தும் வேண்டிலேன் மற்றைக்
　　கடவுளர் வாழ்வையும் விரும்பேன்
தருமவா ரிதியே தடம்பணை ஒற்றித்
　　தலத்தமர் தனிமுதல் பொருளே
துருமவான் அமுதே அடியனேன் தன்னைச்
　　சோதியா தருள்வதுன் பரமே.　　(ச)

---

105. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தாயுமானாரின் திருப்பாடல் போல்வனவற்றை ஒத்துணர்க:

"முருந்திள நகையார் பார முலைமுகம் தழுவிச் செவ்வாய்
விருந்தமிர்(து) எனஅ ருந்தி வெறியாட்டுக் காளாய் நாளும்
இருந்தலோ காய தப்பேர் இனத்தனை் இருந்த ஏழை
பொருந்தவும் கதிமேல் உண்டோ பூரணா னந்த வாழ்வே."

அருள்வதுன் இயற்கை உலகெலாம் அறியும்
ஐயவோ நான்அதை அறிந்தும்
மருள்வதென் இயற்கை என்செய்வேன் இதனை
மனங்கொளா தருள்அரு ளாயேல்
தெருள்வதொன் றின்றி மங்கையர் கொங்கைத்
திடர்மலைச் சிகரத்தில் ஏறி
உருள்வதும் அல்குல் படுகுழி விழுந்தங்
குலைவதும் அன்றிஒன் றுண்டோ. (ரு)

உண்டுநஞ் சமரர் உயிர்பெறக் காத்த
ஒற்றியூர் அண்ணலே நின்னைக்
கண்டுநெஞ் சுருகிக் கண்கள்நீர் சோரக்
கைகுவித் திணையடி இறைஞ்சேன்
வண்டுநின் றலைக்கும் குழல்பிறை நுதலார்
வஞ்சக விழியினால் மயங்கிக்
குண்டுநீர் ஞாலத் திடைஅலை கின்றேன்
கொடியனேன் அடியனேன் அன்றே. (சு)

அன்றுநீ அடிமைச் சாதனம் காட்டி
ஆண்டஆ ரூரனார் உன்னைச்
சென்றுதூ தருள்என் றிரங்குதல் நோக்கிச்
சென்றநின் கருணையைக் கருதி
ஒன்றுதோ றுள்ளம் உருகுகின் றனன்காண்
ஒற்றியூர் அண்ணலே உலகத்
தென்றுமால் உழந்தேன் எனினும்நின் அடியேன்
என்தனைக் கைவிடேல் இனியே. (எ)

இனியநின் திருத்தாள் இணைமலர் ஏத்தேன்
இளமுலை மங்கையர்க் குள்ளம்
கனியஅக் கொடியார்க் கேவல்செய் துழன்றேன்
கடையனேன் விடயவாழ் வுடையேன்
துனியஇவ் வுடற்கண் உயிர்பிரிந் திடுங்கால்
துணைநினை அன்றிஒன் றறியேன்
தனியமெய்ப் போத வேதநா யகனே
தடம்பொழில் ஒற்றியூர் இறையே. (அ)

இறையும்நின் திருத்தாள் கமலங்கள் ஏத்தேன்
எழில்பெற உடம்பினை ஓம்பிக்
குறையும்வெண் மதிபோல் காலங்கள் ஒழித்துக்
கோதையர் குறுங்குழி அளற்றில்
பொறையும் நல் நிறையும் நீத்துழன் றலைந்தேன்
பொய்யனேன் தனக்குவெண் சோதி
நிறையும்வெள் நீற்றுக் கோலனே ஒற்றி
நிமலனே அருளுதல் நெறியே. (௯)

நெறியிலேன் கொடிய மங்கையர் மையல்
நெறியிலே நின்றனன் எனினும்
பொறியிலேன் பிழையைப் பொறுப்பதுன் கடனே
பொறுப்பதும் அன்றிஇவ் வுலக
வெறியிலே இன்னும் மயங்கிடா துன்தன்
விரைமலர் அடித்துணை ஏத்தும்
அறிவுளே அருள்வாய் ஒற்றியூர் அரசே
அன்றினர் துள்ளறுத் தவனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

— o —

## 45. அருள் திறத்து அலைசல்[106]

திரு ஒற்றியூர்

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

நறைமணக்கும் கொன்றை நதிச்சடில நாயகனே
கறைமணக்கும் திருநீல கண்டப் பெருமானே
உறைமணக்கும் பூம்பொழில்சூழ் ஒற்றிஅப்பா உன்னுடைய
மறைமணக்கும் திருஅடியை வாய்நிரம்ப வாழ்த்தேனே.[107] (௧)

---

106. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱உ௧, ௱உ௨, ௱உ௩, ௱உ௪, ௱உ௫. இவற்றின் தொடக்கத்தில் முறையே "உ. சிவமயம். ஒற்றியப்பர்." என்றும், "உ. சிவமயம்." என்றும், "உ. சிவமயம்." என்றும், "உ. சிவமயம். சிவமயம்." என்றும், "உ. சிவமயம். சிவமயம்." என்றும் நம் பெருமானர் எழுதிச் சிந்தித்திருக்கிறர்கள்.

அலைவளைக்கும் பாற்கடலான் அம்புயத்தான் வாழ்த்திநிதம்
தலைவளைக்கும் செங்கமலத் தாளுடையாய் ஆளுடையாய்
உலைவளைக்கா முத்தலைவேல் ஒற்றிஅப்பா உன்னுடைய
மலைவளைக்கும் கைம்மலரின் வண்மைதனை வாழ்த்தேனே.[108] (௨)

ஆறடுத்துச் சென்றஎங்கள் அப்பருக்கா அன்றுகட்டுச்
சோறெடுத்துச் சென்ற துணையே சுயஞ்சுடரே
ஊறெடுத்தோர் காணரிய ஒற்றிஅப்பா உன்னுடைய
நீறடுத்த எண்தோள் நிலைமைதனைப் பாரேனே. (௩)

சைவத் தலைவர் தவத்தோர்கள் தம்பெருமான்
மெய்வைத்த உள்ளம் விரவிநின்ற வித்தகனே
உய்வைத்த உத்தமனே ஒற்றிஅப்பா உன்னுடைய
தெய்வப் புகழ்என் செவிநிறையக் கேளேனே. (௪)

பாடுகின்றோர் பாடப் பரிசளிக்கும் புண்ணியனே
தேடுகின்றோர் தேடநிற்கும் தியாகப் பெருமானே
ஊடுகின்றோர் இல்லாத ஒற்றியப்பா அம்பலத்துள்
ஆடுகின்ற சேவடிகண் டல்லல்எலாம் தீரேனே. (௫)

பூணாக மாடப் பொதுநடிக்கும் புண்ணியனே
சேணாகம் வாங்கும் சிவனே கடல்விடத்தை
ஊணாக உள்ளுவந்த ஒற்றிஅப்பா மால்அயனும்
காணாத நின்உருவைக் கண்டு களியேனே. (௬)

கொள்ளுவார் கொள்ளும் குலமணியே மால்அயனும்
துள்ளுவார் துள்அடக்கும் தோன்றலே சூழ்ந்துநிதம்
உள்ளுவார் உள்உறையும் ஒற்றிஅப்பா உன்னுடைய
தெள்ளுவார் பூங்கழற்கென் சிந்தைவைத்து நில்லேனே. (௭)

செவ்வண்ண மேனித் திருநீற்றுப் பேரழகா
எவ்வண்ணம் நின்வண்ணம் என்றறிதற் கொண்ணாதாய்
உவ்வண்ணன் ஏத்துகின்ற ஒற்றிஅப்பா உன்வடிவம்
இவ்வண்ணம் என்றென் இதயத் தெழுதேனே. (௮)

---

107. இப்பதிகத்தில் நம் அடிகளார், தம் இழிவையும் இறைவன் பேரருள் வண்ணத்தையும் கூறி, எஞ்ஞான்று, தாம் அப் பேரருளில் தம் எல்லாக் கருவிகரணங்களோடும் ஈடுபட்டுக் குழைந்து வாழ்தல் கைகூடும் என்று வருந்துதல் காண்க.

மன்றுடையாய் மால்அயனும் மற்றும்உள வானவரும்
குன்றுடையாய் என்னக் குறைதவிர்த்த கோமானே
ஒன்றுடையாய் ஊர்விடையாய் ஒற்றிஅப்பா என்னுடைய
வன்றுடையாய் என்றுன் மலரடியைப் போற்றேனே. (௯)

குற்றம் செயினும் குணமாகக் கொண்டருளும்
நற்றவர்தம் உள்ளம் நடுநின்ற நம்பரனே
உற்றவர்தம் நற்றுணைவா ஒற்றிஅப்பா என்கருத்து
முற்றிடநின் சந்நிதியின் முன்நின்று வாழ்த்தேனே. (௧0)

வஞ்ச மடவார் மயக்கும் மயக்கொழிய
நஞ்சம்அணி கண்டத்து நாதனே என்றென்று
உஞ்சவர்கள் வாழ்த்துகின்ற ஒற்றிஅப்பா உன்னுடைய
கஞ்ச மலர்அடிக்கே காதலுற்றுப் போற்றேனே. (௧௧)

இன்னல் உலக இருள்நடையில் நாள்தோறும்
துன்னவரும் நெஞ்சத் துடுக்கழிய நல்லோர்கள்
உன்னல்உறும் தெள்ளமுதே ஒற்றிஅப்பா என்வாய்உன்
தன்அடைவே பாடித் தழும்பேறக் காணேனே. (௧௨)

பெண்மணியே என்றுலகில் பேதையரைப் பேசாதென்
கண்மணியே கற்பகமே கண்ணுதலில் கொள்கரும்பே
ஒண்மணியே தேனேஎன் றொற்றிஅப்பா உன்தனைநான்
பண்மணஞ்செய் பாட்டில் பரவித் துதியேனே. (௧௩)

மானமிலார் நின்தாள் வழுத்தாத வன்மனத்தார்
ஈனர்அவர் பால்போய் இளைத்தேன் இளைப்பாற
ஊனமிலார் போற்றுகின்ற ஒற்றிஅப்பா உன்னுடைய
ஞான அடியின்நிழல் நண்ணி மகிழேனே. (௧௪)

கல்லார்க் கிதங்கூறிக் கற்பழிந்து நில்லாமல்
எல்லார்க்கும் நல்லவனே என்அரசே நல்தருமம்
ஒல்லார் புரமெரித்த ஒற்றிஅப்பா உன்அடிக்கே
சொல்லால் மலர்தொடுத்துச் சூழ்ந்தணிந்து வாழேனே. (௧௫)

---

108. இப் பா முதலியவற்றோடு "தலையே நீ வணங்காய்" என்னும் தேவாரத் திருப்பதிகம் போல்வனவற்றை ஒத்துணர்ந்து மகிழ்க.

கற்பவற்றைக் கல்லாக் கடையரிடம் சென்றவர்முன்
அற்பஅற்றைக் கூவிக் கலையும் அலைப்பொழிய
உற்பவத்தை நீக்குகின்ற ஒற்றிஅப்பா உன்னுடைய
நற்பதத்தை ஏத்திஅருள் நல்நலந்தான் நண்ணேனே. (கசு)

தந்தைதாய் மக்கள்மனை தாரம்எனும் சங்கடத்தில்
சிந்தைதான் சென்று தியங்கி மயங்காமே
உந்தைஎன்போர் இல்லாத ஒற்றிஅப்பா உன்அடிக்கீழ்
முந்தையோர் போன்று முயங்கி மகிழேனே. (கஎ)

பொய்ஒன்றே அன்றிப் புறம்பொன்றும் பேசாத
வையொன்றும் தீராற்ற வாயார்க்கு மேலானேன்
உய்என் றருள்ஈயும் ஒற்றிஅப்பா உன்னுடைய
மெய்ஒன்று நீற்றின் விளக்கமது பாரேனே. (கஅ)

தூக்கமும்முன் தூங்கியபின் சோறிலையே என்னும்அந்த
ஏக்கமுமே அன்றிமற்றோர் ஏக்கமிலா ஏழையனேன்
ஊக்கமுளோர் போற்றுகின்ற ஒற்றிஅப்பா நின்அடிக்கீழ்
நீக்கமிலா ஆனந்த நித்திரைதான் கொள்ளேனே. (கசு)

வாதுபுரிந் தீன மடவார் மதித்திடுவான்
போதுநிதம் போக்கிப் புலம்பும் புலைநாயேன்
ஓதுமறை யோர்குலவும் ஒற்றிஅப்பா ஊரனுக்காத்
தூதுசென்ற நின்தாள் துணைப்புகழைப் பாடேனே. (உ0)

பொன்னாசை யோடும் புலைச்சியர்தம் பேராசை
மன்னாசை மன்னுகின்ற மண்ணாசைப் பற்றறுத்தே
உன்னாசை கொண்டேஎன் ஒற்றிஅப்பா நான்மகிழ்ந்துன்
மின்னாரும் பொன்மேனி வெண்ணீற்றைப் பாரேனே. (உக)

கள்உண்ட நாய்போல் கடுங்காம வெள்ளமுண்டு
துள்உண்ட நெஞ்சத் துடுக்கடக்கி அன்பர்கள்தம்
உள்உண்ட தெள்அமுதே ஒற்றிஅப்பா உன்தனைநான்
வெள்உண்ட நந்தி விடைமீதில் காணேனே. (உஉ)

பேராத காமப் பிணிகொண்ட நெஞ்சகனேன்
வாராத ஆனந்த வாழ்வுவந்து வாழ்ந்திடவே
ஓராதார்க் கெட்டாத ஒற்றிஅப்பா உன்னுடைய
நீரார் சடைமேல் நிலவொளியைக் காணேனே. (உ௩)

வன்னெஞ்சப் பேதை மடவார்க் கழிந்தலையும்
கன்னெஞ்சப் பாவியன்யான் காதலித்து நெக்குருகி
உன்னெஞ்சத் துள்உறையும் ஒற்றிஅப்பா உன்னுடைய
வெண்ணஞ் சணிமிடற்றை மிக்குவந்து வாழ்த்தேனே. (உச)

புண்ணியமோர் போதும் புரிந்தறியாப் பொய்யவனேன்
எண்ணியதோர் எண்ணம் இடர்இன்றி முற்றியிட
உண்ணிலவு நல்ஒளியே ஒற்றியப்பா உன்னுடைய
தண்ணிலவு தாமரைப்பொன் தாள்முடியில் கொள்ளேனே. (உரு)

நன்றிதுஎன் றோர்ந்தும்அதை நாடாது நல்நெறியைக்
கொன்றிதுநன் றென்னக் குறிக்கும் கொடியவன்யான்
ஒன்றுமனத் துள்ஒளியே ஒற்றிஅப்பா உன்னுடைய
வென்றி மழுப்படையின் மேன்மைதனைப் பாடேனே. (உசா)

மண்கிடந்த வாழ்வின் மதிமயக்கும் மங்கையரால்
புண்கிடந்த நெஞ்சப் புலையேன் புழுக்கம்அற
ஒண்கிடந்த முத்தலைவேல் ஒற்றிஅப்பா நாரணன்தன்
கண்கிடந்த சேவடியின் காட்சிதனைக் காணேனே. (உஎ)

கூட்டுவிக்குள் மேல்எழவே கூற்றுவன்வந் தாவிதனை
வாட்டுவிக்கும் காலம் வருமுன்னே எவ்வுயிர்க்கும்
ஊட்டுவிக்கும் தாயாகும் ஒற்றிஅப்பா நீஉலகை
ஆட்டுவிக்கும் அம்பலத்துன் ஆட்டமதைப் பாரேனே. (உஅ)

மின்ஒப்பாம் வாழ்வை வியந்திடருள் வீழ்ந்தலைந்தேன்
பொன்ஒப்பாய் தெய்வமணப் பூஒப்பாய் என்னினுமே
உன்ஒப்பார் இல்லாத ஒற்றிஅப்பா உன்னுடைய
தன்ஒப்பாம் வேணியின்மேல் சார்பிறையைப் பாரேனே. (உகா)

சீலம்அற நிற்கும் சிறியார் உறவிடைநல்
காலம்அறப் பேசிக் கழிக்கின்றேன் வானவர்தம்
ஓலம்அற நஞ்சருந்தும் ஒற்றிஅப்பா உன்னுடைய
நீல மணிமிடற்றின் நேர்மைதனைப் பாரேனே. (ௐ0)

சீர்புகழும் மால்புகழும் தேவர்அயன் தன்புகழும்
யார்புகழும் வேண்டேன் அடியேன் அடிநாயேன்
ஊர்புகழும் நல்வளங்கொள் ஒற்றிஅப்பா உன்இதழித்
தார்புகழும் நல்தொழும்பு சார்ந்துன்பால் நண்ணேனே. (ௐக)

ஆதவன்தன் பல்இறுத்த ஐயற் கருள்புரிந்த
நாதஅர னேஎன்று நாத்தழும்பு கொண்டேத்தி
ஓதவள மிக்கஎழில் ஒற்றிஅப்பா மண்ணிடந்தும்
மாதவன்முன் காணு மலர்அடிக்கண் வைகேனே. (௩௨)

கல்லைப் புறங்கண்ட காய்மனத்துக் கைதவனேன்
தொல்லைப் பழவினையின் தோய்வகன்று வாய்ந்திடவே
ஒல்லைத் திருஅருள்கொண் டொற்றிஅப்பா உன்னுடைய
தில்லைப் பொதுவில் திருநடனம் காணேனே. (௩௩)

கடையவனேன் கன்மனத்தேன் கைதவனேன் வஞ்ச
நடையவனேன் நாணிலியேன் நாய்க்கிணையேன் துன்பொழிய
உடையவனே உலகேத்தும் ஒற்றிஅப்பா நின்பால்வந்
தடையநின்று மெய்குளிர்ந்தே ஆனந்தம் கூடேனே. (௩௪)

வாதை மயல்காட்டும் மடவார் மலக்குழியில்
பேதை எனவீழ்ந்தே பிணிஉழந்த பேயடியேன்
ஓதை கடற்கரைவாய் ஒற்றிஅப்பா வாழ்த்துகின்றோர்
தீதை அகற்றும்உன் றன் சீர்அருளைச் சேரேனே. (௩௫)

பொய்யர்க் குதவுகின்ற புன்மையினேன் வன்மைசெயும்
வெய்யற் கிரிமியென மெய்சோர்ந் திளைத்தலைந்தேன்
உய்யற் கருள்செய்யும் ஒற்றிஅப்பா உன்அடிசேர்
மெய்யர்க் கடிமைசெய்துன் மென்மலர்த்தாள் நண்ணேனே. (௩௬)

திருச்சிற்றம்பலம்

— o —

## 46. திரு விண்ணப்பம்[109]

### திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சழக்கி ருந்ததென் னிடத்தில்ஆ யினும்நீர்
தந்தை ஆதலின் சார்ந்தநல் நெறியில்
பழக்கி வைப்பது தேவரீர்க் குரிய
பண்பன் றோஎனைப் பரிந்திலீர் ஆனல்

வழக்கி ருப்பதிங் குழக்குமென் றனக்கும்
வகுத்துக் கூறுதல் மரபுமற் றன்றால்
புழைக்கை மாவுரி யீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ.[110] (க)

அழுது நெஞ்சயர்ந் துமைநினைக் கின்றேன்
ஐய நீர்அறி யாததும் அன்றே
கழுது துன்றிய காட்டகத் தாடும்
கதியி லீர்எனக் கழறினன் அல்லால்
பழுது பேசின தொன்றிலை ஒற்றிப்
பதியில் வாழ்படம் பக்கநா யகரே
பொழுது போகின்ற தென்செய்கேன் எனைநீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ.[111] (உ)

முன்னை மாதவ முயற்சிஒன் றில்லா
மூட னேன்தனை முன்வர வழைத்துப்
பின்னை ஒன்றும்வாய்ப் பேச்சிலீ ரானால்
பித்தர் என்றுமைப் பேசிட லாமே
என்னை நான்பழித் திடுகின்ற தல்லால்
இகழ்கி லேன்உமை எழில்ஒற்றி உடையீர்
புன்னை அஞ்சடை யீர்எனை உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. (ங)

வன்மை பேசிய வன்தொண்டர் பொருட்டாய்
வழக்குப் பேசிய வள்ளல்நீர் அன்றோ
இன்மை யாளர்போல் வலியவந் திடினும்
ஏழை யாம்இவன் என்றொழித் திட்டால்

---

109. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௬௩௯, ௬௩௭. இவற்றின் முதற்கண் முறையே "உ. சிவமயம். சிவமயம். ஒற்றியூர்." என்றும், "உ. சிவமயம்." என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

110. இப் பதிகத்தில் நம் பெருமானார், தம் குற்றங் குறைகளை இறைவன் பொருட்படுத்தினால், தாம் உய்யுமாறில்லை என்று கல் நெஞ்சமும் கரைந்துருகுமாறு முறையிட்டுக் கண்ணீர் வார்தல் கண்டுணர்க.

தன்மை அன்றது தருமமும் அன்றால்
தமிய னேன்இன் னும் சாற்றுவ தென்னே
பொன்மை அஞ்சடை யீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. (சு)

உறங்கு கின்றதும் விழிப்பதும் மகிழ்வாய்
உண்ணு கின்றதும் உடுப்பதும் மயக்குள்
இறங்கு கின்றதும் ஏறுகின் றதுமாய்
எய்க்கின் றேன்மனம் என்னினும் அடியேன்
அறங்கொள் நும்அடி அரண்என அடைந்தேன்
அயர்வு தீர்த்தெனை ஆட்கொள கிலையீர்
புறங்கொள் காட்டகத் தீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. (ரு)

கரும்பின் கட்டியும் கனியையும் கொடுத்தால்
கயவர் ஆயினும் கசக்கும்என் றுரையார்
அரும்பின் கட்டிள முலைஉமை மகிழும்
ஐய நீர்உம தருள்எனக் களிக்க
இரும்பின் கட்டிநேர் நெஞ்சினேன் எனினும்
ஏற்று வாங்கிடா திருந்ததுண் டேயோ
பொரும்பின் கட்டுரி யீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. (சா)

---

111. இப் பா முதலியவற்றோடு பின்வரும் மணிவாசகத் தெள்ளமுதினையும், தாயுமானப் பெருந்தகையாரின் முறையீட்டினையும் போல்வன வற்றை ஒத்துணர்ந்து மகிழ்க :

"தாயாய் முலையைத் தருவானே தாரா(து) ஒழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாள்அடைந்தேன் தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய் நான்தான் வேண்டாவோ."

"தாயான தண்ணருளை நிரம்ப வைத்துத்
தமியேனைப் புரவாமல் தள்ளித் தள்ளிப்
போயான(து) என்கொல்ஐயா ஏக தேசம்
பூரணத்துக்(கு) உண்டோதான் புகலல் வேண்டும்."

விருப்பு நின்றதும் பதமலர் மிசைஅவ்
விருப்பை மாற்றுதல் விரகுமற் றன்றால்
கருப்பு நேரினும் வள்ளியோர் கொடுக்கும்
கடமை நீங்குறார் உடைமையின் றேனும்
நெருப்பு நம்உரு ஆயினும் அருகில்
நிற்க அஞ்சுறேன் நீலனும் அன்றால்
பொருப்பு வில்லுடை யீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. (எ)

கொடிய நஞ்சமு தாக்கிய உமக்கிக்
கொடிய னேனைஆட் கொள்ளுதல் அரிதோ
அடியர் தம்பொருட் டடிபடு வீர்எம்
ஐய நும்மடிக் காட்பட விரைந்தேன்
நெடிய மால்அயன் காண்கில ரேனும்
நின்று காண்குவல் என்றுளம் துணிந்தேன்
பொடிய நீறணி வீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. (அ)

வினையி னால்உடல் எடுத்தன னேனும்
மேலை நாள்உமை விரும்பிய அடியேன்
எனைஇன் னுன்என அறிந்திலி ரோநீர்
எழுமைச் செய்கையும் இற்றென அறிவீர்
மனையி னால்வரும் துயர்கெட உமது
மரபு வேண்டியே வந்துநிற் கின்றேன்
புனையி னால்அமர்ந் தீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. (கூ)

பிழைபு ரிந்தனன் ஆகிலும் உமது
பெருமை நோக்கில்அப் பிழைசிறி தன்றே
மழைபு ரிந்திடும் வண்கையை மாற்ற
மதிக்கின் றோர்எவர் மற்றிலை அதுபோல்
உழைபு ரிந்தருள் வீர்எனில் தடுப்பார்
உம்பர் இம்பரில் ஒருவரும் இலைகாண்
புழைபு ரிந்தகை உலவொற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. (க0)

திருச்சிற்றம்பலம்

# 47. பிரசாத விண்ணப்பம்[112]

**திரு ஒற்றியூர்**

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பசைஇலாக் கருங்கல் பாறைநேர் மனத்துப்
பதகனேன் படிற்றுரு வகனேன்
வசைஇலார்க் கருளும் மாணிக்க மணியே
வள்ளலே நினைத்தொழல் மறந்து
நசைஇலா மலம்உண் டோடுறும் கொடிய
நாய்என உணவுகொண் டுற்றேன்
தசைஎலாம் நடுங்க ஒற்றியில் உன்னால்
தண்டிக்கப் பட்டனன் அன்றே.[113] ( ௧ )

அன்னைபோன் றடியர்க் கருத்தியில் அருத்தும்
அப்பநின் அடியிணை காணா
தென்னையோ மலம்உண் டுழன்றிடும் பன்றி
என்னஉண் டுற்றனன் அதனால்
புன்னைஅம் சடைஎம் புண்ணிய ஒளியே
பூதநா யகஎன் றன் உடலந்
தன்னைநீ அமர்ந்த ஒற்றியில் உன்னால்
தண்டிக்கப் பட்டனன் அன்றே.[114] ( ௨ )

கண்ணினால் உனது கழற்பதம் காணும்
கருத்தினை மறந்துபாழ் வயிற்றை
மண்ணினால் நிறைத்தல் எனஉண வருந்தி
மலம்பெற வந்தனன் அதனால்

---

112. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௪௰, ௱௪௧; இவற்றின் முதற்கண் முறையே "உ. ஒற்றியூர்." என்றும் "உ. சிவமயம்." என்றும் அடிகளாரால் குறிக்கப்பட் டிருக்கின்றன.

113. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம், நாணாளைய ஒழுக்கந் தவறி, ஒரு நாள் சிவ சிந்தனை செய்யாது உண்டமைக்காக, இறைவன் தம்மைத் தண்டித்து அறிவுறுத்தினான் என்றுணர்ந்து, பெருமிதங் கொண்டு அமைவு கொள்ளுதல் காண்க.

எண்ணிறல் அடங்கா எண்குணக் குன்றே
இறைவனே நீஅமர்ந் தருளும்
தண்ணிறல் ஓங்கும் ஒற்றியில் உன்றல்
தண்டிக்கப் பட்டனன் அன்றே. ( ௩ )

நின்முனம் நீல கண்டம்என் றேதும்
நெறிமறந் துணவுகொண் டந்தோ
பொன்முனம் நின்ற இரும்பென நின்றேன்
புலையனேன் ஆதலால் இன்று
மின்முனம் இலங்கும் வேணிஅம் கனியே
விரிகடல் தாணேசூழ் உலகம்
தன்முனம் இலங்கும் ஒற்றியில் உன்றல்
தண்டிக்கப் பட்டனன் அன்றே. ( ௪ )

குழிக்குமண் அடைக்கும் கொள்கைபோல் பாழும்
கும்பியை ஓம்பினன் அல்லால்
செழிக்கும்உன் திருமுன் நீலகண் டந்தான்
செப்புதல் மறந்தனன் அதனல்
விழிக்குள்நின் றிலங்கும் விளங்கொளி மணியே
மென்கரும் பின்றவெண் முத்தம்
தழிக்கொளும் வயல்சூழ் ஒற்றியில் உன்றல்
தண்டிக்கப் பட்டனன் அன்றே. ( ௫ )

கமரிடை மலநீர் கவிழ்த்தல்போல் வயிற்றுக்
கடன்கழித் திட்டனன் அல்லால்
அமரிடைப் புரமூன் றெரித்தருள் புரிந்த
ஐயனே நினைத்தொழல் மறந்தேன்
சமரிடை மனத்தேன் ஆதலால் முனிவர்
சங்கர சிவசிவ என்றே
தமரிடை ஓங்கும் ஒற்றியில் உன்றல்
தண்டிக்கப் பட்டனன் அன்றே. ( ௬ )

---

114. இப் பா முதலியவற்றேடு அடியில் காணும் திருநாவுக்கரசு நாயனர் தெய்வப் பெருமறை போன்றவற்றை ஒத்துணர்ந்து தெளிக :

"ஓதுவித் தாய்முன் அறவுரை காட்டி அமணரொடே
காதுவித் தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணிபிழைக் கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பாய்உகப் பாய்முனி வாய்கச்சி ஏகம்பனே."

அருமருந் தனையாய் நின்திரு முன்போந்
தரகரா எனத்தொழல் மறந்தே
இருளுறும் மனத்தேன் மலத்தினும் இழிந்த
இயல்புற உண்டனன் அதனால்
கருமருந் தனைய அஞ்செழுத் தோதும்
கருத்தர்போல் திருத்தம தாகத்
தருமநின் றோங்கும் ஒற்றியில் உன்னால்
தண்டிக்கப் பட்டனன் அன்றே. (௭)

கண்ணுதல் கரும்பே நின்முனம் நீல
கண்டம்என் றோதுதல் மறந்தே
உண்ணுதற் கிசைந்தே உண்டுபின் ஓதிபோல்
உன்முனம் நின்றனன் அதனால்
நண்ணுதல் பொருட்டோர் நான்முகன் மாயோன்
நாடிட அடியர்தம் உள்ளத்
தண்ணுதல் கலந்த ஒற்றியில் உன்னால்
தண்டிக்கப் பட்டனன் அன்றே. (௮)

கற்றவர்க் கினிதாம் கதியருள் நீல
கண்டம்என் றுன்திரு முன்னர்
சொற்றிடல் மறந்தேன் சோற்றினை ஊத்தைத்
துருத்தியில் அடைத்தனன் அதனால்
செற்றமற் றுயர்ந்தோர் சிவசிவ சிவமா
தேவஓம் அரகர எனும்சொல்
சற்றும்விட் டகலா ஒற்றியில் உன்னால்
தண்டிக்கப் பட்டனன் அன்றே. (௯)

முறைப்படி நினது முன்புநின் றேத்தி
முன்னிய பின்னர்உண் ணாமல்
சிறைப்படி வயிற்றில் பொறைப்பட ஓதிபோல்
சென்றுநின் முன்னர்உற் றதனால்
கறைப்பட ஓங்கும் கண்டனே எவர்க்கும்
கருத்தனே ஒருத்தனே மிகுசீர்
தறைப்படர்ந் தோங்கும் ஒற்றியில் உன்னால்
தண்டிக்கப் பட்டனன் அன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 48. வழிமொழி விண்ணப்பம்[115]

**திரு ஒற்றியூரும் - திருத் தில்லையும்**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நீலனேன்கொடும் பொய்யல துரையா
  நீசன் என்பதென் நெஞ்சறிந் ததுகாண்
சால ஆயினும் நின்கழல் அடிக்கே
  சரண்பு குந்திடில் தள்ளுதல் வழக்கோ
ஆலம் உண்டநின் தன்மைமா றுவதேல்
  அகில கோடியும் அழிந்திடும் அன்றே
சீல மேவிய ஒற்றியம் பரனே
  தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே.[116] (௧)

கண்ணுண் மாமணி யேஅருட் கரும்பே
  கற்ற நெஞ்சகம் கனிந்திடும் கனியே
எண்ணுள் உட்படா இன்பமே என்றென்
  றெந்தை நின்றனை ஏத்திலன் எனினும்
மண்ணுள் மற்றியான் வழிவழி அடியேன்
  மாய மன்றிதுன் மனம்அறிந் ததுவே
திண்ணம் ஈந்தருள் ஒற்றியூர் அரசே
  தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே.[117] (௨)

நல்லன் அல்லனான் ஆயினும் சிறியேன்
  நான்அ றிந்ததோ நாடறிந் ததுகாண்
சொல்ல வாயிலை ஆயினும் எனைநீ
  தொழும்பு கொண்டிடில் துய்யனும் ஆவேன்

---

115. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௫௪௮, ௫௪௯. இவற்றின் தொடக்கத்தில் முறையே "உ. சிவமயம். தில்லை-ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்துச் சிந்தித்திருக்கிறார்கள்.

116. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானார், தம் பிழை பெரிதெனினும், தாம் எப் பிறவியினும் இறைவனை மறந்தறியாத அடியவர் ஆகலின், தம்மைத் தம் சிறுமை கருதித் தள்ளுதல் அருளுக்கு அழகன்று என்று இறைவனிடம் மன்றாடுதல் கண்டு இன்புறுக.

வல்ல உன்கருத் தறிந்திலேன் மனமே
மயங்கு கின்றதியான் வாடுகின் றனன்காண்
செல்லல் நீக்கிய ஒற்றியூர் அரசே
தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே. (௩)

இரக்கம் என்பதென் னிடத்திலை எனநீ
இகழ்தி யேல்அஃதி யல்புமற் றடியேன்
பரக்க நின்அருட் கிரக்கமே அடைந்தேன்
பார்த்தி லாய்கொலோ பார்த்தனை எனில்நீ
கரப்ப துன்றனக் கழகன்று கண்டாய்
காள கண்டனே கங்கைநா யகனே
திரக்கண் நெற்றியாய் ஒற்றியாய் தில்லைத்
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. (௪)

யாது நான்பிழை செய்யினும் பொறுப்பான்
எந்தை எம்மிறை என்றுவந் தடைந்தேன்
தீது நோக்கிநீ செயிர்த்திடில் அடியேன்
செய்வ தென்னைநின் சித்தமிங் கறியேன்
போது போகின்ற தன்றிஎன் மாயப்
புணர்ச்சி யாதொன்றும் போகின்ற திலைகாண்
சீத வார்பொழில் ஒற்றியம் பரனே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. (௫)

தாய்க்கும் தந்தைக்கும் நிகரும்நின் இருதாள்
சார்ந்த மேலவர் தமைத்தொழு தேத்தா
நாய்க்கும் நாய்எனும் பாவியேன் பிழையை
நாடி நல்லருள் நல்கிடா திருந்தால்
ஏய்க்கும் மால்நிறக் காலன்வந் திடும்போ
தென்கொ லாம்இந்த எண்ணம்என் மனத்தைத்
தீய்க்கு தென்செய்வேன் ஒற்றியம் சிவனே
தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே. (௬)

---

117. இப் பா முதலியவற்றோடு பின்வரும் மணிவாசகத் தீந்தமிழ் போல்வனவற்றை ஒத்துணர்ந்து மகிழ்க:
"மாறுபட்(டு) அஞ்(சு)என்னை வஞ்சிப்ப யான்உன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
நீறுபட் டேஒளி காட்டும்பொன் மேனி நெடுந்தகையே."

ஆட்டு கின்றநீ அறிந்திலை போலும்
ஐவர் பக்கம்நான் ஆடுகின் றதனைக்
காட்டு கின்றவான் கடலிடை எழுந்த
காள முண்டஅக் கருணையை உலகில்
நாட்டு கின்றனை ஆயில்இக் கொடிய
நாய்க்கும் உன்னருள் நல்கிட வேண்டும்
நீட்டு கின்றநல் புகழ்ஒற்றி அரசே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. (எ)

உய்ய ஒன்றிலேன் பொய்யன்என் பதனை
ஒளித்தி லேன்இந்த ஒதியனுக் கருள்நீ
செய்ய வேண்டுவ தின்றெனில் சிவனே
செய்வ தென்னைநான் திகைப்பதை அன்றி
மையல் நெஞ்சினேன் ஆயினும் உன்னை
மறந்தி லேன்இது வஞ்சமும் அன்றே
செய்ய மேனிஎம் ஒற்றியூர் வாழ்வே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. (அ)

வாடு கின்றனன் என்றனை இன்னும்
வருந்த வைக்கினும் மறந்திடேன் உன்னைப்
பாடு கின்றனன் பாவியேன் என்னைப்
பாது காப்பதுன் பரம்அது கண்டாய்
தேடு கின்றமால் நான்முகன் முதலாம்
தேவர் யாவரும் தெரிவரும் பொருளே
சேடு கின்றநல் ஒற்றியூர் வாழ்வே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. (கூ)

சிறியர் செய்பிழை பெரியவர் பொறுக்கும்
சீல மென்பதுன் திருமொழி அன்றே
வறிய னேன்பிழை யாவையும் உனது
மனத்தில் கொள்ளுதல் வழக்கல இனிநீ
இறையும் தாழ்க்கலை அடியனேன் தன்னை
ஏன்று கொண்டருள் ஈந்திடல் வேண்டும்
செறிய ஓங்கிய ஒற்றியம் பரமே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. (க0)

திருச்சிற்றம்பலம்

# 49. சிறுமை விண்ணப்பம்[118]

---

### திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இன்று நின்றவர் நாளைநின் றிலரே
என்செய் வோம்இதற் கென்றுளம் பதைத்துச்
சென்று நின்றுசோர் கின்றனன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
நன்று நின்துணை நாடக மலர்த்தாள்
நண்ண என்றுநீ நயந்தருள் வாயோ
பொன்றல் இன்றிய எழில்ஒற்றி அரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே.[119] ( க )

மறுமை இம்மையும் வளம்பெற வேண்டேன்
மருவும் நின்அருள் வாழ்வுற அடையாச்
சிறுமை எண்ணியே திகைக்கின்றேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
வறுமை யாளனேன் வாட்டம்நீ அறியா
வண்ணம் உண்டுகொல் மாணிக்க மலையே
பொறுமை யாளனே ஒற்றிஅம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே.[120] ( உ )

உய்ய வல்லனேல் உன்திரு அருளாம்
உடைமை வேண்டும்அவ் உடைமையைத் தேடல்
செய்ய வல்லனோ அல்லகாண் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்

---

118. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௪௬, ௱௪௭, ௱௪௮. இவற்றின் தொடக்கத்தில் அடிகளார், முறையே "உ சிவமயம்." என்றும் "உ" என்றும் "உ" என்றும் எழுதி, எண்ணியிருக்கிறார்கள்.

119. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானார், பாசத்தை விடவோ அருளினைப் பெறவோ அறியாத தம்மை ஆட்கொள்வது இறைவன் பொறுப்பு என்று கூறியும், இப் பேறு வாய்ப்பது ஒற்றியிலா அல்லது தில்லையிலா என்று கேட்டும், தம்மைக் கூவி ஆட்கொள்ளுமாறு இறைவனிடம் முறையிடுதல் கண்டுணர்க.

பெய்ய வல்லநின் திருவருள் நோக்கம்
 பெறவி ழைந்தனன் பிறஒன் றும் விரும்பேன்
பொய்யி தல்லஎம் ஒற்றிஅம் பரனே
 போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௩)

வெல்லு கின்றனர் வினைப்புல வேடர்
 மெலிகின் றேன்இங்கு வீணினில் காலம்
செல்லு கின்றன ஐயவோ சிவனே
 செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
சொல்லு கின்றனன் கேட்கின்றாய் கேட்டும்
 தூர நின்றனை ஈரமில் லார்போல்
புல்லு கின்றசீர் ஒற்றிஅம் பரனே
 போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௪)

ஏறு கின்றிலேன் இழிகிலேன் நடுநின்
 றெய்க்கின் றேன்பவம் என்னும்அக் குழியில்
தேறு கின்றிலேன் சிக்கெனச் சிவனே
 செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
கூறு கின்றதென் கடவுள்நீ அறியாக்
 கொள்கை ஒன்றிலை குன்றவில் லோனே
பூறு வங்கொளும் ஒற்றிஅம் பரனே
 போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௫)

கந்த மும்மல ரும்என நின்றாய்
 கண்டு கொண்டிலேன் காமவாழ் வதனால்
சிந்தை நொந்தயர் கின்றனன் சிவனே
 செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்

---

120. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருவாசகத் தெள்ளமுதம் போல்வன பார்த்துக் களிக்க :

“குழைத்தால் பண்டைக் கொடுவினைநோய்
 காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோதான்
 உமையாள் கணவா எனைஆள்வாய்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ
 பிறைசேர் சடையாய் முறையோஎன்(று)
அழைத்தால் அருளா தொழிவதே
 அம்மா னேஉன் அடியேற்கே.”

எந்த நல்வழி யால்உனை அடைவேன்
யாதுந் தேர்ந்திலேன் போதுபோ வதுகாண்
புந்தி இன்பமே ஒற்றிஅம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௬)

அல்லல் என்னைவிட் டகன்றிட ஒற்றி
அடுத்து நிற்கவோ அன்றிநற் புலியூர்த்
தில்லை மேவவோ அறிந்திலேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
ஒல்லை இங்குவா என்றருள் புரியா
தொழிதி யேல்உனை உறுவதெவ் வணமோ
புல்லர் மேவிடா ஒற்றிஅம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௭)

ஞால வாழ்க்கையை நம்பிநின் றுழலும்
நாய்க ளுக்கெலாம் நாயக னானேன்
சீலம் ஒன்றிலேன் திகைக்கின்றேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
ஏல நின்அருள் ஈதியேல் உய்வேன்
இல்லை யேல்எனக் கில்லைஉய் திறமே
போல என்றுரை யாஒற்றி அரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௮)

சுத்த நெஞ்சருள் சேர்க்கினும் அலது
சோம்பல் நெஞ்சருள் சேர்க்கினும் நினது
சித்தம் என்னள வன்றது சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
நித்தம் நின்னடி அன்றிஒன் றேத்தேன்
நித்த னேஅது நீஅறி யாயோ
புத்த ருந்தமிழ் ஒற்றியூர் அரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௯)

தத்து மத்திடைத் தயிரென வினையால்
தளர்ந்து மூப்பினில் தண்டுகொண் டுழன்றே
செத்து மீளவும் பிறப்பெனில் சிவனே
செய்வ தென்னநான் சிறியருள் சிறியேன்

தொத்து வேண்டுநின் திருவடிக் கெணையே
　　துட்டன் என்றியேல் துணைபிறி தறியேன்
புத்தை நீக்கிய ஒற்றியம் பரனே
　　போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௧0)

பரிந்தி லேன்அருட் பாங்குறும் பொருட்டாய்ப்
　　பந்த பாசத்தைப் பறித்திடும் வழியைத்
தெரிந்தி லேன்திகைப் புண்டனன் சிவனே
　　செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
விரிந்த நெஞ்சமும் குவிந்தில இன்னும்
　　வெய்ய மாயையில் கையற வடைந்தே
புரிந்து சார்கின்ற தொற்றிஅம் பரனே
　　போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

# 50. ஆற்றா விண்ணப்பம்[121]

---

**திரு ஒற்றியூர்**

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அன்னையில் பெரிதும் இனியஎன் அரசே
　　அம்பலத் தாடல்செய் அமுதே
பொன்னைஒத் தொளிரும் புரிசடைக் கனியே
　　போதமே ஒற்றிஎம் பொருளே
உன்னைவிட் டயலார் உறவுகொண் டடையேன்
　　உண்மைஎன் உள்ளம்நீ அறிவாய்
என்னைவிட் டிடில்நான் என்செய்வேன் ஒதிபோல்
　　இருக்கின்ற இவ்வெளி யேனே.[122] (௧)

---

121. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௬௪, ௱௫௰. இவற்றின் முதலில் "உ. சிவமயம்." என்று அடிகளாரால் குறிக்கப்பட்டிருக்கிறது.

122. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம் அருள் வேட்கையைத் தம்முள் இருந்து காணும் இறைவன், அதைத் தணித்து, உடம்பு விழாமுன்பே, தம்மை ஆட்கொண்டருள்வதுதான் அவன் கருணைக்கு இயல்பென மன்றாடுவது காண்க.

எளியனேன் மையல் மனத்தினால் உழன்றேன்
என்செய்வேன் என்செய்வேன் பொல்லாக்
களியனேன் வாட்டம் கண்டனை இன்னும்
கருணைசெய் திலைஅருட் கரும்பே
அளியனே திருச்சிற் றம்பலத் தொளியே
அருமருந் தேவட வனத்துத்
தளியனே ஒற்றித் தலத்தமர் மணியே
தயையிலி போல்இருந் தனையே. ( உ )

இருந்தனை எனது நெஞ்சினுள் எந்தாய்
என்துயர் அறிந்திலை போலும்
முருந்தனை முறுவல் மங்கையர் மலைநேர்
முலைத்தலை உருண்டன னேனும்
மருந்தனை யாய்உன் திருவடி மலரை
மறந்திலேன் வழுத்துகின் றனன்காண்
வருந்தனை யேல்என் றுரைத்திலை ஐயா
வஞ்சகம் உனக்கும்உண் டேயோ. ( ௩ )

உண்டநஞ் சின்னும் கண்டம்விட் டகலா
துறைந்தது நாடொறும் அடியேன்
கண்டனன் கருணைக் கடல்எனும் குறிப்பைக்
கண்டுகண் டுளமது நெகவே
விண்டனன் என்னைக் கைவிடில் சிவனே
விடத்தினும் கொடியன்நான் அன்றோ
அண்டர்கட் கரசே அம்பலத் தமுதே
அலைகின்றேன் அறிந்திருந் தனையே. ( ௪ )

தனையர்செய் பிழையைத் தந்தையர் குறித்துத்
தள்ளுதல் வழக்கல என்பார்
வினையனேன் பிழையை வினையிலி நீதான்
விலகரித் தெண்ணுதல் அழகோ
உனையலா திறந்தும் பிறந்தும்இவ் வுலகில்
உழன்றிடுந் தேவரை மதியேன்
எனையலா துனக்கிங் காளிலை யோஉண்
டென்னினும் என்றுகொண் டருளே. ( ௫ )

என்றுகொண் டருள வேண்டும்இவ் எளியேன்
இருக்கினும் இறக்கினும் பொதுவுள்
ஊன்றுகொண் டருளும் நின்னடி யல்லால்
உரைக்கும்மால் அயன்முதல் தேவர்
நான்றுகொண் டிடுவ ரேனும்மற் றவர்மேல்
நாளுமா துண்மையீ திதற்குச்
சான்றுகொண் டருள நினைத்திடேல் என்னுள்
சார்ந்தநின் சரண்இரண் டன்றே. (௬)

சரணவா ரிசம்என் தலைமிசை இன்னும்
தரித்திலை தாழ்த்தனை அடியேன்
கரணவா தனையும் கந்தவா தனையும்
கலங்கிடக் கபமிழுத் தூந்தும்
மரணவா தனைக்கென் செய்குவம் என்றே
வருந்துகின் றனன்மனம் மாழாந்
தரணமூன் றெரிய நகைத்தஎம் இறையே
அடியனை ஆள்வதுன் கடனே.[123] (௭)

கடம்பொழி ஓங்கல் உரிஉடை உடுக்கும்
கடவுளே கடவுளர் கோவே
மடம்பொழி மனத்தேன் மலஞ்செறிந் தூறும்
வாயில்ஓர் ஒன்பதில் வரும்இவ்
உடம்பொழிந் திடுமேல் மீண்டுமீண் டெந்த
உடம்புகொண் டுழல்வனோ என்று
நடம்பொழி பதத்தாய் நடுங்குகின் றனன்காண்
நான்செயும் வகைஎது நவிலே. (௮)

வகைஎது தெரிந்தேன் ஏழையேன் உய்வான்
வள்ளலே வலிந்தெனை ஆளும்
தகைஅது இன்றேல் என்செய்வேன் உலகர்
சழக்குடைத் தமியன்நீ நின்ற

---

123. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தாயுமானப் பெருமானாரின் முறையீடு போல்வனவற்றை ஒத்துணர்க:
"ஆகத்தை நீக்குமுன்னே ஆவித் துணைவரைநான்
தாகத்தின் வண்ணம் தழுவுவனோ பைங்கிளியே."

திகைஎது என்றால் சொலஅறி யாது
திகைத்திடும் சிறியனேன் தன்னைப்
பகைஅது கருதா தாள்வதுன் பரங்காண்
பவளமா நிறத்தகற் பகமே. (௯)

கற்பன அறிந்து கற்கிலேன் சழக்குக்
கல்விகற் றுழன் றனன் கருணை
சொற்பன மதிலும் காண்கிலேன் பொல்லாச்
சூகரம் எனமலம் துய்த்தேன்
விற்பனன் எனவே நிற்பது விழைந்தேன்
வீணனேன் விரகிலா வெறியேன்
அற்பனேன் தன்னை ஆண்டநின் அருளை
ஆய்ந்திடில் அன்னையின் பெரிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 51. இரங்கல் விண்ணப்பம்[124]

**திரு ஒற்றியூர்**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பற்று நோக்கிய பாவியேன் தனக்குப்
பரிந்து நீஅருட் பதம்அளித் திலையே
மற்று நோக்கிய வல்வினை அதனால்
வஞ்ச மாயையின் வாழ்க்கையின் மனத்தின்
அற்று நோக்கிய நோய்களின் மூப்பின்
அலைதந் திவ்வுல கம்படும் பாட்டை
உற்று நோக்கினால் உருகுதென் உள்ளம்
ஒற்றி மேவிய உலகுடை யோனே.[125] (௧)

124. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௬௫௩, ௬௫௪. இவற்றின் முதலில் முறையே "உ. சிவமயம். ஒற்றியூர்." என்றும், "உ சிவமயம். சிவமயம்." என்றும் அடிகளார் குறித்துச் சிந்தித்திருக்கிறார்கள்.

125. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், உலக வாழ்வில் உயிர்கள் படும் பாட்டிற்கு, இரங்கியும், தம்மை உலக மயக்கினின்றும் கரை ஏற்றி ஆட்கொள்ளும்படி மன்றாடியும் இறைவனைப் போற்றுதல் கண்டுணர்க.

கொடிய நெஞ்சினேன் கோபமே அடைந்தேன்
கோடி கோடியாம் குணப்பழு துடையேன்
கடிய வஞ்சகக் கள்வனேன் தனக்குன்
கருணை ஈந்திடா திருந்திடில் கடையேன்
அடியன் ஆகுவ தெவ்வணம் என்றே
ஐய ஐயநான் அலறிடு கின்றேன்
ஒடிய மும்மலம் ஒருங்கறுத் தவர்சேர்
ஒற்றி மேவிய உலகுடை யோனே.[126] (உ)

காமம் என்பதோர் உருக்கொடிவ் வுலகில்
கலங்கு கின்றஇக் கடையனேன் தனக்குச்
சேமம் என்பதாம் நின்அருள் கிடையாச்
சிறுமை யேஇன்னும் செறிந்திடு மானல்
ஏம நெஞ்சினர் என்றனை நோக்கி
ஏட நீகடை என்றிடில் அவர்முன்
ஊமன் ஆகுவ தன்றிஎன் செய்வேன்
ஒற்றி மேவிய உலகுடை யோனே. (ந)

மண்ணில் நின்றவர் வாழ்வதும் கணத்தில்
வருந்தி மாய்வதும் மற்றிவை எல்லாம்
கண்ணின் நேர்நிதங் கண்டும்இவ் வாழ்வில்
காதல் நீங்கிலாக் கல்மனக் கொடியேன்
எண்ணி நின்றஓர் எண்ணமும் முடியா
தென்செய் கேன்வரும் இருவினைக் கயிற்றால்
உண்ணி ரம்பநின் றாட்டுகின் றனைநீ
ஒற்றி மேவிய உலகுடை யோனே. (ச)

வெருட்சி யேதரும் மலஇரா இன்னும்
விடியக் கண்டிலேன் வினையினேன் உள்ளம்
மருட்சி மேவிய தென்செய்கேன் உன்பால்
வருவ தற்கொரு வழியும்இங் கறியேன்

---

126. இப் பாக்களோடு கீழ்க் குறித்த நம் தாயுமானாரின் தெய்வ மெய்ம் மொழி போல்வனவற்றை ஒத்துணர்ந்து தெளிக:
“ எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.”

தெருட்சி யேதரும் நின்அருள் ஒளிதான்
சேரில் உய்குவேன் சேர்ந்ில தானல்
உருட்சி ஆழிஒத் துழல்வது மெய்காண்
ஒற்றி மேவிய உலகுடை யோனே. (௫)

யாதும் உன்செய லாம்என அறிந்தும்
ஐய வையமேல் அவர்இவர் ஒழியாத்
தீது செய்தனர் நன்மைசெய் தனர்நாம்
தெரிந்து செய்வதே திறம்என நினைத்துக்
கோது செய்மலக் கோட்டையைக் காவல்
கொண்டு வாழ்கிறேன் கண்டிட இனிநீ
ஓது செய்வதொன் றென்னுயிர்த் துணையே
ஒற்றி மேவிய உலகுடை யோனே. (௬)

பந்த மட்டின்ஆம் பாவிநெஞ் சகத்தால்
பவப்பெ ருங்கடல் படிந்துழன் றயர்ந்தேன்
இந்த மட்டில்நான் உழன்றதே அமையும்
ஏற வேண்டும்உன் எண்ணமே தறியேன்
அந்த மட்டினில் இருத்தியோ அன்றி
அடிமை வேண்டிநின் அருட்பெரும் புணையை
உந்த மட்டினல் தருதியோ உரையாய்
ஒற்றி மேவிய உலகுடை யோனே. (௭)

ஞான மென்பதின் உறுபொருள் அறியேன்
ஞானி அல்லன்நான் ஆயினும் கடையேன்
ஆன போதிலும் எனக்குநின் அருள்ஓர்
அணுவில் பாதியே ஆயினும் அடைந்தால்
வான மேவிய அமரரும் அயனும்
மாலும் என்முனம் வலியிலர் அன்றே
ஊனம் நீக்கிநல் அருள்தரும் பொருளே
ஒற்றி மேவிய உலகுடை யோனே. (௮)

அளிய நெஞ்சம்ஓர் அறிவுரு வாகும்
அன்பர் தம்புடை அணுகிய அருள்போல்
எளிய நெஞ்சினேற் கெய்திடா தேனும்
எள்ளில் பாதிமட் டேந்தருள் வாயேல்

களிய மாமயல் காடற எறிந்தாங்
  கார வேரினைக் களைந்துமெய்ப் போத
ஒளிய வித்தினால் போகமும் விளைப்பேன்
  ஒற்றி மேவிய உலகுடை யோனே. (௯)

நாக நாட்டதின் நலம்பெற வேண்டேன்
  நரகில் ஏகென நவிலினும் அமைவேன்
ஆகம் நாட்டிடை விடுகெனில் விடுவேன்
  அல்லல் ஆம்பவம் அடைஎனில் அடைவேன்
தாகம் நாட்டிய மயல்அற அருள்நீர்
  தருதல் இல்எனச் சாற்றிடில் தரியேன்
ஓகை நாட்டிய யோகியர் பரவும்
  ஒற்றி மேவிய உலகுடை யோனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

## 52. காதல் விண்ணப்பம்[127]

---

**திரு ஒற்றியூர்**

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

**வ**ஞ்சக வினைக்கோர் கொள்கலம் அனைய
  மனத்தினேன் அனைத்தினும் கொடியேன்
தஞ்சம்என் றடைந்தே நின்திருக் கோயில்
  சந்நிதி முன்னர்நிற் கின்றேன்
எஞ்சலில் அடங்காப் பாவிஎன் றெனைநீ
  இகழ்ந்திடில் என்செய்வேன் சிவனே
கஞ்சன்மால் புகழும் ஒற்றியங் கரும்பே
  கதிதரும் கருணையங் கடலே.[128] (௧)

---

127. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௨௯௰, ௨௯௧, ௨௯௨. இவற்றின் ஆரம்பத்தில் முறையே "உ, சிவமயம். சாமிநம. ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் "உ" என்றும் அடிகளார் எழுதி எண்ணியிருக்கிறார்கள்.

128. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானார், இறைவன் திரு அடிக்குத் தொண்டு செயும் நாள் தமக்கும் வருமோ என்று ஏங்கி என்புருகி முறையிடுதல் காண்க.

நிற்பது போன்று நிலைபடா உடலை
நேசம்வைத் தோம்புறும் பொருட்டாய்ப்
பொற்பது தவிரும் புலையர்தம் மனைவாய்ப்
புந்திநொந் தயர்ந்தழு திளைத்தேன்
சொற்பதங் கடந்த நின்திரு அடிக்குத்
தொண்டுசெய் நாளும்ஒன் றுளதோ
கற்பது கற்றோர் புகழ்திரு ஒற்றிக்
காவல்கொள் கருணையங் கடலே.[129] (உ)

முன்னைவல் வினையால் வஞ்சக மடவார்
முழுப்புலைக் குழிவிழுந் திளைத்தேன்
என்னையோ கொடியேன் நின்திரு அருள்தான்
எய்தில னேல்உயிர்க் குறுதிப்
பின்னைஎவ் வணந்தான் எய்துவ தறியேன்
பேதையில் பேதைநான் அன்றோ
கன்னலே தேனே ஒற்றிஎம் அமுதே
கடவுளே கருணையங் கடலே. (ங)

மண்ணினுள் மயங்கி வஞ்சக வினையால்
மனந்தளர்ந் தழுங்கிநாள் தோறும்
எண்ணினுள் அடங்காத் துயரொடும் புலையர்
இல்லிடை மல்லிடு கின்றேன்
விண்ணினுள் இலங்கும் சுடர்நிகர் உனது
மெல்அடிக் கடிமைசெய் வேனோ
கண்ணினுள் மணியே ஒற்றியங் கனியே
கடவுளே கருணையங் கடலே. (ச)

அளவிலா உலகத் தனந்தகோ டிகளாம்
ஆருயிர்த் தொகைக்குளும் எனைப்போல்
இளகிலா வஞ்ச நெஞ்சகப் பாவி
ஏழைகள் உண்டுகொல் இலைகாண்

---

129. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தாயுமானப் பெருமானாரின் எந் நாட்கண்ணி போன்றவற்றை ஒத்துணர்க:

"ஆணவத்தோ(டு) அத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ(டு) அத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ."

தளர்விலா துனது திருவடி எனும்பொற்
　　றாமரைக் கணியனு குவனோ
களவிலார்க் கினிய ஒற்றிஎம் மருந்தே
　　கனந்தரும் கருணையங் கடலே. (ரு)

ஞானம்என் பதிலோர் அணுத்துணை யேனும்
　　நண்ணிலேன் புண்ணியம் அறியேன்
ஈனம்என் பதனுக் கிறைஎனல் ஆனேன்
　　எவ்வணம் உய்குவ தறியேன்
வானநா டவரும் பெறற்கரு நினது
　　மலரடித் தொழும்புசெய் வேனோ
கானவேட் டுருவாம் ஒருவனே ஒற்றிக்
　　கடவுளே கருணையங் கடலே. (சு)

ஞாலவாழ் வனைத்தும் கானல்நீர் எனவே
　　நன்கறிந் துன்திரு அருளாம்
சீலவாழ் வடையும் செல்வம்இப் பொல்லாச்
　　சிறியனும் பெறுகுவ தேயோ
நீலமா மிடற்றுப் பவளமா மலையே
　　நின்மல ஆனந்த நிலையே
காலன்நாண் அவிழ்க்கும் காலனே ஒற்றிக்
　　கடவுளே கருணையங் கடலே. (எ)

மாலொடு நான்கு வதனனும் காணு
　　மலரடிக் கடிமைசெய் தினிப்பாம்
பாலொடு கலந்த தேன்என உன்சீர்
　　பாடும்நாள் எந்தநாள் அறியேன்
வேலொடு மயிலும் கொண்டிடுஞ் சுடரை
　　விளைவித்த வித்தக விளக்கே
காலொடு பூதம் ஐந்துமாம் ஒற்றிக்
　　கடவுளே கருணையங் கடலே. (அ)

சற்றும்நற் குணந்தான் சார்ந்திடாக் கொடியார்
　　தந்தலை வாயிலுள் குரைக்கும்
வெற்றுநாய் தனக்கும் வேறுநா யாக
　　மெலிகின்றேன் ஐம்புலச் சேட்டை

அற்றுநின் றவர்க்கும் அரியநின் திருத்தாட்
கடிமைசெய் தொழுகுவ னேயோ
கற்றுமுற் றுணர்ந்தோர்க் கருள்தரும் ஒற்றிக்
கடவுளே கருணையங் கடலே. (௯)

மறைகளும் இன்னும் நலைத்தலை மயங்க
மறைந்தல குயிர்தொறும் ஒளித்த
இறைவநின் திருத்தாட் கன்பிலாக் கொடியன்
என்னினும் ஏழையேன் தனக்கு
நிறைதரும் நினது திருவருள் அளிக்க
நினைத்தலே நின்கடன் கண்டாய்
கறைமணி மிடற்றுத் தெய்வமே ஒற்றிக்
காவல்கொள் கருணையங் கடலே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 53. பொருள் விண்ணப்பம்[130]

### திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலக வாழ்க்கையின் உழலும்என் நெஞ்சம்
ஒன்று கோடியாய்ச் சென்றுசென் றலைந்தே
கலக மாயையில் கவிழ்க்கின்ற தெளியேன்
கலுழ்கின் றேன்செயக் கடவதொன் றறியேன்
இலகும் அன்பர்தம் எய்ப்பினில் வைப்பே
இன்ப வெள்ளமே என்னுடை உயிரே
திலக மேதிரு ஒற்றிஎம் உறவே
செல்வ மேபர சிவபரம் பொருளே.[131] (௧)

---

130. இப் பதிக ஏடுகளின் எண்கள் ராசுந, ராசுச. இவற்றின் முதற்கண் அடிகளார், "உ. திருவொற்றியூர். சிவமம." என்றும் "உ. சிவமம." என்றும் குறித்துச் சிந்தித்திருக்கிறார்கள்.

131. இப் பாக்களில், நம் அடிகளார், உலக மாயையில் மூழ்கி, நெஞ்சம் கல்லாக மாறிச் செயக்கடவது அறியாது திகைக்கும் தம் பிழை கருதாது, இறைவன் தம்மை ஆட்கொண்டருளல் வேண்டும் என்று இரத்தல் காண்க.

எண்ணி லாஙினைப் புற்றதின் வழியே
இன்ப துன்பங்கள் எய்திஎன் நெஞ்சம்
கண்ணி லாக்குரங் கெனஉழன் றதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
பெண்கி லாவிய பாகத்தெம் அமுதே
பிரமன் ஆதியர் பேசரும் திறனே
தெண்ணி லாமுடி ஒற்றியங் கனியே
செல்வ மேபர சிவபரம் பொருளே.[132] (உ)

ஊண்உ றக்கமே பொருள்என நினைத்த
ஓதிய னேன்மனம் ஒன்றிய தின்றாய்க்
காணு றக்கருங் காமஞ்சான் றதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
மாணு றக்களங் கறுத்தசெம் மணியே
வள்ள லேஎனை வாழ்விக்கும் மருந்தே
சேணு றத்தரும் ஒற்றிநா யகமே
செல்வ மேபர சிவபரம் பொருளே. (ங)

யாது சொல்லினும் கேட்பதின் றந்தோ
யான்செய் தேன்என தென்னும்இவ் இருளில்
காது கின்றதென் வஞ்சக நெஞ்சம்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
ஓது மாமறை உபநிட தத்தின்
உச்சி மேவிய வச்சிர மணியே
தீது நீக்கிய ஒற்றியந் தேனே
செல்வ மேபர சிவபரம் பொருளே. (ச)

சொல்லும் சொல்லள வன்றுகாண் நெஞ்சத்
துடுக்க னைத்தும்இங் கொடுக்குவ தெவனோ
கல்லும் பிற்படும் இரும்பினும் பெரிதால்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்

132. இப் பா முதலியவற்றோடு பின்வரும் மணிவாசகப் பெருமறை போல்வன கண்டுணர்க:

“விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானார் எல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா என்நான் செய்கேன் பேசாயே.”

அல்லும் எல்லும்நின் றகங்குழைந் தேத்தும்
அன்பருள் ஊறும் ஆனந்தப் பெருக்கே
செல்லு லாம்பொழில் ஒற்றியங் கரும்பே
செல்வ மேபர சிவபரம் பொருளே. ( ௫ )

இம்மை இன்பமே வீடெனக் கருதி
ஈனர் இல்லிடை இடர்மிக உழந்தே
கைம்மை நெஞ்சம்என் றனைவலிப் பதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
மும்மை யாகிய தேவர்தம் தேவே
முக்கண் மூர்த்தியே முத்தியின் முதலே
செம்மை மேனிஎம் ஒற்றியூர் அரசே
செல்வ மேபர சிவபரம் பொருளே. ( ௬ )

நின்ன டிக்கண்ஓர் கணப்பொழு தேனும்
நிற்ப தின்றியே நீசமங் கையர்தம்
கன்ன வில்தனம் விழைந்தது மனம்காண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
அன்ன ஊர்தியும் மாலும்நின் றலற
அடியர் தங்களுள் அமர்ந்தருள் அமுதே
தென்இ சைப்பொழில் ஒற்றிஎம் வாழ்வே
செல்வ மேபர சிவபரம் பொருளே. ( ௭ )

புலைய மங்கையர் புணர்முலைக் குவட்டில்
போந்து ருண்டெனைப் புலன்வழிப் படுத்திக்
கலைய நின்றதிக் கல்லுறழ் மனந்தான்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
விலையி லாஉயர் மாணிக்க மணியே
வேத உச்சியில் விளங்கொளி விளக்கே
சிலைவி லாக்கொளும் ஒற்றிஎம் மருந்தே
செல்வ மேபர சிவபரம் பொருளே. ( ௮ )

தந்தை தாய்மனை மக்கள்என் றுலகச்
சழக்கி லேஇடர் உழக்கும்என் மனந்தான்
கந்த வாதனை இயற்றுகின் றதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்

எந்தை யேஎனை எழுமையும் தொடர்ந்த
இன்ப வெள்ளமே என்உயிர்க் குயிரே
சிந்தை ஓங்கிய ஒற்றிஎந் தேவே
செல்வ மேபர சிவபரம் பொருளே. (௯)

கொடிய வஞ்சக நெஞ்சகம் எனும்ஓர்
குரங்கிற் கென்உறு குறைபல உரைத்தும்
கடிய தாதலின் கசிந்தில தினிஇக்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
அடிய னேன்பிழை உளத்திடை நினையேல்
அருளல் வேண்டும்என் ஆருயிர்த் துணையே
செடிகள் நீக்கிய ஒற்றிஎம் உறவே
செல்வ மேபர சிவபரம் பொருளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

# 54. கொடி விண்ணப்பம்[133]

---

**திரு ஒற்றியூர்**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாலை ஒன்றுதோள் சுந்தரப் பெருமான்
மணத்தில் சென்றவண் வழக்கிட்ட தெனவே
ஓலை ஒன்றுநீர் காட்டுதல் வேண்டாம்
உவந்து தொண்டன்என் றுரைப்பிரேல் என்னை
வேலை ஒன்றல மிகப்பல எனினும்
வெறுப்பி லாதுளம் வியந்துசெய் குவன்காண்
சோலை ஒன்றுசீர் ஒற்றியூர் உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே.[134] (௧)

---

133. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௭௰, ௱௭௧, ௱௭௨. இவற்றின் முதலில் முறையே, "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் "உ" என்றும் அடிகளார் வரைந்து அனுபவித்திருக்கிறார்கள்.

134. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், பழ அடியார்களை ஒப்பத் தம்மையும் ஆட்கொண்டருளும்படியும், அதன் வாயிலாக எத்

பூதம் நம்படை எனினும்நான் அஞ்சேன்
புதிய பாம்பின்பூண் பூட்டவும் வெருவேன்
பேதம் இன்றிஅம் பலந்தனில் தூக்கும்
பெருமைச் சேவடி பிடிக்கவும் தளரேன்
ஏதம் எண்ணிடா தென்னையும் தொழும்பன்
என்று கொள்விரேல் எனக்கது சாலும்
சூத ஒண்பொழில் ஒற்றியூர் உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே.[135] (உ)

உப்பி டாதகூழ் இடுகினும் உண்பேன்
உவந்திவ் வேலையை உணர்ந்துசெய் எனநீர்
செப்பி டாமுனம் தலையினால் நடந்து
செய்ய வல்லன்யான் செய்யும்அப் பணிகள்
தப்பி டாததில் தப்பிருந் தென்னைத்
தண்டிப் பீர்எனில் சலித்துளம் வெருவேன்
துப்பி டாஎனக் கருள்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௩)

கூலி என்பதோர் அணுத்துணை யேனும்
குறித்தி லேன்அது கொடுக்கினும் கொள்ளேன்
மாலி னோடயன் முதலியர்க் கேவல்
மறந்தும் செய்திடேன் மன்உயிர்ப் பயிர்க்கே
ஆலி அன்னதாம் தேவரீர் கடைக்கண்
அருளை வேண்டினேன் அடிமைகொள் கிற்பீர்
சூலி ஓர்புடை மகிழ்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௪)

---

134. (தொடர்ச்சி) தகைய இடர் வரினும் அதற்குத் தாம் அஞ்சுவதில்லை என்றும், அங்ஙனம் ஆட்கொளாவிடில் இறைவனுக்குப் பழி சுமரும் என்றும் மொழிந்து இரங்குதல் கண்டு நுகர்க.

135. இப் பா முதலியவற்றோடு கீழ்க்காணும் மணிவாசகப் பெருமறையின்—இழிவுரைப்பது போல் பெரும்புகழ் ஏற்பிக்கும்—இறை அன்பை ஒத் துணர்ந்து உவக்க :

"உழைதரும் நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் (து) ஈயின்ஒப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென்(று) அறைவன் பழிப்பினையே."

தேர்ந்து தேடினும் தேவர்போல் தலைமைத்
தேவர் இல்லைஅத் தெளிவு கொண் டடியேன்
ஆர்ந்து நும்அடிக் கடிமைசெய் திடப்பேர்
ஆசை வைத்துமை அடுத்தனன் அடிகேள்
ஓர்ந்திங் கென்றனைத் தொழும்புகொள் வீரேல்
உய்கி லேன்இஃ தும்பதம் காண்க
சோர்ந்தி டார்புகழ் ஒற்றியூர் உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௫)

புதியன் என்றெனைப் போக்குதி ரோநீர்
பூரு வத்தினும் பொன்னடிக் கடிமைப்
பதிய வைத்தனன் ஆயினும் அந்தப்
பழங்க ணக்கினைப் பார்ப்பதில் என்னே
முதியன் அல்லன்யான் எப்பணி விடையும்
முயன்று செய்குவேன் மூர்க்கனும் அல்லேன்
துதிய தோங்கிய ஒற்றியூர் உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௬)

ஒழுக்கம் இல்லவன் ஓர்இடத் தடிமைக்
குதவு வான்கொல்என் றுன்னுகிற் பீரேல்
புழுக்க நெஞ்சினேன் உம்முடைச் சமுகம்
போந்து நிற்பனேல் புண்ணியக் கனிகள்
பழுக்க நின்றிடும் குணத்தரு வாவேன்
பார்த்த பேரும்அப் பரிசினர் ஆவர்
தொழுக்கன் என்னையாள் வீர்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௭)

பிச்சை ஏற்றுணும் பித்தர்என் றும்மைப்
பேசு கின்றவர் பேச்சினைக் கேட்டும்
இச்சை நிற்கின்ற நும்மடிக் கேவல்
இயற்று வான்அந்த இச்சையை முடிப்பீர்
செச்சை மேனியீர் திருஉளம் அறியேன்
சிறிய னேன்மிகத் தியங்குகின் றனன்காண்
துச்சை நீக்கினோர்க் கருள்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௮)

ஆலம் உண்டநீர் இன்னும்அவ் வானோர்க்
கமுது வேண்டிமா லக்கடல் கடைய
ஓல வெவ்விடம் வரில்அதை நீயே
உண்கென் றாலும்நும் உரைப்படி உண்கேன்
சாலம் செய்வது தகைஅன்று தருமத்
தனிப்பொற் குன்றனீர் சராசரம் நடத்தும்
சூல பாணியீர் திருஒற்றி நகரீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௯)

முத்தி நேர்கிலாத் தேவர்கள் தமைநான்
முந்து றேன்அவர் முற்பட வரினும்
சுத்தி யாகிய சொல்லுடை அணுக்கத்
தொண்டர் தம்முடன் சூழ்த்திடீர் எனினும்
புத்தி சேர்புறத் தொண்டர்தம் முடனே
பொருந்த வைக்கினும் போதும்மற் றதுவே
துத்தி யார்பணி யீர்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௧0)

என்ன நான்அடி யேன்பல பலகால்
இயம்பி நிற்பதிங் கெம்பெரு மானீர்
இன்னும் என்னைஓர் தொண்டன்என் றுளத்தில்
என்று கொள்ளிரேல் இருங்கடற் புவியோர்
பன்ன என்உயிர் நும்பொருட் டாகப்
பாற்றி நும்மிசைப் பழிசுமத் துவல்காண்
துன்னு மாதவர் புகழ்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

# 55. நாடக விண்ணப்பம்[136]

## திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மடுக்கும் நீர்உடைப் பாழ்ங்கிண றதனுள்
    வழுக்கி வீழ்ந்தவன் வருந்துறு வண்ணம்
எடுக்கின் றோர்என இடையிற்கை விடுதல்
    இரக்க முள்ளவர்க் கியல்பன்று கண்டீர்
தடுக்கி லாதெனைச் சஞ்சல வாழ்வில்
    தாழ்த்து கின்றது தருமம்அன் றுமக்கு
நடுக்கி லார்தொழும் ஒற்றியூர் உடையீர்
    ஞான நாடகம் நவிற்றுகின் றீரே.[137]    ( க )

வெண்மை நெஞ்சினேன் மெய்என்ப தறியேன்
    விமல நும்மிடை வேட்கையும் உடையேன்
உண்மை ஓதினேன் வஞ்சக வாழ்க்கை
    உவரி வீழ்வனேல் உறுதிமற் றறியேன்
கண்மை உள்ளவர் பாழ்ங்குழி வீழக்
    கண்டி ருப்பது கற்றவர்க் கழகோ
நண்மை ஒற்றியீர் திருச்சிற்றம் பலத்துள்
    ஞான நாடகம் நவிற்றுகின் றீரே.[138]    ( உ )

---

136. இப் பதிக ஏடுகளின் எண்கள் கசுஎ, கசுஅ, கசுகூ. இவற்றின் முதற்கண் முறையே, அடிகளார் "உ. சிவமயம்." என்றும், "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் எழுதி அகக்கண் கொண்டு அனுபவித்திருக்கிறார்கள்.

137. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார் அருள் தந்தையாகிய இறைவன் தம்மை மாயையினின்றும் மீட்டுக் காப்பாற்றி யருளும் கடப்பாடு உடையன் அன்றி, மாயையில் மேலும் மேலும் இருத்தி, இருக்கும் சின்னஞ் சிறியதோர் அன்பையும் அழித்தல் எவ்வாற்றானும்—உலகியலானும் அருளியலானும்—முறையாகாது என்று விம்மி அழுது மன்றாடுதல் கண்டுணர்ந்து சிவாநந்தம் அனுபவிக்க.

138. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருவாசகத் தெய்வத் தீந் தமிழ்ப் பெருக்கை உளங் கொண்டுணர்க:
"விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
    விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
    புலைய னேனைஉன் கோயில் வாயிலில்

குற்ற மேபல இயற்றினும் எனைநீர்
கொடியன் என்பது குறிப்பல உமது
பொற்றை நேர்புயத் தொளிர்திரு நீற்றைப்
பூசு கின்றனன் புனிதநும் அடிக்கண்
உற்ற தோர்சிறி தன்பும்இவ் வகையால்
உறுதி ஈவதிங் குமக்கொரு கடன்காண்
நற்ற வத்தர்வாழ் ஒற்றியூர் உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௩)

உள்ள தோதினல் ஒறுக்கிலேம் என்பர்
உலகு ளோர்இந்த உறுதிகொண் டடியேன்
கள்ளம் ஓதிலேன் நும்மடி அறியக்
காம வேட்கையில் கடலினும் பெரியேன்
வள்ள லேஉம தருள்பெறச் சிறிது
வைத்த சிந்தையேன் மயக்கற அருள்வீர்
நள்ளல் உற்றவர் வாழ்ஒற்றி உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௪)

அரந்தை யோடொரு வழிச்செல்வோன் தனைஓர்
ஆற்று வெள்ளம்ஈர்த் தலைத்திட அவனும்
பரந்த நீரிடை நின்றழு வானேல்
பகைவர் ஆயினும் பார்த்திருப் பாரோ
கரந்தை அஞ்சடை அண்ணல்நீர் அடியேன்
கலங்கக் கண்டிருக் கின்றது கடனே
நரந்த மார்பொழில் ஒற்றியூர் உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௫)

பிறவிக் கண்ணிலான் கைக்கொளும் கோலைப்
பிடுங்கி வீசுதல் பெரியவர்க் கறமோ
மறவிக் கையறை மனத்தினேன் உம்மேல்
வைக்கும் அன்பைநீர் மாற்றுதல் அழகோ

138. (தொடர்ச்சி)

பிச்சன் ஆக்கினும் பெரிய அன்பருக்(கு)
உரியன் ஆக்கினும் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயி னும்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே.''

உறஇக் கொள்கையை உள்ளிரேல் இதனை
ஓதிக் கொள்ளிடம் ஒன்றிலை கண்டீர்
நறவிக் கோங்கிய ஒற்றியம் பதியீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௬)

வலிய வந்திடு விருந்தினை ஒழிக்கார்
வண்மை உள்ளவர் மற்றது போலக்
கலிய நெஞ்சினேன் வஞ்சக வாழ்வில்
கலங்கி ஐயநுங் கருணையாம் அமுதை
மலிய உண்டிட வருகின்றேன் வருமுன்
மாற்று கிற்பிரேல் வள்ளல்நீர் அன்றோ
நலியல் நீக்கிடும் ஒற்றியம் பதியீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௭)

பொய்யன் ஆகிலும் போக்கிடம் அறியாப்
புலையன் ஆண்டவன் புகழ்உரைப் பானேல்
உய்ய வைப்பன்ஈ துண்மைஇவ் வுலகில்
ஓதிய னேன்புகல் ஓரிடம் அறியேன்
ஐய நும்மடிக் காட்செயல் உடையேன்
ஆண்ட நீர்எனை அகற்றுதல் அழகோ
நையல் அற்றிட அருள்ஒற்றி உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௮)

தந்தை ஆயவர் தனையரைக் கெடுக்கச்
சமைவர் என்பது சற்றும்இன் றுலகில்
எந்தை நீர்எனை வஞ்சக வாழ்வில்
இருத்து வீர்எனில் யார்க்கிது புகல்வேன்
பந்த மேலிட என்பரி தாபம்
பார்ப்பி ரோஅருட் பங்கய விழியீர்
நந்த வொண்பணை ஒற்றியூர் உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௯)

கல்வி வேண்டிய மகன்தனைப் பெற்றோர்
கடுத்தல் ஓர்சிறு கதையினும் இலைகாண்
செல்வம் வேண்டிலேன் திருவருள் விழைந்தேன்
சிறிய னேனைநீர் தியக்குதல் அழகோ

பல்வி தங்களால் பணிசெயும் உரிமைப்
பாங்கு நல்கும்அப் பாம்உமக் கன்றே
நல்வி தத்தினர் புகழ்ஒற்றி உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௧௦)

மண்ணில் நல்லவன் நல்லவர் இடத்தோர்
வணக்கம் இன்மையன் வணங்குவன் ஆனல்
எண்ணி நம்புடை இருஎன உரைப்பர்
ஏன்வ ணங்கிலை என்றுரைப் பாரோ
கண்ணின் நல்லநும் கழல்தொழ இசைந்தால்
கலக்கம் காண்பது கடன்அன்று கண்டீர்
நண்ணி மாதவன் தொழும்ஒற்றி உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

# 56. திருவண்ண விண்ணப்பம்[139]

திரு ஒற்றியூர்
கொச்சகக் கலிப்பா
திருச்சிற்றம்பலம்

கண்ணப்பா என்றருளும் காளத்தி அப்பாமுன்
வண்ணப்பால் வேண்டும் மதலையைப்பால் வாரிதியை
உண்ணப்பா என்றுரைத்த ஒற்றிஅப்பா வந்தருள
எண்ணப்பா என்றழும்இவ் ஏழைமுகம் பாராயோ.[140] (௧)

மஞ்சுபடும் செஞ்சடில வள்ளலே உள்ளுகின்றோர்
உஞ்சுபடும் வண்ணம்அருள் ஒற்றியூர் உத்தமனே
நஞ்சுபடும் கண்டம்உடை நம்பரனே வன்துயரால்
பஞ்சுபடும் பாடுபடும் பாவிமுகம் பாராயோ.[141] (௨)

---

139. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௬௫, ௱௬௬, இவற்றின் தொடக்கத் தில் முறையே "உ. சண்முக நம. திருவொற்றியூர்." என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்து நினைத்திருக்கிறார்கள்.

140. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், உலக வாழ்வில் சிக்குண்டு மயங்கித் துயரமுற்று, அதனின்றும் மீளத் திரு அருள்துணை நாடும் ஏழையாகிய தம் முகம் பார்த்து, இரங்கல் வேண்டும் என்று, இறை வன் திருத்தாளில் அழுது முறையிட்டுக் கொள்ளுதல் காண்க.

கண்ணார் அமுதே கரும்பேஎன் கண்ணேஎன்
அண்ணாஉன் பொன்னருள்தான் ஆர்ந்திடுமோ அல்லதென்றும்
நண்ணாதோ யாது நணுகுமோ என்றுருகி
எண்ணாதும் எண்ணும்இந்த ஏழைமுகம் பாராயோ. (௩)

நாடியசீர் ஒற்றி நகர்உடையாய் நின்கோயில்
நீடியநற் சந்நிதியில் நின்றுநின்று மால்அயனும்
தேடிஅறி ஒண்ணாத் திருஉருவைக் கண்டுருகிப்
பாடிஅழு தேங்கும்இந்தப் பாவிமுகம் பாராயோ. (௪)

வாங்கிமலை வில்லாக்கும் மன்னவனே என்அரசே
ஓங்கி வளர்ந்தழுவும் ஒற்றியூர் உத்தமனே
தூங்கிய துன்பச் சுமைசுமக்க மாட்டாது
ஏங்கிஅழு கின்றஇந்த ஏழைமுகம் பாராயோ. (௫)

தொண்டர்க் கருளும் துணையே இணையில்விடம்
உண்டச் சுதற்கருளும் ஒற்றியூர் உத்தமனே
சண்டப் பவநோயால் தாயிலாப் பிள்ளையெனப்
பண்டைத் துயர்கொளும்இப் பாவிமுகம் பாராயோ. (௬)

உட்டிகழ்ந்த மேலவனே ஒற்றியூர் உத்தமனே
மட்டிலங்கும் உன்றன் மலரடியைப் போற்றாது
தட்டிலங்கு நெஞ்சத்தால் சஞ்சலித்துன் சந்நிதிக்கண்
எட்டிநின்று பார்க்கும்இந்த ஏழைமுகம் பாராயோ. (௭)

நச்சை மிடற்றணிந்த நாயகனே ஓர்பாகம்
பச்சைநிறம் கொண்ட பவளத் தனிமலையே
மிச்சை தவிர்க்கும்ஒற்றி வித்தகனே நின்அருட்கே
இச்சைகொடு வாடும்இந்த ஏழைமுகம் பாராயோ. (௮)

மால்அயர்ந்தும் காணா மலரடியாய் வஞ்சவினைக்
கால்அயர்ந்து வாடஅருட் கண்ணுடையாய் விண்உடையாய்
சேல்அயர்ந்த கண்ணார் தியக்கத்தி னால்உன் அருட்
பால்அயர்ந்து வாடும்இந்தப் பாவிமுகம் பாராயோ. (௯)

---

141. இப் பா முதலியவற்றோடு கீழ்க்கண்ட மணிவாசகத் தீந்தேன் மாந்துக :
"கோவே அருள வேண்டாவோ கொடியேன் கெடவே அமையுமே
ஆவா என்னா விடில்என்னை அஞ்சேல் என்பார் ஆரோதான்
சாவார் எல்லாம் என்னளவோ தக்க வாறன்(று) என்னாரோ
தேவே தில்லை நடமாட திகைத்தேன் இனித்தான் தேற்றாயே."

சொந்தமுற எண்ணித் தொழுகின்ற மெய்யடியர்
சந்தமுறும் நெஞ்சத் தலத்தமர்ந்த தத்துவனே
நந்தவனஞ் சூழ்ஒற்றி நாயகனே வாழ்க்கைஎனும்
பந்தமதில் வாடும்இந்தப் பாவிமுகம் பாராயோ. (௧௦)

தில்லையிடை மேவும்எங்கள் செல்வப் பெருவாழ்வே
ஒல்லைஅடி யார்க்கருளும் ஒற்றியூர் உத்தமனே
அல்லை நிகர்க்கும் அளகத்தார் ஆசைதனக்
கெல்லைஅறி யாதஇந்த ஏழைமுகம் பாராயோ. (௧௧)

விதிஇழந்த வெண்தலைகொள் வித்தகனே வேதியனே
மதிஇழந்தோர்க் கேலா வளர்ஒற்றி வானவனே
நிதிஇழந்தோர் போல்அயர்ந்து நின்னுடைய வாழ்க்கைப்
பதிவிரும்பி வாடும்இந்தப் பாவிமுகம் பாராயோ. (௧௨)

திருச்சிற்றம்பலம்

# 57. மருட்கை விண்ணப்பம்[142]

திரு ஒற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

யாது செய்குவன் போதுபோ கின்ற
தண்ணலே உமை தன்பருக் கடியேன்
கோது செய்யினும் பொறுத்தருள் புரியும்
கொள்கை யீர்எனைக் குறுகிய குறும்பர்
வாது செய்கின்றார் மனந்தளர் கின்றேன்
வலியி லேன்செயும் வகைஒன்றும் அறியேன்
மாதர் செய்பொழில் ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே.[143] (௧)

142. இப்பதிக ஏடுகளின் எண்கள் ௲௭௩, ௲௭௪, ௲௭௫. இவற்றின் தொடக்கத்தில் முறையே "உ. சிவகம. ஒற்றியூர்." என்றும் "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் அடிகளார் வரைந்து சிந்தித் திருக்கிறார்கள்.

143. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம்மை ஈடேற்றுவார் இறைவன் அன்றிப் பிறர் இல்லை என்றும், தம்மைப் பகைவர் ஈர்த்துப் பாழாம் மாயையில் தள்ளுவதைத் தம் ஆண்டவனாகிய

எனக்கு நீர்இங்கோர் ஆண்டைஅல் லீரோ
என்னை வஞ்சகர் யாவருங் கூடிக்
கனக்கும் வன்பவக் கடலிடை வீழ்த்தக்
கண்டி ருத்தலோ கடன்உமக் கெளியேன்
தனக்கு மற்றொரு சார்பிருந் திடுமேல்
தயவு செய்திடத் தக்கதன் றிலைகாண்
மனக்கு நல்லவர் வாழ்ஒற்றி உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே.[144] (உ)

எஞ்சல் இல்லதோர் காமமாம் கடல்ஆழ்ந்
திளைக்கின் றேன்இனி என்செய்வன் அடியேன்
தஞ்சம் என்றும திணைமலர் அடிக்கே
சரண்பு குந்தனன் தயவுசெய் யீரேல்
வஞ்ச வாழ்க்கையாம் திமிங்கிலம் எனுமீன்
வாரிக் கொண்டெனை வாய்மடுத் திடுங்காண்
மஞ்ச ளாவிய பொழில்ஒற்றி உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே.[144] (௩)

என்பி றப்பினை யார்க்கெடுத் துரைப்பேன்
என்செய் வேன்எனை என்செய நினைக்கேன்
முன்பி றப்பிடை இருந்தசே டத்தால்
மூட வாழ்க்கையாம் காடகத் தடைந்தே
அன்பி றந்தவெங் காமவேட் டுவனால்
அலைப்புண் டேன்உம தருள்பெற விழைந்தேன்
வன்பி றந்தவர் புகழ்ஒற்றி உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. (௪)

---

143. (தொடர்ச்சி)
இறைவன் வாளா பார்த்திருத்தல் அறமன்று என்றும், கொடியன் ஆயினும் தம்மை ஆட்கொள்ளுதல் இறைவனது அருட்பூரணத்துக்குத் தகும் என்றும் இறைவன் திருவடியில் ஆற்றாது முறையிட்டுக் கொள்ளுதல் காண்க.

144. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தாயுமானார் திருப்பாடல் போல்வனவற்றை உய்த்துணர்க:
"உள்ளத்தை யும்இங்(கு) எனையும்நின் கையினில் ஒப்புவித்தும்
கள்ளத்தைச் செய்யும் வினையால் வருந்தக் கணக்கும் உண்டோ
பள்ளத்தில் வீழும் புனல்போல் படிந்துன் பரமஇன்ப
வெள்ளத்தின் மூழ்கினர்க் கேஎளி தாம்தில்லை வித்தகனே."

காமம் என்னும்ஓர் காவலில் உழன்றே
கலுழ்கின் றேன்ஒரு களைகணும் அறியேன்
சேம நல்லருட் பதம்பெறுந் தொண்டர்
சேர்ந்த நாட்டகம் சேர்வுற விழைந்தேன்
ஏமம் உற்றிடும் எனைவிடு விப்பார்
இல்லை என்செய்வன் யாரினும் சிறியேன்
வாம மாதராள் மருவொற்றி உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. (ரு)

இன்பம் என்பது விழைந்திடர் உழந்தேன்
என்னை ஒத்தஓர் ஏழைஇங் கறியேன்
துன்பம் என்பது பெருஞ்சுமை ஆகச்
சுமக்கின் றேன்அருள் துணைசிறி தில்லேன்
அன்பர் உள்ளகத் தமர்ந்திடுந் தேவர்
அடிக்குற் றேவலுக் காட்படு வேனே
வன்பர் நாடுறா ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. (சு)

ஊழ்வி னைப்படி எப்படி அறியேன்
உளுற்று கின்றனன் உமதருள் பெறவே
தாழ்வி னைத்தரும் காமமோ எனைக்கீழ்த்
தள்ளு கின்றதே உள்ளுகின் றதுகாண்
பாழ்வி னைக்கொளும் பாவியேன் செய்யும்
பாங்க றிந்திலேன் ஏங்குகின் றனனால்
வாழ்வி னைத்தரும் ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. (எ)

இறப்பி லார்தொழும் தேவரீர் பதத்தை
எவ்வம் நீக்கியே எவ்விதத் தானும்,
மறப்பி லாதுளம் நினைத்திடில் காமம்
வழிம றித்ததை மயக்குகின் றதுகாண்
குறிப்பி லாதென்னால் கூடிய மட்டும்
குறைத்தும் அங்கது குறைகில தந்தோ
வறிப்பி லாவயல் ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. (அ)

சஞ்சி தந்தரும் காமம்என் றிடும்ஓர்
சலதி வீழ்ந்ததில் தலைமயக் குற்றே
அஞ்சி அஞ்சிநான் அலைகின்றேன் என்னை
அஞ்சல் என்பவர் யாரையும் அறியேன்
துஞ்சி னால்பின்பு சுகம்பலித் திடுமோ
துணையி லார்க்கொரு துணைஎன இருப்பீர்
மஞ்சின் நீள்பொழில் ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. (கூ)

அல்ல ஓதியர் இடைப்படும் கமருக்
கர்சை வைத்தஎன் அறிவின்மை அளவைச்
சொல்ல வோமுடி யாதெனை ஆளத்
துணிவு கொள்விரோ தூயரை ஆளல்
அல்ல வோஉம தியற்கைஆ யினும்நல்
அருட்க ணீர்எனை ஆளலும் தகுங்காண்
மல்லல் ஓங்கிய ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. (கo)

திருச்சிற்றம்பலம்

# 58. கொடைமட விண்ணப்பம்[145]

திரு ஒற்றியூர்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

நின்போன்ற தெய்வம்ஒன் றின்றென வேதம் நிகழ்த்தவும்நின்
பொன்போன்ற ஞானப் புதுமலர்த் தாள்துணைப் போற்றுகிலேன்
என்போன்ற ஏழையர் யாண்டுளர் அம்பலத் தேநடஞ்செய்
மின்போன்ற வேணியு னேஒற்றி மேவிய வேதியனே.[146] (க)

---

145. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௯௭௬, ௯௭௭. இவற்றின் முதற்கண் முறையே, "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்து எண்ணியிருக்கிறார்கள்.

146. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானார் இறை இயல்பினை விவரித்து, அவன் அருளுக்கு உரியவர் ஆகாத தம் ஏழைமையை நொந்து வருந்துதல் காண்க.

வேதிய னேவெள்ளி வெற்பிடை மேவிய வித்தகனே
நீதிய னேமன்றில் நிட்கள ஆனந்த நிர்த்தமிடும்
ஆதிய னேஎமை ஆண்டவ னேமலை யாள்மகிழும்
பாதிய னேஎம் பராபர னேமுக்கட் பண்ணவனே.[147] (உ)

பண்ணவ னேபசு பாசத்தை நீக்கும் பரம்பரனே
மண்ணவ னேஐ மகிழ்ந்தவ னேமலம் மாற்றுகின்ற
விண்ணவ னேவெள் விடையவ னேவெற்றி மேவுநெற்றிக்
கண்ணவ னேஎனைக் காத்தவ னேஒற்றிக் காவலனே. (௩)

காவல னேஅன்று மாணிக்குப் பொற்கிழிக் கட்டவிழ்த்த
பாவல னேதொழும் பாணன் பரிசுறப் பாட்டளித்த
நாவல னேதில்லை நாயக னேகடல் நஞ்சைஉண்ட
மாவல னேமுக்கண் வானவ னேஒற்றி மன்னவனே. (௪)

மன்னவ னேகொன்றை மாலைய னேதிரு மாலயற்கு
முன்னவ னேஅன்று நால்வர்க்கும் யோக முறைஅறந்தான்
சொன்னவ னேசிவ னேஒற்றி மேவிய தூயவனே
என்னவ னேஐயம் ஏற்பவ னேஎனை ஈன்றவனே. (௫)

ஈன்றவ னேஅன்பர் இன்னுயிர்க் கின்புறும் இன்னமுதம்
போன்றவ னேசிவ ஞானிகள் உள்ளுறும் புண்ணியனே
ஆன்றவ னேஎம தூள்ளும் புறம்பும் அறிந்துநின்ற
சான்றவ னேசிவ னேஒற்றி மேவிய சங்கரனே. (௬)

சங்கர னேஅர னேபர னேநற் சராசரனே
கங்கர னேமதிக் கண்ணிய னேநுதல் கண்ணினனே
நங்கர மேவிய அங்கனி போன்றருள் நாயகனே
செங்கர னேர்வண னேஒற்றி மேவிய சின்மயனே. (௭)

சின்மய னேஅனல் செங்கையில் ஏந்திய சேவகனே
நன்மைய னேமறை நான்முகன் மாலுக்கு நாடரிதாம்
தன்மைய னேசிவ சங்கர னேஎஞ் சதாசிவனே
பொன்மய னேமுப் புராந்தக னேஒற்றிப் புண்ணியனே. (௮)

---

147. இப் பா முதலியவற்றோடு கீழ்க்கண்ட தாயுமானாரின் திருஉள்ளக் கிடக்கை போல்வனவற்றை ஒத்துணர்க:
"ஒன்றாய்ப் பலவாய் உலகமெங்கும் தானேயாய்
நின்றாய்ஐ யாஎனைநீ நீக்கற்(கு) எளிதாமோ."

புண்ணிய னேஎமைப் போல்வார்க்கும் இன்பப் பொருள் அளிக்கும்
திண்ணிய னேநற் சிவஞான நெஞ்சில் தெளிந்த அருள்
அண்ணிய னேகங்கை ஆறமர் வேணியில் ஆர்ந்தமதிக்
கண்ணிய னேபற் பலவாகும் அண்டங்கள் கண்டவனே. (௯)

கண்டவ னேசற் றும் நெஞ்சுரு காக்கொடுங் கள்வர்தமை
விண்டவ னேகடல் வேம்படி பொங்கும் விடம்அனைத்தும்
உண்டவ னேமற் றும் ஒப்பொன் றிலாத உயர்வுதனைக்
கொண்டவ னேஒற்றிக் கோயிலின் மேவும் குருபரனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

# 59. சிறு விண்ணப்பம்[148]

---

**பொது**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பண்ணால்உன் அருட்புகழைப் பாடு கின்றார்
பணிகின்றார் நின்அழகைப் பார்த்துப் பார்த்துக்
கண்ணார உளங்குளிரக் களித்தா னந்தக்
கண்ணீர்கொண் டாடுகின்றார் கருணை வாழ்வை
எண்ணாநின் றனைஎந்தாய் எந்தாய் எந்தாய்
என்கின்றார் நின்அன்பர் எல்லாம் என்றன்
அண்ணாநான் ஒருபாவி வஞ்ச நெஞ்சால்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ.[149] (௧)

எப்பாலும் நின்அன்பர் எல்லாம் கூடி
ஏத்துகின்றார் நின்பதத்தை ஏழை யேன்நான்
வெப்பாய மடவியர்தம் கலவி வேட்டு
விழுகின்றேன் கண்கெட்ட விலங்கே போல

---

148. இப் பதிக ஏடுகள் இரண்டிலும் எண் குறிக்கப்படவில்லை. முதல் ஏட்டின் தொடக்கத்தில் "உ. சிவனே." என்று அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

149. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், மெய்யடியார் உள்ளநிலைக்கும் செய்கைக்கும் பேச்சுக்கும் தம் உள்ளநிலைக்கும் செய்கைக்கும் பேச்சுக்கும் உள்ள வேறுபாட்டினை எண்ணி எண்ணித் தாம் இனிச் செய்யக்கடவது யாது என்று ஏங்குவது காண்க.

இப்பாரில் மயங்குகின்றேன் நன்மை ஒன்றும்
எண்ணுகிலேன் முக்கணுடை இறைவா என்றன்
அப்பாஎன் ஆருயிர்க்கோர் துணைவா வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ.[150] (உ)

இன்புடையார் நின்அன்பர் எல்லாம் நின்சீர்
இசைக்கின்றார் நான்ஒருவன் ஏழை இங்கே
வன்புடையார் தமைக்கூடி அவமே நச்சு
மாமரம்போல் நிற்கின்றேன் வஞ்ச வாழ்க்கைத்
துன்புடையார் அனைவர்க்கும் தலைமை பூண்டேன்
தூய்மைஎன்ப தறிந்திலேன் சூழ்ந்தோர்க் கெல்லாம்
அன்புடையாய் எனைஉடையாய் விடையாய் வீணே
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. (ந)

விஞ்சுடையாய் நின்அன்பர் எல்லாம் நின்சீர்
மெய்ப்புளகம் எழத்துதித்து விளங்கு கின்றார்
நஞ்சுடையார் வஞ்சகர்தம் சார்பில் இங்கே
நான்ஒருவன் பெரும்பாவி நண்ணி மூட
நெஞ்சுடையார் தமக்கெல்லாம் தலைமை பூண்டு
நிற்கின்றேன் கருணைமுக நிமலக் கஞ்சம்
அஞ்சுடையாய் ஆறுடைய சடையாய் வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. (ச)

பொய்யாத நின்அடியார் எல்லாம் நல்ல
புண்ணியமே செய்துநினைப் போற்று கின்றார்
நையாநின் றலைகின்ற மனத்தால் இங்கே
நான்ஒருவன் பெரும்பாவி நாயேன் தீமை
செய்யாநின் றுழைக்கின்றேன் சிறிதும் நின்னைச்
சிந்தியேன் வந்திக்கும் திறமும் நாடேன்
ஐயாஎன் அப்பாஎன் அரசே வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. (ரு)

150. இப் பா முதலியவற்றோடு பின்கண்ட மணிவாசகத் தெள்ளமுதினை ஒத்துணர்ந்து அனுபவிக்க :

"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே(று) இருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும் தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயே."

தெருளுடையார் நின்அன்பர் எல்லாம் நின்றாள்
சிந்தையில்வைத் தானந்தம் தேக்கு கின்றார்
மருளுடையேன் நான்ஒருவன் பாவி வஞ்ச
மனத்தாலே இளைத்திளைத்து மயங்கு கின்றேன்
இருளுடையேன் ஏர்பூட்டும் பகடு போல்இங்
கில்உழப்பில் உழைக்கின்றேன் எல்லாம் வல்ல
அருளுடையாய் ஆளுடையாய் உடையாய் வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. (௬)

வாரமுளார் நின்அடியார் எல்லாம் நின்னை
வாழ்த்துகின்றார் தலைகுளிர வணங்கு கின்றார்
நீரமிலேன் நானொருவன் பாவி வஞ்சச்
செயல்விளக்கும் மனத்தாலே திகைத்தேன் சைவ
சாரமிலேன் ஆசார மில்லேன் சித்த
சாந்தமிலேன் இரக்கமிலேன் தகவும் இல்லேன்
ஆரமுதே முக்கணுடை அரசே வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. (௭)

வண்மைபெறு நின்அன்பர் எல்லாம் நின்னை
வந்தனைசெய் தாநந்த வயத்தே நின்றார்
பெண்மையுறும் மனத்தாலே திகைத்தேன் நின்சீர்
பேசுகிலேன் கூசுகிலேன் பேதை நானோர்
ஒண்மையிலேன் ஒழுக்கமிலேன் நன்மை என்ப
தொன்றுமிலேன் ஓதியேபோல் உற்றேன் மிக்க
அண்மையில்வந் தருள்புரிவோய் என்னே வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. (௮)

உம்பர்தமக் கரிதாம்உன் பதத்தை அன்றி
ஒன்றுமறி யார்உன்னை உற்றோர் எல்லாம்
இம்பர்வினை யுடையேன்நான் ஒருவன் பாவி
எட்டுணையும் நினைந்தறியேன் என்றும் எங்கும்
வம்பவிழ்பூங் குழல்மடவார் மையல் ஒன்றே
மனம்உடையேன் உழைத்திளைத்த மாடு போல்வேன்
அம்பலத்தெம் அரசேஇவ் வாழ்க்கைத் துன்பில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. (௯)

கொலைஅறியாக் குணத்தோர்நின் அன்பர் எல்லாம்
குணமேசெய் துன்னருள்தான் கூடு கின்றார்
புலைஅறிவேன் நான்ஒருவன் பிழையே செய்து
புலங்கெட்ட விலங்கேபோல் கலங்கு கின்றேன்
நிலையறியேன் நெறியொன்றும் அறியேன் எங்கும்
நினைஅன்றித் துணையொன்றும் அறியேன் சற்றும்
அலைஅறியா அருட்கடல்நீ ஆள்க வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. (௧0)

திருச்சிற்றம்பலம்

---

# 60. பெரு விண்ணப்பம்[151]

---

பொது

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இருள்ஆர் மனத்தேன் இழுக்குடையேன் எளியேன் நின்னை ஏத்தாத
மருள்ஆர் நெஞ்சப் புலையரிடம் வாய்ந்து வருந்தி மாழ்கின்றேன்
அருள்ஆர் அமுதப் பெருக்கேஎன் அரசே அதுநீ அறிந்தன்றோ
தெருள்ஆர் அன்பர் திருச்சபையில் சேர்க்கா தலைக்கும் திறம்அந்தோ.[152] (௧)

உண்மை அறியேன் எனினும்எனை உடையாய் உனையே ஒவ்வொருகால்
எண்மை உடையேன் நினைக்கின்றேன் என்னே உன்னை ஏத்தாத
வெண்மை உடையார் சார்பாக விட்டாய் அந்தோ வினையேனை
வண்மை உடையாய் என்செய்கேன் மற்றோர் துணைஇங் கறியேனே.[153] (௨)

---

151. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௬, ௫. இவை இரண்டையும் அடிக ளார் "௨" என்றெழுதித் தொடங்கி யிருக்கிறார்கள்.

152. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் தீயராயினும், இறைவனுக்கு அடிமைப்பட்டுப் புகலடைந்திருப்பதால், தம் அருள் வறுமையைத் தீர்த்துத் தம்மைத் தொண்டரொடு கூட்டுமாறு, இறைவனை நெகிழ்ந்து வேண்டுதல் காண்க.

153. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருவாசகத் தீஞ்சொல் அமுதத்தை வாய்மடுத்து மகிழ்க :

"கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங்(கு) ஒன்றில்லை மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா திகைத்தால் தேற்ற வேண்டாவோ."

எளியேன் இழைத்த பெரும்பிழைகள் எல்லாம் பொறுத்திங் கின்பளித்தாய்
களியேன் தனைநீ இனிஅந்தோ கைவிட் டிடில்என் கடவேனே
ஒளியே முக்கட் செழுங்கரும்பே ஒன்றே அன்பர் உறவேநல்
அளியே பரம வெளியேஎன் ஐயா அரசே ஆரமுதே. ( ௩ )

காமக் கடலில் படிந்துநாம் கடலில் விழுந்தேன் கரைகாணேன்
ஏமக் கொடுங்கூற் றெனும்மகரம் யாது செயுமோ என்செய்கேன்
நாமக் கவலை ஒழித்துன்றாள் நண்ணும் அவர்பால் நண்ணுவித்தே
தாமக் கடிப்பூஞ் சடையாய்உன் தன்சீர் பாடத் தருவாயே. ( ௪ )

எண்ணா தெளியேன் செயும்பிழைகள் எல்லாம் பொறுத்திங் கெனையாள்வ
தண்ணா நினது கடன்கண்டாய் அடியேன் பலகால் அறைவதென்னே
கண்ணார் நுதற்செங் கரும்பேமுக் கனியே கருணைக் கடலேசெவ்
வண்ணா வெள்ளை மால்விடையாய் மன்றா டியமா மணிச்சுடரே. ( ௫ )

பாலே அமுதே பழமேசெம் பாகே எனும்நின் பதப்புகழை
மாலே அயனே இந்திரனே மற்றைத் தேவ ரேமறைகள்
நாலே அறியா தெனில்சிறியேன் நானே அறிவேன் நாயகஎன்
மேலே அருள்கூர்ந் தெனைநின்தாள் மேவு வோர்பால் சேர்த்தருளே. ( ௬ )

கண்ணார் நுதலோய் பெருங்கருணைக் கடலோய் கங்கை மதிச்சடையோய்
பெண்ணார் இடத்தோய் யாவர்கட்கும் பெரியோய் கரியோன் பிரமனொடும்
அண்ணா எனநின் றேத்தெடுப்ப அமர்ந்தோய் நின்றன் அடிமலரை
எண்ணா துழல்வோர் சார்பாக இருக்கத் தரியேன் எளியேனே. ( ௭ )

பொய்யோர் அணியா அணிந்துழலும் புலையேன் எனினும் புகல்இடந்தான்
ஐயோ நினது பதம்அன்றி அறியேன் இதுநீ அறியாயோ
கையோர் அனல்வைத் தாடுகின்ற கருணா நிதியே கண்ணுதலே
மெய்யோர் விரும்பும் அருமருந்தே வேத முடிவின் விழுப்பொருளே. ( ௮ )

இன்னே எளியேன் பொய்யுடையேன் எனினும் அடியன் அலவோநான்
என்னே நின்னைத் துதியாதார் இடத்தில் என்னை இருத்தினையே
அன்னே என்றன் அப்பாஎன் ஐயா என்றன் அரசேசெம்
பொன்னே முக்கட் பொருளேநின் புணர்ப்பை அறியேன் புலையேனே. ( ௯ )

வஞ்ச மடவார் மயலொருபால் மணியே நின்னை வழுத்தாத
நஞ்சம் அனையார் சார்பொருபால் நலியும் வாழ்க்கைத் துயர்ஒருபால்
விஞ்சும் நினது திருஅருளை மேவா தழலும் மிடிஒருபால்
எஞ்சல் இலவாய் அலைக்கின்ற தென்செய் கேன்இவ் எளியேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

# 61. திருக்காட்சிக் கிரங்கல்[154]

---

### திரு ஒற்றியூர்

தாவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

மண்ணேயும் வாழ்க்கையிடை மாழாந்து வன்பிணியால்
புண்ணேயும் நெஞ்சம் புழுங்குகின்ற பொய்யவனேன்
பண்ணேயும் இன்பப் பரஞ்சுடரே என்இரண்டு
கண்ணேஉன் பொன்முகத்தைக் காணக் கிடைத்திலனே.[155] ( ௧ )

மருள்ஆர்ந்த வல்வினையால் வன்பிணியால் வன்துயரால்
இருள்ஆர்ந்த நெஞ்சால் இடியுண்ட ஏழையனேன்
தெருள்ஆர்ந்த மெய்ஞ்ஞானச் செல்வச் சிவமேநின்
அருள்ஆர்ந்த முக்கண் அழகுதனைக் கண்டிலனே.[156] ( ௨ )

---

154. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௬௭௮, ௬௭௯. இவற்றின் முதற்கண் முறையே "உ. சிவமயம்." என்றும் "உ. உ." என்றும் அடிகளார் குறித்துச் சிந்தித்திருக்கிறார்கள்.

155. இப் பதிகப் பாக்களில் நம் அடிகளார், உலக வாழ்வில் சிக்குண்டு துன்புற்று மயங்கும் தமக்கு இறைவனது திருவடிக் காட்சி கிடைத்திலது என்று ஏங்கி அழுவது காண்க.

156. இப் பா முதலியவற்றோடு அடியிற் கண்ட தாயுமானப் பெருந்தகையாரின் திருப்பாடல் போல்வன கண்டுணர்க :

"அளியும் கனிஒத்(து) அருவினை யால்நொந்(து) அயர்வுறுவேன்
தெளியும் படிக்குப் பரிபாக காலமும் சித்திக்குமோ
ஒளியும் கருணையும் மாறாத இன்பமும் ஓருருவாய்
வெளிவந்(து) அடியர் களிக்கநின் றாடும் விழுப்பொருளே."

வல்லார் முலையார் மயல்உழந்த வஞ்சகனேன்
பொல்லார் புரம்எரித்த புண்ணியனே பொய்மறந்த
நல்லார் தொழுந்தில்லை நாயகனே நன்றளித்த
அல்லார் களத்தின் அழகுதனைக் கண்டிலனே. (௩)

நோயால் மெலிந்துனருள் நோக்குகின்ற நொய்யவனேன்
தாயா னவனேஎன் தந்தையே அன்பர்தமைச்
சேயாய் வளர்க்கும் சிவனே சிவனேஎம்
தூயாநின் பொற்றோளின் சுந்தரத்தைக் கண்டிலனே. (௪)

வன்னேர் முலையார் மயல்உழந்த வன்மனத்தேன்
அன்னேஎன் அப்பாஎன் ஐயாஎன் ஆரமுதே
மன்னே மணியே மலையாள் மகிழ்உனது
பொன்னேர் இதழிப் புயங்காணப் பெற்றிலனே. (௫)

நண்ணும் வினையால் நலிகின்ற நாயடியேன்
எண்ணும் சுகாதீத இன்பமே அன்புடையோர்
கண்ணும் கருத்தும் களிக்கவரும் கற்பகமே
பெண்ஒருபால் வாழும்உருப் பெற்றிதனைக் கண்டிலனே. (௬)

தெவ்வண்ண மாயையிடைச் செம்மாந்த சிற்றடியேன்
இவ்வண்ணம் என்றறிதற் கெட்டாத வான்பொருளே
அவ்வண்ண மான அரசே அமுதேநின்
செவ்வண்ண மேனித் திறங்காணப் பெற்றிலனே. (௭)

அல்வைத்த நெஞ்சால் அழுங்குகின்ற நாயடியேன்
சொல்வைத்த உண்மைத் துணையே இணைத்தோள்மேல்
வில்வத் தொடைஅணிந்த வித்தகனே நின்னுடைய
செல்வத் திருவடியின் சீர்காணப் பெற்றிலனே. (௮)

பொத்தேர் மயலால் புழுங்குகின்ற பொய்யடியேன்
கொத்தேர் செழுங்கொன்றைக் குன்றமே கோவாத
முத்தே எவர்க்கும் முழுமுதலே முத்திக்கு
வித்தேநின் பொன்னடிக்கீழ் மேவிநிற்கக் கண்டிலனே. (௯)

நீதியிலார் வாயிலிடை நின்றலைந்த நெஞ்சகனேன்
சோதிஎலாம் சூழ்ந்தபரஞ் சோதியே செஞ்சடைமேல்
பாதிநிலா ஓங்கும் பரமேநீ ஒற்றிநகர்
வீதிஉலா வந்தஎழில் மெய்குளிரக் கண்டிலனே. (௧0)

திருச்சிற்றம்பலம்

## 62. திருஅருட் கிரங்கல்[157]

**திரு ஒற்றியூர்**

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஒப்பாரும் இல்லாத உத்தமனே ஒற்றியில்என்
அப்பாஉன் பொன்னடிக்கே அன்பிலேன் ஆனாலும்
தப்பா தகமெலியச் சஞ்சலத்தால் ஏங்குகின்ற
இப்பா தகத்தேற் கிரங்கினால் ஆகாதோ.[158] (௧)

எஞ்சா இடரால் இரும்பிணியால் ஏங்கிமனம்
பஞ்சாக நொந்து பரதவிக்கும் நாயேனைச்
செஞ்சாலி ஓங்கும் திருஒற்றி அப்பாநீ
அஞ்சாதே என்றுன் அருள்கொடுத்தால் ஆகாதோ.[159] (௨)

பற்றும் செழுந்தமிழால் பாடுகின்றோர் செய்தபெருங்
குற்றம் குணமாகக் கொள்ளும் குணக்கடலே
மற்றங்கும் எண்தோள் மலையே மரகதமே
பெற்றிங் கடியேன் பிணிகெடுத்தால் ஆகாதோ. (௩)

157. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱அ௰, ௱அ௧. இவற்றின் முதலில் முறையே "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் அடிகளார் எழுதி எண்ணியிருக்கிறார்கள்.

158. இப் பதிகப் பாக்களில் நம் அடிகளார், சேய் பிழையைத் தாயறிந்தும் சீறாது பொறுப்பதுபோல், தமக்குத் தாயும் தந்தையும் எல்லாமும் ஆக இருக்கும் இறைவன் தம் பிழை பொறுத் தாட்கொண்டால், அது அருளுக்கு உரியதாகாதோ என்று அலறி முறையிடுதல் காண்க.

159. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருவாசகத் திருமறை போல்வன காண்க :

"என்னை அப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின்(று) எய்த்தலைந்தேன்
மின்னைஒப் பாய்விட் டிடுதிகண் டாய்உவ மிக்கின்மெய்யே
உன்னைஒப் பாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
அன்னைஒப் பாய்எனக்(கு) அத்தன்ஒப் பாய்என் அரும்பொருளே."

எந்தையே என்பவர்தம் இன்அமுதே என்உரிமைத்
தந்தையே தாயே தமரேஎன் சற்குருவே
சிந்தையே ஓங்கும் திருஒற்றி ஐயாஎன்
நிந்தையே நீங்க நிழல்அளித்தால் ஆகாதோ. (௪)

உள்ளும் திருத்தொண்டர் உள்ளத் தெழுங்களிப்பே
கொள்ளும் சிவானந்தக் கூத்தாஉன் சேவடியை
நள்ளும் புகழுடைய நல்லோர்கள் எல்லாரும்
எள்ளும் புலையேன் இழிவொழித்தால் ஆகாதோ. (௫)

கோதைஓர் கூறுடைய குன்றமே மன்றமர்ந்த
தாதையே ஒற்றித் தலத்தமர்ந்த சங்கரனே
தீதையே நாள்தோறும் செய்தலைந்து வாடுமிந்தப்
பேதையேன் செய்த பிழைபொறுத்தால் ஆகாதோ. (௬)

முத்திக்கு வித்தே முழுமணியே முத்தர்உளம்
தித்திக்கும் தேனே சிவமே செழுஞ்சுடரே
சத்திக்கும் நாதத் தலங்கடந்த தத்துவனே
எத்திக்கும் இல்லேன் இளைப்பொழித்தால் ஆகாதோ. (௭)

வஞ்சமிலார் உள்ளம் மருவுகின்ற வான்சுடரே
கஞ்சமுளான் போற்றும் கருணைப் பெருங்கடலே
நஞ்சமுதாக் கொண்டருளும் நல்லவனே நின்அலதோர்
தஞ்சமிலேன் துன்பச் சழக்கொழித்தால் ஆகாதோ. (௮)

சேய்பிழையைத் தாய்அறிந்தும் சீறுள் பொறுப்பாள்இந்
நாய்பிழையை நீபொறுக்க ஞாயமும்உண் டையாவே
தேய்மதிபோல் நெஞ்சம் தியக்கம்உறச் சஞ்சலத்தால்
வாய்அலறி வாடும்எனை வாஎன்றால் ஆகாதோ. (௯)

கண்ணுள் மணிபோல் கருதுகின்ற நல்லோரை
எண்ணும் கணமும்விடுத் தேகாத இன்னமுதே
உண்ணும் உணவுக்கும் உடைக்கும்முயன் றோடுகின்ற
மண்ணுலகத் தென்றன் மயக்கறுத்தால் ஆகாதோ. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 63. எண்ணத் திரங்கல்[160]

## திரு ஒற்றியூர்

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

எளியேன்நின் திருமுன்பே என்உரைக்கேன் பொல்லாத
களியேன் கொடுங்காமக் கன்மனத்தேன் நன்மையிலா
வெளியேன் வெறியேன்தன் மெய்ப்பிணியை ஒற்றியில்வாழ்
அளியோய்நீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே.[161] (௧)

முன்னேசெய் வெவ்வினைதான் மூண்டதுவோ அல்லதுநான்
இன்னே பிழைதான் இயற்றியதுண் டோஅறியேன்
பொன்னேர் புரிசடைஎம் புண்ணியனே என்நோயை
அன்னேநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே.[162] (௨)

இப்பா ரிடைஉனையே ஏத்துகின்ற நாயேனை
வெப்பார் உளத்தினர்போல் வெம்மைசெயும் வெம்பிணியை
எப்பா லவர்க்கும் இறைவனும் என்அருமை
அப்பாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. (௩)

ஓவா மயல்செய் உலகநடைக் குள்துயரம்
மேவா உழல்கின்ற வெண்மையேன் மெய்க்நோயைச்
சேவார் கொடிஎம் சிவனே சிவனேயோ
ஆவாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. (௪)

---

160. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௮௭, ௱௮௮. இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமய." என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்து அநுபவித்திருக்கிறார்கள்.

161. இப் பதிகப் பாக்களில் நம் பெருமானார், உலக நடைக்குள் பட்டுத் துயருறும் தம் மெய்க்நோயை இறைவன் நீக்கியருளாவிடில், வேறு யார் நீக்கவல்லார் என்று மன்றுடுதல் காண்க.

162. இப் பா முதலியவற்றோடு கீழ்க்கண்ட மணிவாசகப் பெருமறை போல்வன கண்டுவக்க :

"கெடுவேன் கெடுமா கெடுகின்றேன் கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாம்நான் பட்டால் பின்னைப் பயன்என்னே
கோடுமா நரகத்(து) அழுந்தாமே காத்தாட் கொள்ளும் குருமணியே
நடுவாய் நில்லா(து) ஒழிந்தக்கால் நன்றே எங்கள் நாயகமே."

பொய்யாம் மலஇருட்டுப் பொத்தரிடை வீழ்ந்துழலும்
கையாம் நெறியேன் கலங்கவந்த வெம்பிணியை
மையார் மிடற்றெம் மருந்தே மணியேஎன்
ஐயாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. (ரு)

இம்மா நிலத்தில் இடருழந்தல் போதாதே
விம்மா அழுங்கஎன் றன் மெய்உடற்றும் வெம்பிணியைச்
செம்மான் மழுக்கரங்கொள் செல்வச் சிவமேஎன்
அம்மாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. (சா)

புரைசேரும் நெஞ்சப் புலையனேன் வன்காமத்
தரைசேரும் துன்பத் தடங்கடலேன் வெம்பிணியை
விரைசேரும் கொன்றை விரிசடையாய் விண்ணவர்தம்
அரைசேநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. (எ)

இத்தா ரணியில் எளியோரைக் கண்டுமிக
வித்தாரம் பேசும் வெறியேன்றன் மெய்ப்பிணியைக்
கொத்தார் குழலிஒரு கூறுடைய கோவேஎன்
அத்தாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. (அ)

மறியோர் விழியார் மயக்கினிடை மாழாந்த
சிறியேன் அடியேன் தியங்கவந்த வல்நோயைச்
செறிவே பெறுந்தொண்டர் சிந்தை தனில்ஓங்கும்
அறிவேநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. (கூ)

துன்பே சுமையாச் சுமக்கின்ற நாயேனை
வன்பேசெய் துள்ள மயக்கிநின்ற வன்நோயை
இன்பே அருள்கின்ற என்ஆ ருயிரேஎன்
அன்பேநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. (கo)

திருச்சிற்றம்பலம்

---

# 64. நெஞ்சு நிலைக் கிரங்கல்[163]

### திரு ஒற்றியூர்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

ஆளாக நின்பொன் அடிக்கன்பு செய்திட ஐயநெடு
நாளாக இச்சைஉண் டென்னைசெய் கேன்கொடு நங்கையர்தம்
மாளா மயல்சண்ட மாருதத் தால்மன வாசிஎன்சொல்
கேளா தலைகின்ற தால்ஒற்றி மேவும் கிளர்ஒளியே.[164] (க)

ஒளியாய் ஒளிக்குள் ஒளிர்ஒளி யேஒற்றி உத்தமநீ
அளியா விடில்இதற் கென்னைசெய் கேன்அணங் கன்னவர்தம்
களியால் களித்துத் தலைதெரி யாது கயன்றுலவா
வளியாய்ச் சுழன்றிவண் மாயா மனம்எனை வாதிப்பதே.[165] (உ)

மாயா மனம்எவ் வகைஉரைத் தாலும் மடந்தையர்பால்
ஓயாது செல்கின்ற தென்னைசெய் கேன்தமை உற்றதொரு
நாயாகி னும்கை விடார்உல கோர்உனை நான்அடுத்தேன்
நீயாகி லுஞ்சற் றிரங்குகண் டாய்ஒற்றி நின்மலனே. (ங)

மலஞ்சான்ற மங்கையர் கொங்கையி லேநசை வாய்த்துமனம்
சலஞ்சான்ற தால்இதற் கென்னைசெய் கேன்நின் சரண்அன்றியே
வலஞ்சான்ற நற்றுணை மற்றறி யேன்ஒற்றி வானவனே
நலஞ்சான்ற ஞானத் தனிமுத லேதெய்வ நாயகனே. (ச)

---

163. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱அடு, ௱அசு. இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமய." என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

164. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவன் திருவடிக்குத் தொண்டாற்ற நெடுநாள் ஆசைகொண்டிருந்தும், தம் மனவாசி, அதில் ஈடுபடாது, காமம் முதலிய உலகியல் சூழலில் தேங்கிக்கிடக்கிறது என்றுலும், அடுத்தவனைக் கைவிடாது மீட்பதுதான் அறம் என்று இறைவனிடம் முறையிடுதல் காண்க.

165. இப் பா முதலியவற்றோடு பின்வரும் மணிவாசகத் தெய்வ மறை போல்வனவற்றை ஒத்துணர்க :

"கடையவ னேனைக் கருணையி னால்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத் தாங்கிக்கொள்ளே."

நாயினும் கீழ்ப்பட்ட என்நெஞ்சம் நன்குற்ற நங்கையர்பால்
ஏயினும் செல்கின்ற தென்னைசெய் கேன்உனை ஏத்தியிடேன்
ஆயினும் இங்கெனை ஆட்கொளல் வேண்டும்ஐ யாஉவந்த
தாயினும் நல்லவ னேஒற்றி மேவும் தயாநிதியே. (௫)

நிதியேநின் பொன்னடி ஏத்தாது நெஞ்சம் நிறைமயலாம்
சதியே புரிகின்ற தென்னைசெய் கேன்உனைத் தாழலர்தம்
விதியே எனக்கும் விதித்ததன் றோவவ் விதியும்இள
மதியோர் சடைஅண்ண லேஒற்றி யூர்ஒளி மாணிக்கமே. (௬)

மாணாத என்நெஞ்சம் வல்நஞ் சனைய மடந்தையர்பால்
நாணாது செல்கின்ற தென்னைசெய் கேன்சிவ ஞானியர்தம்
கோணாத உள்ளத் திருக்கோயில் மேவிக் குலவும்ஒற்றி
வாணாஎன் கண்ணினுண் மாமணி யேஎன்றன் வாழ்முதலே. (௭)

வாழாத நெஞ்சம் எனைஅலைத் தோடி மடந்தையர்பால்
வீழாத நாளில்லை என்னைசெய் கேன்உன் விரைமலர்த்தாள்
தாழாத குற்றம் பொறுத்தடி யேன்தனைத் தாங்கிக்கொள்வாய்
சூழா தவரிடம் சூழாத ஒற்றிச் சுடர்க்குன்றமே. (அ)

குன்றோர் முலைச்சியர் வன்மல ஊத்தைக் குழியில்மனம்
சென்றே விழுகின்ற தென்னைசெய் கேன்எம் சிவக்கொழுந்தே
நன்றே சதானந்த நாயக மேமறை நான்கினுக்கும்
ஒன்றே உயர்ஒளி யேஒற்றி யூர்எம் உயிர்த்துணையே. (௯)

துணையாம்உன் பொன்னடி ஏத்தா மனமது தோகையர்கண்
கணையால் இளைக்கின்ற தென்னைசெய் கேன்என்றன் கண்இரண்டின்
இணையாம் பரஞ்சுட ரேஅழி யாநல மேஇன்பமே
பணையார் திருஒற்றி யூர்அர சேஎம் பரம்பொருளே. (௧௦)

பொருளேநின் பொன்னடி உன்னாதென் வன்மனம் பூவையர்தம்
இருளே புரிகின்ற தென்னைசெய் கேன்அடி யேன்மயங்கும்
மருளே தவிர்ந்துனை வாழ்த்தி வணங்கி மகிழ்ந்திடநீ
அருளே அருட்கட லேஒற்றி மாநகர் ஆள்பவனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

# 65. தனிமைக் கிரங்கல்[166]

---

### திரு ஒற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆக்கல் ஆதிய ஐந்தொழில் நடத்த
அயன்முன் ஆகிய ஐவரை அளித்து
நீக்கம் இன்றிஎவ் விடத்திலும் நிறைந்த
நித்த நீஎனும் நிச்சயம் அதனைத்
தாக்க எண்ணியே தாமதப் பாவி
தலைப்பட் டான்அவன் தனைஅகற் றுதற்கே
ஊக்கம் உற்றநின் திருஅருள் வேண்டும்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே.[167] ( க )

கணத்தில் என்னைவிட் டேகுகின் றவன்போல்
காட்டு கின்றனன் மீட்டும்வந் தடுத்துப்
பணத்தும் மண்ணினும் பாவைய ரிடத்தும்
பரவ நெஞ்சினை விரவுகின் றனன்காண்
குணத்தி னில்கொடுந் தாமதன் எனும்இக்
கொடிய வஞ்சகன் ஓடியமெய்ப் போதம்
உணர்த்து வார்இலை என்செய்கேன் எளியேன்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே.[168] ( உ )

---

166. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௬௫, ௱௬௬. இவ்விரண்டின் தொடக்கத்திலும் அடிகளார், "உ. சிவநம." என்று எழுதிச் சிந்திந்திருக்கிறார்கள்.

167. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே தலைவன் என்னும் தம் அறிவுணர்வை, உண்மை உணர்ச்சியை, அப்போதைக்கப்போது அழித்து இருளில் இட்டுத் துன்பத்தில் அழுத்தும் தாமதப் பாவியை, இறைவன் அகற்றி அருளல் வேண்டும் என்று இரங்குதல் காண்க.

168. இப் பா முதலியவற்றோடு பின்வரும் மணிவாசகத் தீந்தேன் மாந்தி மகிழ்க :

"நாடகத்தால் உன்அடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்(கு)என்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே."

இமைக்கும் அவ்வள வேனும்நெஞ் சொடுங்கி
இருக்கக் கண்டிலேன் இறிவுகொள் மலத்தின்
சுமைக்கு நொந்துநொந் தையவோ நாளும்
துயர்கின் றேன்அயர் கின்றனன் துயரைக்
குமைக்கும் வண்ணம்நின் திருஅருள் இன்னும்
கூடப் பெற்றிலேன் கூறுவ தென்னே
உமைக்கு நல்வரம் உதவிய தேவே
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. (௩)

சென்ற நாளில்ஓர் இறைப்பொழு தேனும்
சிந்தை ஓர்வகை தெளிந்ததன் றதுபோய்
நின்ற நாளினும் நிற்கின்ற திலைகாண்
நெடிய பாவியேன் நிகழ்த்துவ தென்னே
என்றன் ஆருயிர்க் கொருபெருந் துணையாம்
எந்தை யேஎனை எழுமையும் காத்த
உன்ற னால்இன்னும் உவகைகொள் கின்றேன்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. (௪)

கோடி நாவினும் கூறிட அடங்காக்
கொடிய மாயையின் நெடியவாழ்க் கையினை
நாடி நெஞ்சகம் நலிகின்றேன் உனையோர்
நாளும் எண்ணிலேன் நன்கடை வேனோ
வாடி னேன்பிழை மனங்கொளல் அழியா
வாழ்வை ஏழையேன் வசஞ்செயல் வேண்டும்
ஊடி னாலும்மெய் அடியரை இகவா
ஒற்றி மேவிய உத்தமப் பொருளே. (௫)

அன்ப தென்பதைக் கனவினும் காணேன்
ஆடு கின்றனன் அன்பரைப் போல
வன்ப வத்தையும் மாய்த்திட நினைத்தேன்
வஞ்ச நெஞ்சினை வசப்படுக் கில்லேன்
துன்ப வாழ்க்கையில் சுழல்கின் றேன்நின்னைத்
தொழுது வாழ்த்திநல் சுகம்பெறு வேனோ
ஒன்ப தாகிய உருவுடைப் பெரியோய்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. (௬)

முன்னை நான்செய்த வல்வினை இரண்டின்
முடிவு தேர்ந்திலன் வடிவெடுத் துலகில்
என்னை நான்கண்ட தந்தநாள் தொடங்கி
இந்த நாள்மட்டும் இருள்என்ப தல்லால்
பின்னை யாதொன்றும் பெற்றிலேன் இதனைப்
பேச என்னுளம் கூசுகின் றதுகாண்
உன்னை நம்பினேன் நின்குறிப் புணரேன்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. (௭)

கண்ணி லான்சுடர் காணிய விழைந்த
கருத்தை ஒத்தஎன் கருத்தினை முடிப்பத்
தெண்ணி லாமுடிச் சிவபரம் பொருள்நின்
சித்தம் எப்படி தெரிந்திலன் எளியேன்
பண்ணி லாவிய பாடலந் தொடைநின்
பாத பங்கயம் பதிவுறப் புனைவோர்
உண்ணி லாவிய ஆனந்தப் பெருக்கே
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. (௮)

உண்மை நின்அருட் சுகம்பிற எல்லாம்
உண்மை அன்றென உணர்த்தியும் எனது
பெண்மை நெஞ்சகம் வெண்மைகொண் டுலகப்
பித்தி லேஇன்னும் தொத்துகின் றதுகாண்
வண்மை ஒன்றிலேன் எண்மையின் அந்தோ
வருந்து கின்றனன் வாழ்வடை வேனோ
ஒண்மை அம்பலத் தொளிசெயும் சுடரே
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. (௯)

மையு மாறெனைக் காமமா திகள்தாம்
நணுகி வஞ்சகம் காட்டுகின் றதுநான்
செய்யு மாறிதற் கறிந்திலன் எந்தாய்
திகைக்கின் றேன்அருள் திறம்பெறு வேனோ
வையு மாறிலா வண்கையர் உளத்தின்
மன்னி வாழ்கின்ற மாமணிக் குன்றே
உய்யு மாறருள் அம்பலத் தமுதே
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 66. கழிபகற் கிரங்கல்[169]

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆண்ட துண்டுநீ என்றனை அடியேன்
ஆக்கை ஒன்றுமே அசைமடற் பனைபோல
நீண்ட துண்டுமற் றுன்னடிக் கன்பே
நீண்ட தில்லைவல் நெறிசெலும் ஒழுக்கம்
பூண்ட துண்டுநின் புனிதநல் ஒழுக்கே
பூண்ட தில்லைஎன் புன்மையை நோக்கி
ஈண்ட வந்தரு ளாய்எனில் அந்தோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே.[170] (க)

ஊழை யேமிக நொந்திடு வேனோ
உளத்தை நோவனோ உலகிடை மயக்கும்
பாழை யேபலன் தருவதென் றெண்ணிப்
பாவி யேன்பெரும் படர்உழக் கின்றேன்
மாழை யேர்திரு மேனிஎம் பெருமான்
மனம்இ ரங்கிஎன் வல்வினை கெடவந்
தேழை யேற்கருள் ளாய்எனில் அந்தோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே.[171] (உ)

---

169. இப் பதிக ஏடுகளின் எண்கள் உாக, உாஉ. இவ்விரண்டின் முதலிலும் "வ" என்று அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

170. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், உலக வாழ்வின் பொய்ம்மையையும் இழிவையும் துயரையும் அறிந்தும், இறைவன் அருட் பூரணத்தின் பெருமையை உணர்ந்து நேசித்தும், தம் உள்ளம் இறைவன் திருவடியில் நிலைபெறவில்லை என்றும், இது கருதித் தம்மைக் கைவிட்டால் தாம் என்செயக் கடவார் என்றும் முறையிடல் காண்க.

171. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தாயுமானப் பெருந்தகையாரின் திருப்பாடல் போல்வன காண்க:

"பொய்யார் உலகம் நிலையல்ல கானல் புனல்எனவே
மெய்யா அறிந்தென்ன என்னால் இதனை விடப்படுமோ
கையால் மவுனம் தெரித்தேகல் லால்நிழற் கண் இருந்த
ஐயா அப் பாஎன் அரசேமுக் கண்ணுடை ஆரமுதே."

ஈன்று கொண்டஎன் தந்தையும் தாயும்
யாவும் நீஎன எண்ணிய நாயேன்
மான்று கொண்டஇவ் வஞ்சக வாழ்வின்
மயக்கி னால்மிக வன்மைகள் செய்தேன்
சான்று கொண்டது கண்டனை யேனும்
தமிய னேன்மிசைத் தயவுகொண் டென்னை
ஏன்று கொண்டரு ளாய்எனில் அந்தோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. (௩)

அம்மை அப்பன்என் ஆருயிர்த் துணைவன்
அரசன் தேசிகன் அன்புடைத் தேவன்
இம்மை யிற்பயன் அம்மையிற் பயன்மற்
றியாவு நீஎன எண்ணிநிற் கின்றேன்
செம்மை யிற்பெறும் அன்பருள் ஏகஞ்சேர்
செல்வ மேஎனைச் சேர்த்தரு ளாயேல்
எம்மை யிற்பெறு வேன்சிறு நாயேன்
என்செய் கேன்நர கிடையிடும் போதே. (௪)

தாய ராதியர் சலிப்புறு கிற்பார்
தமரும் என்றனைத் தழுவுதல் ஒழிவார்
நேய ராதியர் நேயம்விட் டகல்வார்
நின்னை நம்பிஎன் நெஞ்சுவக் கின்றேன்
தீய ராதியில் தீயன்என் றெனைநின்
திருஉ ளத்திடைச் சேர்த்திடா தொழித்தால்
ஏயர் கோனுக்கன் றருளும்எம் பெருமான்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. (௫)

முன்னை நான்செய்த வல்வினைச் சிமிழ்ப்பால்
மோக வாரியின் மூழ்கின னேனும்
அன்னை போலும்என் ஆருயிர்த் துணையாம்
அப்ப நின்அருள் அம்பியை நம்பி
தன்னை நேர்சிவ ஞானமென் கரையைச்
சார்கு வேம்எனும் தருக்குடன் உழன்றேன்
இன்னும் நின்அருள் ஈந்திலை அந்தோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. (௬)

உண்ணு கின்றதும் உறங்குகின் றதும்மேல்
உடுத்து கின்றதும் உலவுகின் றதும்மால்
நண்ணு கின்றதும் நங்கையர் வாழ்க்கை
நாடு கின்றதும் நவையுடைத் தொழில்கள்
பண்ணு கின்றதும் ஆனபின் உடலைப்
பாடை மேலுறப் படுத்துகின் றதும்என்
றெண்ணு கின்றதோ றுளம்பதைக் கின்றேன்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. (எ)

கல்லை வெல்லவும் வல்லஎன் மனந்தான்
கடவுள் நின்அடிக் கமலங்கள் நினைத்தல்
இல்லை நல்லைநின் அருள்எனக் கதனால்
இல்லை இல்லைநீ இரக்கம்இல் லாதான்
அல்லை இல்லையால் அருள்தரா திருத்தல்
அடிய னேன்அள வாயின்இங் கிடர்க்கே
எல்லை இல்லைஎன் றுளம்பதைக் கின்றேன்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. (அ)

பொங்கு மாயையின் புணர்ப்பினுக் குள்ளம்
போக்கி நின்றதும் புலப்பகை வர்களால்
இங்கு மால்அரி ஏற்றின்முன் கரிபோல்
ஏங்கு கின்றதும் இடர்ப்பெருங் கடலில்
தங்கும் ஆசையங் கராப்பிடித் தீர்க்கத்
தவிப்பில் நின்றதும் தமியனேன் தனையும்
எங்கும் ஆகிநின் றாய்அறிந் திலையோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. (கூ)

அரக்கன் அல்லன்யான் அரக்கனே எனினும்
அரக்க னுக்கும்முன் அருள்அளித் தனையே
புரக்க என்னைநின் அருட்கடன் என்றே
போற்று கின்றனன் புலையரிற் புலையேன்
உரக்க இங்கிழைத் திடும்பிழை எல்லாம்
உன்னல் ஐயநீ உன்னிஎன் அளவில்
இரக்கம் நின்திரு உளத்திலை யானால்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. (கய)

திருச்சிற்றம்பலம்

# 67. அர்ப்பித் திரங்கல்[172]

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தம்பி ரான்தய விருக்கஇங் கெனக்கோர்
தாழ்வுண் டோஎனத் தருக்கொடும் இருந்தேன்
எம்பி ரான்நினக் கேழையேன் அளவில்
இரக்கம் ஒன்றிலை என்னென்ப தின்னும்
நம்பி ரான்என நம்பிநிற் கின்றேன்
நம்பும் என்றனை வெம்பிடச் செயினும்
செம்பி ரான்அருள் அளிக்கினும் உனது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.[173] (க)

துட்ட நெஞ்சக வஞ்சகக் கொடியேன்
சொல்வ தென்னைஎன் தொல்வினை வசத்தால்
இட்ட நல்வழி அல்வழி எனவே
எண்ணும் இவ்வழி இரண்டிடை எனைநீ
விட்ட தெவ்வழி அவ்வழி அகன்றே
வேறும் ஓர்வழி மேவிடப் படுமோ
சிட்டர் உள்ளுறும் சிவபெரு மான்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.[174] (உ)

---

172. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௱௬௬, உ௱. இவற்றின் முதலில் முறையே "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

173. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், இன்றில்லாவிட்டாலும் என்றாகிலும் ஒருநாள், தமக்கு இறைவன் அருள் கிடைக்கும் என்று காத்திருந்து இரங்குதல் காண்க.

174. இப் பா முதலியவற்றோடு பின்வரும் மணிவாசகப் பெருமானாரின் தேமொழி போல்வன காண்க.

"பிறிவறியா அன்பர்நின் அருட்பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம்வந்து பெற்றார்உன்னை வந்திப்பதோர்
நெறிஅறியேன் நின்னையே அறியேன் நின்னையே அறியும்
அறிவறியேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே."

ஊட்டு கின்றனை உண்ணுகின் றனன்மேல்
உறக்கு கின்றனை உறங்குகின் றனன்பின்
காட்டு கின்றனை காணுகின் றனன்நீ
களிப்பிக் கின்றனை களிப்புறு கின்றேன்
ஆட்டு கின்றனை ஆடுகின் றனன்இவ்
அகில கோடியும் அவ்வகை யானால்
நீட்டும் அன்பருக் கன்பநின் தனது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. (௩)

கண்ணி லான்சுடர் காணஉன் னுதல்போல்
கருத்தி லேனும்நின் கருணையை விழைந்தேன்
எண்ணி லாஇடை யூறடுத் ததனால்
இளைக்கின் றேன்எனை ஏன்றுகொள் வதற்கென்
உண்ணி லாவிய உயிர்க்குயிர் அனையாய்
உன்னை ஒத்ததோர் முன்னவர் இலைகாண்
தெண்ணி லாமுடிச் சிவபரம் பொருள்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. (௪)

மெச்சு கின்றவர் வேண்டிய எல்லாம்
விழிஇ மைக்குமுன் மேவல்கண் டுனைநான்
நச்சு கின்றனன் நச்சினும் கொடியேன்
நன்மை எய்தவோ வன்மையுற் றிடவோ
இச்சை நன்றறி வாய்அருள் செய்யா
திருக்கின் றாய்உனக் கியான்செய்த தென்னே
செச்சை மேனிஎம் சிவபரஞ் சுடர்நின்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. (௫)

நாடுந் தாயினும் நல்லவன் நமது
நாதன் என்றுனை நாடும்அப் பொழுதே
வாடு நெஞ்சகம் தளிர்க்கின்றேன் மற்றை
வைகற் போதெலாம் வாடுகின் றனன்காண்
பாடுந் தொண்டர்கள் இடர்ப்படில் தரியாப்
பண்பென் மட்டும்நின் பால்இலை போலும்
தேடும் பத்தர்தம் உளத்தமர் வோய்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. (௬)

மருள்அ ளித்தெனை மயக்கிஇவ் உலகில்
வருத்து கின்றனை மற்றெனக் குன்றன்
அருள்அ ளிக்கிலை ஆயினும் நினக்கே
அடிமை யாக்கிலை ஆயினும் வேற்றுப்
பொருள்அ ளிக்கிலை ஆயினும் ஒருநின்
பொன்மு கத்தைஓர் போதுகண் டிடவே
தெருள்அ ளித்திடில் போதும்இங் குனது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. (எ)

மாறு கின்றனன் நெஞ்சகம் அஞ்சி
வள்ளல் இத்துணை வந்திலன் இனிமேல்
கூறு கின்றதென் என்றயர் கின்றேன்
குலவித் தேற்றும்அக் கொள்கையர் இன்றி
ஏறு கின்றனன் இரக்கமுள் ளவன்நம்
இறைவன் இன்றருள் ஈகுவன் என்றே
தேறு கின்றனன் என்செய்கேன் நினது
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. (அ)

தாயி னும்பெருந் தயவுடை யவன்நந்
தலைவன் என்றுநான் தருக்கொடும் திரிந்தேன்
நாயி னுங்கடை யேன்படும் இடரை
நாளும் கண்டனை நல்அருள் செய்யாய்
ஆயி னுந்திரு முகங்கண்டு மகிழும்
அன்பர் தம்பணி ஆற்றிமற் றுடலம்
தேயி னும்மிக நன்றெனக் கருள்உன்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. (கூ)

வானும் வையமும் அளிக்கினும் உன்பால்
மனம்வைத் தோங்குவர் வள்ளல்நின் அடியார்
நானும் அவ்வகை உலகியல் ஒழுக்கில்
நாடி நின்னருள் நலம்பெற விழைதல்
கூனும் ஓர்முடக் கண்ணிலி வானில்
குலவும் ஒண்சுடர் குறித்திடல் போலும்
தேனும் கைக்கும்நின் அருளுண்டேல் உண்டுன்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. (க0)

திருச்சிற்றம்பலம்

# 68. அச்சத் திரங்கல்[175]

**கோயில்**

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

துறையிடும் கங்கைச் செழுஞ்சடைக் கனியே
சுயம்பிர காசமே அமுதில்
கறையிடும் கண்டத் தொருபெருங் கருணைக்
கடவுளே கண்ணுதற் கரும்பே
குறையிடும் குணத்தால் கொடியனேன் எனினும்
கொடுந்துய ரால்அலைந் தையா
முறையிடு கின்றேன் அருள்தரா தென்னை
மூடன்என் றிகழ்வது முறையோ.[176] (௧)

இகழ்ந்திடேல் எளியேன் தன்னைநீ அன்றி
ஏன்றுகொள் பவரிலை அந்தோ
அகழ்ந்தென துளத்தைச் சூறைகொண் டலைக்கும்
அனுரெலாம் அறுத்தருள் புரிவாய்
புகழ்ந்திடுந் தொண்டர் உளத்தினும் வெள்ளிப்
பொருப்பினும் பொதுவினும் நிறைந்து
திகழ்ந்தருள் பழுக்கும் தெய்வதத் தருவே
செல்வமே சிவபரம் பொருளே.[177] (௨)

---

175. இப் பதிக ஏடுகளின் எண்கள் உ௰, உ௧. இவ்விரண்டின் முதலிலும் "வ" என்று அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

176. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் மருளுருவானவர் இறைவன் அருளுருவானவன் என்றும், தம் மருள் நீக்குவார் இறைவன் அன்றிப் பிறர் இல்லை என்றும், ஆகவே, தம்மை ஆளாதிருத்தல் முறையோ என்றும் இரங்குதல் காண்க.

177. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தாயுமானாரின் உளமுருகும் திருப்பாடல் போல்வன கண்டுணர்க:

"ஆராமை கண்டிங்(கு) அருட்குருவாய் நீஒருகால்
வாராயோ வந்து வருத்தமெல்லாம் தீராயோ
பூராய மாகஅருட் பூரணத்தில் அண்டமுதல்
பாராதி வைத்த பதியே பராபரமே."

பொருள்எலாம் புணர்க்கும் புண்ணியப் பொருளே
புத்தமு தேகுணப் பொருப்பே
இருள்எலாம் அறுக்கும் பேரொளிப் பிழம்பே
இன்பமே என்பெருந் துணையே
அருள்எலாம் திரண்ட ஒருசிவ மூர்த்தி
அண்ணலே நின்அடிக் கபயம்
மருள்எலாம் கொண்ட மனத்தினேன் துன்ப
மயக்கெலாம் மாற்றிஆண் டருளே. (௩)

ஆண்டநின் கருணைக் கடலிடை ஒருசிற்
றணுத்துணைத் திவலையே எனினும்
ஈண்டஎன் தன்மேல் தெறித்தியேல் உய்வேன்
இல்லையேல் என்செய்கேன் எளியேன்
நீண்டவன் அயன்மற் றேனைவா னவர்கள்
நினைப்பரு நிலைமையை அன்பர்
வேண்டினும் வேண்டா விடினும்ஆங் களிக்கும்
விமலனே விடைப்பெரு மானே. (௪)

பெருமையில் பிறங்கும் பெரியநற் குணத்தோர்
பெற்றதோர் பெருந்தனிப் பொருளே
அருமையில் பிரமன் ஆதிய தேவர்
அடைந்தநற் செல்வமே அமுதே
இருமையிற் பயனும் நின்திரு அருளே
என்றுநின் அடைக்கலம் ஆனேன்
கருமையிற் பொலியும் விடநிகர் துன்பக்
களைகளைந் தெனைவிளைத் தருளே. (௫)

விளைத்தனன் பவநோய்க் கேதுவாம் விடய
விருப்பினை நெருப்புறழ் துன்பின்
இளைத்தனன் அந்தோ ஏழைமை அதனால்
என்செய்கேன் என்பிழை பொறுத்துத்
தளைத்தவன் துயர்நீத் தாளவல் லவர்நின்
றனைஅன்றி அறிந்திலன் தமியேன்
கிளைத்தவான் கங்கை நதிச்சடை யவனே
கிளர்தரும் சிற்பர சிவனே. (௬)

சிற்பர சிவனே தேவர்தம் தலைமைத
தேவனே தில்லைஅம் பலத்தே
தற்பர நடஞ்செய் தாணுவே அகில
சராசர காரணப் பொருளே
அற்பர்தம் இடஞ்செல் பற்பல துயரால்
அலைதரு கின்றனன் எளியேன்
கற்பகம் அனையநின் திருஅருட் கடலில்
களிப்புடன் ஆடுவ தென்றோ. (எ)

என்றுநின் அருள்நீர் உண்டுவந் திடும்நாள்
என்றுநின் உருவுகண் டிடும்நாள்
என்றுநின் அடியர்க் கேவல்செய் திடும்நாள்
என்றென தகத்துயர் அறும்நாள்
மன்றுள்நின் றாடும் பரஞ்சுடர்க் குன்றே
வானவர் கனவினும் தோன்று
தொன்றுறும் ஒன்றே அருண்மய மான
உத்தம வித்தக மணியே. (அ)

வித்தகம் அறியேன் வினையினேன் துன்ப
விரிகடல் ஆழ்ந்தனன் அந்தோ
அத்தக வேளை எடுப்பவர் நின்னை
அன்றிஎங் கணும்இலை ஐயா
மத்தகக் கரியின் உரிபுனை பவள
வண்ணனே விண்ணவர் அரசே
புத்தக நிறைவின் அடியவர் வேண்டும்
பொருள்எலாம் புரிந்தருள் பவனே. (கூ)

அருள்பவன் நின்னை அல்லதை இங்கும்
அங்கும்மற் றெங்கும்இன் றதுபோல்
மருள்பவன் என்னை அல்லதை மண்ணும்
வானமும் தேடினும் இன்றே
இருள்பவம் உடையேன் என்செய்கேன் நின்தாள்
இணைதுணை எனநினைந் துற்றேன்
மருள்பவத் தொடும்என் துயர்அறத் தாள்வாய்
வாழிய அருட்பெருந் துறையே. (கய)

திருச்சிற்றம்பலம்

# 69. புறமொழிக் கிரங்கல்[178]

பொது

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

கேளனந் தான்ஒரு போதுண் டனைமனக் கேதம்அற
நீளனம் தேடு முடியான் எதுநினக் கீந்ததென்றே
வேளனம் போல்நடை மின்னாரும் மைந்தரும் வேடிக்கையாய்
ஏளனம் செய்குவர் நீஅரு ளாவிடில் என்அப்பனே.[179] (க)

அப்பாநின் பொன்அருள் என்மேல் தயைசெய் தளித்திலையேல்
துப்பா னவும்ஒரு போதுதுவ் வாது சுழன்றனையே
இப்பாரில் ஈசன் திருஅருள் நீபெற்ற தெங்ஙனமோ
செப்பாய் எனவரிப் பார்சிரிப் பார்இச் செகத்தவரே.[180] (உ)

தீதுசெய் தேற்கருள் செய்வான்நின் சித்தம் திரும்பிலையேல்
தாதுசெய் தேகத்து ணொருபோது தவிர்ந்தநினக்
கேதுசெய் தான்சிவன் என்றே உலகர் இழிவுரைத்தால்
யாதுசெய் வேன்தெய்வ மேஎளி யேன்உயிர்க் கின்அமுதே. (ங)

தெரியாமை யால்சிறி யேன்செய்குற் றத்தைநின் சித்தமதில்
பிரியாமை வைத்தருள் செய்திலை யேல்எனைப் பெற்றவளும்
பெரியாசை கொண்டபிள் ளாய்அரன் என்தரப் பெற்றதென்றே
பரியாசை செய்குவ ளால்அய லார்என் பகருவதே. (ச)

---

178. இப் பதிக ஏடுகளின் எண்கள் தெளிவாயில்லை. இவற்றின் முதலில் அடிகளாரால் "உ" என்று எழுதப்பட்டிருக்கிறது.

179. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், தம் குறைகளை இறைவன் மனத்துட்கொண்டு தமக்கு அருள்செயா தொழிந்தால், உலகரே அன்றித் தம் தாயும், தம்மையும் இறைவனையும் குறைவாகப் பேசுவர் என்றும், இதைத் தவிர்த்தல் இறைவனின் கடப்பாடு என்றும் கூறி இரங்குதல் காண்க.

180. இப் பா முதலியவற்றோடு அடியிற்கண்ட மணிவாசகத் தேமொழியை ஒத்துணர்க :

"நல்கா(து) ஒழியான் நமக்கென்(று)உன் நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலம்என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய் என்னை உடையானே."

எண்ணாமல் நாயடி யேன்செய்த குற்றங்கள் யாவும்எண்ணி
அண்ணாநின் சித்தம் இரங்காய் எனில்இங் கயலவர்தாம்
பெண்ஆர் இடத்தவன் பேரருள். சற்றும் பெறுதனினக்
கொண்ணாதிவ் வண்மை விரதம்என் றால்என் உரைப்பதுவே. ( ரு )

பொய்யான வஞ்சக னேன்பிழை யாவும் பொறுத்துனருள்
செய்யாய் எனில்எது செய்குவன் யான்இச் செகதலத்தோர்
எய்யா விரதத்தில் யாதுபெற் றாய்என் றிகழ்வர்கண்டாய்
அய்யாஎன் இன்அமு தேஅர சேஎன தாண்டவனே. ( சு )

உன்உள்ளம் கொண்டேற் கருளாய் எனில்இவ் உலகர்பொய்யாம்
என்உள்ளம் கொண்ட களவறி யாதுநின் றேடவிங்கே
நின்உள்ளம் கொள்விர தப்பயன் யாது நிகழ்த்தெனவே
முன்உள்ளம் கொண்டு மொழிவர்கண் டாய்எம் முதலவனே. ( எ )

முந்தோகை கொண்டுநின் தண்ணருள் வாரியின் மூழ்குதற்கிங்
கந்தோஎன் துன்பம் துடைத்தரு ளாய்எனில் ஆங்குலகர்
வந்தோ சிவவிர தாஎது பெற்றனை வாய்திறஎன்
றிந்தோர் தருசடை யாய்விடை யாய்என்னை ஏசுவரே. ( அ )

ஆசும் படியில் அகங்கா ரமும்உடை யான்என்றெண்ணிப்
பேசும் படியில் எனக்கரு ளாய்எனில் பேருலகோர்
ஏசும் படிவரும் பொய்வேடன் என்றதை எண்ணிஎண்ணிக்
கூசும் படிவரு மேஎன்செய் கேன்என் குலதெய்வமே. ( கூ )

ஐதட் டிடும்நெஞ் சகத்தேன் பிழைகளை ஆய்ந்துவெறும்
பொய்தட் டிகல்உடை யேற்குன் கருணை புரிந்திலையேல்
வெய்தட்டி உண்ட விரதாநின் நோன்பு விருத்தம்என்றே
கைதட்டி வெண்ணகை செய்வர்கண் டாய்அருட் கற்பகமே. ( கo )

திருச்சிற்றம்பலம்

# 70. கருணை பெறா திரங்கல்[181]

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நன்றி ஒன்றிய நின்னடி யவர்க்கே
நானும் இங்கொரு நாயடி யவன்காண்
குன்றின் ஒன்றிய இடர்மிக உடையேன்
குற்றம் நீக்கும்நல் குணமிலேன் எனினும்
என்றின் ஒன்றிய சிவபரஞ் சுடரே
இன்ப வாரியே என்னுயிர்த் துணையே
ஒன்றின் ஒன்றிய உத்தமப் பொருளே
உனைஅ லால்எனை உடையவர் எவரே.[182] (க)

தீது செய்தனன் செய்கின்றேன் செய்வேன்
தீய னேன்கொடுந் தீக்குண இயல்பே
ஏது செய்தன னேனும்என் தன்னை
ஏன்று கொள்வதெம் இறைவநின் இயல்பே
ஈது செய்தனை என்னைவிட் டுலகில்
இடர்கொண் டேங்கென இயம்பிடில் அடியேன்
ஓது செய்வதொன் றென்னுயிர்த் துணையே
உனைஅ லால்எனை உடையவர் எவரே.[183] (உ)

---

181. இப் பதிகத் திரு ஏடுகளின் எண்கள் ௱கஎ, ௱கஅ. இவ்விரண்டின் முதலிலும் அடிகளார் "உ. சிவமம." என்று வரைந்து உளங்கொண் டிருக்கிறார்கள்.

182. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் கூலிஆள் அன்று அடியன் என்றும், இறைவன் திருவடிகளில் தமக்கு அன்பில்லை எனினும், தம்மை உரிமைகொண்டு ஆள்வது இறை இயல்பு என்றும் முறையிட்டு இரங்குவது காண்க.

183. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் பட்டினத்தடிகளாரின் மறைமொழி கண்டுவக்க:

"ஆள்எனப் புதிதின்வந்(து) அடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம்."

சென்ற நாளினும் செல்கின்ற நாளில்
சிறிய னேன்மிகத் தியங்குறு கின்றேன்
மன்ற நான்இவண் இவ்வணம் ஆனால்
வள்ள லேஎனை வழுத்துமா றெதுவோ
என்ற னால்இனி ஆவதொன் றிலைஉன்
எண்ணம் எப்படி அப்படி இசைக
உன்ற னால்களித் துவகைகொள் கின்றேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. (௩)

மையல் வாழ்க்கையில் நாள்தொறும் அடியேன்
வருந்தி நெஞ்சகம் மாழ்குவ தெல்லாம்
ஐய ஐயவோ கண்டிடா தவர்போல்
அடம்பி டிப்பதுன் அருளினுக் கழகோ
செய்ய மேல்ஒன்றும் அறிந்திலன் சிவனே
தில்லை மன்றிடைத் தென்முக நோக்கி
உய்ய வைத்ததாள் நம்பிநிற் கின்றேன்
உனைய லால்எனை உடையவர் எவரே. (௪)

மண்ண கச்சிறு வாழ்க்கையின் பொருட்டால்
வருந்தி மற்றதன் வன்மைகள் எல்லாம்
எண்ண எண்ணஎன் நெஞ்சகம் பதைப்புற்
றேங்கி ஏங்கிநான் இளைப்புறு கின்றேன்
அண்ணல் நின்திரு அருட்டுணை அடைந்தால்
அமைந்து வாழ்குவன் அடைவகை அறியேன்
உண்ண நல்அமு தனையஎம் பெருமான்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. (௫)

அன்னை அப்பனும் நீஎன மகிழ்ந்தே
அகங்கு ளிர்ந்துநான் ஆதரித் திருந்தேன்
என்னை இப்படி இடர்கொள விடுத்தால்
என்செய் கேன்இதை யாரொடு புகல்கேன்
பொன்னை ஒத்தநின் அடித்துணை மலரைப்
போற்று வார்க்குநீ புரிகுவ திதுவோ
உன்னை எப்படி ஆயினும் மறவேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. (௬)

நீலம் இட்டகண் மடவியர் மயக்கால்
நெஞ்சம் ஓர்வழி நான்ஒரு வழியாய்
ஞாலம் இட்டஇவ் வாழ்க்கையில் அடியேன்
நடுங்கி உள்ளகம் நலியும்என் தன்மை
ஆலம் இட்டருள் களத்தநீ அறிந்தும்
அருள்அ ளித்திலை ஆகமற் றிதனை
ஓலம் இட்டழு தரற்றிஎங் குரைப்பேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. (எ)

கொடிய பாவியேன் படும்பரி தாபம்
குறித்துக் கண்டும்என் குறைஅகற் றாது
நெடிய காலமும் தாழ்த்தனை நினது
நெஞ்சும் வஞ்சகம் சேர்ந்ததுண் டேயோ
அடியர் தந்துயர் கண்டிடில் தரியார்
ஐயர் என்பர்என் அளவஃ திலையோ
ஓடிய மாதுயர் நீக்கிடாய் என்னில்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. (அ)

என்என் றேழையேன் நாணம்விட் டுரைப்பேன்
இறைவ நின்றனை இறைப்பொழு தேனும்
உன்என் றல்என துரைமறுத் தெதிராய்
உலக மாயையில் திலகமென் றுரைக்கும்
மின்என் றல்இடை மடவியர் மயக்கில்
வீழ்ந்தென் நெஞ்சகம் ஆழ்ந்துவிட் டதனால்
உன்அன் பென்பதென் னிடத்திலை யேனும்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. (கூ)

அடிய னேன்மிசை ஆண்டவ நினக்கோர்
அன்பி ருந்ததென் றகங்கரித் திருந்தேன்
கொடிய னேன்படும் இடர்முழு தறிந்தும்
கூலி யாளனைப் போல்எனை நினைத்தே
நெடிய இத்துணைப் போதும்ஓர் சிறிதும்
நெஞ்சி ரங்கிலை சஞ்சலத் தறிவும்
ஓடிய நின்றனன் என்செய்கேன் சிவனே
உனைஅ லால்எனை உடையவர் எவரே. (கo)

திருச்சிற்றம்பலம்

# 71. திரு அருட் பதிகம்[184]

திரு அண்ணாமலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வளங்கிளர் சடையும் விளங்கிய இதழி
மாலையும் மால்அயன் வழுத்தும்
குளங்கிளர் நுதலும் களங்கிளர் மணியும்
குலவுதிண் புயமும்அம் புயத்தின்
தளங்கிளர் பதமும் இளங்கதிர் வடிவும்
தழைக்கநீ இருத்தல்கண் டுவத்தல்
உளங்கிளர் அமுதே துளங்குநெஞ் சகனேன்
உற்றருள் ணயில்பெற அருளே.[185] (க)

அன்பர்தம் மனத்தே இன்பமுற் றவைகள்
அளித்தவர் களித்திடப் புரியும்
பொன்பொலி மேனிக் கருணையங் கடலே
பொய்யனேன் பொய்மைகண் டின்னும்
துன்பமுற் றலையச் செய்திடேல் அருணைத்
தொல்நக ரிடத்துன தெழில்கண்
டென்புளம் உருகத் துதித்திடல் வேண்டும்
இவ்வரம் எனக்கிவண் அருளே.[186] (உ)

---

184. இப் பதிகம், மற்றும் ஓர் சுவடியில், அடிகளாரின் தெய்வத் திருக் கரத்தால் எழுதப்பட்டிருக்கிறது. இதன் ஏட்டின் எண்கள் க, உ, ந, ச, ரு. இவற்றில் எல்லாம் முதலில் "உ" என்று குறித்திருக் கிறது.

185. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம் துன்பமும் அறிவின்மை யும் நீக்கும் இறைவனது திருஅருணைக் காட்சியைக் கொடுத் தருளும்படி கூறுதல் காண்க.

186. இப் பா முதலியவற்றோடு, நம் திருஞானசம்பந்தப் பெருமானாரின் தெய்வப் பெருமறை கண்டுவக்க:

"ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத் திரளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள்போலும்
ஏனத் திரளோ(டு) இனமான் கரடி இழியும் இரவின்கண்
ஆனைத் திரள்வந்(து) அணையும் சாரல் அண்ணா மலையாரே."

பூத்திடும் அவனும் காத்திடு பவனும்
புள்விலங் குருக்கொடு தேடி
ஏத்திடும் முடியும் கூத்திடும் அடியும்
இன்னமும் காண்கிலர் என்றும்
கோத்திடும் அடியார் மாலையின் அளவில்
குலவினை என்றுநல் லோர்கள்
சாற்றிடும் அதுகேட் டுவந்தனன் நினது
சந்நிதி உறஎனக் கருளே. (௩)

அருள்பழுத் தோங்கும் ஆனந்தத் தருவே
அற்புத அம்பலத் தியமே
தெருள்பழுத் தோங்கும் சித்தர்தம் உரிமைச்
செல்வமே அருணையங் தேவே
இருள்பழுத் தோங்கும் நெஞ்சினேன் எனினும்
என்பிழை பொறுத்துநின் கோயில்
பொருள்பழுத் தோங்கும் சந்நிதி முன்னர்ப்
போந்துனைப் போற்றுமா றருளே. (௪)

மறையும்அம் மறையின் வாய்மையும் ஆகி
மன்னிய வள்ளலே மலர்மேல்
இறையும்மா தவனும் இறையும்இன் னவன்என்
றெய்திடா இறைவனே அடியேன்
பொறையும்நன் னிறையும் அறிவும்நற் செறிவும்
பொருந்திடாப் பொய்யனேன் எனினும்
அறையும்நற் புகழ்சேர் அருணையை விழைந்தேன்
அங்கெனை அடைகுவித் தருளே. (௫)

தேடுவார் தேடும் செல்வமே சிவமே
திருஅரு ளுபுரித் தேவே
ஏடுவார் இதழிக் கண்ணிஎங் கோவே
எந்தையே எம்பெரு மானே
பாடுவார்க் களிக்கும் பரம்பரப் பொருளே
பாவியேன் பொய்யெலாம் பொறுத்து
நாடுவார் புகழும் நின்திருக் கோயில்
நண்ணுமா எனக்கிவண் அருளே. (௬)

உலகுயிர் தொறும்நின் றாட்டுவித் தாட்டும்
ஒருவனே உத்தம னேநின்
இலகுமுக் கண்ணும் காளகண் டமும்மெய்
இலங்குவெண் ணீற்றணி எழிலும்
திலகஒள் நுதல்உண் ணாமுலை உமையாள்
சேர்இடப் பாலுங்கண் டடியேன்
கலகஐம் புலன்செய் துயரமும் மற்றைக்
கலக்கமும் நீக்குமா அருளே. (௭)

அருட்பெருங் கடலே ஆனந்த நறவே
அடிநடு அந்தமுங் கடந்த
தெருட்பெரு மலையே திருஅணா மலையில்
திகழ்சுயஞ் சோதியே சிவனே
மருட்பெருங் கடலின் மயங்குகின் றேன்என்
மயக்கெலாம் ஒழிந்துவன் பிறவி
இருட்பெருங் கடல்விட் டேறநின் கோயிற்
கெளியனேன் வரவரம் அருளே. (௮)

கருணைஅங் கடலே கண்கள்மூன் றுடைய
கடவுளே கமலன்மால் அறியா
அருணைஎங் கோவே பரசிவா னந்த
அமுதமே அற்புத நிலையே
இருள்நிலம் புகுதா தெனைஎடுத் தாண்ட
இன்பமே அன்பர்தம் அன்பே
பொருள்நலம் பெறநின் சந்நிதிக் கெளியேன்
போந்துனைப் போற்றும்வா றருளே. (௯)

ஏதுசெய் திடினும் பொறுத்தருள் புரியும்
என்உயிர்க் கொருபெருந் துணையே
தீதுசெய் மனத்தார் தம்முடன் சேராச்
செயல்எனக் களித்தஎன் தேவே
வாதுசெய் புலனால் வருந்தல்செய் கின்றேன்
வருந்துறா வண்ணம்எற் கருளித்
தாதுசெய் பவன்எத் தருணையங் கோயில்
சந்நிதிக் கியான்வர அருளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 72. பிரசாதப் பதிகம்[187]

## புள்ளிருக்கு வேளூர்

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சரதத் தால்அன்பர் சார்ந்திடும் நின்திரு
விரதத் தால்அன்றி வேறொன்றில் தீருமோ
பரதத் தாண்டவ னேபரி திப்புரி
வரதத் தாண்டவ னேஇவ்வ ருத்தமே.[188] (௧)

வேத னேஅம்வி லக்குதற் பாலனே
நீத னேன்துயர் தீர்க்கும்வ யித்திய
நாத னேஉன்றன் நல்லருள் இல்லையேல்
நோதல் நேரும்வன் நோயில்சி றிதுமே.[189] (௨)

அருந்தி னால்அன்ப கங்குளிர் ஆனந்த
விருந்தி னால்மகிழ் வித்தருள் அண்ணலே
வருந்தி நாடவ ரும்பிணி நின்அருள்
மருந்தி னால்அன்றி மற்றொன்றில் தீருமோ. (௩)

மாலும் நான்குவ தனனும் மாமறை
நாலும் நாடரு நம்பர னேஎவ
ராலும் நீக்கஅ ரிதிவ்வ ருத்தம்நின்
ஏலும் நல்லருள் இன்றெனில் சற்றுமே. (௪)

---

187. இப் பதிக ஏடுகளின் எண்கள் ௯அக, ௯கம். இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமம." என்றும் "உ" என்றும் நம் பெருமானார் எழுதி அனுபவித்திருக்கிறார்கள்.

188. இப் பதிகத்தில், அடிகளார், இறைவனது அருளாகிய மருந்தொன்றினலன்றி, தம்மை அடைந்த துயரமும் துன்பமும் பிணியும் தீரா என்று இறைவனிடம் குறைஇரந்து கொள்ளுதல் காண்க.

189. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் தேவார மறைமொழி போல்வன பார்த்துணர்க:

"உள்ளம் உள்கி உகந்து சிவனென்று
மெள்ள உள்க வினைகெடும் மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே."

தேவர் ஆயினும் தேவர்வ ணங்கும்ஓர்
மூவர் ஆயினும் முக்கண நின்அருள்
மேவு றாதவி லக்கிடற் பாலரோ
ஓவு றாதஉ டற்பிணி தன்னையே. (௫)

வைய நாயக வானவர் நாயக
தையல் நாயகி சார்ந்திடும் நாயக
உய்ய நின்னருள் ஒன்றுவ தில்லையேல்
வெய்ய நோய்கள்வி லகுவ தில்லையே. (௬)

கல்லை வில்லெனக் கண்டருள் செய்ததோர்
எல்லை இன்றிஎ ழும்இன்ப வெள்ளமே
இல்லை இல்லைநின் இன்னருள் இல்லையேல்
தொல்லை நோயின்தொ டக்கது நீங்கலே. (௭)

நீதி மாதவர் நெஞ்சிடை நின்றொளிர்
சோதி யேமுத்தொ ழிலுடை மூவர்க்கும்
ஆதி யேநின்அ ருள்ஒன்றும் இல்லையேல்
வாதி யாநிற்கும் வன்பிணி யாவுமே. (௮)

பத்தர் நித்தம்ப யில்பரி திப்புரி
உத்த மப்பொரு ளேஉன்அ ருள்தனைப்
பெத்தம் அற்றிடப் பெற்றவர்க் கல்லது
நித்தம் உற்றநெ டும்பிணி நீங்குமோ. (௯)

சைவ சிற்குணர் தம்முளம் மன்னிய
தெய்வ தற்பர னேசிவ னேஇங்கு
உய்வ தற்குன்அ ருள்ஒன்றும் இல்லையேல்
நைவ தற்குந ணுகுவ நோய்களே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 73. பிரார்த்தனைப் பதிகம்[190]

## திரு ஒற்றியூரும் திருத் தில்லையும்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

அப்பார் மலர்ச்சடை ஆரமு தேஎன் அருட்டுணையே
துப்பார் பவள மணிக்குன்ற மேசிற் சுகக்கடலே
வெப்பார் தருதுய ரால்மெலி கின்றனன் வெற்றடியேன்
இப்பார் தனில்என்னை அப்பாஅஞ் சேல்என என்றுகொள்ளே.[191] ( க )

என்றுகொள் வான்நம தின்னுயிர் போல்முக்கண் எந்தைஎன்றே
சான்றுகொள் வாய்நினை நம்பிநின் றேன்இத் தமிஅடியேன்
மான்றுகொள் வான்வரும் துன்பங்கள் நீக்க மதித்திலையேல்
ஞான்றுகொள் வேன்அன்றி யாதுசெய் வேன்இந்த நானிலத்தே.[192] ( உ )

நிலத்தே சிறுவர்செய் குற்றங்கள் யாவும் நினைத்தறவோர்
சலத்தே உளத்தை விடார்என்பர் ஆதலின் தாதையென்றே
குலத்தேவர் போற்றும் குணக்குன்ற மேஎங் குலதெய்வமே
புலத்தே இழிதகை யேன்பிழை யாவும் பொறுத்தருளே. ( ௩ )

அருளார் அமுதப் பெருங்கட லேதில்லை அம்பலத்தில்
பொருளார் நடம்புரி புண்ணிய னேநினைப் போற்றுகிலேன்
இருளார் மனத்தின் இடர்உழந் தேன்இனி யாதுசெய்கேன்
மருளார் மலக்குடில் மாய்ந்திடில் உன்அருள் வாய்ப்பதற்கே. ( ௪ )

---

190. இப் பதிக ஏடுகளின் எண்கள் உ, ௩. இவற்றின் முதற்கண் "௳" என்றெழுதி அடிகளார் தொடங்கியிருக்கிறார்கள்.

191. இப் பதிகத்தில், அடிகளார், தம் குற்றங்களுக்காகத் தந்தையாகிய இறைவன் மன்னித்துத் தம்மை ஆட்கொண்டருளினால், இறைவனைத் தடுப்பவர் எவரும் இலர் என்று இயம்பி முறையிடல் காண்க.

192. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் அப்பர் சுவாமிகள் தேவாரம் போல்வன கண்டறிக :

"நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பி யாதே
வஞ்சமே செய்தி யாலோ வானவர் தலைவ னேநீ
மஞ்சடை சோலைத் தில்லை மல்குசிற் றம்ப லத்தே
அஞ்சொலாள் காண நின்று அழகநீ ஆடு மாறே."

வாயார நின்பொன் மலர்த்தாள் துணையே வழுத்துகிலேன்
ஓயா இடர்உழந் துள்நலி கின்றனன் ஓகெடுவேன்
பேயாய்ப் பிறந்திலன் பேயும்ஒவ் வேன்புலைப் பேறுவக்கும்
நாயாய்ப் பிறந்திலன் நாய்க்கும் கடைப்பட்ட நான்இங்ஙனே. (௫)

நான்செய்த குற்றங்கள் எல்லாம் பொறுத்துநின் நல்லருள்நீ
தான்செய் தனைஎனில் ஐயாமுக் கட்பெருஞ் சாமிஅவற்
கேன்செய் தனைஎன நிற்றடுப் பார்இலை என்அரசே
வான்செய்த நன்றியை யார்தடுத் தார்இந்த வையகத்தே. (௬)

வையகத் தேஇடர் மாக்கடல் மூழ்கி வருந்துகின்ற
பொய்யகத் தேனைப் புரந்தரு ளாமல் புறம்பொழித்தால்
கையகத் தேன்எது செய்வேன்அந் தோஉள் நலிகுவன்காண்
மெய்யகத் தேநின் றொளிர்தரும் ஞான விரிசுடரே. (௭)

விரிதுய ரால்தடு மாறுகின் றேன்இந்த வெவ்வினையேன்
பெரிதுய ராநின்ற நல்லோர் அடையும்நின் பேரருள்தான்
அரிதுகண் டாய்அடை வேன்எனல் ஆயினும் ஐயமணிப்
புரிதுவர் வார்சடை யாய்நீ உவப்பில் புரியில்உண்டே. (௮)

உண்டோஎன் போல்துய ரால்அலை கின்றவர் உத்தமநீ
கண்டோர் சிறிதும் இரங்குகி லாய்இக் கடையவனேன்
பண்டோர் துணைஅறி யேன்நின்னை யன்றிநிற் பற்றிநின்றேன்
எண்டோள் மணிமிடற் றெந்தாய் கருணை இருங்கடலே. (௯)

கடலே அனைய துயர்மிகை யால்உட் கலங்கும்என்னை
விடலே அருளன் றெடுத்தாளல் வேண்டும்என் விண்ணப்பமீ
தடல்ஏ றுவந்த அருட்கட லேஅணி அம்பலத்துள்
உடலே மருவும் உயிர்போல் நிறைஒற்றி யூரப்பனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 74. திருப் புகற் பதிகம்[193]

**பொது**

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

வேகமுறு நெஞ்ச மெலிவும் எளியேன்றன்
தேக மெலிவும் தெரிந்தும் இரங்காயேல்
மாக நதியும் மதியும் வளர்சடைஎம்
ஏக இனிமற் றெனக்கார் இரங்குவரே.[194] (௧)

கள்ள மனத்துக் கடையோர்பால் நாணுறும்என்
உள்ள மெலிவும் உடல்மெலிவும் கண்டிருந்தும்
எள்ளின் அளவும் இரங்கி அருளாயேல்
எள்ளும் உலகில் எனக்கார் இரங்குவரே.[195] (௨)

பொன்னை வளர்ப்பாரைப் போற்றாமல் எம்பெருமான்
உன்னைமதித் துன்னுறும்என் உள்ளம் அறிந்திருந்தும்
அன்னையினும் சால அருள்வோய் அருளாயேல்
என்னை முகம்பார்த் தெனக்கார் இரங்குவரே. (௩)

துன்னுடைய வியாக்கிரமத் தோலுடையான் தானிருக்கப்
பொன்னுடையார் பக்கம் புகுவானேன் என்றிருப்பேன்
தன்னுடைய துன்பம் தவிர்த்திங் கருளாயேல்
என்னுடையாய் மற்றிங் கெனக்கார் இரங்குவரே. (௪)

---

193. இப் பதிகம், அடிகளாரது வேறொரு சுவடியில், ௪௫-ஆம் ஏட்டிலும் மற்றொரு ஏட்டிலும் காணப்படுகிறது. இவற்றை நம் பெருமான் அவர்கள் 'உ' என்றெழுதித் தொடங்கியிருக்கிறார்கள்.

194. இப் பதிகத்தில், நம் பெருமானார், இவ் வுலகரையும் அவ் வுலகரையும் பொருட் படுத்தாது, இறைவனையே பற்றிநிற்கும் தமக்கு இறைவனைத் தவிர்த்து இரங்குபவர் இல்லை என்று, கல்லுங் கனிந் துருகும்படி மன்றாடுதல் காண்க.

195. இப் பா முதலியவற்றோடு, கீழ்க்காணும் மணிவாசகத் தீஞ்சொல் போல்வன கண்டுவக்க :
"தன்மை பிறரால் அறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டையா புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வாரியாரே என்நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழும் திருமேனி எந்தாய் எங்குப் புகுவேனே."

வன்கண்ணர் தம்மை மதியாதுன் பொன்னடியின்
தன்கண் அடியேன்தன் சஞ்சலவன் நெஞ்சகத்தின்
புன்கண் உழல்வைப் புகல்கின்றேன் காத்திலையேல்
என்கண் அனையாய் எனக்கார் இரங்குவரே. ( ரு )

தோன்றுவதும் மாய்வதும்ஆம் சூழ்ச்சியிடைப் பட்டலைந்து
மான்றுகொளும் தேவர் மரபை மதியாமே
சான்றுகொளும் நின்னைச் சரணடைந்தேன் நாயேனை
ஏன்றுகொளாய் என்னில் எனக்கார் இரங்குவரே. ( சா )

தீதுமுற்றும் நாளும் செயினும் பொறுத்தருளும்
சாதுமுற்றும் சூழ்ந்த தயாநிதிநீ என்றடைந்தேன்
கோதுமுற்றும் தீரக் குறியாயேல் நன்மைஎன்ப
தேதும்அற்ற பாவிக் கெவர்தான் இரங்குவரே. ( எ )

துன்றியமா பாதகத்தோன் சூழ்வினையை ஓர்கணத்தில்
அன்று தவிர்த் தாண்ட அருட்கடல்நீ என்றடுத்தேன்
கன்றுறும்என் கண்கலக்கம் கண்டும் இரங்காயேல்
என்றும்உளாய் மற்றிங் கெவர்தான் இரங்குவரே. ( அ )

கோடாமே பன்றிதரும் குட்டிகட்குத் தாயாகி
வாடா முலைகொடுத்த வள்ளல்என நான்அடுத்தேன்
வாடாஎன் றுன்அருளில் வாழ்வான் அருளிலையேல்
ஈடாரும் இல்லாய் எனக்கார் இரங்குவரே. ( கூ )

கல்லா நடையேன் கருணையிலேன் ஆனாலும்
நல்லார் புகழும் நமச்சிவா யப்பெயரே
அல்லாது பற்றொன் றறியேன் அருளாயேல்
எல்லாம் உடையாய் எனக்கார் இரங்குவரே. ( கo )

திருச்சிற்றம்பலம்

# 75. சிந்தைத் திருப் பதிகம்[196]

## பொது

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

**வி**டைஆர்க்கும் கொடிஉடைய வித்தகஎன் றுன்அடியின்
இடைஆர்த்து நின்றழும்இவ் ஏழைமுகம் பாராமே
நடைஆர்க்கும் வாழ்க்கையிலே நல்குரவோர்க் கீயாத
உடையார்க்கோ என்னை உடையாய் உதவுவதே.[197] (௧)

கற்றே அறியாக் கடைப்புலையேன் ஆனாலும்
உற்றேநின் தன்னைநினைந் தோதுகின்றேன் அல்லாமே
மற்றேதும் தேறேன்என் வன்துயர்தீர்ந் துள்குளிரச்
சற்றே இரங்கித் தயவுசெய்தால் ஆகாதோ.[198] (௨)

கல்லா ரொடும்திரிந்தென் கண்ணோநின் தாள்வழுத்தும்
நல்லார் தமைக்காண நாணுகின்றேன் ஆனாலும்
வல்லாய்நின் தன்னைஅன்றி மற்றொன் றறியேன்நான்
எல்லாம் அறிவாய்க் கிதனை இயம்பல்என்னே. (௩)

கள்ளநெறி கொள்ளும் கடைநாயேன் என்னினும்நின்
வள்ளல் மலர்த்தாளே வழுத்துகின்றேன் என்னுடைய
உள்ள மெலிவோ டுடல்மெலிவும் கண்டும்அந்தோ
எள்ளளவும் எந்தாய் இரங்கா திருந்தனையே. (௪)

---

196. இப் பதிகமும், முற்போந்த பதிகம் உள்ள சுவடியின்கண், அடிகளாரின் கை எழுத்தில் காணப்படுகிறது.

197. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் கல்லாத ஏழையாயினும், தமக்கு இறைவனது திருப் பெயரைத் தவிர்த்து வேறு ஒன்றிலும் எவ்விதப் பற்றும் இல்லா திருப்பதால், தம்மை இறைவன் ஆட்கொண்டு அருளல்தான் முறைமை என்று விண்ணப்பித்தல் கண்டறிக.

198. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருவாசகத் தெள்ளமுதம் போல்வன நுகர்க :

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத்(து) அமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே."

சீர்துணையார் தேடும் சிவனேநின் தன்னை அன்றி
ஓர்துணையும் இல்லேன்நின் ஒண்பொற் பதம்அறிய
கார்துணையா நாடும் கலாபிஎன நாடுகின்றேன்
ஆர்துணைஎன் றையா அகல இருந்தனையே. (௫)

பேய்அனையா ரோடும் பிழைபுரிந்தேன் ஆனாலும்
நாய்அனையேன் நின்னுடைய நாமம் நவிற்றுகின்றேன்
தீஅனைய துன்பில் திகைக்கின்றேன் கண்டிருந்தும்
தாய்அனையாய் சற்றும் தயவு புரிந்திலையே. (௬)

வெள்ள மருவும் விரிசடையாய் என்னுடைய
உள்ள விரிவும் உடல்மெலிவும் கண்டிருந்தும்
தள்ளரிய நின்னருள்ஓர் சற்றும் புரியாமே
கள்ளவினைக் கென்உளத்தைக் கைகாட்டி நின்றனையே. (௭)

என்னுரிமைத் தாய்க்கும் இனியாய்நின் ஐந்தெழுத்தை
உன்னுநிலைக் கென்னை உரித்தாக்க வேண்டுதியேல்
மன்னுலகில் பொன்னுடையார் வாயில்தனைக் காத்தயர்ந்தேன்
தன்னுடைய எண்ணந் தனைமுடிக்க வேண்டுவதே. (௮)

குற்றம்எலாம் நல்ல குணமாகக் கொண்டருளும்
உற்றதுணை நீயேமற் றோர்துணையும் இல்லைஎன்றே
நற்றலைமை யாம்உனது நாமம் நவில்கின்றேன்
கற்றவனே என்றனைநீ கைவிடில்என் செய்வேனே. (௯)

அறியாப் பருவத் தறிவுறுத்தி ஆட்கொண்ட
நெறியானே நின்ஆணை நின்ஆணை நின்ஆணை
பொறியார்நின் நாமம் புகலுவதே அன்றிமற்றை
வெறியார்வன் நாமமொன்றும் வேண்டேன்நான் வேண்டேனே. (௰)

திருச்சிற்றம்பலம்

# 76. உய்கைத் திருப் பதிகம்[199]

பொது

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவும் சீரும்சி றப்பும்தி றலும்சற்
குருவும் கல்வியும் குற்றமில் கேள்வியும்
பொருவில் அன்னையும் போக்கறு தந்தையும்
தரும வெள்விடைச் சாமிநின் நாமமே.[200] (க)

பொய்ய னேன்பிழை யாவும்பொ றுத்தருள்
செய்ய வேண்டும்நின் செம்பொற்ப தமலால்
அய்ய னேமுக்க ணாஇவ்அ டியனேற்
குய்ய வேறுபு கல்இலை உண்மையே.[201] (உ)

கள்ள நெஞ்சக னேனும்க டையனேன்
வள்ளல் நின்மலர் வார்கழற் பாதமே
உள்ளு வேன்மற்றை ஓர்தெய்வ நேயமும்
கொள்ள லேன்என்கு றிப்பறிந் தாள்கவே. (௩)

வஞ்ச மாதர்ம யக்கம்க னவினும்
எஞ்சு றுதிதற் கென்செய்கு வேன்என்றன்
நெஞ்சம் அம்மயல் நீங்கிட வந்தெனைத்
தஞ்சம் என்றுன்ச ரண்தந்து காக்கவே. (௪)

---

199. இப் பதிகமும், முற்போந்த ஏட்டுச் சுவடியில், அடிகளாரது கை எழுத்தில் காணப்படுகிறது.

200. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவனே ஓர் புகல் என்றிருக்கும் தம்முடைய தீமைகளை எல்லாம் இறைவன் அகற்றி, இறைவனைத் தேனெனப் பாகெனப் பாடும் பணியைத் தமக்கு இடுமாறு மொழிந்து இரங்குதல் காண்க.

201. இப் பா முதலியவற்றோடு, அடியில் காணும் பெரிய புராண மெய்ம் மொழி போல்வன கண்டு மகிழ்க :

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போ(து)உன் அடியின்கீழ் இருக்க என்றார்."

பற்று நெஞ்சகப் பாதக னேன்செயும்
குற்றம் யாவும்கு ணம்எனக் கொண்டருள்
உற்ற என் துணை யேஉனும்உ தவுவாய்
கற்ற நற்றவர் ஏத்தும்முக் கண்ணனே. (ரு)

மதியும் கல்வியும் வாய்மையும் வண்மையும்
பதியும் ஈங்கெதம்ப சுபதி மெய்ந்நெறிக்
கதியின் வைப்பது நின்கடன் வன்கடல்
வதியும் நஞ்சம்அ ணிமணி கண்டனே. (சு)

நீடு வாழ்க்கை நெறிவரு துன்பினால்
வாடும் என்னைவ ருந்தல்என் றுன்பதம்
பாடும் வண்ணம்நற் பாங்கருள் வாய்மன்றுள்
ஆடும் முக்கண்அ ருட்பெரு வெள்ளமே. (எ)

சிந்தை நொந்திச்சி றியஅ டியனேன்
எந்தை என்றுனை எண்ணிநிற் கின்றனன்
இந்து சேகர னேஉன் றன் இன்அருள்
தந்து காப்பதுன் தன்கடன் ஆகுமே. (அ)

உன்னை நாடும்என் உள்ளம் பிறரிடைப்
பொன்னை நாடும்பு துமைஇ தென்கொலோ
மின்னை நாடும்நல் வேணிப்பி ரான்இங்கே
என்னை நாடிஎ னக்கருள் செய்கவே. (கூ)

இழைபொ றுத்தமு லையவர்க் கேற்றஎன்
பிழைபொ றுப்பதுன் பேர்அருட் கேதகும்
மழைபொ றுக்கும்வ டிவுடை யோன்புகழ்
தழைபொ றுக்கும்ச டைமுடித் தந்தையே. (க0)

மூட னேன்பிழை முற்றும் பொறுத்துனைப்
பாட வேஅருட் பாங்கெனக் கீதியேல்
நாட வேறும னையிடை நண்ணிநான்
வாட வேண்டுவ தென்னைஎம் வள்ளலே. (கக)

மின்னைப் பாகி விளங்கும்வி ரிசடை
என்னப் பாஎனக் கின்அருள் ஈந்துநின்
பொன்னைப் பாந்துணைப் பூம்பதம் போற்றியே
உன்னப் பாங்கின்உ யர்நெறி உய்க்கவே. (௧௨)

திருச்சிற்றம்பலம்

---

# 77. ஆனந்தப் பதிகம்[202]

---

## திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

குடிகொள் மலஞ்சூழ் நவவாயிற் கூட்டைக் காத்துக் குணமிலியாய்ப்
படிகொள் நடையில் பரதவிக்கும் பாவி யேனைப் பரிந்தருளிப்
பொடிகொள் வெள்ளைப் பூச்சணிந்த பொன்னே உன்னைப் போற்றிஒற்றிக்
கடிகொள் நகர்க்கு வரச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே.[203] (௧)

சாதல் பிறத்தல் எனும்கடலில் தாழ்ந்து கரைகா ணாதழுந்தி
ஈதல் இரக்கம் எள்அளவும் இல்லா தலையும் என்றனைநீ
ஓதல் அறிவித் துணர்வறிவித் தொற்றி யூர்ச்சென் றுனைப்பாடக்
காதல் அறிவித் தாண்டதற்கோர் கைம்மா றறியேன் கடையேனே.[204] (௨)

அற்ப அளவும் நிச்சயிக்கல் ஆகா உடம்பை அருமைசெய்து
நிற்ப தலதுன் பொன்அடியை நினையாக் கொடிய நீலன்எனைச்
சற்ப அணியாய் நின்றன்ஒற்றித் தலத்தைச் சார்ந்து நின்புகழைக்
கற்ப அருள்செய் தனைஅதற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. (௩)

உண்டு வறிய ஒதிபோல உடம்பை வளர்த்தூன் ஊதியமே
கொண்டு காக்கைக் கிரையாகக் கொடுக்க நினைக்கும் கொடியன்எனை
விண்டு அறியா நின்புகழை விரும்பி ஒற்றி யூரில்நினைக்
கண்டு வணங்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. (௪)

---

202. இத் திருப் பதிக ஏடுகளின் எண்கள் ௬௰௫, ௬௰௪. இவற்றின் முதலில் முறையே, "உ. சிவமயம்." என்றும் "உ" என்றும் அடிகளார் வரைந்து உணர்ந்திருக்கிறார்கள்.

203. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், மாயைக்கு உட்பட்டு, ஊனை வளர்த்துக் காலங் கழித்த அறிவிலியாகிய தம்மை, இறைவன் ஒற்றியூர்க்கு வரச்செய்து, நல்லுணர்வளித்து, இறைவனது முடியாப் புகழைப் பாடச் செய்ததற்குத் தாம் என்ன கைம்மாறு செய்யக் கூடும் என்று, உரைத்து உரைத்து வியப்படைதல் கண்டனுபவிக்க.

நாய்க்கும் எனக்கும் ஒப்பாரி நாடி அதற்கு விருந்திடுவான்
வாய்க்கும் ஒதிபோல் பொய்உடலை வளர்க்க நினைக்கும் வஞ்சன்எனை
ஆய்க்கும் இனிய அப்பாஉன் ஒற்றி யூரை அடைந்திருளைக்
காய்க்கும் வண்ணம் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. ( ரு )

குருதி நிறைந்த குறுங்குடத்தைக் கொண்டோன் வழியில் சென்றிடவா
யெருதின் மனத்தேன் சுமந்துநலம் இழந்து திரியும் எய்ப்பொழிய
வருதி எனவே வழிஅருளி ஒற்றி யூர்க்கு வந்துன்னைக்
கருதி வணங்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. ( சா )

பாவம் எனும்ஓர் பெருஞ்சாக்குப் பையை எடுத்துப் பண்பறியாக்
கோவம் எனும்ஓர் குரங்காட்டும் கொடியேன் தன்னைப் பொருட்படுத்தித்
தேவர் அமுதே சிவனேநின் திருத்தாள் ஏத்த ஒற்றிஎனும்
காவல் நகரம் வரச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. ( எ )

பொள்ளற் குடத்தின் புலால்உடம்பைப் போற்றி வளர்த்துப் புலன்இழந்தே
துள்ளற் கெழுந்த மனத்துடனே துள்ளி அலைந்த துட்டன்எனை
உள்ளற் கறிவு தந்துன்றன் ஒற்றி யூர்க்கு வந்துவினைக்
கள்ளப் பகைநீக் கிடச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. ( அ )

கூட்டும் எலும்பால் தசையதனால் கோலும் பொல்லாக் கூரைதனை
நாட்டும் பரம வீடெனவே நண்ணி மகிழ்ந்த நாயேனை
ஊட்டுந் தாய்போல் உவந்துன்றன் ஒற்றி யூர்வந் துறநினைவு
காட்டுங் கருணை செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. ( கூ )

---

204. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் தேவாரத் திருமறையையும், பட்டினத்தடிகளாரது வியன் மொழியையும், காரைக்கால் அம்மையாருடைய நெஞ்சறிவுறுத்தலையும், இவைபோன்ற பிற மெய்ம்மொழிகளையும் உளங் கொண்டுணர்க :

"தானத்தைச் செய்து வாழ்வான் சலத்துளே அழுந்து கின்றீர்
வானத்தை வணங்க வேண்டின் வம்மின்கள் வல்லீ ராகில்
ஞானத்தை விளக்கை ஏற்றி நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை ஒழிப்பர் போலும் ஒற்றியூர் உடைய கோவே."

"ஓவாத் தொல்புகழ் ஒற்றி யூர
மூவா மேனி முதல்வ நின்அருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே."

"சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேல்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை—அங்கொருநாள்
ஆவாஎன் (று) ஆழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை."

ஊனைத் துயர்ந்த பழுமரம்போல் ஒதிபோல் துன்பைத் தாங்குகின்ற
தூணைத் தலம்போல் சோரிமிகும் தோலை வளர்த்த சுணங்கன்எனை
மாணப் பரிவால் அருட்சிந்தா மணியே உன்றன் ஒற்றிநகர்
காணப் பணித்த அருளினுக்கோர் கைம்மா றறியேன் கடையேனே. (௧௦)

புண்ணும் வழும்பும் புலால்நீரும் புழுவும் பொதிந்த பொதிபோல
நண்ணுங் கொடிய நடைமனையை நான்என் றுளறும் நாயேனை
உண்ணும் அமுதே நீஆர்ந்த ஒற்றி யூர்கண் டென்மனமும்
கண்ணுங் களிக்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

---

# 78. திரு வண்ணப் பதிகம்[205]

---

**கோயில்**

இரட்டை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவண்ண நதியும்வளை ஒருவண்ண மதியும்வளர்
செவ்வண்ணம் நண்ணுசடையும்
தெருள்வண்ண நுதல்விழியும் அருள்வண்ண வதனமும்
திகழ்வண்ண வெண்ணகையும்ஓர்
மருவண்ண மணிகுவளை மலர்வண்ண மிடறும்மலை
மகள்வண்ண மருவும்இடமும்
மன்வண்ண மிகுதுணைப் பொன்வண்ண அடிமலரும்
மாணிக்க வண்ணவடிவும்
இருவண்ண மாம்என்மன தொருவண்ணம் ஆகியே
இடையறு தெண்ணும்வண்ணம்
எவ்வண்ணம் அவ்வண்ணம் இவ்வண்ணம் என்றிவண்
இயம்பல்உன் கருணைவண்ணம்
கருவண்ணம் அறஉளம் பெருவண்ணம் உறநின்று
கடல்வண்ணன் எண்ணும்அமுதே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே,[206] (௧)

எண்ணுறுவி ருப்பாகி வல்விலங் கினமெலாம்
இடைவிடா துழலஒளிஇர்
எள்அளவும் இன்றிஅஞ் ஞானஇருள் மூடிட
இருண்டுயிர் மருண்டுமாழ்க
நண்ணுமன மாயையாம் காட்டைக் கடந்துநின்
ஞானஅருள் நாட்டைஅடையும்
நாள்எந்த நாள்அந்த நாள்இந்த நாள்என்று
நாயினேற் கருள்செய்கண்டாய்
விண்ணுறுசு டர்க்கெலாம் சுடர்அளித் தொருபெரு
வெளிக்குள்வளர் கின்றசுடரே
வித்தொன்றும் இன்றியே விளைவெலாம் தருகின்ற
விஞ்ஞான மழைசெய்முகிலே
கண்ணுறுந தற்பெருங் கடவுளே மன்றினில்
கருணைநடம் இடுதெய்வமே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே.[207] ( உ )

பூதநெறி யாதிவரு நாதநெறி வரையுமாப்
புகலுமூ வுலகுநீத் துப்
புரையுற்ற மூடம்எனும் இருள்நிலம்அ கன்றுமேல்
போய்அருள்ஒ ளித்துணையினால்
வேதநெறி புகல்சகல கேவலம்இ லாதபர
வெளிகண்டு கொண்டுகண்ட
விளைவின்றி நான்இன்றி வெளிஇன்றி வெளியாய்
விளங்குநாள் என்றருளுவாய்

---

205. இப் பதிகம், அடிகளார் கை எழுத்திலுள்ள மற்றொரு சுவடியில் இருக்கிறது. இதன் ஏட்டெண்கள் க, உ, ங, ச, ரு, சு. இவற்றின் முதல் ஏட்டின் தொடக்கத்தில், "உ. சிவமயம். சிவமயம். சண்முக நம." என்றும் மற்றவற்றில் "உ" என்றும் அடிகளார் வரைந்து சிந்தித்திருக்கிறார்கள்.

206. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவனுடைய பிள்ளை யாகிய தம்மை மாயையால் அலைக்கழிக்க விடாது, அம் மாயையைக் கடந்து, இறைவனை மறவாத நெறியைத் தமக்கு அருளுமாறு, இறைவன்மாட்டு இரங்குதல் கண்டு இன்புறுக.

வாதநெறி நடவாத போதநெறி யாளர்நிறை
மதிநெறிஉ லாவும்மதியே.
மணிமிடற் றரசேளம் வாழ்வின்முத லேஅரு
மருந்தேபெ ருந்தெய்வமே
காதநெறி மணம்வீசு கனிதருபொ ழிற்குலவு
கடிமதிற் றில்லை நகர்வாழ்
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. (௩)

கூர்கொண்ட வாள்கொண்டு கொலைகொண்ட வேட்டுவக்
குடிகொண்ட சேரிநடுவில்
குவைகொண்ட ஒருசெல்வன் அருமைகொண் டீன்றிடு
குலங்கொண்ட சிறுவன்ஒருவன்
நேர்கொண்டு சென்றவர்கள் கைகொண் டுறக்கண்கள்
நீர்கொண்டு வாடல்எனவே
நிலைகொண்ட நீஅருட் கலைகொண் டளித்தயான்
நெறிகொண்ட குறிதவறியே
போர்கொண்ட பொறிமுதல் புலைகொண்ட தத்துவப்
புரைகொண்ட மறவர்குடியாம்
பொய்கொண்ட மெய்என்னும் மைகொண்ட சேரியில்
போந்துநின் றவர்அலைக்கக்
கார்கொண்ட இடிஒலிக் கண்கொண்ட பார்ப்பில்
கலங்கினேன் அருள்புரிகுவாய்
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. (௪)

---

207. இப் பா முதலியவற்றோடு, கீழ்க்காணும் அப்பர் சுவாமிகளின் வேண்டுகோள் போல்வன பார்த்தமைக:

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே."

படமெடுத் தாடுமொரு பாம்பாக என்மனம்
பாம்பாட்டி யாகமாயைப்
பார்த்துக் களித்துதவு பரிசுடையர் விடயம்
படர்ந்தபிர பஞ்சமாகத்
திடமடுத் துறுபாம்பின் ஆட்டமது கண்டஞ்சு
சிறுவன்யா னாகநின்றேன்
தீரத்து ரந்தந்த அச்சந்த விர்த்திடு
திறத்தன்நீ ஆகல்வேண்டும்
விடமடுத் தணிகொண்ட மணிகண்ட னேவிமல
விஞ்ஞான மாம்அகண்ட
வீடளித் தருள்கருணை வெற்பனே அற்புத
விராட்டுருவ வேதார்த்தனே
கடமடுத் திடுகளிற் றுரிகொண்ட ணிந்தமெய்க்
கடவுளே சடைகொள்அரசே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. (௫)

எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்தினும்
எய்துகபி றப்பில்இனிநான்
எய்தாமை எய்தினும் எய்திடுக இருமையினும்
இன்பம்எய் தினும்எய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும்வருக
வறுமைவரு கினும்வருக மதிவரினும் வருகஅவ
மதிவரினும் வருகஉயர்வோ
டிழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருகஅல
தெதுபோ கினும்போகநின்
இணையடிகள் மறவாத மனம்ஒன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும்அரசே
கழிவகைப் பவரோக நீக்கும்நல் அருள்எனும்
கதிமருந் துதவுநிதியே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. (௬)

பற்றுவது பந்தம்அப் பற்றறுதல் வீடிஃது
பரமவே தார்த்தம்எனவே
பண்புளோர் நண்பினொடு பகருவது கேட்டும்என்
பாவிமனம் விடயநடையே
எற்றுவது செய்யாமல் எழுவதொடு விழுவதும்
இறங்குவதும் ஏறுவதும்வீண்
எண்ணுவதும் நண்ணுவதும் இப்புவன போகங்கள்
யாவினும் சென்றுசென்றே
சுற்றுவதும் ஆகிஓர் சற்றுமறி வில்லாது
சுழல்கின்ற தென்செய்குவேன்
தூயநின் திருவருளின் அன்றிஇவ் வேழைஅச்
சுழல்மனம் அடக்கவருமோ
கற்றுவழு வற்றவர் கருத்தமர் கருத்தனே
கண்ணுதற் கடவுள்மணியே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. (எ)

எளியனேன் சிறியன்யான் செய்பிழைகள் சிறியவோ
எழுகடலி னும்பெரியவே
என்செய்கேன் என்செய்கேன் இனிஆயி னும்செயா
தெந்தைநினை ஏத்தஎன்றால்
வளியின்வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சால்
மயங்குகின் றேன்அடியனேன்
மனம்எனது வசமாக நினதுவசம் நானாக
வந்தறிவு தந்தருளுவாய்
ஒளியின்ஒளி யேநாத வெளியின் வெளியேவிடய
உருவின்உரு வேஉருவினும்
உயிரின்உயி ரேஉயர்கொள் உணர்வின்உணர் வேஉணர்வின்
உறவினுற வேஎம்இறையே
களியின்நிறை வேஅளிகொள் கருணைநிதி யேமணிகொள்
கண்டஎண் தோள்கடவுளே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. (அ)

சந்ததம்எ னக்குமகிழ் தந்தைநீ உண்டுநின்
　　தன்னிடத் தேமவல்லி
தாயுண்டு நின்அடியர் என்னும்நல் தமர்உண்டு
　　சாந்தம்எனும் நேயர்உண்டு
புந்திகொள்நி ராசையாம் மனைவிஉண் டறிவெனும்
　　புதல்வன்உண் டிரவுபகலும்
போனவிட முண்டருட் பொருளுமுண் டானந்த
　　போகபோக் கியமும்உண்டு
வந்தனைசெய் நீறெனும் கவசம்உண் டக்கமா
　　மணியும்உண் டஞ்செழுத்தாம்
மந்திரப் படைஉண்டு சிவகதிஎ னும்பெரிய
　　வாழ்வுண்டு தாழ்வும்உண்டோ
கந்தமிகு கொன்றையொடு கங்கைவளர் செஞ்சடைக்
　　கடவுளே கருணைமலையே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
　　கமலகுஞ் சிதபாதனே.　　( கூ )

நான்முகனும் மாலும்அடி முடியும்அறி வரியபர
　　நாதமிசை ஓங்குமலையே
ஞானமய மானஒரு வானநடு ஆனந்த
　　நடனமிடு கின்றஒளியே
மான்முகம்வி டாதுழலும் எனையும்உயர் நெறிமருவ
　　வைத்தவண்வ ளர்த்தபதியே
மறைமுடிவில் நிறைபரப் பிரமமே ஆகம
　　மதிக்கும்முடி வுற்றசிவமே
ஊன்முகச் செயல்விடுத் துண்முகப் பார்வையின்
　　உறுந்தவர்பெ றுஞ்செல்வமே
ஒழியாத உவகையே அழியாத இன்பமே
　　ஒன்றிரண் டற்றநிலையே
கான்முகக் கடகளிற் றுரிகொண்ட கடவுளே
　　கண்கொண்ட நுதல்அண்ணலே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
　　கமலகுஞ் சிதபாதனே.　　( கo )

திருச்சிற்றம்பலம்

# 79. போற்றித் திருப் பதிகம்[208]

பொது

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அருள்தரல் வேண்டும் போற்றிஎன் அரசே
அடியனேன் மனத்தகத் தெழுந்த
இருள்கெடல் வேண்டும் போற்றிஎந் தாயே
ஏழையேன் நின்றனைப் பாடும்
தெருள்உறல் வேண்டும் போற்றிஎன் அறிவே
சிந்தைநைந் துலகிடை மயங்கும்
மருள்அறல் வேண்டும் போற்றிஎன் குருவே
மதிநதி வளர்சடை மணியே.[209] (௧)

மணிமிடற் றமுதே போற்றிஎன் தன்னை
வாழ்விக்க வேண்டுவல் போற்றி
அணிமதி முடியோய் போற்றிஇவ் வேழைக்
கருளமு தருளுக போற்றி
பணிஅணி புயத்தோய் போற்றிநின் சீரே
பாடுதல் வேண்டும்நான் போற்றி
தணிவில்பேர் ஒளியே போற்றிஎன் தன்னைத்
தாங்குக போற்றிநின் பதமே.[210] (௨)

நின்பதம் பாடல் வேண்டும்நான் போற்றி
நீறுபூத் தொளிர்குளிர் நெருப்பே
நின்புகழ் கேட்டல் வேண்டும்நான் போற்றி
நெற்றியங் கண்கொளும் நிறைவே
நின்வச மாதல் வேண்டும்நான் போற்றி
நெடியமால் புகழ்தனி நிலையே
நின்பணி புரிதல் வேண்டும்நான் போற்றி
நெடுஞ்சடை முடித்தயா நிதியே. (௩)

---

208. இப் பதிகம், நம் அடிகளார் கைஎழுத்திலுள்ள—மூன் பதிகம் கொண்ட—சுவடியில் உள்ளவாறு, இங்கு அச்சிட்டிருக்கிறது.

நிதிதரு நிறைவே போற்றிஎன் உயிர்க்கோர்
நெறிதரு நிமலமே போற்றி
மதிமுடிக் கனியே போற்றிஎன் தன்னை
வாழ்வித்த வள்ளலே போற்றி
விதிமுதற் கிறையே போற்றிமெய்ஞ் ஞான
வியன்நெறி விளக்கமே போற்றி
பதிபசு பதியே போற்றி நின்பாதம்
பாடஎற் கருளுக போற்றி. (௪)

போற்றிஎன் உயிர்க்கோர் இன்பமே அன்பர்
புரிதவக் காட்சியே போற்றி
போற்றிஎன் அன்பாம் தெய்வமே சைவம்
புகல்சிவ போகமே போற்றி
போற்றிஎன் பெரிதாஞ் செல்வமே கருணைப்
பூரண வெள்ளமே போற்றி
போற்றிஎன் வாழ்வுக் கொருபெரு முதலே
போற்றிநின் சேவடிப் போதே. (௫)

---

209. இப் பதிகப் பாக்களில், பெருமான் அவர்கள், தாம் இறைவன் திருத்தாளில் அடைக்கலம் என்றும், தமக்குப் புகல் வேறில்லை என்றும் கூறி, தாம் இறைவனது ஒல்காப் பெரும்புகழை அமுதூறப் பாடிப் பாடி இன்புற, இறைவன் அருளுதல் வேண்டும் என்று முறையிட்டுக் கொள்ளுதல் காண்க.

210. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் தேவார, திருவாசக, தாயுமானப் பொய்யாப் பெருமொழிகள் போல்வனவற்றை உய்த்துணர்ந்து இன்புற்று நிறைக:

"கேடு மூடிக் கிடந்துண்ணும் நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாம்திருக் கோளிலி ஈசனைப்
பாடு மின்இர வோடு பகலுமே."

"பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்(கு)
ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்(து)
ஆடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்(து)
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே."

"நின்னைச் சரண்புகுந்தால் நீகாக்கல் வேண்டும்அல்லால்
என்னைப் புறம்விடுதல் என்னே பராபரமே."

போதஆ நந்த போகமே என்னைப்
புறம்பிட நினைத்திடேல் போற்றி
சீதவான் பிறைசேர் செஞ்சடை யாய்என்
சிறுமைதீர்த் தருளுக போற்றி
பேதம்ஒன் றில்லா அருட்கட லேஎன்
பிழைஎலாம் பொறுத்தருள் போற்றி
வேதமெய்ப் பொருளே போற்றிநின் அல்லால்
வேறெனக் கிலைஅருள் போற்றி. (சு)

போற்றுவார் உள்ளம் புகுந்தொளிர் ஒளியே
போற்றிநின் பூம்பதம் போற்றி
ஆற்றுவார் சடைஎன் அப்பனே போற்றி
அமலநின் அடிமலர் போற்றி
ஏற்றுவார் கொடிகொள் எந்தையே போற்றி
இறைவநின் இருங்கழல் போற்றி
சாற்றுமா றரிய பெருமையே போற்றி
தலைவநின் தாட்டுணை போற்றி. (எ)

துணைமுலை மடந்தை எம்பெரு மாட்டி
துணைவநின் துணையடி போற்றி
புணைஎன இடரின் கடலினின் றேற்றும்
புனிதநின் பொன்னடி போற்றி
இணையில்பேர் இன்ப அமுதருள் கருணை
இறைவநின் இணையடி போற்றி
கணைஎனக் கண்ணன் தனைக்கொளும் ஒருமுக்
கண்ணநின் கழலடி போற்றி. (அ)

அடியனேன் பிழைகள் பொறுத்தருள் போற்றி
அயல்எனை விட்டிடேல் போற்றி
கொடியனேற் கின்பந் தந்தருள் போற்றி
குணப்பெருங் குன்றமே போற்றி
நெடியஎன் துன்பந் துடைத்தருள் போற்றி
நினைஅலால் பிறிதிலேன் போற்றி
படிமிசைப் பிறர்பால் செலுத்திடேல் எங்கள்
பரமநின் அடைக்கலம் நானே. (கூ)

நான்செயும் பிழைகள் பலவும்நீ பொறுத்து
　　நலந்தரல் வேண்டுவன் போற்றி
என்செய்தாய் என்பார் இல்லைமற் றெனக்குன்
　　இன்னருள் நோக்கஞ்செய் போற்றி
ஊன்செய்நா வால்உன் ஐந்தெழுத் தெளியேன்
　　ஓதநீ உவந்தருள் போற்றி
மான்செயும் நெடுங்கண் மலைமகள் இடங்கொள்
　　வள்ளலே போற்றிநின் அருளே. (௧0)

திருச்சிற்றம்பலம்

# 80. விண்ணப்பப் பதிகம்[211]

## திரு ஆரூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தண்ணார் மதிபோல் சீதளவெண் தரளக் கவிகைத் தனிநிழற்கீழ்க்
கண்ணார் செல்வச் செருக்கினர்தம் களிப்பில் சிறிய கடைநாயேன்
பெண்ணார் பாகப் பெருந்தகைதன் பெரிய கருணைக் குரியம்என்றே
எண்ணா நின்று களிக்கின்றேன் ஆரூர் எந்தாய் இரங்காயே.[212] (௧)

இரங்கா திருந்தால் சிறியேனை யாரே மதிப்பார் இழிந்தமனக்
குரங்கால் அலைப்புண் டலைகின்ற கொடிய பாவி இவன்என்றே
உரங்கா தலித்தோர் சிரிப்பார்நான் உலகத் துயரம் நடிக்கின்ற
அரங்காக் கிடப்பேன் என்செய்வேன் ஆரூர் அமர்ந்த அருமணியே.[213] (௨)

---

211. இப் பதிகம், அடிகளாரது கையெழுத்தில் உள்ள பெரிய சுவடி ஒன்றின் ௨௨௪, ௨௨௫-ஆம் ஏடுகளில் உள்ளது. இவற்றின் தொடக்கத்தில், அவர்கள் "௨. திருவாரூர்." என்று எழுதியிருக்கிறார்கள்.

212. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம்மை அடிமை கொள்ளாவிடில், முன் மா பாதகனுக்கு அருளிய இறைவன் புகழ் என்னாகும் என்றும், முன்பு தம்மை இறைவன் ஆட்கொண்டபோது தம்மிடம் பிழை ஏதும் இல்லாதிருக்கவில்லை என்றும், அன்றே இறைவனது திருத்தாளினைத் தாம் இறுகப் பிடிக்காதது பெருங்குற்றம் என்றும்—இன்ன பலப்பல இயம்பி இறைவனிடம் மன்றாடுவது கண்டு மனம் உருகி உணர்க.

மணியார் கண்டத் தெண்டோள்செவ் வண்ணப் பவள மாமலையே
அணியால் விளங்கும் திருஆரூர் ஆரா அமுதே அடிச்சிறியேன்
தணியா உலகச் சழக்கிடையே தளர்ந்து கிடந்து தவிக்கின்றேன்
இணியார் முருட்டுக் கடைமனத்தேன் செய்வ தொன்றும் தெரியேனே. ( ௩ )

தெரியத் தெரியும் தெரிவுடையார் சிவாநு பவத்தில் சிறக்கின்றார்
பிரியப் பிரியும் பெரும்பாவி அடியேன் பிழையில் பிழைக்கின்றேன்
தூரியப் பொருளே அணிஆரூர்ச் சோதி மணிநீ தூயஅருள்
புரியப் பெறுவேன் எனில்அவர்போல் யானும் சுகத்திற் பொலிவேனே. ( ௪ )

பொலிவேன் கருணை புரிந்தாயேல் போதா னந்தக் கடல்ஆடி
மலிவேன் இன்ப மயமாவேன் ஆரூர் மணிநீ வழங்காயேல்
மெலிவேன் துன்பக் கடல்மூழ்கி மேவி எடுப்பார் இல்லாமல்
நலிவேன் அந்தோ அந்தோநின் நல்ல கருணைக் கழகன்றே. ( ௫ )

கருணைக் கடலே திருஆரூர்க் கடவுட் சுடரே நின்னுடைய
அருணக் கமல மலரடிக்கே அடிமை விழைந்தேன் அருளாயேல்
வருணக் கொலைமா பாதகனும் மறையோன் தனக்கு மகிழ்ந்தன்று
தருணக் கருணை அளித்தபுகழ் என்னும் இந்நாள் சாற்றுகவே. ( ௬ )

இந்நாள் அடியேன் பிழைத்தபிழை எண்ணி இரங்காய் எனில்அந்தோ
அந்நாள் அடிமை கொண்டனையே பிழையா தொன்றும் அறிந்திலையோ
பொன்னார் கருணைக் கடல்இன்று புதிதோ பிறர்பால் போயிற்றோ
என்நா யகனே திருஆரூர் எந்தாய் உள்ளம் இரங்கிலையே. ( ௭ )

உள்ளக் கவலை ஒருசிறிதும் ஒருநா ளேனும் ஒழிந்திடவும்
வெள்ளக் கருணை இறையேனும் மேவி யிடவும் பெற்றறியேன்
கள்ளக் குரங்காய் உழல்கின்ற மனத்தேன் எனினும் சுடையேனைத்
தள்ளத் தகுமோ திருஆரூர் எந்தாய் எந்தாய் தமியேனே. ( ௮ )

எந்தாய் ஒருநாள் அருள்வடிவின் எளியேன் கண்டு களிப்படைய
வந்தாய் அந்தோ கடைநாயேன் மறந்து விடுத்தேன் மதிகெட்டேன்
செந்தா மரைத்தாள் இணைஅன்றே சிக்கென் றிறுகப் பிடித்தேனேல்
இந்தார் சடையாய் திருஆரூர் இறைவா துயரற் றிருப்பேனே. ( ௯ )

---

213. இப் பா முதலியவற்றோடு, இங்குக் காணும் மணிவாசக வானமுதம் போல்வனவற்றை வாய்மடுத்துண்டு களிக்க :

"அறிவ னேஅமு தேஅடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை ஆண்டது
அறிவி லாமைஅன் றேகண்ட(து) ஆண்டநாள்
அறிவ னேஅல்ல னேஅருள் ஈசனே."

இருப்பு மனத்துக் கடைநாயேன் என்செய் வேன்நின் திருஅருளாம்
பொருப்பில் அமர்ந்தார் அடியர்எலாம் அந்தோ உலகப் புலைஒழுக்காம்
இருப்பில் சுழன்று நான்ஒருவன் திகைக்கின் றேன்ஓர் துணைகாணேன்
விருப்பில் கருணை புரிவாயோ ஆரூர் தண்ணார் வியன்அமுதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 81. தரிசனப் பதிகம்[214]

## கோயில்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவார் பொன்அம் பலநடுவே தெள்ளார் அமுதத் திரள்அனைய
உருவார் அறிவா னந்தநடம் உடையார் அடியார்க் குவகைநிலை
தருவார் அவர்தம் திருமுகத்தே ததும்பும் இளவெண் ணகைகண்டேன்
இருவா தனைஅற் றங்கேநான் இன்னும் ஒருகால் காண்பேனோ.[215] (௧)

பொன்நா யகனும் புரந்தரனும் பூவாழ் பவனும் புகழ்ந்தேத்த
மின்னார் பொன்னம் பலநடுவே விளங்கும் கருணை விழிவழங்கும்
அன்னார் அறிவா னந்தநடம் ஆடும் கழல்கண் டகங்குளிர்ந்தேன்
என்நா யகனார் அவர்கழலை இன்னும் ஒருகால் காண்பேனோ.[216] (௨)

தாயிற் பெரிய கருணையினார் தலைமா லையினார் தாழ்சடையார்
வாயிற் கினிய புகழுடைய வள்ளல் அவர்தந் திருஅழகைக்
கோயிற் கருகே சென்றுமனம் குளிரக் கண்டேன் பிரிவுற்றேன்
ஈயில் சிறியேன் அவர்அழகை இன்னும் ஒருகால் காண்பேனோ. (௩)

புன்கண் அகற்றும் மெய்அடியார் போற்றும் பொன்னம் பலநடுவே
வன்கண் அறியார் திருநடஞ்செய் வரதர் அமுதத் திருமுகத்தை
முன்கண் உலகில் சிறியேன்செய் முழுமா தவத்தால் கண்டேன்நான்
என்கண் அனையார் அவர்முகத்தை இன்னும் ஒருகால் காண்பேனோ. (௪)

---

214. இப் பதிகம் உள்ள அடிகளாரின் கையெழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் ௨௨௬, ௨௨௭. இவற்றின் முதற்கண், "உ. சிவகுருவே நம." என்று அவர்கள் எழுதிச் சிந்தித்திருக்கிறார்கள்.

215. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், பொன்னம்பல நடுவே, இறைவன் தமக்கு முன் ஒருகால் அளித்த திருநடனக்காட்சி, மறுபடியும் தமக்கு என்று வாய்க்கும் என்று உரைத்துரைத்து, இரங்குதல் கண்டு உள்ளங் கனிவுறுக.

அன்புற் றடியார் தொழுதேத்த அணியார் மணிப்பொன் அம்பலத்தே
வன்புற் றழியாப் பெருங்கருணை மலையார் தலையார் மாலையினர்
மன்புற் றரவார் கச்சிடையின் வயங்க நடஞ்செய் வதுகண்டேன்
இன்புற் றடியேன் அவர்நடத்தை இன்னும் ஒருகால் காண்பேனே. ( ௫ )

இம்மா நிலத்தில் சிவபதமீ தென்னும் பொன்னம் பலநடுவே
அம்மால் அறியா அடிகள்அடி அசைய நடஞ்செய் வதுகண்டேன்
எம்மால் அறியப் படுவதல என்என் றுரைப்பேன் ஏழையன்யான்
எம்மான் அவர்தந் திருநடத்தை இன்னும் ஒருகால் காண்பேனே. ( ௬ )

சிறியேன் தவமோ எனைஈன்றாள் செய்த தவமோ யான்அறியேன்
மறியேர் கரத்தார் அம்பலத்தே வாழும் சிவனார் தமைக்கண்டேன்
பிறியேன் எனினும் பிரிந்தேன்நான் பேயேன் அந்தப் பிரிவினைக்கீழ்
எறியேன் அந்தோ அவர்தம்மை இன்னும் ஒருகால் காண்பேனே. ( ௭ )

அருளே வடிவாய் அம்பலத்தே ஆடும் பெருமான் அடிகள்தமைத்
தெருளே வடிவாம் அடியவர்போல் சிறியேன் கண்டேன் சீர்உற்றேன்
மருளே வடிவேன் ஆதலினால் மறந்தே பிரிந்தே மதிகெட்டேன்
இருளோர் மனத்தேன் அவர்தமைநான் இன்னும் ஒருகால் காண்பேனே. (௮)

அன்னே திருஅம் பலத்தேஎம் ஐயர் உருக்கண் டேன்அதுதான்
பொன்னே பவளப் பொருப்பதுவோ புதுமா ணிக்க மணித்திரளோ
மின்னே விளக்கோ விரிசுடரோ மேலை ஒளியோ என்உரைப்பேன்
என்னே அவர்தந் திருஉருவை இன்னும் ஒருகால் காண்பேனே. ( ௯ )

பொன்என் றுரைக்கும் அம்பலத்தே புனித ரானார் தம் அழகியலை
உன்என் றுரைப்பேன் என்னேஎன் உள்ளம் சிறிதும் உணர்ந்ததிலை
மின்என் றுரைக்கும் படிமூன்று விளக்கும் மழுங்கும் எனில்அடியேன்
என்என் றுரைப்பேன் அவர்அழகை இன்னும் ஒருகால் காண்பேனே. (௰)

திருச்சிற்றம்பலம்

---

216. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் ஆளுடைய பிள்ளையார் அருண் மொழியும் ஆளுடைய அடிகளாரின் அமுத மொழியும் போல்வன கண்டுணர்ந்து நிறைவுறுக:

"ஆணும் பெண்ணுமாய் அடியார்க்(கு) அருள்நல்கிச்
சேணின் றவர்க்கின்னும் சிந்தை செயவல்லான்
பேணி வழிபாடு பிரியா தெழுந்தொண்டர்
காணும் கடல்நாகைக் காரோணத் தானே."

"செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே."

# 82. அபராத விண்ணப்பம்[217]

### கோயில்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகம் பரவும் பொருளேஎன் உறவே என்றன் உயிர்க்குயிரே
இலகம் பரத்தே பரம்பரமாய் இன்ப நடஞ்செய் எம்இறையே
கலகம் பரவும் மனத்தேனைக் கைவிட் டிடநீ கருதுதியோ
திலகம் பரவும் நுதற்பாகன் என்ப தருளின் திறத்தன்றே.[218] (க)

அன்றோர் பொருளாய் அடியேனை ஆட்கொண் டருளி அறிவளித்தாய்
இன்றோ சிறியேன் பிழைகருதி இரங்கா தகற்ற எண்ணுதியோ
குன்றோர் அனைய குறைசெயினும் கொண்டு குலம்பே சுதல்எந்தாய்
நன்றோ கருணைப் பெருங்கடலே ஆளாய் இந்த நாயினையே.[219] (உ)

நாய்க்குங் கடையேன் பிழைஅனைத்தும் நாடில் தவத்தால் நல்கியநல்
தாய்க்கும் கோபம் உறும்என்னில் யாரே யென்பால் சலியாதார்
வாய்க்கும் கருணைக் கடல்உடையாய் உன்பால் அடுத்தேன் வலிந்தெளிய
பேய்க்கும் தயவு புரிகின்றோய் ஆள வேண்டும் பேதையையே. (ங)

பேதைப் பருவத் தெனைவலியப் பிடித்தாட் கொண்ட பெருமானே
போதைக் கழிப்பான் வீண்புரியும் புலையேன் பிழையைப் பொறுக்கிலையேல்
வாதைப் படும்என் உயிரைஉன்றன் மலர்த்தாள் முன்னர் மடிவித்தே
ஓதைக் கடல்சூழ் உலகத்தே பழிசூழ் விப்பேன் உரைத்தேனே. (ச)

உரைத்தார் சிலர்சின் னாள்கழிய உறுவேம் என்ன உரைத்தவரே
நரைத்தார் இறந்தார் அவர்தம்மை நான்கண் டிருந்தும் நாணுமே
விரைத்தாள் மலரைப் பெறலாம்என் றெண்ணி வீணே இளைக்கின்றேன்
திரைத்தாழ் கடலிற் பெரும்பிழையே செய்தேன் என்ன செய்வேனே. (ரு)

---

217. இப் பதிகம், அடிகளார் எழுத்தில் வேறு ஒரு சுவடியில் இருக்கிறது. ஏட்டெண்கள் க, உ, ங, ச, ரு, சு. இவற்றின் முதல் ஏட்டின் தொடக்கத்தில் "உ. சிவமயம்." என்றும் மற்றவற்றில் "உ" என்றும் அவர்கள் எழுதிக் கருதியிருக்கிறார்கள்.

218. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தமக்கு அன்னையும் அப்பனு மாகியவனும், தம்மைப் பேதைப் பருவத்து வலிந்தாட் கொண்டவனும் ஆன இறைவன், இஞ்ஞான்று யார்க்கோ வந்த விருந்தெனப் பராமுகமாகவும், கொண்டு குலம் பேசுவதுபோலவும் இருப்பது, இறைவன் அருட்கடனுக்குப் பொருந்தாது—என்பது

செய்வேன் தீமை நலம்ஒன்றும் தெரியேன் தெரிந்து தெளிந்தோரை
வைவேன் அன்றி வாழ்த்தேன்மன் வண்ணம் இந்த வண்ணம்எனில்
உய்வேன் என்ப தெவ்வாறென் உடையாய் உய்வேன் உய்வித்தால்
கைவேன் அலதிங் கென்செய்வேன் அந்தோ எண்ணி நலிவேனே. ( ௬ )

எண்ணி நலிவேன் நின்பாதம் எந்நாள் அடைவோம் எனஎன்பால்
நண்ணி நலிவைத் தவிராயேல் என்செய் திடுவேன் நாயகனே
கண்ணி நலியப் படும்பறவைக் கால்போல் மனக்கால் கட்டுண்ணப்
பண்ணி நலஞ்சேர் திருக்கூட்டம் புகுத எனினும் பரிந்தருளே. ( ௭ )

பரியும் மனத்தால் கருணைநடம் பரவுந் தொண்டர் பதப்பணியே
புரியும் இனத்தா ரொடுங்கூடிப் புனித னாக வேண்டும்எனத்
திரியும் அடிமைச் சிறியேனுக் கிரங்கா திருந்தால் சின்னாட்பின்
எரியுங் கொடுவாய் நரகத்துக் கென்செய் வேன்என் செய்வேனே. ( ௮ )

என்செய் திடுவேன் புலைநாயேன் இயற்றும் பிழைகள் எல்லாம்நின்
பொன்செய் மலர்த்தாள் துணைஅந்தோ பொறுத்துக் கருணை புரியாதேல்
புன்செய் விளவிப் பயனிலியாய்ப் புறத்திற் கிடத்தி எனஅடியார்
வன்செய் உரையில் சிரிப்பார்மற் றதுகண் டெங்ஙன் வாழ்வேனே. ( ௯ )

வாழா மனத்தின் வழிசென்று வாளா நாளைக் கழிக்கின்ற
பாழாம் உலகச் சிறுநடையில் பாவி யேனைப் பதிவித்தாய்
ஊழாம் எனில்எம் பெருமானே இன்னும் வினையால் ஒதிஅனையேன்
ஏழாம் நரகுக் காளாவேன் அல்லால் புகல்என் எளியேற்கே. ( ௧௦ )

எளியேன் கருணைத் திருநடஞ்செய் இணைத்தாள் மலர்கண் டிதயமெலாம்
களியேன் கருங்கற் பாறைஎனக் கிடக்கின் றேன்இக் கடையேனை
அளியே பெருக ஆளுதியோ ஆள்கி லாயோ யாதொன்றும்
தெளியேன் அந்தோ அந்தோஎன் செய்வேன் விலங்கிற் சிறியேனே. ( ௧௧ )

---

218\. (தொடர்ச்சி)

போன்ற பலப்பல குறைகளை இயம்பி, என்பு நெக்குருகி இரங்கி முறையிடுதல் கண்டு, உளம் கனிவுற்றமைக.

219\. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருவாசகத் தெள்ளமுத மொழி போல்வனவற்றை வாயுறையாகக் கொண்டு, உளங்கனிந்து உவப்புற்று நிறைக :

" தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை உம்ப ரானை வம்பனேன்
நான்நின் அடியேன் நீஎன்னை ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானும் சிரித்தே அருளலாம் தன்மை யாம்என் தன்மையே."

சிறியேன் பிழையைத் திருவுளத்தே நேர்ந்திங் கென்னைச் சீறுதியோ
எறியேம் எனக்கொண் டிரங்குதியோ இவ்வா றவ்வா றெனஒன்றும்
அறியேன் அவலக் கடல்அழுந்தி அந்தோ அழுங்கி அயர்கின்றேன்
பிறியேன் என்னைப் பிரிக்கினும்பின் துணையும் காணேன் பெருமானே. (கஉ)

காணேன் நினது திருஅருளைக் கண்டார் தமது கழல்தலைமேல்
பூணேன் உலகச் சிறுநடையில் போந்து பொய்யே புகன்றந்தோ
வீணே சுழன்று மெலிகின்றேன் என்னே இன்னல் மிகச்சுமக்கும்
தூணே எனஇங் கெனைவிதித்தாய் எந்தாய் யாது சூழ்வேனே. (கங)

சூழ்வேன் நினது கருணைநடம் சூழும் பெரியார் தமைச்சூழ்ந்து
வாழ்வேன் எளியேன் குறிப்பிந்த வண்ணம் எனது மனக்குரங்கோ
தாழ்வேன் நினையும் தாழ்விப்பேன் அவலக் கடலில் சலியாமே
வீழ்வேன் என்றால் எம்பெருமான் இதற்கென் செய்கேன் வினையேனே. (கச)

வினையே பெருக்கிக் கடைநாயேன் விடயச் செருக்கால் மிகநீண்ட
பனையே எனநின் றுலர்கின்றேன் பாவி யேனுக் கருளுதியோ
நினையே நினையாப் பிழைகருதி நெகிழ விடவே நினைதியோ
அனையே அனையாய் திருக்குறிப்பை அறியேன் ஈதென் றடியேனே. (கரு)

அடியேன் முடுகிச் செயும்பிழைகள் அனந்தம் அவற்றை அந்தோஇக்
கொடியேன் நினைக்குந் தொறும்உள்ளம் குமைந்து நடுங்கிக் குலைகின்றேன்
செடியேன் மனமோ வினையோநின் செயலோ செய்கை தெரியேன்வெண்
பொடியே திகழும் வடிவுடையாய் யாது புரிவேன் புலையேனே. (கசா)

புலையே புரியும் மனம்போன போக்கே அல்லால் புண்ணியநல்
நிலையே அறியேன் சிறியேனுக் கருளல் அழகோ நிறைந்தகுண
மலையே மணியே மருந்தேஎன் வாழ்வே எல்லாம் வல்லோனே
கலையே கருதும் கழலுடையாய் அருளா மையும்நின் கடன்அன்றே. (கஎ)

கடந்தாழ் கயம்போல் செருக்கிமயற் கடலில் அழுத்திக் கடுவினையேன்
மடந்தாழ் மனத்தோ டுலைகின்றேன் கரைகண் டேறும் வகைஅறியேன்
தொடர்ந்தார் எடுப்பார் எனையெடுக்கும் துணைநின் மலர்த்தாள் துணைகண்டாய்
அடர்ந்தார் தமக்கும் அருள்கின்றோய் ஆணை ஆணை அடியேனே. (கஅ)

அடியார் இன்பம் அடைகின்றார் அடியேன் ஒருவன் அயர்கின்றேன்
படியார் பலரும் பலபேசிச் சிரியா நின்றார் பாங்கிரவும்
விடியா நின்ற தென்புரிவேன் இன்னுங் கருணை விளைத்திலையே
கொடியார் பிழையும் குணமாகக் கொண்டு மகிழும் குணக்குன்றே. (கசு)

குன்று நிலைநின் றருள்அடைந்தார் அன்பர் எல்லாம் கொடியேன்நான்
நன்றும் நெறிசென் றறியாதே மனஞ்செல் வழியே நடக்கின்றேன்
பொன்று மணியே அவர்க்கருளி என்னை விடுத்தல் புகழன்றே
என்றால் எனக்கே நகைதோன்றும் எந்தாய் உளத்துக் கென்னுமே. (உ0)

என்னா ருயிருக் குயிர்அனையாய் என்னைப் பொருளாய் எண்ணிமகிழ்ந்
தந்நாள் அடிமை கொண்டளித்தாய் யார்க்கோ வந்த விருந்தெனவே
இந்நாள் இரங்கா திருக்கின்றாய் எங்கே புகுவேன் என்புரிவேன்
நின்னால் அன்றிப் பிறர்தம்மால் வேண்டேன் ஒன்றும் நின்மலனே. (உக)

நின்பால் அடைந்தார் அன்பாலே அடியார் எல்லாம் நெடுவினையேன்
வன்பால் மனப்பேய் தன்பாலே வருந்திச் சுழன்று மயர்கின்றேன்
தென்பால் நோக்கி இன்படம் செய்யும் இறைவா சிறுவனுக்கா
முன்பால் அமுதக் கடல்அளித்த முதல்வா என்னை முன்னுதியே. (உஉ)

திருச்சிற்றம்பலம்

# 83. கலி விண்ணப்பம்[220]

பொது

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

சேறியாத நெஞ்சக வஞ்சக னேன்இச் சிறுதலத்தே
அறியா தறிந்தவன் போற்சில செய்திடல் ஐயநின்தாள்
குறியா தரித்தல தாணைமற் றில்லைஎங் கொற்றவனே
முறியா தருள்செய்தி யோதெரி யேன்எந்தை முன்னியதே.[221] ( க )

---

220. இப் பதிகம், அடிகளார் எழுத்திலுள்ள மற்றும் ஓர் சுவடியில் காண்கிறது. இதன் ஏட்டெண்கள் க, உ, ங. இவை "உ" என்ப திட்டுத் தொடங்கப்பட்டிருக்கின்றன.

221. இப் பதிகப் பாக்களில், பெருமான் அவர்கள், தம் நாடக வாழ்வைப் பொருட்படுத்தாது தம்மைச் சிறுபோது ஆண்ட இறைவன், இஞ் ஞான்றும் ஆளக்கடவன் என்றும், தம் பிழைகளை நற்றாயும் பொருள் ஆதலின், அருட் கடலாகிய இறைவனே பொறுத்தற் குரியன் என்றும், தாம் இயற்றும் தீமை யாவும் தம்மைப் பொறுத்தன ஆகாது தமது நெஞ்சின் உரிமைச் சொத்து என்றும், பலப் பலவாறு இரங்கி இறைவனிடம் முறையிடுதல் காண்க.

தீதொன் றுமேகண் டறிந்ததல் லால்பலன் சேரநலம்
யாதொன் றும்நான்கண் டறியேன் அறிந்தவன் என்னஇங்கே
போதொன் றுபோக்குகின் றேன்பிழை யாவும் பொறுத்தருள்வாய்
மாதொன் றுபாகத் துணை அன்றி நற்றுணை மற்றிலையே.[222] ( உ )

எல்லாம் தெரிந்த இறைவநின் தண்ணருள் எய்துகிலாப்
பொல்லாத பாவிப் புலையேன் பிழையைப் பொறுத்தருள்வாய்
கல்லா மனக்கடை யாலே கடைவைத் துக் கண்டதுநின்
பல்லால் அணுத்துணை யும்அறி யேன்இன்பம் ஆவதுவே. ( ங )

மண்ணுடை யாரிடை வாளா மனஞ்செல வைத்ததலால்
எண்ணுடை யாரிடை எய்திநின் தாண்மலர் ஏத்துகிலேன்
புண்ணுடை யாரிற் புலம்புகின் றேனைப் பொறுத்தருள்முக்
கண்ணுடை யாய்கழற் காலுடை யாய்மணி கண்டத்தனே. ( ச )

தாழாத துன்பச் சமுத்திரத் தேஇத் தனிஅடியேன்
வீழாத வண்ணம் கருணைசெய் வாய்என்னை வேண்டிஅந்நாள்
ஊழாம் வினைதவிர்த் தாண்டனை யேஎன் உடையவனே
வாழா வகைஎனை இந்நாள் விடுத்தல் வழக்கலவே. ( ரு )

ஊன்செய்த வெம்புலைக் கூட்டின் பொருட்டிங் குனைமறந்து
நான்செய்த தீமையை நானே நினைக்க நடுங்குகின்றேன்
ஏன்செய் தனைஎனக் கேளாது மேலும் இரங்குகின்றாய்
வான்செய்த நாதநின் தண்ணருள் வண்ணம்என் வாழ்த்துவனே. ( சா )

ஆயாது நான்செயும் குற்றங் களைக்கண் டறியில்பெற்ற
தாயாயி னும்பொறுப் பாளல ஆங்கவை சற்றலவே
ஓயாது செய்யுந் தொறும்பொறுத் தாளும் உனைஎளியேன்
வாயால் உரைக்கவும் மாட்டேன்அந் தோஎன்ன வன்மைஇதே. ( எ )

---

222. இப் பா முதலியவற்றோடு, பின் வரும் தாயுமானப் பெருமானாரின் முறையீடு போல்வன கண்டு தெளிக :

"கரையில் இன்பக்க டலமு தேஇது
வரையில் நான்உனை வந்துக லந்திலேன்
உரையி லாஇன்பம் உள்ளவர் போலஇத்
தரையி லேநடித் தேன்என்ன தன்மையே,"

ஒன்றுந் தெரிந்திட மாட்டாப் பருவத் துணர்வுதந்தாய்
இன்றுந் தருதற் கிறைவா நின்உள்ளம் இயைதிகொலோ
கன்றுங் கருத்தொடு மாழ்குகின் றேன்உன் கழல்அடிக்கே
துன்றுங் கருத்தறி யேன்சிறி யேன்என் துணிவதுவே. ( அ )

ஆவா எனஎனை ஆட்கொள வேண்டும் அடிமைகொண்ட
தேவாஎன் குற்றம் திருவுளத் தெண்ணில்என் செய்திடுவேன்
வாவா எனஅழைப் பார்பிறர் இல்லை மறந்தும் என்றன்
நாவால் உரைக்கவும் மாட்டேன் சிறுதெய்வ நாமங்களே. ( கூ )

பள்ளத்தி லேசெலும் நீர்போல்என் உள்ளம் பரப்பதலால்
எள்ளத்தி லேசிறி தாயினும் நான்செல்வ தில்லைஎந்தாய்
கள்ளத்தி லேசொல்லு கின்றேன் அலநின் கழலிணைஎன்
உள்ளத்தி லேநின்ற ஆங்கவை காண்க உடையவனே. ( ௧௦ )

திருச்சிற்றம்பலம்

---

# 84. கருணை விண்ணப்பம்[223]

---

**பொது**

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நல்லார்க் கெல்லாம் நல்லவன்நீ ஒருவன் யாண்டும் நாயடியேன்
பொல்லார்க் கெல்லாம் பொல்லவன்நான் ஒருவன் இந்தப் புணர்ப்பதனால்
எல்லாம் உடையாய் நினக்கெதிரொன் றெண்ணேல் உறவென் றெண்ணுகஈ
தல்லால் வழக்கென் இருமைக்கும் பொதுமை அன்றோ அருளிடமே.[224] ( க )

223. இப் பதிக ஏடுகளின் எண்கள் க, உ, ந. இவற்றின் முதற்கண் முறையே, "உ. நமசிவய." என்றும் "உ" என்றும் "உ" என்றும் அடிகளார் எழுதியிருக்கிறார்கள்.

224. இப் பதிகப் பாக்களில், நம் அடிகளார், இறைவனைத் தவிர்த்து வேறு பற்றுக்கோடில்லாத பழைய அடியவரான தம்மை, மாயையில் செலுத்தித் துயரத்திற்கு ஆளாக்கி, இறைவன் முன்னின்று ஆளாது போதல் முறையன்று—என்பன போன்று பலப்பல இயம்பி, முறையிட்டுக் கொள்ளுதல் காண்க.

இடமே பொருளே ஏவலே என்றென் றெண்ணி இடர்ப்படுமோர்
மடமே உடையேன் தனக்கருள்நீ வழங்கல் அழகோ ஆநந்த
நடமே உடையோய் நினைஅன்றி வேற்றுத் தெய்வம் நயவேற்குத்
திடமே அருள்தான் வழங்காது தீர்த்தல் அழகோ தெரிப்பாயே.[225] (௨)

தெரித்தால் அன்றிச் சிறிதேனும் தெரிவொன் றில்லாச் சிறியேனைப்
பிரித்தாய் கூடும் வகைஅறியும் பெற்றி என்னே பிறைமுடிமேல்
தரித்தாய் அடியேன் பிழைபொறுக்கத் தகுங்காண் துன்பம் தமியேனை
அரித்தால் கண்டிங் கிரங்காமை அந்தோ அருளுக் கழகேயோ. (௩)

அருள்ஓர் சிறிதும் உதவுகிலாய் அதனைப் பெறுதற் கடியேன்பால்
தெருள்ஓர் சிறிதும் இலையேஎன் செய்கேன் எங்கள் சிவனேயோ
மருளோர் எனினும் தமைநோக்கி வந்தார்க் களித்தல் வழக்கன்றோ
பொருளோர் இடத்தே மிடிகொண்டோர் புகுதல் இன்று புதிதன்றே. (௪)

புதியேன் அல்லேன் நின்அடிமைப் பொருத்தம் இல்லேன் அல்லேன்யான்
மதியேன் வேற்றுத் தேவர்தமை வந்தங் கவர்தாம் எதிர்ப்படினும்
துதியேன் நின்னை விடுவேனோ தொண்ட னேனை விடல்அழகோ
நதியோர் சடையோய் இன்னருள்நீ நல்கல் வேண்டும் நாயேற்கே. (௫)

நாயேன் துன்பக் கடல்வீழ்ந்து நலிதல் அழகோ நல்லோர்க்கிங்
கீயேன் ஒன்றும் இல்லேன்நான் என்செய் கேனோ என்னுடைய
தாயே அனையாய் சிறிதென்மேல் தயவு புரிந்தால் ஆகாதோ
சேயேன் தன்னை விடுப்பாயோ விடுத்தால் உலகஞ் சிரியாதோ. (௬)

சிரிப்பார் நின்பேர் அருள்பெற்றோர் சிவனே சிவனே சிவனேயோ
விரிப்பார் பழிச்சொல் அன்றிஎனை விட்டால் வெள்ளை விடையோனே
தரிப்பாய் இவனை அருளிடத்தே என்று நின்று தகும்வண்ணம்
தெரிப்பார் நினக்கும் எவர்கண்டாய் தேவர் தேடற் கரியானே. (௭)

225. இப் பாக்கள் முதலியவற்றோடு, கீழ்க்கண்ட தேவாரத் திருமறையும் பட்டினத் தடிகளாரின் பொய்யா மொழியும் போல்வன கண்டுணர்க :

"கண்டகங்காள் முண்டகங்காள் கைதைகாள் நெய்தல்காள்
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாம் தடம்மூழ்கி மற்றவனென் தளிர்வண்ணம்
கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளா தொழிவானே."

"ஆளனப் புதிதின்வந் தடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி வழிவழி வந்த மரபினம்."

அரிய பெருமான் எளியோமை ஆளும் பெருமான் யாவர்கட்கும்
பெரிய பெருமான் சிவபெருமான் பித்தப் பெருமான் என்றுன்னை
உரிய பெருமா தவர்பழிச்சல் உண்மை எனில்என் உடையானே
கரிய பெருமால் உடையேற்கும் அருளல் உன்றன் கடன்அன்றே. (அ)

அன்றும் சிறியேன் அறிவறியேன் அதுநீ அறிந்தும் அருள்செய்தாய்
இன்றும் சிறியேன் அறிவறியேன் இதுநீ அறிந்தும் அருளாயேல்
என்றும் ஒருதன் மையன்எங்கள் இறைவன் எனமா மறைகள்எலாம்
தொன்று மொழிந்த தூமொழிதான் சூது மொழியோ சொல்லாயே. (கூ)

சொல்லற் கரிய பெரியபரஞ் சுடரே முக்கட் சுடர்க்கொழுந்தே
மல்லற் கருமால் அயன்முதலோர் வழுத்தும் பெருஞ்சீர் மணிக்குன்றே
புல்லற் கரிதாம் எளியேன்றன் பிழைகள் யாவும் பொறுத்திந்த
அல்லற் கடல்நின் றெனைஎடுத்தே அருள்வாய் உன்றன் அருள்நலமே. (க0)

திருச்சிற்றம்பலம்

---

# 85. அடிமைப் பதிகம்[226]

---

**கோயில்**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆள்வினையால் பயன்உறுவார் அசதி ஆட
அந்தோஇப் புலைநாயேன் அன்பால் நின்பால்
வேள்விசெயும் பெருந்தவர்க்கே வேள்வி செய்ய
வேண்டும்இதற் கெம்பெருமான் கருணை செய்யும்
நாள்விளைவில் சின்னாளே இதுதான் உண்மை
நம்புமென நவின்றனையே நம்பி நின்றேன்
கேள்வியிலாத் துரைத்தனமோ அலது நாயேன்
கிளக்குமுறை கிளக்கிலனோ கேட்டி லாயே.[227] (க)

---

226. இப் பதிகம், அடிகளார் எழுத்தில் உள்ள மற்றும் ஓர் சுவடியில் காண்கிறது. ஏட்டெண்கள் க, உ, ௩, ச, ரு. முதலேட்டின் முதலில் "உ. சிவ கணபதி துணை. சிவகுருவே நம." என்றும், மற்றவற்றில் எல்லாம் "உ. சிவாய நம." என்றும் அவர்கள் எழுதி அனுபவித் திருக்கிறார்கள்.

227. இப் பதிகப் பாக்களில், நம் வள்ளற் பெருமானார், சின்னஞ் சிறு வயதில் தம்மை ஆண்ட இறைவன், இப்போது தம்மைக் கைவிட்டால்

கேட்டிலாய் அடியேன்செய் முறையை அந்தோ
கேடிலாக் குணத்தவர்பால் கிட்டு கின்றாய்
ஏட்டில்ஆ யிரங்கோடி எனினும் சற்றும்
எழுதமுடி யாக்குறைகொண் டிளைக்கின் றேன்நான்
சேட்டியா விடினும்எனைச் சேட்டித் தீர்க்கும்
சிறுமனத்தால் செய்பிழையைத் தேர்தி ஆயில்
நாட்டில்ஆர் காக்கவல்லார் என்னை எந்தாய்
நாள்கழியா வண்ணம்இனி நல்கல் வேண்டும்.[228] (௨)

வேண்டாமை வேண்டுகின்றோர் நிற்க மற்றை
வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்கும்
தூண்டாத மணிவிளக்கே பொதுவி லாடும்
சுடர்க்கொழுந்தே என்னுயிர்க்குத் துணையே என்னை
ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட
அருட்கடலே என்உள்ளத் தமர்ந்த தேவே
ஈண்டாவ எனச்சிறிய அடியேன் உள்ளத்
தெண்ணம்அறிந் தருளாயேல் என்செய் கேனே. (௩)

என்னைஅறி யாப்பருவத் தாண்டு கொண்ட
என்குருவே எனக்குரிய இன்ப மேஎன்
தன்னைஇன்று விடத்துணிந்தாய் போலும் அந்தோ
தகுமோநின் பெருங்கருணைத் தகவுக் கெந்தாய்
உன்னைஅலா தொருவர்தம்பால் செல்லேன் என்னை
உடையானே என்னுள்ளத் துள்ளே நின்று
முன்னைவினைப் பயன்ஊட்ட நினைப்பிக் கின்றாய்
முடிப்பிக்கத் துணிந்திலையேல் மொழிவ தென்னே. (௪)

---

227. (தொடர்ச்சி)
உலகம் சிரிக்கும், இறைவனுக்குப் பழி வரும், தாமும் உயிர் நீப்பர்— என்பன போன்று இயம்பி, மனங் கரைந்துருகி, இறைவனிடம் மன்றாடுதல் கண்டுணர்க.

228. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் பட்டினத் தடிகளாரின் மெய்ம் மொழி போல்வன காண்க:
"இனிநனி இரப்பதொன் றுடையம் மனமருண்டு
புன்மையின் நினைத்துப் புலன்வழிப் படரினும்
நின்வயின் நினைந்தேம் ஆகுதல் நின்வயின்
நினைக்குமா நினைக்கப் பெறுதல் அனைத்தொன்றும்
நீயே அருளல் வேண்டும்."

என்நாணை அறிந்தும்என்னை அந்தோ அந்தோ
இவ்வகைசெய் திடத்துணிந்தாய் என்னே எந்தாய்
நின்ஆணை நின்னையலா தொன்றும் வேண்டேன்
நீஇதனை அறிந்திலையோ நினைப்பிக் கின்ற
மன்னாஎன் ஆருயிர்க்கு வாழ்வே என்கண்
மணியேஎன் குருவேஎன் மருந்தே இன்னும்
உன்னால்இங் குயிர்தரித்து வாழ்கின் றேன்என்
உள்ளம்அறிந் துதவுதியோ உணர்கி லேனே. (௫)

உள்ளமறிந் துதவுவன்நம் உடையான் எல்லாம்
உடையான்மற் றொருகுறைஇங் குண்டோ என்னக்
கள்ளமனத் தேன்அந்தோ களித்தி ருந்தேன்
கைவிடுவார் போல்இருந்தாய் கருணைக்குன்றே
எள்ளல்உறப் படுவேன்இங் கேது செய்வேன்
எங்கெழுகேன் யார்க்குரைப்பேன் இன்னும்உன்றன்
வள்ளல்அருள் திறநோக்கி நிற்கின் றேன்என்
மனத்துயர்போம் வகைஅருள மதித்தி டாயே. (௬)

வகைஅறியேன் சிறியேன்சன் மார்க்க மேவும்
மாண்புடைய பெருந்தவத்தோர் மகிழ வாழும்
தகைஅறியேன் நலம்ஒன்றும் அறியேன் பொய்ம்மை
தான்அறிவேன் நல்லோரைச் சலஞ்செய் கின்ற
மிகைஅறிவேன் தீங்கென்ப எல்லாம் இங்கே
மிகஅறிவேன் எனினும்எனை விடுதி ஆயில்
பகைஅறிவேன் நின்மீதில் பழிவைத் திந்தப்
பாவிஉயிர் விடத்துணிவேன் பகர்ந்திட் டேனே. (௭)

இட்டவகை வாழ்கின்றேன் எந்தாய் நானே
எண்ணுகிலேன் எண்ணுவித்தால் என்செய் வேன்நின்
மட்டலர்சே வடிஆணை நினைத்த வண்ணம்
வாழ்விக்க வேண்டும்இந்த வண்ணம் அல்லால்
திட்டன்என விடத்துணிதி யாயில் அந்தோ
சூறையுறு துரும்பெனவும் சுழன்று வானில்
விட்டசிலை எனப்பவத்தில் விழுவேன் அன்றி
வேறெதுசெய் வேன்இந்த விழல னேனே. (௮)

விழற்கிறைத்து மெலிகின்ற வீண னேன்இவ்
வியன்உலகில் விளைத்திட்ட பிழைகள் எல்லாம்
அழற்கிறைத்த பஞ்செனவே ஆக்கி நீயே
ஆட்கொண்டால் தடுப்பவரிங் காரே ஐயா
கழற்கடிமை எனஉலகம் அறிய ஒன்றும்
கருதறியாச் சிறுபருவத் தென்னை ஆண்டு
நிழற்கருணை அளித்தாயே இந்நாள் நீகை
நெகிழவிட்டால் என்செய்வேன் நிலையி லேனே. (௯)

நிலைஅறியேன் நிலைஅறிந்து பெற்ற நல்லோர்
நெறிஅறியேன் எனினும்உன் றன் நேச மன்றி
இலைஅறியேன் மற்றவரைக் கனவி லேனும்
எட்டுணைஓர் துணைஎனவும் எண்ணு றேன்நல்
கலைஅறியேன் கருத்திலிருந் தறிவித் தாய்நான்
கண்டறிந்தேன் எனினும்அவை காட்ட வேண்டும்
அலைஅறியா அருட்கடலே அமுதே தேனே
அம்பலத்தென் குருவேநான் அடிமை ஆளே. (௧0)

திருச்சிற்றம்பலம்

---

# 86. உள்ளப் பஞ்சகம்[229]

---

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

நீரார் சடையது நீண்மால் விடையது நேர்கொள்கொன்றைத்
தாரார் முடியது சீரார் அடியது தாழ்வகற்றும்
பேரா யிரத்தது பேரா வரத்தது பேருலகம்
ஓரா வளத்ததொன் றுண்டேமுக் கண்ணுடைன் உள்ளகத்தே.[230] ( ௧ )

---

229. இப் பதிகம், நம் அடிகள்ளார் கைஎழுத்தில் உள்ள ஓர் சுவடியில் காணப்படுகிறது. இதன் இரண்டு ஏடுகளின் முதற்கண், "உ. சிவ மயம்." என்றும், இறுதியில் "சிவமயம். சிவமயம்." என்றும், இதனை அடுத்து "நமசிவாய. சிவசண்முக. சிவாய நம." என்றும் தொடர்ந்து எண்முறை மேலுமேலும் எழுதியும் சிந்தித்து, அகக்கண் கொண்டு அடிகளார் அநுபவித் திருக்கிறார்கள்.

230. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானாரின் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளி இருக்கும் திருக் கோலத்தையும், தன்மையையும், புகழை யும் அவர்கள் உரைத்து உள நிறைந்து மகிழ்வது காண்க.

மட்டுப் படாதது மாமறை யாலும் மலப்பகையால்
கட்டுப் படாதது மாலா தியர்தம் கருத்தினுக்கும்
தட்டுப் படாதது பார்முதல் பூதத் தடைகளினால்
ஒட்டுப் படாததொன் றுண்டேமுக் கண்ணுடைன் உள்ளகத்தே.[231] ( உ )

பேதப் படாதது பற்பல கற்பங்கள் பேர்ந்திடினும்
சேதப் படாதது நன்றிது தீதெனச் செய்கைகளால்
ஏதப் படாததுள் எட்டப் படாததிங் கியாவர்கட்கும்
ஓதப் படாததொன் றுண்டேமுக் கண்ணுடைன் உள்ளகத்தே. ( ௩ )

தண்ணார் அளியது விண்ணோர் ஒளியது சாற்றுமறைப்
பண்ணார் முடிவது பெண்ணார் வடிவது பண்புயர்தீக்
கண்ணார் நுதலது கண்ணார் மணியது கண்டுகொள்ள
ஒண்ணா நிலையதொன் றுண்டேமுக் கண்ணுடைன் உள்ளகத்தே. ( ௪ )

பிறவா நெறியது பேசா நிலையது பேசில்என்றும்
இறவா உருவதுள் ஏற்றால் வருவ திருள் அகன்றோர்
மறவா துடையது மாதோர் புடையது வாழ்த்துகின்றோர்
உறவாய் இருப்பதொன் றுண்டேமுக் கண்ணுடைன் உள்ளகத்தே. ( ௫ )

திருச்சிற்றம்பலம்

# 87. சரணப் பதிகம்[232]

### நேரிசை

கலிநிலைத்துறை

மதிவார் சடைமா மணியே அருள்வள் ளலேஎன்
நிதியே திருஅம் பலத்தா டல்செய்நித் தனேநின்
துதியேன் எனினும் உனைஅன் றித்துணையி லேன்என்
பதியே எனதெண் ணம்ப லிக்கும்படிக் கருளே.[233] ( க )

---

231. இப் பா முதலியவற்றோடு, பின்கண்ட தேவாரத் தெய்வ மறைபோல் வன கண்டு உளங்களிக்க :
''நிலைப்பாடே நான்கண்ட தேடீ கேளாய்
நெருநலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து
கலைப்பாடும் கண்மலரும் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவேன் எங்கும் காணேன்

படிமேல் அடியேன் உனைஅன் றிஓர்பற் றிலேன்என்
முடிமேல் அடிவைத் தருள்செய் திடமுன்னு கண்டாய்
கொடிமேல் விடைநாட் டியஎண்கு ணக்குன் றமே
பொடிமேல் விளங்குந் திருமே னிஎம்புண் ணியனே.[234] (உ)

புண்ணும் மனம்சஞ் சலித்துள் ளம்புலர்ந்து நின்றேன்
அண்ணா எனைஆட் கொளவேண் டும்அகற்று வாயேல்
கண்ணார் களைகண் பிறிதொன் றிலைகள்ள னேனை
எண்ணா வினைஎன் செயுமோ இதற்கென்செய் வேனே. (ங)

செய்வேன் அவம்அன் றித்தவம் ஒன்றும்செய் தறியேன்
நைவேன் பிழையா வும்பொறுத் தருள்நல்கு வாயேல்
உய்வேன் அலதுய் வகைஇன் றுமன்றோங்கு கின்றாய்
வைவேன் துதிப்பேன் உனைஎன் றும்மறந்தி லேனே. (ச)

---

231. (தொடர்ச்சி)

சலப்பாடே இனிஒருநாள் காண்பே னாகில்
தன்ஆகத் தென்ஆகம் ஒடுங்கும் வண்ணம்
உலைப்பாடே படத்தழுவிப் போகல் ஒட்டேன்
ஒற்றியூர் உறைந்திங்கே திரிவானையே.''

232. இப் பதிகத்திற்கு, அடிகளார் கைஎழுத்துச் சுவடியாவது அன்பர்கள் எழுதிக்கொண்ட வேறு படி ஓலையாவது இதுகாறும் கிடைக்கவில்லை. அடிகளாரின் முதல் மாணாக்கரான தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களின் 1867-ஆம் ஆண்டின் முதற் பதிப்பின்படி, இது இங்கு அச்சிட்டிருக்கிறது.

233. இப் பதிகப் பாக்களில், நம் வள்ளற் பெருமானார், தாம் வைதாலும் வாழ்த்தினாலும் இறைவனைத் தவிர வேறுபோக்கிடம் இல்லை என்றும், தன்னை மறந்தறியா அன்பர்களுக்கு அருளியதுபோல், தமக்கும் மரண நவையைத் தீர்த்தருளல் வேண்டும் என்றும், உலகர் நகைப்பர் என்று தம்மை ஆட்கொள்ளா விடில், மெய்யன்பர் அஃது அவன் அருட் பூரணத்துக்குக் குறை என்பர் என்றும்,—பலப்பல சொல்லி இறைவனிடம் வாய்விட்டலறிக் குறை இரத்தல் காண்க.

234. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருஞான சம்பந்தப் பெருமானாரின் தெய்வப் பெருமறை போல்வன கண்டு உய்த்துணர்க:

''நின்று மேய்ந்து நினைந்து மாகரி
நீரொ டும்மலர் வேண்டி வான்மழை
குன்றின் நேர்ந்து குத்திப் பணிசெய்யும் கோட்டாற்றுள்
என்றும் மன்னிய எம்பி ரான்கழல்
ஏத்தி வான்அர சாள வல்லவர்
பொன்று மாறறி யார்புகழ் ஆர்ந்த புண்ணியரே.''

மறவா துனைவாழ்த் துமெய்அன் பரைமாநி லத்தே
இறவா வகைஆட் கொண்டரு ளியஈச னேமெய்
உறவா கியநின் பதம்அன் றிஒன் றோர்கி லேன்நான்
பிறவா நெறிதந் தருள்என் பதென் பேசி டாயே. (௫)

என்னே இனும்நின் அருள்எய் திலன்ஏழை யேனை
முன்னே வலிந்தாட் கொண்டதின் றுமுனிந்த தேயோ
பொன்னேர் அணிஅம் பலத்தா டியபுண்ணி யாஎன்
அன்னே அரசே அமுதே அருள்ஆண்ட வனே. (௬)

ஆண்டாய் எனைஎம் பிறப்பும் உனைஅன் றிஒன் றும்
தீண்டா தெனதுள் ளம்என்றால் என்சிறுமை தீர்க்க
வேண்டா தயலார் எனக்காண் பதென்மெய்ய னேபொன்
ஆண்டான் திருஎய் தஞ்சைக் களம்காட்டி னேயே. (௭)

நாட்டார் நகைசெய் வர்என்றோ அருள்நல்கி லாய்நீ
வீட்டார் நினைஎன் னினைப்பார் எனைமேவி லாயேல்
தாட்டா மரைஅன் றித்துணை ஒன்றும்சார்ந் திலேன்என்
மாட்டா மைஅறிந் தருள்வாய் மணிமன்று ளானே. (௮)

மன்றா டியமர் மணியே தனிவான வாஓர்
மின்றாழ் சடைவே தியனே நினைவேண்டு கின்றேன்
பொன்றா தமெய்அன் பருக்கன் புளம்பூண்டு நின்று
நன்றாய் இரவும் பகலும் உனைநாடும் ஆறே. (௯)

மாறா மனமா யையினால் மதிமாழ்கி மாழ்கி
ஏறா மல்இறங் குகின்றேன் இதற்கென் செய்வேன்
தேறா வுளத்தேன் றனைஏ றிடச்செய்தி கண்டாய்
பேறா மணிஅம் பலமே வியபெற்றி யானே. (௧௦)

ஆனே றிவந்தன் பரைஆட் கொளும்ஐய னேஎம்
மானே மணிமன் றில்நடம் புரிவள்ள லேசெந்
தேனே அமுதே முதலா கியதெய்வ மேநீ
தானே எனைஆண் டருள்வாய் நின்சரண் சரணே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

# 88. நெஞ்சொடு நெகிழ்தல்[235]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

சீர்தரு வார்புகழ்ப் பேர்தரு வார்அருள் தேன்தருவார்
ஊர்தரு வார்மதி யுந்தரு வார்கதி யுந்தருவார்
ஏர்தரு வார்தரு வார்ஒற்றி யூர்எம் இறைவர்அன்றி
யார்தரு வார்நெஞ்ச மேஇங்கும் அங்கும் இயம்புகவே.[236] (க)

வாடக்கற் றாய்இலை தென்னைநெஞ் சேயிசை வாய்ந்தசிந்து
பாடக்கற் றாய்இலை பொய்வேடம் கட்டிப் படிமிசைக்கூத்
தாடக்கற் றாய்இலை அங்கோ பொருள்உனக் கார்தருவார்
நீடக்கற் றார்புகழ் ஒற்றிஎம் மானை நினைஇனியே.[237] (உ)

சோடில்லை மேல்வெள்ளைச் சொக்காய் இலைநல்ல சோமன்இல்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப் பருமன்இல்லை
வீடில்லை யாதொரு வீறுப்பும் இல்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்ச மேஎந்த ஆற்றினில் நண்ணினையே. (ந)

---

235. இப் பதிகத்தின் முதல் ஏழு பாக்கள் உள்ள ஏட்டெண்கள் ௱க, ௱உ. ௱க-ஆம் ஏட்டில் "நெஞ்சொடு நெகிழ்தல்" என்று இப் பதிகப் பெயர் காணப்படுகிறது. அடிகளாரின் கை எழுத்திலுள்ள மற்றோர் சுவடியில் 8, 13-ஆம் பாக்கள் இருக்கின்றன. இவற்றின் முதற்கண், முறையே, "உ" என்றும், "உ. சிவமயம். சிவமயம், சிவமயம்." என்றும் அடிகளார் வரைந்து வரைந்து அனுபவித்திருக்கிறார்கள். 9, 11, 12-ஆம் பாக்கள் அன்பர் தருமலிங்கம் பிள்ளை அவர்கள் எடுத்து எழுதியிருக்கும் சுவடியில் காணப்படுகின்றன. இவை ஒரு தனிப் பாடற் றொகுதியாக தொ. வே. அவர்களால் உருப்படுத்தப் பட்டன போலும். இதைச் சார்ந்து, இப் பதிப்பின் 5-ஆம் புத்தகம் திருமுகப் பகுதி 29-ஆம் பக்கமும், 6-ஆம் பகுதி தனிப்பாசுரப் பகுதி 79-ஆம் பக்கமும் பார்க்க.

236. இப் பாக்களில், நம் வள்ளற் பெருமானார், உண்மையற்ற உலகியலை வெறுத்துத் தள்ளி, இறைஇயலில் அகத்திலும் புறத்திலும் அன்பு செலுத்தி நிலைபெறும்படி, தம் நெஞ்சகத்துக்கு அறிவுறுத்தல் காண்க.

237. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் தாயுமானப் பெருந்தகையாரின் நெஞ்சறிவுறுத்தல் கண்டு உணர்ந் துய்க:

"எல்லாம் சிவன்செயல் என்றறிந் தால்அவன் இன்அருளே
அல்லால் புகல்இடம் வேறும்உண் டோஅது வேகிலையா
நில்லாய்உன் றைல்தமி யேற்குக் கதியுண்டிங் கீள்நிலத்தில
பொல்லா மயக்கத்தில் ஆழ்ந்தாவ தென்ன புகல்நெஞ்சமே."

நேரா அழுக்குத் துணியாகில் உன்றனை நேரில்கண்டும்
பாரா தவர்என நிற்பார் உடுத்தது பட்டெனிலோ
வாரா திருப்பதென் வாரும்என் பார்இந்த வஞ்சகர்பால்
சேராது நன்னெஞ்ச மேஒற்றி யூரனைச் சேர்விரைந்தே. (௪)

பொய்விரிப் பார்க்குப் பொருள்விரிப் பார்நற் பொருட்பயனும்
மெய்விரிப் பார்க்கிரு கைவிரிப் பார்பெட்டி மேவுபணப்
பைவிரிப் பார்அல்குற் பைவிரிப் பார்க்கவர் பாற்பரவி
மைவிரிப் பாய்மன மேஎன்கொ லோநின் மதியின்மையே. (௫)

வாழைக் கனிஉண மாட்டாது வானின் வளர்ந்துயர்ந்த
தாழைக் கனிஉணத் தாவுகின் றோரில் சயிலம்பெற்ற
மாழைக் கனிதிகழ் வாமத்தெம் மான்தொண்டர் மாட்டகன்றே
ஏழைக் கனிகர் உளத்தினர் பாற்சென்ற தென்னைநெஞ்சே. (௬)

காயார் சரிகைக் கலிங்கம்உண் டேல்இக் கலிங்கங்கண்டால்
நீயார்நின் பேர்எது நின்ஊர் எதுநின் நிலையெதுநின்
தாயார்நின் தந்தை எவன்குலம் ஏதென்பர் சாற்றும்அவ்வல்
வாயார் இடஞ்செலல் நெஞ்சே விடைதர வல்லைஅன்றே. (௭)

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

துட்ட வஞ்சக நெஞ்சக மேஒன்று
சொல்லக் கேள்கடல் சூழ்உல கத்திலே
இட்டம் என்கொல் இறையள வேணும்ஓர்
இன்பம் இல்லை இடைக்கிடை இன்னலால்
நட்ட மிக்குறல் கண்டுகண் டேங்கினை
நாணு கின்றிலை நாய்க்குங் கடையைநீ
பட்ட வன்மைகள் எண்ணில் எனக்குடல்
பதைக்கும் உள்ளம் பகீல்என ஏங்குமே. (௮)

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பெரியபொருள் எவைக்கும்முதற் பெரும்பொருளாம் அரும்பொருளைப் பேசற் கொண்ணாத்
துரியநிலை அநுபவத்தைச் சுகமயமாய் எங்குமுள்ள தொன்மை தன்னை
அரியபரம் பரமான சிதம்பரத்தே நடம்புரியும் அமுதை அந்தோ
உரியபர கதிஅடைதற் குன்னினையேன் மனமேநீ உய்கு வாயே. (௯)

சொன்னிலைக்கும் பொருணிலைக்கும் தூரியதாய் ஆனந்தச் சுடராய் அன்பர்
தன்னிலைக்கும் சென்னிலைக்கும் அண்மையதாய் அருள்பழுக்கும் தருவாய் என்றும்
முன்னிலைக்கும் பின்னிலைக்கும் காண்பதரிதாய் மூவாத முதலாய்ச் சுத்த
சன்னிலைக்கும் நிலையாய பசுபதியை மனனேநீ நவின்றி டாயே. (கo)

மண்முகத்தில் பலவிடய வாதனையால் மனனேநீ வருந்தி அந்தோ
புண்முகத்தில் சுவைவிரும்பும் எறும்பெனவா ளாநாளைப் போக்கு கின்றாய்
சண்முகத்தெம் பெருமானை ஐங்கரனை நடராஜத் தம்பி ரானை
உண்முகத்தில் கருதிஅநு பவமயமாய் இருக்கிலைநின் உணர்ச்சி என்னே. (கக)

மால்எடுத்துக் கொண்டுகரு மால்ஆகித் திரிந்தும்உளம் மாலாய்ப் பின்னும்
வால்எடுத்துக் கொண்டுநடந் தணிவிடையாய்ச் சுமக்கின்றான் மனனே நீஅக்
கால்எடுத்துக் கொண்டுசுமந் திடவிரும்பு கிலைஅந்தோ கருதும் வேதம்
நால்எடுத்துக் கொண்டுமுடி சுமப்பதையும் அறிகிலைநின் நலந்தான் என்னே.

ஆசிரியத் துறை

உலகம் ஏத்திநின் றோங்க ஓங்கிய ஒளிகொண் மன்றிடை அளிகொண் மாநடம்
இலகு சேவடிக்கே அன்பு கூர்ந்திலை ஏழை நெஞ்சே
திலக வாணுத லார்க்கு ழன்றனை தீமை யேபுரிந் தாய்வி ரிந்தனை
கலக மேகனிந்தாய் என்னை காண்நின் கடைக்க ருத்தே. (கங)

திருச்சிற்றம்பலம்

---

# 89. பொதுத் தனித் திருவெண்பா[238]

---

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

வந்திக்கும் மெய்யடியார் மாலற்ற ஓர்மனத்தில்
சந்திக்கும் எங்கள் சயம்புவே—பந்திக்கும்
வன்மலக்கட் டெல்லாம் வலிகெட் டறநினது
நின்மலக்கண் தண்ணருள்தான் நேர்.[239] (க)

238. இந்தத் தலைப்பின் கீழ், தொ. வே. அவர்கள் தொகுத்திருக்கும் இப் பாக்களில் 9, 10, 13-ஆம் பாக்கள் தவிர, மற்றவை நம் அடிகளார் எழுத்திலுள்ள 3 சுவடிகளில் காண்கின்றன. 1, 2-ஆம் பாக்கள் ஒரு

சங்கரா முக்கட் சயம்புவே தாழ்சடைமேல்
பொங்காத் திங்கள் பொலிந்தோனே—வெங்கரா
வாய்நின்று பிள்ளை வரப்பாடும் வன்தொண்டர்க்
காய்நின்று சந்துரைத்த தார்.[240] (உ)

நீலக் களங்கொண்ட நீடொளியே நீர்கங்கை
கோலச் சடைக்கணிந்த கோமளமே—ஞாலத்தில்
அந்தோ சிறியேன் அருளின்றி வாடுவது
சந்தோட மோநின் றனக்கு. (ஙு)

நான்சிறியேன் என்னினும்இந் நானிலத்தில் நான்செய்பிழை
தான்சிறிதோ அன் றுலகில் தான்பெரிதே—மான்கரத்தோய்
அங்ஙனமே யாலும்உன் அருட்பெருமைக் கிப்பெருமை
எங்ஙனம்என் றுள்ளம் எழும். (சு)

ஆவித் துணையேஎன் ஆரமுதே நின்வடிவைப்
பாவித்துள் நையேன்இப் பாவியேன்—சேவித்து
வாழ்த்தேன்நின் பொன்னடியில் வந்தென் தலைகுனித்துத்
தாழ்த்தேன்என் செய்தேன் தவம். (ரு)

உன்னைநினைந் திங்கே உலாவுகின்றேன் அன்றிஎந்தாய்
பின்னை நினைப்பொன் றும் பெற்றிலேன்—என்னை
விடாதேநின் பொன்னடியை மேவார்சேர் துன்பம்
கொடாதே எனைஎன்று கொள். (சு)

---

238. (தொடர்ச்சி)
சுவடியிலும், 3, 4, 5, 6, 7, 8-ஆம் பாக்கள் மற்றொரு சுவடியிலும், 11, 12-ஆம் பாக்கள் மூன்றும் சுவடியிலும் இருக்கின்றன. 9, 10-ஆம் பாக்கள் அன்பர் தருமலிங்கம் பிள்ளை அவர்களது படிச் சுவடியில் காண்கின்றன. 13-ஆம் பா, தொ. வே. அவர்களின் 1867-ஆம் ஆண்டின் முதற் பதிப்பில் கண்டபடி இங்குப் பதிப்பித்திருக்கிறது.

239. இப்பாக்களில், நம் பெருமான் அவர்கள், தமக்குத் தம் தாயுடனும் பற்றில்லை என்றும், தமக்கும் தம் நெஞ்சுக்குமேகூட உறவில்லை என்றும்—இன்ன பல இயம்பி, தமக்கு உண்மைப் பெரு நெறி அருளுமாறு, இறைவனிடம் குறையிரத்தல் கண்டு, உய்த்துணர்ந்து நிறைவுறுக.

240. இப் பா முதலியவற்றோடு, அடியிற் காணும் நம் தாயுமானப் பெருமானாரின் கல்லும் கனியும் முறையீட்டினைப் பார்த்து அதன் வயப் பட்டமைக:
"அல்லும் பகலும் அகண்டவடி வேஉனைநான்
புல்லும் படிஎனக்கோர் போதனைதான் இல்லையோ."

என்னரசே நின்னடிக்கீழ் என்னிடரை நீக்கெனநான்
சொன்னதலால் தாயுடனும் சொன்னேனோ—இன்னும்இந்தத்
துன்பச் சுமையைச் சுமக்கமுடி யாதென்றால்
அன்பர்க் கருள்வோய் அருள். (எ)

அன்னேஎன் அப்பாஎன் ஆருயிர்க்கோர் ஆதரவே
என்னேநின் உள்ளம் இரங்கிலையே—பொன்னே
உடையா ரிடைஎன் உளநொந்து வாடிக்
கடையேன் படுந்துயரைக் கண்டு. (அ)

பகுதி தகுதி விகுதிஎனும் பாட்டில்
இகலில் இடையை இரட்டித்—தகவின்
அருச்சித்தால் முன்னும் அதுகடையாம் கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து. (கூ)

தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாந்
தாதாதா என்றுலகில் தான்அலைந்தோம்—போதாதா
நந்தா மணியே நமச்சிவா யப்பொருளே
எந்தாய் எனப்புகழ வே. (க0)

பொய்கண்டாய் காமப் புதுமயக்கிற் போய்உழலக்
கைகண்டாய் என்னபலன் கண்டாயே—மெய்கண்ட
பொன்னே அனையார்பால் போய்வணங்கக் கற்றிலையோ
என்னேநின் தன்மைமன மே. (கக)

இவ்வழியில் செல்லாதே என்னுடையான் தன்னடிசேர்
அவ்வழியில் செல்என் றடிக்கடிக்குச்—செவ்வழியில்
சொன்னாலும் கேட்கிலைநீ துட்டமன மேஉனக்கிங்
கென்னால் உறவே தினி. (கஉ)

கால்வாங் கியஉட் கதவம் கொளும்அகத்தின்
பால்வாங் கியகால் பரம்பரனே—மால்வாங்
கரிதாரம் ஊன்றி யாம்மயல்கொண் டேழைப்
பெரிதார ஓர்மொழியைப் பேசு. (கங)

திருச்சிற்றம்பலம்

# 90. திருக்குறிப்பு நாட்டம்[241]

ஆசிரியத் துறை

திருச்சிற்றம்பலம்

ஆற்றுக் கேபிறைக் கீற்றுக் கேசடை
ஆக்கிச் சேவடி தூக்கி ஆருயிர்ப்
பேற்றுக்கே நடிப்பாய் மணிமன்றில் பெருந்தகையே
சோற்றுக் கேஇதஞ் சொல்லிப் பேதையர்
சூழல் வாய்த்துயர் சூழ்ந்து மேற்றிசைக்
காற்றுக்கே கறங்காய்ச் சுழன்றேனைக் கருதுதியோ.[242] (௧)

ஞாலத் தார்தமைப் போலத் தாம்இங்கு
நண்ணு வார்நின்னை எண்ணு வார்மிகு
சீலத்தார் சிவமே எவையும்எனத் தேர்ந்தனரால்
சாலத் தான்கொடுஞ் சாலத் தாலத்தைத்
தாவி நான்பெரும் பாவி ஆயினன்
ஏலத்தார் குழலா ளிடத்தாய்எனை எண்ணுதியோ.[243] (௨)

அண்ண லேநின்னை எண்ண லேன்என்னை
ஆண்டு கொண்டனை மீண்டும் விண்டனன்
நண்ணலே அறியேன் கடையேன்சிறு நாயனையேன்
பெண்ண லேன்இயல் ஆண லேன்அலிப்
பேய னேன்கொடும் பேதை யேன்பிழை
கண்ணலே புரியா தினும்மீட்கக் கருதுதியோ. (௩)

---

241. இப் பதிகம், நம் அடிகளார் கை எழுத்துச் சுவடி ஒன்றில் உளது. இதன் முதற்கண் "உ" என்றிட்டு, அவர்கள் பரம் பொருளை வழி பட்டிருக்கிறார்கள்.

242. இப் பதிகப் பாக்களில், வள்ளற் பெருமானார், இறைவனை மனத்துட் கொள்ளாத தம்மை இறைவன் ஆட்கொண்டும், தாம் இறைவனைப் பிரிந்து நிற்பதற்காக வருந்தி, அது கருதித் தம்மை இறைவன் தள்ளுதல் கூடாது என்று மன்றாடுதல் காண்க.

243. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் நம் மணிவாசகப் பெருமானாரின் அமுத வெள்ளத்தில் மூழ்கிக் களிக்க :
"வழங்குகின் றாய்க்குன் அருள்ஆர் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே."

வல்லி ஆனந்த வல்லி சேர்மணா
　　வாள னேஅரு ளாள னேமலை
வில்லியாய் நகைத்தே புரம்வீழ்த்த விடையவனே
புல்லி யான்புலைப் போகம் வேட்டுநின்
　　பொன்ன டித்துணைப் போகம் போக்கினேன்
இல்லிஆர் கடம்போ லிருந்தேன்எனை எண்ணுதியோ. (௪)

திருச்சிற்றம்பலம்

# 91. தனித் திருப் புலம்பல்[244]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திங்கள் விளங்கும் சடைத்தருவைத் தீம்பாற் சுவையைச் செந்தேனைச்
செங்கை மருவும் செழுங்கனியைச் சீரார் முக்கட் செங்கரும்பை
மங்கை மலையாள் மணந்தபெரு வாழ்வைப் பவள மலைதன்னை
எங்கள் பெருமான் தனைஅந்தோ என்னே எண்ணா திருந்தேனே.[245] (௧)

அன்பர்இதய மலர்க்கோயில் அமர்ந்த பரமா னந்தத்தைத்
துன்பம் அகலச் சுகமளிக்கும் தூய துணையைச் சுயஞ்சுடரை
வன்ப ரிடத்தின் மருவாத மணியை மணியார் மிடற்றானை
இன்ப நிறைவை இறையோனை என்னே எண்ணா திருந்தேனே.[246] (௨)

---

244. இப் பதிகம், அடிகளாரின் கை எழுத்துச் சுவடி ஒன்றில் இருக்கிறது. இது, அன்பர் தருமலிங்கம் பிள்ளை அவர்களால் பிரதி செய்யப் பட்டும் காண்கிறது.

245. இப் பதிகப் பாக்களில், நம் பெருமான் அவர்கள் இன்புருவான இறைவனைத் தாம் எஞ்ஞான்றும் எண்ணி எண்ணி நிறைவுறாததற்காக, இரங்கி வருந்துதல் காண்க.

246. இப் பா முதலியவற்றோடு, பின் காணும் திருவாசக மெய்ம்மொழியை ஒத்துணர்ந்து அனுபவிக்க :

"செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொன் பாத மலர்காணப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே."

ஒருமைப் பயனை ஒருமைநெறி உணர்ந்தார் உணர்வின் உள்ளுணர்வைப்
பெருமைக் கதியைப் பசுபதியைப் பெரியோர் எவர்க்கும் பெரியோனை
அருமைக் களத்தில் கருமைஅணி அம்மான் தன்னை எம்மானை
இருமைப் பயனுந் தருவானை என்னே எண்ணா திருந்தேனே. ( ௩ )

கறையோர் கண்டத் தணிந்தருளும் கருணா நிதியைக் கண்ணுதலை
மறையோன் நெடுமாற் கரியசிவ மலையை அலையில் வாரிதியைப்
பொறையோர் உள்ளம் புகுந்தொளிரும் புனித ஒளியைப் பூரணனும்
இறையோன் தன்னை அந்தோநான் என்னே எண்ணா திருந்தேனே. ( ௪ )

திருச்சிற்றம்பலம்

---

# 92. பரம ராசியம்[247]

---

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

விதிஎ லாம்விலக் கெனவிலக் கிடுவேன்
விலக்கெ லாங்கொண்டு விதிஎன விதிப்பேன்
நிதிஎ லாம்பெற நினைத்தெழு கின்றேன்
நிலமெ லாங்கொளும் நினைப்புறு கின்றேன்
எதிஎ லாம்வெறுத் திட்டசிற் றாழை
இன்பெ லாங்கொள எண்ணிநின் றயர்வேன்
பதிஎ லாங்கடந் தெவ்வணம் உய்வேன்
பரம ராசியப் பரம்பரப் பொருளே.[248] ( க )

செடிய னேன்கடுந் தீமையே புரிவேன்
தெளிவி லேன்மனச் செறிவென்ப தறியேன்
கொடிய னேன்கொடுங் கொலைபயில் இனத்தேன்
கோள னேன்நெடு நீளவஞ் சகனேன்

---

247. இப் பதிகம், அடிகளாரின் கையெழுத்துச் சுவடி ஒன்றில் உள்ளபடி இங்கு அச்சிட்டிருக்கிறது.

248. இவ் விரு பாக்களிலும், நம் பெருமானார், உலகியலில் உழலும் தமது பிழையைப் பொறுத்துத் தம்மை அடியாரொடு சேர்த்தருளும்படி, இன்றவனை வேண்டுதல் காண்க.

அடியனேன்பிழை அனைத்தையும் பொறுத்துன்
அன்பர் தங்களோ டின்புற அருள்வாய்
படிஅ னேகமுங் கடந்தசிற் சபையில்
பரம ராசியப் பரம்பரப் பொருளே.[249] (உ)

திருச்சிற்றம்பலம்

# 93. திருப் புகழ்ச்சி[250]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவுளந் தெரியேன் திகைப்புறு கின்றேன்
சிறியரிற் சிறியனேன் வஞ்சக்
கருவுளக் கடையேன் பாவியேன் கொடிய
கன்மனக் குரங்கனேன் அந்தோ
வெருவுறு கின்றேன் அஞ்சலஎன் றின்னே
விரும்பிஆட் கொள்ளுதல் வேண்டும்
மருவுமா கருணைப் பெருங்கடல் அமுதே
வள்ளலே என்பெரு வாழ்வே.[251] (க)

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தாயும் தந்தையும் தெய்வமும் குருவும்
தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயும் இன்பமும் அன்பும்மெய் அறிவும்
அனைத்தும் நீஎன ஆதரித் திருந்தேன்

---

249. இவ் விரு பாக்களோடு, பின்கண்ட தாயுமானப் பெருமானாரின் முறையீட்டினைக் காண்க :
"ஆவி யேஉனை யான்அறி வாய்நின்று
சேவி யேன்களச் சிந்தை திறைகொடேன்
பாவி யேன்உளப் பான்மையைக் கண்டுநீ
கூவி ஆள்எனை ஆட்கொண்ட கோலமே."

250. இப் பதிகத்திற்கு மூல ஏடுகள் கிடைக்கவில்லை. தொ. வே. அவர்களது 1867-ஆம் ஆண்டு முதற் பதிப்பில் உள்ளவாறு, இங்கு அச்சிட்டிருக்கிறது.

251. இம் மூன்று பாக்களிலும், நம் அடிகளார், தமக்கு அறியாமை மிகுந்திருந்தும், இறைவனையே தமக்குரிய எல்லாம் ஆகக் கொண்டிருப்பதால், அருள் மயமான இறைவனுக்குத் தம்மை ஆட் கொள்ளல் கடன் என்று குறையிரத்தல் காண்க.

வயும் என்னள விரக்கம்ஒன் றிலையேல்
என்செய் வேன்இதை யார்க்கெடுத் துரைப்பேன்
சேயும் நின்னருள் நசைஉறுங் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழ்ஒளி விளக்கே.[252] (உ)

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருள்பழுத் தோங்கும் கற்பகத் தருவே
அருண்மருந் தொளிர்குணக் குன்றே
அருள்எனும் அமுதந் தரும்ஒரு கடலே
அருட்கிர ணங்கொளும் சுடரே
அருள்ஒளி வீசும் அரும்பெறன் மணியே
அருட்சுவை கனிந்தசெம் பாகே
அருள்மணம் வீசும் ஒருதனி மலரே
அருண்மய மாம்பர சிவமே. (ங)

திருச்சிற்றம்பலம்

---

# 94. தனித் திரு விருத்தம்[253]

---

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

நீர்பூத்த வேணியும் ஆநந்தம் பூத்து நிறைமதியின்
சீர்பூத் தமுத இளநகை பூத்த திருமுகமும்
பார்பூத்த பச்சைப் பசுங்கொடி பூத்தசெம் பாகமும்ஓர்
கார்பூத்த கண்டமும் கண்பூத்த காலும்என் கண்விருந்தே.[254] (க)

---

252. இம் மூன்று பாக்களோடு, பின்வரும் திருவாசகத் திருமறை போல்வன கண்டுணர்க :

சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

வீழாக ஞான்றசெவ் வேணிப் பிரான்என் வினைஇரண்டும்
கீழாக நான்அதன் மேலாக நெஞ்சக் கிலேசமெல்லாம்
பாழாக இன்பம் பயிராக வாய்க்கில்அப் பாற்பிறவி
ஏழாக அன்றிமற் றெட்டாக இங்கென்னை என்செயுமே. (உ)

ஆயிரங் கார்முகில் நீர்விழி நீர்தர ஐயநின்பால்
சேயிரங் கார்எனச் சென்றேநின் பொற்பதம் சிந்திக்கின்றேன்
நீஇரங் காய்எனில் என்செய்கு வேன்இந் நிலத்திற்பெற்ற
தாய்இரங் காள்என்ப துண்டோதன் பிள்ளை தளர்ச்சிகண்டே. (ஙு)

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

செம்பவளத் தனிக்குன்றே அருளா னந்தச்
செழுங்கனியே முக்கணுடைத் தேவே மூவா
அம்புவிநீர் அனல்வளிவான் ஆதி யாய
அரசேஎன் ஆருயிர்க்கோர் அரண மாகும்
சம்புசிவ சயம்புவே சங்க ராவெண்
சைலம்வளர் தெய்வதவான் தருவே மிக்க
வம்பவிழ்மென் குழல்ஒருபால் விளங்க ஓங்கும்
மழவிடைமேல் வருங்காட்சி வழங்கு வாயே. (ச)

---

253. இப் பதிகத்தில் 5, 8, 10-17, 19-22, 25-27, 30-35, 37-40, 42, 48, 49-ஆம் பாக்கள் அடிகளார் கை எழுத்துச் சுவடிகளில் உள்ளபடியும், 1, 2, 3, 4-ஆம் பாக்கள் அடிகளார் கை எழுத்தில் உள்ள ஒரு காகித நோட்டுப் புத்தகத்தில் காண்கிறபடியும், 6, 23, 24, 36, 43-47-ஆம் பாக்கள், அன்பர் தருமலிங்கம் பிள்ளை அவர்கள் பெயர்த்து எழுதிஇருக்கும் ஏட்டுச் சுவடியில் இருக்கிறபடியும், 7, 9, 18, 28, 29, 41, 50-ஆம் பாக்கள் தொ. வே. அவர்களது 1867-ஆம் ஆண்டு முதற் பதிப்பில் கண்டபடியும், இங்கு அச்சிடப் பட்டிருக்கின்றன. இவற்றுள் ஆங்காங்கே, "உ", "சிவமயம்", "நன்றாக", "திருச்சிற்றம்பலம்" என்றென்று அடிகளார் வரைந்து வரைந்து எண்ணியிருக்கிறார்கள். இங்ஙனம் வெவ்வேறாகக் கிடைத்த பலதிறத்த பாக்களைத் தொ. வே. அவர்கள், இந்தத் தலைப்பின் கீழ்த் தொகுத்திருக்கிறார்கள் போலும்.

மேற்கண்ட 1, 2, 3, 4-ஆம் பாக்கள், இப் பதிப்பின் பிற்பகுதி ஒன்றன்பாற் பட்டிருக்கின்றன ஆதலின், இவை அப் பகுதியின்கண் இடம்பெறும். தொ. வே. அவர்கள் தொகுத்திருக்கும் ஐம்பது பாக்கள் கொண்ட இப் பதிகம், இந் நான்கு பாக்களின் பொருட்டாக, இதன் அமைப்பில் ஓர் மாற்றம் கொள்ளவேண்டாம் என்று கருதி, இவற்றுடன் இப் பகுதியில் பதிப்பித்திருக்கிறது.

254. இறை வடிவம், அடிகளார், தம் கண்விருந் தெனும் இப் பா முதலியவற்றோடு, அடியிற் காணும் அப்பர் சுவாமிகளது தேவாரப் பெருமறை கண்டுணர்க:

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே."

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நீடுகின்ற மாமறையும் நெடுமாலும் திசைமுகனும் நிமல வாழ்க்கை
நாடுகின்ற முனிவரரும் உருத்திரரும் தேடஅருள் நாட்டங் கொண்டு
பாடுகின்ற மெய்யடியர் உளம்விரும்பி ஆநந்தப் படிவ மாகி
ஆடுகின்ற மாமணியை ஆரமுதை நினைந்துநினைந் தன்பு செய்வாம். ( ௫ )

### ஷை வேறு

மறைமுடி விளக்கே போற்றி மாணிக்க மலையே போற்றி
கறைமணி கண்ட போற்றி கண்ணுதற் கரும்பே போற்றி
பிறைமுடிச் சடைகொண் டோங்கும் பொருட் குன்றே போற்றி
சிறைதவிர்த் தெனையாட் கொண்ட சிவசிவ போற்றி போற்றி. ( ௬ )

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

செய்வகை அறியேன் மன்றுண்மா மணிநின்
திருவுளக் குறிப்பையுந் தெரியேன்
உய்வகை அறியேன் உணர்விலேன் அந்தோ
உறுகண்மேல் உறுங்கொல்என் றுலைந்தேன்
மெய்வகை அடையேன் வேறெவர்க் குரைப்பேன்
வினையனேன் என்செய விரைகேன்
பொய்வகை உடையேன் எங்ஙனம் புகுகேன்
புலையனேன் புகல்அறி யேனே. ( ௭ )

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

நிதியைநினைந் துனைமறந்த மதியைநினைந் தழுகேனோ நிமலா னந்தக்
கதியைஇகழ்ந் திருள்விழைந்த விதியைநினைந் தழுகேனோ கண்போல் வாய்ந்த
பதியைஉனைப் பாடாத பாட்டைநினைந் தழுகேனோ படிற்று நெஞ்சச்
சதியைநினைந் தழுகேனோ யாதுகுறித் தழுகேன்இத் தமிய னேனே. ( ௮ )

### ஷை வேறு

தாய்தடை என்றேன் பின்னர்த் தாரமே தடைஎன் றேன்நான்
சேய்தடை என்றேன் இந்தச் சிறுதடை எல்லாந் தீர்ந்தும்
தோய்தடைச் சிறியேன் இன்னுந் துறந்திலேன் எனைத் தடுக்க
எய்தடை யாதோ எந்தாய் என்செய்கேன் என்செய் கேனே. 255 ( ௯ )

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

எண்கடந்த உயிர்கள்தொறும் ஒளியாய் மேவி
இருந்தருளும் பெருவாழ்வே இறையே நின்றன்
விண்கடந்த பெரும்பதத்தை விரும்பேன் தாய்மை
விரும்புகிலேன் நின்அருளை விழைந்தி லேன்நான்
பெண்கடந்த மயல்எனும்ஓர் முருட்டுப் பேயாற்
பிடிஉண்டேன் அடிஉண்ட பிஞ்சு போன்றேன்
கண்கடந்த குருட்டுமோர் கதைபோல் நின்சீர்
கண்டுரைப்பல் என்கேனோ கடைய னேனே. (௧௦)

ஷை வேறு

மின்னைப் போல்இடை மெல்இய லார்என்றே
விடத்தைப் போல்வரும் வெம்மனப் பேய்களைப்
பொன்னைப் போல்மிகப் போற்றி இடைநடுப்
புழையி லேவிரல் போதப்பு குத்திடாத்
தன்னைப் போல்முடை நாற்றச்ச லத்தையே
சந்த னச்சலந் தான்எனக் கொள்கின்றேன்
என்னைப் போல்வது நாய்க்குலம் தன்னிலும்
இல்லை அல்ல தெவற்றினும் இல்லையே. (௧௧)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கள்உருகும் மலர்மணம்போல் கலந்தெங்கும் நிறைந்தோய்நின் கருணைக் கந்தோ
முள்உருகும் வலியபராய் முருடுருகும் உருகாத முறைசேர் கல்லும்
வள்உருகும் மலைஉருகும் மண்உருகும் மரம்உருகும் மதியி லேன்றன்
உள்உருகும் வகையிலைஎன் செய்கேன்நான் என்பிறந்தேன் ஓதிய னேனே.[256]

---

255. அடிகளார், தமக்கு அகத்துறவு வரவில்லை என்று குறையிரக்கும் இப் பா முதலியவற்றோடு, பின்வரும் அருணகிரிநாதப் பெருமானாரின் அநுபூதி பார்த்தறிக.

"மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகம்ஆ றும்மொழிந் தும்ஒழிந் திலனே
அகம்ஆ டைமடந் தையர்என்(று) அயரும்
சகமா யையுள்நின் றுதயங் குவதே."

256. இறை கருணைக்கு உலகமெலாம் உருகாநிற்கத் தம் மனம் மட்டும் கல்லாகச் சமைந்திருக்கிறது என்று அடிகளார் இரங்கும் இப் பா

மன்உயிர்க்குத் தாய்தந்தை குருதெய்வம் உறவுமுதல் மற்றும் நீயே
பின்உயிர்க்கோர் துணைவேறு பிறிதில்லைஎன் றியான்அறிந்த பின்பொய் யான
மின்உடற்குத் தாய்தந்தை ஆதியரை மதித்தேனோ விரும்பி னேனோ
என்உயிர்க்குத் துணைவாநின் ஆணைஒன்றும் அறியேன்நான் இரங்கி டாயே. (௧௫)

மாற்றறிய பசும்பொன்னே மணியேஎன் கண்ணேகண் மணியே யார்க்குந்
தோற்றரிய சுயஞ்சுடரே ஆநந்தச் செழுந்தேனே சோதி யேநீ
போற்றரிய சிறியேனைப் புறம்விடினும் வேற்றவர்பாற் போகேன் வேதம்
தேற்றரிய திருவடிக்கண் பழிவிளைப்பேன் நின்ஆணைச் சிறிய னேனே.[257] (௧௬)

உள்உணர்வோர் உளத்துநிறைந் தூற்றெழுந்த தெள்ளமுதே உடையாய் வஞ்ச
கள்உணர்வேன் சிறிதேனும் நலமறியேன் வெறித்துழலும் நாயிற் பொல்லேன்
வெள்உணர்வேன் எனினும்என்னை விடுதியோ விடுதியேல் வேறென் செய்கேன்
தள்உணர்வோன் எனினும்மகன் தனைஈன்றோர் புறம்பாகத் தள்ளார் அன்றே.

கலைபயின்று நெறிஒழுகும் கருத்துடையேன் அலன்நின்னைக் கனவி லேனும்
மலைபயின்ற பெருங்குணத்தெம் வள்ளலே எனத்துதியேன் வஞ்ச மில்லா
நிலைபயின்ற நல்லோர்தம் நேசமிலேன் கைதவமே நினைப்பேன் அந்தோ
உலைபயின்ற அரக்கெனநெஞ் சுருகேன்நான் ஏன்பிறந்தேன் ஒதிய னேனே.

---

256\. (தொடர்ச்சி)

முதலியவற்றோடு, அடியில் கண்ட திருவாசகச் செழும் பாகையும் கலந்துண்டு நிறைவுறுக :

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மேல் ஆகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்(கு)
உள்ளந்தாள் நின்(று) உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்இணையும் மரமாந்தீ வினையி னேற்கே."

257\. இறைவன், தம்மைப் புறந்தள்ளினால், தம் உயிரை அவன் திருவடியில் நீத்து, அவனுடைய அருட்பூரணத்திற்குப் பழி விளைவிப்பதாக அடிகளார் கூறும் இப் பா முதலியவற்றோடு, பின்வரும் மணிவாசகத்தின் போலிப் பழிப்பின்பாற் பட்ட புகழ்ச்சியையும் தாயுமான அடிகளாரின் குறையிரத்தலையும் உளங்கொண்டு கனிவுறுக :

"தாரகை போலும் தலைத்தலை மாலைத் தழல்அரப்பூண்
வீரஎன் தன்னை விடுதிகண் டாய்விடில் என்னைமிக்கார்
ஆரடி யான்என்னின் உத்தர கோசமங் கைக்கரசின்
சீரடி யார்அடி யான்என்று நின்னைச் சிரிப்பிப்பனே."

"ஆரா அமுதனைய ஆனந்த வாரி என்பால்
தாராமல் ஐயாநீ தள்ளிவிட வந்ததென்னே."

இரும்புன்னை மலர்ச்சடையாய் இவ்வுலகில் சிலர்தங்கட் கென்று வாய்த்த
அரும்பின்னை மார்பகத்தோன் அயனாதி சிறுதெய்வ மரபென் றோதும்
கரும்பொன்னைச் செம்பொன்னில் கைவிடா திருக்கின்றார் கடைய னேற்கே
தரும்பொன்னை மாற்றழிக்கும் அரும்பொன்னீ கிடைத்தும்உனைத் தழுவிலேனே.

கஞ்சமலர்த் தவிசிருந்த நான்முகனும் நெடுமாலும் கருதிப் போற்ற
அஞ்சநடை அம்மைகண்டு களிக்கப்பொன் அம்பலத்தில் ஆடு கின்ற
எஞ்சல்இலாப் பரம்பொருளே என்குருவே ஏழையினே னிடத்து நீயும்
வஞ்சம்நினைத் தனையாயில் என்செய்வேன் என்செய்வேன் மதியி லேனே.[258]

கட்டளைக் கலித்துறை

வேம்புக்கும் தண்ணிய நீர்விடு கின்றனர் வெவ்விடஞ்சேர்
பாம்புக்கும் பாலுண வீகின் றனர்இப் படிமிசையான்
வீம்புக்கும் தீம்புக்கும் ஆனேன் எனினும் விடேல்எனைநீ
தேம்புக்கும் வார்சடைத் தேவே கருணைச் சிவக்கொழுந்தே. (கக)

அடமுடி யாதுபல் ஆற்றாலும் ஏழைக் கடுத்ததுன்பம்
படமுடி யாதென்னை செய்கேன்என் தன்முகம் பார்த்திரங்காய்
திடமுடி யால்அயன் மால்வணங் குந்துணைச் சேவடியாய்
தடமுடி யாய்செஞ் சடைமுடி யாய்நந் தயாநிதியே. (உ௦)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொல்லா வாழ்க்கைத் துயரம்எனும் புணரிப் பெருக்கில் வீழ்ந்தழுந்திப்
பல்லார் நகைக்கப் பாவிபடும் பாட்டை முழுதும் பார்த்திருந்தும்
கல்லால் அமர்ந்தீர் என்னிரண்டு கண்கள் அனையீர் கறைமிடற்றீர்
எல்லாம் உடையீர் மால்விடையீர் என்னே இரங்கி அருளீரே. (உக)

---

258. இறைவனே தம்மை வஞ்சித்தொழுகில், தாம் யாது செய்யக் கூடும் என்று அடிகளார் உளங்கசிந்து வருந்தும் இப் பா முதலியவற்றோடு, பின் வரும் தாயுமான அடிகளார் திருமொழியை ஒத்துணர்க :

"கிட்டாராய் நெஞ்சில் கிளர்வார் தழுவஎன்றால்
நெட்டூர ராவர்அவர் நேசம்என்னோ பைங்கிளியே."

"தன்னை அறியும் தருணந் தனிற்றலைவர்
என்னை அணை யாதவண்ணம் எங்கொளித்தார் பைங்கிளியே."

பொன்னை உடையார் மிகுங்கல்விப் பொருளை உடையார் இவர்முன்னே
இன்னல் எனும்ஓர் கடல்வீழ்ந்திவ் வேழை படும்பா டறிந்திருந்தும்
மின்னை நிகரும் சடைமுடியீர் விடங்கொள் மிடற்றீர் வினைதவிர்ப்பீர்
என்னை உடையீர் வெள்விடையீர் என்னே இரங்கி அருளீரே. (உஉ)

கலித்துறை

ஆயும் வஞ்சக நெஞ்சன்இவ் அடியனேன் ஐயா
நீயும் வஞ்சக நெஞ்சன்என் றால்இந்த நிலத்தே
ஏயும் இங்கிதற் கென்செய்வேன் என்செய்வேன் எனைக்கும்
தாயும் தந்தையும் ஆகிஉள் நிற்கின்றோய் சாற்றாய். (உங)

நானும் பொய்யன்நின் அடியனேன் தண்ணருள் நிதிநீ
தானும் பொய்யன்என் றால்இதற் கென்செய்வேன் தலைவா
தேனும் பாலுந்தீங் கட்டியும் ஆகிநிற் றெளிந்தோர்
ஊனும் உள்ளமும் உயிரும்அண் ணிக்கின்ற உரவோய்.[259] (உச)

நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா

நேசனும்நீ சுற்றமும்நீ நேர்நின் றளித்துவரும்
ஈசனும்நீ ஈன்றாளும் எந்தையும்நீ என்றேநின்
தேசுறுசீர் ஐந்தெழுத்தும் செப்புகின்ற நாயேனை
ஆசகலும் வண்ணம் அருள்புரிந்தால் ஆகாதோ.[260] (உரு)

259. தாம் பொய்யர் எனினும், இறைவன் அதை முன்னிட்டுத் தம்மைத் தள்ளி வைப்பது, இன்புருவனாகிய இறைவனது அன்பு நிகழ்ச்சிக்குப் பொருந்தாது என்று அடிகள் இறைஞ்சும் இப் பா முதலியவற்றோடு, கீழ்க்காணும் மணிவாசகப் பொய்யாமொழியையும் உய்த்துணர்க :
"புறமே போந்தோம் பொய்யும் யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே."

260. எல்லாமும் எல்லாரும் இறைவன் என உளந்தேறி, அவன் பெயரைப் பன்னும் தம்மை இறைவன் கைவிடுதல் அறமன்று என்று அடிகளார் குறையிரக்கும் இப் பா முதலியவற்றோடு, பின்வரும் தேவாரத் திருமறை போல்வன காண்க :
"படைக்கல மாகஉன் நாமத் தெழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப் பும்உனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தரனே."

### கட்டளைக் கலித்துறை

ஆற்றால் விளங்கும் சடையோய்இவ் வேழை அடியனும்பல்
ஆற்றால் வருந்தும் வருத்தம்எல் லாம்முற் றறிந்தும்இன்னம்
ஆற்றா திருத்தல்நின் பேரருள் ஆற்றுக் கழகுகொலோ
ஆற்றாமை மேற்கொண் டழுதால் எவர்எனை ஆற்றுவரே. (உ௬)

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

படியே அளந்த மாலவனும் பழைய மறைசொற் பண்ணவனும்
முடியீ றறியா முதற்பொருளே மொழியும் ஒற்றி நகர்க்கிறையே
அடியார் களுக்கே இரங்கிமுனம் அடுத்த சுரநோய் தடுத்ததுபோல்
படிமீ தடியேற் குறுபிணிபோம் படிநீ கடைக்கண் பார்த்தருளே. (உ௭)

### ஷை வேறு

அருளார் அமுதே அரசேநின் அடியேன் கொடியேன் முறையேயோ
இருள்சேர் மனனோ டிடர்உழந்தேன் எந்தாய் இதுதான் முறையேயோ
மருள்சேர் மடவார் மயலாலே மாழ்கின் றேன்நான் முறையேயோ
தெருளோர் சிறிதும் அறியாதே திகையா நின்றேன் முறையேயோ. (உ௮)

ஒழியாக் கவலை உறுகின்றேன் உடையாய் முறையோ முறையேயோ
அழியாக் கருணைக் கடலேஎன் அரசே முறையோ முறையேயோ
பொழியாப் புயலே அனையார்பால் புகுவித் தனையே முறையேயோ
இழியாத் திரிதந் துழல்கின்றேன் இறைவா முறையோ முறையேயோ. (உ௯)

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மதிஒளிர் கங்கைச் சடைப்பெருங் கருணை
    வள்ளலே தெள்ளிய அமுதே
நிதிஒளிர் வாழ்க்கை இந்திரன் முதலோர்
    நிலைத்தவான் செல்வமும் மண்ணில்
பதிஒளிர் வாழ்க்கை மணிமுடி அரசர்
    படைத்திடும் செல்வமும் வேண்டேன்
கதிஒளிர் நினது திருவருட் செல்வக்
    களிப்பையே கருதுகின் றனனே.[261] (௩௦)

---

261. இறைவன் அருட்பேறு தவிர்த்து, இம்மை மறுமை இன்ப நுகர்ச்சியைத் தாம் எள்ளளவும் வேண்டி நிற்கவில்லை என்று அடிகளார்

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மன்றாடும் மாமணியே நின்பொற் பாத
  மலர்த்துணையே துணையாக வாழ்கின் றோர்க்கு
ஒன்றாலுங் குறைவில்லை ஏழை யேன்யான்
  ஒன்றுமிலேன் இவ்வுலகில் உழலா நின்றேன்
இன்றாக நாட்கழியில் என்னே செய்கேன்
  இணைமுலையார் மையலினால் இளைத்து நின்றேன்
என்றாலும் சிறிதெளியேற் கிரங்கல் வேண்டும்
  எழில்ஆரும் ஒற்றியூர் இன்ப வாழ்வே. (௩௧)

### கட்டளைக் கலித்துறை

வெள்ளங்கொண் டோங்கும் விரிசடை யாய்மிகு மேட்டினின்றும்
பள்ளங்கொண் டோங்கும் புனல்போல்நின் தண்ணருட் பண்புநல்லோர்
உள்ளங்கொண் டோங்கும் அவமே பருத்த ஒதிஅனையேன்
கள்ளங்கொண் டோங்கும் மனத்துறு மோஉறிற் காண்குவனே. (௩௨)

ஐயாமுக் கண்கொண்ட ஆரமு தேஅரு ளார்பவள
மெய்யாமெய்ஞ் ஞான விளக்கே கருணை விளங்கவைத்த
மையார் மிடற்று மணியேஅன் றென்னை மகிழ்ந்ததந்தோ
பொய்யாஎன் செய்வல் அருளா யெனில்எங்குப் போறுவனே.[262] (௩௩)

---

261. (தொடர்ச்சி)
இயம்பும் இப் பாவொடு, அடியிற் கண்ட திருவாசகச் செம்பொருள் காண்க :
"வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப் புறம்போகலொட் டேனே."

262. சிறு காலையில் தம்மை இறைவன் கலந்து கொண்டருளியது மெய் ஆதலின், இனியும் தம்மை அவன் தம் குற்றங்களைப் பொருட் படுத்தாது ஆட்கொள்வதுதான் தக்கது என்று அடிகளார் மன்றாடும் இப் பாவொடு, பின் வரும் திருவாசகத் தண் தமிழ் காண்க :
"பொய்யவ னேனைப் பொருளென ஆண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விடம் உண்மிடற்று
மையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந் தீர்ப்பவனே."

நாரா யணன்திசை நான்முகன் ஆதியர் நண்ணிநின்று
பாரா யணஞ்செயப் பட்டநின் சேவடிப் பங்கயமேல்
சீரா யணம்பெறப் பாடுந் திறம்ஓர் சிறிதும்இலேன்
ஆரா யணங்குற நின்றேன்பொன் மன்றத் தமர்ந்தவனே.[263]　　(௩௪)

பேய்கொண்ட நெஞ்சகப் பாழால் வரும்என் பெருந்துயரை
வாய்கொண் டனந்தர் அனந்தர்க்கும் சொல்ல வராதெனில்இந்
நாய்கொண் டுரைக்க வருமோஎன் செய்குவன் நச்சுமரக்
காய்கொண்டு வாழைக் கனியைக்கை விட்ட கடையவனே.　　(௩௫)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வன்மானங் கரத்தேந்தும் மாமணியே மணிகண்ட மணியே அன்பர்
நன்மானங் காத்தருளும் அருட்கடலே ஆநந்த நடஞ்செய் வாழ்வே
பொன்மானம் பிணைப்பொருந்தும் அம்பிணைவைத் தாண்டருளும்பொருளேஈங்
கென்மானங் காத்தருள வேண்டுதியோ வேண்டாயேல் என்செய் வேனே.(௩௬)

கலிநிலைத் துறை

வைவ மென்றெழு கின்றவர் தமக்குநல் வாழ்வு
செய்வம் என்றெழு கின்றமெய்த் திருவருட் செயலும்
சைவ மென்பதும் சைவத்திற் சாற்றிடுந் தலைமைத்
தெய்வம் என்பதும் என்னள வில்லைஎன் செய்வேன்.　　(௩௭)

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஐய ரேஉம தடியன்நான் ஆகில்
　　அடிகள் நீர்என தாண்டவர் ஆகில்
பொய்ய னேன்உளத் தவலமும் பயமும்
　　புன்க ணும்தவிர்த் தருளுதல் வேண்டும்

---

263. இறைவன் திருவடிப் புகழ்ச்சியைப் போதுமானபடி, தேனெனப் பாகெனப் பாடும் பான்மை தமக்கில்லை என்று அடிகளார் வருந்தும் இப் பாவொடு, பின்வரும் அப்பர் பெருமான் அவர்களின் திருநேரிசையையும், தாயுமான அடிகளாரின் சச்சிதானந்த சிவத்தையும் ஒத்துணர்க:

"பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகி
எத்தினால் பத்தி செய்கேன் என்னைநீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடு கின்ற
அத்தாஉன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே."

"பாகத்தி னால்கவிதை பாடிப் படிக்கவோ பத்திநெறி யில்லை வேத
பாராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது பகரவோ
இசையும் இல்லை."

ஐய லோர்புறம் நின்றுளங் களிப்பச்
சச்சி தானந்தத் தனிநடம் புரியும்
மெய்ய ரேமிகு துய்யரே தரும
விடைய ரேஎன்றன் விழிஅமர்ந் தவரே. (௩அ)

ஷை வேறு

எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார்
ஈயினும் நாயினும் இழிந்தேன்
புழுவினுஞ் சிறியேன் பொய்விழைந் துழல்வேன்
புன்மையேன் புலைத்தொழிற் கடையேன்
வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன்
மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. (௩௯)

கலி விருத்தம்

பொன்அ ளிக்கும்நற் புத்தியுந் தந்துநின்
தன்ன ருட்டுணைத் தாண்மலர்த் தியானமே
மன்ன வைத்திட வேண்டும்எம் வள்ளலே
என்னை நான்பல கால்இங்கி யம்பலே. (௪௦)

தாயும் தந்தையும் சற்குரு நாதனும்
ஆயும் தெய்வமும் நீஎன் றறிந்தனன்
பாயும் மால்விடை ஏறும் பரமனே
நீயும் கைவிட என்னை நினைத்தியோ. (௪௧)

ஷை வேறு

ஒழியா மயல்கொண் டுழல்வேன் அவமே
அழியா வகையே அருள்வாய் அருள்வாய்
பொழியா மறையின் முதலே நுதல்எய்
விழியாய் விழியாய் வினைதூள் படவே.[264] (௪௨)

264. தன் மெய்யன்பர்களுக்கு ஈந்தருளிய சாகா வரத்தைத் தமக்கும் தந்தருளும்படி, அடிகளார் இறைவனை வேண்டும் இப் பாவொடு, இங்குக் குறித்திருக்கும் அருணகிரி நாதப் பெருமானின் அநுபூதித் தெள்ளமுதம் போல்வனவற்றை உய்த்தறிந்து தெளிக :

"சாகா(து) எனையே சரணங் களிலே
காகா நமனார் கலகம் செயும்நாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னஉபதே சிகனே."

வெண்துறை

உலகெ லாம்நிறைந் தோங்கு பேரருள்
உருவ மாகிஎவ் உயிரும் உய்ந்திட
இலகு வாஒளி யாம்மணி மன்றிடை என்றும்நின்றே
அலகில் ஆனந்த நாடகஞ் செய்யும்
அம்பொற் சேவடிக் கபயம் என்னையும்
திலக நீவிழை வாய்நட ராசசி காமணியே. (சஙு)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

என்னிருகண் காள்உமது பெருந்தவம்எப் புவனத்தில் யார்தான் செய்வர்
முன்னிருவர் காணாமல் அலைந்தனரால் இனுங்காண முயலா நின்றார்
நன்னிருபர் தொழுதேத்தும் அம்பலத்தே ஓரிடத்தோர் நாள்ஆ தித்தர்
பன்னிருவர் ஒளிமாற்றும் பரஒளியைப் பார்த்துயர்தீர் பண்பி னீரே.[265] (சச)

சேணுடர் முநிவர்உயர் திசைமுகன்மால் உருத்திரன்அத் திரளோர் சற்றும்
காணாத காட்சியைநான் கண்டேன்சிற் றம்பலத்தின் கண்ணே பன்னாள்
ஆணைப் பிறந்தடியேன் அருந்தவம்என் புரிந்தேனோ அறிகி லேன்முன்
பேணாத பிறப்பெல்லாம் பிறப்பலஇப் பிறப்பேஎன் பிறப்பாம் அந்தோ. (சரு)

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இருளற ஓங்கும் பொதுவிலே நடஞ்செய்
எங்குரு நாதன்எம் பெருமான்
அருளெனும் வடிவங் காட்டிஒண் முகத்தே
அழகுறும் புன்னகை காட்டித்
தெருளுற அருமைத் திருக்கையால் தடவித்
திருமணி வாய்மலர்ந் தருளிப்
பொருளுற இருந்தோர் வாக்களித் தென்னுள்
புகுந்தனன் புதுமைஈ தந்தோ. (சசு)

---

265. தாம் கடவுட் காட்சியைக் காணப்பெற்ற பேற்றினைக் கருதி இன்புறும் அடிகளாரது இப் பாவொடு, பின்வரும் திருவாசகப் பெருமறை தெரிக்கும் பேரின்ப உணர்வினைக் கண்டு களிக்க :

''கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியில் சேவடி தீண்டினன் காண்க.''

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொன்என்கோ மணிஎன்கோ புனிதஒளித் திரள்என்கோ பொற்பின் ஓங்கும்
மின்என்கோ விளக்கென்கோ விரிசுடர்க்கோர் சுடர்என்கோ வினையனேன்யான்
என்என்கோ என்னென்கோ எம்பெருமான் திருமேனி இருந்த வண்ணம்
முன்என்கோதறுதவத்தால் கண்டுகளித் திடப்பெற்றேன் முக்கண் மூர்த்தி. (சஎ)

வஞ்சகர்க்கெல் லாம்முதலாய் அறக்கடையாய் மறத்தொழிலே வலிக்கும் பாவி
நெஞ்சகத்துன் மார்க்கனைமா பாதகனைக் கொடியேனை நீசனேனை
அஞ்சல்எனக் கருணைபுரிந் தாண்டுகொண்ட அருட்கடலை அமுதைத் தெய்வக்
கஞ்சமல ரவன்நெடுமாற் கரும்பொருளைப் பொதுவினில்யான் கண்டுய்ந் தேனே.

### கட்டளைக் கலித்துறை

நாதாபொன் அம்பலத் தேஅறி வாநந்த நாடகஞ்செய்
பாதா துரும்பினும் பற்றாத என்னைப் பணிகொண்டெல்லாம்
ஓதா துணர உணர்த்திஉள் ளேநின் றுளவுசொன்ன
நீதா நினைமறந் தென்நினைக் கேன்இந்த நீணிலத்தே.[266] (சகூ)

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

கந்த நாண்மலர்க் கழலிணை உளத்துறக் கருதுகின் றவர்க்கெல்லாம்
பந்த நாண்வலை அவிழ்த்தருள் சிதம்பரை பரம்பரை யுடன்ஆடும்
அந்த நாள்மகிழ் வடைபவர் உளர்சிலர் அவர்எவர் எனில்இங்கே
இந்த நாள்முறை திறம்பல ராய்உயிர்க் கிதம்செயும் அவர்அன்றே.[267] (௫0)

திருச்சிற்றம்பலம்

---

266. இறைவனது அருள்வண்ணம், தமக்கு ஓதாதுணர்த்திய மா பெரும் பேற்றினை அடிகளார் கூறி மகிழும் இப் பாவொடு, பின்வரும் கந்தர் அநுபூதியின் மெய்ப் பொருள் கண்டுணர்க :

"யாம்ஓ தியகல் வியும்எம் அறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனால்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே."

267. உயிர்களுக்கு இரங்கி, அவற்றின் துன்பம் துடைத்து, அவற்றிற்கு நலம் புரிபவன் எவனோ, அவன்தான் இறைவன் திருவடி மறவாது, அதன் நீழலில் திகழ்பவன் என்று அடிகளார் உணர்த்தும் இப் பாவொடு, பின்வரும் நம் தாயுமானப் பெருமானாரின் செம்பொருள் துணிபினை உய்த்துணர்ந்து நிறைவுறுக :

# 95. அறநிலை விளக்கம்[268]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில் கண்விழித்து வயங்கும் அப்பெண
உருவாணை உருவாக்கி இறந்தவரை எழுப்புகின்ற உறுவ னேனும்
கருவாணை யுறஇரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்த னேல்எங்
குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை ஞானிஎனக் கூறொ ணாதே.[269]

திருச்சிற்றம்பலம்

---

267. (தொடர்ச்சி)

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே."

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே."

"கொல்லா விரதம் குவலயம்எல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே."

"கொல்லா விரதம்ஒன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே."

268. இப் பா, பேரன்பர் இறுக்கம் இரத்தின முதலியார் அவர்களுக்கு அடிகளார் வரைந்தனுப்பிய ஒரு திருமுகத்தின் தொடக்கத்தில் எழுதப்பட்டு, இதன் முடிவில் தொடர்ச்சியாக அவருக்கு "—வாழ்க." என்று ஆசி கூறியிருக்கிறார்கள்; இப் பதிப்பின் 5-ஆம் புத்தகமாகிய திருமுகப் பகுதி 66-ஆம் பக்கம் பார்க்க.

இப் பா இப் பதிப்பின் பின்வரும் பகுதி ஒன்றன்பாற் பட்டிருக்கிறது. ஆதலின், இஃது அப் பகுதியின்கண் இடம்பெறும். இரண்டொரு பாக்களுக்காகத் தொ. வே. அவர்கள் தொகுத்திருக்கும் இந் நூல் அமைப்பு ஓர் மாற்றங்கொள்ள வேண்டாம் என்று கருதி, இப் பா இப் பகுதியிலும் பதிப்பித்திருக்கிறது.

269. இப் பாவில், அடிகளார், புலையையும் கொலையையும் அறவே கடிந்து, தாம் காணப்பெற்ற இறைவன் திருநெறியில், எவ் வகையிலும், எத் துணையும், எந்தச் சூழ்நிலையிலும், எவ்வெவர் வாழ்க்கையிலும், அவை இடம் பெறா என்று, பேரான்ம விளக்கத்தோடும் பேராற்றலோடும் வற்புறுத்திக் கூறுவது காண்க.

இதனோடு, திருவள்ளுவர், திருமூலர், தாயுமானார் முதலிய திருநெறித் தலைவர்கள் தம் நூல்களில் யாண்டும் முழுமையாக வற்புறுத்திக் கூறும் தெய்வ மெய்ம் மொழிகள் காண்க. இங்கே சிற்சில வருவன பார்க்க;

# 96. அருள் நிலை விளக்கம்[270]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக் கில்லைஎன்றார் மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனஉட் பொங்கிவழி கின்றேன்ஓர் புதுமை அன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னகர் நண்பர்களே செப்பக் கேளீர்
நெய்விளக்கேபோன்றொருதண் ணீர்விளக்கும் எரிந்ததுசந் நிதியின் முன்னே.[271]

திருச்சிற்றம்பலம்

---

269. (தொடர்ச்சி)

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே."

"எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ."

270. இப் பா, அடிகளார் கையெழுத்தில் உள்ள ஏட்டுச் சுவடி ஒன்றிலும், மற்றொரு சுவடியில் உள்ள இதன் படிஒலை ஒன்றிலும் காண்கிறது. இதைச் சார்ந்த குறிப்பு ஒன்றை, இப் பதிப்பின் 5-ஆம் புத்தகமாகிய திருமுகப் பகுதி 98-ஆம் பக்கத்தில் பார்க்க.

268-ஆம் அடிக்குறிப்பின் 2-ஆம் பத்தி பார்க்க. அது இப் பாவிற்கும் பொருந்தும்.

271. இப் பா, அடிகளார், தம்மை முன்னிட்டு, தாமறியாத நிலையில், இறைவன் பேரிரக்கத்தால் வாய்த்த தெய்வ நிகழ்ச்சியாகிய தண்ணீர் விளக்கெரித்தலைத் தாம் அறிந்தபோது, தம்மிடம் பெரும் பற்றுடைய இறுக்கம் இரத்தின முதலியார் உள்ளிட்ட பேரன்பர்களுக்கு, அறிவிக்க எழுந்த எண்ண முகத்தான் உருக்கொண்டதாகும்.

மெய்யடியார்கள் சார்பாக இறைவன் நிகழ்த்தும் அருட்செயல்கள் பல திறப்பட்டனவாகும். இவற்றைத் தேவார திருவாசகங்களிலும் பிற அருள் நூல்களிலும் விவரித்திருக்கக் காணலாம். இப் பாவொடு, பின்வரும் நமிநந்தி அடிகளார் வரலாற்றில் உள்ள வான் மொழி போல்வன பார்த்துணர்க :

"வந்த கவலை மாற்றும்இனி மாறு விளக்குப் பணிமாற
இந்த மருங்கில் குளத்துநீர் முகந்து கொடுவந் தேற்றும்என
அந்தி மதியம் அணிந்தபிரான் அருளால் எழுந்த மொழிகேளாச்
சிந்தை மகிழ்ந்து நமிநந்தி அடிகள் செய்வ தறிந்திலரால்."

# 97. திருமருந் தருள்நிலை[272]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பனகஅணைத் திருநெடுமால் அயன்போற்றப் புலவரெலாம் பரவ ஓங்கும்
கனகமணி அம்பலத்தே பெரியமருந் தொன்றிருக்கக் கண்டேன் கண்டேன்
அனகநடத் ததுசச்சி தானந்த வடிவதுபே ரருள்வாய்ந் துள்ள
தெனகமமர்ந் திருப்பதெல்லாம் வல்லதுபேர் நடராசன் என்ப தம்மா.[273] (க)

திருநெடுமால் அயன்தேடத் தரியதுஒளி த்ததெனத் தெளிந்தோர் சொல்லும்
ஒருகருணை மருந்துதிரு அம்பலத்தே இருந்திடக்கண் டுவந்தேன் அந்தோ
அருவுருவங் கடந்ததுபேர் ஆநந்த வடிவதுநல் அருள்வாய்ந் துள்ள
திருமையும்நன் களிப்பதெல்லாம் வல்லதுபேர் நடராசன் என்ப தம்மா.[274]

திருச்சிற்றம்பலம்

# 98. திரு அருள் விலாசம்[275]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆண்டவன்நீ ஆகில்உனக் கடியனும்நான் ஆகில்
அருளுடையாய் இன்றிரவில் அருள்இறையாய் வந்து
நீண்டவனே முதலியரும் நீண்டரிதாம் பொருளின்
நிலைகாட்டி அடிமுடியின் நெறிமுழுதும் காட்டி

272. இப் பதிகத்திற்கு அடிகளாரது மூல ஏடாவது அன்பர்களுடைய படிச் சுவடியாவது கிடைக்க வில்லை. தொ. வே. அவர்களின் 1867-ஆம் ஆண்டு முதற் பதிப்பில் உள்ளவாறு இங்கு அச்சிட்டிருக்கிறது.

273. இவ் விரு பாக்களிலும், நம் பெம்மான் அவர்கள், அம்பலத்தில் இன்ப வடிவாக அமர்ந்துள்ள இறைவன், தம்மைப் பிணித்துள்ள மாயையாகிய நோயைத் தீர்க்கும் மருந்தாக விளங்குகிறான் என்று இயம்புவது காண்க.

274. இவ் விரு பாக்களொடு, பின்வரும் திருஞான சம்பந்தப் பெருமானாரின் தெய்வப் பெருமறை போல்வன பார்த்தறிக :

வேண்டவனே காலையில்நீ விழித்தவுடன் எழுந்து
விதிமுடித்துப் புரிதிஇது விளங்கும்எனப் புகல்வாய்
தாண்டவனே அருட்பொதுவில் தனிமுதலே கருணைத்
தடங்கடலே நெடுந்தகையே சங்கரனே சிவனே.[276] (க)

திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனால்
திருவுளங்கொட் டியநாளில் தெரிந்திலன்இச் சிறியேன்
பெருநெறிஎன் உளத்திருந்து காட்டியநாள் அறிந்தேன்
பிழைபடாத் தெய்வமறை இதுவெனப்பின் புணர்ந்தேன்
ஒருநெறியில் எனதுகரத் துவந்தளித்த நாளில்
உணராத உளவைஎலாம் ஒருங்குணர்ந்து தெளிந்தேன்
தெருணெறிதந் தருளும்மறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிமகிழ் திருநடத்தென் னமுதே.[277] (உ)

திருச்சிற்றம்பலம்

---

274. (தொடர்ச்சி)

"மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர்தாமே."

275. இப் பதிகப் பாக்கள் இரண்டும் அடிகளார் எழுத்தில் காகிதத்தில் இருக்கின்றன.

268-ஆம் அடிக் குறிப்பின் இரண்டாம் பத்தி பார்க்க. அது இவ் விரு பாக்களுக்கும் பொருந்தும்.

276. இவ் விரு பாக்களில், பெருமான் அவர்கள், தமக்கு இறைவன் மெய் உணர்வு தந்து, அவன் திருவடி நிழலில் வதிவதற்கு வழி காட்டியதை வியந்து போற்றுதல் காண்க.

277. இவ் விரு பாக்களோடு, பின்வரும் நம் வன்தொண்டப் பெருமானாரின் திருநெறித் தமிழ் போல்வன கண்டு களிக்க :

"நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
தொண்ட னேன்அறி யாமை அறிந்து
கல்வி யல்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே."

## 99. சிவ சிதம்பர சங்கீர்த்தனம்[278]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியச் சந்த விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலக முஞ்சரா சரமும் நின்றுநின்
றுலவு கின்றபேர் உலகம் என்பதும்
கலகம் இன்றிஎங் கணுநி றைந்தசிற்
கனம்வி ளங்குசிற் ககநம் என்பதும்
இலக ஒன்றிரண் டெனல்அ கன்றதோர்
இணையில் இன்பமாம் இதயம் என்பதும்
திலகம் என்றநங் குருசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம்.[279] (௧)

வரமு றுஞ்சுதந் தரசு கந்தரும்
மனம டங்குசிற் ககந டந்தரும்
உரமு றும்பதம் பெறவ ழங்குபேர்
ஒளிந டந்தரும் வெளிவி டந்தரும்
பரமு றுங்குணங் குறிக டந்தசிற்
பரம மாகியே பரவு மாமறைச்
சிரமு றும்பரம் பரசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம்.[280] (௨)

நித்தி யம்பரா பரநி ராதரம்
நிர்க்கு ணஞ்சதா நிலய நிட்களம்
சத்தி யம்கநா கநமி குந்ததோர்
தற்ப ரம்சிவம் சமர சத்துவம்

278. இப் பதிகம் அன்பர் தருமலிங்கம் பிள்ளை அவர்களது படிச் சுவடியில் கண்டவாறு இங்கு அச்சிட்டிருக்கிறது. அடிகளார் எழுத்து அகப்படவில்லை.

279. இப் பா முதலியவற்றில், அடிகளார், இறைவனுடைய இன்ப வடிவத்தை அனுபவித்து, ஆனந்தித் திருப்பது காண்க.

280. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருநாவுக்கரசு நாயனார் அவர்களின் செழுந் தமிழ் மறை போல்வன பார்த்தறிக:
“ பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே.”

வித்தி யஞ்சுகோ தயகி கேதநம்
விமலம் என்றுநால் வேத முந்தொழும்
சித்தி யங்குசிற் கநசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம். (௩)

அருள்அ ளித்துமெய் அன்பர் தம்மைஉள்
அங்கை நெல்லிபோல் ஆக்கு கின்றதும்
பொருள்அ ளித்துநான் மறையின் அந்தமே
புகலு கின்றதோர் புகல்அ ளிப்பதும்
வெருள்அ ளித்திடா விமல ஞாநவான்
வெளியி லேவெளி விரவி நிற்பதாம்
தெருள்அ ளிப்பதும் இருள்கெ டுப்பதும்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம். (௪)

பெத்த முஞ்சதா முத்தி யும்பெரும்
பேத மாயதோர் போத வாதமும்
சுத்த முந்தெரு வித்த முந்தரும்
சொரூப இன்பமே துய்க்கும் வாழ்க்கையும்
நித்த முந்தெரிந் துற்ற யோகர்தம்
நிமல மாகிமெய்ந் நிறைவு கொண்டசிற்
சித்த முஞ்செலாப் பரம ரகசியம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம். (௫)

திருச்சிற்றம்பலம்

---

# 100. அம்மை திருப்பதிகம்[281]

---

**கோயில்**

இரட்டை எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

**உ**லகின்உயிர் வகைஉவகை உறஇனிய அருளமுதம்
உதவும்ஆ நந்த சிவையே
உவமைசொல அரியஒரு பெரியசிவ நெறிதனை
உணர்த்துபேர் இன்ப நிதியே

இலகுபர அபரநிலை இசையும்அவ ரவர்பருவம்
இயலுற உளங்கொள் பறையே
இருமைநெறி ஒருமையுற அருமைபெறு பெருமைதனை
ஈந்தெனை அளித்த அறிவே
கலகமுறு சகசமல இருளகல வெளியான
காட்சியே கருணை நிறைவே
கடகரட விமலகய முகஅமுதும் அறுமுகக்
கநஅமுதும் உதவு கடலே
அலகில்வளம் நிறையும்ஒரு தில்லையம் பதிமேவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வாநந்த வல்லி உமையே.[282] (௧)

கற்பவைஎ லாங்கற்றுள் உணர்பவைஎ லாமனக்
கரிசற உணர்ந்து கேட்டுக்
காண்பவைஎ லாங்கண்டு செய்பவைஎ லாஞ்செய்து
கருநெறி அகன்ற பெரியோர்
பொற்பவைஎ லாஞ்சென்று புகல்பவைஎ லாங்கொண்டு
புரிபவை எலாம்பு ரிந்துன்
புகழவைஎ லாம்புகழ்ந் துறுமவைஎ லாம்உறும்
போதவை எலாம்அ ருளுவாய்
நிற்பவைஎ லாம்நிற்ப அசைபவைஎ லாம்அசைய
நிறைபவை எலாஞ்செய் நிலையே
நினைபவைஎ லாம்நெகிழ நெறிஅவைஎ லாம்ஓங்கும்
நித்தியா நந்த வடிவே

---

281. இப் பதிகம், அடிகளார் எழுத்தில், ஒரு சுவடியின்கண் காணப்படுகிறது. ஏட்டெண்கள் ௧, ௨, ௩, ௪, ௫. முதலேட்டின் தொடக்கத்தில், "சிவகாமி அம்மன். உ." என்றும், மற்றவற்றின் முதற்கண் "உ" என்றும், இதன் பத்துப் பாக்கள் தொடக்கத்திலும், "சிவமயம்" என்று முறையே ஐந்து, நான்கு, ஆறு, ஐந்து, ஏழு, ஏழு, ஆறு, ஏழு, ஏழு, நான்கு தரமும் அவர்கள் வரைந்து அகக்கண் கொண்டு அனுபவித்திருக்கிறார்கள். மேலும், எட்டாம் பாவினை அடுத்து "நமசிவாய. சிவசண்முக. சிவாய நம." என்று நான்கு முறை அடுத்தடுத்து வரைந்து, அவர்கள் ஒருமுகப்பட்டு உணர்ந்திருக்கிறார்கள். இவற்றைஎல்லாம் கண்கொண்டு காண்க. உய்த்துணர்ந்து தெளிக.

282. இப் பா முதலியவற்றில், நம் பெருமான் அவர்கள், அம்மை, தமக்கு அருள் அளித்து, மரண பயம் தவிர்த்தாள் என்பது போன்று, பலப் பல இயம்புவது காண்க.

அற்புடைய அடியர்புகழ் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.[283] (உ)

இக்கணம்இ ருந்தஇம் மெய்யென்ற பொய்க்கூரை
இனிவரு கணப்போ திலே
இடியாதி ருக்குமோ இடியுமோ என்செய்கோம்
என்செய்கோம் இடியும் எனில்யாம்
தெக்கணம் நடக்கவரும் அக்கணம் பொல்லாத
தீக்கணம் இருப்ப தென்றே
சிந்தைநைந் தயராத வண்ணம்நல் அருள்தந்த
திகழ் பரம சிவசத்தியே
எக்கணமும் ஏத்தும்ஒரு முக்கணி பரம்பரை
இமாசல குமாரி விமலை
இறைவிபை ரவிஅமலை எனமறைகள் ஏத்திட
இருந்தருள் தருந் தேவியே
அக்கணுதல் எம்பிரான் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. (ங)

---

283. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருமூலர் திருமந்திரமும், குமர குருபர சுவாமிகள் பிள்ளைத் தமிழும், பரஞ்சோதி முனிவர் வாழ்த்தும் போல்வனவற்றை ஒத்திட்டுணர்க :

"அவனை அறியா அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மா(று)அறி யேனே."

"மன்பெருங் குரவற் பிழைத்தபா வமும்மற்றை
மாமடிக ளிடுசாவமும்
வளரிளம் பருவத்து நரைதிரையும் முதிர்கூனும்
மாற்றிடப் பெறுதிகண்டாய்
அன்பர்என் புருகக் கசிந்திடு பசுந்தேனொ(டு)
அம்புலீ ஆடவாவே
ஆணிப்பொன் வில்விபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாவே."

பொய்யாத மொழியும்மயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும்உட் பிரியாத சாந்தமும்
புந்திதள ராத நிலையும்
எய்யாத வாழ்வும்வே றெண்ணாத நிறைவும்நினை
என்றும்மற வாத நெறியும்
இறவாத தகவும்மேற் பிறவாத கதியும்இவ்
ஏழையேற் கருள்செய் கண்டாய்
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவி ளக்கே
ஐயாந நம்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. (௪)

பவமான எழுகடல் கடந்துமேற் கதியான
பதிநிலை அணைந்து வாழப்
பகலான சகலமுடன் இரவான கேவலப்
பகையுந் தடாத படிஓர்
தவமான கலனில்அருள் மீகாம னல்அலது
தமியேன் நடத்த வருமோ
தானா நடக்குமோ என்செய்கேன் நின்திருச்
சரணமே சரணம் அருள்வாய்
உவமான மற்றபர சிவமான சுத்தவெளி
உறவான முத்தர் உறவே
உருவான அருவான ஒருவான ஞானமே
உயிரான ஒளியின் உணர்வே

---

283. (தொடர்ச்சி)

"அண்டங்கள் எல்லாம் அணுவாக அணுக்கள் எல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னும்
அண்டங்கள் உள்ளும் புறம்புங்கரி யாயி னும்
அண்டங்கள் ஈன்றருள் துணைஎன்பர் அறிந்த நல்லோர்."

அவமாக நீக்கிஅருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வாநந்த வல்லி உமையே. (௫)

சூரிட்ட நடையில்என் போரிட்ட மனதைநான்
சொல்விட்ட முடன்அ ணைத்துத்
துன்றிட்ட மோகம்எனும் நன்றிட்ட அமுதுண்டு
சும்மா இருத்தி என்றால்
காரிட்டி தற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலேன் அம்மம் மஓர்
கணமேனும் நில்லாது பொல்லாது புவியில்
கறங்கெ னச்சுழல் கின்றதே
தாரிட்ட நீஅருள் சீரிட்டி டாய்எனில்
தாழ்பிறவி தன்னில் அதுதான்
தன்னைவீழ்த் துவதன்றி என்னையும் வீழ்த்தும்இத்
தமிய னேன்என் செய்குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வாநந்த வல்லி உமையே. (௬)

மாயைஎனும் இரவில்என் மனையகத் தேவிடய
வாதனைஎ னுங்கள் வர்தாம்
வந்துமன அடிமையை எழுப்பிஅவ னைத்தமது
வசமாக உளவு கண்டு
மேயமதி எனும்ஒரு விளக்கினை அவித்தெனது
மெய்ந்நிலைச் சாளிகை எலாம்
வேறுற உடைத்துள்ள பொருள்எலாம் கொள்ளைகொள
மிகநடுக் குற்று நினையே
நேயம்உற ஓவாது கூவுகின் றேன்சற் றும்
நின்செவிக் கேற இலையோ
நீதிஇலை யோதரும நெறியும்இலை யோஅருளின்
நிறைவும்இலை யோஎன் செய்கேன்

ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. (எ)

வெவ்வினைக் கீடான காயம்இது மாயம்என
வேத முதல்ஆ கமம்எலாம்
விருபறைஅ றைந்தும்இது வெயில்மஞ்சள் நிறம்எனும்
விவேகர் சொற்கேட் டறிந்தும்
கவ்வைபெறு கடலுலகில் வைரமலை ஒத்தவர்
கணத்திடை இறத்தல் பலகால்
கண்ணுறக் கண்டும்இப் புலைஉடலின் மானம்ஓர்
கடுஅளவும் விடுவ தறியேன்
எவ்வம்உறு சிறியனேன் ஏழைமதி என்னமதி
இன்னமதி என்றுணர் கிலேன்
இந்தமதி கொண்டுநான் எந்தவகை அழியாத
இன்பநிலை கண்டு மகிழ்வேன்
அவ்வியம்அ கற்றிஅருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. (அ)

ஒளிமருவும் உனதுதிரு அருள்அணுத் துணையேனும்
உற்றிடில் சிறுது ரும்பும்
உலகம் படைத்தன்முதல் முத்தொழில் இயற்றும்என
உயர்மறைகள் ஓர்அ நந்தம்
தெளிவுறமு ழக்கஅது கேட்டுநின் திருவடித்
தியாநம் இல்லா மல்அவமே
சிறுதெய்வ நெறிசெல்லும் மானிடப் பேய்கள்பால்
சேராமை எற்க ருளுவாய்
களிமருவும் இமயவரை அரையன்மகள் எனவரு
கருணைதரு கலாப மயிலே
கருதும்அடி யவர்இதய கமலமலர் மிசைஅருட்
கலைகி ளரவளர் அன்னமே

அளிநறைகொள் இதழிவனை தில்லைஅம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. (௯)

நீறணிந் தொளிர்அக்க மணிதரித் துயர்சைவ
நெறிநின்று னக்கு ரியனாய்
நிமலமுறும் ஐந்தெழுத் துள்நிலையு றக்கொண்டு
நின்னடிப் பூசை செய்து
வீறணிந் தென்றும்ஒரு தன்மைபெறு சிவஞான
வித்தகர்ப தம்பர வும்ஓர்
மெய்ச்செல்வ வாழ்க்கையில் விருப்பமுடை யேன்இது
விரைந்தருள வேண்டும் அமுதே
பேறணிந் தயன்மாலும் இந்திரனும் அறிவரிய
பெருமையை அணிந்த அமுதே
பிரசமலர் மகள்கலைசொல் மகள்விசய மகள்முதல்
பெண்கள்சிரம் மேவும் மணியே
ஆறணிந் திடுசடையர் தில்லைஅம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. (௧0)

திருச்சிற்றம்பலம்

---

# 101. கலைமகளார் திருப் பதிகம்[284]

---

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தவளமலர்க் கமலமிசை வீற்றிருக்கும் அம்மனையைச் சாந்தம் பூத்த
குவளைமலர்க் கண்ணாளைப் பெண்ணொளும் பெண்ணமுதைக் கோதி லாத
பவளஇதழ்ப் பசுங்கொடியை நான்முகனார் நாஒங்கும் பாவை தன்னைக்
கவளமத கயக்கொம்பின் முலையாளைக் கலைமாதைக் கருது வோமே.[285] (௧)

சங்கம்வளர்ந் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச் சரச்சுவதி தன்னை அன்பர்
துங்கமுறக் கலைபயிற்றி உணர்வளிக்கும் கலைஞானத் தோகை தன்னைத்
திங்கணுதல் திருவைஅருட் குருவைமலர் ஓங்கியபெண் தெய்வந் தன்னைத்
தங்கமலை முலையாளைக் கலையாளைத் தொழுதுபுகழ் சாற்று கிற்பாம்.[286] (உ)

கலைபயின்ற உளத்தினிக்குங் கரும்பினைமுக் கனியைஅருட் கடலை ஓங்கும்
நிலைபயின்ற முனிவர்ரும் தொழுதேத்த நான்முகனார் நீண்ட நாவின்
தலைபயின்ற மறைபயின்று மூஉலகும் காக்கின்ற தாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி அம்மையைநாம் சிந்திப் போமே. (ங)

திருச்சிற்றம்பலம்

---

# 102. நற்றாய் கவன்றது[287]

---

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருஅருட் புனிதை மகிழநின் றாடும்
    தில்லைமன் றழகனே என்பாள்
மருவருட் கடலே மாணிக்க மலையே
    மதிச்சடை வள்ளலே என்பாள்

---

284. இப் பதிகம் அடிகளார் எழுத்திலுள்ள ஒரு சுவடியில் உள்ளபடி இங்கு அச்சிட்டிருக்கிறது.

285. இம் மூன்று பாக்களும், கலைமகள் வாழ்த்தாக, வடிவங் கொண்டிருக்கின்றன.

286. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் குமர குருபர சுவாமிகளின் செழுந்தமிழ்க் கொழுங்கனி போல்வன கண்டு களிக்க :

" வெள்ளித் தகட்டுநெட் டேடவிழ்த் தின்னிசை
        விரும்புஞ் சுரும்பர் பாட
    விளைநறவு கக்கும் பொலம்பொருட் டலர்கமல
        வீட்டுக் கொழித்தெ டுத்துத்
  தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலி லன்பினைந்
        திணையென வெடுத்த இறைநூற்
    றெள்ளமுது கூட்டுணுமொர் வெள்ளோதி மத்தினிரு
        சீறடி முடிப்பம்... "

287. இப் பதிகத்தின் மூல ஏடுகளாவது, படி ஓலைகளாவது கிடைக்கவில்லை. தொ. வே. அவர்களின் 1867-ஆம் ஆண்டு முதற் பதிப்பில் கண்டவாறு, இது இங்குப் பதித்திருக்கிறது.

இருவருக் கரிய ஒருவனே எனக்கிங்
கியார்துணை நின்னலா தென்பாள்
வெருவிஉட் குழைவாள் விழிகணீர் துளிப்பாள்
வெய்துயிர்ப் பாள்என்றன் மின்னே.[288] ( க )

ஓடுவாள் தில்லைத் திருச்சிற்றம் பலம்என்
றுருகுவாள் உணர்விலள் ஆகித்
தேடுவாள் திகைப்பாள் தியங்குவாள் ஐயோ
தெய்வமே தெய்வமே என்பாள்
பாடுவாள் பதைப்பாள் பதறுவாள் நான்பெண்
பாவிகாண் பாவிகாண் என்பாள்
வாடுவாள் மயங்கி வருந்துவாள் இருந்து
வல்வினை யேன்பெற்ற மகளே.[289] ( உ )

உலகெலாந் தழைப்பப் பொதுவினில் ஓங்கும்
ஒருதனித் தெய்வம்என் கின்றாள்
இலகுபே ரின்ப வாரிஎன் கின்றாள்
என்னுயிர்க் கிறைவன்என் கின்றாள்
அலகிலாக் கருணை அமுதன்என் கின்றாள்
அன்பர்கட் கன்பன்என் கின்றாள்
திலகவா ணுதலாள் இவ்வணம் புலம்பித்
தியக்கமுற் றழுங்குகின் றாளே. ( ௩ )

திருஎலாம் அளிக்கும் தெய்வம்என் கின்றாள்
திருச்சிற்றம் பலவன்என் கின்றாள்
உருஎலாம் உடைய ஒருவன்என் கின்றாள்
உச்சிமேல் கரங்குவிக் கின்றாள்

---

288. இப் பா முதலியவை, தம்மைக் காதலியாகவும் இறைவனைக் காதலனாகவும் கொண்டு ஒழுகும் அடிகளார் ஆன்மப் பேரானந்தம் துய்த்தலைத் தெரிக்கின்றனவாகும்.

289. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் நம் திருநாவுக்கரசு நாயனாரின் திருமறைத் தீந்தமிழ் போல்வன கண்டு களிக்க:
"வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
தானவனே என்கின் றாளால்
சினபவளத் திண்தோள்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்றன் என்கின் றாளால்
அனபவள மேகலையோ டப்பாலைக்
கப்பாலான் என்கின் றாளால்
கனபவளஞ் சிந்துங்க ழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ."

கருஎலாங் கடந்தாங் கவன்திரு மேனி
காண்பதெந் நாள்கொல்என் கின்றாள்
மருஎலாம் மயங்கும் மலர்க்குழல் முடியாள்
வருந்துகின் றாள்என் றன் மகளே. (ச)

மின்இணைச் சடில விடங்கன்என் கின்றாள்
விடைக்கொடி விமலன்என் கின்றாள்
பொன்இணை மலர்த்தாள் புநிதன்என் கின்றாள்
பொதுவிலே நடிப்பன்என் கின்றாள்
என்இணை விழிகள் அவன்திரு அழகை
என்றுகொல் காண்பதென் கின்றாள்
துன்இணை முலைகள் விம்முற இடைபோல்
துவள்கின்றாள் பசியபொற் றொடியே. (ரு)

கருங்களிற் றுரிபோர்த் தம்பலத் தாடும்
கருணைஎங் கடவுள்என் கின்றாள்
பெருங்களி துளும்ப வடவனத் தோங்கும்
பித்தரில் பித்தன்என் கின்றாள்
ஒருங்களி மிழற்றும் குழலினர் என்போல்
உறுவரோ அவனைஎன் கின்றாள்
தருங்களி உண்டாள் போல்கின்றாள் நாணும்
தவிர்க்கின்றாள் என்அருந் தவளே. (சு)

மன்றிடை நடிக்கும் மணாளனை அல்லால்
மதிப்பனோ பிறரைஎன் கின்றாள்
வன்துயர் நீக்கும் அவன்திரு வடிவை
மறப்பனோ கணமும்என் கின்றாள்
ஒன்றுமில் லவன்என் றுரைக்கினும் எல்லாம்
உடையவன் ஆகும்என் கின்றாள்
பொன்றுதல் பிறழ்தல் இனியுறேன் என்றே
பொற்றொடி பொங்குகின் றாளே. (எ)

திருத்தகு தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
தெய்வம்ஒன் றுண்டெமக் கென்பாள்
பெருத்தகுங் குமப்பொற் கலசவாண் முலையார்
பேசுக பலபல என்பாள்

மருத்தகு குழலாள் மனமொழி உடலம்
மற்றவும் அவன்கழற் கென்பாள்
குருத்தகு குவளைக் கண்ணின்நீர் கொழிப்பாள்
குதுகுலிப் பாள்பசுங் கொடியே. (அ)

அம்பலத் தாடும் அழகனைக் காணு
தருந்தவும் பொருந்துமோ என்பாள்
கம்பமுற் றிடுவாள் கண்கள்நீர் உகுப்பாள்
கைகுவிப் பாள்உளங் கனிவாள்
வம்பணி முலைகள் இரண்டுநோக் கிடுவாள்
வள்ளலைப் பரிகிலீர் என்பாள்
உம்பரான் தவஞ்செய் திடுமினீர் என்பாள்
உயங்குவாள் மயங்குவாள் உணர்வே. (கூ)

திருச்சிற்றம்பலம்

# 103. சல்லாப லகரி[290]

கலி நிலைத் துறை

திருச்சிற்றம்பலம்

சுந்தர நீறணி சுந்தரர் நடனத் தொழில்வல்லார்
வந்தனர் இங்கே வந்தனம் என்றேன் மாதேநீ
மந்தணம் இதுகேள் அந்தணம் இலகம் வாழ்வெல்லாம்
அந்தரம் என்றூர் என்னடி அம்மா அவர்சூதே.[291] (க)

---

290. 287-ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க. இதற்கும் அது பொருந்தும்.
291. இவ் விரு பாடல்களில், வள்ளற் பெருமானுர், இறைவனது பொதுத் தன்மையைப் புகல்வது காண்க.

நம்பல மாம்என நன்மனை புக்கார் நடராஜர்
எம்பல மாவீர் எம்பெரு மானீ ரேஎன்றேன்
வம்பல மடவாய் எம்முடை இன்ப வாழ்வெல்லாம்
அம்பலம் என்றார் என்னடி அம்மா அவர்சூதே.[292] (உ)

திருச்சிற்றம்பலம்

---

## இரண்டாம் திருமுறை[293]

### முற்றிற்று.

---

292. இவற்றோடு கீழ்க்கண்ட பத்திரகிரியார், பட்டினத்தடிகளார், தாயுமானார், திருமூலநாதனார் மெய்ம்மொழி போல்வன கண்டு தெளிக:

"முப்பாழும் பாழாய் முதற்பாழுஞ் சூனியமாய்
அப்பாழும் பாழாய் அன்புசெய்வ(து) எக்காலம்."

"முப்பாழுக் கப்பால் முதற்பாழ் முழுமுதலாய்
இப்போது வந்தான்காண் எனைவிழுங்கிக் கொண்டான்காண்."

"வழிஇதென் றும் அல்லா வழிஇதென் றும் சொல்லில்
பழிபழியாம் நல்லருளால் பார்த்தோர்—மொழிஉனக்கே
ஏற்றிருக்கச் சொன்னவன்றே எங்கும் பெருவெளியாம்
பார்த்தஇடம் எல்லாம்நீ பார்."

"மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன்
சேயமும் பாழ்எனச் சிவசத்தி யிற்சிவன்
ஆயவியாப் தம்எனும் முப்பாழாம் அந்தத்
தூய சொரூபத்தில் சொல்முடி வாகுமே."

293. "சல்லாப லகரி" என்னும் இத் திருப் பதிகத்தோடு, இப் பகுதியின் பாற்பட்ட இரண்டாந் திருமுறை முடிவாகிறது. தொ. வே. அவர்களின் இரண்டாந் திருமுறைத் தொகுதியிலுள்ள பின்வரும் பத்து 'உருப்படிகளை' இப் பகுதியில் பதிப்பிக்கிறதற்கில்லை. அப் பத்து உருப்படிகளில், "நல்ல் மருந்திம் மருந்து", "அம்பலத்தில் ஆடுகின்றார்". "தன்னை அறிந் தின்ப முற," "கொம்மி யடிப் பெண்கள்," "தண்மதி ஒண்முக," "தெண்டனிட்டேன்," "இன்னந் தயவு," "ஆகமும் ஆரணமும்," என்ற தொடக்கமுடைய எட்டு உருப்படிகளும் இப் பதிப்பின் முதல் புத்தகமாகிய கீர்த்தனைப் பகுதியின் பாற் பட்டன வாகலின், அவை கீர்த்தனைப் பகுதியின் 1931-ஆம் ஆண்டு முதற் பதிப்பிலும், 1933-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பிலும் வெளிவந்திருக்கின்றன. அவற்றை அங்கே காண்க.

எஞ்சி நிற்கும் "விண்படைத்த புகழ்த் தில்லை," "வெறுத்துரைத் தேன்" என்ற தொடக்கமுடைய இரண்டு உருப்படிகளும், இப் பகுதியைத் தொடர்ந்து வரவிருக்கும் பிற்பகுதிகளில் வருவதால், அவற்றை இப் பகுதியில் பதிப்பிக்கிறதற்கில்லை.

இதற்கு முன்னரே, 253, 268, 270, 275-ஆம் அடிக் குறிப்புக்களில் விவரித்திருக்கிறபடி, அவற்றில் கண்ட எட்டுப் பாக்கள், இப் பகுதிக்குப் பின் வரவிருக்கும் பகுதிகளில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், அப் பாக்களின் சுருங்கிய அளவினைக் கருதி, அவை இப் பகுதியிலும் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றை ஆங்காங்கே கண்டு தெளிக.

சிவமயம்

# திரு அருட்பா

# மூன்றாம் திருமுறை[294]

## 1. திரு உலாப் பேறு[295]

### தலைவி பாங்கியொடு கிளத்தல்

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சீரார் வளஞ்சேர் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிதனை
ஊரா ருடன்சென் றெனதுநெஞ்சம் உவகை ஓங்கப் பார்த்தனன்காண்
வாரார் முலைகண் மலைகளென வளர்ந்த வளைகள் தளர்ந்தனவால்
ஏரார் குழலாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே.[296] (க)

சீர்த்தேன் பொழிலார் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரப்
பார்த்தேன் கண்கள் இமைத்திலகாண் பைம்பொன் வளைகள் அமைத்திலகாண்
தார்த்தேன் குழலும் சரிந்தனகாண் தானை இடையிற் பிரிந்தனகாண்
ஈர்த்தேன் குழலாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே.[297] (உ)

---

294. இம் மூன்றாந் திருமுறை முழுவதற்கும், நம் திரு அருட் பிரகாச வள்ளலார் அவர்கள் திருக் கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏடுகள் கிடைக்கப்பெற்ற நற்பேற்றினால், இத் திருமுறை, தொடக்கம் முதல் இறுதி வரையில், அத்திரு ஏடுகளைப் பின்பற்றி, இங்குப் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

இத் திருமுறையில் உள்ள பத்தொன்பது பதிகங்களும் தமிழ் இயலில் அகப் பொருளின்பாற் படும். இவற்றில், நம் அடிகளார், தம்மைத் தலைமகளாகவும், இறைவனைத் தலைமகனாகவும் கொண்டு, தம் உள்ளங் காள் முதல் உச்சி வரையில் உள்ள ஒவ்வோர் அணுவும்—ஒவ்வொரு முதலும்—உள்ளும் புறமும் அன்புருவம் எய்தி, இறைவன் திருவடிப் பேரின்பத்தை இடையறாது நுகர்ந்து, அவ் வான்ம நுகர்ச்சியைப் பாலொடு கலந்த பசுந்தேனெனச் சுவைதரும்—மாறாத கட்டிளமையும் நுண் அழகும் வாய்ந்த—தண் தமிழில் மொழிந்திருப்பது, தமிழராய்ப் பிறந்தாரும், இனி முடிவற்ற காலத்தில் பிறப்பாரும் செய்த அரும்

சீதப் புனல்சூழ் வயல்ஒற்றித் தியாகப் பெருமான் திருமாட
வீதிப் பவனி வரக்கண்டேன் மென்பூந் துகில்வீழ்ந் ததுகாணேன்
போதிற் றெனவும் உணர்ந்திலேன் பொன்னனார்பின் போதுகிலேன்
ஈதற் புதமே என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. (௩)

தென்னார் சோலைத் திருஒற்றித் தியாகப் பெருமான் பவனிவரப்
பொன்னார் வீதி தனிற்பார்த்தேன் புளகம் போர்த்தேன் மயல்பூத்தேன்
மின்னார் பலர்க்கும் முன்னாக மேவி அவன்றன் எழில்வேட்டு
என்னார் அணங்கே என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. (௪)

---

294. (தொடர்ச்சி)

பெருந் தவப்பயனாகும். அன்பராவார் எல்லாரும்—மகளிரும் ஆடவரும்—தெய்வப் புலமையான் இயன்ற இம் மழ இளந் தமிழைக் கண்கொண்டு காண்க, செவிகொண்டு கேட்க, வாய்மடுத் துண்க, இவற்றான் எய்தும் ஆன்ம இன்பம் நுகர்ந்து நிறைவுறுக.

இப் பதிப்பின் ஏழாம் புத்தகமாகிய பெருநூல் பகுதியில், இங்கித மாலையைச் சார்ந்த 311-ஆம் அடிக்குறிப்பில், இவ் வகைப் பொருளின் பொது இயல், சிறப்பியல் குறித்துச் சற்று விவரமாக எழுதியிருப்பது இம் மூன்றாந் திருமுறைக்கு முழுவதும் பொருந்தும். அந்தக் கட்டுரை இவ் வமயம் முக்காலும் பார்த்தற்குரியது. ஆகலின், அன்பர்கள் முதற்கண் அதைப் பார்ப்பார்களாக.

இம் மூன்றாம் திருமுறைப் பதிகங்களைப் ‘பதங்களாக’ அமைத்துப் பாடினாலும், ‘பரத நாட்டியம்’ முதலிய ஆடல்களில் அமைத்து நுட்பமாகத் தொழிற்பட்டாலும், அவை பெரிதும் மேன்மையான—தூய்மையான—உளம் நெக்கு நெக்கு உருகும்படியான—உணர்ச்சியைப் பாடுவார் ஆடுவார் மாட்டும், அவற்றைக் கேட்பார் காணுவார் மாட்டும் உண்டாக்கும் என்பது உறுதி. ஆடல் பாடல் வல்லவர்களும் விரும்புபவர்களும், இதை உளங்கொண்டு முயன்று, தாம் பிறந்து வளர்ந்த இந்தச் செந்தமிழ் நாட்டிற்கு நற்பயன் விளைவிப்பார்களாக.

இப் பதிப்பின் முதல் புத்தகமாகிய கீர்த்தனைப் பகுதியின் 1933-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பின் சற்றே விரிந்த முன்னுரையின்கண், ஆடல் பாடல்களைக் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று இருக்கிறது. அதில் தென் தமிழிலுள்ள இசையின் தன்மையையும், அதற்கு உயிராகவும் உயிர்க்குயிராகவும் விளங்கும் சொல் நுட்பத்தையும் பொருள் நுட்பத்தையும், இவற்றைச் சார்ந்து விளங்கும் தாள நுட்பத்தையும், இவற்றோடு—சொல், பொருள், இசை, தாளங்களோடு—மெய்ப்பாட்டினையும் விளக்கி, நிறைவுற்று விளங்கும் ஆடலின் தன்மையையும் தெளிவுபடுத்தும் ஓர் முயற்சியைக் காணலாம். இப் பதிப்பாசிரியரின் அரும்பெரு நண்பர்களான ‘இசைப் பாக்கள்’ ஆசிரியர், வீணை வித்துவான், தமிழ் இசைச் செல்வர், திருவாளர் திருவனந்தபுரம் தி. இலட்சுமணப் பிள்ளை, பி. ஏ. அவர்கள், அண்ணாமலை, சென்னை ஆகிய பல்கலைக் கழகங்களில் இசைப் பேராசிரியராக இருந்த சங்கீத கலாநிதி, திருவாளர் தஞ்சாவூர் பொன்னையாப்

சீலக் குணத்தோர் புகழ்ஒற்றித் தியாகப் பெருமான் பவனிஇராக்
காலத் தடைந்து கண்டேன்என் கண்கள் இரண்டோ ஆயிரமோ
ஞாலத் தவர்கள் அலர்தூற்ற நற்றா சினைடயில் நழுவிவிழ
ஏலக் குழலாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. ( ரு )

சேயை அருளுந் திருஒற்றித் தியாகப் பெருமான் வீதிதனில்
தூய பவனி வரக்கண்டேன் சூழ்ந்த மகளிர் தமைக்காணேன்
தாயை மறந்தேன் அன்றியும்என் தனையும் மறந்தேன் தனிப்பட்டேன்
ஏயென் தோழி என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. ( சா )

---

294. (தொடர்ச்சி)
பிள்ளை அவர்கள் உள்ளிட்ட இயல் இசை நாடகத் தமிழ் வல்லுநர்களால் ஒருவாறு வரவேற்றுப் பாராட்டப்பெற்ற அக் கட்டுரை, —இத் திருமுறையானது பதங்களாக அமைத்துப் பெருஞ் சிறப்பிற்குய்ப் பாடற்கும் ஆடற்கும் உரியது என்று—மேலே சொன்ன கருத்தின் சார்பாகப் பார்த்துப் பெரிதும் ஆய்தற்குரியது. காண விழைவோர் காண்க.

மேலும், மேற்சொன்ன திருஅருட்பா - கீர்த்தனைப் பகுதியில், அருட்பாவில் பற்பல இடங்களில் வெவ்வேறாகக் கிடந்த ஆயிரக் கணக்கான இசைத் தமிழ் உருப்படிகள் முழுவதையும் ஒருசேரத் தொகுத்து, அவற்றிற்கெல்லாம், இசை நூல் வழக்கிலும், இசைக்கும் வகையிலும் சிறந்த புலமையும் தேர்ச்சியும் அடைந்து, நெடுங் காலம் இசைத் தலைவர்களாகப் பெரும்புகழ் எய்தி வாழ்ந்துவந்த, இப் பதிப்பாசிரியரின் சீரிய நண்பர்களான கீர்த்தனாசாரியார், திருவாளர். சி. ஆர். ஸ்ரீநிவாசய்யங்கார், பி.ஏ., எல்.டி. அவர்கள், ‘கந்த கானாமுதம்’ ஆசிரியரும் முருகப் பெருமான் அடியவருமான திருவாளர். என். கோடீசுவர ஐயரவர்கள் ஆகிய இரு பேராசிரியர்களைக் கொண்டு, இசை முதல்கள், அல்லது ஸ்வரங்கள், பகுத்தும் தொகுத்தும் பதிப்பித்திருக்கின்றன. அருட்பாவின் இந்த இசைத் தமிழ், போதுமானபடி கையாளப்பட்டால், தமிழ் மக்களுக்கும், இவர்கள்வழி பரந்த இந்நில உலகத்திற்கும், முன்பின் கண்டறியாத பொது நோக்கமும், தயாமூல தன்மம் என்னும் ஆன்மப் பெருநலமும் விளையும் என்பது ஒருதலை. ஆடல் பாடல் வல்லுநர்களும் மகிழ்பவர்களும், இப் பகுதியைக் கூர்ந்து ஆராய்ந்து கைக்கொண்டு, அதிலுள்ள உடற்கும் உயிர்க்கும், அறிவிற்கும் ஆன்மாவிற்கும், வரம்பற்ற இன்பந்தரும் இசை உருக்களைக் கையாண்டும், கேட்டும், மக்கட் பிறவி எடுத்த பயன்பெற்று, நிறைவுறுவார்களாக.

இங்ஙனம், திருஅருட்பா - கீர்த்தனைப் பகுதி உருப்படிகளிலும், அப் பகுதியில் காணும் இசை ஆராய்ச்சிக் கட்டுரையிலும் உளங் கொள்வோர், அடுத்தபடியாக, மேலே சொன்னவண்ணம், இம் மூன்றாந் திருமுறைப் பதிகங்களைப் பதங்களாக அமைத்துப் பாடியும் ஆடியும், நால்வகையிலும், பெரும்பயன் விளைவிப்பார் என்பதில் ஒருசிறிதும் ஐயமில்லை. திருவருள் கூட்டிவைக்குமாக!

295. மூன்றாந் திருமுறையாகத் தொ. வே. அவர்களால் வகுக்கப்பட்டிருக்கும் பத்தொன்பது பதிகங்களும், நம் வள்ளற் பெருமான் கைஎழுத்தி

திங்கள் உலவும் பொழில்ஒற்றித் தியாகப் பெருமான் திருவீதி
அங்கண் களிக்கப் பவனிவந்தான் அதுபோய்க் கண்டேன் தாயரெலாம்
தங்கள் குலத்துக் கடாதென்றார் தம்மை விடுத்தேன் தனியாகி
எங்கண் அனையாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. ( ௭ )

தேசார் மணிசூழ் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரக்
கூசா தோடிக் கண்டரையில் கூறை இழந்தேன் கைவளைகள்
வீசா நின்றேன் தாயரெலாம் வீட்டுக் கடங்காப் பெண்ணென்வே
ஏசா நிற்க என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. ( ௮ )

தேடார்க் கரியான் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரத்
தோடார் பணைத்தோட் பெண்களொடும் சூழ்ந்து மகிழ்ந்து கண்டதன்றி
வாடாக் காதல் கொண்டறியேன் வளையும் துகிலும் சோர்ந்ததுடன்
ஏடார் கோதை என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. ( ௯ )

---

295. (தொடர்ச்சி)

ளுள்ள திருச்சுவடி ஒன்றில் காணப்படுகின்றன. அந்தந்தப் பதிகத்தைச் சார்ந்த அடிக் குறிப்புக்களில், அதனதன் ஏட்டெண்களும், அதில் அடிகளார் எழுத்தில் உள்ள குறிகளும், சொற்களும், சொற்றொடர்களும், மறைமொழிகளும் அவ்வவ்வாறே குறிக்கப்படும். பதிகப் பெயரும், பதிகம் வகுக்கப்பட்ட துறையின் பெயரும், பா இனப்பெயரும், இல்லாத இடங்களில் இடப்பெயரும், தொ. வே. அவர்களின் 1867-ஆம் ஆண்டு முதற் பதிப்பில்தான், முதல் முதல் காணப்படுகின்றன.

இத் திருப்பதிக ஏட்டெண்கள் க, உ. இவற்றின் முதற்கண் முறையே, "உ. சிவநம. சண்முக நம. ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் அடிகளார் எழுதிச் சிந்தித்திருக்கிறார்கள்.

296. 'இப் பதிகப் பாக்களில், இறைவனது அளப்பரும் காட்சியினைக் காணப்பெற்ற அடிகளார், அவ் விறைவன்பால், தாம் அன்புமயமாக நிலைத்து விளங்கியதை, எழுதரு நுண் மாண் அழகிற்றாய வடிதீந் தமிழில், கூறியிருத்தல் காண்க.

297. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருஞானசம்பந்தப் பெருமானாரின் பெருமறை போல்வன பார்த்துணர்க:

"கரும்பமர் வில்லியைக் காய்ந்து காதற்
காரிகை மாட்டருளி
அரும்பமர் கொங்கை யோர்பால் மகிழ்ந்த
அற்புதஞ் செப்பரிதால்
பெரும்பக லேவந்தென் பெண்மை கொண்டு
பேர்த்தவர் சேர்ந்தஇடஞ்
சுரும்பமர் சோலைகள் சூழ்ந்த செம்மைத்
தோணி புரந்தானே."

திருமாற் கரியான் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரப்
பெருமான் மனமும் நாணும்மூன் னும் பின்னும் சென்று கண்டேமால்
பொருமா நின்றேன் தாயொலாம் போஎன் றீர்க்கப் போதுகிலேன்
இருண்மாண் குழலாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. (௧0)

திருச்சிற்றம்பலம்

---

# 2. நாரையும் கிளியும் நாட்டுறு தூது[298]

---

தலைவி பறவைமேல் வைத்துப் பையுளேய்தல்

**திரு ஒற்றியூர்**

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கண்ணன் நெடுநாள் மண்ணிடந்தும் காணக் கிடையாக் கழலுடையார்
நண்ணும் ஒற்றி நகரார்க்கு நாராய் சென்று நவிற்றாயோ
அண்ணல் உமது பவனிகண்ட அன்று முதலாய் இன்றளவும்
உண்ணும் உணவோ டுறக்கமும்நீத் துற்றாள் என்றிவ் வொருமொழியே.[299] (௧)

மன்னுங் கருணை வழிவிழியார் மதுர மொழியார் ஒற்றிநகர்த்
துன்னும் அவர்தந் திருமுன்போய்ச் சுகங்காள் நின்று சொல்லீரோ
மின்னுந் தேவர் திருமுடிமேல் விளங்குஞ் சடையைக் கண்டவள்தன்
பின்னுஞ் சடையை அவிழ்த்தொன்றும் பேசாள் எம்மைப் பிரிந்தென்றே.[300]

---

298. இப் பதிக ஏட்டெண்கள் ௩. ௪. இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமயம். ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் அடிகளார் எழுதி உளங்கொண்டிருக்கிறார்கள்.

299. பாசிளந் தமிழில் தோய்ந்து பொலியும் இப் பா முதலியவற்றில், நம்பெருமானார், இறைவனைக் கண்டு அன்புருவமான தாம், பின் இறைவனைக் காணாத போதெல்லாம் உறும் துயரத்தையும், மெய்ப் பாட்டினையும், அவற்றைச் சார்ந்து நிகழும் நிகழ்ச்சிகளையும், இறைவன் திரு அடிகளில் ஏற்பித்து, ஊனும் உளமும் உருக இரங்கிக் குறையிரத்தலை அகக்கண் கொண்டு காண்க.

300. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருஞான சம்பந்தப் பெருமானாரின் பொய்யாமறை போன்றவற்றை ஒருமை உளத்தோடு உணர்க:

"கருவடிய பசுங்கால்வெண் குருகேயொண் கழிநாராய்
ஒருவடியாள் இரந்தாள்என் றொருநாட்சென் றுரையீரே
செருவடிதோட் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
திருவடிதன் திருவருளே பெறலாமோ திறத்தவர்க்கே."

வடிக்குந் தமிழ்த்தீந் தேனென்ன வசனம் புகல்வார் ஒற்றிதனில்
நடிக்குந் தியாகர் திருமுன்போய் நாராய் நின்று நவிற்றாயோ
பிடிக்குங் கிடையா நடைஉடைய பெண்க ளெல்லாம் பிச்சிஎன
நொடிக்கும் படிக்கு மிகுங்காம நோயால் வருந்தி நோவதுவே. (௩)

மாய மொழியார்க் கறிவரியார் வண்கை உடையார் மறைமணக்கும்
தூய மொழியார் ஒற்றியிற்போய்ச் சுகங்காள் நின்று சொல்லீரோ
நேய மொழியாள் பந்தாடாள் நில்லாள் வாச நீராடாள்
ஏய மொழியாள் பாலனமும் ஏலாள் உம்மை எண்ணிஎன்றே. (௪)

ஒல்லார் புரமூன் றெரிசெய்தார் ஒற்றி அமர்ந்தார் எல்லார்க்கும்
நல்லார் வல்லார் அவர்முன்போய் நாராய் நின்று நவிற்றுதியே
அல்லார் குழலாள் கண்ணீராம் ஆற்றில் அலைந்தாள் அணங்கனையார்
பல்லார் சூழ்ந்து பழிதூற்றப் படுத்தாள் விடுத்தாள் பாயல்என்றே. (௫)

ஓவா நிலையார் பொற்சிலையார் ஒற்றி நகரார் உண்மைசொலும்
தூவாய் மொழியார் அவர்முன்போய்ச் சுகங்காள் நின்று சொல்லீரோ
பூவார் முடியாள் பூமுடியாள் போவாள் வருவாள் பொருந்துகிலாள்
ஆவா என்பாள் மகளிரொடும் ஆடாள் தேடாள் அனம்என்றே. (௬)

வட்ட மதிபோல் அழகொழுகும் வதன விடங்கர் ஒற்றிதனில்
நட்ட நவில்வார் அவர்முன்போய் நாராய் நின்று நவிற்றாயோ
கட்ட அவிழ்ந்த குழல்முடியாள் கடுகி விழுந்த கலைபுனையாள்
முட்ட விலங்கு முலையினையும் மூடாள் மதனை முனிந்தென்றே. (௭)

வேலை விடத்தை மிடற்றணிந்த வெண்ணீற் றழகர் விண்ணளவும்
சோலை மருவும் ஒற்றியிற்போய்ச் சுகங்காள் அவர்முன் சொல்லீரோ
மாலை மனத்தாள் கற்பகப்பூ மாலை தரினும் வாங்குகிலாள்
காலை அறியாள் பகல்அறியாள் கங்குல் அறியாள் கனிந்தென்றே. (௮)

மாண்காத் தளிர்க்கும் ஒற்றியினார் வான மகளிர் மங்கலப்பொன்
நாண்காத் தளித்தார் அவர்முன்போய் நாராய் நின்று நவிற்றுதியோ
பூண்காத் தளியாள் புலம்பிநின்றாள் புரண்டாள் அயன்மால் ஆதியராம்
சேண்காத் தளிப்போர் தேற்றுகினும் தேறாள் மனது திறன்என்றே. (௯)

தேசு பூத்த வடிவழகர் திருவாழ் ஒற்றித் தேவர்புலித்
தூசு பூத்த கீளுடையார் சுகங்காள் அவர்முன் சொல்லீரோ
மாசு பூத்த மணிபோல வருந்தா நின்றாள் மங்கையர்வாய்
ஏசு பூத்த அலர்க்கொடியாய் இளைத்தாள் உம்மை எண்ணிஎன்றே. (௪0)

திருச்சிற்றம்பலம்

# 3. இரங்கன் மாலை[301]

தலைவி இரங்கல்

**திரு ஒற்றியூர்**

***அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்***

திருச்சிற்றம்பலம்

நன்று புரிவார் திருஒற்றி நாதர் எனது நாயகனார்
மன்றுள் அமர்வார் மால்விடைமேல் வருவார் அவரை மாலையிட்ட
அன்று முதலாய் இன்றளவும் அந்தோ சற்றும் அணைந்தறியேன்
குன்று நிகர்பூண் முலையாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே.[302] ( க )

தகைசேர் ஒற்றித் தலத்தமர்ந்தார் தரியார் புரங்கள் தழலாக்க
நகைசேர்ந் தவரை மாலையிட்ட நாளே முதல்இந் நாள்அளவும்
பகைசேர் மதன்பூச் சூடல்அன்றிப் பதப்பூச் சூடப் பார்த்தறியேன்
குகைசேர் இருட்பூங் குழலாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே.[303] ( உ )

---

301. இப் பதிக ஏட்டெண்கள். ௫, ௬, எ, அ, ௯. இவற்றுள் ௫, எ-௯-ஆம் ஏடுகளின் முதலில், "உ. சிவமயம்." என்றும், ௬-ஆவதில் "உ" என்றும் அடிகளார் குறித்துச் சிந்தித்திருக்கிறார்கள்.

302. தெள்ளார் அமுதத் திரள் அனைய இப் பாக்களில் வள்ளலார் அவர்கள், தம்மைச் சிறுபோதில் ஆட்கொண்டு அன்பு செலுத்திய இறைவன், இஞ்ஞான்று மறைந்துறைந்து அருளாதிருப்பது குறித்து, வாய் திறந்து அலறி வருந்துதல் காண்க.

303. இப் பா முதலியவற்றோடு, கீழ்க்கண்ட நம் ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை போன்ற அருமறை அறிந்துணர்க :

"இலங்கை மன்னன் இருபது தோளிறக்
கலங்கக் கால்விர லாற்கடைக் கண்டவன்
வலங்கொள் மாமதில் சூழ்திரு ஆரூரான்
அலங்கல் தந்தெனை யஞ்சலெ னுங்கொலோ."

தோடார் குழையார் ஒற்றியினார் தூயர்க் கலது சுகம்அருள
நாடார் அவர்க்கு மாலையிட்ட நாளே முதல்இந் நாள்அளவும்
சூடா மலர்போல் இருந்ததல்லால் சுகமோர் அணுவுந் துய்த்தறியேன்
கோடா ஒல்குங் கொடியேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. ( ரு )

அண்டர் எவர்க்கும் அறிவொண்ணார் அணியார் ஒற்றி யார்நீல
கண்டர் அவர்க்கு மாலையிட்ட கடனே அன்றி மற்றவரால்
பண்டம் அறியேன் பலன்அறியேன் பரிவோ டணையப் பார்த்தறியேன்
கொண்டன் மணக்குங் கோதாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே.

பாடல் கமழும் பதம்உடையார் பணைசேர் ஒற்றிப் பதிஉடையார்
வாடல் எனவே மாலையிட்ட மாண்பே அன்றி மற்றவரால்
ஆடல் அளிசூழ் குழலாய்உன் ஆணை ஒன்றும் அறியனடி
கூடல் பெறவே வருந்துகின்றேன் குறையை எவர்க்குக் கூறுவனே. ( ள )

துடிசேர் கரத்தார் ஒற்றியில்வாழ் சோதி வெண்ணீற் றழகர்அவர்
கடிசேர்ந் தென்னை மாலையிட்ட கடனே அன்றி மற்றவரால்
பிடிசேர் நடைநேர் பெண்களைப்போல் பின்னை யாதும் பெற்றறியேன்
கொடிநேர் இடையாய் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. ( சா )

ஒற்றி நகர்வாழ் உத்தமனார் உயர்மால் விடையார் உடையார்தாம்
பற்றி என்னை மாலையிட்ட பரிசே அன்றிப் பகைதெரிந்து
வெற்றி மதனன் வீறடங்க மேவி அணைந்தார் அல்லரடி
குற்றம் அணுவும் செய்தறியேன் குறையை எவர்க்குக் கூறுவனே. ( எ )

வானும் புவியும் புகழ்ஒற்றி வாணர் மலர்க்கை மழுவினொடு
மானும் உடையார் என்றனக்கு மாலை யிட்ட தொன்றல்லால்
நானும் அவருங் கூடியொரு நாளுங் கலந்த தில்லையடி
கோனுந் தியவேற் கண்ணாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. ( அ )

தெறித்து மணிகள் அலைசிறக்கும் திருவாழ் ஒற்றித் தேவர்எனை
வறித்திங் கெளியேன் வருந்தாமல் மாலை யிட்ட நாள்அலது
மறித்தும் ஒருநாள் வந்தென்னை மருவி அணைய நானறியேன்
குறித்திங் குழன்றேன் மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. ( கூ )

மின்னே டொக்கும் வேணியினார் விமலர் ஒற்றி வாணர்எனைத்
தென்னே டொக்க மாலையிட்டுச் சென்றார் பின்பு சேர்ந்தறியார்
என்னே டொத்த பெண்களெலாம் ஏசி நகைக்க இடருழந்தேன்
கொன்னே டொத்த கண்ணாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. ( க0 )

உடுத்தும் அதளார் ஒற்றியினார் உலகம் புகழும் உத்தமனார்
தொடுத்திங் கெனக்கு மாலையிட்ட சுகமே அன்றி என்னுடனே
படுத்தும் அறியார் எனக்குரிய பரிவிற் பொருள்ஓர் எள்ளளவும்
கொடுத்தும் அறியார் மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௧)

உழைஒன் றணிகைத் தலம்உடையார் ஒற்றி உடையார் என்றனக்கு
மழைஒன் றலர்பூ மாலையிட்டார் மறித்தும் வந்தார் அல்லரடி
பிழைஒன் றறியேன் பெண்களெலாம் பேசி நகைக்கப் பெற்றேன்காண்
குழைஒன் றியகண் மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௨)

ஏடார் பொழில்சூழ் ஒற்றியினார் என்கண் அனையார் என்தலைவர்
பீடார் மாலை இட்டதன்றிப் பின்னோர் சுகமும் பெற்றறியேன்
வாடாக் காதற் பெண்களெலாம் வலது பேச நின்றனடி
கோடார் கொங்கை மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௩)

கஞ்சன் அறியார் ஒற்றியினார் கண்மூன் றுடையார் கனவினிலும்
வஞ்சம் அறியார் என்றனக்கு மாலை இட்ட தொன்றல்லால்
மஞ்சம் அதனில் என்னொடு மருவி இருக்க நான்அறியேன்
கொஞ்சம் மதிநேர் நுதலாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௪)

ஆலம் இருந்த களத்தழகர் அணிசேர் ஒற்றி ஆலயத்தார்
சால எனக்கு மாலையிட்ட தன்மை ஒன்றே அல்லாது
கால நிரம்ப அவர்புயத்தைக் கட்டி அணைந்த தில்லையடி
கோல மதிவாண் முகத்தாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௫)

நெய்தல் பணைசூழ் ஒற்றியினார் நிருத்தம் பயில்வார் மால்அயனும்
எய்தற் கரியார் மாலையிட்டார் எனக்கென் றுரைக்கும் பெருமைஅல்லால்
உய்தற் கடியேன் மனையின்கண் ஒருநா ளேனும் உற்றறியார்
கொய்தற் கரிதாங் கொடியேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௬)

போர்க்கும் உரியார் மால்பிரமன் போகி முதலாம் புங்கவர்கள்
யார்க்கும் அரியார் எனக்கெளியர் ஆகி என்னை மாலையிட்டார்
ஈர்க்கும் புகுதா முலைமதத்தை இன்னுந் தவிர்த்தார் அல்லரடி
கூர்க்கும் நெடுவேற் கண்ணாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௭)

இறையார் ஒற்றி யூரினிடை இருந்தார் இனியார் என்கணவர்
மறையார் எனக்கு மாலையிட்டார் மருவார் என்னை வஞ்சனையோ
பொறையார் இரக்கம் மிகஉடையார் பொய்ஒன் றுரையார் பொய்யலடி
குறையா மதிவாண் முகத்தாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௮)

உடுப்பார் கரித்தோல் ஒற்றிஎனும் ஊரார் என்னை உடையவனார்
மடுப்பார் இன்ப மாலையிட்டார் மருவார் எனது பிழைஉரைத்துக்
கெடுப்பார் இல்லை என்சொலினும் கேளார் எனது கேள்வர்அவர்
கொடுப்பார் என்றோ மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௧௯)

எருதில் வருவார் ஒற்றியுளார் என்நாயகனார் எனக்கினியார்
வருதி எனவே மாலையிட்டார் வந்தால் ஒன்றும் வாய்திறவார்
கருதி அவர்தங் கட்டளையைக் கடந்து நடந்தேன் அல்லவடி
குருகுண் கரத்தாய் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௨௦)

மாவென் றுரித்தார் மாலையிட்ட மணாளர் என்றே வந்தடைந்தால்
வாவென் றுரையார் போஎன்னார் மௌனஞ் சாதித் திருந்தனர்காண்
ஆவென் றலறிக் கண்ணீர்விட் டழுதால் துயரம் ஆறுமடி
கோவென் றிருவேல் கொண்டாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௨௧)

நாட்டும் புகழார் திருஒற்றி நகர்வாழ் சிவனார் நன்மையெலாம்
காட்டும் படிக்கு மாலையிட்ட கணவர் எனஓர் காசளவில்
கேட்டும் அறியேன் தந்தறியார் கேட்டால் என்ன விளையுமடி
கோட்டு மணிப்பூண் முலையாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௨௨)

வெற்பை வளைத்தார் திருஒற்றி மேவி அமர்ந்தார் அவர்எனது
கற்பை அழித்தார் மாலையிட்டுக் கணவர் ஆனார் என்பதல்லால்
சிற்ப மணிமே டையில்என்னைச் சேர்ந்தார் என்ப தில்லையடி
கொற்பை அரவின் இடையாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௨௩)

என்ன கொடுத்தும் கிடைப்பரியார் எழிலார் ஒற்றி நாதர்எனைச்
சின்ன வயதில் மாலையிட்டுச் சென்றார் சென்ற திறன்அல்லால்
இன்னும் மருவ வந்திலர்காண் யாதோ அவர்தம் எண்ணமது
கொன்னுண் வடிவேற் கண்ணாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௨௪)

கரும்பின் இனியார் கண்ணுதலார் கடிசேர் ஒற்றிக் காவலனார்
இரும்பின் மனத்தேன் தனைமாலை இட்டார் இட்ட அன்றலது
திரும்பி ஒருகால் வந்தென்னைச் சேர்ந்து மகிழ்ந்த தில்லையடி
குரும்பை அனைய முலையாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. (௨௫)

தீது தவிர்ப்பார் திருஒற்றித் தியாகர் அழியாத் திறத்தர்அவர்
மாது மகிழ்தி எனஎன்னை மாலை யிட்டார் மாலையிட்ட
போது கண்ட திருமுகத்தைப் போற்றி மறித்தும் கண்டறியேன்
கோது கண்டேன் மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௨௬)

வென்றிக் கொடிமேல விடைஉயர்த்தார் மேலார் ஒற்றி யூரர்என்பால்
சென்றிக் குளிர்பூ மாலையிட்டார் சேர்ந்தார் அல்லர் யான்அவரை
அன்றிப் பிறரை நாடினனோ அம்மா ஒன்றும் அறியனடி
குன்றிற் றுயர்கொண் டழும்எனது குறையை எவர்க்குக் கூறுவனே. (உஎ)

தோளா மணிநேர் வடிவழகர் சோலை சூழ்ந்த ஒற்றியினார்
மாளா நிலையர் என்றனக்கு மாலை இட்டார் மருவிலர்காண்
கேளாய் மாதே என்னிடையே கெடுதி இருந்த தெனினும்அதைக்
கோளார் உரைப்பார் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (உஅ)

வாடா திருந்தேன் மழைபொழியும் மலர்க்கா வனஞ்சூழ் ஒற்றியினார்
ஏடார் அணிபூ மாலைஎனக் கிட்டார் அவர்க்கு மாலையிட்டேன்
தேடா திருந்தேன் அல்லடியான் தேடி அருகிற் சேர்ந்தும்எனைக்
கூடா திருந்தார் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (உகூ)

நலத்திற் சிறந்த ஒற்றிநகர் நண்ணும் எனது நாயகனார்
வலத்திற் சிறந்தார் மாலையிட்டு மறித்தும் மருவார் வாராரேல்
நிலத்திற் சிறந்த உறவினர்கள் நிந்தித் தையோ எனைத்தமது
குலத்திற் சேரார் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௩௦)

ஈர்ந்தேன் அளிசூழ் ஒற்றிஉளார் என்கண் மணியார் என்கணவர்
வார்ந்தேன் சடையார் மாலையிட்டும் வாழா தலைந்து மனமெலிந்து
சோர்ந்தேன் பதைத்துத் துயர்க்கடலைச் சூழ்ந்தேன் இன்னும் துடிக்கின்றேன்
கூர்ந்தேன் குழலாய் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. (௩க)

திருச்சிற்றம்பலம்

## 4. திரு உலா வியப்பு[304]

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வெள்ளச் சடையார் விடையார்செவ் வேலார் நூலார் மேலார்தம்
உள்ளத் துறைவார் நிறைவார்நல் ஒற்றித் தியாகப் பெருமானார்
வள்ளற் குணத்தார் திருப்பவனி வந்தார் என்றார் அம்மொழியை
விள்ளற் குள்ளே மனம்என்னை விட்டங் கவர்முன் சென்றதுவே.[305] (க)

304. இப் பதிக எட்டெண்கள் ௰உ, ௰௩. இவற்றின் முதற்கண் முறையே, "உ. ஒற்றியூர்." என்றும் "உ" என்றும் அடிகளார் வரைந்து உள்ளிருக்கிறார்கள்.

அந்தார் அணியும் செஞ்சடையார் அடையார் புரமூன் றவைஅனலின்
உந்தா நின்ற வெண்ணகையார் ஒற்றித் தியாகர் பவனிஇங்கு
வந்தார் என்றார் அங்கேதோநான் மகிழ்ந்து காண வருமுன்னம்
மந்தா கினிபோல் மனம்என்னை வஞ்சித் தவர்முன் சென்றதுவே.[306] ( உ )

பொன்னேர் சடையார் கீள்உடையார் பூவை தனைஓர் புடைஉடையார்
தென்னேர் பொழில்சூழ் ஒற்றியூர்த் திகழுந் தியாகர் திருப்பவனி
இன்னே வந்தார் என்றார்நான் எழுந்தேன் நான்அங் கெழுவதற்கு
முன்னே மனம்என் தனைவிடுத்து முந்தி அவர்முன் சென்றதுவே. ( ங )

காண இனியார் என்இரண்டு கண்கள் அனையார் கடல்விடத்தை
ஊணின் நுகர்ந்தார் உயர்ந்தார்நல் ஒற்றித் தியாகப் பெருமானார்
மாண வீதி வருகின்றார் என்றார் காண வருமுன்நான்
நாண எனைவிட் டென்மனந்தான் நயந்தங் கவர்முன் சென்றதுவே. ( ச )

செழுந்தெண் கடற்றெள் அமுதனையார் தியாகர் எனும்ஓர் திருப்பெயரார்
கொழுந்தண் பொழில்சூழ் ஒற்றியினார் கோலப் பவனி என்றார்நான்
எழுந்திங் கவிழ்ந்த கலைபுனைந்தங் கேகு முன்னர் எனைவிடுத்தே
அழுந்து நெஞ்சம் விழுந்துகூத் தாடி அவர்முன் சென்றதுவே. ( ரு )

சால மாலும் மேலும்இடந் தாலும் அறியாத் தழல்உருவார்
சேலும் புனலும் சூழ்ஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
பாலுந் தேனுங் கலந்ததெனப் பவனி வந்தார் என்றனர்யான்
மேலுங் கேட்கு முன்னமனம் விட்டங் கவர்முன் சென்றதுவே. ( சு )

பின்தாழ் சடையார் தியாகர்எனப் பேசும் அருமைப் பெருமானார்
மன்றார் நடத்தார் ஒற்றிதனில் வந்தார் பவனி என்றார்நான்
நன்றாத் துகிலைத் திருத்துமுனம் நலஞ்சேர் கொன்றை நளிர்ப்பூவின்
மென்தார் வாங்க மனம்என்னை விட்டங் கவர்முன் சென்றதுவே. ( எ )

---

305. செழுந் தீங் கனி எனச் சுவைதரும் இப் பா முதலியவற்றில், நம் வள்ளற் பெருமானார், தம்மை இறைவன் பெருங்கருணையோடு ஆட்கொள்ள எழுந்தருளுவது காணலும், அந் நொடிப்போதில், தம் நெஞ்சம் தமக்குமுன் மின்னலென விரைந்து சென்று இறைவனோடு ஒன்றுபட்டுவிட்டது என்று அறிந்து, அவர்கள் உலப்புறு இன்புறுவது கண்டு, உளங் களி கொள்க.

306. இப் பா முதலியவற்றோடு, அடியிற் காணும் திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரத் தீந்தேன் போல்வன சுவைத்து இன்புறுக:
"செஞ்சுடர்ச் சோதிப் பவளத் திரள்திகழ் முத்தனைய
நஞ்சணி கண்டன்நல் லூருறை நம்பனை நானொருகால்
துஞ்சிடைக் கண்டு கனவின் தலைத்தொழு தேற்கவன்றான்
நெஞ்சிடை நின்றக லான்பல காலமும் நின்றனனே."

கண்ணார் நுதலார் மணிகண்டர் கனக வரையாங் கனசிலையார்
பெண்ணார் பாகர் தியாகர்எனப் பேசும் அருமைப் பெருமானார்
தண்ணார் பொழில்சூழ் ஒற்றிதனில் சார்ந்தார் பவனி என்றனர்நான்
நண்ணு முன்னம் என்மனந்தான் நாடி அவர்முன் சென்றதுவே. (அ)

ஈமப் புறங்காட் டெரியாடும் எழிலார் தில்லை இனிதமர்வார்
சேமப் புலவர் தொழும்ஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
வாமப் பாவை யொடும்பவனி வந்தார் என்றார் அதுகாண்பான்
காமப் பறவை போல்என்மனம் கடுகி அவர்முன் சென்றதுவே. (கூ)

சூலப் படையார் பூதங்கள் சுற்றும் படையார் துதிப்பவர்தம்
சீலப் பதியார் திருஒற்றித் திகழும் தியாகப் பெருமானார்
நீலக் களத்தார் திருப்பவனி நேர்ந்தார் என்றார் அதுகாண்பான்
சாலப் பசித்தார் போல்மனந்தான் தாவி அவர்முன் சென்றதுவே. (க0)

திருச்சிற்றம்பலம்

## 5. சல்லாப வியன்மொழி[307]

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

காது நடந்த கண்மடவாள் கடிமா மனைக்குக் கால்வருந்தத்
தூது நடந்த பெரியவர்சிற் சுகத்தா ரொற்றித் தொன்னகரார்
வாது நடந்தான் செய்கின்றார் மாது நடந்து வாவென்றார்
போது நடந்த தென்றேனெப் போது நடந்த தென்றாரே.[308] (க)

307. இப் பதிக ஏட்டெண்கள் ம்சு, ம்ரு. இவற்றின் முதலில் முறையே, "உ. ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் அடிகளார் எழுதியிருக்கிறார்கள்.

308. செம்பாலொடு கலந்த பைந்தேன் என இனிக்கும் இப் பா முதலியவற்றில், நம் வள்ளற் பெருமானார், இறைவனோடு தாம், தலைவனொடு தலைவியாய், அன்பு வெள்ளத்தில் மூழ்கி, இன்ப மொழிகள் மொழிந்து, அளவளாவுதல் கண்டு களிக்க.
இஃது, இப் பதிப்பின் 7-ஆம் புத்தகமாகிய பெருநூல் பகுதியில் உள்ள இங்கித மாலையைப் போல்வது. இது குறித்து, இப் பகுதியின் 294-ஆம் அடிக் குறிப்பினைக் காண்க.

கச்சை யிடுவார் படவரவைக் கண்மூன் றுடையார் வாமத்திற்
பச்சை யிடுவா ரொற்றியுள்ளார் பரிந்தென் மனையிற் பலிக்குற்றார்
இச்சை யிடுவா ருண்டியென்றா ருண்டே னென்றே னெனக்கின்று
பிச்சை யிடுவா யென்றார்நான் பிச்சை யடுவே னென்றேனே.[309] (உ)

கருதற் கரியார் கரியார்முன் காணக் கிடையாக் கழலடியார்
மருதத் துறைவார் திருவொற்றி வாண ரின்றென் மனைக்குற்றார்
தருதற் கென்பா லின்றுவந்தீ ரென்றே னதுநீ தானென்றார்
வருதற் குரியீர் வாருமென்றேன் வந்தே னென்று மறைந்தாரே. (ந)

கல்லை வளைக்கும் பெருமானார் கழிசூ ழொற்றிக் கடிநகரார்
எல்லை வளைக்குந் தில்லையுள்ளா ரென்றன் மனைக்குப் பலிக்குற்றார்
அல்லை வளைக்குங் குழலன்ன மன்பி னுதவா விடிலோபம்
இல்லை வளைக்கு மென்றார்நா னில்லை வளைக்கு மென்றேனே. (ச)

வெற்றி யிருந்த மழுப்படையார் விடையார் மேரு வில்லுடையார்
பெற்றி யிருந்த மனத்தர்தமுட் பிறங்குந் தியாகப் பெருமானார்
சுற்றி யிருந்த பெண்களெல்லாஞ் சொல்லி நகைக்க வருகணைந்தார்
ஒற்றி யிருமென் றுரைத்தேனு னொற்றி யிருந்தே னென்றாரே. (ரு)

விண்டங் கமரர் துயர்தவிர்க்கும் வேற்கை மகனை விரும்பிநின்றோர்
வண்டங் கிசைக்கும் பொழிலொற்றி வதிவா ரென்றன் மனையடைந்தார்
தண்டங் கழற்கு நிகரானீர் தண்டங் கழற்கென் றேன்மொழியாற்
கண்டங் கறுத்தா யென்றார்நீர் கண்டங் கறுத்தீ ரென்றேனே. (சு)

விற்கண் டாத நுதன்மடவாள் வேட்ட நடன வித்தகனார்
சொற்கண் டாத புகழொற்றித் தூய ரின்றென் மனைபுகுந்தார்
நிற்கண் டார்கண் மயலடைவா ரென்றார் நீர்தா நிகழ்த்தியசொற்
கற்கண் டாமென் றுரைத்தேனுன் கற்கண் டாமென் றுரைத்தாரே. (எ)

---

309. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் நம் அப்பர் பெருமானாரின் என்புருக்கும் தன்மையதான திருவாய் மொழி போல்வன பார்த்து மகிழ்க :

"கட்டங்கந் தாம்ஒன்று கையில் ஏந்திக்
கடிய விடையேறிக் காபா லியார்
இட்டங்கள் தாம்பேசி இல்லே புக்கு
இடும்பலியும் இடக்கொள்ளார் போவா ரல்லர்
பட்டிமையும் படிறுமே பேசா நின்றார்
பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின் றார்தாம்
அட்டியசில் பலியும் கொள்ளார் விள்ளார்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே."

விடையார் கொடிமே லுயர்த்தருளும் வேத கீதப் பெருமானார்
உடையா ரொற்றி யூரமர்ந்தா ருவக்கென் மனையி னிறடைந்தார்
இடையா வைய மென்றார்நா னிடைதா னைய மென்றேனாற்
கடையா ரளியா ரென்றார்கட் கடையா ரளியா ரென்றேனே. ( அ )

நாடொன் றியசீர்த் திருவொற்றி நகரத் தமர்ந்த நாயகனார்
ஈடொன் றில்லா ரென்மனையுற் றிருந்தார் பூவுண் டெழில்கொண்ட
மாடொன் றெங்கே யென்றேனுன் மனத்தி லென்றார் மகிழ்ந்தமர்வெண்
காடொன் றுடையீ ரென்றேன்செங் காடொன் றுடையே னென்றாரே. ( க

சொல்லா லியன்ற தொடைபுனைவார் தாயா ரொற்றித் தொன்னகரார்
அல்லா லியன்ற மனத்தார்பா லணுகா ரென்றென் மனைபுகுந்தார்
வல்லா லியன்ற முலையென்றார் வல்லார் நீரென் றேனுன்சொற்
கல்லா லியன்ற தென்றார்முன் கல்லா லியன்ற தென்றேனே. ( க0 )

திருச்சிற்றம்பலம்

---

# 6. இன்பக் கிளவி[310]

---

திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தில்லை வளத்தார் அம்பலத்தார் திருவேட் களத்தார் செவ்வணத்தார்
கல்லை வளைத்தார் என்றன்மனக் கல்லைக் குழைத்தார் கங்கணத்தால்
எல்லை வளைத்தார் தியாகர்தமை எழிலார் ஒற்றி எனும்நகரில்
ஒல்லை வளைத்துக் கண்டேன்நான் ஒன்றும் உரையா திருந்தாரே.[311] ( க )

---

310. இப் பதிக எட்டெண்கள் ௰௬, ௰எ. இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமயம். ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

311. நெஞ்சத்தின் நிறை அழிக்கும் செந்தமிழ் வளம் மீதூரும் இப் பா முதலியவற்றில், பெருமான் அவர்கள், இறைவனது அருள் நலத்தை அறிந்தறிந்து, உணர்ந்துணர்ந்து, அன்பில் தோய்ந்த இன்மொழிகள் உரிமையால் இயம்பி இன்புறுதல் நோக்கிப் பேரின்பத்தின் பெற்றிமை காண்க.

இருந்தார் திருவா ரூரகத்தில் எண்ணுக் கொடியார் இதயத்தில்
பொருந்தார் கொன்றைப் பொலன்பூந்தார் புனைந்தார் தம்மைப் புகழ்ந்தார்கண்
விருந்தார் திருந்தார் புரமுன் தீ விளைத்தார் ஒற்றி நகர்கிளைத்தார்
தருந்தார் காம மருந்தார்இத் தரணி இடத்தே தருவாரே.[312] (௨)

தருவார் தருவார் செல்வமுதல் தருவார் ஒற்றித் தலம்அமர்வார்
மருவார் தமது மனமருவார் மருவார் கொன்றை மலர்புனைவார்
திருவார் புயனும் மலரோனும் தேடுந் தியாகப் பெருமானார்
வருவார் வருவார் எனநின்று வழிபார்த் திருந்தேன் வந்திலரே. (௩)

வந்தார் அல்லர் மாதேநீ வருந்தேல் என்று மார்பிலங்கும்
தந்தார் அல்லல் தவிர்ந்தோங்கத் தந்தார் அல்லர் தயைஉடையார்
சந்தார் சோலை வளர்ஒற்றித் தலத்தார் தியாகப் பெருமானார்
பந்தார் முலையார்க் கவர்கொடுக்கும் பரிசே தொன்றும் பார்த்திலமே. (௪)

இலமே செறித்தார் தாயர்இனி என்செய் குவதென் றிருந்தேற்கு
நலமே தருவார் போல்வந்தென் நலமே கொண்டு நழுவினர்காண்
உலமே அனைய திருத்தோளார் ஒற்றித் தியாகப் பெருமானார்
வலமே வலம்என் அவலம்அவலம் மாதே இனிஎன் வழுத்துவதே. (௫)

வழுத்தார் புரத்தை எரித்தார்நல் வலத்தார் நடன மலரடியார்
செழுத்தார் மார்பர் திருஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
கழுத்தார் விடத்தார் தமதழகைக் கண்டு கனிந்து பெருங்காமம்
பழுத்தார் தம்மைக் கலந்திடநற் பதத்தார் என்றும் பார்த்திலரே. (௬)

312. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரால் உருக் கொண்ட குறட்பாக்கள், ஆளுடைய நம்பிகள் தேவாரப் பெருமறை போல்வனவற்றை ஆய்ந்துணர்க :

"கண்உள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர்."

"கண்உள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து."

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து."

"பறக்கும்எங் கிள்ளைகாள் பாடும்எம் பூவைகாள்
அறக்கண்என் னத்தகும் அடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கம்இல் லாமையும் உணர்த்தவல் லீர்களே."

பாரா திருந்தார் தமதுமுகம் பார்த்து வருந்தும் பாவைதனைச்
சேரா திருந்தார் திருஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
வாரா திருந்தார் இன்னும்இவள் வருத்தங் கேட்டும் மாலைதனைத்
தாரா திருந்தார் சலமகளைத் தாழ்ந்த சடையில் தரித்தாரே. (௭)

சடையில் தரித்தார் ஒருத்திதனைத் தழுவி மகிழ்மற் றொருபெண்ணைப்
புடையில் தரித்தார் மகளேநீ போனால் எங்கே தரிப்பாரோ
கடையில் தரித்த விடம்அதனைக் களத்தில் தரித்தார் கரித்தோலை
இடையில் தரித்தார் ஒற்றியூர் இருந்தார் இருந்தார் என்னுளத்தே. (௮)

உளத்தே இருந்தார் திருஒற்றி யூரில் இருந்தார் உவர்விடத்தைக்
களத்தே வதிந்தார் அவர்என்றன் கண்ணுள் வதிந்தார் கடல்அமுதாம்
இளத்தே மொழியாய் ஆதலினால் இமையேன் இமைத்தல் இயல்பன்றே
வளத்தே மனத்தும் புகுகின்றார் வருந்தேன் சற்றும் வருந்தேனே. (௯)

வருந்தேன் மகளிர் எனைஒவ்வார் வளஞ்சேர் ஒற்றி மன்னவனார்
தருந்தேன் அமுதம் உண்டென்றும் சலிய வாழ்வில் தருக்கிமகிழ்ந்
திருந்தேன் மணாளர் எனைப்பிரியார் என்றும் புணர்ச்சிக் கேதுவிதாம்
மருந்தேன் மையற் பெருநோயை மறந்தேன் அவரை மறந்திலனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 7. இன்பப் புகழ்ச்சி[313]

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாடொன் றுடையார் உணவின்றி மண்ணுண் டதுகாண் மலரோன்றன்
ஓடொன் றுடையார் ஒற்றிவைத்தார் ஊரை மகிழ்வோ டுவந்தாலங்
காடொன் றுடையார் கண்டமட்டுங் கறுத்தார் பூத கணத்தோடும்
ஏடொன் றுடையார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே.[314] (௧)

313. இப் பதிக எட்டெண்கள் ௰௮, ௰௯. இவற்றின் முதற்கண், "உ. ஒற்றியூர்." என்று அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

314. தண் தளிர் வண்ணத் தமிழில் இயங்கும் இப் பா முதலியவற்றில், நம் பெருமான் அவர்கள், இறைவனுடைய அருட் பண்புகளையும், அருட் செயல்களையும், உலகியல் கண்ணால் கண்டு, இழிவுரைப்பார்போல் பேசிப் பேசி, எல்லை அற்ற இன்புறுதல் கண்டு மகிழ்க.

பித்தர் எனும்பேர் பிறங்கநின்றார் பேயோ டாடிப் பவுரிகொண்டார்
பத்தர் தமக்குப் பணிசெய்வார் பணியே பணியாப் பரிவுற்றார்
சித்தர் திருவாழ் ஒற்றியினார் தியாகர் என்றன் கலைகவர்ந்த
எத்தர் அன்றோ மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே.[315] (உ)

கடுத்தாழ் களத்தார் கரித்தோலார் கண்ணால் மதனைக் கரிசெய்தார்
உடுத்தார் முன்னோர் மண்ணோட்டை ஒளித்தே தொண்ட ரொடும்வழக்குத்
தொடுத்தார் பாம்பும் புலியும்மெச்சித் துதிக்க ஒருகால் அம்பலத்தில்
எடுத்தார் அன்றோ மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. (ங)

உரப்பார் மிசையில் பூச்சூட ஒட்டார் சடைமேல் ஒருபெண்ணைக்
காப்பார் மலர்தூ வியமதனைக் கண்ணால் சுட்டார் கல்எறிந்தோன்
வரப்பார் மிசைக்கண் வாழ்ந்திருக்க வைத்தார் பலிக்கு மனைதொறும்போய்
இரப்பார் அன்றோ மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. (ச)

கருதும் அவரை வெளிக்கிழுப்பார் காணு தெல்லாங் காட்டிநிற்பார்
மருதில் உறைவார் ஒற்றிதனில் வதிவார் புரத்தை மலைவில்லால்
பொருது முடிப்பார் போல்நகைப்பார் பூவுண் டுறங்கும் புதுவெள்ளை
எருதில் வருவார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. (ரு)

ஆக்கம் இல்லார் வறுமையிலார் அருவம் இல்லார் உருவமிலார்
தூக்கம் இல்லார் சுகம்இல்லார் துன்பம் இல்லார் தோன்றுமல
வீக்கம் இல்லார் குடும்பமது விருத்தி யாக வேண்டுமெனும்
ஏக்கம் இல்லார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. (சு)

ஊரும் இல்லார் ஒற்றிவைத்தார் உறவொன் றில்லார் பகைஇல்லார்
பேரும் இல்லார் எவ்விடத்தும் பிறவார் இறவார் பேச்சில்லார்
நேரும் இல்லார் தாய்தந்தை நேயர் தம்மோ டுடன்பிறந்தோர்
யாரும் இல்லார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. (எ)

---

315. இப் பா முதலியவற்றோடு, பின் வரும் நம் வன்தொண்டப் பெருமானாரின் வாடாக் காதல் மொழிகள் போன்றவற்றை வாய்மடுத்து நெஞ்சு நிறைவுறுக :

"ஏடு லாமலர்க் கொன்றை சூடுதிர்
என்பெ லாம்அணிந் தென்செய்வீர்
காடு நும்பதி ஓடு கையது
காதல் செய்பவர் பெறுவதென்
பாடல் வண்டிசை ஆலுஞ் சோலைப்பைஞ்
ஞீலியேன் என்று நிற்றிரால்
ஆடல் பாடலும் வல்லி ரோசொலும்
ஆர ணீயவி டங்கரே."

தங்கு மருப்பார் கண்மணியைத் தரிப்பார் என்பின் தார்புனைவார்
துங்கும் அருட்கார் முகில்அனையார் சொல்லும் நமது சொற்கேட்டே
இங்கும் இருப்பார் அங்கிருப்பார் எல்லாம் இயல்பில் தாம்உணர்ந்தே
எங்கும் இருப்பார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. (அ)

துத்திப் படத்தார் சடைத்தலையார் தொலையாப் பலிதேர் தொன்மையினர்
முத்திக் குடையார் மண்எடுப்பார் மொத்துண் டுழல்வார் மொய்கழற்காம்
புத்திக் குரிய பத்தர்கள்தம் பொருளை உடலை யாவையுமே
எத்திப் பறிப்பார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. (கூ)

மாறித் திரிவார் மனம்அடையார் வணங்கும் அடியார் மனந்தோறும்
வீறித் திரிவார் வெறுவெளியின் மேவா நிற்பார் விறகுவிலை
கூறித் திரிவார் குதிரையின்மேற் கொள்வார் பசுவிற் கோல்வளையோ
டேறித் திரிவார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. (கo)

திருச்சிற்றம்பலம்

---

# 8. திரு உலாத் திறம்[316]

---

## திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேனார் கமலத் தடஞ்சூழும் திருவாழ் ஒற்றித் தியாகர்அவர்
வானார் அமரர் முனிவர்தொழ மண்ணோர் வணங்க வரும்பவனி
தானார் வங்கொண் டகமலராத் தாழ்ந்து சூழ்ந்து கண்டலது
கானார் அலங்கற் பெண்ணேநான் கண்கள் உறக்கங் கொள்ளேனே.[317] (க)

---

316. இப் பதிக ஏட்டெண்கள் உ௰, உக. இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமயம். சிவமயம்." என்றும், "உ. சிவமயம்." என்றும் அடிகளார் வரைந்து சிவாநுபவம் நுகர்ந்திருக்கிறார்கள்.

317. நிறை தீந் தமிழின் வடியா வனப்பு விளங்கும் இப் பா முதலிய வற்றில், வள்ளற் பெருமான் அவர்கள், இறைவனது அருள்திரு மேனியின் அளப்பரும் அழகைத் தாம் கண்டு நுகராது, வேறு எதிலும் மனஞ் செலுத்தி ஈடுபடுதல் முக்காலும் இல்லை என்று, உறுதி கொண்டு இயம்பி, இன்புற்று வதிவது கண்டு மகிழ்க.

திருமால் வணங்கும் ஒற்றிநகர் செழிக்கும் செல்வத் தியாகர்அவர்
கருமால் அகற்றுந் தொண்டர்குழாம் கண்டு களிக்க வரும்பவனி
மருமாண் புடைய மன்மகிழ்ந்து மலர்க்கை கூப்பிக் கண்டலது
பெருமான் வடுக்கண் பெண்ணேநான் பெற்று ளோடும் பேசேனே.318 ( உ )

சேல்ஆர் தடஞ்சூழ் ஒற்றிநகர் சேருஞ் செல்வத் தியாகர்அவர்
ஆல்ஆர் களமேல் விளங்குமுகம் அழகு ததும்ப வரும்பவனி
நால்ஆ ரணஞ்சூழ் வீதியிடை நாடிப் புகுந்து கண்டலது
பால்ஆர் குதலைப் பெண்ணேநான் பாயிற் படுக்கைபொருந்தேனே. ( ந )

செல்வந் துறழும் பொழில்ஒற்றித் தெய்வத் தலங்கொள் தியாகர்அவர்
வில்வந் திகழும் செஞ்சடையின் விழுங்கி விளங்க வரும்பவனி
சொல்வந் தோங்கக் கண்டுநின்று தொழுது துதித்த பின்அலது
அல்வந் தளகப் பெண்ணேநான் அவிழ்ந்த குழலும் முடியேனே. ( ச )

சேவார் கொடியார் ஒற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகர்அவர்
பூவார் கொன்றைப் புயங்கள்மனம் புணரப் புணர வரும்பவனி
ஓவாக் களிப்போ டகங்குளிர உடலங் குளிரக் கண்டலது
பாவார் குதலைப் பெண்ணேநான் பரிந்து நீரும் பருகேனே. ( ரு )

சிற்றம் பலத்தார் ஒற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகர்அவர்
உற்றங் குவந்தோர் வினைகளெலாம் ஓட நாடி வரும்பவனி
சுற்றுங் கண்கள் களிகூரத் தொழுது கண்ட பின்அலது
முற்றுங் கனிவாய்ப் பெண்ணேநான் முடிக்கோர் மலரும் முடியேனே. ( சு )

சிந்தைக் கினியார் ஒற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகர்அவர்
சந்தத் தடந்தோள் கண்டவர்கள் தம்மை விழுங்க வரும்பவனி
முந்தப் புகுந்து புளகமுடன் மூடிக் குளிரக் கண்டலது
கந்தக் குழல்வாய்ப் பெண்ணேநான் கண்ணீர் ஒழியக் காணேனே. ( எ )

தென்னஞ் சோலை வளர்ஒற்றி யூர்வாழ் செல்வத் தியாகர்அவர்
பின்னுஞ் சடைமேல் பிறைவிளங்கிப் பிறங்கா நிற்க வரும்பவனி
மன்னுங் கரங்கள் தலைகுவித்து வணங்கி வாழ்த்திக் கண்டலது
இன்னுந் துவர்வாய்ப் பெண்ணேநான் சோறெள் ளளவும் உண்ணேனே. ( அ )

---

318. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருநாவுக்கரசு நாயனாரின் திருமறைத் தேமொழி போல்வன காண்க :

"கார்க்கொள் மாமுகில் போல்வதோர் கண்டத்தன்
வார்க்கொள் மென்முலை சேர்ந்திறு மாந்திவள்
ஆர்க்கொள் கொன்றையன் ஆவடு தண்டுறைத்
தார்க்கு நின்றிவள் தாழுமா காண்மினே."

சிந்தா குலந்தீர்த் தருள்ஒற்றி யூர்வாழ் செல்வத் தியாகர்அவர்
வந்தார் கண்டார் அவர்மனத்தை வாங்கிப் போக வரும்பவனி
நந்தா மகிழ்வு தலைசிறப்ப நாடி ஓடிக் கண்டலது
பந்தார் மலர்க்கைப் பெண்ணேநான் பாடல் ஆடல் பயிலேனே. (௯)

செக்கர்ச் சடையார் ஒற்றிநகர்ச் சேருஞ் செல்வத் தியாகர்அவர்
மிக்கற் புதவாண் முகத்தினகை விளங்க விரும்பி வரும்பவனி
மக்கட் பிறவி எடுத்தபயன் வசிக்க வணங்கிக் கண்டலது
நக்கற் கியைந்த பெண்ணேநான் ஞாலத் தெவையும் நயவேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

# 9. வியப்பு மொழி[319]

---

### நற்றாய் நயத்தல்

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

**மா**தர் மணியே மகளேநீ வாய்த்த தவந்தான் யாதறியேன்
வேதர் அனந்தர் மால்அனந்தர் மேவி வணங்கக் காண்பரியார்
நாதர் நடன நாயகனார் நல்லோர் உளத்துள் நண்ணுகின்றோர்
கோதர் அறியாத் தியாகர்தமைக் கூடி உடலம் குளிர்ந்தனையே.[320] (௧)

திருவில் தோன்றும் மகளேநீ செய்த தவந்தான் யார்அறிவார்
மருவில் தோன்றும் கொன்றையந்தார் மார்பர் ஒற்றி மாநகரார்
கருவில் தோன்றும் எங்கள்உயிர் காக்க நினைத்த கருணையினார்
குருவிற் றோன்றும் தியாகர்தமைக் கூடி உடலம் குளிர்ந்தனையே.[321] (௨)

---

319. இப் பதிக ஏட்டெண்கள் ௨௨, ௨௫. இவற்றின் முதலில் முறையே, "௨. ஒற்றியூர்." என்றும், "௨" என்றும் அடிகளார் எழுதியிருக்கிறார்கள்.

320. உள்ளும் புறமும் பேரழகு பொங்கித் ததும்பி வழியும் இப் பதிகப் பாக்களில், பெருமான் அவர்கள், தமக்கு இறைவன் அருளிய நற்பேற்றினைக் கண்டு, பேரடியார்கள் கொள்ளும் பெருமகிழ்ச்சியையும், அவர்கள் தம்மை வாழ்த்தும் வாழ்த்தினையும், தலைவி பெற்ற பெருநலம் குறித்து நற்றாய் நயத்தல் முகமாக, உரைத்துரைத்து என்றும் "காணக்கிடையா இன்பம் நுகர்ந்து நிறைவுற்றமைவது கண்டு உளம் களிக்க.

என்னு ருயிர்போல் மகளேநீ என்ன தவந்தான் இயற்றினையோ
பொன்னூர் புயனும் மலரோனும் போற்றி வணங்கும் பொற்பதத்தார்
தென்னூர் ஒற்றித் திருநகரார் தியாகர் எனும்ஓர் திருப்பெயரார்
கொன்னூர் சூலப் படையவரைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. ( ௩ )

சேலை நிகர்கண் மகளேநீ செய்த தவந்தான் செப்பரிதால்
மாலை அயனை வானவரை வருத்தும் படிக்கு மதித்தெழுந்த
வேலை விடத்தை மிடற்றணிந்தார் வீட்டு நெறியாம் அரசியற்செங்
கோலை அளித்தார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. ( ௪ )

தேனேர் குதலை மகளேநீ செய்த தவந்தான் எத்தவமோ
மானேர் கரத்தார் மழவிடைமேல் வருவார் மருவார் கொன்றையினார்
பானேர் நீற்றர் பசுபதியார் பவள வண்ணர் பல்சடைமேல்
கோனேர் பிறையார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. ( ௫ )

வில்லார் நுதலாய் மகளேநீ மேலை நாட்செய் தவம்எதுவோ
கல்லார் உள்ளம் கலவாதார் காமன் எரியக் கண்விழித்தார்
வில்லார் விசையற் கருள்புரிந்தார் விளங்கும் ஒற்றி மேவிநின்றார்
கொல்லா நெறியார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. ( ௬ )

அஞ்சொற் கிளியே மகளேநீ அரிய தவமே தாற்றினையோ
வெஞ்சொற் புகலார் வஞ்சர்தமை மேவார் பூவார் கொன்றையினார்
கஞ்சற் கரியார் திருஒற்றிக் காவல் உடையார் இன்மொழியால்
கொஞ்சத் தருவார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. ( ௭ )

பூவாய் வாட்கண் மகளேநீ புரிந்த தவந்தான் எத்தவமோ
சேவாய் விடங்கப் பெருமானார் திருமால் அறியாச் சேவடியார்
காவாய்ந் தோங்கும் திருஒற்றிக் காவல் உடையார் எவ்வெவர்க்கும்
கோவாய் நின்றார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. ( ௮ )

---

321. இப்பா முதலியவற்றோடு, அடியிற் காணும் நம் அப்பர் பெருமானாரின் அருந்தமிழ் மறை போல்வன கண்டு அகமகிழ்க:

" பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனைத்
தஞ்ச மென்றிறு மாந்திவ ளாரையும்
அஞ்சு வாள்அல்லள் ஆவடு தண்டுறை
மஞ்ச னேடிவள் ஆடிய மையலே."

மலைநேர் முலையாய் மகளேநீ மதிக்கும் தவமே தாற்றினையோ
தலைநேர் அலங்கல் தாழ்சடையார் சாதி அறியாச் சங்கரனார்
இலைநேர் தலைமூன் றொளிர்படையார் எல்லாம் உடையார் எருக்கின்மலர்க்
குலைநேர் சடையார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. ( ௯ )

மயிலின் இயல்சேர் மகளேநீ மகிழ்ந்து புரிந்த தெத்தவமோ
வெயிலின் இயல்சேர் மேனியினார் வெண்ணீ றுடையார் வெள்விடையார்
பயிலின் மொழியாள் பாங்குடையார் பணைசூழ் ஒற்றிப் பதிஅமர்ந்தார்
குயிலிற் குலவி அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. ( ௧௦ )

திருச்சிற்றம்பலம்

# 10. புணரா விரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல்[322]

## திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உள்ளார் புறத்தார் ஒற்றிஎனும் ஊரார் ஒப்பென் றொன்றுமிலார்
வள்ளால் என்று மறைதுதிக்க வருவார் இன்னும் வந்திலரே
எள்ளா திருந்த பெண்களெலாம் இகழா நின்றார் இனிமொழித்
தெள்ளார் அமுதே என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே.[323] ( ௧ )

மாலே றுடைத்தாங் கொடிஉடையார் வளஞ்சேர் ஒற்றி மாநகரார்
பாலே றணிநீற் றழகர்அவர் பாவி யேனைப் பரிந்திலரே
கோலே றுண்ட மதன்கரும்பைக் குனித்தான் அம்புங் கோத்தனன்காண்
சேலே றுண்கண் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே.[324] ( ௨ )

---

322. இப் பதிக ஏட்டெண்கள் ௨௪, ௨௫, ௨௬, ௨௭, ௨௮. இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமயம். ஒற்றியூர்." என்றும், "உ" என்றும், "உ. சிவமயம்." என்றும், "உ. சிவமயம். சிவமயம். சிவமயம்." என்றும், "உ" என்றும் அடிகளார் வரைந்து வரைந்து அக அநுபவம் எய்தியிருக்கிறார்கள்.

323. கன்னித் தண்தமிழில் எழில் ஒழுகக் காணும் இப் பா முதலியவற்றில், நம் பெருமான் அவர்கள், இறைவன் தமக்கு அருளாது காலந் தாழ்த்துகிறான் என்று அஞ்சி, தமக்குள்ள உடலின் துன்பத்தையும்,

பொய்யர் உளத்துப் புகுந்தறியார் போதனொடுமால் காண்பரிதாம்
ஐயர் திருவாழ் ஒற்றிநகர் அமர்ந்தார் இன்னும் அணைந்திலரே
வையமடவார் நகைக்கின்றார் மாரன் கணையால் திகைக்கின்றேன்
செய்ய முகத்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௩)

நந்திப் பரியார் திருஒற்றி நாதர் அயன்மால் நாடுகினும்
சந்திப் பரியார் என் அருமைத் தலைவர் இன்னுஞ் சார்ந்திலரே
அந்திப் பொழுதோ வந்ததினி அந்தோ மதியம் அனல்சொரியும்
சிந்திப் புடையேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௪)

என் ஆருயிர்க்கோர் துணையானார் என் ஆண்டவனார் என்னுடையார்
பொன்னார் ஒற்றி நகர்அமர்ந்தார் புணர்வான் இன்னும் போந்திலரே
ஒன்னார் எனவே தாயும்எனை ஒறுத்தாள் நாணும் உயிர்பொறுத்தேன்
தென்னார் குழலாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௫)

மாணி உயிர்காத் தந்தகனை மறுத்தார் ஒற்றி மாநகரார்
காணி உடையார் உலகுடையார் கணிவாய் இன்னுங் கலந்திலரே
பேணி வாழாப் பெண்எனவே பெண்க ளெல்லாம் பேசுகின்றார்
சேணின் றிழிந்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௬)

வன்சொற் புகலார் ஓர்உயிரும் வருந்த நினையார் மனமகிழ
இன்சொற் புகல்வார் ஒற்றியுளார் என்நா யகனார் வந்திலரே
புன்சொற் செவிகள் புகத்துயரம் பொறுத்து முடியேன் புலம்புகின்றேன்
தென்சொற் கிளியே என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௭)

எட்டிக் கனியும் மாங்கனிபோல் இனிக்க உரைக்கும் இன்சொலினார்
தட்டிற் பொருந்தார் ஒற்றியில்வாழ் தலைவர் இன்னும் சார்ந்திலரே
மட்டிற் பொலியும் மலர்க்கணைசெல் வழியே பழிசெல் வழிஅன்றோ
தெட்டிற் பொலியும் விழியாய்நான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௮)

---

323. (தொடர்ச்சி)
உயிரின் துயரத்தையும், ஆன்ம விருப்பத்தையும் வாய்விட்டு உரைத்து உரைத்து, இறைவனுடைய திருஅருட் சந்நிதானத்தில், எல்லாத் தத்துவங்களும் குழைய, நெகிழ்ந்து, குறையிரத்தல் கண்டுணர்க.

324. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் நம் ஆளுடைய பிள்ளையாரது தெய்வப் பெருமறை போல்வனவற்றை ஒத்துணர்க:
"நறப்பொலிபூங் கழிக்கானல் நவில்குருகே உலகெல்லாம்
அறப்பலிதேர்ந் துழல்வார்க்கென் அலர்கோடல் அழகியதே
சிறப்புலவன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய,
பிறப்பிலிபேர் பிதற்றிநின்(று) இழக்கோஎம் பெருநலமே."

காலை மலர்ந்த கமலம்போல் கவின்செய் முகத்தார் கண்நுதலார்
சோலை மலர்ந்த ஒற்றியினார் சோகந் தீர்க்க வந்திலரே
மாலை மலர்ந்த மையல்நோய் வசந்தம் அதனால் வளர்ந்ததையோ
சேலை விழியாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௯)

உலகம் உடையார் என்னுடைய உள்ளம் உடையார் ஒற்றியினார்
அலகில் புகழார் என்தலைவர் அந்தோ இன்னும் அணைந்திலரே
கலகம் உடையார் மாதர்எலாம் கல்நெஞ் சுடையார் தூதர்எலாம்
திலக முகத்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௦)

மாலும் அறியான் அயன்அறியான் மறையும் அறியா வானவர்எக்
காலும் அறியார் ஒற்றிநிற்கும் கள்வர் அவரைக் கண்டிலனே
கோலும் மகளிர் அலர்ஒன்றோ கோடா கோடி என்பதல்லால்
சேலுண் விழியாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௧)

உந்து மருத்தோ டைம்பூதம் ஆனார் ஒற்றி யூர்அமர்ந்தார்
இந்து மிருந்தும் சடைத்தலையார் என்பால் இன்னும் எய்திலரே
சந்து பொறுத்து வார்அறியேன் தமிய ளாகத் தளர்கின்றேன்
சிந்துற் பவத்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௨)

ஆடல் அழகர் அம்பலத்தார் ஐயா றுடையார் அன்பர்களோ(டு)
ஊடல் அறியார் ஒற்றியினார் உவகை ஓங்க உற்றிலரே
வாடல் எனவே எனைத்தேற்று வாரை அறியேன் வாய்ந்தவரைத்
தேடல் அறியேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௩)

தொழுது வணங்கும் சுந்தரர்க்குத் தூது நடந்த சுந்தரனார்
அழுது வணங்கும் அவர்க்குமிக அருள்ஒற் றியினார் அணைந்திலரே
பொழுது வணங்கும் இருண்மாலைப் பொழுது முடுகிப் புகுந்ததுகாண்
செழுமை விழியாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௪)

பாவம் அறுப்பார் பழிஅறுப்பார் பவமும் அறுப்பார் அவம்அறுப்பார்
கோவம் அறுப்பார் ஒற்றியில்என் கொழுநர் இன்னும் கூடிலரே
தூவ மதன்ஐங் கணைமாதர் தூறு தூவத் துயர்கின்றேன்
தேவ மடவாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௫)

உயிர்க்குள் உயிராய் உறைகின்றோர் ஒற்றி நகரார் பற்றிலரைச்
செயிர்க்குள் அழுத்தார் மணிகண்டத் தேவர் இன்னும் சேர்ந்திலரே
வெயிற்கு மெலிந்த செந்தளிர்போல் வேளம் பதனால் மெலிகின்றேன்
செயற்கை மடவாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௬)

ஊனம் அடையார் ஒற்றியினார் உரைப்பார் உள்ளத் துறைகின்றார்
கானம் உடையார் நாடுடையார் கனிவாய் இன்னும் கலந்திலரே
மானம் உடையார் எம்முறவோர் வாழா மைக்கே வருந்துகின்றார்
தீனம் அடையாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௭)

மலையை வளைத்தார் மால்விடைமேல் வந்தார் வந்தென் வளையினொடு
கலையை வளைத்தார் ஒற்றியில்என் கணவர் என்னைக் கலந்திலரே
சிலையை வளைத்தான் மதன்அம்பு தெரித்தான் விடுக்கச் சினக்கின்றான்
திலக நுதலாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௮)

பிரமன் தலையில் பலிகொள்ளும் பித்தர் அருமைப் பெருமானார்
உரமன் னியசீர் ஒற்றிநகர் உள்ளார் இன்னும் உற்றிலரே
அரமன் னியவேற் படையன்றோ அம்மா அயலார் அலர்மொழிதான்
திரமன் னுகிலேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௧௯)

பவள நிறத்தார் திருஒற்றிப் பதியில் அமர்ந்தார் பரசிவனார்
தவள நிறநீற் றணிஅழகர் தமியேன் தன்னைச் சார்ந்திலரே
துவளும் இடைதான் இறமுலைகள் துள்ளா நின்ற தென்னளவோ
திவளும் இழையாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௨௦)

வண்டார் கொன்றை வளர்சடையார் மதிக்க எழுந்த வல்விடத்தை
உண்டார் ஒற்றி யூர்அமர்ந்தார் உடையார் என்பால் உற்றிலரே
கண்டார் கண்ட படிபேசக் கலங்கிப் புலம்பல் அல்லாது
செண்டார் முலையாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே.(௨௧)

உணவை இழந்தும் தேவர்எலாம் உணரா ஒருவர் ஒற்றியில்என்
கணவர் அடியேன் கண்அகலாக் கள்வர் இன்னும் கலந்திலரே
குணவர் எனினும் தாய்முதலோர் கூறு தெல்லாம் கூறுகின்றார்
திணிகொள் முலையாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே.(௨௨)

வாக்குக் கடங்காப் புகழுடையார் வல்லார் ஒற்றி மாநகரார்
நோக்குக் கடங்கா அழகுடையார் நோக்கி என்னை அணைந்திலரே
ஊக்க மிகும்ஆர் கலிஒலிஎன் உயிர்மேல் மாறேற் றரப்பொலிகாண்
தேக்கங் குழலாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௨௩)

தரையிற் கீறிச் சலந்தரனைச் சாய்த்தார் அந்தச் சக்கரமால்
வரையற் களித்தார் திருஒற்றி வாணர் இன்னும் வந்திலரே
கரையிற் புணர்ந்த நாரைகளைக் கண்டேன் கண்ட வுடன்காதல்
திரையிற் புணர்ந்தேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே.

பெற்றம் இவரும் பெருமானார் பிரமன் அறியாப் பேரொளியாய்
உற்ற சிவனார் திருஒற்றி யூர்வாழ் உடையார் உற்றிலரே
எற்றென் றுரைப்பேன் செவிலிஅவள் ஏறா மட்டும் ஏறுகின்றாள்
செற்றம் ஒழியாள் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (உரு)

போக முடையார் பெரும்பற்றப் புலியூர் உடையார் போதசிவ
யோக முடையார் வளர்ஒற்றி யூர்வாழ் உடையார் உற்றிலரே
சோகம் உடையேன் சிறிதேனும் துயிலோ அணையா துயில்ஒழியா
தேகம் அயர்ந்தேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (உசு)

தாமப் புயனார் சங்கரனார் தாயில் இனியார் தற்பரனார்
ஓமப் புகைவான் உறும்ஒற்றி யூர்வாழ் வுடையார் உற்றிலரே
காமப் பயலோ கணைஎடுத்தான் கண்ட மகளிர் பழிதொடுத்தார்
சேமக் குயிலே என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (உஎ)

ஆரூர் உடையார் அம்பலத்தார் ஆலங் காட்டார் அரசிலியார்
ஊரூர் புகழும் திருஒற்றி யூரார் இன்னும் உற்றிலரே
வாரூர் முலைகள் இடைவருத்த மனநொந் தயர்வ தன்றிஇனிச்
சீரூர் அணங்கே என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (உஅ)

காலங் கடந்தார் மால்அயன்தன் கருத்துங் கடந்தார் கதிகடந்தார்
ஞாலங் கடந்த திருஒற்றி நாதர் இன்னும் நண்ணிலரே
சாலங் கடந்த மனந்துணையாய்த் தனியே நின்று வருந்தல்அல்லால்
சீலங் கடந்தேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (உகூ)

சங்கக் குழையார் சடைமுடியார் சதுரர் மறையின் தலைநடிப்பார்
செங்கட் பணியார் திருஒற்றித் தேவர் இன்னும் சேர்ந்திலரே
மங்கைப் பருவம் மணமில்லா மலர்போல் ஒழிய வாடுகின்றேன்
திங்கள் முகத்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. (௩0)

திருச்சிற்றம்பலம்

# 11. குறி ஆராய்ச்சி[325]

---

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நந்தி மகிழ்வாய்த் தரிசிக்க நடனம் புரியும் நாயகனார்
அந்தி நிறத்தார் திருஒற்றி அமர்ந்தார் என்னை அணைவாரோ
புந்தி இலள்என் றணையாரோ யாதுந் தெரியேன் புலம்புகின்றேன்
சிந்தை மகிழக் குறமடவாய் தெரிந்தோர் குறிதான் செப்புவையே.[326] ( க )

தரும விடையார் சங்கரனார் தகைசேர் ஒற்றித் தனிநகரார்
ஒருமை அளிப்பார் தியாகர்எனை உடையார் இன்று வருவாரோ
மருவ நாளை வருவாரோ வாரா தென்னை மறப்பாரோ
கருமம் அறிந்த குறமடவாய் கணித்தோர் குறிதான் கண்டுரையே.[327] ( உ )

ஆழி விடையார் அருளுடையார் அளவிட் டறியா அழகுடையார்
ஊழி வரினும் அழியாத ஒற்றித் தலம்வாழ் உத்தமனார்
வாழி என்பால் வருவாரோ வறியேன் வருந்த வாராரோ
தோழி அனைய குறமடவாய் துணிந்தோர் குறிநீ சொல்லுவையே. ( ங )

---

325. இப் பதிக ஏட்டெண்கள் உக, நய. முதல் ஏட்டின் முதலில், "உ. சிவமயம்." என்று அடிகளார் எழுதி இன்புற்றிருக்கிறார்கள்.

326. நெஞ்சை ஊடுருவிப் பிணிக்கும் இன் தமிழ் மொழிகளால் இயன்ற இப் பா முதலியவற்றில், நம் பெருமான் அவர்கள், இறைவன் தம்மை மீளா ஆளாக ஆட்கொண்டு அருளுவது, இன்றோ நாளையோ என்றோ என்று இயம்பி இரங்குதல் காண்க.

327. இப் பா முதலியவற்றோடு, கீழ்க்கண்ட நம் திருநாவுக்கரசு நாயனாரது தென் தமிழ்ப் பெருமறை போல்வன கண்டுவக்க :

"கல்லலகு தாங்கொண்டு காளத்தியார்
கடிய விடையேறிக் காணக்காண
இல்லமே தாம்புகுதா இடுமின்பிச்சை
யென்றருக் கெதிரெழுந்தேன் எங்குங்காணேன்
சொல்லாதே போகின்றீர் உம்மூரேது
திருத்தி பழனமோ நெய்த்தானமோ
அல்லலே செய்தடிகள் போகின்றீர்தாம்
அழகியரே ஆமாத்தூர் ஐயனாரே."

அணியார் அடியார்க் கயன்முதலாம் அமரர்க் கெல்லாம் அரியரென்பாம்
பணியார் ஒற்றிப் பதிஉடையார் பரிந்தென் முகந்தான் பார்ப்பாரோ
தணியாக் காதல் தவிர்ப்பாரோ சார்ந்து வரவு தாழ்ப்பாரோ
குணியா எழில்சேர் குறமடவாய் குறிதான் ஒன்றும் கூறுவையே. (௪)

பொன்னார் புயத்துப் போர்விடையார் புல்லர் மனத்துட் போகாதார்
ஒன்னார் புரந்தீ உறநகைத்தார் ஒற்றி எனும்ஓர் ஊர்அமர்ந்தார்
என்னா யகனார் எனைமருவல் இன்றோ நாளை யோஅறியேன்
மின்னார் மருங்குல் குறமடவாய் விரைந்தோர் குறிநீ விளம்புவையே. (௫)

பாலிற் றெளிந்த திருநீற்றர் பாவ நாசர் பண்டரங்கர்
ஆலிற் றெளிய நால்வர்களுக் கருளுந் தெருளர் ஒற்றியினார்
மாலிற் றெளியா நெஞ்சகத்தேன் மருவிக் கலக்க வருவாரோ
சேலிற் றெளிகட் குறப்பாவாய் தெரிந்தோர் குறிநீ செப்புகவே. (௬)

நிருத்தம் பயின்றார் நித்தியனார் நேச மனத்தர் நீலகண்டர்
ஒருத்தர் திருவாழ் ஒற்றியினார் உம்பர் அறியா என்கணவர்
பொருத்தம் அறிந்தே புணர்வாரோ பொருத்தம் பாரா தணைவாரோ
வருத்தந் தவிரக் குறப்பாவாய் மகிழ்ந்தோர் குறிதான் வழுத்துவையே. (௭)

கமலன் திருமால் ஆதியர்கள் கனவி னிடத்துங் காண்பரியார்
விமலர் திருவாழ் ஒற்றியிடை மேவும் பெருமை வித்தகனார்
அமலர் அவர்தாம் என்மனைக்கின் றணைகு வாரோ அணையாரோ
தமல மகன்ற குறப்பாவாய் தனித்தோர் குறிதான் சாற்றுவையே. (௮)

வன்னி இதழி மலர்ச்சடையார் வன்னி எனஓர் வடிவுடையார்
உன்னி உருகும் அவர்க்கெளியார் ஒற்றி நகர்வாழ் உத்தமனார்
கன்னி அழித்தார் தமைநானுங் கலப்பேன் கொல்லோ கலவேனோ
துன்னி மலைவாழ் குறமடவாய் துணிந்தோர் குறிநீ சொல்லுவையே. (௯)

கற்றைச் சடைமேல் கங்கைதனைக் கலந்தார் கொன்றைக் கண்ணியினார்
பொற்றைப் பெருவிற் படைஉடையார் பொழில்சூழ் ஒற்றிப் புண்ணியனார்
இற்றைக் கடியேன் பள்ளியறைக் கெய்து வாரோ எய்தாரோ
சுற்றுங் கருங்கட் குறமடவாய் சூழ்ந்தோர் குறிநீ சொல்லுவையே. (௧௦)

அரவக் கழலார் கருங்களத்தார் அஞ்சைக் களத்தார் அரிபிரமர்
பரவப் படுவார் திருஒற்றிப் பதியில் அமர்ந்தார் பாசுபதர்
இரவு வருமுன் வருவாரோ என்னை அணைதற் கிசைவாரோ
குரவ மணக்குங் குறமடவாய் குறிநீ ஒன்று கூறுவையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

# 12. காட்சி அற்புதம்[328]

## இரங்கல்

### திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பூணு அணிபூண் புயமுடையார் பொன்னம் பலத்தார் பொங்குவிடம்
ஊணு உவந்தார் திருஒற்றி யூர்வாழ் வுடையார் உண்மைசொலி
நீணல் இருந்தார் அவர்இங்கே நின்றார் மீட்டும் நின்றிடவே
காணு தயர்ந்தேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே.[329] ( க )

ஒட்டில் இரந்துண் டொற்றியிடை உற்றார் உலகத் துயிரைஎலாம்
ஆட்டி நடிப்பார் ஆலயத்தின் அருகே எளிய ளாம்எனவே
எட்டில் அடங்காக் கையறவால் இருந்தேன் இருந்த என்முன்உருக்
காட்டி மறைத்தார் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே.[330] ( உ )

ஈதல் ஒழியா வண்கையினர் எல்லாம் வல்ல சித்தர்அவர்
ஓதல் ஒழியா ஒற்றியில்என் உள்ளம் உவக்க உலகம்எலாம்
ஆதல் ஒழியா எழில்உருக்கொண் டடைந்தார் கண்டேன் உடன்காணேன்
காதல் ஒழியா தென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. ( ந )

---

328. இப் பதிக ஏட்டெண்கள் ௬௧, ௬௨. இவற்றின் முதற்கண் முறையே, "உ. திருச்சிற்றம்பலம். ஒற்றியூர்." என்றும், "உ. சிவமயம்." என்றும் அடிகளார் வரைந்து உளம் ஒருமைப்பட்டிருக்கிறார்கள்.

329. நெஞ்சை அள்ளும் அருந்தமிழால் உருக்கொண்டு, ஊனையும் உயிரையும் உடன்கொண்டு இயங்கும் இப் பா முதலியவற்றில், பெருமான் அவர்கள், தமது காட்சிக்கு அடங்காத திரு உருவங்கொண்டு எதிரே வந்து நின்ற இறைவன், தாம் மீண்டும் மீண்டும் பார்த்து நிறைவுறுவதற்குள் மறைந்து போயினன் என்றும், தாம் கண்கொண்டு கண்ட அவ் விறை உருவக் காட்சி கனவோ நனவோ என்றும்—இன்ன பல சொல்லி இரங்குதல் காண்க.

330. இப் பா முதலியவற்றோடு, பின் வரும் நம் ஆளுடைய அரசுகள் அருள் மொழி போல்வன கண்டு களிக்க :
"கெண்டை போல்நய னத்திம வான்மகள்
வண்டு வார்குழ லாளுட ஞகவே
துண்ட வான்பிறைத் தோணி புரவரைக்
கண்டு காமுறு கின்றனள் கன்னியே."

தொண்டு புரிவோர் தங்களுக்கோர் துணைவர் ஆவார் சூழ்ந்துவரி
வண்டு புரியுங் கொன்றைமலர் மாலை அழகர் வல்விடத்தை
உண்டு புரியுங் கருணையினர் ஒற்றி யூரர் ஒண்பதத்தைக்
கண்டுங் காணேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. ( ச )

அடியர் வருந்த உடன்வருந்தும் ஆண்டை அவர்தாம் அன்றயனும்
நெடிய மாலுங் காணாத நிமல உருவோ டென்னெதிரே
வடியல் அறியா அருள்காட்டி மறைத்தார் மருண்டேன் மங்கைநல்லார்
கடிய அயர்ந்தேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. ( ரு )

கொற்றம் உடையார் திருஒற்றிக் கோயில்உடையார் என்னெதிரே
பொற்றை மணித்தோட் புயங்காட்டிப் போனார் என்னைப் புலம்பவைத்துக்
குற்றம் அறியேன் மனநடுக்கங் கொண்டேன் உடலங் குழைகின்றேன்
கற்றின் முலையாய் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. ( சா )

ஆல நிழற்கீழ் அன்றமர்ந்தார் ஆதி நடுவீ றாகினின்றார்
நீல மிடற்றார் திருஒற்றி நியமத் தெதிரே நீற்றுருவக்
கோல நிகழக் கண்டேன்பின் குறிக்கக் காணேன் கூட்டுவிக்கும்
காலம் அறியேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. ( எ )

சலங்கா தலிக்கும் தாழ்சடையார் தாமே தமக்குத் தாதையனார்
நிலங்கா தலிக்கும் திருஒற்றி நியமத் தெதிரே நின்றனர்காண்
விலங்கா தவரைத் தரிசித்தேன் மீட்டுங் காணேன் மெய்மறந்தேன்
கலங்கா நின்றேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. ( அ )

நிரந்தார் கங்கை நீள்சடையார் நெற்றி விழியார் நித்தியனார்
சிரந்தார் ஆகப் புயத்தணிவார் திருவாழ் ஒற்றித் தியாகர்அவர்
பரந்தார் கோயிற் றெதிர்நிற்கப் பார்த்தேன் மீட்டும் பார்ப்பதன்முன்
கரந்தார் கலுழ்ந்தேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. ( கூ )

அளித்தார் உலகை அம்பலத்தில் ஆடி விணையால் ஆட்டிநின்றார்
தளித்தார் சோலை ஒற்றியிடைத் தமது வடிவம் காட்டியுடன்
ஒளித்தார் நானும் மனம்மயங்கி உழலா நின்றேன் ஒண்டொடிக்கைக்
களித்தார் குழலாய் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. ( கO )

திருச்சிற்றம்பலம்

---

# 13. ஆற்ருக் காதலின் இரங்கல்[331]

திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மந்தா கினிவான் மதிமத்தம் மருவும் சடையார் மாசடையார்
நந்தா விளக்கின் சுடர்அனையார் நோவ நுதலார் கண்நுதலார்
உந்தா ஒலிக்கும் ஓதமலி ஒற்றி யூரில் உற்றெனக்குத்
தந்தார் மையல் என்னேஎன் சகியே இனிநான் சகியேனே.[332] (க)

பூமேல் அவனும் மால்அவனும் போற்றி வழுத்தும் பூங்கழலார்
சேமேல் வருவார் திருஒற்றித் தியாகர் அவர்தம் திருப்புயத்தைத்
தேமேல் அலங்கல் முலைஅழுந்தச் சேர்ந்தால் அன்றிச் சித்தசன்கைத்
தாமேல் அழற்பூந் தாழாதென் சகியே இனிநான் சகியேனே.[333] (உ)

கருணைக் கொருநேர் இல்லாதார் கல்லைக் கரைக்கும் கழலடியார்
அருணைப் பதியார் ஆமாத்தூர் அமர்ந்தார் திருவா வடுதுறையார்
இருணச் சியமா மணிகண்டர் எழிலார் ஒற்றி இறைவர்இந்தத்
தருணத் தின்னும் சேர்ந்திலர்என் சகியே இனிநான் சகியேனே. (ந)

ஆரா அமுதாய் அன்புடையோர் அகத்துள் இனிக்கும் அற்புதனார்
தீரா வினையும் தீர்த்தருளும் தெய்வ மருந்தார் சிற்சபையார்
பாரார் புகழும் திருஒற்றிப் பரமர் தமது தோள்அணையத்
தாரார் இன்னும் என்செய்கேன் சகியே இனிநான் சகியேனே. (ச)

---

331. இப் பதிக ஏட்டெண்கள் நந, நச. இவற்றின் தொடக்கத்தில் முறையே "வ. ஒற்றியூர்." என்றும், "வ" என்றும் அடிகளார் குறித்திருக்கிருர்கள்.

332. பனிமலர் வண்ணத் தமிழ்மணம் வீசிக் கருங்கல் மனத்தையும் கரைக்கும் இப் பா முதலியவற்றில், பெருமானுர், ஒற்றியூரில் தமக்கு அருள் சுரந்த இறைவன், எப்போதும் கண்டு களிப்பதற் கில்லாது, மறைந்துறைகிருன் என்றும், இந் நிலைமை தம்மால் எத்துணையும் பொறுக்கக் கூடியதன்று என்றும் — இன்ன பல சொல்லி இரங்குவது காண்க.

333. இப் பா முதலியவற்ரேடு, பின் வரும் அப்பர் பெருமானுர் தேவாரத் தூமொழி போல்வன காண்க :

"பெண்ணிட்டம் பண்டைய தன்றிவை பெய்பலிக் கென்றுழல்வார்
நண்ணிட்டு வந்து மனைபுகுந் தாரும்நல் லூரகத்தே
பண்ணிட்ட பாடலர் ஆடல ராய்ப்பற்றி நோக்கிநின்று,
கண்ணிட்டுப் போயிற்றுக் காரண முண்டு கறைக்கண்டரே."

துதிசெய் அடியர் தம்பசிக்குச் சோறும் இரப்பார் துய்யர்ஒரு
நதிசெய் சடையார் திருஒற்றி நண்ணும் எனது நாயகனார்
மதிசெய் துயரும் மதன்வலியும் மாற்ற இன்னும் வந்திலரே
சதிசெய் தனரோ என்னடிஎன் சகியே இனிநான் சகியேனே. (ரு)

எங்கள் காழிக் கவுணியரை எழிலார் சிவிகை ஏற்றிவைத்தோர்
திங்கள் அணியும் செஞ்சடையார் தியாகர் திருவாழ் ஒற்றியினார்
அங்கள் அணிபூந் தார்ப்புயத்தில் அணைத்தார் அல்லர் எனைமடவார்
தங்கள் அலரோ தாழாதென் சகியே இனிநான் சகியேனே. (சு)

காவி மணந்த கருங்களத்தார் கருத்தர் எனது கண்அனையார்
ஆவி அனையார் தாய்அனையார் அணிசேர் ஒற்றி ஆண்தகையார்
பூவின் அலங்கல் புயத்தில்எனைப் புல்லார் அந்திப் பொழுதில்மதி
தாவி வருமே என்செயுமோ சகியே இனிநான் சகியேனே. (எ)

மலஞ்சா திக்கும் மக்கள்தமை மருவார் மருவார் மதில்அழித்தார்
வலஞ்சா திக்கும் பாரிடத்தார் மாலும் அறியா மலர்ப்பதத்தார்
நிலஞ்சா திக்கும் ஒற்றியினார் நினையார் என்னை அணையாமல்
சலஞ்சா தித்தார் என்னடிஎன் சகியே இனிநான் சகியேனே. (அ)

நாக அணியார் நக்கர்எனும் நாமம் உடையார் நாரணன்ஓர்
பாகம் உடையார் மலைமகள்ஓர் பாங்கர் உடையார் பசுபதியார்
யோகம் உடையார் ஒற்றியுளார் உற்றார் அல்லர் உறுமோக
தாகம் ஒழியா தென்செய்கேன் சகியே இனிநான் சகியேனே. (கூ)

தீர்ந்தார் தலையே கலனாகச் செறித்து நடிக்கும் திருக்கூத்தர்
தேர்ந்தார் தம்மைப் பித்தடையச் செய்வார் ஒற்றித் தியாகர்அவா
சேர்ந்தார் அல்லர் இன்னும்எனைத் தேடி வரும்அத் தீமதியம்
சார்ந்தால் அதுதான் என்செயுமோ சகியே இனிநான் சகியேனே. (க0)

ஆயும் படிவத் தந்தணனாய் ஆரூ ரன்தன் அணிமுடிமேல்
தோயும் கமலத் திருவடிகள் சூட்டும் அதிகைத் தொன்னகரார்
ஏயும் பெருமை ஒற்றியுளார் இன்னும் அணையார் எனைஅளித்த
தாயும் தமரும் நொடிக்கின்றார் சகியே இனிநான் சகியேனே. (கக)

திருச்சிற்றம்பலம்

# 14. திருக் கோலச் சிறப்பு[334]

தலைவி வியத்தல்

**திரு ஒற்றியூர்**

*அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்*

*திருச்சிற்றம்பலம்*

பொன்னென் றொளிரும் புரிசடையார் புனைநூல் இடையார் புடைஉடையார்
மன்னென் றுலகம் புகழ்ஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
மின்னென் றிலங்கு மாதரெலாம் வேட்கை அடைய விளங்கினின்ற(து)
இன்னென் றறியேன் அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே.[335] ( க )

அள்ளிக் கொடுக்கும் கருணையினார் அணிசேர் ஒற்றி ஆலயத்தார்
வள்ளிக் குவந்தோன் தனைஈன்ற வள்ளல் பவனி வரக்கண்டேன்
துள்ளிக் குதித்தென் மனம்அவரைச் சூழ்ந்த தின்னும் வந்ததிலை
எள்ளிக் கணியா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே.[336] ( உ )

அனத்துப் படிவம் கொண்டயனும் அளவா முடியார் வடியாத
வனத்துச் சடையார் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
மனத்துக் கடங்கா தாகில்அதை வாய்கொண் டுரைக்க வசமாமோ
இனத்துக் குவப்பாம் அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. ( ங )

---

334. இப் பதிக எட்டெண்கள் ௩௫, ௩௬. இவற்றின் முதலில் முறையே, "உ. ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் அடிகளார் எழுதியிருக்கிறார்கள்.

335. அன்பொடு அழகைக் குழைத்தெழுதிய இப் பா முதலியவற்றில், அடிகளார், இறைவன் கண்கொள்ளாப் பேரழகோடு தமக்கு ஒருகால் அருள்புரிந்தான் என்றும், அது கண்ட அடியார் யாவரும் தம் வயமற்றுக் களித்தார் என்றும், இறைவனைக் கண்ட மாத்திரம், தமக்குமுன் தம் நெஞ்சம் இறைவன்பால் சென்று அமர்ந்துவிட்டது என்றும், அதை மீட்குமாறில்லை என்றும்—இன்ன பலப்பல இயம்பி ஆற்றொணு வியப்படைந்து இருத்தலைக் காண்க.

336. இப் பா முதலியவற்றோடு, பின் குறித்த தேவாரப் பெருமறை போல்வனவற்றை ஒத்துணர்க :

"ஈசன் என்னை அறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி ஏற்றப் பெறுதலால்
ஈசன் சேவடி ஏத்தப்பெற் றேன்இனி
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே."

கொழுதி அளிதேன் உழுதுண்ணும் கொன்றைச் சடையார் கூடலுடை
வழுதி மருகர் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
பழுதில் அவனுந் திருமாலும் படைக்கும் கமலப் பண்ணவனும்
எழுதி முடியா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. (௪)

புன்னை இதழிப் பொலிசடையார் போக யோகம் புரிந்துடையார்
மன்னும் விடையார் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
உன்னும் உடலம் குளிர்ந்தோங்க உவகை பெருக உற்றுநின்ற
என்னை விழுங்கும் அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. (௫)

சொல்லுள் நிறைந்த பொருளானார் தூயர் உளத்தே துன்னிநின்றார்
மல்லல் வயற்சூழ் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
கல்லும் மரமும் ஆனந்தக் கண்ணீர் கொண்டு கண்டதெனில்
எல்லை யில்லா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. (௬)

நீர்க்கும் மதிக்கும் நிலையாக நீண்ட சடையார் நின்றுநறு
ஆர்க்கும் பொழில்சூழ் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
பார்க்கும் அரிக்கும் பங்கயற்கும் பன்மா தவர்க்கும் பண்ணவர்க்கும்
யார்க்கும் அடங்கா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. (௭)

கலக அமணக் கைதவரைக் கழுவி லேற்றுங் கழுமலத்தோன்
வலகை குவித்துப் பாடும்ஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
உலக நிகழ்வைக் காணேன்என் உள்ளம் ஒன்றே அறியுமடி
இலகும் அவர்தந் திருஅழகை என்என் றுரைப்ப தேந்திழையே. (௮)

கண்ணன் அறியாக் கழற்பதத்தார் கண்ணார் நெற்றிக் கடவுள்அருள்
வண்ணம் உடையார் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
நண்ண இமையார் எனஇமையா நாட்டம் அடைந்து நின்றனடி
எண்ண முடியா அவரழகை என்என் றுரைப்ப தேந்திழையே. (௯)

மாழை மணித்தோள் எட்டுடையார் மழுமான் ஏந்தும் மலர்க்கரத்தார்
வாழை வளஞ்சூழ் ஒற்றியூர் வாணர் பவனி வரக்கண்டேன்
யாழை மலைக்கும் மொழிமடவார் யாரும் மயங்கிக் கலைஅவிழ்ந்தார்
ஏழை யேன்நான் அவரழகை என்என் றுரைப்ப தேந்திழையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 15. சோதிடம் நாடல்[337]

---

தலைவி மிகுகழி காதல்

**திரு ஒற்றியூர்**

*அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்*

திருச்சிற்றம்பலம்

பொன்னஞ் சிலையால் புரம்எரித்தார் பொழில்சூழ் ஒற்றிப் புண்ணியனார்
முன்னஞ் சருந்தும் முக்கணனார் மூவர் அறியா முதல்வர்அவர்
இன்னஞ் சிலநாள் சென்றிடுமோ இலதேல் இன்று வருவாரோ
உன்னஞ் சிறந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே.[338] (௧)

பெற்றி அறியாப் பிரமனுக்கும் பெரிய மாற்கும் பெறஅரியார்
புற்றின் அரவார் கச்சைஉடைப் புனிதர் என்னைப் புணரும்இடம்
தெற்றி மணிக்கால் விளங்குதில்லைச் சிற்றம் பலமோ அன்றிஇந்த
ஒற்றி நகரோ சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே.[339] (௨)

---

337. இப் பதிக ஏட்டெண்கள் சஙு, சச. இவற்றை முறையே, " உ. சிவமம. ஒற்றியூர்." என்றும் "உ. ஒற்றியூர்." என்றும் எழுதி, அடிகளார் தொடங்கியிருக்கிறார்கள்.

338. செய்ய தீந்தமிழில் இயங்கும் இப் பா முதலியவற்றில், நம் பெருமானார், இறைவன் தமக்கு அருள்புரிய இருப்பது, திரு ஒற்றியிலேயா அல்லது தில்லையிலா என்றும், இறைவன் தம்மைச் சிறுபோது ஆண்டநுபவித்ததோடு கைவிட்டு விடுவானா அல்லது எக் காலத்தும் ஆட்கொண்டருளுவானா என்றும்—இன்ன பலப்பல ஐயங்களையும் விருப்பங்களையும் ஆய்ந்து தெளிவுபடுத்திக்கொள்ள முயல்வதுபோல், இறைவன்பால் அன்பு செலுத்தி அமைவது காண்க.

339. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் நம் தாயுமானப் பெருந்தகையாரின் மறை அமுதச் சொற்கள் போல்வன பார்த்து உளங்கொள்க :

" கண்ணுள்மணி போல்இன்பங் காட்டி எனைப்பிரிந்த
திண்ணியரும் இன்னம்வந்து சேர்வாரோ பைங்கிளியே."

" ஏடார் மலர்சூடேன் எம்பெருமான் பொன்னடியாம்
வாடா மலர்முடிக்கு வாய்க்குமோ பைங்கிளியே."

" காந்தம் இரும்பைக் கவர்ந்திழுத்தா லென்னஅருள்
வேந்தன் எமையிழுத்து மேவுவனோ பைங்கிளியே."

" பேதைப் பருவத்தே பின்தொடர்ந்தென் பக்குவமும்
சோதித்த அண்ணல்வந்து தோய்வாரோ பைங்கிளியே."

அளித்து மூன்று பிள்ளைகளால் அகிலம் நடக்க ஆட்டுவிப்பார்
தெளித்து நதியைச் சடைஇருத்தும் தேவர் திருவாழ் ஒற்றியுளார்
களித்து மாலை கொடுப்பாரோ கள்ளி எனவே விடுப்பாரோ
ஒளித்தொன் றுரையீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. (௩)

எண்தோள் இலங்கும் நீற்றணியர் யார்க்கும் இறைவர் எனைஉடையார்
வண்டோ விடும்பூங் கொன்றைஅணி மாலை மார்பர் வஞ்சமிலார்
தண்தோய் பொழில்சூழ் ஒற்றியினார் தமக்கும் எனக்கும் மணப்பொருத்தம்
உண்டோ இலையோ சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. (௪)

தவர்தாம் வணங்கும் தாளுடையார் தாய்போல் அடியர் தமைப்புரப்பார்
பவர்தாம் அறியாப் பண்புடையார் பணைசூழ் ஒற்றிப் பதிஅமர்ந்தார்
அவர்தாம் மீண்டுற் றணைவாரோ அன்றி நான்போய் அணைவேனோ
உவர்தாம் அகற்றும் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. (௫)

பைத்த அரவப் பணிஅணிவார் பணைசூழ் ஒற்றிப் பதிமகிழ்வார்
மைத்த மிடற்றார் அவர்தமக்கு மாலை இடவே நான்உளத்தில்
வைத்த கருத்து முடிந்திடுமோ வறிதே முடியா தழிந்திடுமோ
உய்த்த மதியால் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. (௬)

தக்க விதியின் மகத்தோடும் தலையும் அழித்தார் தண்அளியார்
மிக்க வளஞ்சேர் திருஒற்றி மேவும் பரமர் வினையேன்தன்
துக்கம் அகலச் சுகம்அளிக்கும் தொடர்பும் உண்டோ இலையோதான்
ஒக்க அறிந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. (௭)

வெண்மை நீற்றர் வெள்ளேற்றர் வேத கீதர் மெய்உவப்பார்
வண்மை உடையார் ஒற்றியினார் மருவ மருவி மனமகிழ்ந்து
வண்மை அகலா தருட்கடல்நீ ராடு வேனோ ஆடேனோ
உண்மை அறிந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. (௮)

ஆர்த்து மலிநீர் வயல்ஒற்றி அமர்ந்தார் மதியோ டரவைமுடிச்
சேர்த்து நடிப்பார் அவர்தமைநான் தேடி வலியச் சென்றிடினும்
பார்த்தும் பாரா திருப்பாரோ பரிந்து வாஎன் றுரைப்பாரோ
ஓர்த்து மதிப்பீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. (௯)

அள்ள மிகும்பேர் அழகுடையார் ஆனை உரியார் அரிக்கரியார்
வெள்ள மிகும்பொன் வேணியினார் வியன்சேர் ஒற்றி விகிர்தர்அவர்
கள்ள முடனே புணர்வாரோ காத லுடனே கலப்பாரோ
உள்ளம் அறியேன் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

# 16. திரு அருட் பெருமிதம்[340]

சேவிலி கழறல்

## திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

**வி**டையார் விடங்கப் பெருமானார் வெள்ளச் சடையார் வெண்ணகையால்
அடையார் புரங்கள் எரித்தழித்தார் அவரே இந்த அகிலமெலாம்
உடையார் என்று நினைத்தனைஊர் ஒற்றி அவர்க்கென் றுணர்ந்திலையோ
இடையா மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே.[341] (க)

கருவாழ் வகற்றும் கண்ணுதலார் கண்ணன் அயனும் காண்பரியார்
திருவாழ் ஒற்றித் தேவர்எனும் செல்வர் அவரே செல்வமதில்
பெருவாழ் வுடையார் எனநினைத்தாய் பிச்சை எடுத்த தறிந்திலையோ
இருவா மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே.[342] (உ)

மட்டுக் கடங்கா வண்மையினார் வளஞ்சேர் ஒற்றி வாணர்அவர்
பட்டுத் துகிலே திசைகளெலாம் படர்ந்த தென்னப் பரிந்தனையோ
கட்டத் துகிலும் கிடையாது கந்தை உடுத்த தறிந்திலையோ
இட்டுப் புணர்ந்தெங் கெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. (ங)

---

340. இப் பதிக ஏட்டெண்கள் சஙு, சச. இவற்றின் முதற்கண் முறையே, "உ. சிவ நம. சண்முக நம. ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் அடிகளார் எழுதி, அகக்கண் கொண்டு, உளம் ஒருமைப்பட்டிருக்கிறார்கள்.

341. நிலைபெற்ற செந்தமிழ் மணம் கமழும் இப் பா முதலியவற்றில், நம் பெருமான் அவர்கள், இறைவனுடைய தன்மையும், செய்கையும், விருப்பமும், எங்ஙனம் மாயை வயப்பட்ட மனத்திற்குப் பொருத்தமற்றும், விபரீதமுற்றும், பயன் இன்றியும் காண்கின்றன என்பது போல்வன இயம்புதல் காண்க.

342. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் நம் திருநாவுக்கரசு நாயனாரது செந்தமிழ்ப் பெருமறை போல்வன பார்த்துணர்க;

"உறவு பேய்க்கணம் உண்பது வெண்தலை
உறைவ தீமம்உ டலிலொர் பெண்கொடி
துறைக ளார்கடல் தோணிபு ரத்துறை
இறைவ னார்க்கிவள் என்கண்டன் பாவதே."

நடங்கொள் கமலச் சேவடியார் நலஞ்சேர் ஒற்றி நாதர்அவர்
தடங்கொள் மார்பின் மணிப்பணியைத் தரிப்பார் நமக்கென் றெண்ணினையால்
படங்கொள் பாம்பே பாம்பென்றால் படையும் நடுங்கும் பார்த்திலையோ
இடங்கொள் மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. ( ௪ )

திருக்கண் நுதலால் திருமகனைத் தீர்த்தார் ஒற்றித் தேவர்அவர்
எருக்க மலரே சூடுவர்நீ எழில்மல் லிகைஎன் றெண்ணினையால்
உருக்கும் நெருப்பே அவர்உருவம் உனக்கும் அவர்க்கும் உறவாமோ
இருக்க மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. ( ௫ )

மேலை வினையைத் தவிர்த்தருளும் விடையார் ஒற்றி விகிர்தர்அவர்
மாலை கொடுப்பார் உணங்குதலை மாலை அதுதான் வாங்குவையே
ஆல மிடற்றார் காபாலி ஆகித் திரிவார் அணிவிலரே
ஏல மயல்கொண் டென்பெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. ( ௬ )

மாகம் பயிலும் பொழிற்பணைகொள் வளஞ்சேர் ஒற்றி வாணர்அவர்
யோகம் பயில்வார் மோகமிலார் என்னே உனக்கிங் கிணங்குவரே
ஆகம் பயில்வாள் மலையாளேல் அவளோ ஒன்றும் அறிந்திலள்காண்
ஏக மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. ( ௭ )

விண்பார் புகழும் திருஒற்றி மேவும் புனிதர் விடந்தரினும்
உண்பார் இன்னும் உனக்கதுதான் உடன்பா டாமோ உளமுருகித்
தண்பார் என்பார் தமையெல்லாம் சார்வார் அதுஉன் சம்மதமோ
எண்பார் மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. ( ௮ )

நீடி வளங்கொள் ஒற்றியில்வாழ் நிமலர் உலகத் துயிர்தோறும்
ஓடி ஒளிப்பார் அவர்நீயும் ஒக்க ஓட உன்வசமோ
நாடி நடிப்பார் நீயும்உடன் நடித்தால் உலகர் நகையாரோ
ஈடில் மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. ( ௯ )

உள்ளி உருகும் அவர்க்கருளும் ஒற்றி நகர்வாழ் உத்தமர்க்கு
வெள்ளி மலையும் பொன்மலையும் வீடென் றுரைப்பார் ஆனாலும்
கள்ளி நெருங்கிப் புறங்கொள்சுடு காடே இடங்காண் கண்டறிநீ
எள்ளில் மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. ( ௧௦ )

திருச்சிற்றம்பலம்

# 17. காதற் சிறப்புக் கதுவா மாண்பு[343]

தலைவி கழற் றெதிர்மறுத்தல்

**திரு ஒற்றியூர்**

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகம் உடையார் தம்மூரை ஒற்றி வைத்தார் என்றாலும்
அலகில் புகழார் காபாலி ஆகத் திரிந்தார் என்றாலும்
திலகம் அனையார் புறங்காட்டில் சேர்ந்து நடித்தார் என்றாலும்
கலக விழியாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே.[344] ( க )

பெருமை உடையார் மனைதொறும்போய்ப் பிச்சை எடுத்தார் ஆனாலும்
அருமை மணியார் அம்பலத்தில் ஆடித் திரிந்தார் ஆனாலும்
ஒருமை உடையார் கோவணமே உடையாய் உடுத்தார் ஆனாலும்
கருமை விழியாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே.[345] ( உ )

---

343. இப் பதிக எட்டெண்கள் சஎ, சஅ. இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமயம். சிவநம. சண்முக நம." என்றும், "உ" என்றும் அடிகளார் வரைந்து, சிவாநுபவ அந்தரங்கங்களில் திளைத் திருக்கிறார்கள்.

344. இப் பா முதலியவற்றில், நம் பெருமான் அவர்கள், இறைவன் திருவடிகள் தீண்டற்கரியன ஆயினும், அவற்றின்பால் தமக்குள்ள ஆற்றொணாக் காதலையும், பேரா அன்பையும், மாறா இளமை பொருந்திய கன்னித் தண்டமிழில் உரைத்துரைத்து, மனம் நெக்கு நெக்குப் பேரின்பம் அடைந்து, நிறைவுற்று வதிதல் கண்டு களிக்க.

345. இப் பா முதலியவற்றோடு, அடியிற்கண்ட அப்பர் பெருமானாரின் அருந்தமிழ் மறையும், தாயுமானாரின் ஆனந்தக் களிப்பும் போல்வன கண்டுவக்க ;

"மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனும்
சோதி யார்தரு தோணிபு ரவர்க்குத்
தாதி யாவன்நான் என்னுமென் தையலே."

"நலமேதும் அறியாத என்னைச்—சுத்த
நாதாந்த மோனமாம் நாட்டந்தந் தேசஞ்
சலமேதும் இல்லாமல் எல்லாம்—வல்லான்
தாளால்என் தலைமீது தாக்கினான் தோழி."

எல்லாம் உடையார் மண்கூலிக் கெடுத்துப் பிழைத்தார் ஆனாலும்
கொல்லா நலத்தார் யானையின்தோல் கொன்று தரித்தார் ஆனாலும்
வல்லார் விசையன் வில்அடியால் வடுப்பட் டுவந்தார் ஆனாலும்
கல்லாம் முலையாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. ( ௩ )

என்னை உடையார் ஒருவேடன் எச்சில் உவந்தார் என்றாலும்
அன்னை அனையார் ஒருமகனை அறுக்க உரைத்தார் என்றாலும்
துன்னும் இறையார் தொண்டனுக்குத் தூதர் ஆனார் என்றாலும்
கன்னி இதுகேள் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. ( ௪ )

என்றும் இறவார் மிடற்றில்விடம் இருக்க அமைத்தார் என்றாலும்
ஒன்று நிலையார் நிலையில்லா தோடி உழல்வார் என்றாலும்
நன்று புரிவார் தருமன்உயிர் நலிய உதைத்தார் என்றாலும்
கன்றுண் கரத்தாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. ( ௫ )

என்கண் அனையார் மலைமகளை இச்சித் தணைந்தார் ஆனாலும்
வன்கண் அடையார் தீக்கண்ணால் மதனை எரித்தார் ஆனாலும்
புன்கண் அறுப்பார் புன்னகையால் புரத்தை அழித்தார் ஆனாலும்
கன்னல் மொழியாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. ( ௬ )

வாழ்வை அளிப்பார் மாடேறி மகிழ்ந்து திரிவார் என்றாலும்
தாழ்வை மறுப்பார் பூதகணத் தானை உடையார் என்றாலும்
ஊழ்வை அறுப்பார் பேய்க்கூட்டத் தொக்க நடிப்பார் என்றாலும்
காழ்கொள் முலையாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. ( ௭ )

விமலை இடத்தார் இன்பதுன்பம் வேண்டா நலத்தார் ஆனாலும்
அமலம் உடையார் தீவண்ணார் ஆமென் றுரைப்பார் ஆனாலும்
நமலம் அறுப்பார் பித்தர்எனும் நாமம் உடையார் ஆனாலும்
கமலை அனையாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. ( ௮ )

மான்கொள் கரத்தார் தலைமாலை மார்பில் அணிந்தார் என்றாலும்
ஆன்கொள் விடங்கர் சுடலைஎரி அடலை விழைந்தார் என்றாலும்
வான்கொள் சடையார் வழுத்துமது மத்தர் ஆனார் என்றாலும்
கான்கொள் குழலாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. ( ௯ )

போர்மால் விடையார் உலகமெலாம் போக்குந் தொழிலர் ஆனாலும்
ஆர்வாழ் சடையார் தமைஅடைந்தோர் ஆசை அழிப்பார் ஆனாலும்
தார்வாழ் புயத்தார் மாவிரதர் தவஞானியரே ஆனாலும்
கார்வாழ் குழலாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. ( ௧௦ )

கோதே மருவார் மால்அயனும் குறியா நெறியார் என்றாலும்
சாதே மகிழ்வார் அடியாரைத் தம்போல் நினைப்பார் என்றாலும்
மாதே வருக்கும் மாதேவர் மௌன யோகி என்றாலும்
காதோர் குழையாய் நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. (கக)

உடையார் உலகிற் காசென்பார்க் கொன்றும் உதவார் ஆனாலும்
அடையார்க் கரியார் வேண்டார்க்கே அருள்வார் வலிய ஆனாலும்
படையார் காத்தர் பழிக்கஞ்சாப் பாசு பதரே ஆனாலும்
கடையா அமுதே நானவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்

---

# 18. ஆற்றா விரகம்[346]

---

தோழியோடு கூறல்

**திரு ஒற்றியூர்**

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஓணம் உடையான் தொழுதேத்தும் ஒற்றி நகர்வாழ் உத்தமர்பால்
மாண வலியச் சென்றென்னை மருவி அணைவீர் என்றேநான்
நாணம் விடுத்து நவின்றாலும் நாமார் நீயார் என்பாரேல்
ஏணை விழியாய் என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ.[347] (க)

காதம் மணக்குங் கடிமலர்ப்பூங் காவார் ஒற்றிக் கண்ணுதலார்
போதம் மணக்கும் புனிதர்அவர் பொன்னம் புயத்தைப் புணரேனேல்
சீதம் மணக்குங் குழலாய்என் சிந்தை மயங்கித் தியங்குமடி
ஏதம் மணக்கும் என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ.[348] (உ)

---

346. இப் பதிக ஏட்டெண்கள் சக, ருப. இவற்றின் முதற்கண் முறையே, "உ. சிவமயம்." என்றும், "உ" என்றும் அடிகளார் வரைந்து சிந்தித்திருக்கிறார்கள்.

347. மழலைத் தமிழ் மிழற்றும் இப் பதிகப் பாக்களில், பெருமானார், இறைவனைத் தாம் எவ்வளவு அன்போடும் ஆர்வத்தோடும், ஒருமனத் தோடும் உன்னினாலும், அவன் உளக் கண்ணுக்கும், எந்தப் பெருந் தத்துவத்திற்கும்—எந்த முதலுக்கும்—புலப்படாமல், அருள் வெளி யில் மறைந்துறைந்து விளையாட்டயர்கிறான் என்று கருதிக் கருதி, இரங்கி, ஏங்கிக் குறையிரத்தல் காண்க.

பண்ணார் மொழியார் உருக்காட்டும் பணைசூழ் ஒற்றிப் பதியினர்என்
கண்ணார் மணிபோன் றென்உயிரில் கலந்து வாழும் கள்வர்அவர்
நண்ணார் இன்னும் திருஅணையாய் நான்சென் றிடினும் நலம்அருள
எண்ணார் ஆயின் என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ. (௩)

ஊர்என் றுடையீர் ஒற்றிதனை உலக முடையீர் என்னைஅணை
வீர்என் றவர்முன் பலர்அறிய வெட்கம் விடுத்துக் கேட்டாலும்
சேர்என் றுரைத்தால் அன்றிஅவர் சிரித்துத் திருவாய் மலர்ந்தெனைநீ
யார்என் றுரைத்தால் என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ. (௪)

சோமன் நிலவுந் தூய்ச்சடையார் சொல்லிற் கலந்த சுவையானார்
சேமம் நிலவுந் திருஒற்றித் தேவர் இன்னும் சேர்ந்திலர்நான்
தாமம் அருள்வீர் என்கினும்இத் தருணத் திசையா தென்பாரேல்
ஏம முலையாய் என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ. (௫)

வில்லை மலையாய்க் கைக்கொண்டார் விடஞ்சூழ் கண்டர் விரிபொழில்சூழ்
தில்லை நகரார் ஒற்றியுளார் சேர்ந்தார் அல்லர் நான்அவர்பால்
ஒல்லை அடைந்து நின்றாலும் உன்னை அணைதல் ஒருபோதும்
இல்லை எனிலோ என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ. (௬)

திருந்தால் அமர்ந்தார் திருப்புலியூர்ச் சிற்றம் பலத்தில் திருநடஞ்செய்
மருந்தார் ஒற்றி வாணர்இன்னும் வந்தார் அல்லர் நான்போய்என்
அருந்தாழ் வகல அருள்வீரென் றாலும் ஒன்றும் அறியார்போல்
இருந்தால் அம்மா என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ. (௭)

அசைபா தமர்ந்தும் அண்டமெலாம் அசையப் புலியூர் அம்பலத்தே
நசையா நடிக்கும் நாதர்ஒற்றி நாட்டார் இன்னும் நண்ணிலர்நான்
இசையால் சென்றிங் கென்னைஅணை வீர்என் றுரைப்பேன் எனில்அதற்கும்
இசையார் ஆகில் என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ. (௮)

---

348\. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் ஆளுடைய அரசுகள் திரு அருள் மொழியையும், தாயுமானவரின் வியப்புரையையும் போல்வன பார்த்துணர்க :

" மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலைஎம் அண்ணலே
இகழ்வ தோஎனை என்றுகொள் என்னுமே."

" நானே கருதின்வர நாடார்சும் மா இருந்தால்
தானே அணைவரவர் தன்மையென்னோ பைங்கிளியே."

" தொல்லைக் கவலை தொலைத்துத் தொலையாத
எல்லைஇலா இன்பமயம் எய்துவனோ பைங்கிளியே."

மாற்கா தலிக்கும் மலர்அடியார் மாசற் றிலங்கும் மணிஅனையார்
சேற்கா தலிக்கும் வயல்வளஞ்சூழ் திருவாழ் ஒற்றித் தேவர்அவர்
பாற்கா தலித்துச் சென்றாலும் பாவி அடிநீ யான்அணைதற்
கேற்காய் என்றால் என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ. (௯)

மாழை மலையைச் சிலையாக வளைத்தார் அன்பர் தமைவருத்தும்
ஊழை அழிப்பார் திருஒற்றி ஊரார் இன்னும் உற்றிலர்என்
பாழை அகற்ற நான்செலினும் பாரா திருந்தால் பைங்கொடியே
ஏழை அடிநான் என்செய்வேன் என்னை மடவார் இகழாரோ. ' (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

# 19. காதல் மாட்சி[349]

---

## திரு ஒற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திடனான் மறையார் திருஒற்றித் தியாகர் அவர்தம் பவனிதனை
மடனா மகன்று காணவந்தால் மலர்க்கை வளைக ளினைக்கவர்ந்து
படனா கணியர் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உடனா ஓடி னாலும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே.[350] (௧)

தக்க வளஞ்சேர் ஒற்றியில்வாழ் தம்பி ரானார் பவனிதனைத்
துக்கம் அகன்று காணவந்தால் துகிலைக் கவர்ந்து துணிவுகொண்டே
பக்க மருவும் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஒக்க ஓடி னாலும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே.[351] (௨)

---

349. இப் பதிக ஏட்டெண்கள் ௫௧, ௫௨. இவற்றின் தொடக்கத்தில் முறையே, "உ. சிவமயம், ஒற்றியூர்." என்றும், "உ" என்றும் அடிகளார் வரைந்து இறை-நுகர்ச்சி எய்தியிருக்கிறார்கள்.

350. செந்தமிழ்ப் பைந்தேன் பிலிற்றும் இப் பா முதலியவற்றில், பெருமானவர்கள் இறைவனுடைய அருட்செயல்களையும் அவன் திருவடிக்கண் தமக்குள் விளைந்து நிலைபெற்றுத் தம் உள்ளும் புறம்பும் நிறைந்து பொங்கித் ததும்பும் பேரன்பையும், இறைவனது முடிவற்ற, கங்கு கரையில்லாத், காணற்கரிய தன்மையையும் எண்ணி எண்ணி, உணர்ந்துணர்ந்து நுகர்தல் காண்க.

தாயாய் அளிக்குந் திருஒற்றித் தலத்தார் தமது பவனிதனை
மாயா நலத்தில் காணவந்தால் மருவும் நமது மனங்கவர்ந்து
பாயா விரைவில் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஓயா தோடி னும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே. (௩)

நிலவார் சடையார் திருஒற்றி நிருத்தர் பவனி தனைக்காண
நலவா தரவின் வந்துநின்றால் நங்காய் எனது நாண்கவர்ந்து
பலவா தரவால் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உலவா தோடி னும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே. (௪)

நாடார் வளங்கொள் ஒற்றிநகர் நாதர் பவனி தனைக்காண
நீடா சையினால் வந்துவந்து நின்றால் நமது நிறைகவர்ந்து
பாடார் வலராம் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஓடா தோடி னும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே. (௫)

அழியா வளத்தார் திருஒற்றி ஐயர் பவனி தனைக்காண
இழியா மகிழ்வி னொடும்வந்தால் என்னே பெண்ணே எழில்கவர்ந்து
பழியா எழிலின் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஒழியா தோடி னும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே. (௬)

திரையார் ஓதை ஒற்றியில்வாழ் தியாக ரவர்தம் பவனிதனைக்
கரையா மகிழ்விற் காணவந்தால் கற்பின் நலத்தைக் கவர்ந்துகொண்டு
பரையா தரிக்க நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உரையா தோடி னும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே. (௭)

---

351. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருநாவுக்கரசு நாயனார், திருஞான சம்பந்தப் பெருமானார் தேவாரத் தெய்வப் பெருமறை போல்வன பார்த்தமைக:

"வெந்தார்வெண் பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேற் றாஞ்சூடி வீணை யேந்திக்
கந்தாரந் தாம்முரலாப் போகா நிற்கக்
கறைசேர் மணிமிடற்றீ ரூரே தென்றேன்
நொந்தார்போல் வந்தென(து) இல்லே புக்கு
நுடங்கே ரிடைமடவாய் நம்மூர் கேட்கில்
அந்தா மரைமலர்மேல் அளிவண் டியாழ்செய்
ஆமாத்தூர் என்றடிகள் போயி னாரே."

"தோடுடை யசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடை யசுட லைப்பொடி பூசிஎன் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடை யமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடை யபிர மாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே."

கடுக்கா தலித்தார் திருஒற்றிக் காளை அவர்தம் பவனிதனை
விடுக்கா மகிழ்விற் காணவந்தால் விரியும் நமது வினைகவர்ந்து
படுக்கா மதிப்பின் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உடுக்கா தோடி னும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே. (௮)

தில்லை உடையார் திருஒற்றித் தியாகர் அவர்தம் பவனிதனைக்
கல்லை உருக்கிக் காணவந்தால் கரணம் நமது கரந்திரவி
பல்லை இறுத்தார் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஒல்லை ஓடி னும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே. (௯)

மடையார் வாளை வயல்ஒற்றி வள்ளல் பவனி தனைக்காண
அடையா மகிழ்வி னொடும்வந்தால் அம்மா நமது விடயமெலாம்
படையாற் கவர்ந்து நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உடையா தோடி னும்அவர் ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

## 2. மூன்றாம் திருமுறை[352]

முற்றிற்று.

---

இரண்டாம் திருமுறை: 103 பதிகங்கள், 1085 பாக்கள்.

மூன்றாம் திருமுறை: 19 பதிகங்கள், 235 பாக்கள்.

---

# திரு அருட்பா

## எட்டாம் புத்தகமாகிய திரு ஒற்றியூர்ப் பகுதி

முற்றிற்று.

---

352. இம் மூன்றாம் திருமுறைப் பாக்கள் கொண்ட ஏட்டுச்சுவடியில் கண்ட மற்றப் பாக்களும், தொ. வே. அவர்களால் மூன்றாம் திருமுறையில் சேர்க்கப்படாதவையும், இங்கிதமாலை போன்றவையும் ஆன 42 அருட்பாக்கள், இப் பதிப்பு ஆறாம் புத்தகம் தனிப்பாசுரப் பகுதியில் அருள்மொழிமாலை, இன்பமாலை என்னும் தலைப்புக்களின் கீழ், முதல் முதல், 1933-ஆம் ஆண்டில், வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றை அங்கே காண்க.

# அநுபந்தம்

## 1. திரு அருட்பாவினைச் சார்ந்த சில முதன்மையான தேதிகள்[353]

---

திரு அருட்பிரகாச வள்ளற் பெருமான் அவர்கள் மருதூரில் திரு அவதாரம் : ... 1823

பெருமான் அவர்கள் சென்னைக்கு வந்தது : ... 1824

அவர்கள் ஒழிவிலொடுக்க நூல் அச்சிற் பதிப்பித்தது : ... 1851

அவர்களது மநுமுறைகண்ட வாசகம் அச்சானது : ... 1854

அவர்கள் தொண்டமண்டல சதகத்தை அச்சிற் பதிப்பித்தது : ... 1855

அவர்கள் சின்மய தீபிகையை அச்சிற் பதிப்பித்தது : ... 1857

அவர்கள் சென்னையை விட்டுக் கருங்குழிக்கு வந்தது : ... 1858

அவர்கள் சன்மார்க்க சங்கம் ஏற்படுத்தியது : ... 1865

சன்மார்க்க சங்க அன்பர்களால் திரு அருட்பா முதல் நான்கு திருமுறையும் வெளிவந்தது—தொ. வே. அவர்கள் பதிப்பு : ... 1867

அவர்கள் வடலூர் சத்திய தருமச்சாலை வழிபாடு ஏற்படுத்தியது : ... 1867

அவர்கள் திருமேனி ஒளியுரு அடைந்தது : ... 1870

அவர்கள் வடலூர் சத்திய ஞான சபை வழிபாடு ஏற்படுத்தியது : ... 1871

அவர்கள் மேட்டுக்குப்பத்தில் சித்திவளாக வழிபாடு ஏற்படுத்தியது : 1873

அவர்கள் மஹோபதேசம் செய்தது : ... 1873

அவர்கள் திருமேனி ஒளி உருவும் கரந்து ஞான வடிவெய்தியது : ... 1874

அவர்களது ஜீவகாருண்ய ஒழுக்கம் அச்சானது : ... 1879

திரு அருட்பா ஐந்தாந் திருமுறை வெளிவந்தது—தொ. வே. அவர்கள் பதிப்பு ... 1880

சன்மார்க்க சங்க அன்பர்களால் திரு அருட்பா ஆறாந் திருமுறை வெளிவந்தது ; ... 1885

திரு அருட்பா முதல் நான்கு திருமுறைகள் தொ. வே. அவர்கள் 2-ஆம் பதிப்பு வெளிவந்தது : ... 1887

திரு அருட்பா திரு. ச. மு. கந்தசாமி பிள்ளை பதிப்பு வெளிவந்தது ... 1924

**திரு அருட்பா பாலகிருஷ்ண பிள்ளை அடக்கவிலைப் பதிப்பு :**

கீர்த்தனைப் பகுதி, வசனப் பகுதி, வியாக்கியானப் பகுதி வெளிவந்தது : ... 1931

உபதேசப் பகுதி, திருமுகப் பகுதி, தனிப்பாசுரப் பகுதி வெளிவந்தது : ... 1932

கீர்த்தனைப் பகுதி, 2-ஆம் பதிப்பு வெளிவந்தது : ... 1933

வசனப் பகுதி—2-ஆம் பதிப்பு வெளிவந்தது : ... 1934

வியாக்கியானப் பகுதி—2-ஆம் பதிப்பு வெளிவந்தது : ... 1935

பெருநூல் பகுதி வெளிவந்தது : ... 1956

திரு ஒற்றியூர்ப் பகுதி வெளிவந்தது : ... 1956

---

353. இக் குறிப்பு 1935-ஆம் ஆண்டில் வியாக்கியானப் பகுதியைச் சார்ந்து முதல் முதல் அச்சிடப்பட்டது.

# அநுபந்தம்

## 2. தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களுடைய இரண்டாம் திருமுறைப் பதிப்பில் கண்ட குறிப்புக்கள்

(1). முதற் பதிப்பு.

**39. பற்றின் திறம் பகர்தல், 10-ஆம் பா.**

நடுங்குவ நடுங்குவ மனமே என்பது ஒருமைப் பன்மை மயக்கம், உப லக்கணத்தான் அமைந்ததென்க. இதனை விரிக்கிற் பெருகும். அறி வொன்றே யாகவும் இடனும் பற்றுக் கோடும் பற்றி, ஆசிரியர் தொல்காப்பி யனார், மரபியலுள், "ஒன்றறிவது" என்னும் சூத்திரந் தொட்டு "மடக்காமே" என்னும் சூத்திரங்காறும் விதந்தமையானும் காண்க. அல்லதூஉம், ஒரு மையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும் மயங்கி வந்தது என்பதூஉம் ஒன்று. ஒன்றறியீறு கெட்டு நின்றதெனக் கொள்ளுநர் கொள்க.

**41. அவத் தொழிற் கலைசல், 3-ஆம் பா.**

மறைகள் இளைக்கின்றது என்பது, மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டாது என்றாற் போலும் வந்த பன்மையின் ஒருமை மயக்கம்.

**64. நெஞ்சு நிலைக் கிரங்கல், 2-ஆம் பா.**

கயன்று என்பது, மெலிந்து என்னும் பொருட்டு. இஃது உரி அடி யாகப் பிறந்த வினையெச்சம். இதனை ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய "கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்" என்னும் உரி இயற் சூத்திரத் தானும் உணர்க. இக்காலத்து இச்சொல் "கசங்குதல்" என வழங்குகிறது.

**94. தனித் திரு விருத்தம்**

இப் பதிகத்துள் கலித்துறைகளும் விரவி நிற்கவும், விருத்தம் எனக் குறியிட்டு ஆளப்பட்டமைக்கு ஈண்டு விதி எழுதப் புகின் மிகப் பெருகுமாத லின் விடுக்கப்பட்டது. சைவம் பன்னிரண்டு திருமுறைகளுள், ஆளுடைய அரசாகிய அப்பர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறையில் "குலம்பலம்பாவரும்" என்றற் றொடக்கத்து இலக்கியங்களால் கண்டு கொள்க.

(2). இரண்டாம் பதிப்பு.

**3. ஸ்ரீ சிவஷண்முக நாம ஸங்கீர்த்தன லகரி, 2-ஆம் பா.**

"நந்துயராமாது சொல்லுதும்" என்பதற்கு வினையாகிய பாகரால் பொறி யானைகள் விடயப் படுகரில் விழச் செலுத்துண்ணு நமது துக்கம் என்னும் அதட்டலோசையைக் கூறுதும் எனப் பொருள் கொள்க.

# அநுபந்தம்

## 3. இரண்டாம் திருமுறையின் சிற்சில பதிகங்களுக்கும் பாக்களுக்கும் செய்யுள் இனம் குறித்திருப்பதில் உள்ள வேறுபாடுகள்

| பதிக எண் | பா எண் | தொ. வே. அவர்களின் முதல் பதிப்பு | தொ. வே. அவர்களின் இரண்டாம் பதிப்பு | ச. மு. கந்தசாமிப் பிள்ளை அவர்களின் பதிப்பு | இப் பதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | — | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 9 | — | அறு ,, | அறு ,, | எண் ,, | எண் ,, |
| 10 | — | அறு ,, | அறு ,, | எண் ,, | எண் ,, |
| 23 | — | எழு ,, | எழு ,, | எண் ,, | எண் ,, |
| 24 | — | கலிநிலைத் துறை | கலிநிலைத் துறை | எழு ,, | எழு ,, |
| 25 | — | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எண் ,, | எண் ,, |
| 26 | — | எழு ,, | எழு ,, | எண் ,, | எண் ,, |
| 27 | | எழு ,, | எழு ,, | எண் ,, | எண் ,, |
| 28 | — | வஞ்சி விருத்தம் | கலி விருத்தம் | வஞ்சி விருத்தம | கலி விருத்தம் |
| 43 | — | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 46 | — | எழு ,, | எழு ,, | எண் ,, | எண் ,, |
| 49 | — | எண் ,, | எழு ,, | எண் ,, | எண் ,, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 74 | — | கலி விருத்தம் | கலி விருத்தம் | கலி விருத்தம் | கொச்சகக் கலிப்பா |
| 78 | — | இரட்டைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | இரட்டைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | இரட்டை எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் | இரட்டை அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 81 | — | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 85 | — | எழு ,, | எழு ,, | எண் ,, | எண் ,, |
| 88 | 8 | அறு ,, | அறு ,, | எண் ,, | எண் ,, |
| | 9 | எழு ,, | எழு ,, | அறு ,, | அறு ,, |
| | 10 | எழு ,, | எழு ,, | அறு ,, | அறு ,, |
| | 13 | ஆசிரியத் தாழிசை | ஆசிரியத் தாழிசை | ஆசிரியத் தாழிசை | ஆசிரியத் துறை |
| 90 | — | ஆசிரியத் தாழிசை | ஆசிரியத் தாழிசை | ஆசிரியத் துறை | ஆசிரியத் துறை |
| 92 | — | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 94 | 4 | எழு ,, | எழு ,, | எண் ,, | எண் ,, |
| | 11 | எண் ,, | கட்டளைக் கலிப்பா | எண் ,, | எண் ,, |
| | 33 | கலி விருத்தம் | கலி விருத்தம் | கலி விருத்தம் | கலிநிலைத் துறை |
| | 37 | கலி விருத்தம் | கலி விருத்தம் | கலி விருத்தம் | கலிநிலைத் துறை |
| | 38 | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| | 43 | ஆசிரியத் தாழிசை | ஆசிரியத் தாழிசை | ஆசிரியத் தாழிசை | வெண் துறை |
| | 47 | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| | 50 | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | எழு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 99 | — | கட்டளைக் கலிப்பா | கட்டளைக் கலிப்பா | கட்டளைக் கலிப்பா | எண்சீர்க்கழிநெடிலடிச் சந்த விருத்தம் |
| 103 | — | கலிச்சந்த விருத்தம் | கலிச்சந்த விருத்தம் | கலிச்சந்த விருத்தம் | கலிநிலைத் துறை |

# அநுபந்தம்

## 4. திரு அருட்பா திரு ஒற்றியூர்ப் பகுதி

### பாட்டு முதற் குறிப்பு அகராதி

### 1. இரண்டாம் திருமுறை

#### அ


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அக்கநுதல் | 64 |
| அங்கையில் | 118 |
| அஞ்செழுத்தோதி | 46 |
| அட முடியாது | 253 |
| அடியர்நெஞ்சத்த | 52 |
| அடியனேன் அலன் | 26 |
| அடியனேன்பிழை | 220 |
| அடியனேன் மிசை | 196 |
| அடியார் இன்பம் | 227 |
| அடியேன் முடுகிச் | 227 |
| அடுத்தவர்க்கு | 91 |
| அட்டமூர்த்தம | 12 |
| அணங்கனார் களப | 112 |
| அணிகொள் | 93 |
| அணிவேல்படை | 67 |
| அண்டனே | 109 |
| அண்ணலேநின்னை | 244 |
| அண்மையாரும் | 40 |
| அப்பாநின் | 192 |
| அப்பார் மலர் | 202 |
| அமைவுறிந்திடா | 107 |
| அம்பலத்தாடும் | 276 |
| அம்பலத்துள் | 62 |
| அம்மை அப்பன் | 184 |
| அரக்கன் அல்லன் | 185 |
| அரந்தையோடு | 158 |
| அரியது நினது | 121 |
| அரியபெருமான் | 232 |
| அருட்பெரும் | 199 |
| அருந்திறல் | 200 |
| அருமருந்தனையாய் | 134 |
| அருளார்அமுத | 202 |
| அருளார்அமுதே | 255 |
| அருளேவடிவாய் | 224 |
| அருள் அளித்து | 266 |
| அருள்ஓர்சிறிதும் | 231 |
| அருள்செய்நீறிடார் | 20 |
| அருள் தரல் | 218 |
| அருள்பவன் | 191 |
| அருள்பழுக்கும் | 63 |
| அருள் பழுத்தோங்கும் ஆனந்தத்தருவே | 198 |
| அருள் பழுத்தோங்கும் கற்பகத்தருவே | 248 |
| அருள்வதுன் | 122 |
| அலைஓய் கடலில் | 87 |
| அலைவளைக்கும் | 124 |
| அல்ல ஓதியர் | 165 |
| அல்லலங்கடலிடை | 89 |
| அல்லல்என்பதேன் | 23 |
| அல்லல் என்னை | 140 |
| அல்லாலம் உண்ட | 82 |
| அல்லைவைத்த | 173 |
| அழிந்த வாழ்க்கை | 94 |
| அழுதபிள்ளைக்கே | 24 |
| அழுதுநெஞ்சு | 129 |
| அளவிலா உலக | 148 |
| அளிய நெஞ்சம் | 146 |
| அறங்கொள் | 68 |
| அறத்தாயை | 87 |
| அறியாப்பருவத் தடியேனை | 44 |
| அறியாப்பருவத் தறிவுறுத்தி | 207 |
| அறியேன்உன் தன் | 111 |
| அற்ப அளவும் | 210 |
| அன்பநென்பதை | 181 |
| அன்பர் இதய | 245 |
| அன்பர்கள் | 91 |
| அன்பர்தம் | 197 |
| அன்புடன்நின் | 65 |
| அன்புற்றடியார் | 224 |
| அன்றினேர்கிலே | 96 |
| அன்றுநீ அடிமை | 122 |
| அன்றும்அறியார் | 111 |
| அன்றும்சிறியேன் | 232 |
| அன்றோர் பொருளாய் | 225 |
| அன்னேஎன் | 243 |
| அன்னை அப்பனும் | 195 |
| அன்னைபோன்று | 132 |
| அன்னையில் பெரிதும் | 141 |
| அன்றேதிரு | 224 |


#### ஆ


| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஆக்கல்ஆதிய | 180 |
| ஆசும்படியில் | 193 |
| ஆட்டுகின்றதற்காக | 103 |
| ஆட்டுகின்றநீ | 137 |
| ஆண்டதுண்டு | 183 |
| ஆண்டநின் | 190 |
| ஆண்டவன்நீ | 263 |
| ஆண்டாய்என்னை | 238 |
| ஆதவன்தன் | 128 |
| ஆதியேதில்லை | 78 |
| ஆயாது நான் செயும் | 229 |
| ஆயிரங்கார்முகில் | 249 |
| ஆயும் வஞ்சக | 254 |
| ஆர்க்கும் கடற்கண் | 80 |
| ஆர்த்தார் | 87 |
| ஆர்ப்பார் கடல் | 86 |
| ஆலம் உண்டநீர் | 156 |
| ஆல்அடுத்த | 38 |
| ஆவல் உடையார் | 80 |
| ஆவா என என்னை | 230 |
| ஆவித்துணையே | 242 |
| ஆளாக நின்பொன் | 178 |
| ஆள்வினையரல் | 232 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **ஆ** | |
| ஆறடுத்து | 124 |
| ஆறுவாண் | 61 |
| ஆற்றால் விளங்கும் | 255 |
| ஆற்றுக்கே | 244 |
| ஆனந்தக் கூத்தனை | 90 |
| ஆனேறி வந்தன் பறை | 238 |
| **இ** | |
| இகழ்ந்திடேல் | 189 |
| இக்கணம் இருந்த | 268 |
| இச்சை உண்டெனக்கு | 74 |
| இடமே பொருளே | 231 |
| இட்டவகை | 234 |
| இத்தாரணியில் | 177 |
| இந்நாள் அடியேன் | 222 |
| இப்பாரிடை | 176 |
| இமைக்கும் அவ்வளவேனும் | 181 |
| இம்மாநிலத்தில் இடருழத்தல் | 177 |
| இம்மாநிலத்தில் சிவபதம் | 224 |
| இம்மை இன்பமே | 152 |
| இரங்கம் என்பதென் | 136 |
| இரக்கின்றோர் | 100 |
| இரங்காதிருந்தால் | 221 |
| இருக்க வாவுற | 75 |
| இருந்தனை எனது | 142 |
| இருப்பு மனத்து | 223 |
| இரும்புன்னை | 253 |
| இருளற ஓங்கும் | 259 |
| இருள் ஆர் | 170 |
| இலவு காக்கின்ற | 101 |
| இலனோ மற்றோர் | 112 |
| இலைஎனுதனு | 94 |
| இலை வேட்டமாதர் | 43 |
| இல்லைஇல்லைகாண் | 22 |
| இல்லை உண்டென | 58 |
| இல்லைஎன்பதனுக்கு | 30 |
| இல்லைஎன்பதிலா | 89 |
| இல்லைஎன்பதே | 9 |
| இல்லையேஎன்ப | 89 |
| இவ்வழியில் | 243 |
| இழைபொறுத்த | 209 |
| இறப்பிலார் | 164 |
| இறையும்நின் | 123 |
| இனியநின் | 122 |
| இனியநீறிடா | 21 |
| இன்பம்என்பது | 164 |
| இன்புடையார் | 168 |
| இன்றிருந்தவரை | 115 |
| இன்றுநின்றவர் | 138 |
| இன்றுவந்தெனை | 48 |
| இன்னல்உலக | 125 |
| இன்னும்எங்ஙனம் | 95 |
| இன்னும்பற்பல | 14 |
| இன்னே எளியேன் | 171 |
| **ஈ** | |
| ஈசனைந்தாயில் | 110 |
| ஈர்ந்த நெஞ்சினர் | 10 |
| ஈன்றவனே | 166 |
| ஈன்று கொண்ட | 184 |
| **உ** | |
| உடுக்க வேண்டி | 73 |
| உடை உடுத்திட | 13 |
| உடைகொள் | 51 |
| உடைமைவைத்து | 49 |
| உடையாய்உன் | 62 |
| உட்டிகழ்ந்த | 161 |
| உண்டநஞ்சு | 142 |
| உண்டுநஞ்சமரர் | 122 |
| உண்டுவறிய | 210 |
| உண்டோ எனைப் போல் | 111 |
| உண்டோ என் | 203 |
| உண்ணுடும் | 53 |
| உண்ணிறைந்தெனை | 12 |
| உண்ணுகின்றதும் | 185 |
| உண்மை அறியேன் | 170 |
| உண்மை ஓதினும் | 104 |
| உண்மைநின் அருள் | 182 |
| உண்மையே | 89 |
| உப்பிடாதகூழ் | 154 |
| உம்பர்தமக்கு | 169 |
| உம்பர்வான் துயர் | 12 |
| உய்யஒன்றறியா | 45 |
| உய்யஓன்றிலேன் | 137 |
| உய்யவல்லனேல் | 138 |
| உய்யும் வண்ணம் | 78 |
| உரைத்தார்சிலர் | 225 |
| உலகம்ஏத்தி | 241 |
| உலகமுழ் | 265 |
| உலகம் பரவும் | 225 |
| உலகவாழ்க்கை | 150 |
| உலகின் உயிர் | 266 |
| உலகுயிர்தொறும் | 199 |
| உலகெலாந் தழைப்ப | 274 |
| உலகெலாம் நிறைந்து | 259 |
| உள் உணர்வோர் | 252 |
| உள்ளக்கவலை | 222 |
| உள்ளதோதினால் | 158 |
| உள்ளத்தெழுந்த | 4 |
| உள்ளமறிந்துதவும் | 234 |
| உள்ளியோஎன | 24 |
| உள்ளும்திரு | 175 |
| உள்ளும்புறமும் | 80 |
| உறங்குகின்றதும் | 130 |
| உறவனேஉன்னை | 49 |
| உறைந்துவஞ்சர் | 10 |
| உற்றஇடத்தில் | 4 |
| உன் உள்ளம் | 193 |
| உன்னைஉன்னி | 6[illegible] |
| உன்னைநாடும் | 209 |
| உன்னைநினைந்து | 242 |
| **ஊ** | |
| ஊட்டுகின்றனை | 187 |
| ஊணைத்துயர்ந்த | 212 |
| ஊண்உறக்கமே | 151 |
| ஊதியம்பெறு | 23 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **ஊ** | |
| ஊர்சொல்வேன் | 56 |
| ஊர்மதிக்க | 44 |
| ஊழை அகற்ற | 56 |
| ஊழையேமிக | 183 |
| ஊழ்வினைப்படி | 164 |
| ஊற்றம்உற்றுவெண் | 22 |
| ஊன்கொண்ட | 87 |
| ஊன்செய்த | 229 |
| **எ** | |
| எஞ்சல்இல்ல | 163 |
| எஞ்சவேண்டிய | 14 |
| எஞ்சா இடரால் | 174 |
| எண்கடந்த | 251 |
| எண்ண இனிய | 3 |
| எண்ணுதெளியேன் | 171 |
| எண்ணுமல் | 193 |
| எண்ணிநலிவேன் | 226 |
| எண்ணிலாநினைப்பு | 151 |
| எண்ணுறு | 213 |
| எண்பெருவினைக் | 76 |
| எந்தாய்ஒருநாள் | 222 |
| எந்தையேஎன்பவர் | 175 |
| எந்தையேதில்லை | 79 |
| எப்பாலும் | 167 |
| எம்மைவாட்டும் | 15 |
| எல்லாம்செயவல்ல | 18 |
| எல்லாம்தெரிந்த | 229 |
| எழுவகை | 215 |
| எழுவினும் | 258 |
| எளியனேன் சிறியன் | 216 |
| எளியனேன் பிழை | 77 |
| எளியனேன் மையல் | 142 |
| எளியேன் இழைத்த | 171 |
| எளியேன் கருணை | 226 |
| எளியேன்நின் | 176 |
| எற்றுக்கடியர் | 120 |
| எனக்குநீர் இங்கோர் | 163 |
| என் ஆருயிருக்கு | 228 |
| என்என்றேழை | 196 |
| என் செய்திடுவேன் | 226 |
| என்நாணை | 234 |
| என்பதேற்றவன் | 22 |
| என்பிறப்பினை | 163 |
| என்றுநின் | 191 |
| என்றும்உனக்கு | 82 |
| என்றென் | 83 |
| என்னதன்று | 102 |
| என்னநான்அடி | 156 |
| என்னநான்சொலி | 69 |
| என்னபசே | 243 |
| என்னிருகண்காள் | 259 |
| என்னுடை வஞ்சக | 90 |
| என்னுரிமை | 207 |
| என்னே இனும் | 238 |
| என்னை அறியா | 233 |
| என்னைக் கொடுத்தேன் | 120 |
| என்னைநின்னவனு | 50 |
| **ஏ** | |
| ஏங்கிநோகின்ற | 72 |
| ஏணப்பரிசெஞ்சடை | 18 |
| ஏதுசெய்திடினும் | 199 |
| ஏய்ந்துவஞ்சகர் | 10 |
| ஏலக்குழலார் | 85 |
| ஏலவார்குழல் | 61 |
| ஏழியல்பண் | 18 |
| ஏறுகின்றிலேன் | 139 |
| ஏன்றுகொண் டருள | 143 |
| ஏன்றுகொள் | 202 |
| **ஐ** | |
| ஐதட்டிடும் | 193 |
| ஐயநின்னுடை | 75 |
| ஐயரே | 257 |
| ஐயனேமாலும் | 115 |
| ஐயாமுக்கண் | 256 |
| ஐவாய் அரவில் | 86 |
| **ஒ** | |
| ஒக்கநெஞ்சமே | 57 |
| ஒப்பாரும் | 174 |
| ஒப்பார் இல்லா | 111 |
| ஒப்பிலாய்உனது | 114 |
| ஒருகணப்பொழுது | 71 |
| ஒருமைப்பயனை | 246 |
| ஒல்லைஎயில்மூன் | 80 |
| ஒல்லையே | 57 |
| ஒழியாக் கவலை | 255 |
| ஒழியாமயல் | 258 |
| ஒழுக்கம்இல்லவன் | 155 |
| ஒளிமருவும் | 271 |
| ஒளியாய் ஒளிக்குள் | 178 |
| ஒற்றிஊரனைப் | 22 |
| ஒற்றிமேவிய | 77 |
| ஒற்றியூர் அமரும் | 121 |
| ஒன்றுநின் தன்மை | 113 |
| ஒன்றுந்தெரிந்திட | 230 |
| **ஓ** | |
| ஓங்கும்பொருளே | 120 |
| ஓடஉன்னியே | 28 |
| ஓடல்எங்கணும் | 71 |
| ஓடுகின்றனன் | 15 |
| ஓடும்நெஞ்சமே | 58 |
| ஓடுவாள்தில்லை | 274 |
| ஓதுநெறி | 84 |
| ஓவாமயல்செய் | 176 |
| **க** | |
| கங்கை அஞ்சடை | 33 |
| கஞ்சமலர் | 253 |
| கஞ்சனைச் சிரம் | 109 |
| கஞ்சனோர் தலை | 60 |
| கஞ்சன் அங்கொரு | 98 |
| கடந்தாழ் கயம்போல் | 227 |
| கடம்பொழி | 143 |
| கடலேஅனைய | 203 |
| கடவுள்நீறிடா | 19 |
| கடனே அடியர் | 112 |
| கடுத்ததும்பிய | 38 |
| கடையவனேன் | 128 |
| கட்டினேன்பாப | 47 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **க** | |
| கணத்தில்என்னை | 180 |
| கணத்தினில் | 118 |
| கண்கள்மூன்றினார் | 96 |
| கண்கொள்மணியை | 3 |
| கண்டவனே | 167 |
| கண்ணப்பா | 160 |
| கண்ணனோடயன் | 60 |
| கண்ணார் அமுதே | 161 |
| கண்ணார் நுதலோய் | 171 |
| கண்ணிலான் சுடர் காண | 187 |
| கண்ணிலான்சுடர் காணிய | 182 |
| கண்ணினால்உனது | 132 |
| கண்ணுண்மாமணி | 135 |
| கண்ணுதலானை | 92 |
| கண்ணுதலே | 63 |
| கண்ணுள்மணி | 175 |
| கண்நுதல்கரும்பே | 134 |
| கந்தநாண்மலர் | 260 |
| கந்தமும்மலரும் | 139 |
| கந்தவண்ணமாம் | 16 |
| கமரிடைமலநீர் | 133 |
| கமைப்பின்னகிலா | 10 |
| கயவர் இல்லிடை | 72 |
| கரப்பவர்க்கு | 30 |
| கரவுநெஞ்சினர் | 9 |
| கரியமாலன்று | 97 |
| கருங்கணம் | 116 |
| கருங்களிற்று | 275 |
| கருணை அங்கடலே | 199 |
| கருணைக்கடலே | 222 |
| கருதாயோ | 82 |
| கருதென அடியார் | 31 |
| கருமால்அகற்றும் | 2 |
| கருமையாம் | 108 |
| கரும்பின்கட்டி | 130 |
| கரும்பேஒற்றி | 119 |
| கரும்பைப்பந்தாகணை | 97 |
| கரைபடாவஞ்ச | 49 |
| கலங்குகின்ற | 70 |
| கலம்இலாது | 27 |
| கலைபயின்ற | 273 |
| கலைபயின்று | 252 |
| கல்இகந்தவன் | 24 |
| கல்லாநடையேன் | 205 |
| கல்லாரொடும் | 206 |
| கல்லார்க்கிதம் | 125 |
| கல்லின்நெஞ்சர் | 100 |
| கல்லேன்மன | 86 |
| கல்லைஉந்திவான் | 28 |
| கல்லைநிகராம் | 55 |
| கல்லைப்புறங்கண்ட | 128 |
| கல்லையும்பசும் | 41 |
| கல்லைவில்லில் | 201 |
| கல்லைவெல்ல | 185 |
| கல்விவேண்டிய | 159 |
| கழல்கொள்உன் | 45 |
| களிவேதனும் | 88 |
| கள்உண்ட | 126 |
| கள்உருகும் | 251 |
| கள்ளநெஞ்சக | 208 |
| கள்ளநெறி | 206 |
| கள்ளமற்ற | 40 |
| கள்ளமனத்து | 204 |
| கறையோர்கண்ட | 246 |
| கற்பவற்றை | 126 |
| கற்பவைஎலாம் | 267 |
| கற்பன அறிந்து | 144 |
| கற்றவர்க்கினி | 134 |
| கற்றே அறியா | 206 |
| கன்னியர் அளக | 117 |
| **கா** | |
| காணேன்நினது | 227 |
| காண்பதுகருதி | 48 |
| காதார்கடுவிழியார் | 43 |
| காமக்கடலில் | 171 |
| காமம்என்பதோர் | 145 |
| காமம்என்னும்ஓர் | 164 |
| காயம்என்பது | 25 |
| காயார் சரிகை | 240 |
| காரார்குழலாள் | 65 |
| காலம்செல்கின்ற | 101 |
| கால்வாங்கிய | 243 |
| காவலனே | 166 |
| காவின்மன்னவன் | 15 |
| கான்றசோறு | 117 |
| **கு** | |
| குடிகொள்மலம் | 210 |
| குருதிநிறைந்த | 211 |
| குழிக்குமண் | 133 |
| குளங்கொள் | 99 |
| குற்றமெல்லாம் | 93 |
| குற்றமேபல | 158 |
| குற்றம்எத்தனை | 41 |
| குற்றம்எலாம் | 207 |
| குற்றம்செயினும் | 125 |
| குன்றுநிலை | 228 |
| குன்றேர்முலைச்சி | 179 |
| **கூ** | |
| கூடும்படிமுன் | 80 |
| கூட்டும்எனும்பால் | 211 |
| கூட்டுவிக்குள் | 127 |
| கூர்கொண்ட | 214 |
| கூவிஎன்பதோர் | 154 |
| கூறுமையாள் | 84 |
| கூறும்ஓர்கணத்து | 104 |
| **கெ** | |
| கெடுக்கும்வண்ணம் | 102 |
| **கே** | |
| கேட்டிலாய் | 233 |
| கேளனந்தான் | 192 |
| **கை** | |
| கைதவத்தர்தம் | 24 |
| **கொ** | |
| கொடியநஞ்சமு | 131 |
| கொடியநெஞ்சினேன் | 145 |
| கொடியபாவியேன் | 196 |

| பாட்டு | பக்கம் |
|---|---|


கொ

கொடியமாதர்கள் 106
கொடியவஞ்சக 153
கொண்டல் நிறத்தோன் 43
கொலைஅறியா 170
கொள்ளுவார் 124

கோ

கோடாமே பன்றி 205
கோடிநாவினும் 181
கோதைஇலர் 175
கோலமலர்த்தாள் 2
கோவம்என்னும் 106

ச

சங்கம் வளர்ந்திட 273
சங்கரனே 166
சங்கராமுக்கண் 242
சங்குடையான் 54
சஞ்சிதந்தரும் 165
சடையனை 109
சண்டவெம்பவ 72
சந்ததம் எனக்கு 217
சரணவாரிசம் 143
சரதத்தால் 200
சழக்கிருந்தது 128
சற்றும்நற்குணம் 149

சா

சாதல் பிறத்தல் 210
சாரவரும் 43
சார்ந்தலோபமாம் 107

சி

சிந்தாமணியை 3
சிந்தைநின்ற 37
சிந்தைநொந்திச் சிறிய 209
சிந்தைநொந்துலகில் 41
சிந்தைநொந்து நொந்து 68
சிந்தைமயங்கி 52
சிரிப்பார்நின்பேர் 231
சிறியர் செய்பிழை 137
சிறியேன் தவமோ 224
சிறியேன் பிழையை 227
சிற்பர சிவனே 191
சின்மயனே 166

சீ

சீர்சிறக்கும் 36
சீர்தருவார்புகழ் 239
சீர்துணையார் 207
சீர்புகழும் 127
சீலமேவி 51
சீலம்அற 127

சு

சுடர்கொளும் 48
சுத்தநெஞ்சருள் 140
சுந்தர மீறணி 276
சுந்தரர்க்காகமுன் 91
சுலவு காற்றனல் 52

சூ

சூதமெறிவேல் 67
சூதுநேர்கின்ற 8
சூரிட்ட நடையில் 270
சூழுமாலயன் 98
சூழ்ந்தவஞ்சகனேன் 46
சூழ்வேன்நினது 227

செ

செடியனேன் 246
செம்பவள 249
செய்தநன்றி 94
செய்யநன் 89
செய்யும் வண்ணம் 58
செய்வகை 250
செய்வதுன் 115
செய்வேன் அவம் 237
செய்வேன் தீமை 226
செல்இடிக்கும் 18
செல்லலும் சிறுமை 88
செவ்வண்ண 124
செறியாத நெஞ்சக 228
சென்றநாளில் ஓர் 181
சென்றநாளினும் 195
சென்று சென்று 82
சென்றுநீபுகும் 102
சென்று வஞ்சர் 99
சென்றுவாழ்த்துதி 23

சே

சேணுடர் 259
சேய்பிழையை 175
சேரநெஞ்சமே 22
சேல்கொள் 36

சை

சைவசிற்குணர் 201
சைவத் தலைவர் 124

சொ

சொந்தமுறஎண்ணி 162
சொல்அ வாவிய 11
சொல்லற்கரிய 232
சொல்லும் சொல் 151
சொன்னிலைக்கும் 241

சோ

சோடில்லை 239

ஞா

ஞாலத்தார்தமை 244
ஞாலம் செல்கின்ற 9
ஞாலவாழ்க்கையை 140
ஞாலவாழ்வு 149
ஞானமென்பதின் 146
ஞானம்என்பதி லோர் 149

த

தக்கதறியேன் 119

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **த** | |
| தண்ணார் அளியது | 236 |
| தண்ணார்நீப | 66 |
| தண்ணார்மதிபோல் | 221 |
| தந்துமத்திடை | 140 |
| தந்தை ஆயவர் | 159 |
| தந்தைதாய்மக்கள் | 126 |
| தந்தைதாய்மனை | 152 |
| தம்பலம்பெறும் | 58 |
| தம்பிரான்தயவு | 186 |
| தலங்கள்தோறும் | 17 |
| தலத்தனேதில்லை | 78 |
| தவநேயமாகும் | 86 |
| தவமதின்றிவன் | 5 |
| தவராயினும் | 85 |
| தவளநீற்றுமெய் | 51 |
| தவளமலர் | 272 |
| தனையர்செய்பிழை | 142 |
| **தா** | |
| தாதாதா | 243 |
| தாமணைமழுமான் | 110 |
| தாயாராதியர் | 184 |
| தாயிலார்என | 42 |
| தாயிற்பெரிய | 223 |
| தாயினும்பெரு | 188 |
| தாயின்மேவிய | 35 |
| தாயும் தந்தையும் சற்குரு | 258 |
| தாயுந்தந்தையும் தெய்வமும் | 247 |
| தாய்க்கும் இனி | 44 |
| தாய்க்கும் தந்தைக்கும் | 136 |
| தாய்தடை | 250 |
| தாவியே இயமன் | 116 |
| தாழாததுன்ப | 229 |
| **தி** | |
| திகழ்கின்ற | 84 |
| திக்குமாறினும் | 13 |
| திங்கள் விளக்கும் | 245 |
| திரப்படும்திரு | 39 |
| திருஅருட்புநிதை | 273 |
| திருஎலாம் | 274 |
| திருத்தகு | 275 |
| திருநெடுமால் | 263 |
| திருநெறிபொய் | 264 |
| திருந்தநான்மறை | 79 |
| திருவண்ண | 212 |
| திருவார்பொன் | 223 |
| திருவின்நாயகன் | 97 |
| திருவும்சீரும் | 208 |
| திருவுளந்தெரியேன் | 247 |
| திரைபடாத | 37 |
| தில்லையிடை | 162 |
| தில்லைவாய்ந்த | 36 |
| தினத்தோறும் | 84 |
| **தீ** | |
| தீதறிவேன் | 53 |
| தீதிலாத | 37 |
| தீதுசெய்தனன் | 194 |
| தீதுசெய்தேற்கு | 192 |
| தீதுமுற்றும் | 205 |
| தீதுவேண்டிய | 100 |
| தீதொன்றுமே | 229 |
| **து** | |
| துங்கவெண்பொடி | 59 |
| துச்சிலைவிரும்பி | 29 |
| துட்டநெஞ்சக | 186 |
| துட்டவஞ்சக | 240 |
| துணைமுலைமடந்தை | 220 |
| துணையாம்உன் | 179 |
| துணையிலேன் | 114 |
| துப்புநேர் இதழி | 33 |
| துரும்பினேன் | 47 |
| துளிக்கும்கண் | 41 |
| துள்ளிவாய் | 120 |
| துறையிடும் | 189 |
| துனியேபிறத்தற்கு | 119 |
| துன்பவாழ்வினை | 103 |
| துன்பேசுமையா | 177 |
| துன்றியமா | 205 |
| துன்னுடைய | 204 |
| துன்னும்சோம | 81 |
| துன்னும் மாமருந்தே | 38 |
| **தூ** | |
| தூக்கமும்முன் | 126 |
| தூக்கம்உற்றிடும் | 105 |
| தூங்கினேன் | 30 |
| தூயநீறிடா | 20 |
| தூயநெஞ்சமே | 96 |
| **தெ** | |
| தெய்வநீறிடா | 20 |
| தெரித்தால்அன்றி | 231 |
| தெரிந்துநினக்கு | 83 |
| தெரியத்தெரியும் | 222 |
| தெரியாமையால் | 192 |
| தெருளுடையார் | 169 |
| தெவ்வணமடவார் | 32 |
| தெவ்வண்ண | 173 |
| **தே** | |
| தேசார்அயில்வேல் | 68 |
| தேசுலாவிய | 37 |
| தேடுவார்தேடும் | 198 |
| தேரும்நற்றவர் | 39 |
| தேர்ந்துதேடினும் | 155 |
| தேவரேஅயனே | 113 |
| தேவர்அறியார் | 110 |
| தேவர் ஆயினும் | 201 |
| தேவியல்அறியா | 44 |
| தேவேநின் | 65 |
| தேன்என இனிக்கும் | 32 |
| தேன்நெய் | 95 |
| **தொ** | |
| தொண்டர்க்கு | 161 |
| தொழுகின்றோர் | 64 |
| **தோ** | |
| தோடுடையார் | 17 |
| தோன்றத்துணை | 43 |
| தோன்றுவதும் | 205 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **ந** | |
| நச்சைமிடற்று | 161 |
| நண்ணும்மங்கையர் | 7 |
| நண்ணும்வினையால் | 173 |
| நம்பலமாம் என | 277 |
| நம்பனை அழியா | 109 |
| நம்பினேன்நின் தன் | 46 |
| நம்புநெஞ்சமே | 58 |
| நல்அமுதனையீர் | 50 |
| நல்லநீறிடா | 20 |
| நல்லவர்பெறும்நல் | 34 |
| நல்லன் அல்லனான் | 135 |
| நல்லார்க்கெல்லாம் | 230 |
| நறைமணக்கும் | 123 |
| நன்றிஒன்றிய | 194 |
| நன்றிதுஎன் | 127 |
| நன்றுசெய்வதற்கு | 95 |
| நன்றுவந்தருளும் | 34 |
| நன்னெறிசேர் | 53 |
| **நா** | |
| நாகநாட்டதின் | 147 |
| நாடநல்இசை | 52 |
| நாடநீறிடா | 21 |
| நாடிஅலுத்தேன் | 112 |
| நாடியசீர் | 161 |
| நாடுந்தாயினும் | 187 |
| நாடும்சிவாய | 84 |
| நாட்டம்உற்றெனை | 73 |
| நாட்டார்நகை | 238 |
| நாட்டில்புகழ்பெற்ற | 18 |
| நாட்டும்முப்புரம் | 62 |
| நாணம்ஒன்றில்லா | 46 |
| நாதனைப்பொது | 109 |
| நாதாபொன் | 260 |
| நாயினும்கடையேன் | 47 |
| நாயினும் கீழ்ப்பட்ட | 179 |
| நாயேன்துன்ப | 231 |
| நாய்க்குங்கடை | 225 |
| நாய்க்கும் எனக்கும் | 211 |
| நாராயணன் | 257 |
| நாளாகுமுன் | 83 |
| நாளைவருவது | 119 |
| நானும் பொய்யன் | 254 |
| நானேநினக்கு | 86 |
| நான்சிறியேன் | 242 |
| நான்செயும்பிழை | 221 |
| நான்செய்த | 203 |
| நான்முகனும் | 217 |
| **நி** | |
| நிகழும்நின் | 90 |
| நிதிதருநிறைவே | 219 |
| நிதியேநின் | 179 |
| நிதியைநினைந்து | 250 |
| நித்தனைத்தூய | 110 |
| நித்தியம்பராபரம் | 265 |
| நிலத்தேசிறுவர் | 202 |
| நிலவும்ஒண்மதி | 7 |
| நிலை அறியேன் | 235 |
| நிலைகொள்நீறிடா | 21 |
| நிலையிலாஉலகியல் | 25 |
| நில்லாஉடம்பை | 53 |
| நிறையவாழ் | 51 |
| நிற்பதுபோன்று | 148 |
| நிற்பதென்று | 59 |
| நினையுடையாய் | 57 |
| நின்பதம்பாடல் | 218 |
| நின்பால் அடைந் தார் | 228 |
| நின்போன்ற | 165 |
| நின்முனம்நீல | 133 |
| நின்னடிக்கண் | 152 |
| **நீ** | |
| நீக்கம்இலா | 56 |
| நீடுகின்றமாமறை | 250 |
| நீடும்ஐம்பொறி | 104 |
| நீடுவாழ்க்கை | 209 |
| நீட்டம்உற்றதோர் | 15 |
| நீதிமாதவர் | 201 |
| நீதியிலார் | 174 |
| நீரார்சடையது | 235 |
| நீரின்மேல் | 116 |
| நீர்சொரிந்தொளி | 29 |
| நீர்பூத்தவேணியும் | 248 |
| நீலக்களங் கொண்ட | 242 |
| நீலம்இட்டகண் | 196 |
| நீலனேன்கொடும் | 135 |
| நீறணிந்தொளிர் | 272 |
| **நெ** | |
| நெஞ்சமேஇது | 22 |
| நெஞ்சேஉலக | 81 |
| நெய்யிலால்சுடு | 29 |
| நெறியிலேன் | 123 |
| **நே** | |
| நேசனும்நீ | 254 |
| நேராஅழுக்கு | 240 |
| **நை** | |
| நையுமாறெனை | 182 |
| **நோ** | |
| நோயால்மெலிந்து | 173 |
| நோயைஅறுக்கும் | 3 |
| நோய்கள்கொண்டு | 22 |
| **ப** | |
| பகுதிதகுதி | 243 |
| பசிஎடுக்குமுன் | 74 |
| பசிக்குணவு | 117 |
| பசைஇலா | 132 |
| படமெடுத்தாடு | 215 |
| படிமேல் | 237 |
| படியேஅளந்த | 255 |
| படுவேன் அல்லேன் | 111 |
| பணிகொள் | 99 |
| பண்ணமுடியா | 57 |
| பண்ணவனே | 166 |
| பண்ணால்உன் | 167 |
| பண்ணினுள் | 34 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **ப** | |
| பதந்தருவான் | 85 |
| பத்தர்க்கருளும் | 66 |
| பத்தர்சித்தம் | 201 |
| பந்தமட்டின் | 146 |
| பந்தவண்ணமாம் | 7 |
| பயன் அறியாய் | 84 |
| பரிந்திலேன் | 141 |
| பரிந்துநின்றுலக | 114 |
| பரிந்துனக்கு | 83 |
| பரியும்மனத்தால் | 226 |
| பவமானஎழுகடல் | 269 |
| பழுதுநேர்நின்ற | 8 |
| பள்ளத்திலே | 230 |
| பற்றுநெஞ்சக | 209 |
| பற்றுநோக்கிய | 144 |
| பற்றும்செழுந் தமிழ் | 174 |
| பற்றுவதுபந்தம் | 216 |
| பனகஅணை | 263 |
| பன்னரும் | 55 |
| பன்னுமனத்தால் | 55 |
| பன்னுவார்க்கருள் | 38 |
| **பா** | |
| பாங்குடையார் | 83 |
| பாடற்கினிய | 1 |
| பாடுகின்றோர் | 124 |
| பார்த்துநிற்கின்றாய் | 49 |
| பார்நலடையாம் | 44 |
| பாலின்நீற்று | 78 |
| பாலேஅமுதே | 171 |
| பாவம்எனும் | 211 |
| பாவிநெஞ்சம் | 70 |
| **பி** | |
| பிச்சைஏற்றுணும் | 155 |
| பித்தளைக்கும் | 57 |
| பிழைபுரிந்தனன் | 131 |
| பிறந்துமுன்னர் | 95 |
| பிறவாநெறியது | 236 |
| பிறவிக்கண் | 158 |
| **பு** | |
| புகழே விரும்பி | 110 |
| புண்ணுறும்மனம் | 237 |
| புண்ணியமோர் | 127 |
| புண்ணியனே | 167 |
| புண்ணும் வழும்பும் | 212 |
| புதியன்என்றெனை | 155 |
| புதியேன்அல்லேன் | 231 |
| புரைசேரும் | 177 |
| புலைய மங்கையர் | 152 |
| புலையே புரியும் | 227 |
| புல்லனேன்புவி | 76 |
| புல்வாயின் | 87 |
| புன்கண் அகற்றும் | 223 |
| புன்செய்கை | 54 |
| புன்னுனிப்படும் | 25 |
| **பூ** | |
| பூங்கொடிஇடையை | 33 |
| பூணகமாட | 124 |
| பூதநெறி | 213 |
| பூதம்நும்படை | 154 |
| பூத்திடும்அவனும் | 198 |
| பூமாந்தும் | 54 |
| **பெ** | |
| பெண்ணமர்பாகனை | 92 |
| பெண்மணியே | 125 |
| பெத்தமும் | 266 |
| பெரியபொருள் | 240 |
| பெரியானை | 83 |
| பெருங்கருணை | 64 |
| பெருமநின் | 121 |
| பெருமையில் | 190 |
| பெற்றதாய்தனை | 13 |
| **பே** | |
| பேதப்படாதது | 236 |
| பேதைநெஞ்சினேன் | 76 |
| பேதைப் பருவத்து | 225 |
| பேதை மாதர் | 106 |
| பேய் அனையார் | 207 |
| பேய் கொண்ட | 257 |
| பேராத காம | 126 |
| **பை** | |
| பைச்சூர் அரவ | 18 |
| **பொ** | |
| பொங்குமாயை | 185 |
| பொதுவினின்று | 35 |
| பொத்தேர்மயலால் | 173 |
| பொய்ஒன்றே | 126 |
| பொய்கண்டாய் | 243 |
| பொய்யர் | 128 |
| பொய்யனேன் | 208 |
| பொய்யன்ஆகிலும் | 159 |
| பொய்யாதநின்அடி யார் | 168 |
| பொய்யாத மொழியும் | 269 |
| பொய்யாம்மல | 177 |
| பொய்யான | 193 |
| பொய்யிலார்க்கு | 42 |
| பொய்யேபுலம்பி | 86 |
| பொய்யோர் | 171 |
| பொய்விடுகின்றிலன் | 88 |
| பொய்விரிப்பார்க்கு | 240 |
| பொருந்தி ஈனருள் | 73 |
| பொருளேநின் | 179 |
| பொருள்எலாம் | 190 |
| பொலிவேன் | 222 |
| பொல்லா வாழ்க்கை | 253 |
| பொள்ளற் குடத்தின் | 211 |
| பொறுக்கினும் | 88 |
| பொன்அளிக்கும் | 258 |
| பொன்என்கோ | 260 |
| பொன் என்று | 224 |
| பொன்நாயகனும் | 223 |
| பொன்றும் வாழ்க்கை | 6 |
| பொன்னசை | 126 |
| பொன்னார்விடை | 81 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **பொ** | |
| பொன்னை உடையார் | 254 |
| பொன்னைமதித்து | 55 |
| பொன்னையுற்றவனும் | 35 |
| பொன்னைவளர்ப்பாரை | 204 |
| **போ** | |
| போகம்கொண்ட | 50 |
| போகின்ற | 56 |
| போதஆனந்த | 220 |
| போர்க்கும் | 28 |
| போற்றவைத்தனை | 79 |
| போற்ரூர்புரம் | 84 |
| போற்றிஎன் | 219 |
| போற்றிஒற்றி | 59 |
| போற்றிநீறிடா | 19 |
| போற்றுதி | 83 |
| போற்றுவார் | 220 |
| **ம** | |
| மஞ்சுபடும் | 160 |
| மடிகொள் | 75 |
| மடிக்குறும்நீர்மேல் | 117 |
| மடுக்கமுடியா | 56 |
| மடுக்கும்நீர்உடை | 157 |
| மட்டின்மங்கையர் | 7 |
| மட்டுப்படாதது | 236 |
| மணித்தலைநாகம் | 113 |
| மணிமிடற்றமுதே | 218 |
| மணியார்கண்ட | 222 |
| மண்கிடந்த | 127 |
| மண்ணகச்சிறு | 195 |
| மண்ணிலேமயங்கும் | 31 |
| மண்ணில்நல்லவன் | 160 |
| மண்ணில்நின்றவர் | 145 |
| மண்ணினுள் | 148 |
| மண்ணின்ஓங்கி | 37 |
| மண்ணுடையார் | 229 |
| மண்ணேயும் | 172 |
| மண்ணைமனத்து | 118 |
| மண்முகத்தில் | 241 |
| மதம்எனும் | 107 |
| மதிஒளிர் | 255 |
| மதிகொள் | 52 |
| மதியும்கல்வியும் | 209 |
| மதிவார்சடை | 236 |
| மந்தனைவன் | 53 |
| மருட்டிவஞ்சகம் | 9 |
| மருவானை | 261 |
| மருவார்குழலியர் | 86 |
| மருள்அளித்தெனை | 188 |
| மருள்ஆர்ந்த | 172 |
| மலங்கும்மால்உடல் | 16 |
| மலஞ்சான்ற | 178 |
| மலைவிலாமுல்லை | 36 |
| மறப்பிலா | 101 |
| மறப்பைஅகன்ற | 80 |
| மறவாதுனை | 238 |
| மறியோர்விழியார் | 177 |
| மறுமைஇம்மையும் | 138 |
| மறைகளும் | 150 |
| மறைமுடி | 250 |
| மறையும் | 198 |
| மறைவதென்னையும் | 70 |
| மனமேமுன்னர் | 120 |
| மன்அமுதாம் | 42 |
| மன்உயிர்க்கு | 252 |
| மன்ருடிய மாமணி | 238 |
| மன்ருடும் மாமணி | 256 |
| மன்றிடை நடிக்கும் | 275 |
| மன்றினிடை | 54 |
| மன்றுடையாய் | 125 |
| மன்னவனே | 166 |
| மன்னளவில் | 54 |
| மன்னும்கதிர்வேல் | 66 |
| மன்னுருத்திரர் | 101 |
| **மா** | |
| மாசில்சோதி | 38 |
| மாசுவரேஎன்னும் | 55 |
| மாணுத என்நெஞ்சம் | 179 |
| மாண்கொள் | 78 |
| மாய நெஞ்சமோ | 69 |
| மாயா மனம் எவ்வகை | 178 |
| மாயை எனும் | 270 |
| மாலயன்தேடியும் | 91 |
| மாலின்உச்சிமேல் | 12 |
| மாலின்கண்மலர் | 61 |
| மாலும்துஞ்சுவான் | 16 |
| மாலும் நான்கு | 200 |
| மாலை ஒன்று | 153 |
| மாலொடு நான்கு | 149 |
| மால்அயர்ந்தும் | 161 |
| மால்எடுத்துக் கொண்டு | 241 |
| மால்எடுத்தோங்கிய | 18 |
| மால்விடைமேல் | 88 |
| மாருதவன்பிணி | 53 |
| மாருமனமாயை | 238 |
| மாறுகின்றனன் | 188 |
| மாறுபூத்த | 61 |
| மாற்பதம்சென்ற | 18 |
| மாற்றரிய | 252 |
| மானமிலார் | 125 |
| **மி** | |
| மின்இணைச்சடில | 275 |
| மின்ஒப்பாம் | 127 |
| மின்போல்வார் | 54 |
| மின்னும்நுண்ணிடை | 5 |
| மின்னைப்போல் | 251 |
| மின்னைப்பாகி | 210 |
| **மு** | |
| முட்டியேமடவார் | 31 |
| முதல்இலாமல் | 28 |
| முத்திக்குவித்தே | 175 |
| முத்திநீறிடார் | 21 |
| முத்திபேர்கிலா | 156 |
| முத்திமுதலே | 116 |
| முத்திவேண்டுமேல் | 22 |
| முந்தோகை | 193 |

| பாட்டு | பக்கம் |
| --- | --- |
| **மு** | |
| முள்ளளவு | 56 |
| முறைப்படி | 134 |
| முன்னம்காழி | 81 |
| முன்னியமறையின் | 34 |
| முன்னேசெய் | 176 |
| முன்னைநான்செய்தவல் வினை இரண்டின் | 182 |
| முன்னைநான்செய்த வல்வினைச் சிமிழ்ப்பான் | 184 |
| முன்னை மாதவ | 129 |
| முன்னைவல்வினை | 148 |
| **மூ** | |
| மூட நெஞ்சம் | 70 |
| மூடனேன்பிழை | 209 |
| மூவரை அளித்த | 109 |
| **மெ** | |
| மெச்சுகின்றவர் | 187 |
| மெய்ம்மையே | 90 |
| மெய்விளக்கே | 262 |
| மெல்லிதாய | 39 |
| **மே** | |
| மேலை அந்தகன் | 59 |
| **மை** | |
| மைப்படியும் | 53 |
| மையல்வாழ்க்கை | 195 |
| **மோ** | |
| மோகம்என்னும் | 107 |
| மோகமாதியால் | 74 |
| **யா** | |
| யாதுகண்டனை | 104 |
| யாதுசெய்குவன் | 162 |
| யாதுசொல்லினும் | 151 |
| யாதுநான்பிழை | 136 |
| யாதுநின்கருத்து | 71 |
| யாதும்உன்செயல் | 146 |
| **வ** | |
| வகைஅறியேன் | 234 |
| வகைஎது | 143 |
| வஞ்சகவினைக்கு | 147 |
| வஞ்சகர்க்கு | 260 |
| வஞ்சநெஞ்சர்தம் | 76 |
| வஞ்சப்புலக்காடு | 3 |
| வஞ்சமடவார் மயக்கும் | 125 |
| வஞ்சமடவார் மயலொருபால் | 172 |
| வஞ்சமாதர் | 208 |
| வஞ்சமிலார் உள்ளம் | 175 |
| வஞ்சமிலார் நெஞ்சகத்தே | 63 |
| வஞ்சவாழ்க்கை | 103 |
| வணங்கொள் | 51 |
| வண்ணப்பல் | 17 |
| வண்ணமாமுல்லை | 36 |
| வண்மைபெறு | 169 |
| வதனகான்குடை | 98 |
| வந்திக்கும் | 241 |
| வரமன்றலினர் | 67 |
| வரமுறும் | 265 |
| வருநாள்உயிர் | 82 |
| வரைக்குநேர்முலை | 6 |
| வலமேஉடையார் | 119 |
| வலியவந்திடு | 159 |
| வல்லார்முலையார் | 173 |
| வல்லிஆனந்த | 245 |
| வல்வினையேனை | 85 |
| வளங்கிளர்சடை | 197 |
| வளங்கொளும்தில்லை | 92 |
| வளங்கொளும் முல்லை | 36 |
| வள்ளலே நின் | 89 |
| வன்கண்ணர் | 205 |
| வன்மானம் | 257 |
| வன்மைசெய்திடும் | 13 |
| வன்மைபேசிய | 129 |
| வன்னெஞ்ச | 127 |
| வன்னேர் முலையார் | 173 |
| **வா** | |
| வாங்கிமலை | 101 |
| வாங்குவில்நுதல் | 4 |
| வாடக்கற்றாய் | 239 |
| வாடனக்குறமும் | 45 |
| வாடுகின்றனன் | 137 |
| வாணரைவிடையூர் | 108 |
| வாதமேபுரிவேன் | 32 |
| வாதம்ஓதிய | 78 |
| வாதுசெய்ம்மட | 6 |
| வாதுபுரிந்தின | 126 |
| வாதைமயல் | 128 |
| வாயாரநின் | 203 |
| வாயிலான்பெரு | 27 |
| வாரமுளார் | 169 |
| வார்க்கொண் | 105 |
| வாழாத நெஞ்சம் | 179 |
| வாழா மனத்தின் | 226 |
| வாழைக்கனி | 240 |
| வாழ்வதுநின்தன் | 114 |
| வானும் வையமும் | 188 |
| வானைநோக்கிமண் | 26 |
| **வி** | |
| விச்சைவேண்டினை | 105 |
| விஞ்சுடையாய் | 168 |
| விடங்கலந்தருள் | 60 |
| விடம்கொள் | 73 |
| விடுத்தேன் | 111 |
| விடைஆர்க்கும் | 206 |
| விதிஇழந்த | 162 |
| விதிஎலாம்விலக்கு | 246 |
| விதியும்மாலும் | 98 |
| வித்தகம் அறியேன் | 191 |
| வித்தைஇன்றியே | 27 |
| விரிதுயரால் | 203 |

பாட்டு பக்கம்

**வி**

விருப்பாகும் 64
விருப்பிலேன் திரு 25
விருப்புகின்றது 131
விரும்பித் திருமால் 83
வில்லாம்படி 80
வில்வத்தொடும் 79
விழற்கிறைத்து 235
விளைத்தனன் 190
வினையினால் 131
வினையேபெருக்கி 227

**வீ**

வீட்டுக்கடங்கா 55
வீரமாந்தரும் 16
வீழாகஞான்ற 249

**வெ**

வெங்கொளித்தேள் 57
வெண்மைசேர் 108
வெண்மை நெஞ்சினேன் 157
வெய்யவினையின் 2
வெருட்சியேதரும் 145
வெல்லுகின்றனர் 139
வெவ்வினைக்கீடான 271
வெள்விடைமேல் 92
வெள்ளங்கொண்டு 256
வெள்ளமருவும் 207
வெள்ளிமாமலை 40
வெறிபிடிக்கினும் 77
வெற்றிப்படைவேல் 67

**வே**

வேகமுறு 204
வேண்டாமை வேண்டுவது 84
வேண்டாமை வேண்டுகின்றோர் 233
வேண்டும்நெஞ்சமே 58
வேதனேனும் 200
வேதியனே 166
வேம்புக்கும் 253
வேலைகொண்ட 38

**வை**

வைதிலேன் 31
வைத்தநின் அருள் 79
வையகத்தே 203
வையநாயக 201
வைவமென்றெழு 257

---

**2. மூன்றும் திருமுறை**

**அ**

அசையாதமர்ந்தும் 320
அஞ்சொல் 299
அடியர்வருந்த 308
அணியார் அடியார் 306
அண்டர்எவர்க்கும் 285
அந்தார் அணியும் 289
அரவக்கழலார் 306
அழியாவளத்தார் 322
அளித்தார் 308
அளித்துமூன்று 314
அள்ளமிகும் 314
அள்ளிக்கொடு 311
அனத்துப்படிவம் 311

**ஆ**

ஆக்கம் 295
ஆடல்அழகர் 302
ஆயும்படிவத்து 310
ஆரா அமுதாய் 309
ஆரூர்உடையார் 304
ஆர்த்துமலிநீர் 314
ஆலநிழல் 308
ஆலம் இருந்த 286
ஆழிவிடையார் 305

**இ**

இருந்தார் 293
இலமேசெறித்தார் 293
இறையார் 286

**ஈ**

ஈதல்ஒழியா 307
ஈமப்புறம் 290
ஈர்ந்தேன் 288

**உ**

உடுத்தும் 286
உடுப்பார் 287
உடையார்உலகில் 319
உணவை இழந்தும் 303
உந்துமருத்தோடு 302
உயிர்க்குள் 302
உரப்பார்மிசையில் 295
உலகம்உடையார் தம்ஊரை 317
உலகம்உடையார் என்னுடைய 302
உழையொன்று 286
உளத்தே இருந்தார் 294
உள்ளார்புறத்தார் 300
உள்ளிஉருகும் 316

**ஊ**

ஊரும் இல்லார் 295
ஊர் என்று 320
ஊனம் அடையார் 303

**எ**

எங்கள்காழி 310
எட்டிக்கனியும் 301
எண்தோள் 314
எருதில்வருவார் 287
எல்லாம்உடையார் 318
என்கண் அனையார் 318
என்றும் இறவார் 318
என்னகொடுத்தும் 287
என்னுருயிர்போல் 299
என்னுருயிர்க்கோர் 301
என்னை உடையார் 318

**ஏ**

ஏடார்பொழில் 286

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **ஒ** | |
| ஒல்லார்புரம் | 283 |
| ஒற்றிநகர் | 285 |
| **ஓ** | |
| ஓட்டில்இரந்து | 307 |
| ஓணம்உடையான் | 319 |
| ஓவாநிலையார் | 283 |
| **க** | |
| கச்சையிடுவார் | 291 |
| கஞ்சன் அறியார் | 286 |
| கடுக்காதலித்தார் | 323 |
| கடுத்தாழ்களத்தார் | 295 |
| கண்ணன் அறியா | 312 |
| கண்ணன்நெடுநாள் | 282 |
| கண்ணார்நுதலார் | 290 |
| கமலன்திருமால் | 306 |
| கருணைக்கொரு | 309 |
| கருதற்கரியார் | 291 |
| கருதும் அவரை | 295 |
| கரும்பின் இனியார் | 287 |
| கருவாழ்வகற்றும் | 315 |
| கலக அமண | 312 |
| கல்லைவளைக்கும் | 291 |
| கற்றைச்சடைமேல் | 306 |
| **கா** | |
| காண இனியார் | 289 |
| காதம்மணக்கும் | 319 |
| காதுநடந்த | 290 |
| காலங்கடந்தார் | 304 |
| காவிமணந்த | 310 |
| காலைமலர்ந்த | 302 |
| **கொ** | |
| கொழுதி அளிதேன் | 312 |
| கொற்றம் உடையார் | 308 |
| **கோ** | |
| கோதேமருவார் | 319 |
| **ச** | |
| சங்கக்குழையார் | 304 |
| சடையில் | 294 |
| சலங்காதலிக்கும் | 308 |
| **சா** | |
| சாலமாலும் | 289 |
| **சி** | |
| சிந்தாகுலம் | 298 |
| சிந்தைக்கினியார் | 297 |
| சிற்றம்பலத்தார் | 297 |
| **சீ** | |
| சீதப்புனல்சூழ் | 279 |
| சீரார்வளம் | 278 |
| சீர்த்தேன்பொழில் | 278 |
| சீலக்குணத்தோர் | 280 |
| **சூ** | |
| சூலப்படையார் | 290 |
| **செ** | |
| செக்கர்ச்சடையார் | 298 |
| செல்வந்துறழும் | 297 |
| செழுந்தெண் | 289 |
| **சே** | |
| சேயைஅருளும் | 280 |
| சேலார்தடம் | 297 |
| சேலைநிகர்கண் | 299 |
| சேவார்கொடியார் | 297 |
| **சொ** | |
| சொல்லால்இயன்ற | 292 |
| சொல்லுள்நிறைந்த | 312 |
| **சோ** | |
| சோமன்நிலவும் | 320 |
| **த** | |
| தகைசேர் | 284 |
| தக்கவளஞ்சேர் | 321 |
| தக்கவிதியின் | 314 |
| தங்குமருப்பார் | 296 |
| தருமவிடையார் | 305 |
| தருவார் தருவார் | 293 |
| தரையிற்கீறி | 303 |
| தவர்தாம் | 314 |
| **தா** | |
| தாமப்புயனார் | 304 |
| தாயாய் அளிக்கும் | 322 |
| **தி** | |
| திங்கள்உலவும் | 281 |
| திடனான்மறையார் | 321 |
| திருக்கண் நுதலால் | 316 |
| திருந்தால் அமர் | 320 |
| திருமால்வணங்கும் | 297 |
| திருமாற்கரியான் | 282 |
| திருவில்தோன்றும் | 298 |
| திரையார் ஓதை | 322 |
| தில்லைஉடையார் | 323 |
| தில்லைவளத்தார் | 292 |
| **தீ** | |
| தீதுதவிர்ப்பார் | 287 |
| தீர்ந்தார் | 310 |
| **து** | |
| துடிசேர் | 285 |
| துதிசெய் | 310 |
| துத்திப்படத்தார் | 296 |
| **தெ** | |
| தெறித்து மணிகள் | 285 |
| தென்னஞ்சோலை | 297 |
| தென்னார்சோலை | 279 |
| **தே** | |
| தேசார் மணி | 281 |
| தேசுபூத்த | 284 |
| தேடார்க்கு | 281 |
| தேனார் கமல | 296 |
| தேனேர் குதலை | 299 |

பாட்டு பக்கம்

தொ

தொண்டுபுரிவோர் 308
தொழுதுவணக்கும் 302

தோ

தோடார் குழை 285
தோளாமணிசேர் 288

ந

நடங்கொள் 316
நந்திமகிழ்வாய் 305
நந்திப்பரியார் 301
நலத்திற்சிறந்த 288
நன்றுபுரிவார் 284

நா

நாகஅணியார் 310
நாடார்வளங்கொள் 322
நாடொன்றிய 292
நாட்டும் புகழார் 287

நி

நிரந்தார் கங்கை 308
நிருத்தம் பயின்றார் 306
நிலவார்சடையார் 322

நீ

நீடிவளங்கொள் 316
நீர்க்கும் மதிக்கும் 312

நெ

நெய்தல் பணைசூழ் 286

ப

பண்ணார்மொழி 320
பவளநிறத்தார் 303

பா

பாடல்கமழும் 285
பாரா திருந்தார் 294
பாலிற்றெளிந்த 306
பாவம் அறுப்பார் 302

பி

பித்தர்எனும்பேர் 295
பிரமன் தலையில் 303
பின்தாழ்சடையார் 289

பு

புன்னை இதழி 312

பூ

பூணும் அணி 307
பூமேல்அவனும் 309
பூவாய் வாட்கண் 299

பெ

பெருமையுடையார் 317
பெற்றம் இவரும் 304
பெற்றி அறியா 313

பை

பைத்த அரவ 314

பொ

பொய்யர்உளத்து 301
பொன்னஞ்சிலை 313
பொன்னார் புயத்து 306
பொன்னென்று 311
பொன்னேர் 289

போ

போகமுடையார் 304
போர்க்கும் 286
போர்மால் 318

ம

மடையார் 323
மட்டுக்கடங்கா 315
மந்தாகினி 309
மயிலின் இயல் 300
மலஞ்சாதிக்கும் 310
மலைநேர் முலையாய் 300
மலையை வளைத்தார் 303
மன்னுங்கருணை 282

மா

மாகம்பயிலும் 316
மாடொன்று 294
மாணிஉயிர் 301
மாண்காத்தளிர் 283
மாதர்மணியே 298
மாயமொழியார் 283
மாலும் அறியான் 302
மாலேறுடைத்தாம் 300
மாவென்று 287
மாழைமணி 312
மாழைமலையை 321
மாறித்திரிவார் 296
மாற்காதலிக்கும் 321
மான்கொள் 318

மி

மின்னேறொக்கும் 285

மே

மேலைவினையை 316

வ

வடிக்குந்தமிழ் 283
வட்டமதிபோல் 283
வண்டார்
கொன்றை 303
வந்தார் அல்லர் 293
வருந்தேன் 294
வழுத்தார் புரத்தை 293
வன்சொற் புகலார் 301
வன்னி இதழி 306

வா

வாக்குக் கடங்கா 303
வாடாதிருந்தேன் 288
வாழ்வை அளிப்பார் 318
வானும் புவியும் 285

வி

விடையார்கொடி 292
விடையார்விடங்க 315
விண்டங்குமரர் 291
விண்பார் புகழும் 316
விமலை இடத்தார் 318
வில்லார் நுதலாய் 299
வில்லைமலையாய் 320
விற்கண்டாத 291

வெ

வெண்மை நீற்றர் 314
வெள்ளச்சடையார் 288
வெற்பைவளைத்
தார் 287
வெற்றி யிருந்த 291
வென்றிக்கொடி 288

வே

வேலைவிடத்தை 283

திருச்சிற்றம்பலம்

# ஞான சபை

சத்திய ஞான சபையில், இறைவனை, அருள்நெறி நின்று, வழிபட விரும்பும் அடியார்கள் பொருட்டு, நம் பெருமானார் இராமலிங்க அடிகளாரின் தனிப்பேர் உபதேசங்களினின்றும், இப் பதிப்பாசிரியனாகிய என்னால், உள்நிறைந்த பத்திமையோடும், உள்ளொளியோடும், பேருவகையோடும் துருவித் துருவி ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருஅருட்பாக்கள், ஞானசபைக் கட்டடத்தின் அகத்தினும் புறத்தினும், என் நண்பர் முருகப்பெருமான் அடியாரான ஸ்ரீ கிருபாநந்தவாரியார் அவர்கள் ஆணையின் கீழ் ஸ்தபதியாகத் தொண்டாற்றிய ஸ்ரீ சிவனார் அவர்களால் அழகு ததும்ப, பேர் அன்போடும், பேர் ஆர்வத்தோடும், பெருங் களிப்போடும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஞான சபைக்கு அன்பராவார் யாவரும் அவற்றைக் கண்ணுற்று, ஒருமையுடன் ஓதி உணர்ந்து அருள் நலம் அடைவார்களாக! ஒன்றுக்கும் பற்றாத எளியேனுக்கு இத் தெய்வத் திருஅருட்பாத் தொண்டினை இப் பிறவியில் ஈந்த இறைவன் எங்கள் பெருமானார்க்கு, யான் எப் பிறவியினும், இத் திருத் தொண்டினை இயற்றி, மீளாது ஆட்பட்டொழுகும் — பேற்றினைப் பெறுமாறு அருள் புரிவானாக! —

வாழ்க சத்திய ஞர்ன சபை!
வாழ்க எங்கள் பெருமானார்!
வாழ்க அவர்கள் அருள்நெறி!

திருச்சிற்றம்பலம்

Printed by Jaya & Co., ( Paramount Press ) Triplicane, Madras-5.

உ

அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை



இராமலிங்க அடிகளார் அருள்நெறி வழிபாட்டிற்காக அமைத்தருளிய

சத்திய ஞான சபை

உத்தரஞான சிதம்பரம் அல்லது வடலூர், தென்னாக்காடு ஜில்லா, சென்னை.